சத்தியார்த்தப் பிரகாசம்

அல்லது

உண்மை விளக்கம்

ஆசிரியர்

ஸ்வாமி தயானந்த சரஸ்வதி

மொழிபெயர்த்தோர்

பண்டித கண்ணையா

பிரசுரித்தோர்

ஆர்ய சமாஜ் சென்னை

2,000 காபிகள்] 1935 [விலை ரூ. 1-0-0

ஹிந்தி பிரசார் பிரஸ்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

பிரசுரகர்த்தரின் குறிப்புரை.

ஸ்ரீ ஸ்வாமி தயானந்த சரஸ்வதியார் ஆர்ய சமாஜத்தை நிருவியவர். அவர் அவரின் காலத்திய சம்ஸ்கிருத வித்வான்களில் சிரோமணியாய் விளங்கியிருந்தார். அவரின் வைதீக பாண்டித்யம் அபூர்வமானதாயிருந்தது. எல்லாப் பழைய வைதீக சாஸ்த்திரங்களையும் அவர் ஆராய்ந்தார். இருக், யஜுர் வேதங்களுக்கு உரையும் எழுதினர். அவரின் நீண்டகால உழைப்பின், முயற்சியின் பலனய் தோன்றியதே "இச்சத்யார்த்தப் பிரகாசம்" எனும் நூல். அவர் பழங்கால வைதீக தர்மத்தின்—ஆர்ய தர்மத்தின்—மகிமையையும், அந்நிய தர்மங்களின் குற்றங்களையும் வெளிப்படுத்தினர். மிகு தர்க்கவாதங்களாலும், யுக்திவாதங்களாலும் தர்மத்தின் ரகசியத்தை பிரகாசப்படுத்தியிருப்பதே இந்நூலின் விசேஷத்தன்மையாகும். இது ஆர்ய சமாஜ சாஹித்யங்களின் தலை சிறந்த இரத்தினமாகும். இது இலக்ஷக்கணக்கான இந்துக்களை—போலி தர்மங்களின் பிரபாவத்தில் சிக்கி ஹிந்து தர்மத்தை உதாசீனம்செய்து கொண்டிருந்தவர்களை—மறுபடி சத்ய திட இந்துக்களாகச் செய்தது. இன்னும் ஆயிரக்கணக்கான கடினமன இந்துக்களை கருணைமன இந்துக்களாக மாற்றியது.

இந்நூல் சம்ஸ்கிருதம், ஹிந்தி, உருது, குஜராதி, மராடி, பங்காளி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலம், பிரன்சபாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்

டுள்ளது. சில வருடங்களுக்கு முன்பாக ஸ்ரீமான் ஜம்புநாதன் அவர்களால் இது தமிழில் வெளியிடப்பட்டது. ஆனால் அக்காபிகள் வெகு சீக்கிரத்தில் சிலவழிந்துவிட்டன. இப்போது ஒரு புத்தகம் கிடைப்பதும் அரிதாயிருக்கிறது. சென்னை மாகாணத்தில் ஆர்ய சமாஜம் தினேதினே அபிவிருத்தியடைந்து கொண்டுவருவதைக் கண்டு இச்சமயத்தில் தமிழில் சத்தி யார்த்தப் பிரகாசம் வெளியிடப்படவேண்டியது மிகமிக அவசியம் என்றேர்ப்பட்டது. ஏனென்ருல் ஜம்புநாதன் மொழி பெயர்ப்பு உரிமையாக்கப்பட்டிருந்தது. இதனுலேயே ஆர்ய சமாஜத்தின் சார்பாக ஓர் புதிய மொழிபெயர்ப்பை வெளியிட வேண்டி நேர்ந்தது. இம்மொழி பெயர்ப்புக்கு சம்ஸ்கிருத, ஹிந்தி, ஆங்கில மொழிபெயர்ப் புக்கள் உதவியளித்தன. வெகு பிரயாசைகொண்டு இதை தமிழில் மொழிபெயர்த்து உதவியவரான ஸ்ரீமான் பண்டித கண்ணையா அவர்களுக்கு நாம் மிகவும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேம். எடுத்துக்கொண்ட முயற்சிக்கு மேலும் இதில் அநேக அச்சுப்பிழைகள் நேர்ந்திருக்கின்றன என்பதை நாமறிகிறேம். அதனுல் வாசகர்கள் கோபங்கொள்ளாது மன்னித்து இதை ஏற்றுகொள்ள வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறேம். அடுத்த முறை இதை அச்சிடும் போது தப்பிதங்களின்றி வெளிப்படுத்த முயற்சிப்போமாக.

சென்னை,
1—3—35.

பண்டித கேசவதேவ் ஞானி.

சத்தியார்த்த பிரகாசம்.

உண்மை விளக்கம்.

முகவுரை

இச்சத்தியார்த்தபிரகாசம் 14 அத்தியாயங்களை உடையது. அவைகளில் 10 அத்தியாயங்கள் முதல் பாகத்திற்கும், 4 அத்தியாயங்கள் இரண்டாம் பாகத்திற்குமானது. அவைகளின் விளக்கமாவது.

1-வது அத்தியாயம்—: கடவுளின் ஓங்காராதி நாமங்களை விளக்கிச்சொல்வது.

2-வது ,, —: மக்களைப் பேணல்.

3-வது ,, —: ப்ரம்மசரியங்கற்பித்தல், கல்வி கற்கும் மாணவர்களும், கற்றீயும் உபாத்தியாயர்களும் இருக்கவேண்டிய நிலை. உண்மை பொய் புத்தகங்களின் பெயர்கள். கல்வி கற்க வேண்டிய முறைகள்.

4-வது ,, —: திருமணம், இல்லறம், இவைகளின் ஒழுக்கம்.

5-வது ,, —: வானப்ரஸ்தம், சன்னியாச ஆஸ்ரமங்களின் விதி.

6 வது ,, —: அரச தர்மம்.

7-வது அத்தியாயம்—: வேதம், கடவுள் சம்பந்தமான விஷயங்கள்.

8-வது ,, —: உலகத்தின் உற்பத்தி, நிலைப்பு, அழிவு.

9-வது ,, —: வித்தை அவித்தை, பந்தம் மோக்ஷங்களின் விளக்கம்.

10-வது ,, —: ஆசாரம் அநாசாரம், புசிக்கத்தகுந்தது தகாதது.

11-வது ,, —: ஆரியாவர்த்தத்திலுள்ள மதங்களின் புகழ்ச்சி இகழ்ச்சிக்குரிய விஷயங்கள்.

12-வது ,, —: சார்வாக, பௌத்த, ஜைன மத சம்பந்தமான விஷயங்கள்.

13-வது ,, —: கிருஸ்தவமத ஆராய்ச்சி.

14-வது ,, —: மகம்மதியமத ஆராய்ச்சி.

புத்தகத்தின் முடிவில் ஆரியர்களின் பெரும்பழமையான வேதமத சம்பந்தமான விசேஷங்களைக் கொடுத்திருக்கின்றேன். அதுமுழுதும் சரியென நானும் ஒப்புக்கொள்கின்றேன்.

நான் இந்நூலை செய்ததின் தாத்பர்யம் சத்தியமான அர்த்தத்தை ப்ரகாசிக்கச் செய்யவேண்டுமென்பதே. என்றால்

எது சத்யமோ அதை சத்யமாகவும் எது பொய்யோ அதை பொய்யாகவுங் கொள்ளுதலே சத்திய அர்த்தமாகும். சத்தியமுள்ள இடத்தில் பொய்யையும், பொய்யுள்ள இடத்தில் சத்தியத்தையுங் காணல் சத்திய அர்த்தமல்ல. எப்பொருள் எவ்வாறிருக்கிறதோ அதை அவ்வாறே பார்த்து, கேட்டு, நினைத்தலே சத்யமாகும். பக்ஷபாத குணமுடைய மனிதன் தன் பொய்யை மெய்யாகவும், தன் விரோதி மதத்தவனின் மெய்யை பொய்யாகவும் காண்கின்றான். இது உண்மையான சத்தியமத மாகாது. ஆகையால் அறிவாளிகளின் வேலை இதுவாகும். எழுத்துமூலமாயாவது, பிரசாரமூலமாயாவது எல்லா ஜனங்களின்முன்னும் சத்தியாசத்தியத்தின் உண்மைகளை யெடுத்துச்சொல்லிக்கொண்டு வருதல். அப்போது ஜனங்கள் தானாகவே தங்களின் நன்மை தீமைகளையறிந்து, சத்திய அர்த்தத்தை மேற்கொண்டு, அசத்திய அர்த்தத்தை விலக்கி, சதா ஆனந்தத்தில் வசிப்பார்கள். மனிதர்களின் ஆத்மா சத்தியாசத்தியங்களைத் தெரிந்து கொள்ளுந்திறமைபெற்றது. அவ்வாறிருந்தும் தன்னலசித்தி, பிடிவாதம், துராக்ரஹம், அவித்தை முதலிய தோஷங்களால் சத்தியத்தை விட்டு, அசத்தியத்தில் முழுகுகின்றது. ஆனலிக் கிரந்தத்தில் அப்பேர்ப்பட்ட விஷயம் எழுதப்படவில்லை. யாருடையமனதையும் இதன்மூலமாய் புண்படுத்தவில்லை. யாருக்கும் தீங்குபுரியவும் நினைத்திருக்கவில்லை. ஆனல், இந்நூலில் மனிதஜாதிக்கு உன்னதியும் உபகாரமும் செய்யப்பட்டிருக்கிறது. ஜனங்கள் சத்தியா சத்தியத்தையறிந்து சத்தியத்தைக் கைக்கொண்டு அசத்தியத்தை விலக்குவார்களாக. ஏனென்றால் சத்தியத்தைத் தவிர

மனிதஜாதிக்கு உன்னதியைப் புரிவது வேறொன்றுமே இல்லை.

இந்நூலில் ஏதாவது விட்டுவிட்டிருந்தாலும், தப்பிதமாக இருந்தாலும், கண்டு சொல்லின் அவைகளைச் சீர்திருத்துவோம். ஆனால் பொறாமையினால் இதைக் கண்டிக்கமுற்படுவார்களேயானால் அதை கவனிக்கப்படமாட்டாது. மனிதர்களுக்கு இதம்புரியக்கூடியதாக ஏதாவது சொன்னால் அதை நாம் நன்கு ஏற்றுக்கொள்வோம். தற்காலம் உள்ள பற்பல மதங்களின் வித்வான்களும் விரோதம், பொறாமை முதலியவைகளை விட்டுவிட்டு பரஸ்பரம் ப்ரீதியுடன் நடந்துகொள்வார்களேயானால் உலகத்திற்கு பெரும் உபகாரமாயிருக்கும். ஏனென்றால் அறிவாளிகளுக்குள்ளேயே விரோதமேற்பட்டால், மூடர்களுங்கூட ஒருவருக்கொருவர் விரோதம் செய்துகொண்டு அனேகவித துக்கங்களையடைந்து சுகங்களை இழக்க நேரிடும். இவ்விரோதம் தனிப்பட்ட மனிதனுக்கு சுகமாகத் தோன்றினபோதிலும் சகல மனிதர்களையும் துக்கசாகரத்திலமிழ்த்த ஏதுவாயிருக்கின்றது. யார் உலக உபகாரத்தை நாடி ஒழுகுகின்றார்களோ அவர்களைத் தன்னலம் பாராட்டுபவர்கள் விரோதித்து பல விதமான இடையூறுகளை அவர்களுக்குச் செய்கின்றார்கள். ஆனால் "**सत्यमेव जयते नानृतं सत्येन पन्था विततो देवयानः**" எப்போதும் சத்தியத்திற்கே ஜயமும் அசத்தியத்திற்குத் தோல்வியும் ஏற்பட்டு, சத்யமே அறிவாளிகள் செல்லும் வழியாகிறது. என்றும் திட நிச்சயங்கொண்ட பெரியோர்கள் சத்தியார்த்த ப்ரகாசத்திலிருந்தும் ஒருபோதும் தவறுவதில்லை. "**यत्तदग्रे विषमिव परिणामेऽमृतोपमम्**" இது

கீதையின் வசனம். இதன் பொருள் தர்ம ப்ராப்தி காரியங்கள் முதலில் விஷம்போலவும், பிறகு அமிர்தமயமாகவுமாகிறது. இப்பேர்ப்பட்ட மொழிகளை என் மனதினுள் திடமாக்கி இக்கிரந்தத்தை நான் எழுதுகிறேன். இதைக் கேட்கும் அல்லது படிக்கும் அன்பர்களும் முதலில் அன்புப் பார்வையால் இதைநோக்கி சத்தியாசத்தியங்களை அறிந்து பின் விருப்பம்போல் செய்யலாம். இதில் ஒவ்வொரு மதங்களிலுமுள்ள சத்தியங்களை யெடுத்துக் கொண்டு பொய்களை கண்டித்திருக்கிறது. எல்லா ஜன சமூகத்திற்கும் பொதுவாய் எல்லா மதங்களினுடையவும், வெளிப்படையானவும், மறைவானவுமான குற்றங்களை எடுத்துக்காட்டியிருக்கின்றேன். இதனால் எல்லா மதத்தவர்களும் தங்களின் குற்றங்களை நீக்கி ஒரே மதத்தினர்களாக ஆவார்களாக. நான் ஆர்யாவர்த்தத்தில் பிறந்து, இப்போதும் அங்கேயே வசித்துக்கொண்டிருந்தபோதிலும் இங்குள்ள சகல மதங்களின் குற்றங்களையும் கொஞ்சமும் மறைவின்றி மற்ற மதங்களினுடையதை எடுத்துக்காட்டியதுபோலவே வெளிப்படையாக எடுத்துக்காட்டி இருக்கின்றேன். மனித சமூகம் பொருத்தவரை எவ்வாறு நான் என் தேசத்தவர்களை நேசிக்கின்றேனே அவ்வாறே அன்னிய தேசத்தவர்களையும் நேசிக்கின்றேன். சகலரும் இப்படியே செய்யவேண்டும். நானும் ஓர் சுயநலமியாயிருந்திருப்பேனேயானல் என் சொந்த மதத்தைப் புகழ்ந்தும், துதித்தும், ப்ரசாரம்செய்தும், மற்ற மதங்களைத் திட்டியும், தூஷித்தும் எழுதியிருப்பேன். ஆனல் அம்மாதிரி செய்கை மனிதத்தன்மையாகாது. ஏனென்ருல் எவ்வாறு மிருகங்களுள் பலமுள்ளவைகள் பலமில்லாதவைகளை இம்சித்

தும், கொன்றும் விடுகின்றதோ அவ்வாறே மனிதனும் புரிந்தால் அவன் மனிதமிருகமேயாகும். எவன் பலசாலி யாயிருந்து தன் பலத்தைக்கொண்டு துர்ப்பலசாலிகளுக் குதவி புரிகின்றானோ அவனே மனிதனாகும். அவ்வாறின்றி பிறர்களைத் தன்பலத்தால் துன்புறுத்துபவன் மிருகங் களின் சகோதரனேயாகும்.

முதல் 11 அத்தியாயங்கள் வரை ஆரியாவர்த்தத்தி லுள்ள மதங்களைக்குறித்து எழுதியிருக்கிறேன். வேத மத விரோதமிலாத நன்மதம் என் மதமேயாகும். தற்கால புராண, தந்திர நூற்களை நான் கண்டித்திருப்பது நீக்கத் தக்கவைகளாகும்.

12-வது அத்தியாயத்தில் சார்வாக மதத்தைக்குறித்து தர்க்கித்திருக்கிறேன். புத்தம், ஜைனம் முதலிய மதங் களின் நாஸ்திகத்தையும் நன்கு கண்டித்துள்ளேன். சார் வாகமதம் மற்றவைகளைக்காட்டிலும் பெரிய நாஸ்திக மத மாகும். அதன் சேஷ்டையைத் தடுத்தல் அவசியமாகும். ஏனென்றால் பொய் வார்த்தைகளைக் கண்டிக்காதுவிட்டால் உலகத்திற்கு மிகுந்த கஷ்டங்கள் நேரிடும். சார்வாக, பௌத்த, ஜைன, மதங்களுக்குள்ள சம்பந்தத்தையும் விளக்கி அவைகளிலுள்ள குற்றங்களையும் 12 வது அத்தி யாயத்தில் எழுதியிருக்கிறேன். பௌத்த, ஜைன மதங்கள் சார்வாகத்துடன் சிறிது விரோதமுடையதாகும். ஜைன மதம் மற்ற இரண்டிற்கும் சிறிது விரோதமுடையதாகும். இதனாலேயே ஜைனர்களின் தனிப்பட்ட கிளை கினி ஜாதி யாகும். மற்றும் 12வது அத்தியாயத்தி லிவைகளைக்குறி த்து விரிவாயுள்ளது. புத்தமத கண்டனைபுரியும்போது

அவர்களின் பழங்கிரந்தமான தீபவம்ஸம், பௌத்தமத சங்ரஹம், சர்வதர்ஸன சங்க்ரஹம் முதலிய சாஸ்த்திரங்களையும், ஜைனமத சம்பந்தமாய் ஆவஸ்யக சூத்ர, விசேஷ ஆவஸ்யக சூத்ர, தசவைகலிக சூத்ர, பாஷிக சூத்ர, ஆதி நான்கு சூத்திரக்கிரந்தங்களும், ஆசாராங்கசூத்ர, சுகடாங்க சூத்ர, தணுங்கசூத்ர, ஸமவாயாங்கசூத்ர, பகவதிசூத்ர, க்ஞாதாதர்மகதாசூத்ர, உபாசகதஸாசூத்ர, அந்தகடதசா சூத்ர, அனுத்தரோவவாயீ சூத்ர, விபாகசூத்ர, ப்ரஸ்ன வ்யாகரணசூத்ர, எனும் 11 அங்கங்களையும், உபவாயீசூத்ர, ராயபஸேனீசூத்ர, ஜீவாபிகமசூத்ர, பன்னவணுசூத்ர, ஜம்புத்வீப பன்னதீசூத்ர, சந்தபன்னதீசூத்ர, ஸூரபன்னதீ சூத்ர, நிரியாபலீசூத்ர, கத்பியாசூத்ர, கபவடிசயாசூத்ர, பூப்பியாசூத்ர, புப்பசூளியாசூத்ர, ஆதி 12 உபாங்கங்களும், உத்தராத்யயனசூத்ர, நீஸியசூத்ர, கல்பசூத்ர, வ்யவஹார சூத்ர, ஜீதகல்பசூத்ர எனும் கல்பங்களும்; மஹாநீஸீதப் நஹத்வாசணுசூத்ர, மஹாநீஸீதலகுவாசணுசூத்ர, மத்யம வாசணுசூத்ர, பிண்டநிருக்திசூத்ர, ஓகநிருக்திசூத்ர, பர்யூஷணுசூத்ர, எனும் 6 சேதங்களும்; சதுசரணசூத்ர, பச்சசாணசூத்ர, ததுலவையாளிசூத்ர, பக்திபரிக்ஞான சூத்ர, மஹாப்ரத்யாக்யானசூத்ர, சந்தாவிஜயசூத்ர, கணீ விஜய சூத்ர, மாணசமாதி சூத்ர, தேவேந்திரஸ்தமன சூத்ர, ஸம்ஸார சூத்ர எனும் 10 பயன்ணு சூத்திரங்களும், அவ்வாறே நந்தீசூத்ர, யோகோத்தாரசூத்ரங்களும் ப்ரமாணமாக எடுத்துக் கொள்ளப்பட்டன. பஞ்சாங்கமென்பது, (1) முன் சொன்ன கிரந்தங்களின் உரை, (2) அவைகளின் விளக்கம் (நிருத்தி), (3) (சரணீ) கவிகள், (4) (பாஷ்ய) விளக்க உரை. இந்நான்கும் அவயவங்கள்.

இவ்வெல்லாவற்றின் மூலமும் சேர்ந்தது பஞ்சாங்கமாகும். அவயவங்களிலே ஜேண்டியா வைச் சேர்ப்பதில்லை. இவைகள் நீங்கலாக இன்னும் அனேக கிரந்தங்கள் ஜைனர்கள் மதிப்புக்கிடமாயுள்ளன. இதன் மத சம்பந்தமான விஷயங்களை 12வது அத்தியாயத்தில் காணலாம். ஜைனர்களின் நூல்களில் லக்ஷக்கணக்கான 'கூறினது கூறல்' குற்றங்களிருக்கின்றன. ஜைனர்களின் நூல்கள் அன்னியர் கைக்குச் சென்றுவந்தாலும், அன்னியர்களால் வெளிப்படுத்தப் பட்டாலும், அவைகளிற் சிலது தங்களுக்கு ப்ரமாணமில்லையென மறுத்து விடுகிறார்கள். ஆனால் உண்மையில் ஜைனர்களால் நம்பப்படாத நூலே அவர்களுக்கு ப்ரமாணமல்லாததாகும். ஆனால் முன் சொன்னவைகள் சகலமும் ஜைனர்களால் மதிக்கப் பட்டு வந்தனவேயாகுமாதலால் அவைகளின் குற்றங்களைக்கண்டித்து, நற்றங்களைப் புகழ்தல் உசிதமேயாகும். ஆனால் தங்கள் வரையில் சில புத்தகங்களை நம்பியும், சபைகளில் விவாதிக்கும் போது "அது ப்ரமாண மில்லை" யெனச் சொல்லும் சில புத்தகங்களையும் ஜைனர்கள் உடைத்தாயிருக்கின்றார்கள். அன்னியர்கள் படிக்காத படியும், கேட்காத படியும் அவர்களின் புத்தகங்களை மறைத்திருப்பதாலேயே அதில் அனேக அசம்பாவிதங்கள் ஏற்பட்டுள்ளது. அவைகளுக்கு ஜைனர்களே கூட சரியான விடையளிக்க முடியவில்லை. "பொய்யைவிட்டு விடலாம்" என்பதே அவர்களின் பதிலாகும்.

13ன்றாவது அத்தியாயத்தில் கிருஸ்தவமதத்தைக் குறித்து ஆராயப்பட்டிருக்கிறது. அவர்கள் "பைபிள்"

எனும் நூலை தங்கள் தர்ம புத்தகமாக மதிக்கிறார்கள். அதனுடைய விசேஷங்களை 13ன்றாவது அத்தியாயத்தில் பார்க்கவும். 14வது அத்தியாயத்தில் மகம்மதிய மதம் எழுதப்பட்டுள்ளது. அவர்கள் குரானை தங்கள் மதப் புத்தகமாக மதிக்கிறார்கள். இதனுடைய விசேஷங்களை 14வது அத்தியாயத்தில் பார்க்கவும். இதற்குப்பின் வைதிக மதம் எழுதப்பட்டிருக்கிறது. எவர் இக்கிரந்த கர்த்தாவுக்கு மாறுபட்ட மனத்தினராய்ப் பார்க்கின்றாரோ அவருக்கதில் ஒன்றுமே கிடைக்காது. ஏனென்றால் வாக்கியத்தின் பொருளை அறிந்து கொள்ள 4 காரணங்களிருக்கிறது. ஆகாங்க்ஷை, யோக்யதை, ஆசக்தி, தாத்பரியம் என்பவைகளாகும். எவர் இந்நான்கிலும் கவனஞ் செலுத்தி ஓர் கிரந்தத்தைப் பார்க்கின்றாரோ அவர் தான் அக்கிரந்தத்தின் உண்மையைச் சரிவர அறியக்கூடும்.

ஆகாங்க்ஷை—: ஒரு விஷயத்தைச் சொன்னவர் அக்கருத்துக்கிசைந்த பதம் உபயோகித்திருக்கின்றாரா எனப் பார்த்தல்.

யோக்யதை—: பொருள்களின் தன்மையை நடைபெறக்கூடிய விதமாகச் சொல்லியிருத்தல்.

ஆசக்தி—: எந்த பதத்திற்கு எந்த பதம் சம்பந்தமோ அதை அதற்கருகிலேயே எழுதுதல்.

தாத்பர்யம்—: கிரந்தகர்த்தா எதற்காக ஒன்றைச் சொன்னாரோ அதை அவரின் உண்மை கருத்துக்கிணங்க அறிதல்.

[தமிழில் வாசிப்போர்க்கனுகூலமாய் சில உதாரணங் களைக் கீழ் வரைவோம்.] [மொழிபெயர்ப்பாளரின் குறிப்பு]

ஆகாங்க்ஷை—: "அறஞ்செய விரும்பு" எனும் ஔவையார் வாக்கியத்தைப் படித்தவுடன் "அறம் என்ற பதத்திற்கு ஔவையாரின் கருத்தென்ன?" என அறிய வேண்டும். சாதாரணமாக பள்ளியிலே அறம் என்றதற்கு தருமம் (அதாவது ஒருவருக்கொருவர் கொடுத்தல்) எனும் பொருளைச் சொல்லிவருகின்றனர். ஆனால் இதன் உண்மை யான பொருளை நாமறிய ஔவையாரின் மற்ற நூல்களை யும், அவரின் வாழ்க்கையனுபவங்களையுமொத்திட்டுப் பார்த் தால் ஔவையாரின் கருத்து அறம் என்பதற்கு "நன் மைக்கு நன்மை தீமைக்கு தீமை புரிதல்" என்றேற்படும். இவ்வாறு ஓர் கருத்தை சொன்னவரின் கருத்துக்கிசைய அறிதலே ஆகாங்க்ஷையெனச் சொல்லப்படும்.

யோக்யதை—: "கல் தண்ணீரில் மிதந்தது" கல் லுக்கு தண்ணீர் மேல் மிதக்கும் யோக்யதை கிடையாது. ஆதலால் இது தப்பிதம். இவ்வாறு ஓர் பதப்பொருளின் யோக்யதைக்குத் தகுந்த கருத்தை தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆசக்தி—: "கல்லானது தண்ணீர்மேலே போனது" இங்கே கல் எனும் பதத்தின் ஹொழில் போனது ஆகும். இவ்வாறே எழுவாய் பயனிலைகளைச் சரிவர கருத்துக்கிசைய அறியவேண்டும்.

தாத்பரியம்—: கர்த்தாவின் கருத்துக்கிசையவே படிப்போரும் வாசித்தலாகும்.

துஷ்டர்கள் கர்த்தாவின் கருத்தை விட்டு விட்டு அவர்களின் வாக்கியங்களுக்கு தங்களின் கருத்துக்களைக் கற்பிக்கின்றார்கள். இவ்வாறு செய்யும் மதாச்சாரியார்கள் தங்களின் மதத்தவர்களை அந்தகாரத்தில் மூழ்கச் செய்கிறார்கள். இக்கருத்தைக் கொண்டே நான் புராணங்கள், பைபிள், குரான் முதலியவைகளின் நற்கருத்துக்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு, கெட்டவைகளை நீக்கி இருக்கின்றேன். இவ்வாறே ஒவ்வொருவரும் செய்யவேண்டும். இவைகளிற் காட்டியுள்ள கெட்டவைகளைப் படிப்போர் உலகில் ஒரே சத்யமதத்தை நிலை நிறுத்த முயற்சிப்பார்களாக. சத்தியா சத்தியத்தையறிந்து வாசிப்போர்கள் சத்தியங் கைக்கொண்டு அசத்தியத்தைக் கைவிட்டு மற்றவர்களையும் அம்மாதிரியே செய்யவும் முயற்சிப்பார்களாக. ஏனென்றால் பல தப்பிதமான மதங்கள் மக்களை விரோதிகளாக்கி, சண்டை, கொலை முதலியவைகளைச் செய்யும்படித் தூண்டுகின்றன. இக்கிரந்தத்தைக் கண்டபின்பாவது சகல மக்களும் விரோதமின்றி நண்பர்களாக வாழ முயற்சிப்பார்களாக. ஆனகயினல் இப்புத்தகத்தின் பலனை எனக்கன்றி உலக ஜனங்களின் முன்பு சமர்ப்பிக்கின்றேன். இதைக் கண்டு அவர்களினனுபவத்தால் என் களைப்பை நீக்குவார்களாக. இதேபோல் தான் சத்தியார்த்த ப்ரகாசம் உலகில் நிலைக்க வேண்டுமென்பது என்னுடையவும், அறிவாளிகளுடையவும் விருப்பமாகும்.

சர்வாத்மா, சர்வாந்தர்யாமி, சச்சிதானந்த பரமாத்மா, அவரினருளால் இவ்வெண்ணுசையை முடித்துவைப்பாராக.

अलमतिविस्तरेण बुद्धिमद्वरशिरोमणिषु

உதயபுரி
விக்ரம 1939
பாத்ரபதமீ சுக்லபக்ஷம் } (ஸ்வாமி) தயானந்த சரஸ்வதி

முக்கிய கவனிப்பு

முகவுரை 8 பக்கங்களுள் அடங்கிவிடுமென நினைத்து புத்தகம் ஒன்பதாவது பக்கத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. ஆனல் எழுத்துக்களையடுக்கியபின் முகவுரை 12 பக்கங்கள் கொண்டது. ஆதலின், முகவுரையை ரோமன் எண்ணில் 12 வரையில் கொடுத்து, புத்தகம் 9 வது பக்கத்திலிருந்தே ஆரம்பிக்கும்படியாகிவிட்டது. வாசகர்கள் தயவுசெய்து கவனிப்பார்களாக.

பிரசுரிப்போர்

சத்தியார்த்த ப்ரகாசம்

முதலாவது அத்தியாயம்

ओम् शन्नो मित्रः शं वरुणः शन्नो भवत्वर्यमा। शन्न इन्द्रो बृहस्पतिः शन्नो विष्णुरुरुक्रमः॥ नमो ब्रह्मणे नमस्ते वायो त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि। त्वामेव प्रत्यक्षं ब्रह्म वदिष्यामि ऋतं वदिष्यामि सत्यं वदिष्यामि तन्मामवतु तद्वक्तारमवतु। अवतु मामवतु वक्तारम्॥ ओ३म् शान्तिश्शान्तिश्शान्तिः॥ १॥

பொருள்—: (ஓம்) இவ்வோங்கார சப்தம் பரமேஸ்வரின் சர்வோத்தம நாமமாகும். ஏனென்றால் இது அ, உ, ம் ஆகிய மூன்றெழுத்துக்கள் சேர்ந்தான சப்தமாகும். இவ்வொரு நாமத்திலிருந்து கடவுளின் அனேக நாமங்கள் உண்டாகின்றன. அகாரத்திலிருந்து—விராட், அக்னி, விஸ்வ ஆதிகளும்; உகாரத்திலிருந்து—ஹிரண்யகற்ப, வாயு, தைஜஸ ஆதிகளும்; மகாரத்திலிருந்து—ஈஸ்வர, ஆதித்ய, ப்ராஜ்ஞ ஆதிகளும் உண்டாகின்றன. வேதாதி சாஸ்த்திரங்களில் இவ்வாறான பல நாமங்களும் கடவுள் ஒருவரையே குறிக்குமென ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறது.

கேள்வி—: விராட் முதலிய பெயர்கள் கடவுள் தவிர மற்றவைகளையுமேன் குறிக்காது? பூதங்களிலே ப்ரஹ்

மாண்ட, ப்ருதிவீ ஆதிகளும், தேவர்களில் இந்த்ர ஆதிகளும், வைத்திய சாஸ்த்திரத்தில் சுக்கு முதலிய பெயர்களும் உண்டா இல்லையா ?

விடை—: உண்டு. ஆனால் அப் பதங்கள் கடவுளையுங் கூட குறிக்கும்.

கே—: அவைகள் தேவதைகளைமாத்திரம் குறித்திருக்கின்றதென நம்புகிறோம்.

வி—: நீங்கள் நம்புவதற்கு என்ன ப்ரமாணம் ?

கே—: தேவதைகள் என்னும் பெயர்கள் நன்கு தெரிவதாகி நல்லவைகளாயுமிருப்பதால்.

வி—: என்ன ? கடவுள் தெரிவதில்லையா ? அவரைவிடப் புனிதமான பொருளும் உண்டா ? பின் என் இப்பெயர்கள் கடவுளையுங் குறிக்காது ? கடவுளும் அனுபவத்திற்குத் தெரியும் பொருளாகி, பரம பவித்திரமானதாயின் அதைவிட உத்தமமான பொருளும் வேறொன்றுண்டா ? ஆதலால் தாங்கள் இவ்வாறு சொல்வது சத்தியமல்ல. ஏனென்றால் இவ்வாறு சொல்வதால் பலவித தோஷங்களுக்கு இடமுண்டாகின்றது. எவ்வாறெனில்:—“ **उपस्थितं परित्यज्यानुपस्थितं याचत इति बाधितन्यायः**” ஒருவன் முன்பாக மற்றொருவன் போஜனத்தை இட்டு “ இதை சாப்பிடுங்கள் ” என்கின்றான். ஆனால் அவன் அதை விட்டு விட்டு மற்றெங்கோ போஜனத்திற்காகத் தேடிச் சுற்றுகிறான். அவனை அறிவாளியென்று சொல்லமுடியாது. ஏனென்றால் (உபஸ்தித) அருகிலே

உள்ள பதார்த்தத்தைவிட்டு (அனுபஸ்தித) அருகில் இல்லாத பதார்த்தத்தைத் தேடியலைகிறான். எவ்வாறு அப்புருடனின் செய்கை புத்திசாலித்தன மாகாதோ அவ்வாறேதான் நீங்கள் சொன்னதுங்கூட. ஏனென்றால் நீங்கள் அருகில் நன்றாக அனுபவத்திற் றெரிவனவுமான கடவுள், ப்ரஹ்மாண்டாதிகளை விட்டு, நன்கு அனுபவம் இல்லாத, தூரமான தேவர்களை அறிகிறீர்கள். இதற்கு எவ்விதமான ப்ரமாணமும் யுக்தியும் இல்லை. நீங்கள் சொல்வது எவ்வாறிருக்கின்றதென்றால்- ஓர் மனிதன் தன் வேலைக்காரனைப் பார்த்து "हे भृत्य ! त्वं सैन्धवमानय" என்றால். "நீ சைந்தவம் கொண்டுவா" என்கின்றான். இப்போது வேலைக்காரன் தன் எஜமானனின் சமயத்தை நன்கு ஆலோசிக்க வேண்டும். ஏனென்றால் "சைந்தவம்" என்றால், குதிரை, உப்பு என இரண்டு பொருள்களுண்டு. சொன்னபொழுது எஜமானன் ப்ரயாணச் சித்தனாயிருந்தால் குதிரையையும், அருந்தும் சமயத்தனாயிருந்தால் உப்பையுங் கொண்டுவரவேண்டும். அவ்வாறன்றி ப்ரயாண சமயத்தில் உப்பையும், சாப்பிடும் சமயத்தில் குதிரையையுங் கொண்டு வந்தால் எஜமானன் கோபித்து "போடா அறிவிலி" எனச்சொல்வான். "இவ்வாறு சமயமறியாமல் கொண்டுவருவதில் என்ன ப்ரயோஜனம்? நீ சமயமறிந்தவனல்ல. சமயமறிந்து எதையுங் கொண்டுவரவேண்டும். சமயத்தை ஆலோசித்திருக்க வேண்டியது உன் கடமை. அதை நீ செய்யவில்லை. இதனால் நீ மூர்க்கன். என்னிடத்திலிருந்து விலகிப் போ" எனச்சொல்வான். இதனால் என்ன ஏற்படுகிறது? எங்கே எந்த அர்த்தத்தைக் கிரகிக்க வேண்டுமோ அங்கே அதைக் கிரகிக்கவேண்டும். அவ்வாறே எல்லா ஜனங்களும் செய்ய வேண்டுவ தவசியமாகும்.

மந்திரார்த்தம்

ओ३म् खम्ब्रह्म ॥ १ ॥ யஜு. 40-17.

வேதங்களில் இன்னின்ன பிரிவில் ஓம் ஆதிநாமங்கள் கடவுளைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

ओमित्येतदक्षरमुद्गीथमुपासीत ॥ २ ॥ சாந்தோக்ய
உபநிஷத் (மந்-1).

ओमित्येतदक्षरमिदꣳ सर्वं तस्योपव्याख्यानम् ॥ ३ ॥
மாண்டூக்ய (மந்-1).

सर्वे वेदा यत्पदमामनन्ति तपाꣳसि सर्वाणि च यद्वदन्ति ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं संग्रहेण ब्रवीम्योमित्येतत् ॥
கடோபநிஷத் (வல்லி-2. மந்-15).

प्रशासितारं सर्वेषामणीयांसमणोरपि ।
रुक्माभं स्वप्नधीगम्यं विद्यात्तं पुरुषं परम् ॥ ५ ॥

एतमग्निं वदन्त्येके मनुमन्ये प्रजापतिम् ।
इन्द्रमेके परे प्राणमपरे ब्रह्म शाश्वतम् ॥ ६ ॥
மனு 12 (ஸ்லோ. 122, 124).

स ब्रह्मा स विष्णुः स रुद्रस्स शिवस्सोऽक्षरस्स परमः स्वराट् ॥
स इन्द्रस्स कालाग्निस्स चन्द्रमाः ॥ ७ ॥

கைவல்ய உபநிஷத்.

इन्द्रं मित्रं वरुणमग्निमाहुरथो दिव्यस्स सुपर्णो गरुत्मान्।
एकं सद्विप्रा बहुधा वदन्त्यग्निं यमं मातरिश्वानमाहुः॥ ८॥

ருக்-1-164-46.

भूरसि भूमिरस्यदितिरसि विश्वधाया विश्वस्य धर्त्री।
पृथिवीं यच्छ पृथिवीं दृꣳह पृथिवीं मा हिꣳसीः॥ ९॥

யஜுர்-13-18.

इन्द्रो मह्ना रोदसी पप्रथच्छव इन्द्रः सूर्यमरोचयत्।
इन्द्रेह विश्वा भुवनानि येमिर इन्द्रे श्वानास इन्दवः॥ १०॥

ஸாமவேதம்-6-8-2.

प्राणाय नमो यस्य सर्वमिदं वशे।
यो भूतः सर्वस्येश्वरो यस्मिन्त्सर्वं प्रतिष्ठितम्॥ ११॥

அதர்வம்-11-2-4-1.

போ—: இந்த ப்ரமாணங்களை யெழுதுவதின் தாத்பரியம் இவ்விடங்களிலெல்லாம் ஓங்காராதி நாமங்கள் கடவுளைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்வாறே எந்தக்கடவுளின் நாமமும் அர்த்தமில்லாமலு மில்லை. எவ்வாறு உலகத்தில் பரமதரித்திரனுக்கு "தனபதி" யெனும் பெயரேற்பட்டிருக்கிறதோ அவ்வாறல்ல இக்கடவுளின் பெயர்கள். சிலவிடத்தில் குணம், சிலவிடத்தில் காரியம், சிலவிடத்தில் சுபாவம் இவைகளைக்குறித்துப் பெயர்கள் ஏற்பட்டுள்ளன. ஓம் ஆதி பெயர்கள் அர்த்தமுடையதாகும். (ओं खम्०) "अवतीत्यों, आकाशमिव व्यापकत्वात् खम्, सर्वेभ्यो बृहत्त्वात् ब्रह्म" காப்பாற்றுவதால் (ஓம்) ஆகாயம் போல் வியாபித்

திருப்பதால் (கம்) எல்லாவற்றிலும் பெரியதாகையால் (ப்ரம்ம) கடவுளின் பெயராகும் ॥ 1 ॥ (ओमित्येतत्०) (ஓம்) எவருடைய பெயரோ; எப்போதும் நஷ்டமாவதில்லையோ; அவரையே நாம் உபாசிக்கத்தகும். மற்றவரையில்லை ॥ 2 ॥ (ओमित्येत०) சகல வேதாதி சாஸ்த்திரங்களில் கடவுளின் பிரதான, நிஜப் பெயர் (ஓம்) எனச்சொல்லியிருக்கிறது. மற்ற சகலமும் குணப் பெயர்களாகும் ॥ 3 ॥ (सर्वे वेदाः) சகல வேதங்களும் தர்மானுரூபமாய் எதைச் சொல்லியுள்ளதோ; அதன் பெயர் ஓம் ஆகும் ॥ 4 ॥

(प्रशासिता०) எல்லாவற்றிற்கும் சிக்ஷையளிப்பவன், சூக்ஷ்மத்தினும் சூக்ஷ்மன், தன்னொளிப்ரகாசன், நிலை பெற்ற அறிவால் அறியத்தகுந்தவன், அவனே பரமபுருடனாக அறிய வேண்டும் ॥ 5 ॥ தன்னொளிப்ரகாசத்தால் "அக்னி," விஜ்ஞானஸ்வரூபத்தால் "மனு", சகலத்தையும் பாலிப்பதால் "ப்ரஜாபதி" பரம ஐஸ்வர்யவானாகையால் "இந்த்ர", சகலத்தின் ஜீவித மூலமாகையால் "ப்ராண", நிரந்தர வியாபகனானதால் "ப்ரம்ம" கடவுளின் பெயர் ஆகும் ॥ 6 ॥

(स ब्रह्मा स विष्णुः०) சகல உலகையும் செய்ததால் "ப்ரம்மா" சர்வமும் வ்யாபித்துள்ளதால் "விஷ்ணு" துஷ்டர்களைத் தண்டித்தலால் "ருத்ர" மங்களமய, சகலத்திற்கும் கல்யாண கர்த்தாவானதால் "சிவ" "यः सर्वमश्नुते न क्षरति न विनश्यति तदक्षरम्" ॥ 1 ॥ "यः स्वयं राजते स स्वराट्" ॥ 2 ॥ "योऽग्निरिव कालः कलयिता प्रलयकर्त्ता स कालाग्निरीश्वरः" ॥ 3 ॥ (அக்ஷர) எங்கும் வியாபித்து நாசமில்லாதவன் (ஸ்வராட்) தானாகவே ப்ரகாசிப்பவன் (காலாக்னி)

ப்ரளயத்தில் சகலத்திற்கும் காலன், காலத்திற்கும் காலனுன தால் கடவுளின் பெயர் காலாக்னி ॥ 7 ॥ (**इन्द्रं मित्रं०**) தனிப் பட்டு, இரண்டில்லா சத்யவ்யாபக ப்ரம்மன் எவனே அவ னுக்கே இந்திராதி சகல நாமங்களுமாகும். “**द्युषु शुद्धेषु पदार्थेषु भवो दिव्यः**” “**शोभनानि पर्णानि पालनानि पूर्णानि कर्माणि वा यस्य सः सुपर्णः**” “**यो गुर्वात्मा स गरुत्मान्**” “**यो मातरिश्वा वायुरिव बलवान् स मातरिश्वा**” (திவ்ய:) எவன் ப்ரக் ருதியாதி திவ்ய பதார்த்தங்களில் வ்யாப்தன் (ஸுபர்ண:) உத்தமபாலன பூர்ண காரியம் யாருடையது; (கருத்மான்) எவன் ஆத்ம-ஸ்வரூப மஹான், (மாதரிச்வா) வாயுவிற்குச் சம மான பலவான், இவைகளினுல் கடவுளுக்கு திவ்யன், ஸுபர் ணன், கருத்மான், மாதரிச்வான் முதலிய பெயர்களாகும். மற்ற பெயர்களின் பொருளைக் கீழே வரைவோம் ॥ 8 ॥

(**भूमिरसि**) “**भवन्ति भूतानि यस्यां सा भूमिः**” எதில் சகல பூதப்ராணிகள் உண்டாகிறது, அதனுல் கடவுளுக்கு “பூமி” யெனப்பெயர் ॥ 9 ॥

(**इन्द्रो मह्ना०**) இந்திரன் என்பது கடவுளின் பெயர் ॥ 10 ॥

(**प्राणाय०**) எவ்வாறு உயிர் சகல சரீர அவயவங்களையும், இந்திரியங்களையும் நடத்துகிறதோ; அவ்வாறே கடவுள் சகல உலகையும் நடத்துகிருர் ॥ 11 ॥ இவ்வாருன பலவித பெயர்களின் உண்மைகளை அறிவதால் இவைகள் கடவுளின் பெயர்களாகின்றதெனை அறியலாம். ஓம், அக்னியாதி நாமங்களின் முக்யஅர்த்தம் கடவுளைக் குறிக்கின்றது. இவ்

வாறேதான் இலக்கணம், நிருக்தம், ப்ராம்மணம், சூத்திராதி ரிஷிகளின் கிரந்தங்களிலும் சொல்லியுள்ளது. இதனால் துதி, ப்ரார்த்தனை, உபாஸனை, சர்வக்ருத்வம், வ்யாபகம், சுத்தம், பழமை, உற்பத்தி ஆதிவிசேஷங்களில் வரும் அக்னியாதி பெயர்கள் கடவுளையே குறிக்கும். ஆனால்—:

ततो विराडजायत विराजो अधिपूरुषः। श्रोत्राद्वायुश्च प्राणश्च मुखादग्निरजायत। तेन देवा अयजन्त। पश्चाद्भूमिमथो पुरः॥ யஜு. அத் 3.

तस्माद्वा एतस्मादात्मन आकाशः सम्भूतः। आकाशाद्वायुः। वायोरग्निः। अग्नेरापः। अद्भ्यः पृथिवी। पृथिव्या ओषधयः। ओषधिभ्योऽन्नम्। अन्नाद्रेतः। रेतसः पुरुषः। स वा एष पुरुषोऽन्नरसमयः॥ ப்ரா—வல்லி—1.

இது தைத்திரீயோபநிஷத்தின் வாக்யமாகும். இவ்வாறுள்ள ப்ரமாணங்களில் வரும் விராட், புருஷ, தேவ, ஆகாச, வாயு, அக்னி, ஜல, பூமி ஆதிநாமங்கள் லௌகிக பொருள்களினர்த்தத்தை யளிக்கும். ஏனென்றால் எங்கெங்கு உத்பத்தி, ஸ்திதி, ப்ரளயம், அல்பக்ஞம், ஜடம், பார்வைக்குக் கிட்டுதல் முதலிய விசேஷங்களைச் சொல்லியுள்ளதோ அங்கங்கு அக்னியாதி நாமங்கள் கடவுளைக்குறிக்காது. எங்கெங்கு "சர்வக்ருத்வம்" முதலிய விசேஷங்கள் சொல்லுகின்றனவோ அங்கங்கு கடவுளின் பெயர்களாகவும், எங்கெங்கு ஆசை, துவேஷம், முயற்சி, சுகம், துக்கம், "அல்பக்ஞத்வம்" முதலிய விசேஷங்களைச் சொல்கின்றதோ அங்கங்கு ஜீவன் எனும் பொருளில் அப்பதங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்

றன. ஏனென்றால் கடவுள் இறப்பு, பிறப்பு அற்றவர். அவ்விடங்களில் அக்னியாதி நாமங்கள் ஜீவன் அல்லது பௌதிக சக்தி களின் பெயர்களாகும்.

ஓங்காராதி நாமங்களின் விளக்கம்.

(1) விராட்-: (राजृ दीप्तौ) ('वि' उपसर्गपूर्वक) "ராஜ்ரு" இத்தாதுவுடன் 'க்விப்' ப்ரத்யயம் சேர்ந்தால் விராட் ஆகின்றது. "यो विविधं नाम चराऽचरं जगद्राजयति प्रकाशयति स विराट्" பலவிதமான உலகை ப்ரகாசிக்கச் செய்வதால் கடவுளின் பெயர் விராட் ஆகும்.

(2) அக்னி—: (अञ्चू गतिपूजनयोः) (अग, अगि, इण्. गत्यर्थक) "அஞ்ச்" தாதுவிலிருந்து அக்னி சப்தமாகின்றது, "गतेस्त्रयोऽर्थाः ज्ञानं गमनं प्राप्तिश्चेति ; पूजनंनाम सत्कारः" "योऽञ्चति अच्यतेऽगत्यङ्गत्येति वा सोऽयमग्निः"—: யார் ஞானஸ்வரூப, சகலஅறிவன், அறிவாலறியப் படுபவன், பூஜிக்கத்தகுந்தவன் அவனுடைய கடவுளின் பெயர் "அக்னி" யாகும்.

(3) விஸ்வ—: (विश-प्रवेशने) "விச" இத்தாதுவி விருந்து விஸ்வசப்த முண்டாகிறது. विशन्ति प्रविष्टानि सर्वाण्याकाशादीनि भूतानि यस्मिन् यो वाऽऽकाशादिषु सर्वेषु भूतेषु प्रविष्टः सः विश्व ईश्वरः" ॥ எதில் ஆகாசாதி சகல பூதங்களும் ப்ரவேசித்திருக்கின்றன அல்லது எது இவைகளில் வியாபித்திருக்கிறது, இதனால் அக்கடவுளின் பெயர் விஸ்வன் ஆகும். இப்பெயர்கள் ஆகார மாத்திரமேயாகும்.

(4) ஹிரண்ய கர்ப்பன்—: "**ज्योतिर्वै हिरण्यं तेजो वै हिरण्यमित्यैतरेये शतपथे च ब्राह्मणे**" "**यो हिरण्यानां सूर्यादीनां तेजसां गर्भं उत्पत्तिनिमित्तमधिकरणं स हिरण्यगर्भः**" *சூர்யாதி ஒளிகள் எதிலிருந்துண்டாகி, ஆதாரம்பெறுகின்றன; அல்லது யார் சூர்யாதி ஒளிகளை உண்டாக்கித் தன்னொளியால் ப்ரகாசிப்பிக்கச் செய்கின்றார்; இதனால் கடவுளுக்கு ஹிரண்யகர்ப்பன் எனப்பெயராகும். இதற்கு யஜுர் வேதப்ரமாணம்—:*

ओम् हिरण्यगर्भः समवर्त्तताग्रे भूतस्य जातः पतिरेक आसीत्। स दाधार पृथिवीं द्यामुतेमां कस्मै देवाय हविषा विधेम ॥ *யஜு—13-4.*

இம்மாதிரியான விடங்களில் "ஹிரண்யகர்ப்பன்" எனும் பெயர் கடவுளையே குறிக்கும்.

(5) வாயு—: (**वा गतिगन्धनयोः**) "*வா*" *இத்தாதுவிலிருந்து வாயுசப்த முண்டாகிறது.* (**गन्धनम् हिंसनम्**) "**यो वाति चराऽचरम् जगद्धरति बलिनां बलिष्ठः सः वायुः**" *எவன் சராசர உலகை தரித்து, காப்பாற்றி, அழிக்கின்றானோ; பலவான்களிலெல்லாம் பெரும் பலவானோ; இதனால் கடவுளுக்கு "வாயு" எனும் பெயராகும்.*

(6) தேஜன்—: (**तिज निशाने**) "*திஜ*" *தாதுவிலிருந்து தேஜன் உண்டாகிறது. இதை "தத்தித வ்ருத்தி" செய்யின் தைஜஸன் ஆகிறது.*

ஸ்வயம்ப்ராகாசன், சூர்யாதிலோகங்களை ப்ரகாசிக்கச் செய்கிறவன் எவனோ; அவனுக்கு "தைஜஸன்" எனும் பெயராகும். இவ்வாறான நாமங்கள் உகாரசம்பந்தங்களானவைகள்.

(7) ஈச்வரன்—:(ईश ऐश्वर्ये) "ஈச்" எனுந் தாதுவிலிருந்து 'ஈச்வரன்" உண்டாகிறது. "य ईष्टे सर्वैश्वर्यवान् वर्त्तते स ईश्वरः"

சத்யவிசாரசீலஞானம், அனந்த ஐச்வர்யம் யாருடையதோ; இதனால் கடவுளுக்கு "ஈச்வரன்" எனப்பெயராகும்.

(8) ஆதித்யன் (दो अवखण्डने) "தோ" தாதுவிலிருந்து "அதிதி" யாகி, தத்தித வ்ருத்தியால் ஆதித்ய சப்தமுண்டாகிறது.

"न विद्यते विनाशो यस्य सोऽयमदितिः। अदितिरेव आदित्यः"

எவனுக்கெப்போதும் அழிவில்லையோ; இதனால் கடவுளுக்கு "ஆதித்யன்" எனப்பெயர்.

(9) ப்ராஜ்ஞன்—: (ज्ञा अवबोधने) "ப்ரபூர்வக ஜ்ஞா" தாதுவிலிருந்து ப்ரஜ்ஞனாகி, பின் தத்திதவ்ருத்தியால் ப்ராஜ்ஞனாகிறது.

"यः प्रकृष्टतया चराऽचरस्य ज्ञाता व्यवहारं जानाति स प्रज्ञः। प्रज्ञ एव प्राज्ञः"

யார் சுழற்சியில்லாத ஞானயுக்த சகல சராசர உலகத்தின் வ்யவகாரங்களை சரிவர அறிகின்றாரோ; இதனால் கடவுளுக்கு "ப்ராஜ்ஞன்" எனப்பெயராகும்.

இத்யாதி பெயர்கள் மகாரத்திலிருந்துண்டானவைகளாகும்.

மற்றபெயர்களுக்கு மிவ்வாறே பொருள்கண்டு கொள்ள வேண்டும். (சன்னோமித்ர:) எனும் மந்திரத்திலுள்ள "மித்ர" ஆதிநாமங்களும் கடவுளையே குறிக்கும். ஏனென்றால், துதி, ப்ரார்த்தனை, உபாஸனை, சிரேஷ்டமாகச் சொல்லியிருப்பதினால். சிரேஷ்டனென்பது குணகர்ம, ஸ்வபாவ, சத்தியாசத்ய வ்யவகாரங்களில் எல்லாரினும் மேம்பட்டவன். அப்பேர்ப்பட்ட சிரேஷ்டர்களில் மேலான சிரேஷ்டன் கடவுளாகும். அவனைப்போல் சுத்தம் எதுவுமிருந்ததில்லை. இருக்கிறதில்லை. இருக்கப் போவதுமில்லை. சுத்தமில்லாதபடியினால் அவனைவிடப் பெரியவனுமிருக்க முடியாது. கடவுளின் சத்ய, ந்யாய, தயா, சர்வசாமர்த்ய, சர்வ அறிவுத்தன்மை முதலிய மேற்குணங்கள் மற்ற ஜடப்பொருள்களுக்கோ ஜீவனுக்கோ கிடையாது. எப்பொருள் சத்தியமோ அதன் குணகர்மஸ்வபாவமும் சத்தியமாகிறது. இதனால் மனிதர்கள் பரமேச்வரனை துதி, ப்ரார்த்தனை, உபாசனை முதலியவைகளால் வந்திக்கக் கடமைப் பட்டுள்ளார்கள். மற்ற ஒருவருக்கும் அவைகளைச் செய்யக்கூடாது. ஏனென்றால், ப்ரம்மா, விஷ்ணு, மஹாதேவ எனும் பெரிய பூர்வ மஹாவித்வான்களும், தைத்யதானவாதி தாழ்மையான மனிதர்களும், மற்றும் பழங்காலத்து சாதாரணமனிதர்களும்

கடவுள் ஒருவருக்கே துதி, ப்ரார்த்தனே, உபாசனைகளைப் புரிந்துவந்தார்கள். மற்றேருக்குப் புரியவேயில்லை. அவ்வாறே நாமும் செய்யவேண்டுவ தவசியமாகும். இதன் சம்பந்தமாக முக்தி உபாசனை எனும் விஷயத்தில் விளக்கமாகக் கவனிக்கலாம்.

கே—: "மித்ர" ஆதிபெயர்கள் நண்பன் எனவும் இந்திராதி தேவர்களின் ப்ரசித்த வ்யவகாரங்களைப் பார்ப்பதால் அவர்களை நாம் கிரகிக்கவேண்டும்!

விடை—: இங்கு அவர்களைக் கிரகித்தல் யோக்யமல்ல. ஒருவனுக்கு நண்பனுகவுள்ள மனிதன் மற்றொருவனுக்கு விரோதியாகவும், மற்றொருவனுக்கு உதாசீனனுகவுமிருப்பதை நாம் பார்க்கின்றோம். ஆனதால் முக்யார்த்தத்தில் நண்பன் எனச் சாதாரணப் பொருள் கொள்ளத்தகாது. கடவுள் சகல உலகத்திற்கும் நிச்சய நிலையான நண்பன். ஒருவருக்கும் சத்துருவில்லை. ஒருவருக்கு முதாசீனனுமில்லை. இவ்வாறு வேறு எந்த ஜீவனுமிருக்கமுடியாது. ஆகையாலிவ்விடத்தில் கடவுளுக்கே பொருள் கொள்ளவேண்டும். குணவாசகப் பொருளில் "மித்ர" ஆதிநாமங்கள் நல்மனதுடையோர்களுக்குப் பொருளாகும்.

(10) மித்திரன் (**ञिमिदा स्नेहने**) "க்த்ர" ப்ரத்யயம் சேர்ந்த "மித" தாதுவிலிருந்து "மித்ர" சப்தமுண்டாகிறது. "**मेद्यति स्निह्यति स्निह्यते वा स मित्रः**". யார் சகலரையும் நேசித்து, சகலராலும் நேசிக்கப்படுபவரோ; இதனுல் கடவுளுக்கு "மித்திரன்" எனும் பெயர் உண்டாகிறது.

(11) வருணன்—: (वृञ् वरणे, वर ईप्सायाम्) "உனன் ப்ரத்யயம் சேர்ந்த "வ்ருஞ்" தாதுவிலிருந்து வருணசப்த முண்டாகிறது.

"यः सर्वान् शिष्टान् मुमुक्षून् धर्मात्मनो वृणोत्यथवा यः शिष्टैर्मुमुक्षुभिर्धर्मात्मभिर्व्रियते वर्य्यते वा स वरुणः परमेश्वरः"

ஆத்மயோகி, வித்வான், மோக்ஷத்தை விரும்பியிருக்கும் முக்தன், தர்மாத்மாக்கள் எவனை அங்கீகரிக்கின்றார்கள்; அல்லது யார் சிஷ்ட, முமுக்ஷு, முக்த, தர்மாத்மாக்களை கிரஹிக்கிறார்; அக்கடவுள் வருணன் எனப்படுவார். அல்லது—: "**वरुणो नाम वरः श्रेष्ठः**" கடவுள் எல்லாரினும் சிரேஷ்டமானவனாதலால் அவனுக்கு "வருணன்" எனப் பெயராகும்.

(12) அர்யமான்—: (**ऋ गतिप्रापणयोः**) யத் ப்ரத்யயம் சேர்ந்த "ரு" தாதுவிலிருந்து "அர்ய" சப்தமும் "அர்ய" சேர்ந்த (**माङ् माने**) "கனின் ப்ரத்யயத்துடனான மாங்" தாதுவிலிருந்து "அர்யமா" சப்த முண்டாகிறது.

"योऽर्यान् स्वामिनो न्यायाधीशान् मिमीते मान्यान् करोति सोऽर्यमा"

சத்ய ந்யாயம் புரியும் மனிதர்களின் மான்யன், பாப புண்ணியம் புரிபவர்களுக்கு, அதனதன் பலனை சத்ய நியமமாக எற்படுத்துபவன். அதினால் கடவுளுக்கு "அர்யமா" எனும் பெயராகும்.

(13) இந்திரன்—: (इदि परमैश्वर्यें) "ரன்" ப்ரத்யயம் சேர்ந்த "இதி" தாதுவிலிருந்துண்டானது.

"य इन्दति परमैश्वर्यवान् भवति स इन्द्रः परमेश्वरः"

எவன் அகில ஐஸ்வர்யன்; இதனுல் கடவுளுக்கு "இந்திரன்" எனப் பெயராகும்.

(14) ப்ருஹஸ்பதி—: (पा रक्षणे) "ப்ருஹத்" துடனுய "பா" தாது ப்ருஹத்தின் தகாரலோபமடைந்து, டதி ப்ரத்யயத்தால் கூடி "ப்ருகஸ்பதி" யாகிறது.

"यो बृहतामाकाशादीनां पतिः स्वामी पालयिता स बृहस्पतिः"

பெரியதிற்பெரியது எதுவோ: பெரியதான ஆகாசாதி ப்ரம்மாண்டங்களின் தலைவன் எவனே; இதனுல் கடவுளுக்கு "ப்ருஹஸ்பதி" யெனும் பெயர் சொல்லப்படுகிறது.

(15) விஷ்ணு—: (विष्लृ व्याप्तौ) "நு" ப்ரத்யயம் சேர்ந்த "விஸ்" தாதுவிலிருந்துண்டாகிறது.

"वेवेष्टि व्याप्नोति चराऽचरं जगत् स विष्णुः"

சர அசர உலகில் முழுவதும் வ்யாபித்துள்ளபடியால் கடவுளுக்கு "விஷ்ணு" வெனப்பெயராகும்.

(16) உருக்ரம—: उरुर्महान् क्रमः पराक्रमो यस्य स उरुक्रमः"

அனந்த பராக்ரமத்தனுகையால் கடவுளுக்கு "உருக்ரமன்" எனப்பெயராகும்.

எவன் (உருக்ரம:) மகாபராக்ரமன் (மித்ர:) சகலரின் மேலான நண்பன்; (ஸம்) ஸுகத்தின் ப்ரகாசமாகிய (இந்த்ர:) சகல ஐஸ்வர்யவான் (ஸம்) சகல ஐஸ்வரிய மளிப்போனுகிய (வருண:) சர்வோத்தமன் (ஸம்) சுககாரக (அர்யமா) ந்யாயாதீசன், (ஸம்) சுகஸ்வருப (ப்ருஹஸ்பதி:) சகலத்திற்கும் தலைவன் (ஸம்) வித்யாப்ரதன் (விஷ்ணு:) சகலத்தினும் வியாபித்த பரமேஸ்வரனே அவன் (ந:) நமக்குக் கல்யாணகாரகனுய் (பவது) ஆகட்டும்.

(वायो ते ब्रह्मणे नमोऽस्तु)

(17) ப்ரம்மா—: (बृह बृहि वृद्धौ) "ப்ருஹ" தாதுவிலிருந்துண்டாகிறது.

எவன் சகலத்திற்கும் மேல் ப்ரகாசமான, சகலத்தினும் பெரிய, அனந்த பலயுக்த பரமாத்மனே அவனுகிய "ப்ரம்ம" னுக்கு "நமஸ்காரம்" புரிகின்றேன். "ஹே பரமேஸ்வரா! (த்வமேவப்ரத்யக்ஷம் ப்ரம்மாஸி) தாங்களே அந்தர்யாமி ரூபத்தில் ப்ரத்யக்ஷ ப்ரம்மமாகும். (த்வமேவப்ரத்யக்ஷம் ப்ரம்ம வதிஷ்யாமி) தங்களையே நான் ப்ரத்யக்ஷ ப்ரம்மமென்று சொல்வேன். ஏனெனில் தாங்கள் சகல உலகத்திலும் நித்ய வியாபகனுயிருக்கிறீர்கள். (ருதம் வதிஷ்யாமி) தங்களின் உபதேசமாகிய வேதங்களை நான் சகலருக்கும் உபதேசித்து அதன்படியே ஒழுகிவருவேன். (ஸத்யம் வதிஷ்யாமி) சத்யம் பேசுவேன், சத்யம் நினைப்பேன், சத்தியமே செய்

வேன். (தன்மாமவது) தாங்கள் என்னை ரக்ஷியுங்கள். (தத் வக்தாரமவது) தங்களின் கட்டளையை நான் சிரமேற்கொண்டு சிறிதும் தவறாமல் ஒழுகி வரக்கூடியவனாய் என்னை ரக்ஷியுங்கள். ஏனெனில் தங்களின் கட்டளையே தருமமாகும். மற்றது அதர்மம். (அவது மாமவது வக்தாரம்) இவ்விரண்டாவது பாடம் அதிக அர்த்தத்திற்காக. "**कश्चित् कश्चित् प्रति वदति त्वं ग्रामं गच्छ गच्छ**" இவ்விடம் இரண்டு முறை சொல்லியிருப்பதானது "நீ சீக்கிரம் கிராமம் போ" என்ற பொருளாகும். இங்குமம்மாதிரியே "என்னை அவசியம் ரக்ஷியுங்கள்" தங்களினுபகாரம் பெற்று நான் தர்மத்தின் நண்பனாய் அதர்மத்தின் விரோதியாய் வசிக்க அருள்புரியுங்கள். (ஓம் ஸாந்தி: ஸாந்தி: ஸாந்தி:) இம்மூன்று முறை உச்சரிப்பானது மூவிததுக்கங்களின் அமைதியைக் குறிக்கும். அதாவது—: "ஆத்யாத்மிக" எனின் ஆத்மாவானது சரீரத்திலே அவித்தை, ராகம், துவேஷம், மூர்க்கத்தனம், ஜ்வர பீடைகளால் வருந்துதல். "ஆதிபௌதிக" ஆத்மாவானது சத்ரு, புலி, பாம்பு முதலியவைகளால் துன்புறுத்தப்படுதல். "ஆதிதைவிக" ஆத்மாவானது பெரும் விடாமழை, அதிககுளிர், அதிக உஷ்ணம் முதலியவைகளால் துன்புறுதல். இம்மூவித துக்கங்களிலிருந்து மெங்களை விலக்கி நன்மையான காரியங்களில் சதா எங்களை வசிக்கச் செய்வீர்களாக. ஏனெனில் தாங்களேதான் கல்யாணஸ்வரூபன், சகல உலகின் கல்யாணகாரகன், தர்ம முமுக்ஷுக்களின் கல்யாணதாதாவாகும். சகல ஜீவர்களும் துக்கங்களை விலக்கி, அதர்மத்தை நீக்கி பரமானந்தத்தையடைய தாங்கள் தங்களின் சுயமான கருணையினால் அவர்களுக்கு அருள்புரியுங்கள்.

2

(18) ஸூர்யன்—: “**सूर्य आत्मा जगतस्तस्थुषश्च**” உலகம் எனும் பெயருடன் எவ்வெவ்வுயிர்கள் வசிக்கின்றனவோ, “**तस्थुषः**” பூமியாதி உயிரிலாப் பொருள்கள் எவை இருக்கின்றனவோ, இச்சகலத்தையும் ப்ரகாசிப்பிக்கச் செய்வதால் கடவுளுக்கு “ஸூர்யன்” எனப் பெயராகும்.

(19) ஆத்மா—: “**अत सातत्यगमने**” “அத” தாதுவிலிருந்து “ஆத்மா” என்பதுண்டாகிறது.

“**योऽतति व्याप्नोति स आत्मा**” எவன் ஜீவாதி உலகில் நிரந்தர வ்யாபகன்.

(20) பரமாத்மா—:

“**परश्चासावात्मा च य आत्मभ्यो जीवेभ्यः परोऽतिसूक्ष्मः स परमात्मा**”

எவன் ஜீவாதிகளில் மேலானவன்; ஜீவ, ப்ரக்ருதி, ஆகாயம் இவைகளைக் காட்டிலும் மிகச் சூக்ஷ்மமானவன்; சகல ஜீவர்களின் அந்தர்யாமியாகிய ஆத்மாவோ; இதனுல் கடவுளுக்கு “பரமாத்மா” வென்ற பெயராகும்.

(21) பரமேஸ்வரன்—: “**य ईश्वरेषु समर्थेषु परमः श्रेष्ठः स परमेश्वरः**”

எவன் சமர்த்தர்களின் சமர்த்தன்; எவனை யொத்து எச்சமர்த்தனுமிருக்கமுடியாதோ அவன் பெயர் “பரமேஸ்வா” ருகும்.

(22) ஸவிதா—: (षुञ् अभिषवे, षूङ् प्राणिगर्भविमोचने) "षुञ्" தாதுவிலிருந்துண்டாகிறது.

"अभिषवः प्राणिगर्भविमोचनं चोत्पादनम्। यश्चराचरं जगत् सुनोति सूते वोत्पादयति स सविता परमेश्वरः"

எவன் சகல உலகையுமுண்டாக்குகின்றான்; இதனால் கடவுளின் பெயர் "ஸவிதா"வாகும்.

(23) தேவன்—: (दिवु क्रीडाविजिगीषाव्यवहारद्युतिस्तु-तिमोदमदस्वप्नकान्तिगतिषु). "திவ்" தாதுவிலிருந்துண்டாகிறது.

(க்ரீடா) எவன் உலக சுத்த விளையாட்டன்; (விஜிகீஷா) தார்மிகர்களால் ஜெயிக்க இச்சிக்கப்படுபவன்; (வ்யவஹார) சகல சிரேஷ்ட சாதன உபசாதனங்களின் தாதா; (த்யுதி) ஸ்வயம்ப்ராகாசனாய் சகலத்திற்கும் ப்ராகாசமீபவன்; (ஸ்துதி) புகழத்தகுந்த (மோத) ஆனந்தஸ்வரூபனாய் மெய்யறிவையீபவன், (மத) மதோன்மத்தர்களைத் தண்டிப்பவன், (ஸ்வப்ன) சகலருக்காக இரவு, ப்ரளயங்களைச் செய்பவன், (காந்தி) இச்சிக்கத்தகுந்தவன், (கதி) ஜ்ஞானஸ்வரூபன்; அவனாகிய கடவுளின் பெயர் "தேவன்" ஆகும்-அல்லது:—

"यो दीव्यति क्रीडति स देवः" = எவன் தன் ஸ்வரூப ஆனந்தத்தால் தன் விளையாட்டில், எனின் ஒருவருதவியுமின்றி விளையாடும் தன் சகஜ சுபாவத்தால் சகல உலகையுமாக்குகிறார். அல்லது சகல விளையாட்டினாதாரமானவன்.

"विजिगीषते स देवः" சகலரையும் ஜெயிப்பவன், தன்னைத்தானே ஜெயித்தவன், யாராலும் ஜயிக்கப்பட முடியாதவன்.

"व्यवहारयति स देवः"—: ந்யாய அந்யாய வியவகாரங்களை யறிபவன்.

"यश्चराचरं जगत् द्योतयति स देवः"—: எவன் சகலத்தின் ப்ரகாசன்.

"यः स्तूयते स देवः"—: சகல மனிதர்களாலும் புகழத்தகுந்தவன்.

"यो मोदयति स देवः"—: ஸ்வய ஆனந்தனாய் மற்றோருக்கு மானந்தமீபவன்.

"यो माद्यति स देवः"—: சதா ஸ்வயம் சந்தோஷனாய் மற்றோருக்கும் சந்தோஷமீபவன்.

"यः स्वापयति स देवः"—: எவன் ப்ரளய சமயத்தில் சகல ஜீவர்களையும் தூங்கச்செய்பவன்.

"यः कामयते काम्यते वा स देवः"—: சத்ய காரியங்கள் யாருடையது; யாரையடைய சகலரும் சிக்ஷிக்கப் படுகிறார்கள்.

"यो गच्छति गम्यते वा स देवः"—: எங்கும் வியாபித்து, சகலராலு மறியத்தகுந்தவன்.

(24) குபேரன்—: (कुबि आच्छादने) "குப்" தாது விலிருந்துண்டாகிறது.

"यः सर्वं कुबति स्वव्याप्त्याच्छादयति स कुबेरो जगदीश्वरः"

யார் தன்னுடைய வ்யாபகத்தால் சகலத்தையும் ஆதரிக்கின்ருரோ ; அவராய கடவுளுக்குக் "குபேரன்" என்ற பெயராகும்.

(25) ப்ருதிவீ—: (प्रथ विस्तारे) "ப்ரத" தாதுவிலிருந்து வந்தது.

"यः पृथते सर्वजगद्विस्तृणाति स पृथिवी"

எவன் பாவிய உலகைப் பாவச்செய்தவன் அவன் பெயர் "ப்ருதிவீ" யாகும்.

(26) ஜல—: (जल घातने) "ஜல" தாதுவிலிருந்துண்டானது.

"जलति घातयति दुष्टान्, संघातयति-अव्यक्तपरमाण्वादीन् तद्ब्रह्म जलम्"

துஷ்டர்களைத் தண்டித்து, பரமாணுக்களைக் கூட்டிப் பிரித்து விளையாடுபவன், எவனே அவன் "ஜல" வெென அழைக்கப்படுவான்.

(27) ஆகாசः—: (काश्रृ दीप्तौ) "காச்ரு" தாதுவிலிருந்துண்டானது.

"यः सर्वतः सर्वं जगत् प्रकाशयति स आकाशः"

சகல திசைகளினின்றும் உலகை ஒளிபெறச் செய்பவன் "ஆகாச" மெனப் படுவான்.

(28) அன்னம்—: (अद भक्षणे) "அத" தாதுவிலிருந்துண்டானது.

अद्यतेऽत्ति च भूतानि तस्मादन्नम् तदुच्यते ॥ १ ॥

अहमन्नमहमन्नमहमन्नम् । अहमन्नादोहमन्नादोहमन्नादः ॥ १ ॥ தைத்திரீ உபநி-2-10.

अत्ता चराचरग्रहणात् (வேதாந்த தர்சனம்-1-2-9).

இது வ்யாசமுனி செய்த சாரீரக ஸூத்திரம். எவன் சகலராலும் கிரகிக்கப்படத்தகுந்த யோக்யவான், சராசர உலகை கிரகிப்பவன் அவன் பெயர்கள் "அன்ன" "அன்னாத" "அத்தா" வாகும். இதில் மூன்று முறை உச்சரிப்பு மரியாதையைக் குறிக்கும். பழங்களில் புழு உற்பத்தியாகி இறப்பதைப்போல பரமேச்வரனிடம் சகல உலகும் பிறந்து அவனிடமே அழிகிறது.

(29) வஸு—: (वस निवासे) "வஸ" தாதுவிலிருந்துண்டானது.

"वसन्ति भूतानि यस्मिन्नथवा यः सर्वेषु वसति स वसुरीश्वरः"

எதனிடம் ஆகாசாதி சகல பூதங்களும் வசிக்கிறது; எது சகலத்திலும் வாசம் பண்ணுகிறது ; அதன் பெயர் " வசு " வாகும்.

(30) ருத்ர—: (रुदिर् अश्रुविमोचने) " णिच् " ப்ரத்யயம் சேர்ந்த " रुदिर् " தாதுவிலிருந்துண்டானது.

" यन्मनसा ध्यायति तद्वाचा वदति यद्वाचा वदति तत् कर्मणा करोति यत् कर्मणा करोति तदभिसम्पद्यते "

இது யஜுர்வேத ப்ராம்மண வசனம். ஜீவன் எதை மனதில் நினைக்கின்றதோ அதை வாயில் சொல்கின்றது. வாயில் சொல்வதை காரியத்தில் செய்கிறது. காரியத்தில் செய்வதை அடைகிறது. இதனாலென்ன ஏற்படுகிறது? ஜீவன் எவ்வித காரியங்களைச் செய்கின்றானோ அவ்வித பலன்களையனுபவிக்கின்றான். கெட்ட காரியம் புரியும் ஜீவன் கடவுளின் நியாயரூப அவஸ்தையின் முன் துக்கத்தைப் பெற்று அழுகிறது. இதனால் கடவுள் அவனை அழச் செய்கிறாராகையால் அவருக்கு " ருத்திரன் " எனப் பெயராகும்.

(31) நாராயணன்—:

आपो नारा इति प्रोक्ता आपो वै नरसूनवः । तातदस्यायनं पूर्वं तेन नारायणः स्मृतः ॥ (மனு-1-10).

தண்ணீர், ஜீவன் இவைகளின் பெயர் " நாரா " " அயன " என்றால் வாஸஸ்தானம் (வசிக்குமிடம்). சகல ஜீவராசிகளுக்குள்ளும் வியாபித்தவன் " நாராயணன் ".

(32) சந்த்ரன்—: (चदि आह्लादे) "சதி" தாதுவிலிருந்துண்டானது.

"यश्चन्दति चन्दयति वा स चन्द्रः"

எவன் ஆனந்தஸ்வரூபன்; சகலருக்குமானந்த மீபவன் அவன் "சந்திரன்".

(33) மங்களன்—: (मगि गत्यर्थक) "மகி" தாது "மங்கேரலச்" சூத்திரத்தால் "மங்களம்" ஆகிறது.

"यो मङ्गति मङ्गयति वा स मङ्गलः"

எவன் மங்கள ஸ்வரூபனாய் சகலருக்கும் மங்கள மீபவன் அவன் "மங்களன்".

(34) புதன்—: (बुध अवगमने) "புத்" தாதுவிலிருந்துண்டானது.

"यो बुध्यते बोधयति वा स बुधः"

ஸ்வயம் அறிவனாய் சகல அறிவின் மூலகாரணன் "புதன்" ஆகும்.

(35) சுக்ரः—: (ईशुचिर् पूतिभावे) "ஈசுசிர்" தாதுவிலிருந்துண்டானது.

"यः शुच्यति शोचयति वा स शुक्रः"

எவன் அத்யந்த பவித்ரன்; ஜீவன் எவனின் சேர்க்கையால் பவித்ரமடைகிறது அவன் "சுக்கிரன்".

(36) சனிஸ்வரஃ—: (चर गतिभक्षणयोः) "சனைச்" உபபதம்பெற்ற "சர" தாதுவிலிருந்துண்டானது.

"यः शनैश्चरति स शनैश्चरः"

எவன் சகஜமாக வுடைய தைர்யவான் அவன் "சனிஸ்வான்".

(37) ராஹு—: (रह त्यागे) "ரஹ" தாதுவிலிருந்துண்டானது.

"यो रहति परित्यजति दुष्टान् राहयति त्याजयति वा स राहुरीश्वरः"

தனிப்பட்டு இரண்டில்லா பொருள் எதுவோ ; துஷ்டர்களைத் தண்டிப்பதெதுவோ அது "ராஹு" வாகும்.

(38) கேது—: (कित निवासे रोगापनयने च) "கித" தாதுவிலிருந்துண்டானது.

"यः केतयति चिकित्सति वा स केतुरीश्वरः"

எது சகல உலகின் வாசஸ்தானம் ; ரோகாதிரஹிதமானது ; முமுக்ஷுக்களின் மோக்ஷகாலத்தில் சகல ரோகங்களையும் நிவர்த்தி செய்வது அது "கேது" ஈஸ்வரன்.

(39) யஜ்ஞ—: (यज देवपूजासंगतिकरणदानेषु) "யஜ" தாதுவிலிருந்துண்டானது.

"यज्ञो वै विष्णुः" இது ப்ராம்மண கிரந்தத்தின் வசனம்.

"यो यजति तद्विद्भिरिज्यते वा स यज्ञः"

எவன் சகல உலகின் பதார்த்தங்களைச் சேர்க்கின்றான்; சகல வித்வான்களின் பூஜ்யன்; ப்ரம்மா முதல் சகல ரிஷிகளாலும் முன்பு பூஜிக்கப்பட்டிருந்தவன், பூஜிக்கப்படுகிறவன் பூஜிக்கப்படுபவன்; அவனுடைய கடவுளுக்கு "யஜ்ஞ" எனும் பெயராகும்.

(40) ஹோதா—: (हु दानाऽदनयोः, आदाने चेत्येके) "ஹு" தாதுவிலிருந்துண்டானது.

"यो जुहोति स होता"

ஜீவர்களுக்கு யோக்யமான பதார்த்தங்களை ஈயும் வள்ளல் யாரோ; கிரகிக்கத் தகுந்தவர்களின் கிரகிப்பெதுவோ; அதன் பெயர் "ஹோதா" வாகும்.

(41) பந்து—: (बन्ध बन्धने) "பந்த்" தாதுவிலிருந்துண்டானது.

"यः स्वस्मिन् चराचरं जगद्बध्नाति बन्धुवद्धर्मात्मनां सुखाय सहायो वा वर्त्तते स बन्धुः"

எவன் தன்னுயிரால் லோக லோகாந்தரங்களையெல்லாம் நியமத்தால் கட்டி வைத்திருக்கின்றான்; சகலரின் கல்வி எவன்; சகோதரன் போன்ற உபகாரியெவன்; அவனாகிய கடவுளுக்கு "பந்து" எனப்பெயராகும்.

(42) பிதா—: (पा रक्षणे) "பா" தாதுவிலிருந்துண்டானது.

"यः पाति सर्वान् स पिता"

பெற்ற குழந்தையைத் தந்தை பரிபாலிப்பதைப் போன்று, சகல ஜீவராசிகளையும் பரிபாலிக்கும் கடவுளுக்கு "பிதா" எனப்பெயர்.

(43) பிதாமஹ:—: "यः पितॄणां पिता स पितामहः" பெற்றோர்களின் பெற்றோராகிய கடவுள் பெயர் "பிதாமகன்."

(44) ப்ரபிதாமஹ:—: "यः पितामहानां पिता स प्रपितामहः"

தகப்பன்களின் தகப்பன்களுக்குத் தகப்பனாகிய கடவுளின் பெயர் "ப்ரபிதாமஹன்".

(45) மாதா—: "यो मिमीते मानयति सर्वान् जीवान् स माता"

பெற்ற குழந்தையைத் தாயார் பாதுகாப்பதுபோல சகல ஜீவராசிகளையும் பாதுகாக்கும் கடவுளின் பெயர் "மாதா".

(46) ஆசார்ய—: (चर गतिभक्षणयोः) "आङ्" சேர்ந்த "சர" தாதுவிலிருந்துண்டாகிறது.

"यः आचारं ग्राहयति सर्वा विद्या बोधयति स आचार्य ईश्वरः"

சத்ய ஆசாரங்களை கிரகிக்கும்படிச் செய்பவன்; சகல வித்தையின் ப்ராப்திக்குக் காரணமானவனாகிய கடவுளின் பெயர் "ஆசார்யன்".

(47) குரு—: (गॄ शब्दे) "க்ரு" தாதுவிலிருந்துண்டானது.

"यो धर्म्यान् शब्दान् गृणात्युपदिशति स गुरुः"

"स पूर्वेषामपि गुरुः कालेनानवच्छेदात् ॥

யோகசூத். சமாதிபாதம் 26 ॥

இது யோக சூத்திரம். எவன் சத்ய தர்மத்தின் பதி; சகல வித்தைகள் நிறைந்த வேதோபதேசிகன், உற்பவ ஆரம்பத்தில் அக்னி, வாயு, ஆதித்ய, அங்கிரா, ப்ரம்மாதி இருடிகளுக்குக் குருவாயிருந்தான்; நாசமெவனுக்கில்லையோ அவனுடைய கடவுளின் பெயர் "குரு".

(48) அஜ—: (अज गतिक्षेपणयोः, जनी प्रादुर्भावे) "அஜ" தாதுவிலிருந்துண்டாகிறது.

"योऽजति सृष्टिं प्रति सर्वान् प्रकृत्यादीन् पदार्थान् प्रक्षिपति जानाति वा कदाचिन्न जायते सोऽजः"

எவன் சகல இயற்கையின் கூறுகளாகிய ஆகாசாதிபூத பரமாணுக்களின் சேர்க்கையால் சரீரத்துடனுடைய ஜீவசம்பந்தத்தையேற்படுத்தி ஜன்மமளிக்கின்றானோ. தான் எப்போதும் பிறக்காதவனோ, அவனாகிய கடவுளின் பெயர் "அஜ" ஆகும்.

(49) ஞான—: சகல உலகையுமறியுங் கடவுளின் பெயர் "ஞானம்" ஆகும்.

(50) அநந்த—: எவனுக்கு முடிவு, மரியாதை—என்றால் பெரிது, சிறிது, பெருத்தது, நீண்டது, முதலிய பரிமாணங்ளில்லாத கடவுளின் பெயர் "அநந்தன்" ஆகும்.

(51) ஆதி—: (डुदाञ् दाने) "அங் பூர்வ தா" தாதுவிலிருந்துண்டானது.

"यस्मात् पूर्वं नास्ति परं चास्ति आदिरित्युच्यते"

"न विद्यते आदिः कारणं यस्य सोऽनादिरीश्वरः"

(மஹாபாஷ்-1-1-21).

எவனுக்குமுன்னெதுவுமிருந்ததில்லை; பின்பு இருக்கப்போவதில்லையோ அவன் பெயர் "ஆதி" யாகும்.

(52) அநாதி—: எவனுக்கு ஆதிகாரணமொன்றுமிருக்கவில்லையோ அவன் பெயர் "அநாதி."

(53) ஆனந்த—: (टुनदि समृद्धौ) "ஆங் பூர்வ நத்" தாதுவிலிருந்துண்டானது.

"आनन्दति सर्वे मुक्ता यस्मिन् यद्वा यः सर्वान् जीवानानन्दयति स आनन्दः"

எவனுடைய ஆனந்தஸ்வரூபத்தில் சகலமுக்தர்களுமானந்தமடைகிறார்கள்; எவன் சகல தர்மாத்மாக்களை ஆனந்த முக்தனாகச்செய்கின்றான் அவனாகிய கடவுளுக்கு "ஆனந்தன்" எனப்பெயராகும்.

(54) ஸத்—: (अस भुवि) "அஸ" தாதுவிலிருந்துண்டானது.

"यदस्ति त्रिषु कालेषु न बाध्यते तत्सद् ब्रह्म"

எவன் இறந்த, நிகழ், எதிர்காலங்களால் பாதிக்கப்படாதவனே அவன் பெயர் "சத்"

(55) சித்—: (चिति संज्ञाने) "சிதி" தாதுவிலிருந்துண்டானது.

"यश्चेतति चेतयति संज्ञापयति सर्वान् सज्जनान् योगिनस्तच्चित्परं ब्रह्म"

சேதன ஸ்வரூபத்தில் சகல ஜீவன்களேயும் சேதிக்கச் செய்பவர்; சத்தியாசத்தியத்தை அறியச்செய்பவராகிய கடவுளின் பெயர் "சித்" ஆகும்.

(56) சச்சிதானந்த—: ஷை மூன்று பெயர்களின் பொருளுங்கூடியது.

(57) நித்ய—: "यो नित्यध्रुवोऽचलोऽविनाशी स नित्यः" சலனமிலா விநாசமிலாதவனெவனே அவன் பெயர் "நித்யன்" ஆகும்.

(58) சுத்த—: (शुन्ध शुद्धौ) "சுந்த" தாதுவிலிருந்துண்டானது.

"यः शुन्धति शोधयति वा स शुद्ध ईश्वरः"

ஸ்வயம்பவித்திரனாய் அசுத்தத்தினின்றும் விலகினவனாய், சகலத்தையும் பவித்திரமாக்குங் கடவுளின் பெயர் "சுத்தன்" ஆகும்.

(59) புத்தன்—: (बुध अवगमने) "க்த" ப்ரத்யயத்துடைய "புத" தாதுவிலிருந்துண்டானது.

"यो बुद्धवान् सदैव ज्ञाताऽस्ति स बुद्धो जगदीश्वरः"

எப்போதும் சகலவித்தையுமறிபவனாகிய கடவுளின் பெயர் "புத்தன்."

(60) முக்தன்—: (मुच्लृ मोचने) "முச்" தாதுவிலிருந்துண்டானது.

"यो मुञ्चति मोचयति वा मुमुक्षून् स मुक्तो जगदीश्वरः"

அசத்தியத்தினின்றும் எப்போதும் பிரிந்து, சகல முமுக்ஷுக்களையும் துக்கத்தினின்றும் விடுவிப்பவனின் பெயர் "முக்தன்" ஆகும்.

(61) "अत एव नित्यशुद्धबुद्धमुक्तस्वभावो जगदीश्वरः" இதினால் கடவுளின் சுபாவம் "நித்ய சுத்த, புத்த, முக்தம்" ஆகும்.

(62) நிராகாரன்—: (डुकृञ् करणे) "நிர், ஆங்பூர்வக க்ரு" தாதுவிலிருந்துண்டானது.

"निर्गत आकारात्स निराकारः"

எவனுக்கு ஆகாரமொன்றுமேயில்லையோ, எவன் சரீரத்தையெப்போதும் தரிப்பதில்லையோ; அவனுகிய கடவுளின் பெயர் "நிராகாரன்."

(63) நிரஞ்ஜன—: (अञ्जू व्यक्तिम्लक्षणकान्तिगतिषु) "அஞ்ஜ்" தாதுவிலிருந்துண்டானது.

"अञ्जनं व्यक्तिर्म्लेक्षणं कुकामइन्द्रियैः प्राप्तिश्चेत्यस्माद्यो निर्गतः पृथग्भूतः स निरञ्जनः"

ஆக்ருதி, மிலேச்ச ஆசாரம், கண் முதலிய புலன்களின் தொழில்களினின்றும் தாண்டியவ (விடுபட்டவ)னுகிய கடவுளின் பெயர் "நிரஞ்ஜன்" ஆகும்.

(64) கணேச; கணபதி—: (गण संख्याने) "கண' தாதுவிலிருந்துண்டானது.

"ये प्रकृत्यादयो जडा जीवाश्च गण्यन्ते संख्यायन्ते तेषामीशः स्वामी पतिः पालको वा"

இயற்கையாதி (ப்ரக்ருத்யாதி) ஜடங்களினுடையவும், ப்ரக்யாதியான சகல ஜீவன்களுடையவும் தலைவன்—பரிபாலகன்—ஆகிய கடவுளின் பெயர் "கணபதி, கணேசன்."

(65) விஸ்வேஸ்வரன்—: **"यो विश्वमीष्टे स विश्वेश्वरः"** சம்சாரத்தின் நிலைப்பதியான கடவுளின் பெயர் "விஸ்வேஸ்வரன்."

(66) கூடஸ்தன்—: **"यः कूटेऽनेकविधव्यवहारे स्वस्वरूपेणैव तिष्ठति स कूटस्थ ईश्वरः"**

சகல வ்யவகாரங்களிலும் வியாபித்து, சகல வ்யவகாரங்களினுதாரனுய், தன் சுயரூபத்தைக் காட்டாமலே வ்யவகாரங்களை நடத்துவிப்பவனுகிய கடவுளின் பெயர் "கூடஸ்தன்."

(67) தேவீ—: "தேவ" சப்தத்தினுடைய பொருளிலேயே "தேவி" சப்தமும் உண்டாகிறது. கடவுளுக்கு மூன்று லிங்கங்களிலும் பெயர்களுண்டு. எவ்வாறெனின்—:

"ब्रह्म चितिरीश्वरश्चेति" எப்போது ஈஸ்வர விசேஷணமோ அப்போது "தேவ" சப்தமும், எப்போது "விசேஷிய" மாகுமோ அப்போது "தேவீ" சப்தமும் கடவுளின் பெயராகும்.

(68) சக்தி—: (शक्लृ शक्तौ) "சக்ல்ரு" தாதுவிலிருந்துண்டானது.

"यः सर्वं जगत् कर्तुं शक्नोति स शक्तिः"

சகல உலகையும் படைக்கும் சக்தி பொருந்திய கடவுளின் பெயர் "சக்தி" யாகும்.

(69) ஸ்ரீ—: (श्रिञ् सेवायाम्) "ச்ரிஞ்" தாதுவிலிருந்துண்டானது.

"यः श्रीयते सेव्यते सर्वेण जगता विद्वद्भिर्योगिभिश्च स श्रीरीश्वरः"

சகல யோகி ஜனங்கள் எவனை சேவிக்கின்றார்களோ அவனுகிய கடவுளின் பெயர் "ஸ்ரீ."

(70) லக்ஷ்மீ —: (लक्ष दर्शनाङ्कनयोः) "லக்ஷ்" தாதுவிலிருந்துண்டானது.

"यो लक्षयति पश्यत्यङ्क्ते चिह्नयति चराचरं जगदथवा वेदैराप्तैर्योगिभिश्च यो लक्ष्यते स लक्ष्मीः सर्वप्रियेश्वरः"

சகல சராசர உலகைப்பார்த்து அடையாளிப்பவன் (எனின் பார்வையளிப்பவன்) எவ்வாறு—: சரீரத்தில் கண், மூக்காதிகள்; மரங்களில் இலை, பூ, பழம், வேர்களும்; பூமியில் நீர், உஷ்ணங்கள்; சந்திர சூரியாதி பார்வைகளை உலகிற்களித்தவன், அவ்வாறே சகலத்தையும் பார்ப்பவன், சகல ஒளிகளிலும் மேலான ஒளியன், சகல வேதாதி நூல்கள், யோகீஸ்வரர்களின் லக்ஷ்யமானவன் (எனின் பார்க்க யோக்யமானவன்) ஆகிய கடவுளின் பெயர் "லக்ஷ்மீ" யாகும்.

(71) சரஸ்வதி (सृ गतौ) "ஸ்ரு" தாதுவிலிருந்து (सरस्) "ஸரஸ்" ஆகி மதுப், ஙீப் ப்ரத்யயம் சேர்ந்து "சரஸ்வதி" சப்தமாகிறது.

"सरो विविधं ज्ञानं विद्यते यस्यां चितौ सा सरस्वती"

பலவித விஜ்ஞான எனின் சப்த, அர்த்த, ப்ரயோகங்களின் யதார்த்த அறிவு எவனிடமிருந்துண்டாகின்றதோ அவன் பெயர் "சரஸ்வதி" யாகும்.

(72) சர்வசக்திமான்—: "सर्वाः शक्तयो विद्यन्ते यस्मिन् स सर्वशक्तिमानीश्वरः".

தன் காரியங்களைப் புரிவதில் மற்றோர் சகாயத்தை நாடாது, தன் காரியங்களைத் தன் சாமர்த்தியத்தினாலேயே புரியும்படியான கடவுளின் பெயர் "சர்வசக்திமான்" ஆகும்.

(73) நியாயன்—: (णीञ् प्रापणे).

" प्रमाणैरर्थपरीक्षणं न्यायः "

இப்பிரமாணம் நியாய சூத்திரத்திற்கு " வாத்ஸ்யாயன முனிவர் " எழுதிய பாஷ்யமாகும்.

" पक्षपातराहित्याचरणं न्यायः "

எவன் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களின் பரீட்சைகளின் சத்தியமான சித்தமாகி, பக்ஷபாதமில்லாத தர்ம ஆசரணமானவனோ அவன் பெயர் " ந்யாயன் " ஆகும்.

(74) நியாயகாரி—: " न्यायं कर्तुं शीलमस्य स न्यायकारीश्वरः ".

எவனின் சுபாவம் பக்ஷபாதமில்லாத தர்ம நியாயமானதோ அவனாகிய கடவுளின் பெயர் " நியாயகாரி " யாகும்.

(75) தயாளு—: (दय दानगतिरक्षणहिंसादानेषु) "தய" தாதுவிலிருந்துண்டாகிறது.

" दयते ददाति जानाति गच्छति रक्षति हिनस्ति यया सा दया, बह्वी दया विद्यते यस्य स दयालुः"

சகலருக்கும் அபயமளிப்பவன், சகலவித்தைகளினறிவன், சகல சஜ்ஜனர்களை ரக்ஷிப்பவன், துஷ்டர்களைத் தகுந்தபடி தண்டிப்பவன், ஆகிய கடவுளின் பெயர் "தயாளு" வாகும்.

(76) அத்வைதன்—: "द्वयोर्भावो द्वाभ्यामितं सा द्विता द्वीतं वा सैव तदेव वा द्वैतम्, न विद्यते द्वैतं द्वितीयेश्वर-भावो यस्मिंस्तदद्वैतम्" எனின்.

"सजातीयविजातीयस्वगतभेदशून्यं ब्रह्म"

இரண்டாதல், இரண்டாகக்கூடுதல், இரண்டு, இரண்டு கூடாதது, இரண்டற்றது எதுவோ, சுய ஜாதியின் (மனிதனுடன் மனிதன்) கூட்டும், விஜாதியின் (மனிதனுடன் மரம் முதலியவைகள்) கூட்டும், மற்ற எப்பொருளின் சேர்க்கையு—கூட்டுறவு—மின்றி தனிப்பட்ட கடவுளின் பெயர் "அத்வைதம்" ஆகும்.

(77) நிர்க்குணன்—: "गण्यन्ते ये ते गुणा वा यैर्गणयन्ति ते गुणाः, यो गुणेभ्यो निर्गतः स निर्गुण ईश्वरः".

சத்வ, ரஜ, தம, ரூப, ஸ்பர்ஸ, கந்தாதி ஜடகுணங்களுக்கும், அவித்யா, அல்பத்வம், ராக, த்வேஷ, க்லேஸ ஆதி ஜீவ குணங்களுக்கும் வேறு பட்டவன், இதற்கு "अशब्दमस्पर्शमरूपमव्ययम्" உபநிடதங்களில் ப்ரமாணம்—: எவன் சப்த, ஸ்பர்ச, ரூபாதி குணங்களில்லாதவன் அவனுகிய கடவுளின் பெயர் "நிர்க்குணன்' ஆகும்.

(78) சகுணன்:—"यो गुणैः सह वर्तते स सगुणः".

சகலக்ஞான, சர்வசுக, பவித்திர, அனந்த, பல ஆதிகுணங்கள் பொருந்திய கடவுளின் பெயர் "சகுணன்" ஆகும். எவ்வாறு பூமியானது கந்தாதி குணங்களில் "சகுணமோ"; "இச்சை" ஆதி குணங்களில் "நிர்க்குண" மோ; அவ்

வாறே உலகம், ஜீவன் இவைகளின் குணங்களுக்கு வேறு பட்டவனுகிய, கடவுளின் பெயர் "நிர்குணன்" சர்வக்ஞத்வமாதி குணங்களுடையவனுனதாலே "ஸகுணன்" ஆகும்.

உலகிலே ஸகுண, நிர்குணங்களிரண்டு மற்றபொருள்கள் இல்லை. ஜடப்பொருள்கள் சேதன (அசையும்) குணங்களில்லாதது (நிர்குணம்) மற்ற தன் வளர்தல் கடினத்தன்மை முதலிய குணங்களுள்ளது (சகுணம்). ஆனுல், ஜடங்களில் குணங்களாலே ஜீவன் "நிர்குணன்" இச்சை யாதி தன் குணங்களிலே "ஸகுணன்" ஆகும். இவ்வாறுதான் கடவுளையுமறிந்து கொள்ளவேண்டும்.

(79) அந்தர்யாமி—: "अन्तर्यन्तुं नियन्तुं शीलं यस्य सोऽयमन्तर्यामी".

உயிர் உள்ள, உயிரில்லாத சகல உலகின் உள்ளே வ்யாபித்து, சகலத்தையும் நியமிக்கும் கடவுளின் பெயர் "அந்தர்யாமி" யாகும்.

(80) தர்மராஜ்—: "यो धर्मे राजते स धर्मराजः" தர்மத்திலேயே ப்ரகாசமடைந்து, தர்மத்தை ப்ராகாசிக்கச் செய்து, அதர்மத்தினின்றும் விடுபட்ட கடவுளின் பெயர் "தர்மாராஜன்" ஆகும்.

(81) யமன்—: (यमु उपरमे) "யமு" தாதுவிலிருந்துண்டாகிறது.

"यः सर्वान् प्राणिनो नियच्छति स यमः"

சகல உயிர்களின் கர்ம பலன்களை யீயும் காரியம் புரிப வன், சகல அத்யாயத்தினின்றும் வேறுபட்டவனுகிய கடவு ளின் பெயர் "யமன்" ஆகும்.

(82) பகவான்— (भज सेवायाम्) "பஜ" தாது விலி ருந்து "பக" வாகி "மதுப்" ஆனதினுல் "பகவான்" ஆகிறது.

"भजः सकलैश्वर्य्यं सेवनं वा विद्यते यस्य स भगवान्"

சகல ஐச்வர்யயுக்தன் அல்லது சகலத்தாலும் பஜிக்க யோக்யமானவனுகிய கடவுளின் பெயர் "பகவான்" ஆகும்.

(83) மனு—: (मन ज्ञाने) "மன" தாதுவிலிருந்துண் டானது.

"यो मन्यते स मनुः"

விக்ஞானசீலன், மனனிக்கயோக்யமான கடவுளின் பெயர் "மனு" வாகும்.

(84) புருஷன்—: (पॄ पालनपूरणयोः) "ப்ரு" தாதுவி லிருந்துண்டானது.

"यः स्वव्याप्त्याचराऽचरं जगत् पृणाति पूरयति वा स पुरुषः"

எல்லா உலகிலும் பூரணமாகிய கடவுளின் பெயர் "புரு ஷன்" ஆகும்.

(85) விஸ்வம்பரன்—: (डुभृञ् धारणपोषणयोः) 'விஸ்வ' பூர்வக "ப்ருஞ்" தாதுவிலிருந்துண்டானது.

“यो विश्वं बिभर्ति धरति पुष्णाति वा स विश्वम्भरो जगदीश्वरः”

உலகைத்தரித்து, போஷிக்கும்படியான கடவுளின் பெயர் “விஸ்வம்பரான்” ஆகும்.

(86) காலன்—: (कल संख्याने) “கல” தாதுவிலிருந்துண்டானது.

“कलयति संख्याति सर्वान् पदार्थान् स कालः”

சகல உலகப்பொருள்களையும், ஜீவர்களையும் கணக்கிடும் திறன்படைத்த கடவுளின் பெயர் “காலன்” ஆகும்.

(87) சேஷன்—: (शिष्कृ विशेषणे) “ஸிஷ்க்ரு” தாதுவிலிருந்துண்டானது.

“यः शिष्यते स शेषः” ப்ரளய, உற்பவத்தில் மிகுதியாயிருக்கும்படியான கடவுளின் பெயர் “சேஷன்” ஆகும்.

(88) ஆப்தன்—: (आप्लृ व्याप्तौ) “ஆப்லு” தாதுவிலிருந்துண்டானது.

“यः सर्वान् धर्मात्मन आप्नोति वा सर्वैर्धर्मात्मभिरप्यते छलादिरहितः स आप्तः”

சத்யவித்தை யுக்தர்களான சகல தர்மாத்மாக்களாலுமடையப்பட்டவன், கபடாதிகளில்லாதவனுமான கடவுளின் பெயர் “ஆப்தன்” ஆகும்.

(89) சங்கரன்—: (डुकृञ् करणे) "ஸம்" பூர்வக "க்ரு" தாதுவிலிருந்துண்டானது.

"यः शं कल्याणं सुखं करोति स शङ्करः"

கல்யாண - சுக—ங்களைப் புரிபவனாகிய கடவுளின் பெயர் "சங்கரன்" ஆகும்.

(90) மஹாதேவன்—: "மகத்" பூர்வக "தேவ" சப்தத்தாலுண்டானது.

"यो महतां देवः स महादेवः"

வித்வான்களின் வித்வான், சூர்யாதி ப்ரகாசங்களின் ப்ரகாசகனாகிய கடவுளின் பெயர் "மஹாதேவன்" ஆகும்.

(91) ப்ரியன்—: (प्रीञ् तर्पणे कान्तौ च) "ப்ரீஞ்" தாதுவிலிருந்துண்டானது.

"यः पृणाति प्रीयते वा स प्रियः"

சகல வித்வான்களினுடையவும், தர்மாத்மாக்களினுடையவும் ஆசைக்கிருப்பிடனான கடவுளின் பெயர் "ப்ரியன்" ஆகும்.

(92) ஸ்வயம்பூ—: (भू सत्तायाम्) "ஸ்வயம்" பூர்வக "பூ" தாதுவிலிருந்துண்டானது.

"यः स्वयं भवति स स्वयंभूरीश्वरः"

தன்னுற்றானாகி யென்றும் பிறக்காத கடவுளின் பெயர் "ஸ்வயம்பூ" வாகும்.

(93) கவி—: (कु शब्दे) "கு" தாதுவிலிருந்துண் டானது.

"यः कौति शब्दयति सर्वा विद्याः स कविरीश्वरः"

வேதங்களின் மூலமாய் சகல வித்தைகளையுங் கற்பித்த வனுகிய கடவுளின் பெயர் "கவி" யாகும்.

(94) சிவன்—: (शिवु कल्याणे) "சிவு" தாதுவிலிருந் துண்டானது.

கல்யாண ஸ்வரூபனுய் கல்யாணங்களைப் புரிபவனுகிய கடவுளின் பெயர் "சிவன்" ஆகும்.

"बहुलमेतन्निदर्शनम्"

மேற்கண்ட பெயர்களெல்லாம் கடவுளுக்காக எழுதி யிருக்கின்றன. இவைகளைத்தவிர இன்னும் கணக்கில்லாத பெயர்கள் கடவுளுக்குண்டு. எப்படி கடவுளின் குணகர்ம ஸ்வ பாவம் கணக்கிலடங்காதோ ; அப்படியே அவைகளுக்கு ஏற் பட்ட பெயர்களும் கணக்கிலடங்காது. ஒவ்வொரு குண, கர்ம, ஸ்வபாவத்திற்கு மொவ்வொரு பெயரேற்பட்டிருக் கிறது. இதனுல் நான் எழுதிய பெயர்கள் பெருங்கடலில் ஓர் துளி நீரை யொக்கும். ஏனென்றுல் வேதாதி சாஸ்திரங் களில் கடவுளின் குணகர்ம ஸ்வபாவங்கள் கணக்கின்றி சொல்லப்பட்டிருக்கின்றது. அதைப் படித்தோ, கேட்டோ அறிந்துகொள்ளலாம். அன்ய பதார்த்தங்களின் பெயர்களும் அதில் முழுதும் சொல்லப்பட்டிருக்கின்றது. எவன் வேதாதி

சாஸ்திரங்களைப் படிக்கின்றானோ அவன் அவைகளை அறியக் கூடும்.

கேள்வி—: மற்ற நூலதிகாரிகள் முதலிலும் மத்தியி லும், கடைசியிலும் மங்களாசரணம் செய்திருப்பதைப்போல் நீங்கள் ஏன் செய்யவில்லை ?

விடை—: நாமவ்வாறு செய்தல் யோக்யமல்ல. ஏனென் றால் எந்த நூலின் ஆதி, மத்தி, முடிவில் மங்களா சரணம் செய்திருக்கின்றதோ ; அவைகளுக்கு இடையில் எழுதியிருக் கப்பட்டவைகள் அமங்களம் என்றாகும். இதனால்

"मङ्गलाचरणं शिष्टाचारात् फलदर्शनाच्छ्रुतितश्चेति"

(சாங்க்யம்:5-1).

எது ந்யாய, பக்ஷபாதரஹித, சத்ய வேதோபதேசக னாகிய கடவுளின் ஆக்ஞையோ அதையே எவ்விடத்திலும் ஆசரணம் செய்தலே "மங்களாசரணம்" ஆகும். நூலின் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை சத்திய ஆசரணத்தையே செய் தல் "மங்களாசரணம்" ஆகும். சில விடத்தில் மங்களமும், சில விடத்தில் அமங்களமும் எழுதக்கூடாது. பாருங்கள் பெரியோர்களாகிய மகரிஷிகள் எழுதுவதில்—.

यान्यनवद्यानि कर्माणि तानि सेवितव्यानि नो इतराणि ।

(தைத்ரீயம்-7-11).

ஏ குழந்தைகளே ! எது "அனவத்ய" நிந்திக்கத்தகா தது எனின் தர்மத்துடன் கூடின காரியமோ அதையே

நீங்கள் செய்யத்தகும். அதர்மமானதைக் கூடாது. ஆத லால் தற்கால நூல்களில் "கணேசாய நம:" "சீதாராமாப் யாம் நம:" "ராதா க்ருஷ்ணாப்யாம் நம:" "ஸ்ரீ குருசரணா விந்தாப்யாம் நம:" "ஹநுமதே நம:" "துர்காயை நம:" "வடுகாய நம:" "பைரவாய நம:" "சிவாய நம:" "சரஸ்வத்யை நம:" "நாராயணாய நம:" என்று எழுதி யிருப்பவைகளை அறிவாளிகள் வேதாதிசாஸ்திர விரோதமான தென்று நினைக்கிறார்கள். ஏனெனில் இருஷிகளால் நூற்களி லும், வேதாதிசாஸ்திரங்களிலுமிம்மாதிரி "மங்களாசரணம்" எழுதப்படவில்லை. ஆர்ஷ கிரந்தங்களில் "ஓம்" "அத" எனும் சப்தங்கள் எழுதப்பட்டிருக்கிறது. பாருங்கள்—:

"अथ शब्दानुशासनम्" अथेत्ययं शब्दोऽधिकारार्थं प्रयुज्यते ।

வ்யாகரண மஹாபாஷ்யம்.

"अथातो धर्मजिज्ञासा" अथेत्यानन्तर्ये वेदाध्ययनानन्तरम्।

பூர்வ மீமாம்ஸை.

"अथातो धर्मं व्याख्यास्यामः" अथेति धर्मकथनानन्तरम् धर्मलक्षणं विशेषेण व्याख्यास्यामः ।

வைசேஷிக தர்சனம்.

"अथ योगानुशासनम्" अथेत्ययमधिकारार्थः ।

யோகசாஸ்திரம்.

"अथ त्रिविधदुःखात्यन्तनिवृत्तिरत्यन्तपुरुषार्थः" सांसारिकविषयभोगानन्तरं त्रिविधदुःखात्यन्तनिवृत्त्यर्थः प्रयत्नः कर्तव्यः ।

சாங்க்ய சாஸ்திரம்.

"अथातो ब्रह्मजिज्ञासा"। चतुष्टयसाधनसम्पत्त्यनन्तरं ब्रह्म जिज्ञास्यम् ।

வேதாந்த ஸூத்திரம்.

"ओमित्येतदक्षरमुद्गीथमुपासीत"।

சாந்தோக்ய உபநிஷதம்.

"ओमित्येतदक्षरमिदꣳ सर्वं तस्योपव्याख्यानम् ।

மாண்டுக்ய உபநிடதம்.

இவ்வாறே மற்ற ரிஷிகளின் சாஸ்திரங்களிலும் "ஓம்" "அத" சப்தங்கள் எழுதியிருக்கிறது. அவ்வாறே (அக்னி. இட், அக்னி, யோத்ரிஷப்தாஃ பரியந்தி) இச்சப்தங்கள் நான்கு வேதங்களினாரம்பத்தில் சொல்லியுள்ளது. "ஸ்ரீ கணேசாய நமஃ" இம்மாதிரி வாக்கியம் எங்கும் எழுதப்பட்டிருக்கவில்லை. வேதாதிசாஸ்திரங்களினாரம்பத்தில் "ஹரிஃஓம்" என்று எழுதியிருப்பவைகள் பௌராணிக, தாந்த்ரிகர்களின் கற்பனைகளால் எழுதப்பட்டவைகளாகும். வேதாதிசாஸ்திரங்களின் ஆதியில் "ஹரிஃ" சப்தங்கள் எங்கும் கிடையாது. ஆதலால் நூற்களினாரம்பத்தில் "ஓம்" "அத" முதலிய சப்தங்களையே எழுதவேண்டும். இவைகள் ஈஸ்வர சம்பந்தமாய் மிகக் கொஞ்சம் எழுதப்பட்டது. இனி கல்வி விஷயமாக எழுதுவோமாக.

முதலத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்

अथ शिक्षां प्रवक्ष्यामः

मातृमान् पितृमानाचार्यवान् पुरुषो वेद ॥ சதபதப்ராம்மணம்.

எப்போது மூன்று உத்தமக்கல்விகளை (எனின் ஒன்று தாய், இரண்டாவது தந்தை, மூன்ருவது ஆசாரியன்) பெறுகிருனே அப்போது மனிதன் அறிவாளியாகிருன். அவன் குலமும் தன்யமாகிறது! அவனின் மக்கள் பெரும் பாக்ய சாலிகள் ஆகிருர்கள். அவனின் தாய் தந்தையர்கள் பெரும் வித்வான்கள் ஆகிருர்கள். தாயிடமிருந்து குழந்தைகள் உபதேசம், உபகாரம் பெறுவதைப் போல மற்ற ஒருவரிடமிருந்தும் பெற முடியாது. தாயாரின் அன்பு குழந்தையிடம் எவ்வளவென்று சொல்லக்கூடுமா! அவள் இதம்புரிவதைப் போல் மற்ற ஒருவரும் செய்ய முடியாது. இதனல் (மாத்ருமான்) எனின்—:

"प्रशस्ता धार्मिकी माता विद्यते यस्य स मातृमान्"

தன்னறிவைக்கொண்டு தான் வர்த்திக்குங் காலம் வரை குழந்தைகளுக்கு நல்ல நடத்தைகளை உபதேசித்துவரும் தாயாரே பாக்யசாலியாகும்.

கர்ப்பாதானச் சடங்கின் முன்பும், மத்தியிலும், முடிவிலும் மயக்கப்பொருள், குடிவகை, துர்நாற்றம், வியாதியுண்டு செய்யக் கூடியவை, புத்திநாசப்பதார்த்தங்களை அறவே நீக்கி சாந்தி, பலம், புத்தி, பராக்கிரமம், நன்னடத்தைகளையுண்டு செய்யும்படியான நெய், தயிர், பால் ஆதி அன்னபானாதிகளை உட்கொண்டு, வீர்யத்தை நல்ல பலம் பெற்றதாகச் செய்து கொள்ளவேண்டியது தாய் தகப்பனர்களுக்கு மிகுந்த அவசியமாகும். (ருதுகமனவிதி) மாதவிலக்குக் கண்ட ஐந்தாம் நாள் துடங்கி 16ம் நாள் வரை ருதுதானம் செய்யும் சமயமாகும். அத்தினங்களிலும் முதல் நான்கு நாட்கள் நீக்கப்பட்டவைகளாகும். மற்றதிலும் 11ம் நாளும் 13ன்றும் நாளும் நீக்கி மற்ற 10 இரவுகளில் கர்ப்பாதானம் செய்தல் உத்தமமாகும். மாதவிலக்குக்கண்ட நாளிலிருந்து 16ம் இரவுக்குப் பிறகு சேர்க்கை புரியலாகாது. மறுபடி முன் சொன்ன சேர்க்கைக்குத் தகுந்த காலம் வரும் வரையிலும், கர்ப்ப நிலைக்குப்பின் 1 வருடம் வரையிலும் சேர்க்கை கூடாது. அக்காலங்களிலே இருவரின் சரீரங்களும் ஆரோக்யம், சுரு சுருப்புடனிருக்கவேண்டும். ஒருவிதமான சோகமுமிருக்கக் கூடாது. எவ்வாறு "சரக" "சுஸ்ருத" சாஸ்த்திரங்களில் போஜன விதிகளும், "மனுஸ்மிருதி" யில் நல்ல ஒழுக்கங்களும் சொல்லப்பட்டிருக்கின்றதோ அவ்வாறு ஒழுகி வரவேண்டும் கர்ப்பாதானத்தின் பிறகு பெண் மிகுந்த நிதானமாக போஜனாதிகளைச் செய்யவேண்டும். பிறகு 1 வருடம் வரை பெண் புருடர்கள் சேர்க்கை புரியலாகாது. குழந்தை பிறக்கும் வரை பெண் புத்தி, பலம், ரூபம், ஆரோக்யம், பராக்கிரமம், அமைதியாதி குணங்கள் பொருந்திய பொருள்களை உபயோகித்துக் கொண்டு வரவேண்டும்.

குழந்தை பிறந்த உடனே நல்ல வாசனை ஜலத்தால் குழந்தையைக் குளிப்பாட்டி, நாடிச்சேதனம் (தொப்புட் கொடியறுத்தல்) செய்து நல்ல வாசனை நெய்யாதிகளால் ஹோமம் *செய்வதுடன், தாய்க்கும் தகுந்தவாறு ஸ்னன போஜனுதிகளை செய்விக்கவேண்டும். இவைகளால் குழந்தை யினதும், தாயினதும் சரீரம் மிகவும் ஆரோக்யமானதாக ஆகும். குழந்தையின் பாலுக்குத்தகுந்த உத்தமகுணமளிக்கும் படியான பதார்த்தங்களையே தாயார் அல்லது தாதி அருந்திவர வேண்டும். குழந்தை பிறந்த 6 தினங்கள் வரை தாயாரே குழந்தைக்குப் பாலூட்டவேண்டும். பிறகு தாதி ஊட்டி வர லாம். ஆனுல் பாலூட்டும் தாதி நல்ல பதார்த்தங்களையே உண் ணும்படி பெற்ருேர் கவனித்துவரவேண்டும். தாதியைச்சரிவர பரிபாலிக்க முடியாதபடி பெற்ருேர் ஏழைகளாயின் பசு அல்லது ஆட்டின் பாலுடன் சரிபாகமாக தண்ணீர் கலந்து குழந்தைக்கு ஊட்டி வரவேண்டும். அதில் வேண்டிய அளவு புத்தி, பராக்ரம, ஆரோக்யப் பொருள்களையும் கலந்து கொள்ள வேண்டும். குழந்தை பிறந்த பிறகு தாயையும் குழந்தையை யும் நல்ல காற்றுள்ள மற்ருேரிடத்திற்கு மாற்றவேண்டும். அவ்விடத்தில் அழகியதும், நல்ல வாசனையுடையதுமான பொருள்களை வைத்திருக்க வேண்டும். அவ்விடத்திலுள்ள காற்றை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். தாதி, பசு, ஆடு இவைகளின் பால் கிடைக்காவிட்டால் சமயோ

---

* குழந்தை பிறந்த சமயத்தில் "ஜாதகர்ம"ச் சடங்கு செய்ய வேண்டும். இதிலே ஹவனம் முதலிய வேதோக்தகாரியங்கள் வருகிறது. அவைகளைக் குறித்து "சம்ஸ்காரவிதி" எனும் நூலிலே விளக்கமாகப் பார்க்கலாம்.

சிதப்படி தகுந்ததை உபயோகித்துக் கொள்ளவும். ஏனெனில் பெற்ற தாயின் சரீர அம்சமே குழந்தையின் சரீரமாகிறது. குழந்தை பெற்ற தாய் இதனால் பலங்குன்றியவளாகின்றாள். இதனால் அவள் பாலை அருந்தலாகாது. ஆதலாலே பாலை வற்றச் செய்யும் லேபனங் (பூச்சுக்) களை தாயார் உபயோகித்து வரவேண்டும். இவ்வாறு செய்வதால் இரண்டாம் மாதமே தாயார் பழம் யுவதியாகிவிடுகின்றாள். இதுவரை புருடன் ப்ரம்மசர்யத்தால் வீரியத்தைக் காப்பாற்றி வரவேண்டும். எந்தப் புருடன் மனைவியர் இவ்விதிப்படி ஒழுகுகின்றார்களோ அவர்களின் உத்தமக் குழந்தைகள் தீர்க்காயுள், பலபராக்கிரமம் பெற்று வளர்ந்து வருவார்கள். இவ்வாறே மற்ற குழந்தைகளும் தீர்க்காயுள், பலம், புத்திகளைப் பெற்று தர்மவான்களாகும். பெண் தன் மர்ம ஸ்தானத்தை எப்போதும் பலம், சுத்த முடையதாகவும், புருடன் வீர்யத்தை நிலை பெற்றதாகவும் இருக்கும்படி கவனித்து வரவேண்டும். இதனால் மறுபடி பிறக்குங் குழந்தைகளும் நல்ல உத்தமர்களாகப் பிறக்கும்.

குழந்தை நல்ல அறிவாளியாக வளர்ந்து வரும்படியான வழிகளைத் தாயார் எப்போதும் குழந்தைக்குக் கற்பித்துவர வேண்டும். துஷ்டத்தனம் செய்யாதபடி குழந்தைகளை கவனித்துக் கொள்ளவேண்டும். குழந்தை பேச ஆரம்பிக்குங் காலத்திலே குழந்தை எதையும் சரியாக உச்சரிக்கும் வண்ணம் தாயார் அதன் நாக்கை சரியான இடத்தில் வைத்து உச்சரிக்கும்படி கவனித்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக "ப" இது உதடுகளின் சேர்க்கையால் உச்சரிக்க வேண்டியது. அவ்வாறே குழந்தையும் உதடுகளைச்சரிவர

சேர்த்து உச்சரிக்கும்படித் தாயார் கவனிக்கவேண்டும். குறில், நெடில் சப்தங்களையும் சரிவரச் சொல்லும்படிச் செய்ய வேண்டும். மதுர, கம்பீர, சுந்தர, ஸ்வர, அக்ஷர, மாத்திரை, பதம், வாக்கியம், சம்ஹிதை (கூட்டெழுத்து) இவைகளை தனித்தனியாகக் கற்பிக்கவேண்டும். குழந்தை சொல்வதை சிறிது தெரிந்துகொள்ளும் சக்திபடைத்தவுடன் அதற்கு பெரியோர் சிறியோர்களிடம் மரியாதை, தாய், தகப்பன், அரசன் முதலியவர்களுடன் பேசும் வழி, அவர்களுடன் வசிக்கும் வழி, அவர்களுடன் உட்காரும் வழி முதலியவை களைச் சரிவர கற்பிக்கவேண்டும். இவைகளால் குழந்தை எப் போதும் அயோக்யத்தனமில்லாததாக வளர்ந்துவரும். குழந் தை படிப்பில் பிரியமுடையவனுகவும், இந்திரியங்களை ஜெ யித்தவனுகவும், நல்லோர் சேர்க்கையிலாசையுடையவனுகவும் ஆகும்படி கவனித்து வரவேண்டும். வீண்விளையாட்டு, அழு கை, சிரிப்பு, சண்டை, சந்தோஷம், விசனம், பிறர்பொருளை யபகரித்தல், துவேஷமாதிகளைக் குழந்தை தெரிந்துகொள்ளக் கூடாது. மர்மஸ்தானத்தைத்தொடுவதாலும், மர்த்திப்பதா லும் வீர்யநாசமாகி நபும்சகத்வ முண்டாகிறது. கைகளி லும் துர்கந்தமுண்டாகும். இதனுல் அவ்விடத்தை எப் போதும் கையில் தொடாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். சத்யம்பேசுதல், தைர்யம், வீரம் முதலியவை உண்டாகும் வழியைக் கற்பிக்கவேண்டும். குழந்தைகள் 5 வயதடைந்தவுடன் அவைகளுக்கு "தேவநாகர" எழுத் துக்களைக் கற்பிக்கவேண்டும். பிறகு பரதேச எழுத்துக்களையுங் கற்பிக்கவும். அதன் பிறகு எந்த நூல்களிலிருந்து நற்கலை, வித்தை, தர்மம், கடவுள், தாய், தகப்பன், ஆசார்யன்,

வித்வான், அதிதி, அரசன், ஜனங்கள், குடும்பம், பந்து, சகோதரி, வேலைக்காரர் முதலியவர்களுடன் எவ்வெவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்குமோ; அந்த நூல்களின் ஸ்லோகம், சூத்திரம், செய்யுள் முதலியவைகளை அர்த்தசகிதமாக மனப்பாடம் செய்விக்கவேண்டும். இவைகளால்குழந்தைகளெப்போதும் துஷ்ட சகவாசத்தை நாடாது. தர்ம விரோதம், மூட நம்பிக்கைகள் இவைகளில் முழுகாமலிருக்கும். பூதப்ரேதாதி பொய் வார்த்தைகளில் குழந்தைக்கு நம்பிக்கையை உண்டு செய்யக்கூடாது.

गुरोः प्रेतस्य शिष्यस्तु पितृमेधं समाचरन् ।
प्रेतहारैः समं तत्र दशरात्रेण शुध्यति ॥ (மனு-5-65).

பொருள்—: குரு இறந்தபின் அச்சரீரத்திற்கு "ப்ரேதம்" என்று பெயர். அதை எரித்து விடும் மாணவன் "ப்ரேதஹாரன்" ஆகும். பிணத்தைத் தூக்கிச் சென்றவர்களுடன் அவன் 10 நாட்களில் சுத்தமடைகிறுன். எப்போது சரீரம் முழுதும் எரிக்கப்பட்டுவிட்டதோ அப்போது அதன் பெயர் "பூதம்" ஆகும். ஏனென்ருல் இம்மனிதனின் பிறப்பு, வாழ்வு முதலியவைகளெல்லாம் இறந்துவிட்டன, மறைந்துவிட்டன. இதுவே ப்ரம்மாமுதல் இன்றுவரையுள்ள வித்வான்களின் சித்தாந்தமாகும். ஆனுல் எவனுக்கு சந்தேகம், சந்தேககாரணம் ஏற்படுகின்றதோ அவனுக்கு பய, சந்தேகரூபமான பூதம், ப்ரேதம், சாகினீ, டாகினீ முதலிய அனேக துக்கமளிக்கும் பூதங்கள் தோன்றுகின்றன. பாருங்கள்! எப்போது ஓர் உயிர் இறந்து விட்டதோ அப்போது அதனுடைய ஜீவன் பாப புண்ணியங்களின் வசப்பட்டு கடவுளின்

வ்யவஸ்தையினுல் சுகதுக்கபலனை யனுபவிக்க மற்ெருரு ஜன்மத்தைத் தரிக்கிறது. என்ன? நாசாஹித பரமேஸ்வானின் கட்டளையை யாராவது நாசம் செய்ய முடியுமா? மூடர்கள் வைத்ய சாஸ்த்திரம், பதார்த்தவித்தை முதலியவைகளைப் படித்தல், கேட்டல், விசாரித்தல் முதலியவைகளிலிருந்து நீங்கி, ஜன்னி, ஜ்வரம் ஆதி சரீரசம்பந்தமானதும்; உன்மத்தம் ஆதி மனசம்பந்தமான பூதப்பிரேதாதிகளை உண்டு செய்துகொள்கிறுர்கள். மருந்துசாப்பிடுதல், பத்தியமிருத்தல் இவைகளைச் செய்யாமல், இக்கெட்ட, மூர்க்க, அனுசார, தன்னல, வெறிபிடித்த, தாழ்ந்த, இழிவானவர்களின் நம்பிக்கையாளர்களாய் பலவிதமான மோச, வஞ்சனை, கபடங்கள் நிறைந்த மந்திர, யந்திரங்களைக் கட்டிக்கொள்கிறுர்கள். மற்றவர்களையும் கட்டிக்கொள்ளச் செய்கிறுர்கள். தங்களின் தனத்தை நாசமாக்குபவர்களாகவும், குழந்தைகளின் துர்தசையினதிகாரிகளாகவும், வியாதியாளர்களாகவும் ஆகி சதா துக்கத்தை யனுபவிக்கிறுர்கள். கண்களிருந்தும் குருடர்களாய், முழுதும் மூடத்தனம் நிறைந்த அறிவுள்ளவர்களாய் அச்சுயநலப்புலிகளை நோக்கி "பெருமானே! இப்பெண், பையன், மனைவி, புருடனுக்கு என்ன ஆய்விட்டது?" என்று கேட்கிறுர்கள். அப்போதவர்கள் "இதனின் சரீரத்தில் பெரிய பூத, ப்ரேத, பைரவர் சீதளா ஆதிதேவர்கள் வந்து பிடித்துக் கொண்டார்கள், எதுவரை நீங்கள் இதற்குத் தகுந்த உபாயம் செய்யவில்லையோ அதுவரை இவர்கள் இதிலிருந்து மீளப்போவதில்லை. உயிர் பிழைத்தெழலுங்கூட சந்தேகமே. எங்களுக் கேதாவது தட்சணை கொடுத்தால் மந்திரங்களால் இதை விலக்கிவிடு

வோம்' என்று பதில் சொல்கிறார்கள். அப்போது அக் குருட்டுச் சம்பந்திகள் "பெருமானே! வேண்டியதை எங்க ளிடமிருந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் இதை எவ்வாறு யினும் ஸ்வஸ்தம் செய்து விடுங்கள்". என்று சொல்கிறார் கள். அப்போது அத்தூர்த்தர்கள் "நல்லது, வாருங்கள் இவ்வளவு சாமக்கிரியை, இவ்வளவு தக்ஷிணை, தேவதை களுக்கு விருப்பமான இவைகளையும் கொண்டுவாருங்கள்." என்கின்றார்கள். உடுக்கை, மிருதங்கம், பம்பை, சிலம்பு இவைகளை யெடுத்துக்கொண்டு ஆரவாரம் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். அவர்களுள் மதம் பிடித்த ஒருவன் எழுந்து தலைகால் தெரியாமல் குதிக்கின்றான். அத்துட னேயே "நான் இதனின் உயிரைக் கொண்டுபோகப் போகி றேன்". என்று சொல்லி பூச்சி காட்டுகிறான். அப்போதிக் குருடர்கள் பங்கியாதி குடிவகைகளை அவன் முன்னே வைத்து "இவைகளை யெடுத்துக்கொண்டு கருணைபுரிந்து இதன் உயிரைக் காப்பாற்றி விடுங்கள்" என்று வேண்டிக் கொள்ளுகிறார்கள். அப்போது அத்தூர்த்தன் சொல்கின் றான் "நான் அனுமான். கொண்டா மிட்டாய், எண்ணை, சிந்தூரம், கோதுமை, லங்கோடி முதலியவைகளை." என்று சொல்கின்றான். "நான்தான் தேவி அல்லது பைரவன். கொண்டா! ஐந்து குடுவை கள்ளு, அதற்குத்தகுந்த மாமிச வகைகள், மயக்கப்பொருள், ஆடைகள்" என அதிகாரமும் செய்கின்றான். அப்போதவர்கள் "வேண்டியவைகள் இதோ இருக்கிறது எடுத்துக்கொள்ளுங்கள்" எனச்சொல்கிறார்கள். அப்போது அப்பைத்தியக்காரர்கள் மிகுந்த சந்தோஷத் துடன் ஆடிப்பாடத்துடங்குகிறார்கள். ஆனால் அங்கு யாரா

வதொரு அறிவாளி இருந்தால் என் செய்வார்? செறுப்பாலோ, மற்றெதனாலோ அப்பைரவசாமியை நன்குபுடைப்பார். ஏனென்றால் இக்காரியங்களெல்லாம் பணத்தை அபகரிக்கச்செய்யும் மோசங்களே யன்றி சிறிதாவது உண்மையல்ல.

மற்றுஞ் சிலர் கிரகம்பிடித்த, கிரகரூபனாய ஜோதிடனிடஞ் சென்று "சுவாமிகளே! இதற்கு என்ன வந்துவிட்டது?" என்று கேட்கிறார்கள். அப்போது அச்சோதிடப்புளுகன் "இதற்கு சூர்யாதி கிரகங்கள் கொடுமையாகிவிட்டன. இதை நன்றாகச் செய்யவேண்டுமானால் சாந்திபாடம், பூஜை, தானம் முதலியவைகளைச் செய்யவேண்டும். இன்றேல் கிரகங்களின் கொடுமையினாலிது இறந்துவிடும்.'' என்று மூட்டை விடுகிறான்.

விடை :-- ஏ சோதிடப்பண்டிதரே! சொல்லுங்கள். பூமியானது எப்படி ஜடமானதோ அப்படியே சூர்யாதி கோளங்களும் ஜடமாகும். உஷ்ணம், ப்ரகாசம் முதலியவைகளைத்தவிர்த்து மற்றெதுவும் செய்ய அவைகளால் முடியாது. அவைகள் கோபங்கொண்டு சுகத்தையோ துக்கத்தையோ கொடுக்க அவைகள் சேதனமானவைகளல்ல.

கேள்வி :—உலகத்திலே அரசன், குடிகள் ஆகிய சகலரும் சுகம், துக்கம் முதலியவைகளை அனுபவித்தல் கிரகங்களின் தொழிலாலல்லவா?

விடை :—இல்லை, அச்சகலமும் பாப புண்ணியங்களின் பலன் ஆகும்.

கேள்வி :—ஆனால் ஜோதிட சாஸ்த்திரம் பொய்யா என்ன ?

விடை :—இல்லை, அவைகள் சொல்லியிருப்பது அங்கம், பீஜம், ரேகாகணிதம் முதலியவைகளேயாகும். அவைகள் உண்மையே. ஆனால் அவைகள் பலன்களை யீவதென்பது சுத்தப்பொய்.

கேள்வி :—ஆனால் ஜன்மபத்திரம் என்பது பிரயோஜனமில்லாததுதானா ?

விடை :—ஆம். அது ஜன்மபத்திரமல்ல. ஆனால் அதன் பெயர் “ சோக பத்திரம் ” என்று வைக்கவேண்டும். ஏனென்றால் குழந்தை பிறந்தபோது எல்லோரும் சந்தோஷமடைகிறார்கள். அச்சந்தோஷமானது எதுவரை ஜன்மபத்திர மெழுதி பலன்களைப் பார்க்கவில்லையோ அது வரைதான் நீடித்திருக்கும். புரோகிதர் ஜன்மபத்திரம் எழுதத்துடங்கும் போது அவரைப் பார்த்து பெற்றோர்கள் “ சுவாமிகளே ! ஜன்மபத்திரம் நல்லதாகப் பார்த்து எழுதுங்கள் ” என்று சொல்கிறார்கள். பெற்றோர் பணக்காரர்களாயிருந்தால் பலவித சித்திரங்களுடனும், ஏழைகளானால் சாதாரணமாகவும் எழுதி பின் பலன்சொல்ல ஆரம்பிக்கிறார். அப்போது பெற்றோர் சோதிடனின் எதிரிலமர்ந்து “ சுவாமிகளே ! ஜன்மபத்திரம் நன்றாயிருக்கின்றதா ? ” என்று கேட்கிறார்கள். அப்போது சோதிடன் “ என்ன இதில் இருக்கிறதோ அதை அப்படியே சொல்லிவிடுகிறேன் கேளுங்கள். இதனுடைய ஜன்மக்ரஹம் வெகு நன்றாயிருக்கிறது. அதனுடைய மித்

திரக் கிரகங்களும் வெகு நன்ருகவே இருக்கிறதுகள். இத ஞல் இச்சாதகன் பெரும் பணக்காரஞகவும், பெரிய சபை களில் மேலானவஞகவும், சரீர ஆரோக்யம் பெற்றவஞகவு மிருப்பான்." என்கிருன். இதைக்கேட்ட பெற்ரேர்கள் " பலே ! ஜோதிடரே ! வெகு நன்ருகச் சொன்னீர் ". என்று சொல்ல அதைக் கேட்ட சோதிடன் இதஞல் காரியசித்தி யேற்படாதெென வறிந்து உடனே "இக்கிரகங்கள் நன்ரு யிருந்தபொழுதிலும் இவைகள் மிகவும் குரூரமானவைகளாக இருப்பதால் ; நல்ல சுகங்களை யனுபவித்து வந்தபோதிலும் இக்குழந்தை அதனின் எட்டாவது வயதில் மரணத்தையடை யும் ". என்று சொல்லிவிடுகிருன். இதைக்கேட்ட பெற் ரேர்கள் தங்களின் சந்தோஷங்களை மறந்து துக்க சாகரத் தில் முழுகினவர்களாக மாறி சோதிடனைப் பார்த்து " சுவாமி களே ! இப்போது நாங்கள் என்ன செய்வோம் " என்று கேட்கிருர்கள், அப்போது ஜோதிடன் " உபாயம் செய் யுங்கள் " என்கிருன். " என்ன உபாயம் செய்வோம் " என்றவர்கள் கேட்கிருர்கள். உடனே சோதிடன் பிரசங் கம் செய்ய ஆரம்பிக்கிருன்—" இப்படிப்பட்ட தானங்களைச் செய்யுங்கள். கிரகத்தின் மந்திரங்களை ஜபம் செய்யுங்கள். நித்தமும் சில பிராம்மணர்களுக்கு போஜனமிட்டுக் கொண்டு வருவீர்களே யாஞல் ஒருசமயம் கிரகங்களின் கொடுமைகள் தணிந்துவிடலாம்' என்று சொல்கிருன்.

இங்கே ஒரு சமயம் என்பது குழந்தையிறந்துவிட்ட தேயாஞல் " நாமென்ன செய்யலாம். கடவுளின் சித்தம் அப்படி இருந்தது போலும் " என்று சொல்வதற்கும் ; பிழைத் துக்கொண்டதேயாஞல் "பார்த்தீர்களா தேவர்கள், ப்ராம்

ணர்களின் சக்தி எவ்வளவென்று', என்று சொல்வதற்கே யாகும்.

நாம் அப்பேர்ப்பட்டவர்களை நோக்கி "கடவுளின் ஆக்ஞையை மீறி நடக்குந் திறமை ஒருவருக்குங் கிடையாது. அவரவர்களின் கர்மபலனை அவரவர்கள் அனுபவிக்கிறார்கள். சோதிடராகிய உங்களாலும் மற்ற யாராலுமதை மாற்றமுடியவே முடியாது" எனச்சொல்லவேண்டும்.

மற்றும், சீதளம், யந்த்ர, தந்த்ர, மந்த்ரங்களென்பதும் இவ்வாறே மோசமான காரியங்களாகும். சிலர் "நான் மந்திரம் ஜெபித்து இக்குளிசத்தைக் கட்டிவிட்டேனால் என் தேவதை அம்மந்திர சக்திக்கு மகிழ்ந்து இதை கட்டிக் கொள்வோரை ஒருகுறைவுமின்றி வைத்துக்கொள்ளும்." என்று சொல்வார்கள். அப்பேர்ப்பட்டவர்களை நோக்கி "தாங்கள் கடவுளின் ஆக்ஞையாகிய மரணத்தையும், கர்மபலன்களையுங் கூட மாற்றிக்கொள்ளமுடியுமா? உங்கள் குளிசத்தைக் கட்டிக்கொண்ட அநேக குழந்தைகள் இறந்துவிட்டனவே. உங்களுடைய வீட்டிலேயே எவ்வளவோ மரணங்கள் ஏற்படுகின்றதே. அவர்கள் மரணங்களை நீங்களேன் தடுக்கக்கூடாது? என்று நாம் கேட்போமானால், நம் மோசம் இங்கே பலிக்காதெனத் தெரிந்துகொண்டு அவர்கள் ஓடிவிடுவார்கள். ஆகையால், இம்மாதிரியான சகல பொய் வியவகாரங்களை விட்டுவிட்டு, தார்மிகன், சகலதேசோபகாரி, கபடமில்லாது சகலருக்கும் கல்விகற்றீபவன், உத்தமவித்வான் முதலியவர்களுக்கு உதவிசெய்து, அவர்களைப் போலவே நாமும் பரோபகாரிகளாக நடந்துகொண்டு வருவதுதான் நல்ல காரியம்.

எவன் ரசாயன, மாரண, மோகன, உச்சாடன, வசீகரணாதி களைச் செய்யவேண்டு மென்று சொல்கின்றானோ; அவனை பரமமூடனென்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும். குழந்தைகள் இப்பேர்ப்பட்ட பொய் நம்பிக்கைகளை கைக்கொள்ளாதபடியும், வீர்யத்தைக் காப்பாற்றி சதா சந்தோஷத்துடன் வாழ்பவர்களாகவும் நாம் நல்ல வழிகளை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். எவன் சரீரத்தில் நன்கு காப்பாற்றப்பட்ட வீர்ய முண்டோ, அவனுக்கு ஆரோக்யம், பலம், புத்தி, பராக்கிரமங்கள் வந்தடைந்து சதா அவனை சந்தோஷமனத்தனாகச்செய்யும். வீர்யத்தைக் காப்பாற்ற கீழ்வரும் விதிகளை அனுசரிக்கவேண்டும்—பெண்கள் சேர்க்கை சம்பந்தமான கதைகளைக் கேட்டல், பெண்களின் சினேகிதம் கொள்ளல், பெண்களை நினைத்தல், பெண்களைப்பார்த்தல், பெண்களிடம் தனியாக வார்த்தையாடல், பெண்களைத் தீண்டல் முதலிய காரியங்களிலிருந்து மாணவர்கள் விலகியிருந்து உத்தம சிக்ஷையையும், பூர்ணவித்தையையும் பெறுவார்களாக. எவன் சரீரத்தில் வீர்யமில்லை; அவன் நபும்ஸகன், குலக்ஷீணனாகி, பிரமேகம் முதலிய கொடும் வியாதியாளனாய், துர்ப்பல, புத்தி ஹீன, தைர்ய, பல, பராக்கிரம ரகிதனாய் உலகத்திற்கு வீணனாயிருந்து இறந்துவிடுகின்றான்.

நீங்கள் இச்சிறுவயதில் நற்கல்வி, வீர்யாக்ஷணம் முதலியவைகளைக் கைவிட்டு விட்டீர்களானால் இச்சன்மத்தில் மறுபடி இப்பேர்ப்பட்ட சமயம் உங்களுக்கு வரப்போவதில்லை. எக்காலம் வரை உன் பெற்றோர் ஜீவித்திருக்கின்றார்களோ அக்காலம் வரைதான் உன் கல்வியும், சரீரபலமும் விருத்தியாகும்.'' இப்பேர்ப்பட்ட நல்ல வித்தைகளைத்

தாயார் தகப்பனுர் குழந்தைகளுக்குக் கற்பித்து வரவேண்டும். இதனுல் தான் "மாத்ருமான் பித்ருமான்" சப்தங்களை முன்பு சொல்லியிருக்கிறது. குழந்தையின் 5 வயதுவரை தாய், 6—8 வரை தகப்பன் நல்ல வித்தைகளை குழந்தைகளுக்குக் கற்பிக்கவேண்டும். 9-ம் வருடத்திலே "த்விஜன்" (ப்ராம்மண, க்ஷத்ரிய, வைஸ்யர்கள்) தன் குழந்தைகளுக்கு உபநயனம் செய்து, பூர்ண வித்தைகற்ற ஆசார்யர்கள், ஆசாரிணிகள் இருக்கும் படியான குருகுலங்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும். மற்ற சூத்திராதி வர்ணத்தவர்கள் தங்கள் குழந்தைகளை உபநயனம்செய்யாமல் குருகுலத்திற்கு அனுப்பவேண்டும். (என்பது சில ஆசார்யர்களினபிப்பிராயம்) அங்கே அவர்கள் குழந்தைகள் நல்ல வித்வான்கள் ஆகிருர்கள். அவ்விடத்தில் குழந்தைகள் அதிகப்பிரியர்களாக (செல்லமாக) ஆய்விடாமல், நல்ல சண்டைக்காரர்களாக ஆகிருர்கள். இதற்கு வ்யாகரண மஹாபாஷ்யத்தின் பிரமாணம்.

सामृतैः पाणिभिर्घ्नन्ति गुरवो न विषोक्षितैः ।
लालनाश्रयिणो दोषास्ताडनाश्रयिणो गुणाः ॥

(அஸ்—8-1-8.)

பொருள் :—எந்தத் தாய், தகப்பன் ஆசார்யன் குழந்தைகளை அடிக்கிருர்களோ ; அவர்களின் கைகளிலிருந்து குழந்தைகள் அமிர்தத்தை அருந்துகிருர்களென்று அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். எவர்கள் குழந்தைகளுக்கு அதிகமான பிரியத்தைக் காட்டுகிருர்களோ அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விஷத்தை அளிக்கிருர்களெனத் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனென்ருல் அடிப்பதால் குழந்

தைகள் குணவந்தர்களாகவும், பிரியமீவதால் தோஷவந் தர்களாகவுமாகிறார்கள். மாணவர்களும் கூட பிறர்தன்னை அடிக்கும்போது சந்தோஷத்தையும், பிரியம் காட்டும்போது விசனத்தையுமடைய வேண்டும். ஆனால், தாய், தந்தை ஆசார்யன்மார்கள் குழந்தைகளை துவேஷத்தால் அடிக்கக் கூடாது. மேலுக்கு பயங்காட்டுபவர்களாகவும், மனதிலே அளவிலா அன்புடையவர்களாகவு மிருக்கவேண்டும். மற் றும் திருட்டு, ஏமாற்றம், சோம்பல், ப்ரமாதம், மதுவருந் தல், பொய்பேசல், துன்புறுத்தல், குரூரம் காட்டல், கோபித் தல், துவேஷித்தல் மோஹித்தலாதி கெட்ட குணங்களை விட்டு, சத்யாசாரத்தைக் கைக்கொண்டொழுகி வர குழந் தைகளுக்குக் கற்பிக்கவேண்டும். ஏனென்றால் ஒருவன் முன் னிலையில் மற்றொருவன் திருட்டு, பொய் இவைகளை ஒரே முறை செய்து விட்டாலுங்கூட அவன் சாகும்வரை மற்ற வனின் எதிரில் வர வெட்கப் படுகிறான். சொன்ன வார்த்தை யைத்தவறுபவன் அடையும் கெடுதலைப் போல மற்றெவனு மடைவதில்லை. ஆதலால் நாம் ஒருவருக்கு ஒரு வார்த்தை யளி த்து விட்டால் எவ்வாறாயினு மதை முடித்தே தீரவேண்டும். உதாரணமாக ராமன் கோவிந்தனைப் பார்த்து-“ நான் நாளைக்கு உனக்கு அதைக் கட்டாயம் கொடுப்பேன்.” என்று சொல் கிறான். என்றால் மறுநாள் எவ்வாறாயினும் கோவிந்தனுக்கு ராமன் அதை கொடுத்தேயாகவேண்டும். அப்படி கொடுக்க முடியாவிட்டால் முன்பே அம் மாதிரி வார்த்தை சொல்லி யிருக்கலாகாது. ஆதலால் எப்போதும் எல்லோரும் உண் மையையே, சத்தியமான ப்ரதிக்ஞையையே செய்யவேண்டும். ஒருவரை எப்போதும் நம்பி விடக்கூடாது. கபட, வஞ்

சனையினல் தன் மனம் புண்ணுகி விடுகிறதென்ருல் நாம் எவ்வாறு பிறரிடம் சொல்லவேண்டும்? கபடம், வஞ்சனை யென்பது சகலரின் நன்மையை நாடாமல் தன்னலத்திற்காக பிறர்களின் நாசத்தைக் கவனியா திருத்தலேயாகும். ஆனல் எல்லோரின் சுகத்தையும் நாடி, ஒருவருக்குந் தீங்கின்றி தன் காரியங்களை முடித்துக்கொள்வது தான் உத்தமர்களின் கடமையாகும். " க்ருதக்னதா " ஒருவர் செய்த உபகாரத்தை மறந்து விடுதல். இது பெரிய பாபம்.

குரோதம், கொடூரவார்த்தை இவைகளை விட்டுவிட்டு எப்போதும் சாந்தமான, மதுரமான வார்த்தைகளையே யாருடனும் பேசவேண்டும். ஒருவரையும் வீணுக அவமானம் செய்யக்கூடாது. எது சொல்லவேண்டிய அவசியமோ அதைத் தவிர அதிகமாகவோ குறைவாகவோ சொல்லக்கூடாது. பெரியோர்களுக்கு மரியாதை கொடு. அவர்கள் வருகையில் நீ எழுந்து மரியாதை செய்து பின் தகுந்த ஆசனத்தில் உட்கார். யாரைப்பார்த்தபோதிலும் முதலில் " நமஸ்தே " செய். அவர்கள் எதிரில் நீ நல்ல ஆசனத்தின்மேலுட்காரவேண்டாம். சபைகளில் தனக்குத்தகுந்த ஆசனத்தைப் பார்த்து மற்ற ஒருவருக்கும் இடைஞ்சலின்றி உட்காரவேண்டும். ஒருவரையும் விரோதிக்கவேண்டாம். ஒவ்வொருவருடனும் நண்பனுயிருந்து அவரவர்களின் நல்ல குணங்களைக் கைக்கொண்டு தீய குணங்களை விலக்கி, அவர்களிடமிருந்து அத்தீயகுணங்களை விலக்க முயற்சி செய். நல்லோரை நேசி, தீயோரை விலக்கு. தன் தாய், தகப்பன், ஆசாரிமார்களுக்கு உடல், பொருள், ஆவி மூன்றினுலும் வேண்டிய உபகாரங்களைச் செய்.

यान्यस्माकं सुचरितानि तानि त्वयोपास्यानि नो इतराणि ॥

(தைத்ரீ—(7-11.)

பொருள்—: தாய் தகப்பன்மார்கள் எப்போதும் தங்கள் குழந்தைகளுக்கு சத்திய உபதேசத்தையே கொடுக்க வேண்டும். தர்மமான காரியங்களை மாத்திரம் கைக்கொள்ளவும், அதர்மமான காரியங்களை விட்டு விடவும் கற்பிக்க வேண்டும். சத்யமானவைகளை நாமுமனுசரித்து மற்றவர்களுக்கும் ப்ரசாரம் செய்யவேண்டும். மோசக்கார, துஷ்ட மனிதர்களை ஒருபோதும் நம்பாதே. தாய், தகப்பன், ஆசாரிமார்கள் சொல்லும் உத்தம காரியங்களை முடித்துவை. மாதா பிதாமார்கள் தாங்கள் பாடம் செய்துவைத்திருக்கும் வேத மந்திரங்களை "நிருக்தம்", "நிகண்டு", "அஷ்டாத்யாயீ" முதலியவைகளைக் கொண்டு அர்த்தத்துடன் குழந்தைகளுக்குக் கற்பிக்கவேண்டும். முதலத்தியாயத்தில் சொல்லியிருப்பதைப் போல கடவுளை யறிந்து உபாசிக்கவேண்டும். ஆரோக்யம், பலம், நல்லவித்தை இவைகளை உண்டாக்கும்படியான ஆகாரம், பானம், நடத்தைகளையே கைக்கொள்ள வேண்டும். கெட்டவைகளை ஒருபோதும் அருந்தலாகாது. குடிவகைகளிலிருந்து விலகு. ஆழமறியாது தண்ணீரில் இறங்கவேண்டாம், ஏனெனில் அதில் உள்ள ஜல ஜந்துக்களால் துன்பம் சிலசமயம் நேரிடலாம். "**ना विज्ञाते जलाशये**" இது மனுவின் வாக்கியம். ஆழமறியாத நீர்நிலையில் ஸ்நானம் செய்ய முயற்சிக்க வேண்டாம்.

दृष्टिपूतं न्यसेत्पादं, वस्त्रपूतं जलं पिबेत् ।
सत्यपूतां वदेद्वाचं, मनः पूतं समाचरेत् ॥

(மனு—6-46.)

பொருள் :—கீழே பார்வையைச் செலுத்தி மேடு பள்ளங்களை நன்றாக கவனித்து நடக்கவேண்டும். ஜலத்தைத் துணியினால் வடிகட்டிக் குடிக்கவேண்டும். சத்தியசுத்தமான வார்த்தைகளைப் பேசவேண்டும். மனதில் நன்கு விசாரித்து எதையும் அனுசரி.

माता शत्रुः पिता वैरी येन बालो न पाठितः ।
न शोभते सभामध्ये हंसमध्ये बको यथा ॥

(சாணக்யநீதி—2-11.)

குழந்தைகளுக்கு நற்கலையைக் கற்றுக்கொடுக்காத தாய் தகப்பன்மார் அக் குழந்தைகளுக்கு வைரி (சத்துருக்)களாவார்கள். அன்னப் பறவைகளின் மத்தியில் காகத்தைப் போலத்தான் அக் கல்வியில்லாக் குழந்தைகள் சபா மத்தியிலே இருக்கவேண்டும். ஆகையினால் தங்களின் குழந்தைகளுக்கு தனம், மனம், சரீரம் முதலியவைகளைக் கொண்டு கல்வி, தர்மம், நன்னடத்தை முதலியவைகளைக் கற்றுக் கொடுக்கவேண்டியது பெற்றோர்களின் கடமையாகும். இக் குழந்தைகள் கற்பனை விஷயத்திலெழுதிய இச் சிறுவிஷயங்களை அறிவாளிகளுக்குப் போதுமானதால் இவ்விஷயத்தை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்

अथाऽध्ययनाऽध्यापनविधिं व्याख्यास्यामः

இம்மூன்றாவது அத்தியாயத்தில் படித்து படிப்பிக்க வேண்டிய விஷயங்களைக் குறித்து எழுதுகிறேன். குழந்தைகளுக்கு நற்கல்வி, கற்பனை, குணம், கார்யம், ஸ்வபாவமாகிய ஆபரணங்களால் அலங்காரம் செய்யவேண்டியது தாய், தகப்பன், ஆசார்யன், சுற்றத்தார் முதலியவர்களின் முக்கிய கடமையாகும். பொன், வெள்ளி, மாணிக்கம், மரகதம், ரத்தினம் முதலிய ஆபரணங்களைத் தரிக்கச் செய்வதால் மனிதர்களின் ஆத்மா எப்போதும் அலங்காரமடைவது கிடையாது. ஏனெனில் அவைகளை யணிந்துகொள்வதால் கேவலம் தேகாபிமானம், விஷயங்களில் இச்சை, திருடர்களின் பயம், மரணம் இவைகளே உண்டாகிறது. உலகத்திலே ஆபரணங்களை அணிந்துகொண்ட அனேகம் குழந்தைகள் துஷ்டர்களால் கொலை செய்யப்பட்டதைக் காண்கின்றோம்.

विद्याविलाससमनसो धृतशीलशिक्षाः,
सत्यव्रता रहितमानमलापहाराः ।
संसारदुःखदलनेन सुभूषिता ये,
धन्या नरा विहितकर्मपरोपकाराः ॥

எவர்களின் மனது வித்யாவிலாசத்தில் சதா வசிக்கின்றதோ; சுந்தரமான நன்னடத்தையுடன் கூடினதோ, சத்யம்

பேசுதலாகிய நியமத்தைப் பரிபாலிப்பதோ; அபிமானம், சுத்தமின்மையிலிருந்தும் நீங்கினதோ, பிறர்களின் மூடத் தனத்தை நாசம் செய்கின்றதோ, சத்ய உபதேசத்தை யளிக்கின்றதோ, கல்விதானத்தால் உலக மக்களின் துன்பங் களை விலக்குதல் ஆகிய ஆபரணம் பூண்டதோ, வேதம் விதித் தபடி நடந்துகொண்டு சதா பரோபகாரமே கண்ணுயிருக்கின் றதோ, அந்த ஆண்பெண்களே பாக்யவான்களாகும். இதற் காக குழந்தைகளுக்கு 8 வயதானவுடன் ஆண்குழந்தைகளை ஆண்களின் பள்ளிக்கும், பெண்குழந்தைகளை பெண்களின் பள்ளிக்கும் அனுப்பிவைக்கவேண்டும். உபாத்தியாயர்களாகிய ஆண் பெண்கள் துஷ்ட நடத்தையுள்ளவர்களானல் அவர்க ளிடமிருந்து பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்துவைக்கக்கூடாது. பூர்ணவித்தியாசம்பன்னர்களே கல்வி கற்றுக்கொடுக்க யோக்யமானவர்களாகும். த்விஜர்கள் தங்கள் ஆண்குழந் தைகளுக்கு பூணூற்சடங்கியற்றி, பெண்குழந்தைகளுக்குத் தகுந்த சடங்குகளைப்புரிந்து அவரவர்களின் பள்ளிக்கூடத்திற் கனுப்பிவைக்கவேண்டும். கல்வி கற்றுக்கொடுக்குமிடம் ஏகாந்த ஸ்தானத்திலிருக்கவேண்டும். ஆண்களின் பாடசாலை பெண்களின் பாடசாலை இவைகளின் இரண்டுக்கும் மத்தி யிலே நான்கு மைல் வித்யாசமிருக்கவேண்டும். அங்கங்கே யுள்ள உபாத்தியாயர்கள், வேலைக்காரர்கள் மற்றும் சகலரும் ஆண்களின் பள்ளிக்கூடத்தில் ஆண்களும் பெண்களின் பள் ளிக்கூடத்தில் பெண்களுமாகவே இருக்கவேண்டும். ஆண் களின் பள்ளியில் 5 வயது பெண்குழந்தையும், பெண்களின் பள்ளியில் 5 வயது ஆண்குழந்தையுங்கூட இருக்கவும் போக வுங் கூடாது. ஏனெனில் எதுவரை அவர்கள் பிரம்மசாரி,

ப்ரம்மசாரிணிகளாக வசிக்கின்றார்களோ அதுவரை பெண் அல்லது புருடர்களை தரிசித்தல், தொடுதல், தனிப்பட்டிருத்தல், பேசுதல், கதை சொல்லுதல், விளையாடுதல், இன்பத்தை நினைத்தல், சேரல் ஆகிய எட்டுவித மைதுனங்களிலிருந்தும் விலகி இருக்கவேண்டும். ஆசார்யர்களும் தங்கள் மாணவர்களுக்கு நற்கல்வி, கற்பனை, நன்னடத்தை, நற்சுபாவம், சரீர ஆத்மாக்கள் பலமடைந்து சதா ஆனந்தத்தை அனுபவிப்பதாகிய நல்ல ஒழுக்கத்தையே கற்பித்து வரவேண்டும். நகரம் அல்லது கிராமங்களிலிருந்து 8 மைல் தூலவிலேயே பள்ளிக்கூடங்கள் இருக்கவேண்டும். பள்ளிக்கூடங்களைச்சுற்றி 8 மைல் தூரம்வரை ஓர் நகரமோ கிராமமோ இருக்கக்கூடாது. சகலமாணவர்களுக்கும் சுத்தமான ஆடை, ஆகாரம், படுக்கை முதலியவைகளைக் கொடுக்கவேண்டும். அரசகுமாரர்—குமாரிகளாயினும், தரித்திரனின் குழந்தைகளாயினும் சமமாக நடத்தப்படவேண்டும். தாய் தகப்பன்மார் குழந்தைகளையோ, குழந்தைகள் தாய் தகப்பன்மார்களையோ கல்விமுடியும் பரியந்தம் சேர, பார்க்க விரும்பக்கூடாது. அல்லது கடிதப்போக்குவரத்தும் வைத்துக்கொள்ளக்கூடாது. உலகசிந்தனையை மாணவர்கள் முற்றும் மறந்து கல்வியிலேயே முழு கவனமும் செலுத்திவர வேண்டும். மாணவர்கள் வெளிச்செல்ல விரும்பினல் தங்களின் உபாத்தியாயர்களுடனேயே செல்லவேண்டும். ஏனெனில் சுற்றுதலில் அவர்களுக்கேற்படும் சந்தேகங்களை விலக்கிக்கொள்ளமுடியும்.

कन्यानां संप्रदानं च कुमाराणां च रक्षणम् ॥

(மனு-7-152)

8 வருடங்களுக்குமேல் ஆண் பெண் குழந்தைகளை வீட்டிலே வைத்திருக்கக் கூடாது. கட்டாயம் பள்ளிக்கு அனுப்பிவிட வேண்டுமென அரசவிதியும், சமூகவிதியு மேற்படுத்த வேண்டும். யார் அவ்வாறு செய்யவில்லையோ அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். முதலில் பூணூற்சடங்கு வீட்டிலேயும் இரண்டாவது பள்ளிக்கூடத்திலேயும் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டும். அக்காலத்தில் உபாத்தியாயர்கள் குழந்தைகளுக்கு அர்த்தத்துடன் காயத்ரீ மந்திரத்தைச் சொல்ல வேண்டும். அம்மந்திரம் கீழ் வருமாறு—:

ओ३म् भूर्भुवः स्वः। तत्सवितुर्वरेण्यं भर्गो देवस्य धीमहि धियो यो नः प्रचोदयात्।

(யஜுர் 36-3)

இம்மந்திரத்தின் முதலில் உள்ள ஓம் என்பதின் பொருள் முதலத்தியாயத்தில் நன்ருக சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்த மூன்று சப்தங்களின் பொருளை இங்கு சுருக்கமாகச் சொல்கின்றோம்.

"भूरिति वै प्राणः" "यः प्राणयति चराऽचरं जगत् स भूः स्वयंभूरीश्वरः"

சகல உலக ஜீவனுதாரன், உயிரினும் பிரியமானவன், தன்னுட் தானுனவன் ஆகிய கடவுளின் பெயர் "பூ:" ஆகும்.

"भुवरित्यपानः" "यः सर्वं दुःखमपानयति सोऽपानः."

சகலதுக்காஹிதன், எவனின் சேர்க்கையால் ஜீவன் சகல துக்கங்களேயும் நீக்கிக் கொள்ள முடியும் அவனுகிய கடவுளின் பெயர் "புவ:" ஆகும்.

"स्वरिति व्यानः" "यो विविधं जगत् व्यानयति व्याप्नोति स व्यानः"

எல்லா உலகங்களிலும் வியாபித்து அவைகளேத் தரித்திருப்பவனெவனே அவனின் பெயர் "ஸ்வ:" ஆகும். இம்மூன்று வசனங்களும் தைத்ரீய ஆரண்யகத்தில் (7-5) உள்ளது. (ஸவிது:) "यः सुनोत्युत्पादयति सर्वं जगत् स सविता तस्य"

சகல உலகத்தையு முண்டாக்கினவன், சகல செல்வங்களின் தாதா (தேவஸ்ய) "यो दीव्यति दीव्यते वा स देवः"

சகல சுகங்களே யளிப்பவன், எவனேயடைய சகலரும் நற்காரியங்களேப் புரிகின்ருர்கள், அக்கடவுளின் (வரேண்யம்) "वर्त्तुमर्हम्" ஸ்வீகரிக்கத்தகுந்த அதிமேன்மையான (பர்க:) "शुद्धस्वरूपम्" சுத்தஸ்வரூபத்தை (தத்) நாமனேவரும் (தீமஹி) "धरेमहि" தரிப்போமாக. எதற்காகவென்ருல் (ய:) "जगदीश्वरः" அக்கடவுள் (ந:) "अस्माकम्" நம்முடைய (தியை:) "बुद्धिः" அறிவை (ப்ரசோதயாத்) "प्रेरयेत्" ப்ரேரேபிப்பதற்காக. எனின் கெட்ட காரியங்களே விலக்கி நல்ல காரியங்களில் செலுத்தவேண்டி, அச்சுத்தஸ்வரூபத்தை நாம் தரிப்போமாக.

"ஹே பரமேஸ்வர! ஹே சச்சிதானந்தஸ்வரூப! ஹே நித்ய சுத்த முக்தஸ்வபாவ! ஹே அஜ நிரஞ்ஜன நிர்விகார! ஹே சர்வாந்தர்யாமின்! ஹே சர்வாதார! ஜகத்பதே! சகல ஜகதுத்பாதக! ஹே அநாதே! விஸ்வம்பர! சர்வவ்யாபின்! ஹே கருணாம்ருதவாரிதே! சவிதுர் தேவஸ்ய தவ யதோ பூர் புவ-ஸ்வர்வரேண்யம் பர்கோऽஸ்தி தத்வயம் தீமஹி ததீமஹி தரேமஹி த்யாயேம. வாகஸ்மை ப்ரயோஜனயேத்யாஹ. ஹே பகவன்! ய: சவிதா தேவ: பரமேஸ்வரோ பவானஸ்மாகம் திய: ப்ரசோதயாத். ஸ ஏவாஸ்மாகம் பூஜ்ய உபாஸனீய இஷ்டதேவோ பவது. நாதோऽன்யம் பவத்துல்யம் பவதோऽதிகம் ச கச்சித் கதாசின்மன்யாமஹே"

ஏ மனிதர்களே! எவன் சகல சமர்த்தர்களிலும் சமர்த்தன்; சத் சித் ஆனந்த ஸ்வரூபன்; நித்திய சுத்தன், நித்திய புத்தன், நித்திய ஸ்வபாவத்தன், கிருபைக்கடல், சரியான நியாயத்தைப் புரிபவன், பிறப் பிறப்புக்களாகிய துக்க ரஹிதன், ஆகாரமில்லாதவன், சகலரின் காரியங்களையுமறிபவன், சகலத்தையுந் தரிக்கும் பிதா, உற்பாதகன், அநாதியாக சகலத்தையும் போஷிப்பவன், சகல ஐஸ்வர்ய யுக்தன், ஜகத்தைக் கட்டினவன், சுத்த ஸ்வரூபன், அடையத்தகுந்த யோக்கியனே அப் பரமாத்மாவின் சுத்த சேதனஸ்வரூபத்தை நாம் தரிப்போமாக. இவ்வுபயோகத்திற்காகவே அப்பரம் நம்மாத்மாவினுள் அந்தர்யாமி யாயிருந்து துஷ்டாசார அதர்ம கார்யங்களிலிருந்து நம்மை விலக்கி, ஸ்ரேஷ்டாசார தர்ம யுக்த காரியங்களில் நம்மைச் செலுத்துகின்றார். ஆதலால் அவரைத்தவிர மற்ற எப்பொருளையும் நாம் தியானிக்கக்

கூடாது. ஏனெனில் அவரை விட சுத்தமானதும், அதிக சுத்தமானதுமொன்றுமில்லை. அவரே நம்முடைய தகப்பன், அரசன், நியாயாதிபதி, சகல சுகங்களை யளிப்பவருகும்.

இவ்விதமாக காயத்ரீ மந்திரத்தை உபதேசித்து சந்த்யா உபாசனையில் உள்ள ஸ்னனம், ஆசமனம் (நீருட்கொள்ளல்), ப்ராணயாமம் முதலிய காரியங்களையுங் கற்பிக்கவேண்டும். முதலில் ஸ்னனம் செய்வதாலே வெளி அவயவங்களுக்குச் சுத்தியும் நல்ல ஆரோக்யமும் உண்டாகிறது. இதற்கு ப்ராமாணம்—:

अद्भिर्गात्राणि शुध्यन्ति, मनः सत्येन शुध्यति ।
विद्यातपोभ्यां भूतात्मा, बुद्धिर्ज्ञानेन शुध्यति ॥

(மனு-5-109)

ஜலத்தினுல் சரீரத்தின் வெளி அவயவங்களும், சத்தியாசரணையினுல் மனமும், வித்யா தவம், எனின் எவ்வித கஷ்டம் வரினும் சகிக்கும் திறமையால் ஜீவாத்மாவும், ஞான, எனின் பூமியிலிருந்து கடவுள்வரையுள்ள பதார்த்தங்களின் விவேகத்தால் புத்தியும் திட நிச்சயபவித்திரமடைகின்றது. இதனுல் சாப்பிடுவதற்கு முன் கட்டாயம் ஸ்னனம் செய்யவேண்டும். இரண்டாவது ப்ராணயாமத்திற்குப் பிரமாணம்—:

योगाङ्गानुष्ठानादशुद्धिक्षये ज्ञानदीप्तिराविवेकख्यातेः ॥

(யோகசூத்-சாதனபாதம்-28)

ப்ராணயாமம் செய்வதால் ஒவ்வொரு க்ஷண நேர முன் பின் காலத்திலேற்பட்ட அசுத்தியானது விலகி அறிவின் ப்ர

காச முண்டாகிறது. முக்தி நிலையை அடையும்வரை அவனின் ஆத்மா மேன்மையான நிலையில் சென்றுகொண்டே யிருக்கும்.

दह्यन्ते ध्मायमानानां धातूनां हि यथा मलाः ।
तथेन्द्रियाणां दह्यन्ते दोषाः प्राणस्य निग्रहात् ॥

(மனு-6-71)

அக்னியில் உருக்குவதால் பொன் முதலாகியவைகளிலுள்ள அழுக்கு நீங்கி சுத்தமடைவதுபோல ப்ராணாயாமத்தால் மன ஆதி இந்திரியங்களின் அழுக்குகள் நீங்கி பரிசுத்தமடைகின்றன. ப்ராணாயாமம் செய்யவேண்டிய வழி—:

प्रच्छर्दनविधारणाभ्यां वा प्राणस्य ॥ (யோகசூத். சமாதி பாதம் 35 சூத்தி.)

வாந்தி செய்யும்போது எவ்வாறு வயிற்றிலுள்ள பொருள்கள் வேகத்துடன் வெளிப்படுமோ அவ்வாறே முதலில் உள்ளே யிருக்கும் காற்றை வெளியிலே விட்டுவிட்டு சிறிதுநேரம் கூடுமானவரை மூலாதாரத்தை மேலுக்கிழுத்து வைத்துக்கொண்டிருந்து சிரமம் தோன்றியவுடன் மெதுவாக காற்றை உள்ளே யிழுக்கவேண்டும். அதையும் கூடுமானவரை அடக்கிவைத்திருக்கவேண்டும். இக்காலங்களிலெல்லாம் மனதில் ஓம் என்பதை உச்சரித்துக்கொண்டிருக்க வேண்டும். பிறகு மெதுவாக உள்ளே உள்ள காற்றை வெளியிலே விடவேண்டும். மறுபடி கூடுமானவரை சும்மா யிருந்து பழையபடியே செய்யவும். இவ்வாறு செய்வதால் மனமும் ஆத்மாவும் பவித்ரமடைவதுடனல்லாமல் ஒரேநிலை

யிலும் நிற்கிறது. ஒன்று "பாஹ்யவிஷய" காற்றை வெளியிலே விடுதல். இரண்டு "ஆப்யந்தர" வெளிக்காற்றை உள்ளுக்கிழுத்தல். மூன்ருவது "ஸ்தம்பவ்ருத்தி" உள்ளே உள்ள காற்றை அடக்கிவைத்தல். நான்காவது "பாஹ்யாப்யந்தராக்ஷேபீ" வெளிவிட்ட காற்றை உடனே இழுக்காமல் நிறுத்துதல்; உள்சென்ற காற்றை உடனே வெளிவிடாமல் நிறுத்துதல். இந்நான்கு செய்கைகளையும் கூடியவரை ஒரே நேரமுடையதாகச் செய்தல். இவ்வாறு செய்வதால் மனமும் இந்திரியங்களும் தன் வசமாகின்றன. பலம்பொருந்திய புருஷார்த்தமடைந்த, அறிவு மிகுந்த, வேகமுடைய சூக்ஷ்மரூபமாகின்றது. எனின் எந்த சிறு விஷயத்தையும் சரிவர சீக்கிரத்தில் அறிந்துகொள்கின்றது. இதனுல் வீரியமும் நஷ்டமடையாமல் நின்று சரீரபலம், பராக்ரமம், ஜிதேந்திரியம் முதலிய சித்திகளை யடைகின்றது. பெண்களும் இவ்யோகாப்பியாசத்தைச் செய்யவேண்டும். போஜனம், நீரருந்துதல், எழுந்திருத்தல், பேசுதல், நடத்தல், பெரியோர் சிறியோரிடம் நடக்கவேண்டியது முதலியவைகளையுங் கற்பிக்கவேண்டும். சந்த்யோபாசனை (கூட்டுவேளைத்தொழுகை) யை "ப்ரம்மயக்ஞம்" என்றும் சொல்வார்கள். "ஆசமனம்" (நீரருந்தல்) உள்ளங்கையில் நீரைக் கொண்டு உதடுகளின் மத்தியில் வைத்து, கழுத்தின் கீழ் இருதயம்வரை செல்லுமாறு அதை உரிஞ்சிக் குடிக்கவேண்டும். அதற்கதிகமாகவோ குறைவாகவோ அருந்தக்கூடாது. இதனுல் கழுத்திலுள்ள கபமும் பித்தமும் சாந்தமடைகின்றன. பிறகு "மார்ஜனம்" (அங்கங்களை நீரினுல் நனைத்தல்) மோதிரவிரல் நடுவிரல்களின் நுனியினுல் நீரைத்

தொட்டு கண்களாதி அவயவங்களின்மேல் நீரைத்தெளித்துக் கொள்ளவேண்டும். இதனால் சோம்பேரித்தனம் விலகுகிறது. சோம்பல் இல்லாவிட்டாலும் ஜலம் கிடைக்காவிட்டாலுமிதைச் செய்யவேண்டியதில்லை. பிறகு மந்திரத்துடன் "பிராணயாமம்" (உயிர்வயம்), "மனஸா பரிக்ரமம்" (மனதால் கடவுளைத்தொழுதல்), ப்ரார்த்தனை, உபாஸனை முதலியவைகளை சரிவர கற்றுக்கொடுக்கவேண்டும். பிறகு "அகமர்ஷணம்" (பாபம் நீங்கவேண்டுதல்) எனின் எப்போதும் பாபம் புரியாதிருக்கும் விருப்பத்தைச் சிந்தித்துக் கொள்ளவேண்டும். இச்சந்த்யோபாசனையை தனியான இடத்தில் ஒரே விஷயத்தில் செலுத்தின மனதுடன் செய்ய வேண்டும்.—:

अपां समीपे नियतो नैत्यिकं विधिमास्थितः ।
सावित्रीमप्यधीयीत गत्वारण्यं समाहितः ॥

(மனு 2-104)

காட்டில் அல்லது தனிப்பட்ட இடத்தில் செல். அமைதியடைந்து நீரின் அருகிலே நின்று நித்திய காரியங்களைச் செய்துகொண்டே காயத்ரீ மந்திரத்தை அர்த்தத்துடன் உச்சரித்து அதன்படியே தன் நடத்தையையும் செலுத்த வேண்டும். ஆனால் மந்திரத்தை மனதிலேயே உச்சரிக்க வேண்டும்.

இனி இரண்டாவது "தேவயக்ஞம்" (அக்னி ஹோத்திரம்) (அறிவாளிகளுக்குதவி) புரியவேண்டும். சந்த்யாவும் அக்னி ஹோத்திரமும் தினமும் காலை மாலை இரு

வேளையும் செய்யவேண்டும். இரவுபகல்களின் சேர்க்கை (சந்தி) இரண்டே வேளைதான் ஏற்படுகிறது. குறைந்தது 1 மணி நேரமாகிலும் தியானிக்கவும். சமாதி நிலையடைந்த யோகிகள் எப்படி தியானிப்பார்களோ அப்படியே நாமும் செய்யவேண்டும். சூரிய உதயத்திற்குப் பிறகும், சூர்ய அஸ்தமனத்தின் முன்பும் அக்னி ஹோத்திரம் செய்யவேண்டும்.

இதற்காக ஏதாவதொரு உலோகத்திஞலாவது மண்ணிஞலாவது 12 அல்லது 16 அங்குல சதுரமும், அடிப்பாகத்தில் 3 அல்லது 4 அங்குல சதுரமும் உள்ள ஓர் குண்டம் தயார்செய்து கொள்ளவேண்டும். எனின் மேலே எவ்வளவு விஸ்தீரணமிருக்கிறதோ அதற்கு 4-ல் 1 பங்கு விஸ்தீரணம் கீழே யிருக்கும்படிச் செய்து கொள்ளவேண்டும். அதில் சந்தனம், பாலாசம், மா முதலிய மரங்களின் குச்சிகளை சிறிது பெரிதாக துண்டித்து வைக்கவேண்டும். அதன் மத்தியில் நெருப்பையிட்டு அதன்மேலும் முன்சொன்ன குச்சிகளை வைக்கவேண்டும். 1 ப்ரோக்ஷணீபாத்ரம் (ஜலப்பாத்ரம்) 1 ப்ரணீதாபாத்ரம் (ஜலக்கரண்டி) 1 ஆஜ்யஸ்தாலி (நெய்க் கிண்ணம்), கரண்டிகளும் வைத்துக்கொள்ளவேண்டும். இவைகள் மரத்திஞல் அல்லது மற்ற எந்த உலோகத்திஞலாவது செய்திருக்கலாம். நெய்க்கிண்ணியில் நெய்யும், நீர்க்கிண்ணியில் நீரையும் வைத்து நெய்யை உருக்கிக்கொள்ளவேண்டும். நீர்க்கரண்டியால் நீரைமொண்டு கையை சுத்தம் செய்து கொள்ளவும். நெய் நன்ருக உருகியபின் கீழ் வரும் மந்திரங்களைச் சொல்லி ஓமம் (நெய்விடல்) செய்யவும்:—

ओं भूरग्नये प्राणाय स्वाहा । भुववायवेऽपानाय स्वाहा । स्वरादित्याय व्यानाय स्वाहा । भूर्भुवः स्वरग्निवाय्वादित्येभ्यः प्राणापानव्यानेभ्यः स्वाहा ॥

இவ்வொவ்வொரு மந்திரத்தாலு மொவ்வோர் ஆகுதி (நெய் விடுதல்) செய்யவேண்டும், மேலும் செய்ய விரும்பின்

ओं विश्वानि देव सवितर्दुरितानि परासुव ।
यद्भद्रं तन्न आसुव ॥

(யஜு—30-3).

இம்மந்திரத்தாலும் முன்சொல்லியுள்ள காயத்திரி மந்திரத்தாலும் ஆகுதி கொடுக்கலாம். "ஓம் பூ:" "ப்ராண:" ஆதி பெயர்கள் கடவுளைக் குறிக்கும். இதன் பொருள்கள் முன்பே சொல்லியிருக்கிறது. "ஸ்வாஹா" என்றால் ஆத்மாவிற்கு எவ்வாறு அறிவோ, அவ்வாறே ஜீவனால் சொல்லும் சப்தமிருக்கவேண்டும். என்றால் எவ்வாறு கடவுள் ப்ராணிகளின் சுகங்களுக்காக இவ்வுலகப் பொருள்களை உண்டாக்கினாரோ, அவ்வாறே மனிதர்களும் பரோபகாரிகளாய் இருக்கவேண்டும் ‖.

கேள்வி—: ஹோமம் செய்வதால் என்ன பலன்?

விடை—: கெட்ட நாற்றம் பொருந்திய காற்றாலும் நீரினாலும் வியாதிகளுண்டாகும். வியாதிகளால் மனிதர்களுக்கு துக்கமுண்டாகும். நல்ல வாசனை பொருந்திய காற்றாலும் நீரினாலும் நல்ல ஆரோக்கியமும் வியாதிகளின் நாசமும் உண்டாகின்றதென சகலருமறிவார்கள்.

கேள்வி—: சந்தனாதிகுச்சிகளையும் நெய்யாதிபொருள் களையும் யாருக்காவது கொடுத்தால் மிகுந்த உபகாரமாகும். நெருப்பில் அவைகளையிட்டு நாசம்செய்தல் வீணல்லவா ?

விடை—: நீ பதார்த்தவித்தை அறிந்திருந்தால் இவ்வாறு சொல்லமாட்டாய். ஏனென்றால் எந்தப்பொருளும் உண்மை யில் நாசமடைவதேயில்லை. நாம் ஒருவிடத்தில் ஓமஞ்செய் தோமேயானால் அதன் வாசனை வெகுதூரத்திலுள்ளவர்களுக் கும் செல்லுகிறது. அவ்வாறேதான் கெட்ட வாசனையும். இத னால் அக்னியில் நாம் போடும் பதார்த்தங்கள் சூக்ஷ்மரூப மடைந்து வாயுவுடன் கலந்து வெகுதூரம்வரை சென்று கெட்ட வாசனையை நீக்குகிறது.

கேள்வி—: அப்படியானால் கஸ்தூரி, குங்குமப் பூ, நல்ல வாசனையுடைய புஷ்பம், அத்தர் முதலியவைகளை வீட்டில் வைப்பதால் கெட்டவாசனை நீங்கிவிடுகிறது.

விடை—: அப்பொருள்களுக்கு அத்திறமையில்லை. அவைகள் வீட்டிலுள்ள கெட்ட காற்றை வெளிச்செலுத்தி வெளியிலுள்ள நல்ல காற்றை வீட்டினுள் நுழையச்செய் யாது. ஏனென்றால் அது நெருப்பு ஒன்றினால்தான் முடியும்.

கேள்வி—: எனின் மந்திரம் சொல்லிக்கொண்டு ஓமம் செய்வதால் என்ன பலன் ?

விடை—: மந்திரங்களில் ஓமம் செய்வதின் பலனை விஸ் தரித்துச் சொல்லியுள்ளது. பலமுறை சொல்வதால் மந்திரங்

கள் மனப்பாடமாய்விடும். வேதமந்திரங்களை மனப்பாடம் செய்து காப்பாற்றியதாகவு மாகும்.

கேள்வி—: ஓமம் செய்யாவிட்டால் பாபம் வருமா?

விடை—: ஆம். ஏனென்றால் மனிதனின் சரீரத்தில் கெட்ட வாசனையுண்டு; அது அவன் குளிக்கும் நீரின் மூல மாகவும், வசிக்குமிடத்திலுள்ள காற்றின்மூலமாகவும் வியாபித்து அனேகருக்குத் தீங்கைச் செய்கின்றது. இப்பாபத்தினின்றும் விடுபட அவன் நீரையும் காற்றையும் சுத்திசெய்ய வேண்டியது அவசியமாகும். இதனால் நீரைக்குடிப்பதாலும் காற்றை முகருவதாலும் மற்றவர்களுக்கு தீங்குண்டாகாது. ஒருவன் சாப்பிடும் நெய் முதலியவைகளை ஓமம் செய்வதால் அனேகருக்கு பலனையளிக்கிறது. ஆனால் எவன் நெய் முதலாகியவைகளைச் சாப்பிடவில்லையோ அவன் சரீரத்தில் பலமே இருக்காது. ஆதலால் அவைகளைச் சாப்பிடுவதுங்கூட அவசியமே. ஆனால் அதிகமாக ஓமமும் செய்யவேண்டியது அவசியமாகும்.

கேள்வி—: ஒவ்வொரு மனிதனும் எவ்வளவு ஆகுதிகள் கொடுக்கவேண்டும்? ஒவ்வொன்றினளவு மெவ்வளவு இருக்கவேண்டும்?

விடை—: ஒவ்வொருவனும் 16 ஆகுதிகள் கொடுக்க வேண்டும். ஒவ்வோராகுதியும் இரண்டு மாஷை (16 குண்டு மணி யிடை) இருக்கவேண்டியதவசியமாகும். இதற்குமேல் அதிகமாகச்செய்வது நல்லதே. இதனாலேயே ஆரியாவர்த்

தத்தில் வசித்திருந்த பெரியோர், ரிஷிகள், அரசர்கள், சக்ர வர்த்திகள் முதலியவர்கள் அனேக ஓமங்களைச்செய்தும் செய்வித்துமிருந்தார்கள். எக்காலம்வரையிலும் ஆரியாவர்த்தத்தில் இந்த ஓமம் செய்தலின் ப்ரசாரம் நடந்துகொண்டிருந்ததோ அக்காலம்வரை இத்தேசத்தில் வியாதியென்பதே இல்லாமலிருந்தது. இனிமேலும் இதைச்செய்ய ஆரம்பிப்பார்களானால் இனிமேலுமித்தேசத்தில் வியாதிகளில்லாமலொழியும்.

பிரம்மசர்ய ஆச்சிரமத்தை அனுஷ்டிக்கும் காலம்வரை சந்த்யோபாசனை அக்னி ஹோத்திரம் ஆகிய இவ்விரண்டு யக்ஞங்களை மாத்திரம் செய்து கொண்டு வரவேண்டும்.

ब्राह्मणस्त्रयाणां वर्णानामुपनयनं कर्त्तुमर्हति । राजन्यो द्वयस्य । वैश्यो वैश्यस्यैवेति । शूद्रमपि कुलगुणसंपन्नम् मन्त्रवर्जमनुपनीतमध्यापयेदित्येके ॥

(ஸுஸ்ருத ஸூத்ரம் 2 அத்யாயம்) ப்ராம்மணர்கள் ப்ராம்மண, க்ஷத்ரிய, வைஸ்ய ஆதிமூன்று வர்ணங்களுக்கும், க்ஷத்ரியர்கள் க்ஷத்ரிய வைஸ்ய ஆதி இரண்டு வர்ணங்களுக்கும், வைஸ்யர்கள் வைஸ்யர்களுக்கு மாத்திரம் யக்ஞோபவீதம் புரிந்து கல்வி கற்றுக் கொடுக்கவேண்டும். சுப லக்ஷணங்கள் பொருந்திய சூத்திரனுயின் மந்திர பாகங்களை விட்டு மற்ற சாஸ்த்திரங்களை யெல்லாம் சொல்லிக் கொடுக்கவேண்டும். ஆனால் அவனுக்கு உபனயனம் மாத்திரம் செய்யக் கூடாது என்பது அநேக ஆசாரியார்களுடைய கொள்கை. 5 அல்லது 8 வயதில் ஆண்பிள்ளைகளை ஆண்பள்ளிக் கூடத்

திற்கும், பெண் பிள்ளைகளை பெண் பள்ளிக்கூடத்திற்கும் அனுப்பி வைக்கவேண்டும். கீழே எழுதியுள்ள விதிப்படி கல்வியை ஆரம்பிக்கவேண்டும்.

षट्त्रिंशदाब्दिकं चर्य्यं गुरौ त्रैवेदिकं व्रतम्। तदर्धिकं पादिकं वा ग्रहणान्तिकमेव वा ॥ (மனு—3-1.)

எட்டு வருடத்திலிருந்து 48 வருடங்கள் வரை எனின் ஒவ்வொரு வேதத்தையும் சாங்கோ பாங்கமாகக் கற்கப் பன்னிரண்டு வருடங்களாக 48 வருடங்களும் சேர்ந்து 56 வரையிலும், 18 வருடங்கள் வரையிலாவது குறைந்தது ப்ரமசர்யமும், முன்புள்ள 8ம் சேர்த்து 26வயது வரை யாவது, சகல வித்தையையுங் கற்றுமுடிக்கும் வரையா வது குரு குலத்தில் ப்ரம்மசர்ய விரதத்துடன், வசித்துவர வேண்டும்.

पुरुषो वाव यज्ञस्तस्य यानि चतुर्विंꣳशति वर्षाणि तत्प्रातः सवनं चतुर्विंꣳशत्यक्षरा गायत्री गायत्रं प्रातःसवनं, तदस्य वसवोऽन्वायत्ताः प्राणा वाव वसव एतेहीदꣳसर्वं वासयन्ति ॥१॥

तञ्चेदेतस्मिन् वयसि किञ्चिदुपतपेत्स ब्रूयात्प्राणा वसव इदं मे प्रातःसवनं माध्यन्दिनꣳ सवनमनुसंतनुतेति माहं प्राणानां वसूनां मध्ये यज्ञो विलोप्सीयेत्युद्धैव तत एत्यगदो ह भवति ॥२॥

अथ यानि चतुश्चत्वारिंꣳशद्वर्षाणि तन्माध्यन्दिनꣳसवनं चतुश्चत्वारिंꣳशदक्षरा त्रिष्टुप् त्रैष्टुभं माध्यन्दिनꣳ सवनं तदस्य रुद्रा अन्वायत्ताः प्राणा वाव रुद्रा एते हीदꣳ सर्वꣳ रोदयन्ति ॥३॥

तं चेदेतस्मिन्वयसि किञ्चिदुपतपेत्स ब्रूयात्प्राणा रुद्रा इदं मे माध्यन्दिनꣳसवनं तृतीयसवन मनुसन्तनुतेति माह प्राणानाꣳ रुद्राणां मध्ये यज्ञो विलोप्सीत्युद्धैव ता एत्यगदो ह भवति ॥ ४ ॥

अथ यान्यष्टाचत्वारिꣳ शद्वर्षाणि तत्तृतीयसवनमष्टाचत्वा-रिꣳशदक्षरा जगती जागतं तृतीयसवनं तदस्यादित्यान्वायत्ताः प्राणा वावादित्या एते हीदꣳ सर्वमाददते ॥ ५ ॥

तं चेदेतस्मिन् वयसि किञ्चिदुपतपेत्स ब्रूयात् प्राणा आ-दित्या इदं मे तृतीयसवनमायुरनुसंतनुतेति माहं प्राणानामा-दित्यानां मध्ये यज्ञो विलोप्सीयेत्युद्धैव तत एत्यगदो ह वै भवति ॥ ६ ॥

சாந்தோக்யோபநிஷத் (3 ப்ரபாட, 16 கண்) தின் வசனமாகும்.

பிரம்மசரியம் மூன்று விதங்களாகும். தாழ்ந்த, மத்திம, உத்தம—:

இதில் தாழ்ந்த என்பது—: அன்னாசமயமான உடல், உடலில் சயனித்திருக்கும் ஜீவாத்மா, நற்குணங்களின் சேர்க்கை முதலியவைகள் சரிவர சத்திய நிலையை அனுசரித்தற் பொருட்டு குறைந்தது 24 வயது வரை இந்திரியங்களை ஜெயித்தவனாய் வேதாதி வித்தைகளையும் நன்னடைத்தைகளையுங் கற்றுக் கொள்ளவேண்டும். விவாகமான பிறகுங்கூட அதிகமாகக் கெடுத்துக் கொள்ளாமல் சரீரத்தில் உயிரை பலமுள்ளதாகச் செய்துகொண்டு சகல நற்குணங்களையும் கைக்கொண்டொழுகி வரவேண்டும். இக் காலங்களிலெல்லாம் ஆசார்யன்

சொல்லின்மேல் மாணவன் கீழ்வருமாறு ப்ரதிக்ஞை செய்து கொள்ளவேண்டும். "நான் சரிவர ப்ரம்மசர்யத்தைப் பரி பாலிப்பேன். என் சரீரம் சதா ஆரோக்கியமுள்ளதாகவும், உயிர் நல்ல பலம் பொருந்தி இருக்குமாறும் சதா கவனித்துக் கொள்வேன்." "ஹே மனிதர்களே! நீங்கள் இவ்வாறு சுகத்தை விஸ்தரிக்கச்செய்யுங்கள். என் ப்ரம்மசர்யத்தைக் கெடுக்காதீர்கள். 24-வது வயதிற்குப்பின் நான் இல்லற தர்மத்தை யேற்றுக்கொள்கின்றேன். இவ்வாறு நான் செய்வதால் என் உயிருங்கூட 70, 80 வயது வரை உடலை விட்டுச்செல்லாது." என தீர்மானித்துக்கொண்டு ஒழுகுதலே தாழ்ந்த ப்ரம்மசர்யமாகும்.

மத்திம ப்ரம்மசர்யமாவது—: 44 வயதுவரை ப்ரம்ம சரியம் அனுஷ்டித்து வேதாப்யாசம் செய்தல். இதை யனு சரிப்பவனின் ப்ராணன், இந்திரியங்கள், உள் அவயவங்கள் எல்லாம் மிகுந்த பலத்தையடைந்து சகல துஷ்டத்தனங்களை நீக்கி ஸ்ரேஷ்டங்களை பரிபாலிப்பதாகின்றதுகள். "இவ் விளம் வயதில் நான் ருத்ரரூப ப்ராணயுக்த ப்ரம்மசர்ய தபஸ் ஸைப்புரிவேன். ஹே ப்ரம்மசாரிகளே! நீங்களும் இப் ப்ரம்மசர்யத்தை அனுஷ்டியுங்கள். மத்தியிலே கைவிட்டு விடாமல் என்னைப்போல் காப்பாற்றுங்கள். குருகுலத்தி லிருந்து திரும்பிவரும்போது வியாதிரஹிதனாகலாம்" என்று சொல்லும் திறமை பெறுதல்.

உத்தம ப்ரம்மசர்யம்—: 48 வயதுவரை ப்ரம்மசரிய மனுஷ்டித்தல். எவ்வாறு ஜகதீ யெனும் வேத மந்திரம் 48 எழுத்துக்களையுடையதோ அவ்வாறே 48 வயது வரை ப்ரம்ம

சர்யமனுஷ்டிக்கவேண்டும். இதனல் உயிர் தன் வசப்பட்டு சகல வித்தைகளையும் அறியும் சாமர்த்தியமுண்டாகிறது. ஆசார்யர்கள், தாய் தகப்பன்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு இம் மேன்மையான தபஸ்ஸின் தத்துவங்களைச் சரிவரக் கற்பிக்கவேண்டும். எவர் இத்தவத்தைச் சரிவரச் செய்கின்ருரோ அவர் சகலவியாதிநாசகராய் தர்ம, அர்த்த, காம, மோக்ஷமாகி சகல புருடார்த்தங்களையும் பெறுவார்.

चतस्रोऽवस्थाः शरीरस्य वृद्धिर्यौवनं संपूर्णताकिञ्चित्परिहाणिश्चेति । आषोडशाद्वृद्धिः । आपञ्चविंशतेर्यौवनम् । आचत्वारिंशतः संपूर्णता । ततः किञ्चित्परिहाणिश्चेति ॥

पञ्चविंशे ततो वर्षे पुमान् नारी तु षोडशे ।
समत्वागतवीर्यौ तौ जानीयात्कुशलो भिषक् ॥

(ஸுஸ்ருத சூத்திரஸ்தானம் 35-வது அத்தியாயம்).

இவ்வுடலிற்கு நான்கு நிலைகள் உண்டு. (1) “ வ்ருத்தி ” 16 வயதிலிருந்து 25 வயது வரை சகல தாதுக்களும் வளர்ந்து வருகிறது. (2) “ யௌவனம் ” 25 வயதின் முடிவிலிருந்து 26 வயதின் ஆரம்பத்திலிருந்து யௌவன மாரம்பிக்கிறது. (3) “ ஸம்பூர்ணதா ” 25 வயதிலிருந்து 40 வயது வரை சகல தாதுக்களும் புஷ்டியடைகின்றன. (4) “ கிஞ்சித்பரிஹாணி ” உடலின் சகல அவயவங்களும் பூர்ண வளர்ச்சி யடைந்துள்ள நிலை. இதன் பிறகு தாதுக்கள் தங்கள் பூர்ண பலத்தை இழக்க ஆரம்பிக்கின்றன. கனவு, பிரசவம் முதலிய காரியங்களால் தாதுக்கள் வீணுகின்றன.

ஆதலால் 40 வயதில் விவாகம் செய்தல் மிகவும் உத்தமம். 48 வயதில் விவாகம் செய்தல் உத்தமத்தினுமுத்தமமாகும்.

கேள்வி—: இப்பிரம்மசர்யவிரதம் பெண்களுக்கும் புருடர்களுக்கும் ஒரேவிதமானதுதானு?

விடை:— இல்லே, புருடன் 25 வயதுவரை ப்ரம்மசர்ய மனுஷ்டித்தால் பெண் 16 வயது வரையும், புருடன் 30 வயதுவரை அனுஷ்டித்தால் பெண் 17 வயது வரையும், புருடன் 36 வயதுவரை அனுஷ்டித்தால் பெண் 18 வயது வரையும், புருடன் 40 வயதுவரை அனுஷ்டித்தால் பெண் 20 வயதுவரையும், புருடன் 44 வயதுவரை அனுஷ்டித்தால் பெண் 22 வயது வரையும், புருடன் 48 வரை அனுஷ்டித்தால் பெண் 24 வயது வரையும் அனுஷ்டிக்கவேண்டும். எனின், புருடன் 48 வயதுக்குமேலும், பெண் 24 வயதிற்கு மேலும் ப்ரம்மசர்ய மனுஷ்டிக்கக் கூடாது. ஆனல் இவ்விதி விவாகம் செய்துகொள்ள விரும்பும் பெண் புருடர்களுக்கே யாகும். கலியாணம் வேண்டாமென விரும்புவோர் மரண பரியந்தம் ப்ரம்மசர்யமனுஷ்டிக்கலாம். ஆனல் பூர்ண வித்தை கற்று, இந்திரியங்களே ஜெயித்த, தோஷமிலா யோகப்புருடர் பெண்களே பூர்ண ப்ரம்மசர்ய விரதத்தை அனுஷ்டிக்க முடியும். இவ்வாறு இந்திரியங்களேத் தன் வசப்படுத்தி சதா வசித்தல் மிகமிகக் கடினமான காரியமாகும்.

ऋतं च स्वाध्यायप्रवचने च। सत्यं च स्वाध्यायप्रवचने च। तपश्च स्वाध्यायप्रवचने च। दमश्च स्वाध्यायप्रवचने च। शमश्च स्वाध्यायप्रवचने च। अग्नयश्च स्वाध्यायप्रवचने च।

अग्निहोत्रं च स्वाध्यायप्रवचने च । अतिथयश्च स्वाध्यायप्रवचने च । मानुषं च स्वाध्यायप्रवचने च । प्रजा च स्वाध्यायप्रवचने च । प्रजनश्च स्वाध्यायप्रवचने च । प्रजातिश्च स्वाध्याय प्रवचने च ।

(தைத்ரீயோபநிஷத் ப்ரபாடம் 7-9.)

கற்கும், கற்பிக்குமவர்களின் நியமமிதுவாகும். (ருதம்) நியாயமான ஆசாரத்துடன் படித்துப் படிப்பிக்கவேண்டும். (ஸத்யம்) சத்தியத்துடனேயே படிக்கப் படிப்பிக்கவேண்டும். (தப:) தவத்துடனேயே எனின், தர்ம அனுஷ்டானத்துடனேயே படித்துப் படிப்பிக்கவேண்டும். (தம:) வெளி அவயவங்களை சதா சுத்தத்துடன் வைத்துக்கொண்டு படிக்கப் படிப்பிக்கவேண்டும். (ஶம:) மனதின் சகல தோஷங்களையும் நீக்கி படிக்க படிப்பிக்கவேண்டும். (அக்னய:) "ஆஹவனீயம்" முதலான அக்னிகள், இடி முதலியவைகளின் ஞானத்துடன் படித்துப் படிப்பிக்கவேண்டும். (அக்னிஹோத்ரம்) அக்னிஹோத்திரம் செய்துகொண்டே படித்துப் படிப்பிக்க வேண்டும். (அதிதய:) விருந்தினர்களை யுபசரித்துக்கொண்டே படித்துப் படிப்பிக்கவேண்டும். (மானுஷம்) மனிதசம்பந்தமான காரியங்களைச் சரிவரப் புரிந்துகொண்டே படித்துப் படிப்பிக்கவேண்டும். (ப்ரஜா) சந்தானம், ராஜ்யம் இவைகளை நன்கு பரிபாலித்துக்கொண்டே படித்துப் படிப்பிக்கவேண்டும். (ப்ரஜன:) வீர்யத்தைக் காப்பாற்றி விருத்திசெய்து கொண்டே படித்துப் படிப்பிக்கவேண்டும். (ப்ரஜாதி:) தங்களின் குழந்தைகளையும் மாணவர்களையும் நன்கு பரிபாலித்துக்கொண்டே படித்துப் படிப்பிக்கவேண்டும்.

यमान् सेवेत सततं न नियमान् केवलान् बुधः ।
यमान् पतत्यकुर्वाणो नियमान् केवलान् भजन् ॥

(மனு—4-204.)

இயமம் ஐந்துவகைப்படும்.

तत्राहिंसासत्यास्तेयब्रह्मचर्यापरिग्रहा यमाः ॥

(யோகசூத், சாதனபாதம்—30.)

(அஹிம்ஸா) விரோதமின்மை (ஸத்ய) சத்தியத்தையே நினைத்து, சத்தியத்தையே சொல்லி, சத்தியத்தையே செய்தல் (அஸ்தேய) மனம் வாக்கு காயம் மூன்றிலும் ஒரேவிதமாயிருத்தல் (ப்ரம்மசர்ய) உபஸ்தேந்திரியத்தை (மர்மஸ்தானத்தை) அடக்கிவைத்தல் (அபரிக்ரஹ) தன்னலமின்மை. இவ்வைந்தாகிய இயமங்களை நன்கு பரிபாலிக்கவேண்டும். இனி நியமம் என்றால்—:

शौचसन्तोषतपः स्वाध्यायेश्वरप्रणिधानानि नियमाः ॥

(யோகசூத், சாதனபாதம்—32).

(சௌசம்) ஸ்நானாதிகளால் சுத்தியடைதல் (ஸந்தோஷ) துக்கமுண்டாக்காத காரியங்களையே துக்கமுண்டாகாத வண்ணம் செய்துகொண்டு சதா சந்தோஷத்துடனிருத்தல். (தப) எவ்வித கஷ்டங்கள் வந்தபோதிலும் தர்மத்திலிருந்து நழுவாமை (ஸ்வாத்யாய) படித்துப் படிப்பித்தல் (ஈச்வரப்ராணீதான) கடவுளின் பக்தியில் ஆத்மாவை லயிக்கச்செய்தல். இவ்வைந்தும் நியமங்களாகும். இயமங்களைச் சரிவர பாலிக்காத முன்பே நியமங்களை அனுசரிக்கக்கூடாது. இரண்டையுமே பரிபாலிக்கவேண்டும். இயமத்தைவிட்டு நியமத்தை

மாத்திரம் சேவிப்பவன் மேன்மையைப் பெறமாட்டான். ஆனால் அதோகதியாக சம்சாரத்திலே முழுகிவிடுவான்.

कामात्मता न प्रशस्ता न चैवेहास्त्यकामता ॥
काम्यो हि वेदाधिगमः कर्मयोगश्च वैदिकः ॥
(மனு—2-2.)

அதிக ஆசையும், சிறிதுங்கூட ஆசையின்மையும் யாருக்கும் மேன்மையாகாது. ஏனென்றால் ஆசையே இல்லா விட்டால் வேதங்களைக்கற்று அதன்படி ஒழுகிவாமுடியாது : இதனாலேயே—:

स्वाध्यायेन व्रतैर्होमैस्त्रैविद्येनेज्यया सुतैः ।
महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः ॥ (மனு 2. 28).

(ஸ்வாத்யாய) சகல வித்தைகளையுங் கற்றல் கற்பித்தல், (வ்ரத) ப்ரம்மசரியம், சத்தியம்பேசுதலாகிய நியமங்களைப் பரிபாலித்தல் (ஹோம) அக்னிஹோத்ராதி ஹோமம், சத்தியத்தைக்கைக்கொண்டு அசத்தியத்தை நீக்கி சத்திய வித்தைகளைத் தானமீதல் (த்ரைவித்யேன) வேதத்திற்சொல்லியுள்ள "கர்மோபாஸனே" "க்ஞானம்" "வித்தை" முதலியவைகளைக் கைக்கொள்ளல். (இஜ்யயா) பக்ஷங்களில் செய்யவேண்டிய யாகங்களைச்செய்தல் (ஸுதை:) சந்தானேத்பத்தி (மஹாயக்ஞை:) ப்ரம்ம, தேவ, பித்ரு, வைஸ்வதேவ, அதிதி முதலியவர்களின் சத்காரம். (யக்ஞை:) "அக்னிஷ்டஹோம" ஆதிகளையும், சில்பவித்தை, விக்ஞானம் முதலிய யக்ஞங்களைச் செய்வதால் உடல் ப்ரம்மஸ்வரூபம் எனின், வேத பரமேஸ்வர பக்தியினுதாரரூபம் பெறும்படிச் செய்தல். இவ்விதசாதனங்களின்றி ப்ராம்மண சரீரத்தைப் பெறமுடியாது.

इन्द्रियाणां विचरतां विषयेष्वपहारिषु ।
संयमे यत्नमातिष्ठेद्विद्वान् यन्तेव वाजिनाम् ॥
(மனு—2-82).

எவ்வாறு சாமர்த்தியசாலியான சாரதி குதிரைகளைச் சரிவர நடத்துவிப்பாரோ அவ்வாறே மனதும் ஆத்மாவும் தன்னிச்சைக்கு மாறுபட்ட விஷயங்களிற் செல்லாமல் நிறுத்தி இந்த்ரிய அடக்கத்தைச் சரிவரச் செய்யவேண்டும். ஏனென்றால்—:

इन्द्रियाणां प्रसङ्गेन दोषमृच्छत्यसंशयम् ।
सन्नियम्य तु तान्येव ततः सिद्धिं नियच्छति ॥
(மனு—2-93).

ஜீவாத்மா இந்திரியங்களின் வசப்பட்டு பெரிய பெரிய தோஷங்களுக்குள்ளாகிறது. ஆனால் ஆத்மாவின் வசமாக இந்திரியங்கள் எப்போது லயிக்கின்றதோ அப்போதே சித்திகளை அடைகின்றது.

वेदास्त्यागश्च यज्ञाश्च नियमाश्च तपांसि च ।
न विप्रदुष्टभावस्य सिद्धिं गच्छन्ति कर्हिचित् ॥
(மனு—2-97).

துஷ்டனுக இந்திரியங்களை ஜெயிக்காதவனுக்கு வேத, த்யாகம், யக்ஞம், நியமம், தபம், மற்ற நற்காரியங்கள் எதுவும் சித்தியடைவதில்லை.

वेदोपकरणे चैव स्वाध्याये चैव नैत्यिके ।
नानुरोधोऽस्त्यनध्याये होममन्त्रेषु चैव हि ॥ १ ॥

नैत्यिके नास्त्यनध्यायो ब्रह्मसत्रं हि तत्स्मृतम् ।
ब्रह्माहुतिहुतं पुण्यमनध्यायवषट्कृतम् ॥ २ ॥

(மனு—2-105-106).

வேதம் கற்றல் கற்பித்தல்; சந்த்யோபாஸனாதி பஞ்ச மஹாயக்ஞங்களைச் செய்தல், ஹோம மந்திரங்களில் இல்லாத விஷயங்களைச் சொல்லுதல் (ஆக்ரஹ) இல்லை. ஏனெனில் (1) நித்யகாரியங்களில் கல்வியில்லாதவைகள் வருவதில்லை. எவ்வாறு சதா நடைபெறும் உஸ்வாஸ நிஸ்வாஸங்களை தடுக்க முடியாதோ அவ்வாறே நித்ய காரியங்களை ஒவ்வொருநாளும் செய்யவேண்டும். எந்த தினத்திலும் விட்டுவிடக் கூடாது. ஏனென்றால் வேதங்கற்காமலும் கூட அக்னி ஹோத்ராதி உத்தம காரியங்களைப் புரிபவர் புண்யரூபத்தை யடைகிறார். எவ்வாறு பொய் பேசுவதால் சதா பாபமும், மெய் பேசுவதால் சதா புண்ணியமும் அடைகிறதோ அவ்வாறே கெட்ட காரியங்களைப் புரிவதால் கல்வியின்மையும் நல்ல காரியங்களைப் புரிவதால் கல்வியும் உண்டாகிறது.

अभिवादनशीलस्य नित्यं वृद्धोपसेविनः ।
चत्वारि तस्य वर्द्धन्त आयुर्विद्या यशो बलम् ॥

(மனு—2-121).

சதா தாழ்ந்த சுசீல வித்வான்களையும், பெரியோர்களையும் சேவிக்கின்றவர்களுக்கு ஆயுள், வித்தை, கீர்த்தி, பலம் ஆகிய நான்கும் வந்தடைகின்றன. அவ்வாறு செய்யாதவர்களுக்கு இந்நான்கும் கிடைப்பதில்லை.

अहिंसयैव भूतानां कार्यं श्रेयोऽनुशासनम् ।
वाक् चैव मधुरा श्लक्ष्णा प्रयोज्या धर्ममिच्छता ॥ १ ॥

यस्य वाङ्मनसे शुद्धे सम्यग्गुप्ते च सर्वदा ।
स वै सर्वमवाप्नोति वेदान्तोपगतं फलम् ॥ २॥

(மனு—2-159, 160).

விரோத புத்தியை விட்டு சகல மனிதர்களுக்கும் நன்மையான விஷயங்களை உபதேசித்தல் வித்வான், மாணவன் இவர்களின் கடமையாகும். அன்றியும் உபதேசத்தை நன்னடத்தையுடனும், இனிமையான கடூரமில்லாக்குரலுடனும் சொல்லவேண்டும். தர்மத்தின் மேன்மையபிவிருத்தியை நாடுபவன் சதா சத்தியத்திலேயே செல்லவும், சத்தியத்தையே உபதேசம் செய்யவும் வேண்டும் (1). எவனுடைய மனதும், வாக்கும் சதா நன்கு காப்பாற்றப்பட்டு சுத்தம் செய்யப் பட்டுள்ளதோ அவனுடையதே சகல வேதாந்த எனின், வேதங்களின் சிறந்த ரூபபலம் ஆகும் (2).

संमानाद् ब्राह्मणो नित्यमुद्विजेत विषादिव ।
अमृतस्यैव चाकाङ्क्षेदवमानस्य सर्वदा ॥

(மனு—2—162).

சமஸ்த வேதங்களையும், கடவுளையும் அறிந்தவனும், கெட்ட நடத்தைகளுக்கு விஷம்போல் அஞ்சுபவனும், அவமான ஆசையை அமிர்தம்போல் பாவிப்பவனும் ப்ராம்மணனுகும்.

अनेन क्रमयोगेन संस्कृतात्मा द्विजः शनैः ।
गुरौवसन् संचिनुयाद्ब्रह्माधिगमिकं तपः ॥

(மனு—2—164).

இவ்வாறு உபநயனம் செய்யப்பட்ட த்விஜர்களின் குமாரர்களான ப்ரம்மசாரிகளும், குமாரிகளான ப்ரம்மசாரிணி

களும் சிறிது சிறிதாக வேதார்த்தங்களை உத்தமஞானரூப தவத்துடன் கற்றுக்கொண்டு வரவேண்டும்.

योऽनधीत्य द्विजो वेदमन्यत्र कुरुते श्रमम् ।
स जीवन्नेव शूद्रत्वमाशु गच्छति सान्वयः ॥

(மனு—2—168).

வேதங்களைக் கற்காது மற்ற காரியங்களில் கஷ்டப் படு பவன் சீக்கிரத்தில் தன் புத்ர பௌத்ராதிகளுடன் சூத்திரத் தன்மையை அடைகின்றுன்.

वर्जयेन्मधु मांसञ्च गन्धं माल्यं रसान् स्त्रियः ।
शुक्तानि यानि सर्वाणि प्राणिनां चैव हिंसनम् ॥ १ ॥
अभ्यङ्गमञ्जनं चाक्ष्णोरुपानच्छत्रधारणम् ।
कामं क्रोधं च लोभं च नर्त्तनं गीतवादनम् ॥ २ ॥
द्यूतं च जनवादं च परिवादं तथाऽनृतम् ।
स्त्रीणां च प्रेक्षणालम्भमुपघातं परस्य च ॥ ३ ॥
एकः शयीत सर्वत्र न रेतः स्कन्दयेत्कचित् ।
कामाद्धि स्कन्दयन् रेतो हिनस्ति व्रतमात्मनः ॥ ४ ॥

(மனு-2-177—180).

ப்ரம்மசாரியும், ப்ரம்மசாரிணியும் மது, மாம்ஸம், மேற் பூச்சு, மாலை, ரஸம், பெண்புருட சேர்க்கை, விரோதம், பிராணிகளின் ஹிம்ஸை (1) அவயவங்களை மர்த்தித்தல், அவ சியமின்றி மர்மஸ்தானத்தைத்தொடுதல், கண்களில் மையிடு தல், செருப்பு குடை தரித்தல், காம, க்ரோத, லோப, மோக, பய, சோகம், அழுகை, துவேஷம், நடனமாடுதல்

பாடுதல், வாத்தியங்கள் வாசித்தல் (2). சூதாடல், ஒருவரின் கதை, நிந்தை, பொய் பேசல், பெண்களைப் பார்த்தல், நெருங்குதல், பிறருக்குக் கேடு செய்தல் முதலிய கெட்ட காரியங்களைச் சதா நீக்கவேண்டும்; (3). எப்போதும் தனியாகப் படுக்கவேண்டும். வீர்யம் ஸ்கலிதமாகாதபடி காப்பாற்ற வேண்டும். எவ்வித இச்சையினாலாவது வீர்யஸ்கலிதமாய் விடின் தன் ப்ரம்மசர்ய விரதம் அழிந்து விட்டதென்று அறியவும்.

वेदमनूच्याचार्योऽन्तेवासिनमनुशास्ति। सत्यं वद। धर्मं चर। स्वाध्यायान्मा प्रमदः। आचार्य्याय प्रियं धनमाहृत्य प्रजातन्तुं मा व्यवच्छेत्सीः। सत्यान्न प्रमदितव्यम्। धर्मान्न प्रमदितव्यम्। कुशलान्न प्रमदितव्यम्। भूत्यै न प्रमदितव्यम्। स्वाध्यायप्रवचनाभ्यां न प्रमदितव्यम्। देवपितृकार्य्याभ्यां न प्रमदितव्यम्। मातृदेवो भव। पितृदेवो भव। आचार्य्यदेवो भव। अतिथिदेवो भव। यान्यनवद्यानि कर्माणि तानि सेवितव्यानि नो इतराणि। यान्यस्माकꣳसुचरितानि तानि त्वयोपास्यानि नो इतराणि। ये के चास्मच्छ्रेयाꣳसो ब्राह्मणास्तेषां त्वयासनेन प्रश्वसितव्यम्। श्रद्धया देयम्। अश्रद्धया देयम्। श्रिया देयम्। ह्रिया देयम्। भिया देयम्। संविदा देयम्। अथ यदि ते कर्मविचिकित्सा वा वृत्तविचिकित्सा वा स्यात्। ये तत्र ब्राह्मणाः सम्मर्शिनो युक्ता अयुक्ता अलूक्षा धर्मकामा स्युर्यथाः ते तत्र वर्त्तेरन् तथा त्वं तत्र वर्तेथाः। एष आदेश एषउपदेशः। एषा वेदोपनिषत्। एतदनुशासनम्। एवमुपासितव्यम्। एवमुचैतदुपास्यम्॥

(தைத்ரீயம்—ப்ரபாடம் 7—அநு-11-கண்-1, 2, 3, 4).

ஆசார்யன் அல்லது ஆசாரிணி தன் மாணவ அல்லது மாணவிகளுக்குக் கீழ்வருமாறு உபதேசிக்கவேண்டும் :—

"நீ எப்போதும் சத்தியம் பேசு, தர்ம ஆசரணத்தைச் செய், கர்வப்படாமல் படி, பூர்ணவித்தை கற்று ஆசாரியனுக்கு பிரியமான தனத்தையளித்து விவாகம் செய்து கொண்டு, மக்களைப்பெறு, கர்வத்தால் சத்தியத்தையெப்போதுங்கைவிடாதே, கர்வத்தால் தர்மத்தைக்கைவிடாதே, கர்வத்தால் ஆரோக்கியம் சுருசுருப்பைக் கைவிடாதே, கர்வத்தால் உத்தமசெல்வ அபிவிருத்தியைக் கைவிடாதே, கர்வத்தால் படித்து படிப்பித்தலைக் கைவிடாதே, தேவ-வித்வான்—மாதாபிதாதிகளை சேவிப்பதற்கு வெட்கப்படாதே எவ்வாறு வித்வான்களை உபசரிப்பாயோ அவ்வாறே மாதா, பிதா, ஆசார்ய, அதிதிகளையும் உபசரி. தர்மசம்மதமான சத்தியம் பேசுதலாகிய காரியங்களைக்கொண்டு அதற்கு விரோதமான பொய் பேசல் முதலிய காரியங்களைக் கைவிடு. நமக்கு நன்மையை அளிக்கக்கூடியதான தர்மசம்பந்தக் காரியங்களைக் கைக்கொண்டு, நமக்கு தீமையை அளிக்கக்கூடிய அதர்மக்காரியங்களைக் கைவிடு. நமக்கருகில் வசிக்கும் தர்மாத்மாவாகிய வித்வானின் அருகிலமர்ந்து அவரிடம் நம்பிக்கை வைத்து அன்புடனளித்தல், அன்பின்றியளித்தல், இனிய முகத்துடனளித்தல், வெட்கத்துடனளித்தல், பயத்துடனளித்தல், ப்ரதிக்ஞையுடனளித்தல், ஆகியவைகளையும் செய்ய வேண்டும். எப்போதாவதுனக்கு காரியத்திலோ, நடத்தையிலோ, உபாஸனையிலோ, ஞானத்திலோ, எவ்விதமான சந்தேகம் வரினும், விசாரசீல, பக்ஷபாதாஹித யோகிகளின் தர்மயுக்த காரியங்களைக் கண்டு உன் சந்தேகத்தை நீக்கிக்

கொண்டு அவர்களின்படி நீயும் நடந்து வா. இதுவே உனக்கு கட்டளை, கடமை, உபதேசம் ஆகும். இவைகள் வேத, உபநிஷதங்களின் கற்பனையாகும்." இதுபோலவே சகலரும் வசிக்கவேண்டும்.

अकामस्य क्रिया काचिद् दृश्यते नेह कर्हिचित् ।
यद्यद्धि कुरुते किञ्चित् तत्तत्कामस्य चेष्टितम् ॥

(மனு—2-4).

ஆசையற்ற புருடர்களின் கண்களில் வெட்கம் தென்படல் கூட மிக அறிதுயென மனிதர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இதனால் யார் என்ன சிறிய காரியம் செய்தபோதிலும் அதற்கு ஓர் ஆசையே காரணமாகுமென நிச்சயமாகிறது.

आचारः परमो धर्मः श्रुत्युक्तः स्मार्त्त एव च ।
तस्मादस्मिन्सदा युक्तो नित्यं स्यादात्मवान् द्विजः ॥ १ ॥
आचाराद्विच्युतो विप्रो न वेदफलमश्नुते ।
आचारेण तु संयुक्तः संपूर्णफलभाग्भवेत् ॥ २ ॥

(மனு—1—108, 109.)

பேசுதல், கேட்டல், பிறருக்குச்சொல்லுதல், கற்றல், கற்பித்தலாகிய சகலமும் வேத, வேதானுகூலஸ்மிருதிகளில் சொல்லியுள்ள தர்ம சம்பந்தத்திற்கு ஒத்ததாகவே யிருக்க வேண்டும். (1). ஏனென்றால் தர்மாசாணத்தினின்றும் தவறுபவன் வேததர்மங்களாகிய பலன்களை அனுபவிக்க முடியாது. வித்தை கற்று தர்மத்தின் படி ஒழுகுபவன் சம்பூர்ண சுகத்தைப் பெறுகின்றான் (2).

योऽवमन्येत ते मूले हेतुशास्त्राश्रयाद् द्विजः ।
स साधुभिर्बहिष्कार्यो नास्तिको वेदनिन्दकः ॥

(மனு — 2-11).

வேதங்களேயும் வேதானுகூலமாய் எழுதப்பட்டுள்ள நூல்களேயும் அவமானிப்பவன் வேதநிந்தகனுகிய நாஸ்திகனுகும். அவனே சமூகத்தினின்றும், தேசத்தினின்றும் விலக்கவேண்டும். ஏனென்ருல்—:

वेदः स्मृतिः सदाचारः स्वस्य च प्रियमात्मनः ।
एतच्चतुर्विधं प्राहुः साक्षाद्धर्मस्य लक्षणम् ॥

(மனு—2.-12)

வேத, ஸ்மிருதி, வேதானுகூலமாய்ச் சொல்லியுள்ள மனுஸ்மிருதியாதி சாஸ்த்திர, சத்புருடர்களின் ஆசார, வேதங்களின்மூலமாய் கடவுளாலருளப்பட்ட கார்யங்கள், ஒவ்வொருவரின் ஆத்மாவும் இச்சிப்பது, ஆகிய இன்னுன்கும் தர்மத்தின் லக்ஷணங்களாகும். இதிலிருந்து தர்ம அதர்மங்களே நிச்சயிக்கமுடியும். பக்ஷபாதமின்றி நியாயமான முறையுள்ள கர்மம் தர்மமெனப்படும். இதற்கு விரோதமானவைகள் அதர்மமாகும்.

अर्थकामेष्वसक्तानां धर्मज्ञानं विधीयते ।
धर्मं जिज्ञासमानानां प्रमाणं परमं श्रुतिः ॥

(மனு—2-13)

(அர்த்த) பொன்ரத்தினங்கள் (காம) பெண்களேச்சேரல் முதலியவைகளில் ஆசைவைக்காதவனுக்கே தர்மம் என்பதின்

அறிவு உண்டாகிறது. தர்மத்தினறிவு வேண்டுமாயின் வேதங்களின் மூலமாய் அறியலாம். ஏனென்றால் தர்மாதர்ம நிச்சயங்களின்றி வேதங்களைச் சரிவர அறிந்து கொள்ள முடியாது.

இவ்வாறு ஆசார்யன் தன் சீடர்களுக்கு உபதேசிக்க வேண்டும். இவ்வாறே அரசன், க்ஷத்ரியன், வைஸ்யன், சூத்திரன் முதலியவர்களுக்கும் உபதேசிக்கவேண்டும். ஏனென்றால் ப்ராம்மணனுடைய தொழிலாவது கல்வி கற்று பிறருக்குங் கற்பித்தலேயாகும். மற்றவர்களும் இதே தொழிலை மேற்கொண்டால் வித்தை, தர்மம், ராஜ்யம், தனம் முதலியவைகள் விருத்தியாக வழியில்லாமற் போய்விடும். அதனால் ப்ராம்மணன் கற்றல் கற்பித்தலை கைக்கொண்டு மற்றவர்களின் உதவிகொண்டு ஜீவித்துவரவேண்டும். இவ்விதமின்றி மற்றவர்களின் ஆதீனர்களாய், மற்றவர்களுக்குக் கட்டளையிடுபவர்களாய், சரிவர குற்றத்தை தண்டிக்காதவர்களாய் ப்ராம்மணர்கள் ஆய்விட்டதினாலேயே சகலவர்ணமும் படுகுழியில் விழுந்து நாசமடைந்துகொண்டிருக்கின்றன. மற்றவர்ணத்தவர்களும் வித்தை கற்க முயற்சித்தால் ப்ராம்மணர்கள் அதற்குமேல் கற்க ஆரம்பிக்கிறார்கள். ஆனாலும் மற்ற வித்வான்களிடை இவர்களின் பொய்வார்த்தைகள் செல்வதில்லை. மற்ற வர்ணத்தவர்கள் வித்வான்களாக இல்லாவிடின் இவர்கள் மனம்போனவாறு நடந்து அதையே மற்றவர்களுக்குங் கற்பிக்கிறார்கள். இதனால் ப்ராம்மணர்கள் உண்மையில் தங்கள் மேன்மையை விரும்புவார்களாயின் மற்ற வர்ணத்தவர்களுக்கு உண்மையான கல்வியை கற்பிக்க வேண்டும். ஏனென்றால் மற்ற வர்ணத்தவர்களால் தான்

தர்மம், ராஜ்யம், செல்வம் முதலியவைகள் விருத்தியடைய முடியும். அவர்கள் எப்போதும் பிச்சைஎடுத்தலைச் செய்வதில்லை. அதனாலேயே அவர்கள் வித்யாப்யாசத்திலும் பக்ஷபாதமில்லாதவர்களாகின்றார்கள். எப்போது சகலரும் கற்றவர்களாய்விட்டார்களோ அப்போது யாரும் கெட்ட ஆசாரங்களைச் செய்யவேமாட்டார்கள். இதனால் என்ன ஏற்படுகிறது? க்ஷத்ரியாதிகளால் காப்பாற்றப்படவேண்டியவர்கள் ப்ராம்மணர்கள். ப்ராம்மணர், சந்நியாசிகள் முதலியவர்களைக் காப்பாற்றி அவர்களின் சொற்படியே ஒழுகிவரவேண்டியவர்கள் மற்றவர்கள். இதனால் சகல ஆண், பெண் சமூகங்களிலும் கல்வியை கட்டாயம் உண்டாக்கவேண்டும். கற்று கற்பிப்போர்களின் திறமையை ஐந்துவித பரீட்சைகளால் பரீட்சிக்கலாம். (1) கடவுளின் குண, கர்ம, ஸ்வபாவங்களில் வேதானுகூலமானவைகள் மெய். மற்றவைகள் பொய். (2) சிருஷ்டிக்கிரமத்திற்குச் சரியான காரியநடப்புகள் உண்மை. அதற்கு மாறானது பொய். உதாரணமாக ஒருவன் "தாய், தகப்பன் சேர்க்கையில்லாமலேயே இக் குழந்தை பிறந்தது" எனச் சொன்னால் இது சிருஷ்டிக்கிரமத்திற்கு மாறுபட்டிருப்பதால் இது பொய் எனத் தீர்மானிக்கலாம். (3) (ஆப்த) தர்மவித்வான், சத்யவாதி, கபடமிலான் இவர்களின் சேர்க்கையாலுண்டான உபதேசங்களுக்கு அனுகூலமானவை உண்மை. அதற்கு மாறுபட்டவைகள் பொய். (4) தனக்கு யார் எதைப் புரிந்தால் நன்மையாகவும், தீமையாகவும் ஏற்படுமோ அவைகளை பிறருக்கு நாம் புரியும்போது அவர்களுக்கது நன்மை தீமைகளை யளிக்குமென அறிந்து, நாம் சதா பிரியத்தையே விரும்புகிறோ

மாதலால் நாம் பிறருக்குப் புரிவதுமவர்களுக்குப் பிரியமான தாகவே இருக்கும்படிப் புரியவேண்டும். (5) எல்லா விஷயங்களும் கீழ்வரும் அத்தாட்சிகளுக்கொத்ததாக இருக்க வேண்டும். அத்தாட்சிகள் 8 வகைப்படும். (1) ப்ரத்யக்ஷம், (2) அனுமானம், (3) உபமானம், (4) சப்தம், (5) ஐதிஹ்யம், (6) அர்த்தாபத்தி, (7) சம்பவம், (8) அபாவம்.

(1) इन्द्रियार्थसन्निकर्षोत्पन्नं ज्ञानमव्यपदेश्यमव्यभिचारि व्यवसायात्मकं प्रत्यक्षम् ॥ (நியாயசூத்திரம் 1-1-4).

காது, தோல், கண், நாக்கு, மூக்கு இவைகளின் சப்த, ஸ்பர்ஶ, ரூப, ரச, கந்தங்களுடன் மாறுதலில்லாத சம்பந்த மேற்படுபவைகள், இந்திரியங்களுடன் மனது, மனதுடன் ஆத்மாவின் சம்பந்தத்தால் எற்படும் அறிவு இவைகளை ப்ரத்யக்ஷம் என்று சொல்லப்படும். ஆனால் வெறும் அடையாளங்களால் மாத்திரம் ஏற்படுவது அறிவல்ல. உதாரணம்—: ஒருவன் மற்றவனைப்பார்த்து "நீ நீர் கொண்டுவா" என்று சொன்னான். மற்றவன் அதைக்கொண்டு வந்து அவன் அருகில் வைத்து "இதோ நீர்" என்று சொன்னான். இங்கே "நீர்" எனும் இரண்டெழுத்துக்களின் அடையாளங்களை நீர் கேட்டவன் பார்ப்பதில்லை. ஆனால் நீர் என்ற அடையாளத்தின் பொருள் இதுதானா என்று பார்க்கின்றான். சப்தத்தால் மாத்திரம் உண்டான அறிவு "சப்தப்ரமாண"த்திற் சேரும். "அவ்யபிசாரி"—: ஒருவன் இரவில் ஓர் தூணைப்பார்த்து மனிதன் என நினைக்கின்றான். ஆனால் வெளிச்சம் வந்தவுடன் பார்த்தபோது அவன் நினைத்த

மனிதன் எனும் நினைவுமாற தூண் என அறிகின்றான். இவ்வாறு நாசமாய்விடும் அறிவு "அவ்யபிசாரி" யெனப் படும். இதை ப்ரத்யக்ஷமென்று சொல்லமுடியாது. "வ்யவசாயாத்மக"—: ஒருவன் தூரத்திலுள்ள மணலைப்பார்த்து "இது மணலா அல்லது நீர் தானா?" என்றும் மற்றொருவன் தூரத்தில் நின்றுள்ள ஒருவனைப் பார்த்து "அங்கே நிற்பது ராமனா கோவிந்தனா?" என்றும் கேட்கின்றான். எதுவரை ஒன்று நிச்சயிக்கப்படவில்லையோ அதுவரை அது ப்ரத்யக்ஷ ஞான மாகாது. ஆனால் எது "அவ்யபதேஶ்ய, அவ்யபிசாரி, நிச்சயாத்மக" அறிவோ அதுவே ப்ரத்யக்ஷம் எனச் சொல்லப்படும்.*

(2) அனுமானம்—:

अथ तत्पूर्वकं त्रिविधमनुमानं पूर्ववच्छेषवत्सामान्यतो दृष्टञ्च ॥

ஒரு பொருளை ஒருவிடத்தில் ஒரு காலத்தில் ப்ரத்யக்ஷமாக அனுபவித்தபின் அதே பொருளை மற்றோர் தூரதேசத்தில் கண்ட போது அதன் அம்சங்களைக் கொண்டு முன்னனுபவத்தால் அதை அறிதல். குழந்தையைப் பார்த்தவுடன் தாய் தகப்பன்மார்களையும், மலைகளில் உண்டாகும் புகையைக் கண்டு நெருப்பையும், உலகத்தின் சுகதுக்கங்களைக் கண்டு

---

*குறிப்பு:—சந்தேகத்திற்கிடமான "போல" "தானோ" என்ற நிலையில் அறியப்படுவனவும், பெயருக்குத்தகுந்த பொருளை நேரில் பார்க்கப்படாதனவும் ப்ரத்யக்ஷமல்ல. ஆனால் இந்திரியங்களினுதவியால் நன்கு அறிந்த பொருளின் அறிவே ப்ரத்யக்ஷமாகும்.

7

பூர்வஜன்மத்தையும் அறிந்துக்கொள்ளலாம். இவ்வனுமானம் மூன்று விதப்படும். (1) "பூர்வவத்" மேகத்தைப் பார்த்து மழையையும், கலியாணத்தைப் பார்த்து குழந்தைப்பேற்றையும், கல்விகற்கும் மாணவனைப்பார்த்து அவன் உத்யோகம் செய்யப்போவதையும் அறிதல். இவ்வாறு காரணத்தைக் கொண்டு காரியத்தை அறிதல் "பூர்வவத்" ஆகும். (2) "சேஷவத்" காரியத்தைப் பார்த்து காரணத்தை நிச்சயித்தல். நதியின் ப்ரவாகத்தைப் பார்த்து மழை பெய்திருக்கிறது யெனவும், புத்திரனைப் பார்த்து தகப்பனையும், ஸ்ருஷ்டியைப் பார்த்து அநாதிகாரணத்தையும் அதன் கர்த்தாவான கடவுளையும், பாப புண்ணிய நடத்தைகளைக் கண்டு சுகதுக்கங்களையும் அறிதல். இதற்கு "சேஷவத்" என்று பெயர். (3) "ஸாமான்யதோத்ருஷ்ட" கார்ய காரண மிரண்டுமின்றியும் ஒன்று நடைபெற்றதை அறிதல். ஒருவிடத்தில் பார்த்த ஒருவனை மற்றோரிடத்தில் கண்டால் அவன் காரியத்தையும் காரணத்தையும் அறியாத போதிலும் அவன் நடந்தோ மற்ற வண்டிகளின் சாதனங்களைக் கொண்டோ இங்கு வந்திருக்கவேண்டு மென அறிதல். இதனால் ஒருவன் மற்றோரிடத்திற்குப் போக ப்ரயாணம் என்ற சாதனத்தை உபயோகித்தேயாக வேண்டும் என நிச்சயித்தல். அனுமானம் என்றால்—:

"प्रत्यक्षस्य पश्चान्मीयते ज्ञायते येन तदनुमानम्" ॥

ப்ரத்யக்ஷத்திற்குப் பின் உண்டானது. எனின் புகையைக்கண்டாலல்லது பார்க்காத நெருப்பை அறியமுடியாது. இதனால் புகையைக்கண்டு நெருப்பை நிச்சயித்தல் அனுமானம்.

(3) உபமானம் :—

प्रसिद्धसाधर्म्यात्साध्यसाधनमुपमानम् ॥

(ந்யாயசூத்.1-1-6).

நன்கு அறிந்த ப்ரத்யக்ஷத்துடன் கூடின முடியக்கூடிய சாத்யம். எனின் முடியக்கூடியவைகளை அறிய ஏற்பட்ட சாதனம் "உபமானம்".

"**उपमीयते येन तदुपमानम्**"—:ஒருவன் தன் வேலைக் காரனைப் பார்த்து "நீ சுந்தரனை அழைத்து வா" எனச் சொல் கின்ருன். அதற்கவன் "நான் அவனை யெப்போதும் பார்த்ததில்லை" எனப் பதில் சொல்கின்ருன். அப்போதவனின் எஜமானன் "ராமநாதன் எப்படியிருக்கின்ருனே அப்படியே தான் சுந்தரனுமிருப்பான்" எனச் சொல்கின்ருன். (எப்படி இந்த வெண்பசு இருக்கின்றதோ அப்படியேதான் அந்த நீலநிறப்பசுவுமிருக்கும்). பிறகு அவ்வேலைக்காரன் குறித்த விடத்திற்குச்சென்று ராமநாதனைப்போலிருக்கும் அங்குள்ள ஒருவனைக்கண்டு இவனே சுந்தரன் என நிச்சயித்துக்கொண்டு அவனை அழைத்துவருகிருன். (காட்டில் நீலவர்ணத்தில் பசுவைப்போலிருக்குமொரு மிருகத்தைக்கண்டு இதுவே நீல நிறப்பசுவென நிச்சயித்தல்).

(4) ஶப்தப்ரமாணம் —:

आप्तोपदेशः शब्दः ॥ (ந்யாயசூத். 1-1-7).

(ஆப்த) பூர்ணவித்வான், தர்மாத்மா, பரோபகாரப்ரியன், ஸத்யவாதி, புருஷார்த்தி, இந்திரியங்களை வென்றவன் இவர்

கள் எவ்விதம் தங்கள் ஆத்மாவில் அறிகிறார்களோ; அவர்கள் எவ்விதம் பிறருக்கு சுகத்தைச் செய்கின்றார்களோ, அவர்களின் கதைகளையும் வார்த்தைகளையுமறிந்து அதன்படி நடத்தல் மனிதர்களுக்கு மேன்மையைத் தரும். அவ்வாறு யின் பூமிமுதல் கடவுள் பரியந்தமுள்ள சகலத்தின் அறிவையும் சரிவரச் சொல்லியுள்ளது எது? அதுதான் வேதம். அதனால் அதையே "சப்தப்ராமாணம்" ஆகக் கொள்ள வேண்டும்.

(5) ஐதிஹ்ய—:

न चतुष्ट्वमैतिह्यार्थापत्तिसम्भवाभावप्रामाण्यात्॥

(ந்யாயசூத் 2-2-1).

(ஐதிஹ்ய) இவ்வாறு இந்தப் பொருள் முன் பிறந்தது. இப்போது இவ்வாறு செய்யப்பட்டது. எனின் பெரியோர்கள் ஜீவியசரித்திரம் "ஐதிஹ்யம்" ஆகும்.

(6) அர்த்தாபத்தி—:

अर्थादापद्यते सा अर्थापत्तिः केनचिदुच्यते "सत्सु घनेषु वृष्टिः सति कारणे कार्य्यं भवति" इति। किमत्र प्रसज्यते? असत्सु घनेषु वृष्टिरसति कारणे च कार्य्यं न भवति॥

ஒருவன் மற்றவனைப் பார்த்து "மேகமிருப்பதால் மழை பெய்யும்" என்கின்றான். (காரணத்தினால் காரியத்தை அறிதல்). "மேகமில்லாமலே மழை பெய்தது" என்றால் இதற்கு காரணமில்லாமையாலே இது பொய் என நிச்சயிக்கலாம். காரணமின்றி காரியம் நடைபெறாது.

(7) ஸம்பவம்—:

"सम्भवति यस्मिन् स सम्भवः"

"தாய்தகப்பனின்றி குழந்தை பிறந்தது, இறந்த பிணம் பிழைத்தெழுந்தது, மலை பறந்தது, கடலில் கல் மிதங்கிற்று, சந்திரன் சுக்கல் சுக்கலாய் விட்டான், கடவுள் அவதாரம் எடுத்தார், மனிதன் சிங்கமானான், அவன் மகனுக்கும் மகளுக்கும் கலியாணம் நடந்தது" இவைகளெல்லாம் நடைபெற முடியாத காரியங்கள்.

(8) அபாவம்—:

न भवन्ति यस्मिन् सोऽभावः ॥

"யானையைக் கொண்டுவா" என்கின்றான் ஒருவன். சொன்னவிடத்திலே யானையில்லாமையால் மற்ற ஓர் இருக்குமிடத்திலிருந்து யானையைக் கொண்டு வருகிறான்.

இவ்வெட்டும் ப்ரமாணங்களாகும். இவைகளில் சப்தத்தில் ஐதிஹ்யத்தையும், அநுமானத்தில் அர்த்தாபத்தியையும், சம்பவத்தில் அபாவத்தையும் சேர்த்துக் கணக்கிட்டால் நான்கு ப்ரமாணங்களாகின்றன. இவ்விதமான ஐவித பரீட்சைகளிலேயே மனிதர்கள் சத்யாசத்யத்தை அறியமுடியும். மற்றவைகளால் முடியாது.

धर्मविशेषप्रसूताद् द्रव्यगुणकर्मसामान्यविशेषसमवायानां पदार्थानां साधर्म्यवैधर्म्याभ्यां तत्त्वज्ञानान्निःश्रेयसम् ॥

(வைசேஷிகம்—1-1-4)

மனிதர்கள் தர்மங்களைச் சரிவர அனுஷ்டிப்பதால் பவித்திரமடைந்து "ஸாதர்ம்ய" சரியான தர்மம் எனின் பூமி ஜடமானது, ஜலமும் ஜடமானதென்றும், "வைதர்ம்ய" பூமி கடினமானது, ஜலம் மிருதுவானது யென்றும் இம்மாதிரியான பொருள்களின் குண, கர்ம, சாமான்ய, விசேஷ, ஸமவாய ஆகிய ஆறுவித பதார்த்த தத்வக்ஞானங்களால் "நி:ஸ்ரேயஸம்" மோக்ஷத்தை யடைகிறார்கள்.

पृथिव्याऽपस्तेजोवायुराकाशं कालो दिगात्मा मन इति द्रव्याणि ॥

(வைசேஷிகம்—1-1-5).

பூமி, ஜலம், ஒளி, காற்று, ஆகாயம், காலம், திசை, ஆத்மா, மனம் இவ்வொன்பதும் திரவியங்கள்.

क्रियागुणवत्समवायिकारणमिति द्रव्यलक्षणम् ॥

(வைசேஷிகம்—1-1-15).

"क्रियाश्च गुणाश्च विद्यन्ते यस्मिस्तत् क्रियागुणवत्"

செய்யப்பட்ட குணம், கேவலம் தானாக உண்டான குணம் எவைகளுக்குண்டோ அவைகள் திரவியமெனப்படும். அவைகளில் பூமி, ஜலம், ஒளி, வாயு, மனம், ஆத்மா இவ்வாறு திரவியங்களும் செய்யப்பட்ட குணமுடையவைகள். ஆகாயம், காலம், திசை இம்மூன்றும் செய்யப்படாத குணமுடையவைகள். (ஸமவாயி) "**समवेतुं शीलं यस्य तत् समवायी, प्राग्वृत्तित्वं कारणं समवायि च तत् कारणं च समवायिकारणम्**". "**लक्ष्यते येन तल्लक्षणम्**".

சேருவதற்கு ஸ்வபாவத்துடன் கூடின காரியத்தின் காரணம் பூர்வகாலத்திலானவைகளை திரவியம் எனப்படும். அவைகளால் லக்ஷ்யம் அறியப்படுகிறது. கண்களால் ரூபத்தையறிதல் லக்ஷணமெனப்படும்.

रूपरसगन्धस्पर्शवती पृथिवी ॥ (வைசேஷிகம்—2-1-1).

ரூப, ரச, கந்த, ஸ்பர்சங்களையுடையது பூமி. ரூப, ரஸ, ஸ்பர்சம் இம்மூன்றும் பூமிக்கு அக்னி, ஜலம், வாயு இவைகளின் சேர்க்கையாலுண்டானதாகும்.

व्यवस्थितः पृथिव्यां गन्धः ॥ (வைசேஷிகம்—2-2-2).

பூமியில் உள்ள கந்தம் சுபாவமானதாகும். அவ்வாறே ஜலத்தில் ரசம், அக்னியில் ரூபம், வாயுவில் ஸ்பர்சம், ஆகாயத்தில் சப்தம் சுபாவமானதாகும்.

रूपरसस्पर्शवत्य आपो द्रवाः स्निग्धाः ॥
(வைசேஷிகம்—2-1-2).

ரூப, ரச, ஸ்பர்ச குணங்களுடைய திரவம் சுந்திரமான ஜலமாகும். ஆனுல் இவைகளில் ரசம் ஸ்வபாவமானது. ரூபமும் ஸ்பர்சமும் அக்னி வாயுக்களின் சேர்க்கையாலுண்டானது.

अप्सु शीतता ॥ (வைசேஷிகம்—2-2-5).

ஜலத்தில் குளிர்மையும் ஸ்வபாவமானதாகும்.

तेजो रूपस्पर्शवत् ॥ (வைசேஷிகம்—2-1-3.)

ஒளிக்கு ரூபம், ஸ்பர்சம் ஆகிய இரண்டு குணங்களுண்டு. இதில் ரூபம் ஸ்வபாவமானது, ஸ்பர்சம் வாயுவின் சேர்க்கையாலுண்டானது.

स्पर्शवान् वायुः ॥ (வைசேஷிகம்—2-1-4).

ஸ்பர்ச குணம் வாயுவிற்குண்டு. ஆனால் இதிலும் உஷ்ணம், குளிர், ஒளி இவைகளும் ஜலத்தின் சேர்க்கையால் ஏற்பட்டது.

ते आकाशे न विद्यन्ते ॥ (வைசேஷிகம்—2-1-5).

ரூப, ரச, கந்த, ஸ்பர்சங்கள் ஆகாயத்தில் இல்லை. ஆனால் சப்தம் மாத்திரம் ஆகாயத்தின் குணமாகும்.

निष्क्रमणं प्रवेशनमित्याकाशस्य लिङ्गम् ॥
(வைசேஷிகம்—2-1-20).

பிரவேசித்தல், வெளிப்படுதல் இவ்விரண்டும் ஆகாயத்தின் குறிகளாகும்.

कार्य्यान्तराप्रादुर्भावाच्च शब्दः स्पर्शवतामगुणः ॥
(வைசேஷிகம்—2-1-25).

ப்ருதிவியாதி கார்யங்களால் கலைக்கப்படமுடியாததலால் சப்தஸ்பர்சகுணசாலிகளாகிய பூமியாதிகளுக்கு குணமில்லை. ஆனால் சப்தம் ஆகாயத்தின் குணமேயாகும்.

अपरस्मिन्नपरं युगपच्चिरं क्षिप्रमिति काललिंगानि ॥
(வைசேஷிகம்—2-2-6).

முன்பு பின்பு (யுகபத்) ஒருமுறை (சிரம்) நீண்டது (க்ஷிப்ரம்) சிக்கிரம் இத்யாதி ப்ரயோகங்களையுடையது காலம் ஆகும்.

नित्येष्वभावादनित्येषु भावात्कारणे कालाख्येति ॥

(வைசேஷிகம்—2-2-9).

நித்ய பதார்த்தங்களில் இல்லாமல், அநித்தியங்களிலிருப்பதால் காரணத்திலும் காலத்தின் குறியுண்டு.

इत इदमिति यतस्तद्दिश्यं लिङ्गम् ॥

(வைசேஷிகம்—2-2-10).

இங்கிருந்து இது கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, மேல், கீழ் எனும் வ்யவகாரம் எதில் ஆகிறதோ அதற்கு திசையென்று பெயர்.

आदित्यसंयोगाद् भूतपूर्वाद् भूताच्च प्राची ॥

(வைசேஷிகம்—2-2-14).

எந்தப் பக்கம் முதலில் சூரியனின் சேர்க்கையிருந்தது, இருக்கிறது, இருக்கும், அந்தப் பக்கத்தை கிழக்குயெனச் சொல்வர். எங்கு சூரியன் மறையுமிடமோ அப்பக்கத்தை மேற்குயெனச் சொல்வர். கிழக்கு முகத்தனாய் நின்ற மனிதனின் வலதுகைப் பக்கம் தெற்கெனவும், இடதுகைப் பக்கம் வடக்கெனவும் சொல்வர்.

एतेन दिगन्तरालानि व्याख्यातानि ॥

(வைசேஷிகம்—2-2-16.)

கிழக்குமேற்கின் மத்ய பாகம் (ஆக்னேயம்) தெற்கு மேற்கின் மத்தி (நைருதி) தென்மேற்கு, மேற்கு வடக்கின் மத்தி (வாயவி) வடமேற்கு, வடக்கு கிழக்கின் மத்தி (ஐஸானி) வடகிழக்கு எனவும் சொல்லப்படும்.

इच्छाद्वेषप्रयत्नसुखदुःखज्ञानान्यात्मनो लिङ्गमिति ॥

(ந்யாயசூத்— 1-10).

(இச்சை) விருப்பு, (த்வேஷ) வெறுப்பு, (ப்ரயத்ன) முயற்சி, சுகம், துக்கம். (க்ஞான) அறிவு இக்குணங்களையுடையது ஜீவாத்மாவாகும். வைசேஷிகத்தில்:—

प्राणाऽपाननिमेषाजीवनमनोगतीन्द्रियान्तर्विकाराः सुखदुः-खेच्छाद्वेषप्रयत्नाश्चात्मनो लिङ्गानि ॥ (வைசேஷிகம்—3-2-4).

(ப்ராண) வெளிக்காற்றையிழுத்தல் (அபான) உள்காற்றைவெளிவிடல் (நிமேஷ) கண்களை இமைத்தல் (உன்மேஷ) கண்களைமேலே எழுப்பல் (ஜீவன) உயிரைத்தரித்திருத்தல் (மன:) நினைத்தல் (கதி) இஷ்டப்படி சஞ்சரித்தல் (இந்த்ரிய) இந்திரியங்களால் விஷயங்களை கிரகித்து அதன்படி செய்தல் (அந்தர்விகார) பசி, தாகம், ஜுரம், பீடை ஆதி விகாரங்களையடைதல், சுக, துக்க, இச்சை, துவேஷம், ப்ரயத்னம், முதலிய சகலமும் ஜீவாத்மாவின் குறிகள் அல்லது குணகர்மங்களாகும்.

युगपज्ज्ञानानुत्पत्तिर्मनसो लिङ्गम् ॥

(ந்யாயசூத்—1-1-16)

ஒரே சமயத்தில் இரண்டு பதார்த்தங்களைக் கிரகிக்கமுடியாதது மனம் ஆகும். இதுவரை திரவியங்களின் ரூபங்களும் குறிகளும் சொல்லப்பட்டன. இனி குணங்களைச் சொல்லுவோம்.

रूपरसगन्धस्पर्शाः संख्यापरिमाणानि पृथक्त्वं संयोगविभागौ परत्वाऽपरत्वे बुद्धयः सुखदुःखे इच्छाद्वेषौ प्रयत्नाश्च गुणाः॥ (வைசேஷிகம்—1-1-6).

ரூபம், ரசம், கந்தம், ஸ்பர்ஸம், ஸங்க்யை பரிமாணம், இரட்டிப்புத்தன்மை (ப்ருதக்த்வம்), சேர்க்கை, பிரிவு, பரத்வம், அபரத்வம், புத்தி, சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு, முயற்சி, குருத்வம், இளகுதல், நட்பு, ஸம்ஸ்காரம், தர்மம், அதர்மம், சப்தம் ஆகிய இவ்விருபத்திநான்கும் குணங்களென்று சொல்லப்படுகிறதுகள்.

द्रव्याश्रयगुणवान् संयोगविभागेष्वकारणमनपेक्ष इति गुणलक्षणम् ॥ (வைசேஷிகம்—1-2-16).

திரவியங்களையடைந்திருத்தல், அன்னிய குணங்களைத் தரியாதிருத்தல், சேர்க்கைபிரிவுகளின் காரணமில்லாதிருத்தல் இவைகள் குணத்தின் குறிகள் ஆகும்.

श्रोत्रोपलब्धिर्बुद्धिनिर्ग्राह्यः प्रयोगेणाऽभिज्वलित आकाशदेशः शब्दः ॥ (மகாபாஷ்யம்).

காதுகளால் கேட்கப்படுவதும், புத்தியால் கிரகிக்கத்தகுந்ததும், பிரயோகத்தால் பிரகாசிப்பதும், ஆகாயத்தைத் தேசமாக உடையதும் ஆன பொருள் சப்தம் எனப்படும். கண்

களால் அறியப்படுவது ரூபம், நாக்கால் உணரப்படுவது ரசம், மூக்கால் உணரப்படுவது கந்தம், தோலால் உணரப்படுவது ஸ்பர்சம், ஒன்று இரண்டு எனுமாதி எண்ணிக்கைகளை உடையது சங்க்யை, நிறுக்கப்படுவது பரிமாணம், ஒன்றிலிருந்து ஒன்றுபிரிதல் ப்ருதக்த்வம், ஒன்றுடன் ஒன்று சேர்தல் ஸம்யோகம், ஒன்று மற்றொன்றுடன் சேரும்போது அதைப் பல துண்டுகளாகச்செய்வது விபாகம், இது அதன் மேலிருக்கிறது என்பது மேல், இது அதற்குக் கீழ் என்பது கீழ், நன்மை தீமைகளை அறிவது புத்தி, ஆநந்தத்தின் பெயர் சுகம், விசனத்தின் பெயர் துக்கம், ஆசை-ராகம், விரோதம்-துவேஷம், பலவிதமான பல புருடார்த்தம்-பிரயத்னம், பருத்தல். குருத்வம், நீராதல்—திரவத்வம், அன்பு—சிநேகம், பிறரின் சேர்க்கையால் வாசனையை அடைதல்-சம்ஸ்காரம், நியாய ஆசரணம்—தர்மம், அநியாய ஆசரணம்—அதர்மம் ஆக இவ்விருபத்தி நான்கும் குணங்கள்.

उत्क्षेपणमवक्षेपणमाकुञ्चनं प्रसारणं गमनमिति कर्माणि ॥
(வைசேஷிகம்—1-1-7).

மேலேசெல்லல் உத்க்ஷேபணம், கீழேசெல்லல் அவக்ஷேபணம், வெட்கப்படுதல் ஆகுஞ்சனம், பரவுதல் ப்ரஸாரணம், வருதல் போதல் கமனம், ஆக இவைகள் கர்மங்களெனப் படும். இனி கர்மத்தின் லக்ஷணங்களாவன:—

एकद्रव्यमगुणं संयोगविभागेष्वनपेक्षकारणमिति कर्मलक्षणम् ॥
(வைசேஷிகம்—1-1-17.)

"एकद्रव्यमाश्रय आधारो यस्य तदेकद्रव्यं न विद्यते गुणो यस्य यस्मिन् वा तद् गुणं संयोगेषु विभागेषु चापेक्षारहितं कारणं तत्कर्मलक्षणम् ॥" अथवा "यत् क्रियते तत्कम, लक्ष्यते येन तल्लक्षणम्, कर्मणो लक्षणं कर्मलक्षणम्" ॥

பொருள்களைச் சேர்ந்திருக்கும் குணத்திலும் வேறுபட்டதாய் சம்யோக, வியோகங்களில் அபேக்ஷை இல்லாத காரணமானது கர்மமெனப்படும்.

द्रव्यगुणकर्मणां द्रव्यं कारणं सामान्यम् ॥

(வைசேஷிகம்—1-1-18).

குண, கர்மங்களுக்குக் காரணப்பொருளாயிருக்கும் கார்யப்பொருள் சாமான்யப்பொருள் எனப்படும்.

द्रव्याणां द्रव्यं कार्यं सामान्यम् ॥

(வைசேஷிகம்—1-1-23).

திரவியங்களின் காரியதிரவியம் கார்யங்களின் செய்கையால் சகலத்தினும் சாமான்யமானது.

द्रव्यत्वं गुणत्वं कर्मत्वञ्च सामान्यानि विशेषाश्च ॥

(வைசேஷிகம்—1-2-5).

திரவியங்களில் திரவியம், குணங்களில் குணம், கார்யங்களில் கார்யம் இச்சகலமும் சாமான்யம், விசேஷம் என இருவகையாகச் சொல்லப்படும். ஏனெனில் திரவியங்களில் திரவத்தன்மை சாமான்யம். ஆனால் குணகர்மங்களால் திரவயத்வம் விசேஷமாகும். இவ்வாறே எல்லாவிடத்திலுமறிந்துகொள்ள வேண்டும்.

सामान्यं विशेष इति बुद्ध्यपेक्षम् ॥

(வைசேஷிகம்—1-2-3).

சாமான்யமும் விசேஷமும் புத்தியின் அபேக்ஷையால் சித்தியடைகிறது. மனிதக்கூட்டத்தில் மனுஷ்யத்வம் சாமான்யம், பசுத்வாதிகளால் அது விசேஷம். ஸ்திரீ புருஷ சாமான்யத்தில் ப்ராம்மண க்ஷத்ரிய சூத்திராதிகள் விசேஷம். இவ்வாறே முன்னதிலுமறியவேண்டும். ப்ராம்மணர்களில் ப்ராம்ணத்வம் சாதாரணம், க்ஷத்ரியாதிகளால் விசேஷம். இம்மாதிரியே சகலவிடங்களிலுமறிந்துகொள்ளவும்.

इहेदमिति यतः कार्यकारणयोः स समवायः ॥

(வைசேஷிகம்—7-2-26).

அவயவங்களில் அவயவீ, கார்யங்களில் கிரியையும் கிரியையாளனும், குணத்தில் குணவான், ஜாதியில் சமூஹம், கார்யகாரண இவைகளில் நித்ய சம்பந்தமுடையவைகளானதால் "சமவாய:" என்று சொல்லப்படும். மற்றோர் திரவியத்தின் சம்பந்தத்தையடைவது அநித்ய சம்பந்தமாகும்.

द्रव्यगुणयोः सजातीयारम्भकत्वं साधर्म्यम् ॥

(வைசேஷிகம்—1-1-6).

திரவிய குணங்களில் சமான ஐதிஹ்ய கார்ய ஆரம்பம் "சாதர்ம்யம்" ஆகும் பூமியில் ஜலத்வம் சாதர்ம்யம், பாத்திரம் முதலியவைகள் சாதர்ம்யமல்ல. இவ்வாறே ஜலத்தில் குளிர்ச்சி சாதர்ம்யம். ஆனால் உப்பு, தித்திப்பு முதலியவைகள் பூமியின் சம்பந்தத்தால் ஜலத்திற்குண்டானவை ஆதலால் அது சாதர்ம்யமல்ல.

द्रव्यगुणयोर्विजातीयारम्भकत्वं वैधर्म्यम् ॥

திரவிய குணங்களின் சமானமல்லாத கார்ய ஆரம்பம் "வைதர்ம்யம்" ஆகும். பூமியில் காய்தல் நனைதல் முதலியவை வைதர்ம்யம். நீரில் சுவை, வாசனை யிவைகள் வைதர்ம்யம்.

कारणभावात्कार्यभावः ॥ (வைசேஷிகம்—4-1-3).

காரணமிருப்பதாலேயே காரியமுமிருக்கிறது.

न तु कार्याभावात्कारणाभावः ॥ (வைசேஷிகம்—1-2-2).

கார்யத்தின் அபாவத்தினுல் காரணத்தின் அபாவம் உண்டாவதில்லை.

कारणाऽभावात्कार्याऽभावः ॥ (வைசேஷிகம்—1-2-1).

காரணமில்லாததினுல் கார்யம் ஒருபோதுமிருக்காது.

कारणगुणपूर्वकः कार्यगुणो दृष्टः ॥
(வைசேஷிகம்—2-1-24).

காரணத்தில் குணமிருப்பதுபோலவே கார்யத்திலுமுண்டு. பரிமாணம் இரண்டு விதமாகும்—:

अणु महदिति तस्मिन्विशेष भावाद्विशेषा भावाच्च ॥
(வைசேஷிகம்—7-1-11).

(அணு) சூக்ஷ்ம (மஹத்) பெரிது. த்ரஸரேணு (மிக மிகச்சிறிய அளவு) என்பது, லிக்ஷா (மற்றோர் சிறியஅளவு)

வைவிடச் சிறியது. ஆனால் த்வயணுகத் (மற்றோர் சிறிய அளவு)தைவிடப்பெரியது. அவ்வாறே மலையானது பூமியைவிடச்சிறியது. மாத்தைவிடப்பெரியதாகும்.

सदिति यतो द्रव्यगुणकर्मसु सा सत्ता ॥

(வைசேஷிகம்—1-2-7).

திரவிய, குண, கர்மங்களில் "சத்" சப்தம் சதா வசிக்கின்றது. எனின் "சத்திரவியம்—சத்குணம்—சத்கர்மம்" என்றால் நிகழ்கால சப்தம் சதா அதனுடன் இருக்கிறது.

भावोनुवृत्तेरेव हेतुत्वात्सामान्यमेव ॥

(வைசேஷிகம்—1-2-4).

சகலத்தினுடனும் தொடர்ந்து வசிப்பதாலே சத்தாரூப பாவத்தை "மஹாசாமான்யம்" எனச் சொல்லப்படும். இக்கிரமம் பாவரூப திரவியங்களுக்காகும். மற்று அபாவம் ஐந்து விதங்களாகும்.

क्रियागुणव्यपदेशाभावात्प्रागसत् ॥

(வைசேஷிகம்—9-1-1).

கிரியை, குணங்களின் விசேஷ நிமித்தத்தின் அபாவத்தினால் முன்பும் (அஸத்) இருக்கவில்லை. பானை ஆடை முதலியவைகள் அவ்வாறுவதற்கு முன்னிருந்ததில்லை. இதன் பெயர் ப்ராகபாவம் ஆகும்—இரண்டாவது—:

सदसत् ॥ (வைசேஷிகம்—9-1-2).

இருக்காது இனிமேலும் வாராது. ஆடை, பானைகள் எவ்வாறுநசித்துவிடுதல் நிச்சயமோ அவ்வாறான பாவனை "ப்ரத்வம்ஸாபாவம்" ஆகும்—மூன்றாவது—:

सच्चासत् ॥ (வைசேஷிகம்—9-1-4).

இருக்கும் இருக்காது "**अगौरश्वोऽनश्वो गौः**" இது குதிரைப்பசுவல்ல. பசுக்குதிரையுமல்ல. எனில் குதிரையில் பசுவின் பாவம் பசுவில் குதிரையின் பாவம் உண்டாகாது. குதிரையில் குதிரைபாவம் பசுவில் பசுபாவமே இருக்கும். இதற்கு "அன்யோன்யாபாவம்" எனச்சொல்வர்—நான்காவது—:

यच्चान्यदसदतस्तदसत् ॥

(வைசேஷிகம்—9-1-5).

முன்சொன்ன மூவித அபாவங்களினும் வேறாக இருப்பது "அத்யந்தாபாவம்" ஆகும் உதாரணமாக "நரசிம்ஹம்" எனின் மனிதனின் சிம்ஹத்வம், ஆகாயபுட்பம், மலடிமகன் இத்யாதிகள்—ஐந்தாவது—:

नास्ति घटो गेह इति सतो घटस्य गेहसंसर्गप्रतिषेधः ॥

(வைசேஷிகம்—9-1-10).

வீட்டில் குடம் இல்லை வேறு இருக்கின்றது. எனின் வீட்டினுடன் குடத்தின் சம்பந்தம் இல்லை என்பது பொருள். இவ்வைந்தும் அபாவங்களாகும்.

इन्द्रियदोषात्संस्कारदोषाच्चाविद्या ॥

(வைசேஷிகம்—9-2-10).

இந்திரியங்களின் ஸம்ஸ்காரங்களின் தோஷத்தால் அவித்யை உண்டாகிறது.

तद्दुष्टज्ञानम् ॥ (வைசேஷிகம்—9-2-11).

துஷ்ட—விபரீத—ஞானத்திற்கும் அவித்தை என்று பெயர்.

अदुष्टं विद्या ॥ (வைசேஷிகம்—9-2-12).

அதுஷ்ட—யதார்த்த—ஞானம் வித்தை யெனப்படும்.

पृथिव्यादिरूपरसगन्धस्पर्शा द्रव्या नित्यत्वादनित्याश्च ॥ (வைசேஷிகம்—7-12).

एतेन नित्येषु नित्यत्वमुक्तम् ॥ (வைசேஷிகம்—7-1-3).

கார்யரூபங்களான பூமி யாதி பொருள்கள், அவைகளில் ரூப, ரஸ, கந்த, ஸ்பர்ஶ, குணங்கள் ஆதி சகலமும் திரவியங்கள் அநித்யமடைவதால் அநித்யமாகிறது. இதனால் காரண ரூபமான பூமியாதி நித்யதிரவியங்களில் உள்ள கந்தாதி குணங்கள் நித்யமானதாகும்.

सदकारणवन्नित्यम् ॥ (வைசேஷிகம்—4-1-1).

தெரியப்படுவதாய், காரணமொன்றுமில்லாதது நித்யம் எனப்படும். எனின் " सदकारणवदनित्यम् " காரணத்துடனுய கார்யரூபகுணம் அநித்யமாகும்.

यस्येदं कार्यं कारणं संयोगि विरोधि समवायि चेति लैङ्गिकम् ॥ (வைசேஷிகம்—9-2-1).

இதற்கு இந்தக்காரிய மல்லது காரணமாகும், இத்யாதி சமவாயீ, ஸம்யோகீ, ஏகார்த்த சமவாயீ, விரோதி இவ்வாறு

நான்கு விதமான இலிங்கலிங்கிகளின் சம்பந்த ஞானமுண்டு. "ஸமவாயீ" எவ்வாறு ஆகாயம் பரிமாணமுடையதோ அவ் வாருனது. "ஸம்யோகீ" சரீரத்தின் தோலைப்போல் சதா சம்பந்தமுடையது. "ஏகார்த்த சமவாயீ" ஒரு அர்த்தத்தில் இரண்டைவைத்தல். "விரோதீ" வ்ருஷ்டியையடைபவன் வ்ருஷ்டியின் விரோதீ—"வ்யாப்தி"—:

नियतधर्मसाहित्यमुभयोरेकतरस्य वा व्याप्तिः ॥ निजशक्त्युद्भवमित्याचार्याः ॥ आधेयशक्तियोग इति पञ्चशिखः ॥

(சாங்க்யம்—5-19, 31, 32).

சித்தம் செய்வதும் செய்யப்படுவதுமாகிய இரண்டும், அல்லது ஒன்ருவது சாதனமாத்திரம் நிச்சயித்த சஹசார மாகும். (உடன் சரித்தல்) இதை "வ்யாப்தி" எனச்சொல் வர். புகை நெருப்பின் சஹசாரமாகும். அவ் வியாபித்த புகை அதன் நிஜ சக்தியால் உண்டாகிறது. புகையானது தூரதேசத்திலுண்டான போதிலுங்கூட அக்கினியில்லாமல் தானுக உண்டாயிருக்க முடியாது. இதன்பெயர் "வ்யாப்தி" யாகும். அக்கினியின் சேதன, பேதன சாமர்த்தியத்தால் ஜலம் ஆதி பொருள்கள் புகைரூபமாக வெளிப்படுகிறது. மகத்தத்வாதிகளால் ப்ரக்ருத்யாதிகளின் வியாப்தமும், அறிவாதிகளில் தர்மங்களின் வியாபகமும் "வ்யாப்தி" யெனப்படும். ஆதேய ரூபமானது சக்தி, சக்திமான் ஆதாரத்தின்ரூபமாகும்.

இம்மாதிரியான ப்ரமாணங்களைப் பரீட்சித்து படித்துப் படிப்பிக்கவேண்டும்.

முன்சொன்ன பரீட்சைகளை ஒவ்வொரு கிரந்தங்களுக்கும் செய்து பார்த்து இப்பரீட்சைகளுக்கு சரிவாநிற்கும் கிரந்தங்களை மாத்திரமே படித்துப்படிப்பிக்கவேண்டும். இன்றேல் சத்தியத்தை சத்தியமாக அறிந்து கொள்ளுதல் முடியாது.

लक्षणप्रमाणाभ्यां वस्तुसिद्धिः ॥

"**गन्धवती पृथिवी**" பூமி கந்தம் உடையதாகும். இம்மாதிரியானவைகள் லக்ஷணப்ரமாணம். இவைகளால் சத்யாஸத்ய பதார்த்தங்களை நிர்ணயிக்கவேண்டும். இதைத்தவிர மற்றவைகளால் முடியாது.

अथ पठनपाठनविधिः ॥

படித்துப்படிப்பிக்கவேண்டிய விதியைச் சொல்லுவோம்- முதலில் பாணினிமுனிவர்செய்த சிக்ஷையெனும் சூத்திரரூப நூலில் கண்டுள்ள விதிகளின்படி எழுத்துக்களைச் சரிவர உச்சரிக்கவேண்டும். உதாரணமாக "ப" எனுமெழுத்தை யெடுத்துக்கொள்வோம்: இவ்வெழுத்தானது இரண்டு உதடுகளையும் நன்கு சேர்த்துப் பிரிப்பதால் எற்படும் சப்தமாகும். இவ்வாறே மற்ற சப்தங்களின் உச்சரிப்புக்களையும் குழந்தைகளுக்கு ஆசாரியர்கள் சரிவர கற்றுக்கொடுக்கவேண்டும். இதன் பிறகு வ்யாகரணம் எனின் அஷ்டாத்யாயீயெனும் நூலின் சூத்திரங்களைக் கற்பிக்கவேண்டும். உதாரணமாக "**वृद्धिरादैच्**" எனும் சூத்திரமும் பின் அதன் பதச்சேத "**वृद्धिः, आत्, ऐच्**" ங்களையும் பின் சமாசங்(தொகை)களையும் உதாரணமாக "**आच्च ऐच्च आदैच्**", பிறகு அர்த்தங்

களையும் உதாரணமாக "**आदैचां वृद्धिसंज्ञा क्रियते**" எனின் ஆ ஏ, ஔ இம்மூன்றும் விருத்தியின் குறிகள். (கீ ஜாதி) "**तः परो यस्मात्स तपरस्तादपि परस्तपरः**" தகாரத்தை முன்புடையதும், தகாரத்திற்கு முன்பு வந்ததும் தபரம் ஆகும். இதனால் ஆவுக்குமுன்புள்ள த்-ம், த்-க்கு முன்னுள்ள ஐச்-ம் தபரங்களாகும். தபரத்தின் பிரயோஜனம் குறில் ப்லுதம் இவைகளுக்கு விருத்திக்குறிகள் இல்லை உதாரணம் (பாக:) இவ்விடத்தில் "பஜ்" தாதுவிலிருந்து "கஞ்" பிரத்யயத்தின் பரமாய் "க, ஞ்" ஆனது இக் குறியடைந்து லோபமாய் விட்டது. பிறகு "பஜ், அ" இங்கே ஜகாரத்தின் பூர்வ பகார உத்தர அகாரமானது வ்ருத்தியடைந்து ஆகாரமாயிற்று. மறுபடி "பாஜ்" ஆனது "ஜ்" "க்" ஆகி அகாரத்துடன் கூடி "பாக:" ஆயிற்று. இவ்வாறு ப்ரயோகமடைந்தது. "அத்யாயம்" இங்கே அதிபூர்வக "இங்" தாதுவின் குறில் இகாரத்தின் இடத்தில் "கஞ்" ப்ரத்யயத்தின் பரமாய் "ஐ" விருத்தியடைந்து ஆய் உடன் சேர்ந்து "அத்யாய:" ஆயிற்று. "நாயக:" இங்கே "நீங்" தாதுவின் தீர்க்க ஈகாரத்தின் ஸ்தானத்தில் "ண்வுல்" ப்ரத்யயத்தின்பரமாய் "ஐ" விருத்தியாகி ஆய் உடன் சேர்ந்து "நாயக:" ஆயிற்று. "ஸ்தாவக:" இங்கே "ஸ்து" தாது "ண்வுல்" ப்ரத்யயமடைந்து குறில் உகாரத்தின் இடத்தில் ஔ வ்ருத்தி, ஆவ் ஆதேசமாகி அகாரத்துடன்கூடி "ஸ்தாவக:" ஆயிற்று. "க்ருஞ்" தாதுவிலிருந்து முன்பு "ண்வுல்" பிரத்யயத்தில் "ல்" இக்குறியாகி, லோபமடைந்த "வு" ஸ்தானத்தில் "அக" ஆதேயமாய் "ரு" ஸ்தானத்தில் "ஆர்" வ்ருத்தியடைந்து 'காரக:' ஆயிற்று. இவ்விதமாகவே சூத்திரபாடம்

முழுவதும் குழந்தைகளுக்கு நன்றாகத் தெரியும்படி சுலபமான வழியில் கற்பிக்கவேண்டும். இவ்வாறு ஒருமுறை அஷ்டாத்யாயி படித்தபின் அர்த்தத்துடன் தாதுபாடத்தையும், பத்து லகாரங்களின் ரூபங்களேயும், சூத்திரங்களின் உத்சர்க்கங்களேயும், அபவாத சூத்திரங்களேயும் கற்பிக்கவேண்டும். இதற்குப் பின் உணாதிகண பாடத்தில் சகல சுபந்த (பெயர்ச்சொல்) களேயும் சரிவரக் கற்பித்து பின் இரண்டாவதாக சந்தேகம், சமாதானம், காரிகை, பரிபாஷை முதலியவைகளேயுங் கற்பித்த பின் அஷ்டாத்யாயியின் இரண்டாவது அனுவ்ருத்தியைக் கற்பிக்கவும். இதன் பிறகு மஹாபாஷ்யத்தைக் கற்பிக்கவும். அறிவாளிகளாயின் $1\frac{1}{2}$ வருடத்தில் அஷ்டாத்யாயியையும் $1\frac{1}{2}$ வருடத்தில் மஹாபாஷ்யத்தையுங் கற்பித்துவிடலாம். இவ்விலக்கண சாஸ்த்திரங்களேக் கற்கும்போதேற்படும் கஷ்டம் மற்ற சாஸ்த்திரங்களேக் கற்கும்போதேற்படுவதில்லே. சிலர் இம்மாதிரியான சுலபமான வழிகளேவிட்டு மிக்க கடினமான வழிகளேக் கையாள்கிறார்கள். இதன் பிறகு யாஸ்க முனிவரெழுதியுள்ள நிருக்தம் நிகண்டு இவைகளே அர்த்தத்துடன் 6 அல்லது 8 மாதங்களில் கற்பிக்கவும். மற்று நாஸ்திகர்களாலெழுதப்பட்ட அமரகோஶாதிகளேக் கற்பிக்கக்கூடாது. இதன்பிறகு பிங்கல முனிவரால் செய்யப்பட்ட சந்தோக்கிரந்தம் கற்பிக்கவும். இதில் வைதிக லௌகிக சந்தங்களின் ஞானமுண்டாகி பாட்டுகள் செய்யுந்திறமை உண்டாகிறது. இதை நான்கு மாதங்களில் கற்பித்துவிடலாம். வ்ருத்த ரத்னாகரம் முதலிய நூல்களேக் கற்பிக்கக்கூடாது. இதன் பிறகு மனுஸ்ம்ருதி, வால்மீகிராமாயணம், மஹாபாரதத்தில் வரும் விதுர நீதி முதலியவைகளே பதச்சேதம், பதார்த்தம்,

அன்வயம், விசேஷ்ய விசேஷணம், பாவார்த்தங்களுடனே கற்பிக்கவேண்டும். இவைகளை ஒரு வருடத்திற்குள் கற்பிக்க வேண்டும். இதன்பிறகு பூர்வமீமாம்சை, வைசேஷிகம், ந்யாயம், யோகம், சாங்க்யம், வேதாந்தம் முதலியவைகளை வித்வான்கள் எழுதின பாஷ்யங்களுடன் கற்பிக்கவேண்டும். ஆனல் வேதாந்த ஸூத்திரங்களைக் கற்பிப்பதன்முன் ஈஶ, கேன, கட, ப்ரஸ்ன, முண்டக, மாண்டூக்ய, ஐதரேய, தைத்ரீய, சாந்தோக்ய, ப்ருஹதாரண்யக ஆகிய 10 உபநிடதங்களையுங் கற்பிக்கவும். இதன்பிறகு 6 வருடங்களுக்குள்ளே ஐதரேய, சதபத, ஸாம, கோபத ஆகிய நான்கு ப்ராம்மணங்கள் சகிதமாய் நான்குவேதங்களின் ஸ்வரம், சப்தம், அர்த்தம், சம்பந்தம், க்ரியாசகிதம் கற்பிக்கவும்.

இதற்குப் பிரமாணம்:—

स्थाणुरयं भारहारः किलाभूदधीत्य वेदं न विजानाति योऽर्थम् । योऽर्थज्ञ इत्सकलं भद्रमश्नुते नाकमेति ज्ञानविधूतपाप्मा ॥ (நிருக்தம்—1-18).

வேதங்களின் ஸ்வரம் மாத்திரம் கற்று அர்த்தத்தைக் கற்காதவன் மரமானது பூ, காய், பழம் கொண்டிருந்து மதை அனுபவிக்காததைப் போலவும், மிருகங்களின் முதுகின்மேலுள்ள அருமையான பொருள்களின் தன்மையை அவைகள் தானக அனுபவிக்காததைப்போலவும் வீண்பளுவைச்சுமந்து கொண்டிருப்பவனேயாகும். ஆனல் அர்த்தத்துடன் வேதங்களைக்கற்றவன் சம்பூர்ண ஆநந்தத்தைப்பெற்று வேதாந்தத்தால் பெறும் நல்ல ஞானத்தால் பாபங்களை விலக்கியவனாய்

பவித்திரமான தர்மாசரணத்தை யுடையோனுய் சர்வானந்தத்தை அடைகிருன்.

**उतत्वः पश्यन्न ददर्शवाचमुत त्वः शृण्वन्न शृणोत्येनाम् ।
उतो त्वस्मै तन्वं विसस्रे जायेव पत्य उशती सुवासाः ॥**

(ருக்—10-71-4).

அவித்வான்கள் கேட்டுக்கொண்டிருந்தும் கேட்பதில்லே, பார்த்துக்கொண்டிருந்தும் பார்ப்பதில்லே, சொல்லிக்கொண்டிருந்தும் சொல்வதில்லே. எனின் அவித்வான்கள் இந்த வித்தையின் ரஹஸியத்தை அறிவதில்லே. சப்த அர்த்தங்களேயும், அதன் சம்பந்தங்களேயுமறிபவனுக்கு அவ்வித்தையே அழகிய ஆடையாபரணங்களாகிறது. பெண்ஜாதி தன் உடலே சகல ஆடையாபரணங்களாலுமலங்கரித்துக்கொண்டு தன் புருடனுக்கு இன்பமூட்டுவதுபோல வித்தையும் அதை சரிவர அறிந்த வித்வான்களுக்கு இன்பமூட்டுகிறது. அவித்வான்களுக்கு ஊட்டுவதில்லே.

**ऋचो अक्षरे परमे व्योमन् यस्मिन्देवा अधिविश्वे निषेदुः ।
यस्तन्नवेद किमृचा करिष्यति य इत्तद्विदुस्त इमे समासते॥**

(ருக்—1-164 39).

எந்த வ்யாபக, அவிநாச, ஸர்வோத்க்ருஷ்ட பரமேஸ்வரனில் சகல வித்வான்கள், பூமி, ஸூர்யாதி சகல கோளங்கள் நிற்கின்றன! எவனில் சகல வேதங்களின் முக்ய தாத்பர்யமிருக்கிறது, அந்த ப்ரம்மத்தை அறியாதவன் அவ்வேதாதிகளால் என்ன பலனே அடைவான்? இல்லே, இல்லே. ஆனல் வேதங்களேக்கற்று தர்மார்த்தயோகியாகி ப்ரம்மத்தை அறி

பவன் அக்கடவுளிடம் நின்று முக்தியெனும் பரமானந்தத்தை யடைகிறான். இதனால் எதைக் கற்றாலும் கற்பித்தாலும் அர்த்தத்துடன் கற்று கற்பிக்கவேண்டும். இம்மாதிரியாக வேதங்களைக் கற்றுக்கொடுத்தபின் சரக, ஸுஸ்ருத முதலிய முனிவர்களால் செய்யப்பட்ட ஆயுர்வேதத்தை கிரியை, சாஸ்திரம், சேதனம், பேதனம், லேபனம், சிகிச்சை, நிதானம, ஔஷதம், பத்ய, சரீர, தேச, கால, வஸ்து, குணம் இவைகள் சகிதமாக நான்கு வருடங்களுக்குள்ளாக கற்பிக்கவேண்டும். இதன் பிறகு தனுர் வேதம் இரண்டுவகைகளையும் [(1) அரசகார்யங்களில் சேனையை ஸ்தாபித்தல் முதல் சஸ்திர அஸ்திரப்ரயோகங்கள்வரை யுள்ளது. (2) மனிதர்களுடன் சண்டைபுரியும் மல்யுத்தம் முதலியவைகளைப்புரியும் விதங்களுள்ளது.] கற்பிக்கவேண்டும். இவ்விரண்டு வித்தைகளையும் நான்கு வருடங்களில் கற்பித்தபின் ஸ்வரம், ராகம், ராகிணீ, சமயம், தாளம், க்ராம, தான, வாதித்ய, ந்ருத்ய, கீத ஆதிகளின் விளக்கங்களைக்கொண்ட காந்தருவ வேதத்தையும் சாமவேத கானத்தையுங் கற்பிக்கவேண்டும். இதன்பிறகு நாரத சம்ஹிதை முதலான ஆர்ஷக்ரந்தங்களைக் கற்பிக்கவேண்டும். இதன்பிறகு பூமிமுதல் ஆகாயம்வரையுள்ள சகல பதார்த்தங்களின் குணம் செய்கை அதனாலாகும் பலன் முதலியவைகளைச் சொல்லியுள்ள சில்ப வித்தையெனும், அதர்வவேதத்தை அர்த்தத்துடனும் உதாரணங்களுடனும் கற்பிக்கவேண்டும். பிறகு வ்யாபார சம்பந்தமானவும், செல்வ சம்பந்தமானவும் வித்தைகளைக் கற்பிக்கவேண்டும். இதன்பிறகு பீஜகணிதம், அங்கம், பூகோளம், ககோளம், பூகர்ப்பவித்தை முதலியவைகளைக் கற்பிக்கும் சூர்யசித்தாந்தமாதிய ஜ்யோதிஷக்ரந்தங்

களையும் கற்பிக்கவேண்டும். இவைகளை இரண்டு வருடங்களில் கற்பிக்கவேண்டும். இதன்பிறகு சகலவிதமான கைத்தொழில், யந்திரத்தொழில்களையுங் கற்பிக்கவேண்டும். ஆனால் நக்ஷத்திரம், ஜன்மபத்திரம், ராசி, முகூர்த்தம் ஆதிகளின் பலன்களைச் சொல்லியுள்ள க்ரந்தங்களைக் கற்பிக்கக்கூடாது. இவ்வாறு விதிப்படி இருபது அல்லது இருபத்திரண்டு வருடங்களில் சகல வித்தைகளையுங்கற்பித்து மாணவர்களை க்ருதார்த்தர்களாக்கி சதா ஆனந்தசாலிகளாய் ஆக்கவேண்டியது மாதா பிதா ஆசாரியர்களின் கடமையாகும். இம்முறை தவறி கற்பித்தால் 20 வருடங்களில் வரும் வித்தை 100 வருடமானாலும் வாராது. ரிஷிகள் பெரிய வித்வான்களாகவும், சகலசாஸ்திரங்களையுமறிந்தவர்களாகவும் தர்மாத்மாக்களாகவுமிருந்தனர்களாதலால் அவர்களின் க்ரந்தங்களையே படிக்க படிப்பிக்கவேண்டும்.

பூர்வமீமாம்ஸைக்கு வ்யாசமுனி எழுதிய உரையையும், வைசேஷிகத்திற்கு கௌதமர் எழுதியதையும், ந்யாய சூத்திரத்திற்கு வாத்ஸ்யாயனர் எழுதியதையும், யோகசூத்திரத்திற்கு வ்யாசர் எழுதினதையும், சாங்க்யத்திற்கு பாகுரிமுனிவரெழுதியதையும், வேதாந்த சூத்திரத்திற்கு வாத்ஸ்யாயனர் எழுதியதையும் அல்லது பௌதாயனர் எழுதியதையும் படித்துப் படிப்பிக்கவேண்டும். இவ்வாறு நூல்களையும் கல்ப அங்கத்தில் சேர்த்து எண்ணவேண்டும். ருக், யஜுர், ஸாம, அதர்வமெனும் நான்கு வேதங்களும் ஈஸ்வரனால் செய்யப்பட்டதைப்போல ஐதரேய, சதபத, ஸாம, கோபத எனும் நான்கு ப்ராம்மண கிரந்தங்களும், சிக்ஷை, கல்பம், வ்யாகரணம், நிகண்டு, நிருக்தம், சந்தம், ஜ்யோதிஷம், ஆகிய 6

வேதங்களும், மீமாம்சையாதி 9 சாஸ்திரங்களும் வேதங்களின் உபாங்கங்களும், ஆயுர்வேத, தனுர்வேத, கந்தர்வவேத, அர்த்தவேதமாகிய நான்கு உபவேதங்களும் ஆகிய இவைகள் ரிஷி முனிவர்களால் செய்யப்பட்டவைகளாகும். இவைகளிலும் வேதவிரோதமானவைகளிருப்பின் அவைகளை விட்டுவிடவேண்டும். ஏனென்ருல் வேதம் கடவுளால் செய்யப்பட்டதானதால் ஸ்வத:ப்ரமாணமாகும். எனின் வேதத்திற்கு ப்ரமாணம் வேதமேயாகும். மற்ற கிரந்தங்கள் எல்லாம் பரத:ப்ரமாணமாகும். எனின் இவைகளுக்குப் ப்ரமாணம் வேதமேயாகும். வேதங்களின் விசேஷவ்யாக்யானம் ருக்வேதாதிபாஷ்யபூமிகாவில் பார்த்துக்கொள்ளலாம். இதிலும் இனிமேல் எழுதுவோமாக.

நீக்கிவிடவேண்டிய நூல்களை யெழுதுவோமாக :—
இலக்கணத்தில் காதந்த்ர, ஸாரஸ்வத, சந்த்ரிகா, முக்தபோத, கௌமுதீ, ஶேகர், மனோரமா ஆதிகள். கோசங்களில் அமர கோசாதிகள், சந்தகிரந்தங்களில் வ்ருத்தரத்னகராதிகள், சிக்ஷைகளில் " சிக்ஷாம்ப்ரவக்ஷ்யாமி பாணினீயம் மதம் யதா " இத்யாதிகள், ஜ்யோதிஷத்தில் சீக்ரபோத, முகூர்த்தசிந்தாமணியாதிகள், காவ்யங்களில் நாயிகாபேத, குவலயானந்த, ரகுவம்சம், மாக, கிராதார்ஜுனீயம் முதலியவைகள், மீமாம்ஸையில் தர்மஸிந்து, வ்ரதார்க ஆதிகள், வைசேஷிகத்தில் தர்கசங்கிரஹ ஆதிகள், ந்யாயத்தில் ஜாகதீசீ ஆதி, யோகத்தில் ஹடப்ரதீபிகா ஆதிகள், சாங்க்யத்தில் சாங்க்ய தத்வ கௌமுதியாதிகள், வேதாந்தத்தில் யோகவாசிஷ்டம், பஞ்சதசியாதிகள், வைத்தியத்தில் சாரங்கதர ஆதிகள், ஸ்மிருதிகளில் மனுஸ்மிருதியில் சில ஸ்லோகங்கள் மற்ற

சகல ஸ்மிருதிகள், சகல தந்த்ரக்ரந்தங்கள், சகல புராணங்கள், சகல உபபுராணம், துளசீதாஸ் செய்தராமாயணம், ருக்மணீமங்களாதிகள், சகல பாஷாக்ரந்தங்கள் இவைகள் எல்லாம் பொய்கள் நிறைந்த நூல்களாகும்.

கேள்வி—:இக்கிரந்தங்களில் கொஞ்சமும் மெய் கிடையாதா ?

விடை--:கொஞ்சம் மெய்யிருந்தபோதிலும் அனேக அசத்தியங்களிருப்பதால் "விஷஸம்ப்ருக்தான்னவத் த்யாஜ்யா:" உத்தம அன்னமாயினும் விஷம் சிறிது கலந்திருப்பின் அதை எவ்வாறு நீக்கிவிடவேண்டுமோ அதேமாதிரிதான் மேற்படி கிரந்தங்களையும் நீக்கிவிடவேண்டும்.

கேள்வி—:தாங்கள் புராண இதிகாசங்களை மதிப்பதில்லையா ?

விடை—:சத்தியத்தை மதிக்கின்றேன், அசத்தியத்தை மதிப்பதில்லை.

கேள்வி—:சத்தியமெது, அசத்தியமெது ?

விடை—**ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पान् गाथा नाराशंसीरिति ।**

ஐதரேய, சதபதாதி ப்ராம்மணங்களில் இதிஹாசம், புராணம், கல்பம், காதை, நாராசம்ஸீயெனும் ஐந்தே எழுதப்பட்டுள்ளன. ஸ்ரீமத் பாகவதாதிகளின் பெயர்கள் புராணங்களல்ல.

கேள்வி—:நீக்கப்பட்ட கிரந்தங்களில் உள்ள உண்மைகளையேன் எடுத்துக்கொள்ளக்கூடாது?

விடை—:அவைகளில் உள்ள உண்மைகளெல்லாம் வேதாதிசாஸ்திரங்களினதாகும். பொய் அவைகளின் சொந்தமாகும். வேதாதி சாஸ்திரங்களை எடுத்துக்கொள்வதாலேயே சகல உண்மைகளும் அறியப்படுகிறது. பொய்க்கிரந்தங்களிலிருந்து மெய்யை பொருக்கிக்கொள்ள விரும்பின் பொய்யும் அதனுடனே கலந்தேவரும். இதனால் " **असत्यमिश्रं सत्यं दूरतस्त्याज्यमिति** " அசத்தியம் நிறைந்த கிரந்தங்களிலுள்ள சத்தியத்தையும் அசத்தியத்தைப்போலவே நீக்க வேண்டும்.

கேள்வி—:உங்களுடைய மதம் என்ன?

விடை—:வேதங்களில் செய்யச் சொல்லியிருப்பவைகளைச் செய்தும், விடச்சொல்லியிருப்பவைகளை விட்டும் விடுவது தான் என்னுடைய மதம். இவ்வாறே சகல மதத்தவர்களும் தெரிந்துகொண்டு ஆர்யர்களுடன் ஐக்யமடையவேண்டும்.

கேள்வி—:பொய்கிரந்தங்கள் ஒன்றுக்கொன்று விரோதப்படுவதைப் போலத்தான் நீங்கள் சொல்லும் உண்மைக் கிரந்தங்களும் விரோதப்படுகின்றன. பாருங்கள்! ஸ்ருஷ்டி-விஷயமாய் சாஸ்த்திரங்களும் விரோதப்படுகின்றன. மீமாம்சைகர்மம், வைசேஷிகம் காலம், ந்யாயம் பரமாணு, யோகம் புருஷார்த்தம், சாங்க்யம் ப்ரக்ருதி, வேதாந்தம் ப்ரம்மா இவைகளால் உலகம் உண்டானதென்று சொல்கின்றது. இவைகள் விரோதமல்லவா?

விடை—:முதலில் சாங்க்யம் வேதாந்தம் இவ்விரண்டு தவிர மற்றவைகளில் ஸ்ருஷ்டிக்கிரமத்தைச் சொல்லியிருக்கவில்லை. இவைகளில் விரோதங் கிடையாது. ஏனென்றால் உனக்கு விரோதம் அவிரோதம் என்பதின் ஞானமில்லை. விரோதம் எங்கிருந்து உண்டாகிறதென உன்னைக் கேட்கிறேன்? ஒரே விஷயத்திலா பல விஷயங்களிலா?

கேள்வி—:ஒரு விஷயத்தை பலர் பல விதங்களாகச் சொல்லுதல் விரோதமாகும். இங்கும் ஸ்ருஷ்டியெனுமொரே விஷயமாகும்.

விடை—:வித்தையென்பது ஒன்றா யிரண்டா?

கேள்வி—:ஒன்றேதான்.

விடை—:ஒன்றானால் வ்யாகரணம், வைத்யம், ஜ்யோதிஷம் ஆகிய பல விஷயங்கள் ஏன்? ஒரு வித்தையிலேயே பல அவயவங்களின் சம்பந்தம் ஒன்றுக் கொன்று மாறுபட்டிருக்கும். இதேமாதிரிதான் ஸ்ருஷ்டியெனும் ஒரே வித்தையைச் சொல்ல பலவித அவயவங்களைக்கொண்டு பலவிதம் சொல்லியிருக்கின்றன. இதில் கொஞ்சமும் விரோதங்கிடையாது. ஓர் பாத்திரம் செய்யவேண்டின் காரியம், சமயம், மண், விசாரணை, சேர்க்கை, வியோகாதிகள் புருஷார்த்தங்கள். ப்ரக்ருதி குணம், குயவன் காரணன் ஆகிறான். இதே போலவே உற்பத்தியின் கர்ம காரணத்தை மீமாம்சையிலும், சமயத்தை வைசேஷிகத்திலும், உபாதான காரணத்தை ந்யாயத்திலும், புருஷார்த்தத்தை யோகத்திலும், தத்வங்களின் அனுக்கிரமணத்தால் ஆன பரிகணனத்தை சாங்க்யத்திலும்,நிமித்தகாரண

மாகிய கடவுளை வேதாந்தத்திலும் சொல்லியிருக்கிறது. இதில் கொஞ்சமும் விரோதமில்லை. வைத்திய சாஸ்திரத்தில் நிதானம், சிகித்ஸை, மருந்து, தானம், பத்யம் முதலியவைகளைத் தனித்தனியாகச் சொல்லியிருக்கின்றது. ஆனால் எல்லா அங்கங்களும் ரோகநிவர்த்திக்கேயாகும். அவ்வாறே உலக உற்பத்திக்கு ஆறுவித காரணங்களுண்டு. இவைகளை ஒவ்வொருவராக ஆறு பேர்கள் ஆறு சாஸ்த்திரங்களில் சொல்லியிருக்கிறார்கள். அதனால் இவைகளில் விரோதம் சிறிதுங் கிடையாது. மற்ற இதன் சம்பந்தமான விஷயங்களை ஸ்ருஷ்டிக்கிரமம் சொல்லியிருக்குமிடத்தில் பார்த்துக்கொள்ளவும்.

கல்வியை கற்பதிலும், கற்பிப்பதிலும் ஏற்படும் குற்றங்களை விலக்கவேண்டும். துஷ்டர்களின் நட்பு, கெட்ட எண்ணம், மதுவருந்தல், தாசிகளுடன் சேர்தல், பால்யவயதில் மணம் புரிதல், பூர்ண ப்ரம்மசர்யம் அனுஷ்டிக்காமை, மாதா பிதா ஆசாரியர்களிடம் அன்பில்லாமை, வேதாதி சாஸ்திரங்களைப் பிரசாரம் செய்யாதிருத்தல், அதிக போஜனமருந்தல், அதிகநேரம் விழித்திருத்தல், பாடம் சொல்லுவதில் தாமதித்தல் அல்லது கபடம் செய்தல், வித்தையின் லாபத்தை அறியாதிருத்தல், ப்ரம்மசர்யத்தின் பலம், ஆரோக்யம், தைர்யம் முதலியவைகளை அறியாதிருத்தல், உண்மையாக கடவுளைத் துதித்தலை விட்டு பொம்மைகளுக்கு பூஜை செய்தல், மாதா, பிதா, வித்வான்களை மேலான மூர்த்திகளாக நினைத்து அவர்களைச் சேவிக்காமை, வர்ணாஸ்ரம உண்மைகளைக் கைவிட்டு ஊர்த்வபுண்ட்ரம், த்ரிபுண்ட்ரம், திலகம், மாலை, ஏகாதசியாதி விரதங்களை அனுஷ்டித்தல், காசி முதலிய தீர்த்தம், ராம, கிருஷ்ண ஆதி தெய்வங்களைப் பூஜிப்பதால் பாபங்கள் விலகுமென

நம்புதல், கெட்டவர்களை நம்பி கல்வியில் ஸ்ரத்தையில்லாதிருத்தல், உண்மையான சாஸ்திரங்களை நம்பாமல் பொய்ப் புராணங்களைப் படிப்பதால் முக்தி கிடைக்குமென நம்புதல், தனுதிகளில் ஆசைவைத்து கல்வியை விருத்திசெய்யாமை, அர்த்தமின்றி கண்டவிடங்களில் சுற்றுதல், பொய்யை நம்பி ப்ரம்மசரியத்தாலேற்படும் நன்மைகளைக்கைவிடல், வியாதிக்காளாதல் முதலிய குற்றங்களை கற்போரும் கற்பிப்போரும் முற்றிலும் விலக்கவேண்டும்.

தற்காலத்தில் ப்ராம்மணர்களென்று சொல்லிக்கொள்வோர்கள் தன்னலப்பிரியர்களாய் அன்னியர்களுக்குக் கல்வி கற்பிப்பதைக் கைவிட்டு தன்னலத்தையே கோரி பிறருடைய தனம், மனம் முதலியவைகளைத் தங்களுக்காக பெற்றுக் கொள்ளுங் காரியங்களைப் புரிகின்றார்கள். க்ஷத்திரியாதி வர்ணத்தவர்களும் கல்வி கற்றுக்கொண்டால் தங்களை மதியாது அவர்களின் பொருள்களை தங்களுக்குக் கொடுக்கமாட்டார்களென பயப்படுகிறார்கள். இவ்வாறாகிய குற்றங்களை அரசனும் குடிகளும் விலக்கித் தங்கள் குழந்தைகளின் கல்வியபிவிருத்திக்காக வேண்டிய பொருள்களை செலவழிக்கவேண்டும்.

கேள்வி :—பெண்களும் சூத்திரர்களும் வேதம் படிக்கலாமா? அவர்களும் படித்துக்கொண்டால் பிறகு நாம் என்ன செய்வது? அவர்கள் படிக்கக்கூடாதென சாஸ்த்திரமும் சொல்கின்றதே—:

स्त्रीशूद्रौ नाधीयातामिति श्रुतेः ॥

பெண்களும் சூத்திரர்களும் படிக்கக்கூடாது என்பது சுருதியாகும்.

விடை :—சகல பெண்களும், ஆண்களும், எனின் மனித ஜன்மத்திலுள்ள சகலரும் படிக்க அதிகாரமுண்டு. நீ சொன்ன சுருதிவாக்யம் உங்களால் செய்யப்பட்டதாகும். ப்ரமாணமுடைய எந்த கிரந்தத்தினுடையதுமல்ல. சகல மனிதர்களுக்கும் வேதாதிசாஸ்திரங்களைப் படிக்க, கேட்க அதிகாரம் யஜுர் வேதத்தில் 26-வது அத்தியாயத்தில் 2-வது மந்திரம் அளிக்கிறது—:

यथेमां वाचं कल्याणीमावदानि जनेभ्यः ।
ब्रह्मराजन्याभ्याᳬशूद्राय चार्याय च स्वाय चारणाय ॥

(யஜுர் 26—2).

கடவுள் சொல்லுகிறார் (யதா) எவ்வாறு நான் (ஜனேப்ய:) சகலமனித சமூகத்திற்காக (இமாம்) இந்த (கல்யாணீம்) சம்சார, முக்தி சுகங்களை அளிப்பதான (வாசம்) ருக்வேதாதி நான்குவேத சப்தங்களை (ஆ, வதானி) உபதேசிக்கின்றேனோ அவ்வாறே நீங்களும் செய்வீர்களாக.

கேள்வி—:இங்கே ஜனம் என்ற பதத்தின் பொருள் த்விஜர்களேயாகும். ஏனென்றால் மற்ற சுருதி கிரந்தங்களில் வேதாதி சாஸ்த்திரங்களைப் படிக்க முதல் மூன்று வருணத்தவர்களே அதிகாரமுடையவர்களென்று சொல்லி இருக்கின்றன.

விடை—:(ப்ரம்மராஜன்யாப்யாம்) கடவுளால் சொல்லப்பட்டதைக் கவனி. நான் ப்ராம்மண, க்ஷத்ரிய, (அர்யாய) வைஸ்ய, (சூத்ராய) சூத்திர (ஸ்வாய) வேலையாள் அல்லது பெண்களுக்காகவும் (அரணாய) அதிசூத்திரர்களுக்காகவும் வேதாதிகளை உண்டுசெய்தேன். என்றால் சகல மனிதர்களும்

வேதங்களைப் படித்துப் படிப்பித்து, கேட்டுக் கேட்பித்து, விக்ஞானங்களையறிந்து, நல்லவைகளையறிந்து கைக்கொண்டு தீயவைகளையறிந்து விலக்கி, துக்கத்தை விலக்கி ஆனந்தத்தையடைவார்களாக. இப்போது சொல்லுங்கள். உங்களுடைய வார்த்தைகளை மதிப்பதா அல்லது கடவுளுடையதையா? கடவுளுடைய வார்த்தைகளையே அவசியம் மதிக்கவேண்டும். இதற்கு மேலும் இதை மதிக்காதவன் நாஸ்திகனாகும். ஏனென்றால் "नास्तिको वेदनिन्दकः" வேதங்களை மதிக்காதவன், நிந்திப்பவன் நாஸ்திகனாகும். கடவுள் சூத்திரர்களின் மேன்மையை விரும்பவில்லையா? சூத்திரர்களுக்கு வேதங்களைப் படிக்க அதிகாரமளிக்காமல் த்விஜர்களுக்குமாத்திரம் அதிகாரமளிக்க கடவுள் பக்ஷபாத முடையவரா? சூத்திரர்கள் வேதங்களைப்படிக்க, கேட்கக்கூடாதென்பது கடவுளின் எண்ணமாயிருந்தால் அவர்களுக்கு வாயையும் காதுகளையும் ஏன் அவர் உண்டாக்கவேண்டும்? கடவுள் பூமி, ஜலம், அக்னி, சந்திரன், சூர்யாதிகளை சகலருக்குமாகப் படைத்ததைப் போலவே வேதங்களையும் சகலருக்குமாகவே படைத்தார். எங்கெங்கே நிராகரிக்கப்பட்டிருக்கிறதோ அங்கங்கே படிக்க படிப்பிக்கச் சிறிதும் திறமையில்லாதவனைப் புத்தியில்லா மூர்க்கனைச் சூத்திரன் எனச் சொல்லியுள்ளதாக அறியவேண்டும். பெண்களும் படிக்கக்கூடாதெனச்சொல்லியிருப்பதெல்லாம் உங்களுடைய மூர்க்கத்தனத்தாலும், சுயநலத்தாலும், அறிவின்மையாலுமேற்பட்டதாம். வேதங்களில் பெண்களும் படிக்க அதிகாரமிருப்பதைப்பார்—:

ब्रह्मचर्येण कन्या युवानं विन्दते पतिम् ॥

(அதர்வம்—11-24-3-18)

எவ்வாறு புருடர்கள் பூர்ண ப்ரம்மசர்யத்தை முடித்த பின் தங்களுக்குத்தகுந்த மனைவிகளைத் தெரிந்தெடுத்துக் கொள்வார்களோ; அவ்வாறே (கன்யா) பெண்கள் (ப்ரம்ம சர்யேண) ப்ரம்மசர்ய விரதத்தைப் பூரணமாக முடித்து பின் தங்கள் யௌவன காலத்தில் தங்களுக்குத் தகுந்த (யுவானம்) வாலிபப் புருடர்களை (விந்ததே) அடைவார்களாக. இதனுல் பெண்களுக்கு ப்ரம்மசர்யத்தையும், கல்வியையும் கட்டாயம் கற்பிக்கவேண்டுமென்றேற்படுகிறது.

கேள்வி—: பெண்களும் வேதத்தைப் படிக்கலாமா?

விடை--: கட்டாயம்—ஸ்ரௌத சூத்திரத்தைப்பார்—:

इमं मन्त्रं पत्नी पठेत् ॥

வேள்வியிலே பெண் இம்மந்திரத்தைச் சொல்லவேண்டும். பெண்கள் வேதத்தைப் படிக்கக்கூடாதென இருந்தால் வேள்வியிலே இம்மந்திரத்தை எவ்வாறு அவர்கள் ஸ்வரத்துடன் சொல்லமுடியும்? பாரத வர்ஷத்துப் பெண்களிலே ஆபரணங்களாக விளங்கிய கார்க்கி ஆதிபெண்கள் பூரண வேதங்களைக்கற்று பூரண வித்வாணிகளாய் இருந்தனர். இவ்விஷயம் சதபத ப்ராம்மணத்தில் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. புருடன் படித்தவனுய் பெண் படிக்காதவளாகவோ; பெண் படித்தவளாய் புருடன் படிக்காதவனுகவோ இருந்தால் நன்று! சதா அக்குடும்பத்திலே தேவாசுர சண்டையேயாகும். அவ்வீட்டில் சுகமென்பது எங்கே? பெண்கள் படிக்காவிட்டால் பெண் பள்ளிக்கூடங்களுக்கு உபாத்திமார்கள் ஏது? அரசகார்யங்களிலும், குடும்பகார்

யங்களிலும் பெண்கள் புருடர்களுக்கும், புருடர் பெண்களுக்கும் நன்மை கோருபவர்களாய் இருக்கவேண்டும். வீட்டில் சகல காரியங்களையும் பெண்களினுதீனத்தில் விட்டுவிடவேண்டும். இவ்வாருகிய காரியங்களின்றேல் கல்வியானது ப்ரயோஜனமில்லாததாய்விடுகின்றது.

ஆர்யாவர்த்தத்தின் அரசபெண்கள் தனுர்வித்தை முதலிய யுத்தங்களிலும் வல்லவர்களாயிருந்தார்கள். உதாரணமாக கைகேயி யென்பவள் தன் புருடனுடனேயே இருந்து யுத்தம் புரியவில்லையா? இதனுல் ப்ராம்மணீ, க்ஷத்ரியீ இவர்கள் சகல வித்தைகளையும், வைஸ்யள் வ்யவகார வித்தைகளையும், சூத்ரீ பாகம் செய்தலாகிய வித்தைகளையும் கட்டாயம் கற்றுக்கொள்ளவேண்டும். புருடர்கள் வ்யாகரண, தர்ம, வ்யவகாரங்களைக் கட்டாயம் கற்றுக்கொள்ளவேண்டியதைப்போலவே பெண்களும் அவ் வித்தைகளைக் கட்டாயம் கற்றுக்கொள்ளவேண்டும். ஏனென்ருல் கல்வியில்லாமல் சத்தியாசத்தியத்தை அறியவும், புருடர்களுடன் அனுகூலமாக வசிக்கவும், சரியான குழந்தைகளைப் பெறவும், அவர்களை வளர்த்து நல் வித்தைகளைக் கற்பிக்கவும், வீட்டுக் காரியங்களைச் சரிவர அறிந்து புரியவும், சரிவர சமயமறிந்து ஆகாரங்களைத் தயாரிக்கவும் முடியாது. இவைகளைக் கற்றுக்கொண்ட பெண்களின் வீட்டில் எப்போதும் துக்கமென்பது கலவாத ஆனந்தம் தாண்டவமாடும். சில்ப வித்தையைக் கற்றுக்கொள்ளாவிட்டால் வீடுகளைச் சரியாகக் கட்டவும், ஆடையாபரணங்களை வேண்டியபடி செய்துகொள்ளவும் முடியாது. கணித வித்தை யில்லாமல் எல்லா கணக்குகளையுமறிந்துகொள்ள முடியாது. வேதாதிவித்தைகளில்லாமல் தர்மாதர்

மத்தை அறிந்துகொள்ள முடியாது. இதனால் எவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ப்ரம்மசர்யம், நற்கல்வி, கல்வியால் உடலும் ஆத்மாவும் பலமடையச் செய்துகொள்ளல், அவர்களின் குழந்தைகளிடம் தாய், தகப்பன், புருடன், மாமன், மாமி, அரசன், குடிகள் முதலியவர்கள் ப்ரேமை செலுத்தும்படிச் செய்துகொள்ளும் வித்தைகளை முழுதுங் கற்பித்துத் தர்ம வழியில் செலுத்துகின்றார்களோ அவர்களே வணங்கத் தகுந்தவர்களாகும். இதுவே குறையாத பொக்கிஷமாகும். இதை எவ்வளவுக் கெவ்வளவு சிலவழிக்கின்றோமோ அவ்வள வுக்கவ்வளவு அதிகமாக விருத்தியடைகிறது. முழுவதை யும் செலவழித்துவிட்டாலும் பல பங்கு அதிகமாக விருத் தியடையுமிக் கல்விச் செல்வத்தை தாயாதிகள் பங்கு கேட்க வோ, திருடர்கள் திருடிக்கொண்டு போகவோ முடியாது. இப் பொக்கிஷத்தை விருத்திசெய்தல் அரசன், குடிகள் ஆகிய சகலரினதும் கடமையாகும்.

कन्यानां संप्रदानं च कुमाराणां च रक्षणम् ॥

(மனு—7-152.)

குழந்தைகளைத் தகுந்த வயதுவரை ப்ரம்மசர்யத்துடன் வைத்திருத்தல் அரசனுடைய கடமையாகும். எந்தத் தாய் தகப்பன் இதை அனுசரிக்கவில்லையோ அவர்களை அரசன் கட்டாயம் தண்டிக்கவேண்டும். ஆசார்யகுலத்தில் கற்கும் மாணவ மாணவிகளுக்கு சமாவர்த்தனச் சடங்கு முடியும் வரை விவாகம் செய்யக்கூடாது.

सर्वेषामेव दानानां ब्रह्मदानं विशिष्यते ।
वार्यन्नगोमहीवासस्तिलकाञ्चनसर्पिषाम् ॥ (மனு—4-233.)

உலகத்திலுள்ள ஜல, அன்ன, பசு, பூமி, ஆடை, எண்ணெய், பொன், நெய்யாதி சகல தானங்களிலும் வேதவித்தையின் தானமே மிகமிக மேலானது. இதனால் ஒவ்வொருவரும் கூடுமானவரை கல்விதானத்தைச் செய்யவேண்டும். ப்ரம்மசர்யவித்தை, தர்மப்ரசாரம் நடக்கும் தேசமே சௌக்யமடைந்ததாகும். இதுவரை ப்ரம்மசர்ய வித்தையைக்குறித்துச் சுருக்கமாகச் சொன்னோம். இனி நான்காமத்தியாயத்தில் சமாவர்த்தனம், க்ருகாஸ்ரம விதிகளைக் குறித்துச் சொல்லுவோமாக.

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

நான்காம் அத்தியாயம்.

अथ समावर्त्तनविवाहगृहाश्रमविधिं वक्ष्यामः ॥

वेदानधीत्य वेदौ वा वेदं वापि यथाक्रमम् ।
अविप्लुतब्रह्मचर्यो गृहस्थाश्रममाविशेत् ॥ (மனு-3-2)

மறைமாணவத்துடன் ஆசார்ய குலத்திலே வசித்திருந்து, தர்மத்துடன் நான்கு, மூன்று, இரண்டு அல்லது ஒரு வேதத்தையாகிலும் சாங்கோபாங்கமாகக்கற்று, மறைமாணவத்தைக் குற்றமில்லாது நிறைவேற்றிவந்த ஆண் பெண்களே இல்லற தருமத்தில் பிரவேசிக்க அதிகாரிகளாகும்.

तं प्रतीतं स्वधर्मेण ब्रह्मदायहरं पितुः ।
स्रग्विणं तल्पमासीनमर्हयेत्प्रथमं गवा ॥ (மனு—3-3.)

(ஸ்வதர்ம) ஆசார்ய சிஷ்யர்களின் தர்மத்துடன் கூடின பிதா அல்லது உபாத்தியாயருக்கு (ப்ரம்மதாய) வித்யாரூபமான பங்கைத் தனக்களித்தவரான ஆசார்யனுக்கு முதலில் கோதானுதிகளைக் கூடியவரா செய்யவேண்டும். அவ்வாறே பெண்ணுக்கு வித்தையளித்த ஆசார்யனிக்கும் பெண்ணின் தகப்பனர் கூடியவரை கோதானுதிகளை யளிக்கவேண்டும்.

गुरुणानुमतः स्नात्वा समावृत्तो यथाविधि ।
उद्वहेत द्विजो भार्यां सवर्णां लक्षणान्विताम् ॥
(மனு—3-4.)

குருவின் உத்திரவேற்று ஸ்னனம் செய்து குருகுலத்திலிருந்து இல்லறம் வந்துசேர்ந்த மாணவ மாணவிகள் தங்கள் வர்ணத்திலுள்ள நல்ல லக்ஷணங்கள் பொருந்திய பெண் அல்லது புருடரை மணம் செய்து கொள்ளவேண்டும்.

असपिण्डा च या मातुरसगोत्रा च या पितुः ।
सा प्रशस्ता द्विजातीनां दारकर्मणि मैथुने ॥ (மனு-3-5.)

தாயாரின் சம்பந்தமாய் 6 குடும்பம் தாண்டியவளும், தகப்பனின் கோத்திரத்தைச் சேராதவளுமான பெண்ணை மணக்கவேண்டும். ஏனென்ருல்—:

परोक्षप्रिया इव हि देवाः प्रत्यक्षद्विषः ॥ (சதபதம்.)

பார்க்காத பொருளின்மேல் ஏற்படும் ஆசை பார்க்கும் பொருள்களின்மேல் ஏற்படுவதில்லை. ஓர் பலகாரத்தின் குணத்தைமாத்திரம் கேள்விப்பட்டவன் அதை சாப்பிட்டுப் பார்க்கவிரும்புகின்ருன், தான் பார்க்காத ஓர் பொருளை புகழ்ச்சியாகப் பேசியதைக்கேள்விப்பட்டவன் அதைப் பெற இச்சிக்கின்ருன். இதனுலேயே தாயார் சம்பந்தமாய் தூர சம்பந்த முடையவளையும், தன் தகப்பன் கோத்திரத்திலே சேராதவளையுமே புருடர்கள் மணக்கவேண்டும். இதனுல் ஏற்படும் குணங்கள்—: (1). சிறுகுழந்தைப் பருவத்திலிருந்து ஒன்ருக வசித்து ஒருவரின் குணங்களை மற்றவரறிந்து, ஒருவரின் சகல உடலினவயவங்களையும் மற்றவர் நன்கு பார்த்துமிருக்கும் இருவருக்கும் மணம் செய்துவைத்தால் அவர்களுக்குள் உண்மையான ப்ரேமை யேற்படாது. (2) ஒரே ஜலத்துடன்

அதேபோன்ற ஜலத்தைக் கலப்பதால் எப்படி பேதமின்றி ஒன்ருகக்கலந்துவிடுமோ; அப்படியே ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களின் வீர்யங்களில் பேதமில்லாமல் போவதால் அவர்கள் சேர்க்கையின்பத்தையுமடைவதில்லை. (3). பாலில் சுக்கைக் கலப்பதால் எப்படி இரண்டுங் கலந்து ஓர் வீர்யமுள்ள பொருளாகின்றதோ; அப்படியே தூர விவாகம் செய்து கொள்ளுதலிலும் வீர்ய பல முண்டாகிறது. (4). ஒரு தேசத்தில் வியாதியை யடைந்தவன் மறுதேசம் சென்று வசிப்பதால் ரோகம் நீங்கப்பெறுவதைப்போல தூரவிவாகத்தால் ஆரோக்ய முண்டாகிறது. (5). தூரவிவாகம் செய்துகொள்பவர்களிடையில் கலகமும் உண்டாவதில்லை. தூரப்பிரேமையாகையால் பரஸ்பரம் மிகுந்த அன்புடனும் வசிப்பார்கள். (6). தூர விவாகம் செய்துகொண்டவர்களுக்கு தூரதேசத்தின் பொருளை யனுபவிக்கவும் தூரதேசவாசமும் உண்டாவதால் உலக அனுபவமும் ஏற்பட ஏதுவாகின்றது.

இதனுலேயே—:

दुहिता दुर्हिता दूरे हिता भवतीति ॥ (நிருக்தம்-3-4.)

கன்னிகையின்பெயர் "துஹிதை" யாகும். இக்காரணத்தாலேயே மணம் தூரசம்பந்தமாகவே இருக்கவேண்டும். (7). கன்னிகையின் வீடு பக்கத்திலே இருந்தால் அடிக்கடி பெண் அங்கே போக நேரிடும். போகும் போதெல்லாம் தகப்பன் ஏதாவது மகளுக்கும் மருமகனுக்கும் மரியாதை செய்தனுப்பவேண்டும். பன்முறை செய்யவேண்டிவருவதால் பெண்ணின் தகப்பன் கடன்காரனுகவும் காரணமுண்டு. (8) தகப்பன் வீடு அருகிலிருக்கிறது என்ற எண்ணத்தால் வீட்

டில் ஏற்படும் சிறிய கலகத்திற்குங்கூட பெண் பிதாவின் வீட்டிற்கு ஓடிப்போய்விடுவாள். இதனுல் தம்பதிகளின் பெற்ருேர்களுக்குள்ளும் விரோதமேற்படும். இவைகளை யுத்தேசித்தே எப்போதும் கலியாணம் தூர சம்பந்தம், தூர தேசத்திலேயே புரியவேண்டும்.

महान्त्यपि समृद्धानि गोऽजाविधनधान्यतः ।
स्त्रीसंबन्धे दशैतानि कुलानि परिवर्जयेत् ॥ (மனு-3-6.)

எவ்வளவு தனம், தான்யம், பசுக்கள், ஆடுகள், யானைகள், குதிரைகள், பூமி, முதலியவைகள் வருவதாய் இருந்த போதிலும் கீழ்வரும் 10 குலங்களைச் சேர்ந்த பெண்களை மணம் புரியலாகாது.

हीनक्रियं निष्पुरुषं निश्छन्दो रोमशार्शसम् ।
क्षय्यामयाव्यपस्मारिश्वित्रकुष्ठिकुलानि च ॥
(மனு—3-7).

நற்காரியமில்லாத, நல்லவர்களில்லாத, வேதங்கற்றலை மறந்த, உடலிலே பெரும் பெரும் ரோமங்களையுடைய, க்ஷய ரோகமுடைய, மூலரோகமுடைய, யானைக்கால் வியாதியை யுடைய, மார்வியாதியையுடைய, வெண்குஷ்டமுடைய, கருங்குஷ்டமுடைய குலங்களிலே பெண்ணையோ புருடனையோ மணம் புரியலாகாது. ஏனென்ருல் அவர்களின் துர்குணங்களும் வியாதிகளும் மணம்செய்துகொள்பவர்களின் குலங்களிலேயும் உண்டாகிவிடும். ஆகையால் உத்தம குலத்தவர்களையே மணம் புரியவேண்டும்.

नोद्वहेत्कपिलां कन्यां नाऽधिकाङ्गीं न रोगिणीम् ।
नालोमिकां नातिलोमां न वाचाटान्न पिङ्गलाम् ॥
(மனு—3-8).

குரங்கு வர்ணத்தவளையும், புருடனைக்காட்டிலும் பெருத்த அவயவங்களை யுடையவளையும், புருடனிலும் அதிக பலமுடையவளையும், வியாதியுடையவளையும், உடலில் சிறிதும் மயிரில்லாதவளையும், அதிக மயிருடையவளையும், தொத்துவாயளையும், பழுப்புக் கண்ணியையும் மணம்புரியலாகாது.

नर्क्षवृक्षनदीनाम्नीं नान्त्यपर्वतनामिकाम् ।
न पक्ष्यहिप्रेष्यनाम्नीं न च भीषणनामिकाम् ॥ (3—-9.)

அஸ்வினி, பரணி, ரோஹிணீ தேவி, ரேவதிபாய் ஆதி நட்செத்திரப் பெயர்களை யுடையவளையும், துளசீ, சம்பா, வேம்பீ முதலாகிய மரங்களின் பெயர்களையுடையவளையும், கங்கா, யமுனை முதலிய நதிகளின் பெயர்களையுடையவளையும், சண்டாளியாதி தாழ்ந்த பெயர்களையுடையவளையும், விந்த்யா, மேரு முதலான மலைகளின் பெயர்களையுடையவளையும், கோகிலா, மைனை முதலிய பக்ஷிகளின் பெயர்களையுடையவளையும், நாகீ, புஜங்கா ஆதி பாம்புகளின் பெயர்களையுடையவளையும், மதோ தாசி, மீராதாசி முதலிய அடிமைப் பெயர்களையும், காளீ, பைரவி முதலான பயங்கரப் பெயர்களையுடையவளையும் மணம் புரியக்கூடாது. ஏனென்றால் இப்பெயர்கள் அன்னியபொருள்களுக்கு மேற்பட்டவைகளாகும்.

अव्यङ्गाङ्गीं सौम्यनाम्नीं हंसवारणगामिनीम् ।
तनुलोमकेशदशनां मृद्वङ्गीमुद्वहेत्स्त्रियम् ॥ (மனு—3-10.)

குற்றமில்லாத அவயவங்களை யுடையவளையும், யசோதா முதலாகிய நல்ல பெயர்களை யுடையவளையும், பிடி அன்ன நடையாளையும், சூக்ஷ்மமான கேசங்களையும் பற்களையும் உடையவளையும், எல்லா அவயவங்களும் சுந்தரமாய் பெற்றிருப்பவளையுமே மணம் புரியவேண்டும்.

கேள்வி—:விவாகம் யாருக்கு எப்போது செய்ய வேண்டும்.

விடை:—16 வயதிலிருந்து 24 வயதுவரையுள்ள பெண்ணுக்கும், 25 வயதிலிருந்து 48 வயது வரையுள்ள புருடனுக்கும் மணம் செய்யவேண்டும். இதில் 16 வயது பெண்ணுக்கும் 25 வயது புருடனுக்கும் மணம் செய்தல் சாதாரணமாகும் ; 18—20 வயது பெண்ணுக்கும், 30—35, 40 வயது புருடனுக்கும் மணம் செய்தல் மத்யமமாகும் ; 24 வயது பெண்ணுக்கும், 48 வயது புருடனுக்கும் மணம் செய்தல் உத்தமமாகும். இவ்விதமான மணங்கள் நடைபெறும் தேசத்தில் சதா சந்தோஷமும் சுகமுமே குடிகொண்டிருக்கும்.

கேள்வி—:**अष्टवर्षा भवेद् गौरी नववर्षा च रोहिणी ।**
दशवर्षा भवेत्कन्या तत ऊर्ध्वं रजस्वला ॥
माता चैव पिता तस्या ज्येष्ठो भ्राता तथैव च ।
त्रयस्ते नरकं यान्ति दृष्ट्वा कन्यां रजस्वलाम् ॥

பாராசரத்திலும் சீக்ரபோதத்திலும் இச்சுலோகம் காணப்படுகிறது. பெண்கள் 8 வயதில் கௌரி, 9ன்பதில் ரோஹிணி, 10ல் கன்யா, அதற்கு மேல் ரஜஸ்வலையாகின்

ளுள். 10 வருடம் வரை அதாவது ரஜஸ்வலையின் பக்குவத்தையடையும் வரை மணம் செய்யாமல் வைத்துக் கொண்டிருக்கும் தாய், தகப்பன், சகோதரன் மூவரும் நரகத்திற் சேருகின்றார்கள்.

விடை—:

ब्रह्मोवाच

एकक्षणा भवेत् गौरी द्विक्षणेयन्तु रोहिणी ।
त्रिक्षणा सा भवेत्कन्या ह्यत ऊर्ध्वं रजस्वला ॥
माता पिता तथा भ्राता मातुलो भगिनी स्वका ।
सर्वे ते नरकं यान्ति दृष्ट्वा कन्यां रजस्वलाम् ॥

(ப்ரம்மபுராணம்)

பெண் பிறந்த 1 க்ஷணத்தில் கௌரி, 2ண்டில் ரோஹிணி, மூன்றில் கன்யா, அதற்குமேல் ரஜஸ்வலையாகின்றாள். ரஜஸ்வலையைப் பார்க்கும் தாய், தகப்பன், சகோதரன், மாமன், சகோதரி ஆகிய சகலரும் நரகத்தை யடைகிறார்கள்.

(கேள்வி)—: இச் சுலோகம் ப்ரமாணமில்லை.

(விடை)—: என் ப்ரமாணமில்லை? ப்ரம்ம வாக்யமே ப்ரமாணமில்லை யென்றால் உன் வாக்யம் எப்படி ப்ரமாண முடையதாகும்?

(கேள்வி)—: நன்றுநன்று! பராசர, காசிநாதர்களின் வாக்கியமும் ப்ரமாண மில்லையோ?

(விடை)—: நல்லதையா ! நீர் ப்ரம்ம வாக்கியத்தை யேன் ப்ரமாணமாக எடுத்துக் கொள்ளவில்லை ? பாராசராதி நாதர்களினும் ப்ரம்மா பெரியவரல்லவா ? நீர் ப்ரம்மவாக்கியத்தை மதிக்காவிட்டால் நாம் பாராசரரின் வாக்கியத்தை மதிக்கமுடியாது.

(கேள்வி)—: உங்கள் ப்ரமாணம் அசம்பாவிதமானது. ஏனென்றால் குழந்தை சரியாக பூமியில் பிறப்பதற்குள்ளேயே ஆயிரம் க்ஷணங்கள் கழிந்துவிடுகின்றன. என்றால் கல்யாணம் எப்படி செய்யமுடியும் ? அப்போது கல்யாணம் செய்தாலும் ஒருபயனு முண்டாகாது.

விடை :—நான் சொன்னது அசம்பாவிதமானதென்றால் நீ சொன்னது மப்படியே. ஏனென்றால் 8, 9, 10, வயதில் கல்யாணம் செய்வதும் ஒரு பயனையுமளிக்காது. ஏனென்றால் 16 வயதிற்கு மேலே 24 வயதிற்குள் தான் பெண்களின் வீர்யம் பக்குவமடைகின்றது. கர்ப்பாசயம் பிண்டத்தைத் தாங்கி வளர்க்கும் திறமையை அடைகின்றது. * எட்டு வயதுப் பெண் குழந்தையைப் பெறுதல் முடியாதகாரி

* உசிதமான காலத்தைத் தவிர்த்துப் பெண் புருடர்களுக்கு மகப்பேற்றுச் சடங்கை நடத்தக்கூடாதென்று தன்வந்தரியானவர் ஸுஸ்ருத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கின்றார்.

ऊनषोडशवर्षायामप्राप्तः पञ्चविंशतिम् ।
यद्याधत्ते पुमान् गर्भं कुक्षिस्थः स विपद्यते ॥
जातो वा न चिरंजीवेज्जीवेद्वा दुर्बलेन्द्रियः ।
तस्मादत्यन्तबालायां गर्भाधानं न कारयेत् ॥

யமாகும். அதைப் போலத்தான் கௌரீ, ரோஹிணீ முதலிய பெயர்களை யிவதும் அயுக்தமாகும். கௌரீ யென்பது மஹாதேவனின் மனைவியின் பெயராகும். ரோஹிணீ யென்பது வாசுதேவனின் மனைவியின் பெயராகும்.

இவர்களை நீங்கள் தாயாராக பாவிக்கின்றீர்கள். சாதாரண பெண்களுக்கு அப் பெயர்களையிட்டு அவர்களுக்கு மணம் புரிதல் எப்படி சம்பவமாகும்? இது தர்மமாகுமா? ஆகையால் உங்களுடையதும் எங்களுடையதுமான இரண்டு ஸ்லோகங்களும் பொய்யேயாகும். நாங்கள் ப்ரம்மாவின் பெயரைக்கொண்டு செய்ததைப்போலவே நீங்களும் பாராசரின் பெயரைக்கொண்டு ஸ்லோகங்களைச் செய்கின்றீர்கள். ஆகையால் இவ்விரண்டையும் நீக்கி வேதம் சொல்வதையே ப்ரமாணமாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். பாருங்கள் மனுஸ்மிருதியிலே—:

त्रीणि वर्षाण्युदीक्षेत कुमार्यृतुमती सती ।
ऊर्ध्वं तु कालादेतस्माद्विन्देत सदृशं पतिम् ॥

(மனு—9-90·)

பொருள்—: 16 வயதுக்குக் குறைந்த பெண்ணுடன் 25 வயதுக்குக் குறைந்த புருடன்சேர்க்கை கொள்வதால் உண்டாகும் பிண்டம் நாசமடைந்துவிடும். பூர்ணகாலம் வரை கர்ப்பத்திலிருந்து அப்பிண்டம் வளராது (1) பிறந்தாலும் நீண்டகாலம் ஜீவித்திருக்காது. இருந்தாலும் இந்திரிய பலமில்லாமல் தான் இருக்கும். இதனுல் பால்யப் பெண்களுக்கு மகப்பேற்றை நடத்தலாகாது.

ஆகையால் 16 வயதிற்குக் குறைந்த பெண்ணுக்கும் 25 வயதிற்குக் குறைந்த புருடனுக்கும் மணம் செய்யலாகாது. செய்யின் துக்கத்தை அடைவார்கள்.

பெண் மாதவிலக்கான மூன்றுவருடங்கள் கழித்துத் தனக்குத் தகுந்த புருடனை யடையட்டும். மாதம் ஒரு முறை யாக மூன்று வருடங்களுக்கு 36 முறை மாதவிலக்கான பின்பே விவாகம் செய்யவேண்டும்.

काममामरणात्तिष्ठेत् गृहे कन्यर्त्तुमत्यपि ।
न चैवैनां प्रयच्छेत्तु गुणहीनाय कर्हिचित् ॥ (மனு—9-89)

பெண்புருடர்கள் மரணபரியந்தம் யௌவனத்துடனேயே யிருக்கட்டும். பரஸ்பரம் விரோத குணகர்மஸ்வபாவங்களுடையவர்களுக்கு ஒருபோதும் மணம் செய்யக்கூடாது. ஆயினும் முன் சொன்ன காலமன்றி மணம் செய்யக் கூடாது.

கேள்வி—: மணம் புரிதல் தாய் தகப்பனின் பிரியமாக யிருக்கவேண்டுமா? பெண்புருடர்களி னிச்சையின்படி இருக்க வேண்டுமா ?

விடை:— பெண்புருடர்கள் இச்சையின்படி மணம் புரிதல் உத்தமமாகும். தாய் தகப்பன்மார்கள் ப்ரயத்தனம் செய்தபோதிலும் கூட பெண்புருடர்களின் விருப்பத்தை யறியாமல் மணம் செய்யக்கூடாது. ஏனென்றால் ஒருவரை யொருவர் விரும்பி மணம் செய்துகொண்டால் அவர்களுக்குள் விரோதம் ஏற்படாது. அவர்களின் சந்தானங்களும் உத்தமமானவைகளாயிருக்கும். விரும்பா மணத்தினால் சதா துக்கமே விளையும், அன்றி மணத்தின் முக்யமான ப்ரயோஜனம் பெண்புருடர்களுக்கே யன்றி பெற்றோர்களுக்கல்ல. தம்பதிகளின் விரோதத்தாலும், நட்பாலும் அவர்களுக்கே துக்கமும் சுகமுமுண்டாகின்றன.

सन्तुष्टो भार्यया भर्त्ता भर्त्रा भार्य्या तथैव च ।
यस्मिन्नेव कुले नित्यं कल्याणं तत्र वै ध्रुवम् ॥

(மனு—3-60).

பெண்புருடர்கள் அன்புடனிருக்குங் குடும்பங்களிலேயே சதா ஆனந்தமும் கீர்த்தியும் குடிகொண்டிருக்கும், வெறுப்புடன் கூடினவர்கள் வசிக்கும் குடும்பங்களில் சதா துக்கமும் அவமானமுமே குடிகொண்டிருக்கும். ஆகையால் முன் காலத்திலே நடந்துவந்த "சுயம்வர" மணமே உண்மையில் உத்தம விவாகமாகும். விவாகம் புரிந்துகொள்வோர்கள் இருவருக்கும் வித்தை, விநயம், சீலம், ரூபம், ஆயுள், பலம், குலம், சரீர பரிமாணம் முதலியவைகள் தகுந்ததாக இருக்க வேண்டும். இவ்விஷயம் சரியில்லாத மணம் சிறிதும் சுகத்தை யளிக்காது, பால்யமணம் சுகத்தை யளிக்காது.—

युवा सुवासाः परिवीत आगात्स उ श्रेयान्भवति जायमानः ।
तं धीरासः कवय उन्नयन्ति स्वाध्यो मनसा देवयन्तः ॥

(ருக்—3-8-4).

आधेनवो धुनयन्तामशिश्वीः शबर्दुघाः शशया अप्रदुग्धाः ।
नव्या नव्या युवतयो भवन्ती र्महद्देवानामसुरत्वमेकम् ॥

(ருக்—3-55-16).

पूर्वीरहं शरदः शश्रमाणा दोषावस्तोरुषसो जरयन्तीः ।
मिनाति श्रियं जरिमा तनूनामप्यनुपत्नीर्वृषणो जगम्युः ॥

(ருக்—1-179-1.)

பூணூலணிந்து, மறைமாணவமனுசரித்து, உத்தமகலை யைக்கற்று, நல்லாடையாபரணங்களை யணிந்து, பூர்ணவாலிப மடைந்து, இல்லற தர்மத்தை யேற்கும் புருடனே வித்யா ஜன்மமடைந்தவனுய் அதிசய சோபையுடன் கூடின மங் களகாரனுகின்ருன். நற்கலை கற்று, விக்ஞான வித்தையின் விருத்தியை யடைந்த தைர்யசீலர்களான அறிவாளிகளும் அவனை பூஜிக்கின்ருர்கள்.

பால்ய அவஸ்தை நீங்கி, சகல வ்யவகார ஞானமடைந்து நல்ல யௌவனப் பருவத்தை யடைந்து, நவீன கலை முறை களையுங்கற்று, பூர்ண நன்னடத்தையை யுடைய பெண் மறை மாணவம் முழுதும் சரிவர முடித்த புருடனை இரண்டற்று ஒன்ருக மணந்து கர்ப்பத்தைத் தரித்தல், இதுவரை ஒரு வராலும் கறக்கப்படாத பாலையுடைய பசுவிற்குச் சமான மாகும். பால்யமணத்தால் புருடர்கள் நாசமாவதை விட பெண்களே அதிக நாசத்தை யடைகிருர்கள்.

சீக்கிரத்தில் ஸ்ரமத்தைச் செய்யக்கூடிய, வீர்யம் விடுவ தில் சமர்த்தனுன வாலிபப் புருடன் வாலிபமடைந்து தன் மனதிற்குகந்த பெண்ணையடைந்து 100 வருடங்கள் வரை யும் அதற்குமேலும் புத்ர பௌத்ராதிகளுடன் ஆனந்தத்தை அனுபவிக்கின்ருன். "சரத்ருதுவும், கிழத்தனத்தை யுண்டாக் கும் பகல், இரவு, தினம், முதலியவைகள் சரீரத்தின் அழகை விலக்குகின்றதைப்போல நானும் என் முழு மறைமாணவம் முடித்து வித்யா, பலம் பெற்று வாலிபத்திசையை அடைந்த பிறகே மணம் செய்து கொள்வேன்." இவ்வாறு ஒவ்வொரு பெண்புருடர்களும் ப்ரதிக்ஞை செய்யவேண்டும்.

எதுவரை இவ்வாறு சகல ரிஷி, முனி, ராஜா, மஹாராஜா ஆர்யர்கள் வித்தையடைந்த பின் சுயம்வர விவாகத்தை செய்துகொண்டிருந்தார்களோ அதுவரை இத்தேசம் உன்னதியான நிலையிலிருந்தது. மறைமாணவ மனுசரித்தலை மறந்து பால்ப வயதில் பெற்றோர்களால் விவாகம் செய்யப் பட்டு வரத்துடங்கியபோதிலிருந்து ஆர்யாவர்த்தத்திற்கு கேடு சம்பவிக்க ஆரம்பித்தது. இனிமேலாயினும் இக்கெட்ட மணத்தைவிட்டு அறிவாளிகள் சுயம்வரத்தைச் செய்துவரு வார்களாக. மணம் ஒரே வர்ணத்திலாகட்டும். ஆனால் வர்ணம் குணகர்மஸ்வபாவங்களால் நிச்சயிக்கப்படட்டும்.

கேள்வி-:பெற்றோர்கள் ப்ராம்மணர்களாயிருந்தால் குழந் தையும் ப்ராம்மண-ப்ராம்மணியேயாகும். ஆனால் பெற்றோர் அன்னிய வர்ணத்தவர்களாயிருந்தாலுங்கூட குழந்தைகள் ப்ராம்மணர்-ப்ராம்மணிகளாக முடியுமா ?

விடை--:ஆம். அனேகம்பேர் ஆனார்கள், ஆகிறார்கள், ஆவார்கள். சாந்தோக்யோபநிஷத்தில் அறியாத குலத்த வனான ஜாபாலி, மகாபாரதத்தில் க்ஷத்ரியனான விஸ்வாமித் ரன், சண்டாளனான மாதங்கர் முதலியவர்கள் ப்ராம்மணனா னார்கள். இப்போதுங்கூட உத்தம வித்யானுபவ ஸ்வபாவ சீலர்கள் ப்ராம்மணர்களே யாகும். இப்படியே எதிர்காலத் திலுமாவார்கள்.

கேள்வி—: என்ன ? அன்னியவர்ண வீர்யத்தில் பிறந்த வர்கள் எப்படி ப்ராம்மணர்களாக முடியும் ?

விடை—: ப்ராம்மண வீர்யத்தில் பிறந்துவிட்டவர்கள் ப்ராம்மணர்களில்லை. ஆனால்—:

स्वाध्यायेन जपैर्होमैस्त्रैविद्येनेज्यया सुतैः ।
महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः ॥ (மனு—2-28).

கற்று கற்பித்தல், விசாரம்செய்தல் செய்வித்தல், பூர்ண மாத வேள்விகளைப் புரிதல் புரிவித்தல், நற் குழந்தைகளைப் பெறல், பஞ்சமகா யாகங்களைப் புரிதல், அக்னி ஹோத்ரமாதி வேள்விகளைப் புரிதல், அறிவாளிகளின் நட்பைக்கொள்ளல் இவைகளையுடைய ஆத்மாவையுடைய சரீரமே ப்ராம்மணனாகச் செய்யப்படுகிறது. இச்சுலோகத்தை நீங்கள் மதிப்பதில்லையா?

கேள்வி—: ஓ. மதிக்கின்றோம்.

விடை—: பின் ஏன் தாழ்ந்த வர்ணத்திற் பிறந்தோர் ப்ராம்மணராக முடியாதென்கிறீர்?

கேள்வி—: நான்மாத்திரம் சொல்வதில்லை. அனேகம் பேர்கள் பரம்பரையாக இப்படியே சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். பரம்பரையாளர்களைக்கூட நீங்கள் திட்டுகிறீர்களா?

விடை—: இல்லை, நீங்கள் பரம்பரை யென்றதின் பொருளை 5, 6 தலைமுறைகளிலிருந்து கொள்கின்றீர்கள். ஆனால் நாங்கள் வேத, ஸ்ருஷ்டி யாரம்பத்திலிருந்து பரம்பரையை மதிக்கின்றோம். பாருங்கள், தகப்பன் நல்லவனாகவும் குழந்தைகெட்டவனாகவும், தகப்பன்கெட்டவனாகவும் குழந்தை

நல்லவனாகவும், தகப்பனும்குழந்தையும் ஒரேவித குணமுடைய வர்களாகவும் இருப்பதை நாம் பார்க்கின்றோம். மனு என்ன சொல்கின்றாரென்று பாருங்கள் —:

येनास्य पितरो याता येन याताः पितामहाः ।
तेन यायात्सतां मार्गं तेन गच्छन्न रिष्यते ॥

(மனு—4-178).

தகப்பனும் பாட்டனும் சென்ற வழியிலேயே குழந்தையும் செல்லட்டும். ஆனால் தகப்பனும் பாட்டனும் துஷ்டர்களாயின் அவர்களின் வழியை ஒருபோதும் குழந்தைகள் அனுசரிக்கக்கூடாது. ஏனென்றால் உத்தமர்களின் வழியே செல்வதால் ஒருபோதும் துக்கமுண்டாகாது. இதை நீங்கள் மதிக்கின்றீர்களா இல்லையா ?

கேள்வி :—ஓ. மதிக்கின்றோம்.

விடை :—மற்றும் பாருங்கள். கடவுளின் வார்த்தைகளான வேதத்தைத் தவிர்த்து மற்றயெதுவும் பழமையானதல்ல. அதற்கு மாறுபட்டதுகள் ஒருபோதும் பழமையாகாது. இப்படியே எல்லா மனிதர்களும் மதிக்கவேண்டுமா இல்லையா ?

கேள்வி :—கட்டாயம் மதிக்கவேண்டும்.

விடை :—மற்றும் தகப்பன் ஏழையாயிருந்து மகன் பணக்காரனாக ஆய்விட்டால் தகப்பன் வழியே போகும்படிச் சொல்லி அவன் பணத்தையெல்லாம் நாசம் செய்துவிட்டு ஏழ்மையாகிவிடும்படிச் சொல்லலாமா ? தகப்பன் குருடனா

யிருந்தானென்று மகனும் கண்களை குருடாக்கிக் கொள்ள லாமா? தகப்பன் தாசிலோலனுயிருந்தால் மகனுமப்படியே இருக்கவேண்டுமா? இல்லை. இல்லை. பெரியோர்களின் உத்தம குணகர்மங்களை மாத்திரம் கைக்கொண்டு கெட்டவை களை அறவே விலக்கவேண்டும். தாழ்ந்த வர்ணத்தவர்கள் எப்பேர்ப்பட்ட நல்ல காரியங்கள் செய்தபொழுதிலும் மேல் வர்ணத்திற்கு வாமுடியாதென்றால் ஓர் ப்ராம்மணன் மகம்மதி யனுய் விட்டாலுங்கூட அவன் ப்ராம்மணன் தானு? இல்லை. ஏனென்றால் அவன் ப்ராம்மண காரியங்களை விட்டுவிட்டான். ஆகையால் உத்தமகுணகர்ம ஸ்வபாவத்தைக் கொண்டே ப்ராம்மணன் என்பதை நிரூபிக்க முடியும். கெட்டகாரியங் களைப் புரிபவன் யாராயினும் சரியே அவன் நீசனேயாகும்.

கேள்வி—:

ब्राह्मणोऽस्य मुखमासीद् बाहू राजन्यः कृतः ।
ऊरू तदस्य यद्वैश्यः पद्भ्यां शूद्रो अजायत ॥

(யஜுர்—32-11).

ப்ராம்மணர்கள் கடவுளின் முகத்திலிருந்தும், க்ஷத்திரி யர்கள் புஜங்களிலிருந்தும், வைஸ்யர்கள் வயிற்றிலிருந்தும், சூத்திரர்கள் பாதத்திலிருந்தும் பிறந்தார்கள். முகம் புஜங் களாகாது. புஜங்கள் வயிறு ஆகாது. அதுபோலவே ப்ராம்மணர் சூத்திரர்களாகவோ சூத்திரன் மற்ற வர்ணத்தானு கவோ முடியாது.

விடை—:இம் மந்திரத்திற்கு நீ செய்த அர்த்தம் தப் பாகும். ஏனென்றால் கடவுள் நிராகாரரானதால் அவருக்கு

முகமாதி அவயவங்கள் கிடையாது. அவயவங்களிருந்தால் அவன் வியாபித்திருக்க முடியாது. எப்போது வியாபித்திருக்க வில்லையோ அப்போதவன் சர்வசக்திமானுகவும், உலகத்தைப் படைத்துக் காத்தழிப்பவனுகவும், சகல அறிவும் முடிந்துள்ள வனுகவும், பிறப்பிறப்பற்றவனுகவும் இருக்க முடியாது. ஆகையால் இம் மந்திரத்தின் உண்மையான அர்த்தமாவது—: (அஸ்ய) சர்வவ்யாபக பரமாத்மாவின் படைப்பிலே முகத் திற்குச் சமமாய் முக்யமான உத்தமன் (ப்ராம்மண:) ப்ராம் மணன் (பாஹூ) "बाहुवै बलं बाहुवै वीर्य्यम्" சதபதப்ராம் மணத்தில் பலம் வீர்யங்களின் பெயர் தோள்களாகும். அவைகள் எவனிடமதிகமாக உண்டோ அவன் (ராஜன்ய:) க்ஷத்திரியன் (ஊரூ) இடுப்பிற்குக் கீழும் துடைகளுக்கு மேலும் உள்ள பாகத்தின்பெயர் ஊரு ஆகும். யார் சகல தேசங்களிலும் ஊரு வின் பலத்தால் சென்று வருகின்றூர் களோ அவர்கள் (வைஸ்ய:) வைஸ்யர்கள் (பத்ப்யாம்) பாதங்களுக்குச் சமமாய் மூர்க்கத்தனமாதி குணங்களை யுடையவர்கள் (சூத்ர:) சூத்திரர்களாகும். சதபதப்ராம் மணுதி கிரந்தங்களிலும் இவ்வாறே அர்த்தம் செய்யப்பட்டி ருக்கின்றது—:

यस्मादेते मुख्यास्तस्मान्मुखतो ह्यसृज्यन्त इत्यादि ।

எல்லாவற்றினும் முக்யமானவர்களைக் குறிக்க "முகத்தி லிருந்து உண்டானூர்கள்" என்று அலங்கரிக்கப்பட்டிருக் கின்றது. முகமானது சகல அவயவங்களினும் முக்யமான தைப்போல பூர்ண உத்தம குணகர்ம ஸ்வபாவங்களையுடைய மனிதர்கள் ப்ராம்மணர்களாகும். கடவுள் எப்போது நிரா

காரணே அப்போது அவர் முகத்திலிருந்து சிலர் பிறந்தார்களென்பது அசம்பாவிதமாகும். மலடிமகன் எவ்வாறுண்டாகும்? அன்றி முகத்திலிருந்து உண்டாயிருந்தால் உபாதான காரணத்திற்குச் சமமாய் ப்ராம்மணுதிகளின் ஆக்ருதி அவசியமிருக்கவேண்டும். முகத்தினுதாரம் உருண்டையாயிருப்பதைப்போல அவர்களுடைய சரீரமும் உருண்டையாயிருக்கவேண்டும். அவ்வாறே க்ஷத்திரியர்களின் உடல் புஜங்களைப்போலவும், வைஸ்யர்களினுடல் துடைகளைப்போலவும், சூத்திரர்களினுடல் பாதங்களைப்போலவுமிருக்கவேண்டும். ஆனுல் அப்படி இல்லை. யாராவது இப்படி ப்ராம்மணர்கள் முகத்திலிருந்துதான் பிறந்தார்களென்று சொன்னுல் இப்போது என் அவர்கள் முகத்திலிருந்து பிறக்கவில்லை? யென்று கேட்கவேண்டும். சகலரும் இப்போது ஒரே இடத்திலிருந்துதான் பிறக்கின்றேம். அதனுல் நாம் செய்யும் இந்த அர்த்தமே இந்த மந்திரத்திற்குச் சொன்னதாகும். இதேபோல் மற்றேரிடத்திலும்—:

> शूद्रो ब्राह्मणतामेति ब्राह्मणश्चैति शूद्रताम् ।
> क्षत्रियाज्जातमेवन्तु विद्याद्वैश्यात्तथैव च ॥
>
> (மனு—10—65).

சூத்திரக்குலத்தில் பிறந்தபோதிலும் அவனின் உத்தம குணகர்மஸ்வபாவங்களால் வைஸ்ய, க்ஷத்திரிய, ப்ராம்மணத் தன்மையை அடைகின்ருன். ப்ராம்மணகுலத்தில் பிறந்தபோதிலும் நீச குணகர்மஸ்வபாவங்களால் க்ஷத்திரிய, வைஸ்ய, சூத்திரத்தன்மையை அடைகின்ருன். இவ்வாறே தான் மற்ற வர்ணத்தவர்களும் குணகர்மஸ்வபாவங்களுக்குத் தக

மேலோ கீழோ வர்ணத்தையடைகிறார்கள். ஆகையால் ஆண் பெண்களின் வர்ணங்களை அவர்களின் குணகர்மஸ்வபாவங்களைக்கொண்டே நிர்ணயிக்கவேண்டும்.

धर्मचर्य्यया जघन्यो वर्णः पूर्वं पूर्वं वर्णमापद्यते जातिपरिवृत्तौ ॥
अधर्मचर्य्यया पूर्वो वर्णो जघन्यं वर्णमापद्यते जातिपरिवृत्तौ ॥

தாழ்ந்தவர்ணத்தவர்கள் தர்மாசரணத்தினால் படிப்படியாக மேல்வர்ணத்தையடைகிறார்கள். அவர்களின் யோக்யதைக்குத்தகுந்தபடி வர்ணத்தை நிர்ணயிக்கவேண்டும். (1) உயர்ந்தவர்ணத்தவர்கள் அதர்மாசரணத்தினால் படிப்படியாக தாழ்ந்தவர்ணத்தை அடைகிறார்கள். அவர்களின் யோக்யதைக்குத் தகுந்தபடியே வர்ணத்தை நிர்ணயிக்க வேண்டும். (2) புருடர்களுக்குச் சொன்னதைப்போலவே பெண்களுக்கு மறியவேண்டும். இவ்விதியினால் ஏற்படும் பயனென்ன? அவாவர்கள் வர்ணதர்மத்தை சரிவர அனுஷ்டிப்பார்கள். மேல்வர்ணத்தை யடைய விரும்பி நற்காரியங்களையே புரிவார்கள். நான்கு வர்ணத்தவர்களிலும் இதுதான் மேலானது இதுதான் கீழானதென்பதில்லை. எல்லோரும் தங்கள் தங்கள் தர்மத்தை சரிவர அனுஷ்டிப்பரேல் எல்லாரும் சம அந்தஸ்தர்களேயாகும்.

கேள்வி—: ஒரு வர்ணத்தவர்களுக்குப் பிறந்த குழந்தை மற்றோர் வர்ணத்தவனாக ஆய்விட்டால் அவனைப்பெற்ற தாய் தகப்பனார்களைக் காப்பாற்றுவது யார்? அன்றி வம்ச விருத்தியும் கெட்டுவிடாதா? இதற்கென்னசெய்வது?

விடை—: பெற்றோர்களைப் பிரிவதால் வம்சவிருத்தி கெடாது. ஏனென்றால் அவர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சமமான சுயவர்ணக் குழந்தைகளை வித்யாசபை, அரசசபைகளின் மூல்யமாய் அடைகின்றார்கள். இவ்வர்ண வியவஸ்தையை பெண்களுக்கு 16 வருடங்கள், புருடர்களுக்கு 25 வருடங்கள் பரீட்சையிலிருந்து நிர்ணயிக்கவேண்டும். இவ் விதிப்படியான ப்ராம்மணனை ப்ராமணியும், க்ஷத்திரியனை, க்ஷத்திரியும் மற்றவர்களும் தங்கள் சுய வர்ணத்தைச் சேர்ந்தவர்களை மணம் புரியவேண்டும். அப்போதே கடைசிவரை அவர்கள் அன்புடன் ஒத்துவாழமுடியும். இப்போது இந் நான்கு வர்ணத்தவர்களின் குணகர்மஸ்வபாவங்களை ஆராய்வோம்—:

अध्यापनमध्ययनं यजनं याजनं तथा ।
दानं प्रतिग्रहश्चैव ब्राह्मणानामकल्पयत् ॥

(மனு—1—88).

शमो दमस्तपः शौचं क्षान्तिरार्जवमेव च ।
ज्ञानं विज्ञानमास्तिक्यं ब्रह्मकर्म स्वभावजम् ॥

(பக-கீதை—18—42).

கற்றல் கற்பித்தல், யாகம்செய்தல் செய்வித்தல், தானமளித்தல் யேற்றல், ஆகியவைகள் ப்ராம்மணர்களின் தொழில்களாகும். ஆனால் "**प्रतिग्रहः प्रत्यवरः**" (மனு). வாங்கிக்கொள்ளுதல் நீச கர்மமாகும். மனதிலே ஒருபோதும் அதர்மமான எண்ணம் உண்டாகக்கூடாது. கண், காது முதலியவைகள் ஒருபோதும் அதர்மமானதில் உபயோகப் படக்

கூடாது. சதா மறைமாணவத்துடனிருந்து தர்மாசரணத்தைக் கைக்கொள்ளவேண்டும். —:

अद्भिर्गात्राणि शुध्यन्ति मनः सत्येन शुध्यति ।
विद्यातपोभ्यां भूतात्मा बुद्धिर्ज्ञानेन शुध्यति ॥

(மனு—5—109).

ஜலத்தால் வெளி அவயவங்களும், ஸத்யாசாரத்தால் மனமும், வித்தை, தர்மானுஷ்டானத்தால் ஜீவாத்மாவும், ஞானத்தால் புத்தியும் சுத்தமாகின்றது. உள்ளே ராக த்வேஷாதி குற்றங்களையும், வெளியின் அசுத்தத்தையும் சதா சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். சத்யா சத்யத்தை ஆராய்ந்து சத்தியங் கைக்கொண்டு அசத்தியத்தை நீக்குவதால் சகலமும் சுத்தியடைகின்றன. நிந்தை ஸ்துதி, சுகதுக்கம், சீதோஷ்ணம், பசிதாகம், லாப நஷ்டம், மாநுவமானம், ஆதி சந்தோஷ துக்கங்களை நீக்கி திடமான நிச்சயத்துடனிருத்தல் (சாந்தியாகும்). மதுரமொழி, நிரபிமானம், சரளஸ்வபாவம் முதலியவைகளைக் கொண்டு கபட தோஷத்தை விலக்கி இருத்தல் (ஆர்ஜவம்). சகலவேதாதி சாஸ்த்திரங்களை சாங்கோபாங்கத்துடன் கற்று கற்பிக்குந் திறமை பெற்று சத்தியத்தை சத்தியமாகவே சொல்லி சொல்வித்திருத்தல் (க்ஞானம்). பூமியிலிருந்து பரமேஸ்வரன் பர்யந்தமுள்ள சகல பதார்த்தங்களின் விசேஷங்களை உபயோகங்களுடன் அறிந்திருத்தல் (விக்ஞானம்). எப்போதும் வேத, ஈஸ்வர, முக்தி, பூர்வபாஜன்ம, தர்ம, வித்யா, ஸத்ஸங்க, மாதா, பிதா, ஆசார்ய அதிதிகளின் சேவைகளைக் கைவிடாதிருத்தல், நிந்திக்காதிருத்தல், (ஆஸ்திக்ய). இக் குணங்களெல்லாம் உடையவனே ப்ராம்மணனாகும்.

प्रजानां रक्षणं दानमिज्याध्ययनमेव च ।
विषयेष्वप्रसक्तिश्च क्षत्रियस्य समासतः ॥

(மனு—1-89).

शौर्यं तेजो धृतिर्दाक्ष्यं युद्धे चाप्यपलायनम् ।
दानमीश्वरभावश्च क्षात्रं कर्म स्वभावजम् ॥

(பக்கீ—18-43).

அநியாயங்களிலிருந்தும், ஆபத்துக்களிலிருந்தும் மக்களைக் காப்பாற்றுதல், வித்தைக்காகவும், அறிவாளிகளுக்காகவும் பெரும் தானங்களை யீதல், அக்னிஹோத்ராதியாகங்களைச் செய்தல் செய்வித்தல், வேதாதி சாஸ்த்திரங்களைக் கற்றல் கற்பித்தல், வீர்ய நஷ்டமில்லாமல் காப்பாற்றி சதா தன் உள்ளும் புறம்பும் பலமுடையதாகச் செய்துகொள்ளல் (1) ஆயிரக் கணக்கான விரோதிகளின் முன்னிலையிலும் பயமின்றி யுத்தம் செய்யத் துணிதல். சதா தாழ்மையில்லாமல் சுதந்திர புருடனாயிருத்தல், தைர்யத்துடனிருத்தல், அரசன், குடிகள் முதலியவர்களின் விவகாரங்களிலும், சாஸ்திரங்களிலும் சதா கூர்மையுடனிருத்தல், யுத்தங்களில் சிறிதும் சந்தேகங் கொள்ளாமல் துணிந்து யுத்தம் செய்தல், எதிரிகளை முறியடிக்கச் செய்தல் முதலிய யுத்ததந்திரங்களில் நன்கு தேர்ந்திருத்தல், தானம் செய்வதில் பின்வாங்காமை, ஒருவருடன் சொன்ன வார்த்தையை எப்படியாவது நிறைவேற்றி வைத்தல் ஆகிய இக் கருமங்களைப் பெற்றுள்ளவன் க்ஷத்திரியனாகும்.

पशूनां रक्षणं दानमिज्याध्ययनमेव च ।
वणिक्पथं कुसीदं च वैश्यस्य कृषिमेव च ॥

(மனு—1-90).

பசுவாதி மிருகங்களைக் காப்பாற்றுதல், வித்தை, தர்மம் முதலியவைகளின் அபிவிருத்திக்காக வேண்டிய தானம் புரிதல், அக்னிஹோத்ராதி வேள்விகளைப் புரிதல், வேதாதி சாஸ்த்திரங்களைப் படித்தல், சகலவிதமான வியாபாரங்களையும் புரிதல், குறைந்த வட்டி (100-க்கு—4-6, 8 அணு) வாங்குதல், அசலுக்குமேல் வட்டியை வாங்காமை என்றால் 1-ரூபாய் கொடுத்தால் 100 வருடங்கள் ஆனபோதிலும் இரண்டு ரூபாய்களுக்குமேல் வாங்க-கொடுக்க லாகாது, உழவுத் தொழிலைச் செய்தல். இவைகளை யுடையவர்கள் வைஸ்யர்களாகும்.

एकमेव तु शूद्रस्य प्रभुः कर्म समादिशत् ।
एतेषामेव वर्णानां शुश्रूषामनसूयया ॥

(மனு—1-91.)

நிந்தை, துவேஷம், அபிமானம் ஆகிகுணங்களை விட்டு மற்ற மூன்று வர்ணத்தவர்களின் சேவைகளைச் செய்து, அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு வாழ்ந்திருத்தல் சூத்திரர்களின் காரியங்களாகும்.

இவைகளே வர்ணங்களாகும். யார்யார் எந்தெந்த கர்மங்களை யனுசரிக்கின்றார்களோ அவரவர்களை அந்தந்த வர்ணத்தாராக எண்ணவேண்டும். இந்த விதிகளை அனுசரிப்பதால் சகல மனிதர்களும் மேன்மையை அடைகிறார்கள். இவ்விதிகளை யனுசரிப்பதால் மேல் வர்ணத்தவர்கள் தங்கள் குழந்தைகள் சூத்திரனாகாமற்படி காப்பாற்றுவதற்காக உண்மையான சந்தியா விதிகளைக் கற்பிப்பார்கள். நீசவர்ணத்தவர்களும் மேல்வர்ணத்தையடைய முயற்சித்து சதா நல்ல

காரியங்களையே புரிந்துவருவார்கள். வித்யா, தர்ம ப்ரசாரங்கள் செய்யும் தொழிலை ப்ராம்மணர்களுக்களித்து விடவேண்டும். ஏனென்றால் அவர்கள் பூர்ணவித்யா, தர்மவான்களாவதினால் அத் தொழிலைச் சரிவரச்செய்து வருவார்கள். க்ஷத்திரியர்களுக்கு அரசாங்கத்தைக் கொடுத்து விடவேண்டும். இதனால் அரசாங்கம் என்றும் அழியாது இருக்கும். பசு பாலனங்களை வைஸ்யர்களுக்குக் கொடுக்கவேண்டும். அவர்களே இக்காரியங்களைச் சரிவர புரிந்து வருவார்கள். சேவைத் தொழில்களை சூத்திரர்களுக் களிக்கவேண்டும். அவர்கள் மனோபலமின்றி சரீரபலமுடையவர்களானதினால் இக்காரியங்களைச் செவ்வனே புரிந்துவருவார்கள். இவ்வாறு வர்ணத்தவர்களை சரிவர பாலிக்கும்படிச் சொல்லி கவனித்து வரவேண்டியது அரசனின் கடமையாகும்.

விவாகத்தின் லக்ஷணம்—:

ब्राह्मो दैवस्तथैवार्षः प्राजापत्यस्तथाऽसुरः ।
गन्धर्वो राक्षसश्चैव पैशाचश्चाष्टमोऽधमः ॥ (மனு—6-21.)

மணங்கள் எட்டுவிதப்படும். மறைமாணவதர்மத்தை முழுதும் சரிவர அனுஷ்டித்து, ஒரேவித குணகர்மங்களையுடைய தம்பதிகளுக்கு மணம்புரிதல் ப்ராம்மமணம் ஆகும். யாகத்தைப்புரிந்து அதில் உதவிபுரியும் ருத்விக்குக்கு அலங்காரம் செய்து கன்னிகையையளித்தல் தைவமணமாகும். பிள்ளையிடமிருந்தேதாவது பெற்றுக்கொண்டு பெண்ணையளித்தல் ஆர்ஷமணமாகும். தர்மவிருத்திக்காகவே செய்யப்படுதல் ப்ராஜாபத்யமணம் ஆகும். பெண் — புருடனுக்கு எதாகிலுமளித்து மணம்புரிதல் அசுரமணம் ஆகும். நியம,

காலங்களின்றி இச்சையின்பேரில் தம்பதிகள் கலந்துகொள்ளல் காந்தர்வமணம் ஆகும். சண்டைபுரிந்து அல்லது மோசம் செய்து பெண்ணை மணத்தல் ராக்ஷஸமணம் ஆகும். தூங்கும், கள் முதலியவைகளையருந்தி மயக்கமடைந்திருக்கும் பெண்ணைச்சேர்தல் பைசாசமணம் ஆகும். இவைகளில் ப்ராம்மமணம் மிகுந்த மேலானதாகும், தைவ ; ப்ராஜாபத்ய மணங்கள் மத்திமமாகும், ஆர்ஷ, அசுர, காந்தர்வ, ராக்ஷஸ மணங்கள் அதமமாகும். பைசாசமணம் மிகுந்த நீசமானதாகும். இதனால் பெண்ணும் புருடரும் யௌவன வயதில் தனியாகச் சேர இடந்தரலாகாது. ஏனென்றால் அச்செய்கை தூஷணத்திற்கிடந்தருவதாகிறது. ஆனால் பெண் புருடர்கள் இன்னும் மறைமாணவத்தைப் பூர்த்திசெய்ய 1 வருடம் அல்லது 6 மாதங்களேயிருக்கும்போது இருவர்களின் உருவப் படங்களை (போடோ) பெண்பள்ளி உபாத்தியாயினி புருடர் பள்ளி உபாத்தியாயருக்கும், அவர் இவருக்கும் அனுப்பி வைக்கவேண்டும். அத்துடன் இருவர்களுடையவும் வாழ்க்கைச் சரித்திரத்தையும் குணகர்ம ஸ்வபாவங்களையும் உபாத்திமார்கள் ஆராய்ந்து தெரிந்துகொள்ளவேண்டும். பிறகு படத்தைக்கொண்டும், வாழ்க்கைச் சரித்திரத்தைக் கொண்டும் இப்பெண்ணுக்குத்தகுந்த புருடன் இவன் என்றும் இவனுக்குத் தகுந்த மனைவி இவள் என்றும் தீர்மானித்தபின் அப் படங்களை அவரவர்கள் (பெண்ணின் படத்தை புருடனுக்கும் புருடன் படத்தை பெண்ணுக்கும்) வசம் கொடுக்கவேண்டும். அதைக்கண்டபின் அவர்களின் எண்ணங்களையும் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்களும் சம்மதப்பட்டுவிட்டால் இவர்களின் இல்நுழைச்சடங்கு (சமாவர்த்தனங்)

களையும் ஒரே நாளில் செய்யவேண்டும். தம்பதிகள் உபாத்தியாயர்கள் முன்னிலையிலேயே மணம் செய்துகொள்ள விரும்பின் அங்கேயும், இன்றேல் தாய் தகப்பனர் வீடுவந்த பின் அங்கேயும் மணம்புரியலாம். அவர்கள் சம்மதித்த போது உபாத்தியாயர்கள், தாய், தகப்பன், பண்டிதர்கள் முன்னிலையில் தம்பதிகளிருவரும் சாஸ்திரார்த்த தர்க்கங்களைப் புரியவேண்டும். ஏதாவது மறைவானவைகளைக் குறித்துப் பேசுவேண்டுமானல் காகிதங்களில் எழுதிக்கொடுத்து விடைகளைத் தெரிந்துகொள்ளவேண்டும். விவாக நிச்சயம் ஏற்பட்ட நாளிலிருந்து இருவருக்கும் நல்ல ஆகாரங்களை யளித்துவர வேண்டும். அதனல் மறை மாணவத்தில் பட்ட கஷ்டங்களெல்லாம் தீர்ந்து வெகு சீக்கிரத்தில் உடல் தேர்ந்து வரும். பிறகு பெண் மாதவிலக்காகி சுத்தியானபோது தடவைத் (யாககுண்டம்) தயாரித்து நல்ல சுகந்தாதி பொருள்களை அருகுவைத்து பெரியோர்களுக்கு உபசாரம் செய்யவேண்டும். பிறகு ருதுதானம் செய்யத் தகுதியான தினத்தையறிந்து அந்த நாளில் “சம்ஸ்காரவிதி” நூலில் சொல்லியுள்ளபடி சகல காரியங்களையும் நடத்திக் கொள்ளவேண்டும். பிறகு மத்ய இரவுக்குள் பாணிக்ரஹணத்திலிருந்து சகல விதிகளையும் பூராவும் முடித்துப்பின் மகப்பேற்றுச் சடங்கை (கர்ப்பாதானத்தை)ச் செய்யவேண்டும். வீர்யத்தை மற்றக் காலங்களில் நாசம் செய்யாது பார்த்துக் கொள்ளவேண்டும். பலமுடைய வீர்யத்தால் பிறக்கும் குழந்தைகளும் நல்ல பலமுடையவைகளாகும். வீர்யமானது கற்பாசயத்தில் விழும்போது பெண் புருடர்களிருவரும் மூக்குடன் மூக்கு, கண்களுடன் கண்கள்

வைத்து சரீரத்தைச் சிறிதும் அசைக்காமல் வைத்துக் கொள்ளவேண்டும். புருடன் தன் உடலை தளர்த்தியாக வைத்துக் கொள்ள பெண் தன் அபானத்தை மேலுக் கிழுத்து வைத்துக் கொள்ளவேண்டும். குறியை மேல்பக்க மிழுத்து வீர்யத்தை மேலுக்குச் செலுத்தி கர்ப்பப்பையில் நிலைக்கச் செய்ய வேண்டும். * பிறகு இருவரும் சுத்தமான நீரால் ஸ்னானம் செய்யவேண்டும். கர்ப்பம் நிலைத்ததென்று அப்போதே தெரிந்து கொள்ளா விட்டாலும் 1 மாதம் கழிந்தபின் மாதவிலக்காகாமலிருப்பதைக்கண்டு தெரிந்து கொள்ளலாம். சுக்கு, கேஸரி, சாலாமிஸ்ரீ முதலியவைகளை யிட்டுக்காய்ச்சிய குளிர்ந்த பாலை இருவரும் அருந்தி தனித்தனியாகப்படுக்க வேண்டும். இவ்விதியை ஒவ்வொரு முறை மகப் பேற்றுக்கும் அனுசரிக்கவேண்டும். கற்பநிலை கண்ட 1 வருடம்வரை சேர்க்கை கொள்ளலாகாது. இதை யனுசரித்தால் குழந்தை உத்தமமானதாக இருக்கும். மற்றும் பிறக்கும் குழந்தைகளும் உத்தமமானவைகளாகவே பிறக்கும். வீர்ய நஷ்டத்தால் பிறக்கும் குழந்தைகள் அற்பாயுளுடையவைகளாகவும் வியாதிகளையுடையவைகளாகவும் பிறக்கின்றன. வீர்யம் கனவிலும் நஷ்டமாகாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். இதனால் கர்ப்பத்திலுள்ள பிண்டம் நன்கு வளர்ந்து பல பராக்ரமம் பொருந்தி 10 வது மாதத்திலே துன்பமொன்று மின்றி பிறக்கிறது. கர்ப்பிணி யெப்போதும் புத்தி பலத்தை நாசம் செய்யும் பொருள்களை அருந்தலாகாது. நெய், பால், நல்ல அரிசிச் சாதம், கோதுமை முதலியவைகளையும் மற்றும் கால

---

* இதற்குமேல் இதைச் சொல்வது உசிதமாகத் தோன்றவில்லை. இதிலிருந்து மற்றவைகளையும் அறிந்து கொள்ளவேண்டும்.

11

தேசங்களை யனுசரித்தும் ஆகாரங்களைப் புசித்துவரவேண்டும். கர்ப்பிணிக்கு 2 சடங்குகளுண்டு. 4ன்காம் மாதத்தில் (பும்ஸவனம்) சுதர்வயச் சடங்கும், 8வது மாதத்தில் (சீமந்தோன்னயனம்) அகமத்தச் சடங்கும் செய்யவேண்டும். குழந்தை பிறந்தபோது குழந்தையினதும் தாயாரினதும் உடம்பை மிகுந்த பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். என்றால் நன்றாகக்காய்ச்சி ஆறி சிறிது சூடாயிருக்கும் ஜலத்தால் தாயையும், குழந்தையையும் குளிப்பாட்டவேண்டும். பிறகு குழந்தையின் நாபிக்கொடியை சுத்தமான கயிற்றால் கட்டி 4ன்கு அங்குலம்விட்டு அறுக்கவேண்டும். சரீரத்தி லுள்ள துளிரத்தமும் வெளிச்செல்லாதபடி தந்திரமாய்க் கட்டவேண்டும். பிறகு அந்த இடத்தைச் சுத்திசெய்து நல்ல வாசனைப் பொருள்களைக்கொண்டும் நெய்யைக்கொண்டும் வேள்வி புரியவேண்டும். பிறகு தகப்பன் குழந்தையின் காதில் "ஓம் வேதோऽஸி" (உன்பெயர் வேதமாகும்) என்று சொல்லி நெய், தேன் இவைகளின்கலப்பை தங்கக் குச்சியில் துவைத்து குழந்தையின் நாக்கின்மேல் "ஓம்" என்று எழுதி அந்தக் கலப்பை உள்ளுக்குச் செலுத்த வேண்டும். பிறகு குழந்தையைத் தாயிடம் கொடுத்து விடவேண்டும். பிறகு தாய் குழந்தைக்குப்பாலூட்டவேண்டும். தாயார் பால் ஊட்டவிரும்பவில்லையாயின் மற்றோர் பெண்ணை பரீட்சித்து அவளைக்கொண்டு ஊட்டிவைக்கவேண்டும். பிறகு மற்றோர் காற்றுவாட்டமுள்ள அறையை நன்கு சுத்தம் செய்து, அதில் வேள்வி முதலியவைகள் காலை மாலை யிரு வேளைகளிலும் செய்து அவ்வறைக்கு ப்ரசவித்த தாயையும் குழந்தையையும் மாற்றவேண்டும். தாயாரும் 6 தினங்கள்

வரை குழந்தைக்குப் பாலூட்டவேண்டும். அன்றி தன் உடலின் வளர்ச்சிக்கேற்ற ஆகாரங்களை அருந்திவரவேண்டும். 6 வது நாள் தாயார் குழந்தைக்குப் பாலூட்ட ஓர் தாதியை நியமித்துவிட்டு வெளிப்படவேண்டும். தாதிக்கு நல்ல உணவாதிகளையளித்துவரவேண்டும். தாதியானவள் குழந்தையை எவ்வளவு அன்புடன் காப்பாற்றினபோதிலும் தாயார் தன் முழுகவனத்தையும் குழந்தையின்மேல் வைத்திருக்கவேண்டும். குழந்தை எந்தவித கெட்டவார்த்தையும், காரியமும் தெரிந்துகொள்ளாதபடி பாதுகாக்கவேண்டும். தாயார் பாலை வற்றச்செய்யும் லேபனங்களை யிட்டு பாலை வற்றச் செய்துவிடலாம். ஆகாராதிகளையும் கவனித்துவரவேண்டும். பிறகு நாமகரணாதி சம்ஸ்காரங்களை சம்ஸ்காரவிதிப்படி செய்துகொண்டு போகவும். மறுபடி அடுத்தமுறை பெண் மாதவிலக்காகி சுத்தமடைந்தபின் ருதுதானம் (சூதகபருவம்) செய்யவேண்டும்.

ऋतुकालाभिगामी स्यात्स्वदारनिरतः सदा ।
ब्रह्मचार्यैव भवति यत्र तत्राश्रमे वसन् ॥

(மனு—3—50).

பெண்ணுடன் சந்தோஷசித்தனாய் ருதுதானசேர்க்கையைப் புரிபவன் இல்லறத்தனாயினும் மறை மாணவனுக்குச் சமானமேயாகும்.

सन्तुष्टो भार्यया भर्त्ता भर्त्रा भार्या तथैव च ।
यस्मिन्नेव कुले नित्यं कल्याणं तत्र वै ध्रुवम् ॥ १ ॥
यदि हि स्त्री न रोचेत पुमांसन्न प्रमोदयेत् ।
अप्रमोदात्पुनः पुंसः प्रजनं न प्रवर्त्तते ॥ २ ॥

स्त्रियां तु रोचमानायां सर्वं तद्रोचते कुलम् ।
तस्यां त्वरोचमानायां सर्वमेव न रोचते ॥ ३ ॥

(மனு—3—60—6).

மனைவியுடன் புருடன், புருடனுடன் மனைவி சந்தோஷமாக வசிக்கும் இல்லத்திலேயே சௌபாக்கிய ஐஸ்வர்யம் வசிக்கின்றது. கலகத்துடன் வசிக்கும் இல்லத்தில் தரித்திரமே குடிகொண்டிருக்கும் (1). புருடனை அன்புடன் ஆதரிக்காத மனைவியிடம் புருடனுக்கு அன்போ ஆசையோ உண்டாவதில்லை (2). மனைவி சந்தோஷத்துடனிருக்கு மில்லத்திலுள்ள சகலரும் சந்தோஷத்துடனிருப்பார்கள். துக்கத்துடனிருக்கு மில்லத்தில் சகலரும் துக்கத்தையே அடைகிறார்கள் (3).

पितृभिर्भ्रातृभिश्चैताः पतिभिर्देवरैस्तथा ।
पूज्या भूषयितव्याश्च बहुकल्याणमीप्सुभिः ॥ १ ॥
यत्र नार्यस्तु पूज्यन्ते रमन्ते तत्र देवताः ।
यत्रैतास्तु न पूज्यन्ते सर्वास्तत्राऽफलाः क्रियाः ॥ २ ॥
शोचन्ति जामयो यत्र विनश्यत्याशु तत्कुलम् ।
न शोचन्ति तु यत्रैता वर्द्धते तद्धि सर्वदा ॥ ३ ॥
तस्मादेताः सदा पूज्या भूषणाच्छादनाशनैः ।
भूतिकामैर्नरैर्नित्यं सत्कारेषूत्सवेषु च ॥ ४ ॥

(மனு—3—55—57—59).

பிதா, சகோதரன், புருடன், தேவரன் இவர்களை சதா அன்பு அலங்காரங்களுடன் வைத்திருக்கவேண்டும். அவர்களும் நன்மையை அளிக்கும் முறைகளையே கையாளவேண்டும் (1). எந்த இல்லங்களிலே பெண்கள் பூஜிக்கப்படு

கின்றனரோ அந்த இல்லங்களிலே சதா ஆனந்தம் தாண்டவமாடும். பெண்கள் பூஜிக்கப்படாத இல்லங்களிலே எல்லாக் காரியங்களும் பலனில்லாதவைகளாகும் (2). பெண்கள் துக்கமடையும் இல்லங்கள் சீக்கிரத்திலே அழிந்துவிடும். பெண்கள் சந்தோஷத்துடனிருக்கும் இல்லங்களிலே சதா ஆனந்தம் குடிகொண்டிருக்கும் (3). ஆகையால் ஐஸ்வர்யாபிவிருத்தியை நாடும் புருடர்கள் முக்கியமான விசேஷங்களிலே பெண்களை ஆடை யாபரணங்களாலும் நல்வார்த்தைகளாலும் உபசரிக்க வேண்டும் (4). புருடர்மனைவிகள் ஒருவரை ஒருவர் முதன் முதலில் சந்திக்கும்போது இருவரும் "நமஸ்தே" என்று சொல்லிக்கொள்ளவேண்டும்.

सदा प्रहृष्टया भाव्यं गृहकार्येषु दक्षया ।
सुसंस्कृतोपस्करया व्यये चामुक्तहस्तया ॥

(மனு—5—150).

பெண் சதா வீட்டு வேலைகளைச் சுருசுருப்புடன் செய்துகொண்டு எல்லாவற்றையும் சதா சுத்தத்துடன் வைத்திருக்க வேண்டும். வரவுக்கு மிஞ்சின செலவை செய்யக்கூடாது. சகல பொருள்களையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். நல்ல பொருள்களையறிந்து பக்குவம் செய்யவேண்டும். புருடன் சொல்லை அனுசரித்து (தர்மமார்க்கத்தில்) நடக்கவேண்டும் வீட்டு வேலைகளை வேலைக்காரிபோல் செய்துவரவேண்டும். வீட்டுவேலைகளில் ஒன்றையும் பாக்கி வைக்கக்கூடாது.

स्त्रियो रत्नान्यथो विद्या सत्यं शौचं सुभाषितम् ।
विविधानि च शिल्पानि समादेयानि सर्वतः ॥

(மனு—2—240).

உத்தமப்பெண்ணானவள் பலவிதமான ரத்தினம், வித்தை, சத்யம், சுத்தம், நல்வார்த்தை யிவைகளை சகல தேசங்களிலிருந்தும், சகலரிடத்திலிருந்தும் கிரகிப்பாள்.

सत्यं ब्रूयात् प्रियं ब्रूयान्न ब्रूयात् सत्यमप्रियम् ।
प्रियं च नानृतं ब्रूयादेष धर्मः सनातनः ॥ १ ॥
भद्रं भद्रमिति ब्रूयाद्भद्रमित्येव वा वदेत् ।
शुष्कवैरं विवादं च न कुर्यात्केनचित्सह ॥ २ ॥

(மனு 4—138—139).

சத்யமும், ப்ரியமுமானவைகளையே பேசவேண்டும். சத்ய, ப்ரியமல்லாதவைகளை ஒருபோதும் பேசக்கூடாது. மிகுந்த ப்ரியமானதாயினும் பொய்யை பேசக்கூடாது. (1) சகலருக்கும் நன்மையைப் பயக்கும் வார்த்தைகளையே சதா பேசவேண்டும். அபராதமின்றி ஒருவரிடம் பகைமை கொள்ளாதே, ஒருவரிடமும் அனாவசியமானவைகளைப் பேசாதே (2).

पुरुषा बहवो राजन् सततं प्रियवादिनः ।
अप्रियस्य तु पथ्यस्य वक्ता श्रोता च दुर्लभः ॥

(உத்யோகபர்வம்—விதுரநீதி).

ஏ திருதராஷ்ட்ரா! உலகஜனங்களை சதா சந்தோஷ சித்தர்களாக வைத்துக்கொண்டிருக்க சதா ப்ரியமானவை களையே பேசும் புகழ்ச்சியாளர்கள் சிலரே யிருக்கின்றார்கள். நன்மையானவைகளைச் சொல்வோர்களையும் கேட்போர்களை யும் காண்பதே அரிதாகும். ஏனென்றால் சத்புருடர்கள் சதா தங்களின் குற்றங்களையும், பிறரின் நற்றங்களையுமே

எடுத்துச் சொல்வார்கள். அதேபோல் பிறரும்கூட தன் குற்றத்தை யெடுத்துச் சொல்லி பிறரின் நற்றத்தைச் சொல் வதைக் கேட்க சந்தோஷமடைவார்கள். ஆனல் மூடர்கள் தங்களைப் புகழ்ந்து பிறரை இகழ்கிருர்கள். பிறர் தன் குற் றங்களைச் சொல்வதைக் கேட்கும்வரை மனிதர்கள் தங்க ளின் குற்றங்களை நீக்கிக்கொள்ள முடியாது. ஒருவரையும் எப்போதும் நிந்திக்கக்கூடாது.

गुणेषु दोषारोपणमसूया, दोषेषु गुणारोपणमप्यसूया ।
गुणेषु गुणारोपणं दोषेषु दोषारोपणं च स्तुतिः ॥

குணத்தில் தோஷத்தையும், தோஷத்தில் குணத்தையும் காணல் நிந்தையாகும். குணத்தில் குணத்தையும் தோஷத் தில் தோஷத்தையும் காணல் ஸ்துதியாகும். எனின் பொய் பேசுதலின் பெயர் நிந்தை, மெய் பேசுதலின் பெயர் ஸ்துதி யாகும்.

बुद्धिवृद्धिकराण्याशु धन्यानि च हितानि च ।
नित्यं शास्त्राण्यवेक्षेत निगमांश्चैव वैदिकान् ॥ १ ॥
यथा यथा हि पुरुषः शास्त्रं समधिगच्छति ।
तथा तथा विजानाति विज्ञानं चास्य रोचते ॥ २ ॥

(மனு—4—19—20).

சீக்ரபுத்தி, தனம், ஹிதம், விருத்திகளைச் செய்யும் வேதங்களைத் தினமும் கேட்டுக் கேட்பிக்கவேண்டும். மறை மாணவ வித்தையை அனுசரித்து விசாரித்து விசாரிக்கச் செய்து கொண்டிருக்கவேண்டும். (1) எவ்வாறெவ்வாறு மனிதர்கள் சாஸ்திரங்களை யறிகின்ருர்களோ அவ்வாறவ்

வாறே அவர்களின் விக்ஞானமும் வளர்ந்துகொண்டு போகின்றது. அதிலே ருசியும் ஏற்படுகின்றது (2).

ऋषियज्ञं देवयज्ञं भूतयज्ञं च सर्वदा ।
नृयज्ञं पितृयज्ञं च यथाशक्ति न हापयेत् ॥ १ ॥

(மனு—4—21).

अध्यापनं ब्रह्मयज्ञः पितृयज्ञस्तु तर्प्पणम् ।
होमो दैवो बलिर्भौतो नृयज्ञोऽतिथिपूजनम् ॥ २ ॥

(மனு—3—70).

स्वाध्यायेनार्चयेदृषीन् होमैर्देवान् यथाविधि ।
पितॄन् श्राद्धैश्च नॄनन्नैर्भूतानि बलिकर्मणा ॥ ३ ॥

(மனு—3—81).

மறைமாணவத்தில் சொல்லியுள்ள யக்ஞம் வேதாதி சாஸ்த்திரங்களைப் படித்தல் படிப்பித்தல், சந்த்யோபாஸனை யோகாப்யாசங்கள் செய்தல், தேவயக்ஞம் என்பது வித்வான்களைச் சேர்தல், சேவித்தல், அவர்களின் சுத்தமான நல்ல குணங்களை யேற்று அதன்படி நடத்தல், வித்தையின் மேன்மையை நாடுதல் ஆகும். இவ்விரண்டு யக்ஞங்களையும் காலை மாலை இருவேளைகளிலும் செய்யவேண்டும்.

सायं सायं गृहपतिर्नो अग्निः प्रातः प्रातः सौमनसस्य दाता ॥ १
प्रातः प्रातर्गृहपतिर्नो अग्निः सायं सायं सौमनसस्य दाता ॥ २

(அதர்—19—7--3,4).

तस्मादहोरात्रस्य संयोगे ब्राह्मणः सन्ध्यामुपासीत ।
उद्यन्तमस्तं यान्तमादित्यमभिध्यायन् ॥ ३ ॥

(ஷட்விம்சப்ராம்மணம்—4—5)

न तिष्ठति तु यः पूर्वां नोपास्ते यस्तु पश्चिमाम् ।
स शूद्रवद्बहिष्कार्यः सर्वस्माद् द्विजकर्मणः ॥ ४ ॥

(மனு—1—103).

சாயங்காலத்தில் செய்யும் யக்ஞத்தின் பொருள்கள் காலைவரை வாயுவை சுத்தமுடன் வைத்துக்கொள்கின்றன. அதனால் சுகம் எற்படுகின்றது. (1) காலையில் செய்யும் யக்ஞத்தின் பொருள்கள் மாலைவரை வாயுவை சுத்தமுடன் வைத்துக்கொள்கின்றன. அதனால் பலம், ஆரோக்யம் எற்படுகின்றது. (2) இதனால் சூர்ய உதயாஸ்தமன காலங்களில் அவசியம் யக்ஞம் புரிந்து கடவுளையும் தொழவேண்டும். (3) இவ்விரண்டு வேளைகளிலும் யக்ஞம் புரியாதவர்களை அறிவாளிகள் தாழ்மையாக மதிக்கின்றார்கள். (4).

கேள்வி—: மூன்று வேளையும் கூட்டுவேளைத்தொழுகையை என் செய்யக்கூடாது?

விடை—: மூன்று வேளைகளில் சந்திப்பு கிடையாது. வெளிச்சம் இருட்டுகளின் சந்திப்பு இரண்டு வேளைகளிலேயே யேற்படுகின்றது. அவ்வாறின்றி பகலில் சந்த்யா செய்பவர்கள் இரவில் நடுஜாமத்திலேயும் என் செய்வதில்லை? அப்போதும் செய்வதாயின் ஒவ்வொருமணி, நிமிஷ நேரத்திலும் சந்தியேற்படுகின்றது. அவ்வப்போதும் சந்த்யா செய்யவேண்டாமா? இது முடியாத காரியம். சாஸ்திரங்களிலும் மத்யான்ன சந்த்யாவிற்கு ஆதாரமில்லை. ஆகையால் இரண்டு வேளைகளிலேயே சந்த்யா, யக்ஞம் முதலிய வைகளைச் செய்யவேண்டும். ஆனல் மூன்று வேளையென்

பது இறந்த, நிகழ், எதிர்காலங்களின் பேதமேயன்றி சந்த்யோபாஸனையின் பேதமல்ல. மூன்றாவது—"பித்ருயக்ஞம்" என்றால் கல்வி கற்றீந்த ஆசார்யன், தாய், தகப்பன், ஞானி, கிழவன், யோகி முதலியவர்களைச் சேவித்தலாகும். "பித்ருயக்ஞம்" இரண்டுவிதமாகும். ஸ்ராத்தம், தர்ப்பணம் என இரண்டுவிதங்களாகும். "ஸ்ரார்த்தம்" என்றால் "ஸ்ரத்" என்பது சத்தியத்தின் பெயராகும். "**श्रत्सत्यं दधाति यया क्रियया सा श्रद्धा, श्रद्धया यत् क्रियते तच्छ्राद्धम्**" எந்தக் காரியத்தால் சத்தியம் கிரகிக்கப்படுகின்றதோ அதற்கு 'ஸ்ரத்தை' யென்றும், ஸ்ரத்தையுடன் செய்யப்படும் காரியத்திற்கு "ஸ்ராத்தம்" என்றும் பெயராகும். "**तृप्यन्ति तर्पयन्ति येन पितृन् तत्तर्प्पणम्**" எந்தக் காரியத்தால் தாய், தகப்பன்மார்கள் திருப்தி யடைவார்களோ அந்தக் காரியத்திற்கு "தர்ப்பணம்" எனப் பெயராகும். இவைகள் வாழ்ந்திருப்பவர்களுக்கே யன்றி இறந்துவிட்டவர்களுக்கல்ல.

ओं ब्रह्मादयो देवास्तृप्यन्ताम्। ब्रह्मादिदेवपत्न्यस्तृप्यन्ताम्।
ब्रह्मादिदेवसुतास्तृप्यन्ताम्। ब्रह्मादिदेवगणास्तृप्यन्ताम्॥
इति देवतर्प्पणम्॥

"**विद्वांसो हि देवाः**" (சதபதப்ராம்மணம்).

வித்வான்களையே தேவர்களென்று சொல்லப்படும். நான்கு வேதங்களையும் சாங்கோபாங்கமாகக் கற்றறிந்தவர்களையே "ப்ரம்மா" வென்று சொல்லப்படும். குறைவாகப் படித்தவர்களை தேவ, அல்லது வித்வான்கள் என்று சொல்லப்படும். அவர்களுக்குச் சமமான பெண்களை தேவீ என்று

சொல்லப்படும். அவர்களுக்குச் சமமான புத்திரர்களையும், சேவகர்களையும் திருப்தி செய்வித்தலே ஸ்ராத்தம் அல்லது தர்ப்பணமாகும்.

अथर्षितर्पणम् ।

ओं मरीच्यादय ऋषयस्तृप्यन्ताम् ।
मरीच्याद्यृषिपत्न्यस्तृप्यन्ताम् ।
मरीच्याद्यृषिसुतास्तृप्यन्ताम् ।
मरीच्याद्यृषिगणास्तृप्यन्ताम् ॥

மரீசியாதிருஷிகளுக்குச் சமமாக கல்விகற்றீபவர்களையும், அவர்களுக்குச் சமமான பெண்கள், புத்திரர்கள், சேவகர்களையும் திருப்தி செய்வித்தல் ருஷிதர்ப்பண மாகும்.

अथ पितृतर्प्पणम् ।

ओं सोमसदः पितरस्तृप्यन्ताम् । अग्निष्वात्ताः पितरस्तृप्यन्ताम् । बर्हिषदः पितरस्तृप्यन्ताम् । सोमपाः पितरस्तृप्यन्ताम् । हविर्भुजः पितरस्तृप्यन्ताम् । आज्यपाः पितरस्तृप्यन्ताम् । [सुकालिनः पितरस्तृप्यन्ताम् ।] यमादिभ्यो नमः यमादींस्तर्पयामि । पित्रे स्वधा नमः पितरं तर्पयामि । पितामहाय स्वधा नमः पितामहं तर्पयामि । [प्रपितामहाय स्वधा नमः प्रपितामहं तर्पयामि ।] मात्रे स्वधा नमो मातरं तर्पयामि । पितामह्यै स्वधा नमः पितामहीं तर्पयामि । [प्रपितामह्यै स्वधा नमः प्रपितामहीं तर्पयामि ।] स्वपत्न्यै स्वधा नमः स्वपत्नीं तर्पयामि । सम्बन्धिभ्यः स्वधा नमः सम्बन्धिनस्तर्पयामि । सगोत्रेभ्यः स्वधा नमः सगोत्रांस्तर्पयामि ॥

"ये सोमे जगदीश्वरे पदार्थविद्यायां च सीदन्ति ते सोमसदः।"

பரமாத்மா, பதார்த்த வித்தைகளில் நிபுணனின் பெயர் "ஸோமஸதன்".

"यैरग्नेर्विद्युतो विद्या गृहीता ते अग्निष्वात्ताः"

அக்னி, இடி இவைகளின் ஞானத்தை யுடையவன் "அக்னிஷ்வாத்தன்".

"ये बर्हिषि उत्तमे व्यवहारे सीदन्ति ते बर्हिषदः"

வித்யாயுக்த காரியங்களில் நிலேயாயிருப்பவன் "பர்ஹிஷத்தன்".

"ये सोममैश्वर्यमोषदङ्गिरसं वा पान्ति पिबन्ति वा ते सोमपाः"

ஐஸ்வர்யரக்ஷகன், ஓடதிகளின் ரசத்தைக் குடிப்பதால் ரோகரகிதனுகி பிறர்களுக்குமதையளித்து வியாதிகளைத் தீர்ப்பவன் "ஸோமபாகன்".

"ये हविर्होतुमत्तुमर्हं भुञ्जते भोज्यन्ति वा ते हविर्भुजः"

துன்பங்களை யுண்டுசெய்யும் பொருள்களை விலக்கி ஆகாரங்களை உண்பவன், உண்பிக்கச் செய்பவன் "ஹவிர்புஜன்".

"य आज्यं ज्ञातुं प्राप्तुं वा योग्यं रक्षन्ति वा पिबन्ति त आज्यपाः"

அறியவேண்டிய பொருள்களைக் காப்பாற்றி, நெய். தயிர் முதலியவைகளைச் சதா வைத்திருப்பவன் "ஆஜ்ய பாகன்;'.

"शोभनः कालो विद्यते येषान्ते सुकालिनः"

நல்ல காரியங்களைச் செய்வதில் சுகரூப சமய மாபவன் "ஸுகாலின்".

"ये दुष्टान् यच्छन्ति निगृह्णन्ति ते यमा न्यायाधीशाः"

துஷ்டர்களைத் தண்டித்து நல்லோர்களைக் காப்பாற்று பவன் "யமன்".

"यः पाति स पिता" குழந்தைகளைக் காப்பாற்று பவன் "பிதா".

"पितुः पिता पितामहः, पितामहस्य पिता प्रपितामहः"

தகப்பனின் தகப்பன் (பாட்டன்) "பிதாமஹன்". பாட்டனின் தந்தை (முப்பாட்டன்) "ப்ரபிதாமகன்".

"या मानयति सा माता" குழந்தைகளை அன்னபா னுதிகளால் போஷிப்பவள் "மாதா"

"या पितुर्माता सा पितामही पितामहस्य माता प्रपितामही।"

தகப்பனின் தாய் (பாட்டி) "பிதாமஹீ". பாட்டி யின் தாய் (முப்பாட்டி) "ப்ரபிதாமஹீ"

தன்மனைவி, சகோதரி, சம்பந்திகள், ஒரே கோத்திரத் துடையவர்கள், மற்ற நல்லபுருடர்கள் முதலியவர்களுக்கு.

கவலையுடன் ஆகாரம், ஆடை முதலிய வேண்டுவனவற்றை உதவி அவர்களின் மனதை திருப்தி செய்வித்தல் "பித்ருஸ்ராார்தம் (அல்லது) பித்ருதர்ப்பண" மாகும்.

ஸ.வஸ்வதேவ யக்ஞமாவது—: காரம், உப்பு முதலியவைகளை நீக்கி அன்னத்தை நிதமும்—:

"वैश्वदेवस्य सिद्धस्य गृह्येऽग्नौ विधिपूर्वकम् ।
आभ्यः कुर्याद्देवताभ्यो ब्राह्मणो होममन्वहम् ॥

(மனு—3-8-4.)

இந்த மந்திரத்தைச் சொல்லி வீட்டு நெருப்பில் ஆகுதியளித்தல். மற்றும் வீட்டிலே நிதமும் சாப்பிடத் தயாரித்த அன்னத்திற் சிறியபாகத்தை

ओं अग्नये स्वाहा । सोमाय स्वाहा । अग्निषोमाभ्यांस्वाहा । विश्वेभ्यो देवेभ्यः स्वाहा । धन्वन्तरये स्वाहा । कुह्वै स्वाहा । अनुमत्यै स्वाहा । प्रजापतये स्वाहा । सह द्यावापृथिवीभ्यां स्वाहा । स्विष्टकृते स्वाहा ॥

என்ற மந்திரங்களைச் சொல்லி வீட்டு நெருப்பில் ஆகுதிகளளிக்க வேண்டும். பிறகு சிறிய இலைத்துண்டுகளில் சாதத்தையிட்டு கிழக்கு முதலாகிய திசைகளில் கிரமமாக

ओं सानुगायेन्द्राय नमः । सानुगाय यमाय नमः । सानुगाय वरुणाय नमः । सानुगाय सोमाय नमः । मरुद्भ्यो नमः । वनस्पतिभ्यो नमः । श्रियै नमः । भद्रकाल्यै नमः । ब्रह्मपतये

नमः । वास्तुपतये नमः । विश्वेभ्यो देवेभ्यो नमः । दिवाचरेभ्यो भूतेभ्यो नमः । नक्तञ्चारिभ्यो भूतेभ्यो नमः । सर्वात्मभूतये नमः ॥

இம் மந்திரங்களைச் சொல்லி வைத்துவர வேண்டும். இவைகளை அச்சமயம் யாராவது அதிதிகள் வந்தால் அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். அல்லது அக்னியில் ஆகுதியளித்து விடவும். பிறகு உப்பு முதலியவைகளைச் சேர்த்த அன்னத்தை ஆறு பாகங்களாக பூமியில் வைக்க வேண்டும். இதற்குப் பிரமாணம்—:

शुनां च पतितानां च श्वपचां पापरोगिणाम् ।
वायसानां कृमीणां च शनकैर्निर्वपेद्भुवि ॥

(மனு—3-92.)

இதன் பிரகாரம்—:

"श्वभ्यो नमः, पतितेभ्यो नमः, श्वपग्भ्यो नमः, पापरोगिभ्यो नमः, वायसेभ्यो नमः, कृमिभ्यो नमः"

என்ற மந்திரங்களால் வைத்துப் பிறகு அவைகளை யாராவது துக்கன், பசியால் வருந்தும் ப்ராணி, நாய், காகம், பூனை முதலியவைகளுக்குக் கொடுத்து விடவேண்டும். இங்கே "நம:" என்றதின் பொருள் "அளித்தல்" ஆகும். இதுதான் மனுஸ்மிருதியாதிகளின் விதியாகும். வீட்டிலே ஹவனம் செய்வதால் வீட்டிலுள்ள காற்று சுத்தமாகின்றது. அறியாது கொல்லப்பட்டவைகளுக்கும் ப்ரதியுபகாரம் செய்யவேண்டும்.

ஐந்தாவது அதிதியக்ஞமாவது—: எதிர்பாரா விதமாக இல்லறத்தனின் வீட்டிற்கு வரும் தர்மவான், சத்யோபதேசிகன், பரோபகாரமே தொழிலாய்க் கொண்டவன், வித்வான், யோகி, சன்யாசி முதலியவர்களை அதிதிகள் என்று சொல்லப்படும். அவர்களுக்கு முதலில் முகம் கை கால் முதலியவைகளைக் கழுவிக்கொள்ள நீரளித்து, அன்னபானுதிகளால் திருப்தி செய்விக்கவேண்டியது இல்லறத்தனின் முக்கியக் கடமையாகும். பிறகு அவர்களிடமிருந்து நல்ல தர்மமார்க்க விஷயங்களை கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் உபதேசத்திற்குத் தகவே தன் நடத்தைகளையும் சீர்திருத்திக் கொள்ளவேண்டும். சமயம் வாய்த்தால் இல்லறத்தர்கள், அரசர்களுக்குங்கூட அதிதி சத்காரம் புரியவேண்டிவரும். ஆனல்—:

पाषण्डिनो विकर्मस्थान् वैडालवृत्तिकान् शठान् ।
हैतुकान् बकवृत्तींश्च वाङ्मात्रेणापि नार्चयेत् ॥

(மனு—4–30.)

(பாஷண்டி) வேதநிந்தகன், வேத விருத்தமான காரியங்களைப் புரிபவன் (விகர்மஸ்த) வேத விருத்தமான காரியகளில் முதன்மையான பொய் பேசுதல், பொருமைப் படல், பிற ஜந்துக்களைக் கொன்று தன் வயிற்றை நிறப்பிக் கொள்ளுதல் முதலிய காரியங்களைப் புரிபவர்களின் பெயர் “வைடாலவ்ருத்திகர்கள்” என்று சொல்லப்படும். (ஶட) மூர்க்கன், துராக்ரஹன், அபிமானி, (ஹைதுக) “நாங்கள் தான் “ப்ரஹ்மம்” உலகம் எல்லாம் மாய்கையாகும், கடவுள் என்பது கற்பிதமே யொழிய உண்மையில் ஒன்றுமே

யில்லை" என்று சொல்லித்திரியும் பொய் வேதாந்திகள் (வகவ்ருத்தி) ஒருகாலைத் தூக்கிநின்று, த்யானம் செய்வதைப் போல் காட்டி, ஏமாற்றி வரும்மீன்களை யருந்திவரும் கொக்கைப்போன்ற மோசக்காரர்கள், வஞ்சகர்கள் முதலியவர்களை வாக்கினாலுங்கூட உபசரிக்கலாகாது. ஏனென்றால் அவர்களை யுபசரித்தால், அவர்கள் மேலும் மேலும்விருத்தியடைந்து இன்னும் கொடிய அதர்மகாரியங்களையெல்லாம் புரிந்துவருவார்கள். தங்கள் நலத்திலே கண்ணுங் கருத்துமாயிருந்து கேவலம் தன் வேலைக்காரன் சுகத்தையுங்கூட கவனியாமல் அவனை துக்கசாகரத்தில் ஆழ்த்துகிறார்கள் சுயநலமிகள்.

இப்பஞ்சமஹாயக்ஞங்களின் பலனாவது—: "ப்ரம்மயக்ஞம்" புரிவதால் வித்தை, சிக்ஷை, தர்மம், நன்னடத்தை ஆதி சுபகுணங்கள் விருத்தியடையும். அக்னிஹோத்திரத்தால் காற்று, மழை, ஜலம் முதலியவைகள் சுத்தியடைந்து மழையினால் உலகத்திற்குச் சுகம் ஏற்படுகின்றது. சுகமான வாயுவை உட்கொள்வதால் ஆரோக்யம், புத்தி, பலம், பராக்ரமம் இவைகள் வளர்ந்து தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களின் அனுஷ்டானங்கள் முடிவதாகும். இதனாலேயே இதற்கு "தேவயக்ஞம்" என்றும் பெயராகும். "பித்ருயக்ஞ" த்தால் தாய் தகப்பன், வித்வான்களின் சேவைகளைப் புரிவதால் அவர்களின் ஞானத்தைத் தான் கற்றுக் கொள்ள ஹேதுவாகும். அதனால் சத்யாசத்யத்தை யறிந்து சத்யங்கைக்கொண்டு அசத்யத்தைநீக்கி சுகத்தைப் பெற வழியுண்டாகிறது. "பலிவைச்வதேவ". த்தால் உண்டாகும் பலன்கள் முன்பு சொல்லியுள்ளதேயாகும். உத்தம அதிதிகள் உலகில் ஏற்படாத காலம்

வரையில் உன்னதியும் ஏற்படுவதில்லை. உலகத்தின் பல பாகங்களிலும் சென்று அறிவைப் பரவச் செய்வதற்கும் வழிகிடையாது. மனித சமூகத்தில் ஒரே தர்மம் நிலையுடனாக வேண்டுமானால் உத்தம அதிதிகள் ஏற்பட்டாகவேண்டும். அதிதிகளின்றி சந்தேக விலக்கு ஏற்படாது. சந்தேக விலக்கின்றி திடநிச்சய புத்தி ஏற்படாது. திடநிச்சயமில்லாமல் சுகமும் கிடையாது.

ब्राह्मे मुहूर्त्ते बुध्येत धर्मार्थौ चानुचिन्तयेत् ।
कायक्लेशांश्च तन्मूलान् वेदतत्त्वार्थमेव च ॥

(மனு—4—92).

காலையில் 4ன்காம் ஜாமத்தில் அல்லது 4 ன்குமணிக்கு படுக்கைவிட்டெழுந்து காலைக்கடன்களைக் கழித்து தர்மார்த்த சரீரரோக நிதானங்களையும், பரமாத்மாவின் தியானத்தையும் புரியவேண்டும். எப்போதும் அதர்மாசரணம் செய்யக் கூடாது. ஏனென்றால்—:

नाधर्मश्चरितो लोके सद्यः फलति गौरिव ।
शनैरावर्त्तमानस्तु कर्त्तुर्मूलानि कृन्तति ॥

(மனு—4—172)

செய்துவிட்ட அதர்மம் எப்போதும் பலனில்லாமற் போகாது. ஆனால் அதர்மத்தைச் செய்யும்போதே அதன் பலனும் ஏற்படுவதில்லை. அதனாலேயே அக்ஞானிகள் அதர்மத்திற்கு அஞ்சுவதில்லை. ஆனால் தாங்கள் புரிந்த—புரியும்—அதர்மம் சிறிது சிறிதாக தங்களின் சுகத்தின் மூலத்தை அறுத்துக்கொண்டு வருகின்றதென அவர்கள் அறியவேண்டும். இக்கிரமத்தின் படியே—:

अधर्मेणैधते तावत्ततो भद्राणि पश्यति।
ततः सपत्नाञ्जयति समूलस्तु विनश्यति ॥

(மனு—4—174)

அதர்மாத்ம மனிதன் தர்மத்தின் மரியாதையைவிட்டு பொய், கபடம், மோசம் இவைகளைக்கைக்கொண்டு, வேதங்களைக்கண்டித்து, நம்பிக்கை மோசமாதி காரியங்களால் அன்னியர்களின் பொருள்களை யபகரித்துக்கொண்டு, மேன்மையை யடைந்ததாக நினைத்து, பிறரிடமிருந்து அநியாயமாக சம்பாதித்த பொருளைக்கொண்டு உண்ணல், உடுத்தல், ஆபரணங்கள் பூணல், வண்டிகளாதி உதவிகளையும் சம்பாதித்துக்கொண்டு சுகத்தையடைந்துக் கொண்டுவந்தபோதிலும், இச்சகல சுகங்களும் திடீரென்று எதிர்பாராவிதமாக நாசமடைந்து விடுவது நிச்சயமாகும். வெட்டுண்ட அடிமாத்தையுடைய மரம் கட்டாயம் சீக்கிரத்தில் அடியுடன் விழுந்து விடுவதைப்போல இவனும் சகல சம்பத்துக்களுடனும் அழிந்துவிடுவது நிச்சயமாகும்.

सत्यधर्मार्यवृत्तेषु शौचे चैवारमेत्सदा।
शिष्यांश्च शिष्याद्धर्मेण वाग्बाहूदरसंयतः ॥

[மனு—4—175)

பக்ஷபாதமின்றி வேதமத தர்மத்தையறிந்து சத்திய வழியில் சென்று, தன் மாணவர்களையும் தன் வழியிலேயே செலுத்துபவனே வித்வான் ஆகும்.

ऋत्विक्पुरोहिताचार्य्यैर्मातुलातिथिसंश्रितैः।
बालवृद्धातुरैर्वैद्यैर्ज्ञातिसम्बन्धिबान्धवैः ॥

मातापितृभ्यां यामीभिर्भ्रात्रा पुत्रेण भार्यया ।
दुहित्रा दासवर्गेण विवादं न समाचरेत् ॥

(மனு—4—179, 180)

(ருத்விக்) யாகம் புரிந்துவைப்பவன் (புரோஹித) சதா உத்தம வழிகளைக் கற்பிப்பவன் (ஆசார்ய) கல்விகற்றீ பவன் (மாதுல) மாமன் (அதிதி) தன்னலமில்லாதவர்கள் (ஸமஸ்ரித) தங்களின் அடைக்கலமடைந்த (பால) குழந்தைகள் (வ்ருத்த) பெரியோர்கள் (ஆதுர) பீடிக்கும் (வைத்ய) ஆயுர்வேதமறிந்தவன் (க்ஞாதி) தன் வர்ணத்தவன் (சம்பந்தி) நாத்தி முதலானவர்கள் (பாந்தவ:) மித்திரர் (1). (மாதா) தாய் (பிதா) தகப்பன் (யாமீ) சகோதரீ (ப்ராதா) சகோதிரன் (பார்யா) மனைவி (துஹிதா) புத்ரீ முதலானவர்களுடன் ஒருபோதும் சண்டையிடலாகாது.

अतपास्त्वनधीयानः प्रतिग्रहरुचिर्द्विजः ।
अम्भस्यश्मप्लवेनैव सह तेनैव मज्जति ॥

மனு—4—190)

(அதபா:) ப்ரம்மசர்ய சத்யபாஷணங்களிலிருந்தும் விலகியவன் (அனதீயான:) கல்வி சிறிதும் இல்லாதவன் (ப்ரதிக்ரஹருசி:) செல்வத்தை பிறரிடமிருந்து தானமாக வாங்கிக் கொள்பவன் ஆகிய இம்மூவரும் கல்லால் ஆன கப்பலில் சமுத்திரயாத்திரை செய்வதைப்போல துஷ்ட கர்மங்களால் துக்க சாகரத்தில் அமிழ்ந்து விடுகிறார்கள். அவர்கள் மாத்திரம் முழுகுவதன்றி அவர்களைச்சேர்ந்த குடும்பத்தவர்களையும் அதில் முழுகச் செய்கிறார்கள்.

त्रिष्वप्येतेषु दत्तं हि विधिनाप्यर्जितं धनम् ।
दातुर्भवत्यनर्थाय परत्रादातुरेव च ।

(மனு—4—193)

முன் சொன்ன மூவருக்கும் தானமாக அளிக்கப்படும் பணமும், அதை அளிப்பவனும் நாசமடைவது உண்மை. அதை வாங்கிக் கொள்பவர்களும் அடுத்த ஜென்மத்தில் நாசமடைகிருர்கள். ஏனென்ருல்—:

यथा प्लवेनौपलेन निमज्जत्युदके तरन् ।
तथा निमज्जतोऽधस्तादज्ञौ दातृप्रतीच्छकौ ॥

(மனு—4—194)

கல்லால் ஆகிய கப்பலி லமர்ந்து செல்பவன் கடலில் முழுகிவிடுவதைப் போல, பாத்திரமறியாது தானமீபவ வனும், அதைப் பெற்றுக் கொள்பவனும் அதோகதியை (துக்கத்தை) அடைகிருர்கள்.

மூடர்களின் குறிகள்.

धर्मध्वजी सदा लुब्धश्छाद्मिको लोकदम्भकः ।
बैडालव्रतिको ज्ञेयो हिंस्रः सर्वाभिसन्धकः ॥
अधोदृष्टिर्नैष्कृतिकः स्वार्थसाधनतत्परः ।
शठो मिथ्याविनीतश्च बकव्रतचरो द्विजः ॥

(மனு—4–195, 196.)

(தர்மத்வஜீ) தர்மம் சிறிதும் செய்யாமல் தர்மத்தின் பெயரால் ஜனங்களை ஏமாற்றுபவன் (சதாலுப்தஃ) எப்போ

தும் உலோபத்துடன் கூடினவன் (சாத்மிக:) கபடன் (லோகதம்பக:) ஜனங்களின் முன்னிலையில் தன் சாமர்த்தியத்தைப் புகழ்பவன் (ஹிம்ஸ்ர:) ப்ராணிகளை துன்புறுத்துபவன் (ஸர்வாபிஸந்தக:) நல்லவர்கள், கெட்டவர்கள் ஆகிய சகலரிடத்திலும் குற்றங்கண்டு எல்லோரையும் தாழ்ந்தவர்களாக மதிப்பவன் (1). (அதோத்ருஷ்டி:) கீர்த்தியை அடைவதற்காக ஏற்பட்ட நீசப்பார்வையை யுடையவன் (நைஷ்க்ருதிக:) சிறிய குற்றத்திற்காகவும் பிறரின் உயிரை வாங்கத் துணிபவன் (ஸ்வார்தஸாதன:) சதா தன்னுடைய மேன்மையை மாத்திரம் சாதித்துக் கொள்வதில் திறமை பெற்றவன் (மூட:) தன் தப்பிதத்தை எப்போதும் ஒத்துக் கொள்ளாதவன் (மித்யாவினீத:) தனக்கு புகழ்ச்சி யுண்டாவதாகத் தெரிந்தால் அபாண்டமான பொய்யைப் புளுக சிறிதும் அஞ்சாதவன் (வகவ்ரத:) சகலரையும் நீசர்களாக மதிப்பவன். இவர்களெல்லாம் அறிவிலிகளாகும். இவர்களிடம் நம்பிக்கை கொள்வதோ, உதவிபுரிவதோ ஒருபோதும் செய்யக்கூடாது.

धर्मं शनैः सञ्चिनुयाद् वल्मीकमिव पुत्तिकाः ।
परलोकसहायार्थं सर्वभूतान्यपीडयन् ॥ १ ॥

नामुत्र हि सहायार्थं पिता माता च तिष्ठतः ।
न पुत्रदारं न ज्ञातिर्धर्मस्तिष्ठति केवलम् ॥ २ ॥

एकः प्रजायते जन्तुरेक एव प्रलीयते ।
एकोऽनुभुङ्क्ते सुकृतमेक एव च दुष्कृतम् ॥ ३ ॥

(மனு—4-238, 240).

एकः पापानि कुरुते फलं भुङ्क्ते महाजनः ।
भोक्तारो विप्रमुच्यन्ते कर्ता दोषेण लिप्यते ॥ ४ ॥
(மகாபாரதம்—உத்யோகபர்வம்—ப்ரஜாகரப—ம்—32).

मृतं शरीरमुत्सृज्य काष्ठलोष्ठसमं क्षितौ ।
विमुखा बान्धवा यान्ति धर्मस्तमनुगच्छति ॥ ५ ॥
(மனு—4–241).

எறும்பானது சிறிது சிறிதாக ஊர்ந்து சென்று தன் புற்றையடைவது போல மக்கள் பரலோக சுகத்தை மெது மெதுவாக தர்மாசரணங்களைப் புரிவதால் அடையவேண்டும் (1). ஏனென்றால் பரலோகத்தில் தாய், தகப்பன், புத்ரன், மனைவி, பந்துக்கள் முதலானவர்களின் உதவி கிடையாது. தர்மத்தின் உதவியொன்றே அங்கு கிடைக்கும் (2). ஜீவன் தனியாகவே பிறப்பிறப்புகளை யடைகின்றான். ஆதலால் அவனவனின் தர்மமே அவனவனுக்குச் சுகத்தையளிக்கும். அவனவனின் அதர்மமே அவனவனுக்கு துக்கத்தை யுண்டாக்கும் (3). குடும்பத்திலே ஒருவர் அதர்ம மார்க்கத்திலே சம்பாதித்த பொருளை அக்குடும்பத்தாரெல்லாரும் அனுபவித்தபோதிலும், அவ் வதர்மத்தின் பலனை அதைப் புரிந்த ஒருவனே அனுபவிக்கின்றான். அதனால் கிடைத்ததை அருந்திய மற்றவர்கள் அதை அனுபவிப்பதில்லை (4). ஒருவன் இறந்துவிட்டபின் அவனின் உடலை தகனம் செய்வதுடன் சகல பந்துக்களும் பிரிந்து போய் விடுகின்றார்களே தவிர ஒருவரும் இறந்தவனைத் துடர்ந்து செல்வதில்லை. ஆனால் தர்மம் ஒன்றே அவனைத் துடர்ந்து செல்கின்றது (5).

तस्माद्धर्मं सहायार्थं नित्यं सञ्चिनुयाच्छनैः ।
धर्मेण हि सहायेन तमस्तरति दुस्तरम् ॥ १ ॥
धर्मप्रधानं पुरुषं तपसा हतकिल्बिषम् ।
परलोकं नयत्याशु भास्वन्तं खशरीरिणम् ॥ २ ॥

(மனு—4—242—243).

இதனால் பரஜன்ம சுகத்திற்காக, பரஜன்ம சகாயத்திற்காக நிதமும் தர்மாசரணத்தைச் சிறிது சிறிதாகப் புரிந்து வரவேண்டும். ஏனென்றால் தர்மத்தினால் மாத்திரமே ஜீவன் துக்கசாகரத்திலிருந்து விடுபடுகிறது (1). எவன் தர்மத்தையே ப்ரதானமாக அறிந்து அதை அனுஷ்டித்து பாபங்களைத் தூரம் செய்கின்றானோ அவனுக்கே ப்ரகாசரூபன், ஆகாயச்சரீரனான பரமதர்சனீய பரமாத்மன் சீக்கிரத்தில் தர்மத்தையடையச் செய்கின்றான் (2). ஆகையால்

दृढकारी मृदुर्दान्तः क्रूराचारैरसंवसन् ।
अहिंस्रो दमदानाभ्यां जयेत्स्वर्गं तथाव्रतः ॥ १ ॥
वाच्यर्था नियताः सर्वे वाङ्मूला वाग्विनिः सृताः ।
तान्तु यः स्तेनयेद्वाचं स सर्वस्तेयकृन्नरः ॥ २ ॥
आचाराल्लभते ह्यायुराचारादीप्सिताः प्रजाः ।
आचाराद्धनमक्षय्यमाचारो हन्त्यलक्षणम् ॥ ३ ॥

(மனு—4—246, 256).

சதாதிட மனத்தன், மிருதுவான சுபாவத்தன், ஜிதேந்திரியன், துஷ்டாசார புருடர்களிடமிருந்து விலகி மனதை

ஜயித்து வித்யாதிதானங்களால் சுகத்தையடைகின்றான் (1). வார்த்தையினாலேயே சகல வியவகாரங்களும் நிச்சயிக்கப் படுகின்றன வாதலால் அதையெவன் பொய் பேசுதல் முதலாகிய கெட்ட காரியங்களில் உபயோகப் படுத்து கின்றானோ அவன் பாபம் செய்கின்றவனாகின்றான் (2). ஆகையால் பொய் பேசுதல் முதலாகிய அதர்மங்களை விட்டு ப்ரம்மசர்யம், சத்யம் பேசல் முதலிய தர்மாசரணங்களையே சதா செய்து வரவேண்டுவது உத்தமர்களின் கடமையாகும். ஏனென்றால்—:

दुराचारो हि पुरुषो लोके भवति निन्दितः।
दुःखभागी च सततं व्याधितोऽल्पायुरेव च ॥

(மனு—4—157).

துஷ்டாசாரபுருடன் சஜ்ஜனங்களால் நிந்திக்கப்பட்டு சதா வியாதியாளனாய் துக்கத்தையடைந்து அற்ப ஆயுளில் மரிக்கின்றான். ஆகையால்—:

यद्यत्परवशं कर्म तत्तद्यत्नेन वर्जयेत् ।
यद्यदात्मवशं तु स्यात्तत्तत्सेवेत यत्नतः ॥ १ ॥

सर्वं परवशं दुःखं सर्वमात्मवशं सुखम् ।
एतद्विद्यात्समासेन लक्षणं सुखदुःखयोः ॥ २ ॥

(மனு—4—159, 160).

பராதீன கர்மங்களை முயற்சி செய்து நீக்கிவிட வேண்டும். ஸ்வாதீன கர்மங்களை முயற்சிசெய்து தன் அனுபவத்திற்கொண்டு வரவேண்டும் (1). ஏனென்றால்

தராதீன கர்மங்களால் துக்கமும் ஸ்வாதீன கர்மங்களால் சுகமும் உண்டாகின்றது (2). நாம் பிறருக்குச் செய்ய வேண்டிய காரியங்களையும் விடாமல் செய்து வரவேண்டும். புருடன் மனைவியிடமும் மனைவி புருடனிடமும் பராதீனர் களாகின்றார்கள். என்றால் மனைவி புருடனிடமும், புருடன் மனைவியிடமும் ப்ரியாசரணானுகூலர்களா யிருக்கவேண்டும். விபசாரம், விரோதங்களை ஒருபோதும் செய்யலாகாது. வீட்டு வேலைகளைப் பெண்ணும், வெளி வேலைகளைப் புருடனும் ஆதீனமாக்கிக் கொள்ளவேண்டும். அதர்ம மார்க் கத்தில் செல்வார்களேயானால் ஒருவரை யொருவர் தடுக்க வேண்டியது அவசியமாகும். கலியாணம் ஆனபோதி லிருந்து புருடன் மனைவியிலும், மனைவி புருடனிலும் கலந்த வர்களாகின்றார்கள். என்றால் புருடனின் உடல் சகலமும் பெண்ணினுடையவும், பெண்ணின் உடல் முழுதும் புருட னுடைய வுமாதீனமாகிவிடுகின்றது. மனைவி, புருடன் இரு வரும் அன்புடனிருந்தாலன்றி ஒரு காரியத்தையும், சாதிக்க முடியாது. மற்றவர்களை கனவிலும் நினையாமல் புருட னுடன் மனைவியும், மனைவியுடன் புருடனும் சதா அன்புடன் நடந்து கொள்ளவேண்டும். பெண்ணுக்கு பூஜிக்கத்தகுந்த தேவன் புருடன், புருடனுக்கு சத்காரம் புரியத் தகுந்த தேவி மனைவியாகும். குருகுலங்களில் இருக்கும் கால பர்யந்தம் உபாத்தி மார்களைத் தாய் தகப்பன்மார்களாக பாவித்திருக்கவேண்டும். உபாத்திமார்களும் தங்கள் மாண வர்களைத் தங்கள் சொந்தக் குழந்தைகளைப்போல பாவித்து வரவேண்டும். கல்விகற்கும் மாணவர்களும் கற்பிக்கும் உபாத்தியாயர்களும்—:

आत्मज्ञानं समारम्भस्तितिक्षा धर्मनित्यता ।
यमर्था नापकर्षन्ति स वै पण्डित उच्यते ॥ १ ॥

निषेवते प्रशस्तानि निन्दितानि न सेवते ।
अनास्तिकः श्रद्दधानः एतत्पण्डितलक्षणम् ॥ २ ॥

क्षिप्रं विजानाति चिरं शृणोति, विज्ञाय चार्थं भजते न कामात् ॥
नासम्पृष्टो ह्युपयुङ्क्ते परार्थे, तत्प्रज्ञानं प्रथमं पण्डितस्य ॥ ३ ॥

नाप्राप्यमभिवाञ्छन्ति नष्टं नेच्छन्ति शोचितुम् ।
आपत्सु च न मुह्यन्ति नराः पण्डितबुद्धयः ॥ ४ ॥

प्रवृत्तवाक् चित्रकथ ऊहवान् प्रतिभानवान् ।
आशु ग्रन्थस्य वक्ता च यः स पण्डित उच्यते ॥ ५ ॥

श्रुतं प्रज्ञानुगं यस्य प्रज्ञा चैव श्रुतानुगा ।
असंभिन्नार्यमर्यादः पण्डिताख्यां लभेत सः ॥ ६ ॥

(மஹாபாரதம்—உத்யோகபர்வம்—விதுரப்ரஜாகர
அத் 32 தின் ஸ்லோகங்கள்).

பொ-ள்— : யாருக்கு ஆத்மக்ஞானம் முழுவதும் ஆரம்பித்ததோ--என்றால்--சோம்பேரித்தனம், தாமதம் யாருக்கு எப்போதுமில்லையோ; சுகம், துக்கம், நஷ்டம், லாபம், நிந்தை, புகழ் முதலியவைகளில் சோகத்தையும் சந்தோஷத்தையும் யார் அடையவில்லையோ; தர்மத்திலே சதா நிலையுடனிருப்பவரோ; எவருடைய மனது எல்லா விஷயங்களையும் சுலபத்தில் அறிந்து கொள்கின்றதோ அவரையே பண்டிதன் என்றுசொல்லப்படும். (1) சதா தர்மத்துடன் கூடிய காரியங்களையே செய்தல், அதர்மத்துடன் கூடிய காரியங்களை விலக்கல், ஈஸ்வர, வேத, சத்யாசாரங்

களை நிந்திக்காதிருத்தல், ஈஸ்வராதிகளில் அத்யந்த சிரத்தையுடனிருத்தல் இவைகளே பண்டிதர்கள் செய்ய செய்விக்க வேண்டிய காரியங்களாகும். (2) கடின விஷயங்களையும் எளிதில் அறிந்துகொள்ளக் கூடியவர்; அநேககாலம் வரை சாஸ்த்திரங்களைப்படித்து, கேட்டு, விசாரிப்பவர்; தான் அறிந்தவைகளை சதா பிறருக்குக் கற்றுக் கொடுப்பவர்; தன்னலத்திற்காக ஒரு சிறு காரியத்தையும் செய்யாதவர்; கேட்டால் அல்லது சமயம் அவசியமாகத் தோன்றினாலன்றி பிறரின் சம்மதியில் கலந்து கொள்ளாதவர் இவரே ப்ராக்ஞான பண்டிதராகும். (3) அடையமுடியாதவைகளில் ஒருபோதும் இச்சைகொள்ளாதவர்; நஷ்டமடைந்துவிட்ட பொருளுக்காக எப்போதும் துக்கப்படாதவர்; ஆபத்துக் காலங்களிலேயுங்கூட விசனத்தை அடையாதவர்; இவரே புத்திமான் பண்டிதராகும். (4) சகல வித்தைகளின் கேள்வி விடைகளில் சாமர்த்தியமாயிருக்கும் வாக்கையுடையவர்; விசித்திரமாக சாஸ்த்திரங்களை விரித்துச் சொல்லும் திறமை பெற்றவர்; தர்க்க, ஸ்மிருதி கிரந்தங்களின் அர்த்தத்தை எளிதாகக் கற்றுக்கொடுக்கக் கூடியவர்; இவரே பண்டிதர் எனப்படுவர். (5) எவருடைய வார்த்தைகளைக் கேட்டபோது சத்தியார்த்தம் அறியப்படுகின்றது; எவருடைய கேள்வியால் ஆர்ய (மேலான) காரியங்களி னறிவுண்டாகின்றது; அவருடைய பெயரே பண்டிதர் என்று குறிக்கப்படும். (6)

இவ்வாறான கல்வியாளர்களான பெண் புருடர்கள் வசிக்குமிடங்களில் வித்யாதர்மமும், உத்தமாசாரங்களும் விருத்தியடைந்து ப்ரதிதினமும் ஆனந்தமே குடிகொண்

டிருக்கும். கல்வியில்லா அயோக்கியர்கள் மூர்க்கர்களின் குறிகளாவது—:

अश्रुतश्च समुन्नद्धो दरिद्रश्च महामनाः ।
अर्थांश्चाऽकर्मणा प्रेप्सुर्मूढ इत्युच्यते बुधैः ॥ १ ॥

अनाहूतः प्रविशति ह्यपृष्टो बहु भाषते ।
अविश्वस्ते विश्वसिति मूढचेता नराधमः ॥ २ ॥

(மகாபாரதம்—உத்யோகபர்வம்–விதுரப்ரஜாகர (அத்-32) [தின் வசனமாகும்).

(பொருள்)—: கொஞ்சமும் சாஸ்த்திரங்களைப் படிக்காமல் தரித்திரமடைந்து பெரிய பெரிய மனோராஜ்யங்களைச் செய்துகொண்டு ஒரு காரியமும் புரியாமலே பொருள் தனக்குக் கிடைக்கவேணு மென்று நினைக்கும் மனிதனை அறிவாளிகள் மூடன் என்று சொல்கின்றார்கள் (1). அழைப்பில்லாமலே சபைகளுக்கும் அன்னியர்களின் வீடுகளுக்கும் செல்பவன் ; கேட்காதிருக்கும்போதே வெகுவாகப் பேசுபவன் ; மனிதர்கள் விசுவாசம் வைக்காதவைகளை விசுவாசிப்பவன் மூடன் ஆகும். அவன் சகல மனிதர்களாலும் நீசன் என்று கருதப்படுகிறான் (2). வேதாத்யயனம் செய்பவன், உபதேசகன், குரு முதலியவர்களிருக்குமிடங்களில் அவித்தை, அதர்மம், கலகம், விரோதம் முதலியவைகள் நாசமடைந்து துக்கமும் விலகிவிடுகின்றது. இனி வித்யார்த்திகளின் குறிகள்—:

आलस्यं मदमोहौ च चापलं गोष्ठिरेव च ।
स्तब्धता चाभिमानित्वं तथाऽत्यागित्वमेव च ॥
एते वै सप्त दोषाः स्युः सदा विद्यार्थिनां मताः ॥ १ ॥

सुखार्थिनः कुतो विद्या कुतो विद्यार्थिनः सुखम् ।
सुखार्थी वा त्यजेद्विद्यां विद्यार्थी वा त्यजेत्सुखम् ॥ २ ॥

(விதுரப்ரஜாகர (அத் 39) தின் வாக்யம்).

(பொருள்)—: சரீரத்திலும் புத்தியிலும் சுருசுருப்பின்மை; ஒரு வஸ்துவின் மேல் ஆசையும் மோகத்தையுங் கொள்ளல்; இங்குமங்குந் திரிந்து வீண்கதைகளைச் சொல்லல் கேட்டல்; கற்றல் கற்பித்தலைத் தடுத்தல்; அபிமானம் கொள்ளல்; தியாகி அல்லாதிருத்தல் எனுமிவ் வேழு குற்றங்களும் வித்யார்த்திகளுக் கேற்படுகின்றன (1). இப்பேர்ப்பட்டவர்களுக்கு ஒருபோதும் வித்தை வருவதில்லை. சுகத்தையடைய விரும்புபவனுக்கு கல்வியெங்கிருந்து வரும்? கல்வி கற்பவனுக்கு சுகமெங்கே? விஷயசுகத்தை நாடுபவன் கல்வியையும்; கல்வியை நாடுபவன் விஷய சுகத்தையும் விட்டு விடவேண்டும் (2). இப்படி இல்லாவிட்டால் கல்வி ஒருபோதுமுண்டாகாது.

सत्ये रतानां सततं दान्तानामूर्ध्वरेतसाम् ।
ब्रह्मचर्यं दहेद्राजन् सर्वपापान्युपासितम् ॥

சதாகாலமும் சத்யாசாரத்தில் வசித்து, ஜிதேந்திரியனாகி வீர்யத்தை உள்ளேயே வைத்துக் காப்பாற்றிக் கொள்பவனுக்கே மறைமாணவம் உண்மையானதாகவும், பலனுடையதாகவு மாகிறது. ஆகையால் உபாத்தியாயர்களும் மாணவர்களும் சுபகுணத்தவர்களா யிருக்கவேண்டும். மாணவர்கள் சத்யவாதீ, சத்யமானீ, சத்யகாரீ, ஜிதேந்திரிய, சுசீல, சுபகுண யுக்தர்களாக, ஆத்மாவின்

பூர்ண பலத்தைப்பெற்று, சகல வேதாதி சாஸ்த்திரங்களே யும் கற்கும் வண்ணம் கவனித்து வரவேண்டும். மாணவர் களும் முன்பே சொல்லியிருக்கும் வர்ண வ்யவஸ்த்தை களைச் செவ்வனே யறிந்து அதற்குத்தக ஒழுகி வரவேண் டும். நான்கு வர்ணத்தவர்களும் பரஸ்பரம் ப்ரீதி, உபகா ரம், நட்பு, சுக, துக்க, லாப, நஷ்டங்களில் ஒற்றுமை முத லியவைகளைக் கொண்டு ராஜ்யத்தைச் செவ்வனே காப் பாற்றி வரவேண்டும். புருடன் மனைவியர்கள் நீண்டகா லம் பிரிந்திருக்கக்கூடாது. ஏனென்முல்—:

पानं दुर्जनसंसर्गः पत्या च विरहोऽटनम् ।
स्वप्नोऽन्यगेहवासश्च नारीसन्दूषणानि षट् ॥

(மனு—9-13).

கள் முதலாகிய மயக்க வஸ்துக்களைக் குடித்தல், துஷ்ட புருடர்களின் நட்பைக் கொள்ளல், புருடனை விட் டுப் பிரிந்திருத்தல், அனுவசியமாக வேடிக்கைகளைப் பார்க்கப்போதல், பிற வீடுகளில் சென்று படுத்துக்கொள் ளல், பிற வீடுகளில் வசித்தல் இவ்வாறும் பெண்களுக்கு தூஷணையை யுண்டாக்கும் காரியங்களாகும். புருடன் வெளிதேசங்களிலே அநேகநாள் இருக்கவேண்டி யிருந் தால் மனைவியையுங் கூடவே வைத்துக்கொள்ள வேண் டும். இதனுல் நீண்டநாள் பிரிவு இருவருக்கும் ஏற் படாது.

கேள்வி—: பெண்களும் புருடர்களும் பல விவாகங் களைச் செய்து கொள்ளலாமா? இல்லையா?

விடை—: ஒரே சமயத்தில் பல விவாகங்களைச் செய்து கொள்ளக் கூடாது.

கேள்வி—: ஆனால் ஒருவர் பிரிந்தபின் மற்றவர் மறு மணம் செய்துகொள்ளலாமா ?

விடை—: ஆம்—:

सा चेदक्षतयोनिः स्याद्गतप्रत्यागतापि वा ।
पौनर्भवेन भर्त्रा सा पुनः संस्कारमर्हति ॥

(மனு—9—176)

பாணிக்ரகண சடங்குமாத்திரம் நடந்து சேர்க்கை யில்லாமலே பிரிந்துவிட்ட பெண் புருடர்கள் மறுமணம் செய்துகொள்ளலாம். ப்ராம்மண, க்ஷத்ரிய, வைஸ்யர்கள் சேர்க்கை ஆனபின் விதவத்தன்மையை யடைந்தவர்களா யின் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது.

கேள்வி—: மறுமணத்தால் என்ன தோஷம் ஏற்படு கிறது ?

விடை—: (முதலில்) பெண் புருடர்களின் அன்பு குறைவாயிருக்கும். ஏனென்றால் விரும்பியபோது மனைவி யைப் புருடனும், புருடனை மனைவியும் விட்டுப் பிரிந்து மறு மணம் செய்துகொள்வார்கள். (இரண்டாவது) முதல் மணத்தின் பிரிவுண்டான பிறகு இரண்டாவது மணம் செய்துகொள்ளும் பெண் புருடர்கள் முதல் புருடன் பெண் ணின் சொத்துக்களை யெல்லாம் இரண்டாம் விவாகம் செய்துகொண்டவர்களுக் கெடுத்தளிக்கும்போது முதல்

வர்களின் சுற்றத்தார்கள் சண்டைபிடிப்பார்கள். (மூன்றுவது) முதலில் பத்திரமாக காப்பாற்றப்பட்டிருந்த பொருள்களெல்லாம் சின்ன பின்னமாய்விடும். (நான்காவது) பதிவ்ரத, ஸ்த்ரீ வ்ரத தர்மங்கள் நஷ்டமடையும். ஆதலால் த்விஜர்கள் (முதல் மூன்று வர்ணத்தவர்கள்) மறுமணம் செய்து கொள்ளக் கூடாது.

கேள்வி—: வம்சாபிவிருத்தியின் நாசமும், வியபசாரித்தனமுமுண்டாய் விடுமாதலாலே மறுமணம் செய்து கொள்ளவேண்டியது அவசியமாகும்.

விடை—: இல்லை. இல்லை. ஏனென்றால் பெண் புருடர்கள் அப்போதிருந்து மறைமாணவத்தை அனுசரிக்க விரும்பினார்களானால் ஒரு கஷ்டமுமில்லை. குழந்தை இல்லையென்ற கவலையிருந்தால் தங்களின் வர்ணத்திலே பிறந்த மற்றோர் குழந்தையை தத்து எடுத்துக்கொண்டு வளர்த்துக் கொள்ளலாம். அப்படி மறைமாணவத்தை யனுசரித்துக் கொண்டிருக்க முடியவில்லை யென்றால் நியோகம் செய்துகொண்டு குழந்தைகளைப் பெறலாம்.

கேள்வி—:மறுமணத்திற்கும் நியோகத்திற்கும் என்ன பேதம்?

விடை—: (முதலில்) விவாகம் செய்வதால் பெண் தன் தகப்பனாரின் இல்லத்தை விட்டு விட்டுப் புருடன் வீட்டையடைகின்றாள். தகப்பனாருடனும் விசேஷ சம்பந்தம் வைத்துக் கொள்வதில்லை. விதவையான அப் பெண் தன் புருடன் வீட்டிலே வசிக்கின்றாள். (இரண்டாவது) விவாகம்

செய்துகொண்டவளின் மகன் இரண்டாம் புருடனின் பங்காளியாகவு மாகின்றான். முன்பு இருந்த புருடனின் பெயரை இக் குழந்தை சொல்வது மில்லை. அவனின் கோத்திரத்தையும் சேர்வதில்லை. அன்றி 2ம் புருடன் முதல் புருடனின் குழந்தையின் மேல் உண்மையான அன்பைச் செலுத்தமாட்டான். இரண்டாம் புருடனின் கோத்திரத்தைச் சொல்லிக்கொண்டு அவன் பொருளுக்கும் பங்காளியாகின்றது. (மூன்றாவது) விவாகம் செய்து கொண்ட இருவரும் ஒருவருக்கொருவர் சேவை செய்ய வேண்டியது அவசியமாகும். ஆனால் நியோகம் செய்து கொண்டவர்களுக்குச் சிறிது சம்பந்தமும் ஏற்படுவதில்லை. (நான்காவது) விவாகம் செய்துகொண்டவர்களின் சம்பந்தம் மரண பர்யந்தமிருக்கும். ஆனால் நியோக சம்பந்தம் காரிய முடிவின் பின் கொஞ்சமும் இருப்பதில்லை. (ஐந்தாவது) விவாகம் செய்து கொண்டவர்கள் ஒருவரின் காரியங்களை மற்றவர் கவனிக்கவேண்டியதாகின்றது. ஆனால் நியோகம் புரிந்துகொண்டவர்கள் தங்கள் காரியங்களையே கவனித்துக் கொள்கின்றார்கள்.

கேள்வி—: விவாகம், நியோகம் இவ்விரண்டின் நியமங்களும் ஒன்றானதா அல்லது வேறானதா?

விடை—: கொஞ்சம் வித்தியாசமுண்டு. முன் சொன்ன வித்தியாசங்களன்றியும், விவாகம் செய்து கொண்டவர்கள் கூடி பத்துக் குழந்தைகளைப் பெறலாம். ஆனால் நியோகத்தால் கூடியவர்கள் மூன்றல்லது நான்கு குழந்தைகளுக்குமேல் பெறமுடியாது. ஆகையினால் முதலில் மணம்

ஆகி பின் பிரிவேற்பட்ட பெண் புருடர்களே நியோகம் செய்துகொள்ள வேண்டும். விவாகம் செய்துகொண்ட பெண் புருடர்கள் சதா ஒன்றுபட்டிருப்பதைப் போல நியோகம் செய்துகொண்டவர்கள் ஒன்றுபட்டிருக்க முடியாது. மாத விலக்காகி சுத்தியடைந்த அந்நாளில் சேர்க்கை கொண்ட புருடன் அத்துடனேயே கர்ப்பநிலை உண்டாய் விட்டதெனத் தெரிந்தவுடனே அவன் சேர்க்கையை விலக்கிவிடவேண்டும். பெண்களுமவ்வாறே தங்களுக்குக் கர்ப்ப நிலை கண்டவுடன் புருடரினின்றும் விலகவேண்டும். பிறகு பெண்ணானவள் இரண்டல்லது மூன்று வருடங்கள் வரை பெற்ற அக்குழந்தையைக் காப்பாற்றியிருந்து பின் அதை நியோகம் புரிந்துகொண்ட புருடனுக்குக் கொடுத்துவிட வேண்டும். இவ்வாறே ஓர் விதவையானவள் இரண்டு குழந்தைகளைத் தனக்காகவும், பிறகு மற்றுமிரண்டிரண்டு குழந்தைகளாக 8 குழந்தைகளை நான்கு நியோக புருடர்களுக்கும் பெற்றளிக்கலாம். அவ்வாறே மனைவியை இழந்த புருடனும் இரண்டு குழந்தைகளை தனக்காகவும் மற்றுமிரண்டிரண்டாக 8 குழந்தைகளை நான்கு விதவைகளுக்கும் பெற்றளிக்கலாம். ஆக மொத்தம் 10 குழந்தைகளைப் பெற வேதசம்மதமிருக்கிறது.

इमां त्वमिन्द्र मीढ्वः सुपुत्रां सुभगां कृणु ।
दशास्यां पुत्रानाधेहि पतिमेकादशं कृधि ॥

(ருக்—10—85—45).

பொ-ள்— : வீர்யந்தெளிப்பதில் சமர்த்தனான ஐஸ்வர்யயுக்த புருடா ! நீ இவ்விவாகம் செய்து கொண்ட மனைவி

யிடமிருந்தாவது அல்லது அவள் பிரிந்துவிட்டாளாயின் விதவையினிட மிருந்தாவது 10 குழந்தைகளைப் பெறு. 11-வது துணை பெண் என மதி. ஏ பெண்ணே! நீயும் விவாகம் செய்த, அல்லது நியோகம் செய்துகொண்ட புருடன் மூலமாய் 10 குழந்தைகளைப்பெற்று 11-வது உன்புருடனுக அடை. ஏனென்றால் 10-க்கு மேல் பிறக்கும் குழந்தைகள் துர்ப்பலம் பெற்றும், புத்தியின்றியும், அற்பாயுளையுடையதாகவும் இருக்கும். அன்றி பெறும் தாய் தகப்பனார்களும் நிர்ப்பலத்தவர்களாய் அற்பாயுளில் இறக்க நேரிடும்.

கேள்வி—: இந் நியோக விதி வியபசாரித்தனமாகத் தோன்றுகின்றதே ?

விடை—: கலியாணமில்லாத சேர்க்கை வியபசாரமாவதைப் போல நியோகம் செய்து கொள்ளாத சேர்க்கையே வியபசாரமாகும். விவாகமானபின் வியபசாரமில்லாததைப் போலவே நியோகம் செய்துகொண்ட பின்பும் வியபசாரம் கிடையாது. எப்படியென்றால் ஒரு பெண்ணுடன் புருடன் சாஸ்த்திர விதிப்படி கலியாணம் செய்துகொண்டபின் சேர்க்கை கொள்ளல் வியபசாரமாகாது. அதேபோல் சாஸ்த்திர விதிப்படி நியோகம் செய்துகொண்டவர்களின் சேர்க்கையும் வியபசாரமாகாது.

கேள்வி—: சரிதான். ஆனாலும் இது வேசியின் காரியமாகவல்லவோ தெரிகிறது ?

விடை—: இல்லை. ஏனென்றால் வேசியின் சேர்க்கையைப்புரிய ஒருவிதியும், நியமமுங்கிடையாது. நியோ

கத்தில் விவாகம் போன்ற விதியும் நியமமும் இருக்கிறது. ஒரு பெண்ணை ஒரு புருடன் மணம் செய்துகொள்ள விதியேற்பட்டிருப்பதைப் போலவே நியோகம் செய்து கொள்வதற்கும் விதி ஏற்பட்டிருக்கிறது.

கேள்வி—: நியோகத்தினுல் பாவம் ஏற்படுமென்று நினைக்கிறென்.

விடை—: நியோகம் பாவமானதென்றுல் விவாகமும் ஏன் பாபமாகாது? பாபம் என்பது நியோகத்தைத்தடுப்ப தாலேயே யேற்படும். ஏனென்றுல் கடவுளின் உற்பவத் திலேயே ஏற்பட்ட பெண் புருடர்களின் சுபாவத்தை நீக்க முடியாது. யோகிகளல்லாதவர்களால் அச்சுபாவத்தை மாற்றுவது முடியாது. ஏனென்றுல் நல்லவாலிபப்பருவத் தினர்களின் சந்தாபங்களை பூர்ணவித்வானன்றி மற்றவர் களால் அடக்கிவைத்துக் கொள்ளமுடியாது. அப்படிப் பல வந்தமாக அதிகாரத்தினுல் அவர்களைத் தடுத்துவைத்த போதிலும் அவர்கள் மறைவில் துஷ்டகாரியங்களைப்புரிந்து கொண்டுதானிருப்பார்கள். ஆனுல் தன் இந்திரியங்களை வசப்படுத்தினவன் விவாகமோ நியோகமோ இரண்டுமின்றி இருந்தால் அது மிகமிக நல்லதுதான். அப்படிமுடியாதவர் களுக்கு விவாகமும் ஆபத்துக் காலத்தில் நியோகமும் அவ சியமேயாகும். ஆகையால் மனிதர்கள் தங்கள் வம்சத்தை விருத்தி செய்யவேண்டியது அவசியமாகும். கர்ப்பச் சேதங்களைப் புரியாதிருக்க நியோகம் நல்ல சாதனமாகும். ஆகையால் நியோகம் செய்துகொள்ளவேண்டியது அவசிய மேயாகும்.

கேள்வி— : நியோகத்தில் என்னென்ன விதிகளுண்டு?

விடை— : விவாகம் எப்படி வெளிப்படையானதோ அப்படியே நியோகமும் வெளிப்படையா யிருக்கவேண்டும். விவாகம் பெரியோர்களின் சம்மதியைப் பெறுவது போலவே நியோகமும் பெரியோர்களின் சம்மதியைப் பெறவேண்டும். என்றால் நியோகம் செய்துகொள்பவர்கள் தங்களின் குடும்ப ஜனங்களை யெல்லாம் வைத்துக்கொண்டு "நாங்கள் மக்களைப் பெற நியோகச் சடங்கை புரிந்து கொள்கின்றோம். நியோகத்தின் நியமங்கள் முழுவதும் முடிந்த பின் நாங்கள் சேர்க்கை கொள்ள மாட்டோம். தவறி நாங்கள் அவ்விதியை மீறினால் அரச தண்டனை எங்களுக் குண்டாகட்டும். மாதத்தில் ஒரே ஒரு முறைதான் சேர்க்கை கொள்வோம். கர்ப்பநிலை கண்டபின் 1 வருடம் வரை சேரமாட்டோம்." என்று சொல்லவேண்டும்.

கேள்வி— : தங்கள் வர்ணத்திலேயே நியோகம் செய்துகொள்ள வேண்டுமா? மற்ற வர்ணங்களிலும் செய்துகொள்ளலாமா?

விடை— : தங்கள் வர்ணத்திலேயும், தங்களுக்கு மேல் வர்ணத்தைச் சேர்ந்த புருடர்களுடனும் நியோகம் செய்துகொள்ளலாம். என்றால் வைஸ்யப் பெண் வைஸ்யனுடனும் க்ஷத்திரியனுடனும், ப்ராம்மணனுடனும் நியோகம் செய்து கொள்ளலாம். என்றால் வீர்யமானது தனக்குச் சமமான அல்லது மேலான வீர்யத்துடனேயே கலக்க வேண்டும். சிருஷ்டி சம்பந்தமாக பெண் புருடர்கள் வேத

விதிப்படி விவாகம் அல்லது நியோகத்தால் சந்தானங்களைப் பெற வேண்டுவதவசியமாகும்.

கேள்வி—: புருடர்கள் மறு விவாகம் செய்துகொள்ளக்கூடியவர்களானதினல் அவர்கள் ஏன் நியோகம் செய்து கொள்ளவேண்டும்?

விடை—: வேதாதி சாஸ்த்திரங்களில் த்விஜர்களுக்கு ஒரே முறைதான் விவாகம் சொல்லியிருக்கிறது. கன்னியைக்கும் குமாரனுக்குமே மணம் செய்யவேண்டு மன்றி விதவைக்கு குமாரனையும், கன்னிக்கு மனைவியை இழந்தவனையும் விவாகம் செய்து வைக்கலாகாது. விதவையுடன் மணம் புரிய குமாரன் விரும்பாததைப் போலவே, முன்பு சேர்க்கை கொண்டுள்ள புருடனுடன் கன்னிகையும் சேர விரும்புவதில்லை. ஆகையால் குமாரனுடன் விதவையும், கன்னியுடன் மனைவியை யிழந்தவனும் விவாகம் செய்துகொள்ள விரும்பார்களானதினல் விதவையும் மனைவியை இழந்தவனும் நியோகம் புரிந்துகொள்வது சரியானதாகும். இதுவே தர்மமாகும்.

கேள்வி—: விவாகத்திற்கு வேதாதி சாஸ்த்திரங்களில் ப்ரமாண மிருப்பதைப்போல நியோகத்திற்கும் ப்ரமாண மிருக்கிறதா?

விடை—: அனேக ப்ரமாணங்களிருக்கின்றன—:

कुहस्विद्दोषा कुह वस्तोरश्विना कुहाभिपित्वं करतः कुहोषतुः। को वां शयुत्रा विधवेव देवरं मर्यं न योषा कृणुते सदस्थ आ ॥ (ருக்—10-40-2).

उदीर्ष्व नार्यभिजीवलोकं गतासुमेतमुप शेष एहि ।
हस्तग्राहस्य दिधिषोस्तवेदं पत्युर्जनित्वमभि सं बभूव ॥

(ருக்—10-18-8).

ஏ பெண்புருடர்களே! மணம் புரிந்துகொண்ட புருடன் மனைவியர்கள் தனிப் படுக்கையில் ஒன்றாகி குழந்தைகளைப் பெறுவது போலவே விதவையும் மனைவியை இழந்தவனுமாகிய நீங்களிருவரும் பகல் இரவுகளில் எங்கே வசிக்கிறீர்கள்? எங்கே பதார்த்தங்களை யடைகிறீர்கள்? எந்தச் சமயத்தில் எங்கே வசிக்கிறீர்கள்? உங்களின் படுக்கை யிடமெங்கே? நீங்கள் யார் எந்ததேசத்தில் வசிப்பவர்கள்? என்றால் விதேசங்களிலும் பெண்புருடர்கள் கூடி வாழட்டும். விவாகப் புருடனுக்குச் சரியாகவே நியோக புருடனையும் பாவித்து விதவையானவள் குழந்தைகளைப் பெறட்டும்.

கேள்வி—: நியோகம் யாருடன் செய்துகொள்ள வேண்டும்?

விடை—: "தேவா" னுடன்—என்றால்

देवरः कस्माद् द्वितीयो वर उच्यते ।

(நிருக்தம்—3-15).

விதவையின் இரண்டாம் புருடனுக்கு "தேவரன்" என்று பெயராகும். இறந்துவிட்ட புருடனின் அண்ணன் அல்லது தம்பி, தன் வர்ணத்தைச் சேர்ந்தவன் அல்லது மேல் வர்ணத்தைச் சேர்ந்தவனுடன் நியோகம் செய்து கொள்ளலாம். அவ்வாறு நியோகத்தால் விதவையைக் கூடும் புருடனின் பெயர் "தேவரன்" ஆகும்.

"ஏ விதவையே! இறந்துவிட்ட புருடனின் ஆசையை விட்டு, உயிருடனிருக்கும் மற்றொரு புருடனை யடைவாயாக. இதை நிச்சயமாக நம்பு அவ்வாறு நியோகத்தால் பெறும் குழந்தைகளை அந்நியோக புருடனுக்கு அளித்து விடுவாயாக. அல்லது நீயே வைத்துக் கொள்ளவேண்டு மென்றாலும் வைத்துக்கொள்ளலாம்". இவ்வாறே நியோகம் செய்து கொள்ளும் புருடனும் தெரிந்து கொள்ளவேண்டும்.

अदेवृघ्न्यपतिघ्नी हैधि शिवा पशुभ्यः सुयमाः सुवर्चाः ।
प्रजावती वीरसूर्देवृकामा स्योनेममग्निं गार्हपत्यं सपर्य ॥

(அதர்—14-2-18)

புருடனுக்கும், தேவரனுக்கும் துக்கத்தையளிக்காத பெண்ணே! நீ இவ்வில்லறத்தில் ப்ராணிகளுக்கு நன்மையைப் புரிபவளாகும். தர்ம மார்க்கத்திலே செல்பவள் நீ. நல்ல ரூபமும், சகல சாஸ்த்திரங்களின் கல்வியையும் பெற்று உத்தம புத்ர பௌத்ராதிகளை யடைந்து சூரவீர புத்திரர்களைப் பெறுபவளே! தேவரனின் ஆசைக்குகந்தவளே! சுகத்தையீயும் புருடன் அல்லது தேவரனை யடைந்து இவ்வில்லற சம்பந்தமான அக்னி ஹோத்ராதிகளைச் செய்து கொண்டுவா.

तामनेन विधानेन निजो विन्देत देवरः।

(மனு—9—69).

சேர்க்கையிலாது விதவையாகிவிட்ட பெண் தன் புருடனின் உடன் பிறந்தானை மறுமணம் செய்து கொள்ளலாம்.

கேள்வி—: ஒரு பெண்ணானவள் எவ்வளவு புருடர்களுடன் நியோகம் செய்து கொள்ளலாம்? அவரவர்களின் பெயரென்ன?

விடை—:

सोमः प्रथमो विविदे गन्धर्वो विविद उत्तरः ।
तृतीयो अग्निष्टे पतिस्तुरीयस्ते मनुष्यजाः ॥

(ருக்—10—85—40)

ஏ பெண்ணே! முதலில் உன்னை மனைவியாக மணக்கும் புருடனின் பெயர் "சோமன்." இரண்டாம் முறை உன்னை நியோகத்தாலடைபவனின் பெயர் "கந்தர்வன்". மூன்ருவதாக உன்னை யடைபவனின் பெயர் "அக்னி." நான்காவதாக விருந்து பதினேருவது வரை உன்னை யடைபவர்களின் பெயர் "மனுஷ்யன்".

இதில் பெண்ணனவள் 11 புருடர்களை யடைவதுபோல, ஆணும் 11 பெண்களை முறையே அடையலாம்.

கேள்வி—: 11ன்று என்று சொல்வதில் 10 ஐக் குழந்தைகளாகவும் 11வதை புருடனுகவும் ஏன் அர்த்தம் செய்யலாகாது?

விடை—: அவ்வாறு அர்த்தம் செய்வது தப்பிதமாகும். ஏனென்ருல்—:

"विधवेव देवरम्" "देवरः कस्माद् द्वितीयो वर उच्यते,

(ஆகையால் "தேவரன்" என்பது இரண்டாம் புருடனின் பெயராகும்).

இத்யாதி வேத வாக்கியங்களுக்கு அது விரோதமாகும். அன்றி அவ்வாறு அர்த்தம் செய்வதால் இரண்டாம் புருடனைக்கூட அடையமுடியாது.

देवराद्वा सपिण्डाद्वा स्त्रिया सम्यङ् नियुक्तया ।
प्रजेप्सिताधिगन्तव्या सन्तानस्य परिक्षये ॥ १ ॥
ज्येष्ठो यवीयसो भार्य्यां यवीयान्वाग्रजस्त्रियम् ।
पतितौ भवतो गत्वा नियुक्तावप्यनापदि ॥ २ ॥
औरसः क्षेत्रजश्चैव ॥ ३ ॥

(மனு—9—59, 58, 59).

தகப்பனின் 6 பிரிவின் சம்பந்தத்துள்ளாகத் தன் புருடனின் சகோதரனையாவது, தன் குலத்தைச் சேர்ந்த புருடனையாவது, தனக்கும் மேல் குலத்தைச் சேர்ந்த புருடனையாவது விதவை நியோகம் செய்துகொள்ளலாம். ஆனால் விதவையானவள் குழந்தைகளைப் பெற விரும்பின்மாத்திரமே நியோகம் செய்து கொள்ளவேண்டும். புருடர்களு மிவ்வாறே அறியவும். குழந்தைகளைப் பெற விருப்பமில்லாத காலத்திலே பெரிய சகோதரனின் மனைவியுடன் சிறியவனும், சிறியசகோதிரனின் மனைவியுடன் பெரியவனும் நியோகம்செய்துகொண்டு குழந்தைகளைப் பெற்றபிறகும்கூட சேர்க்கை கொள்ளக் கூடாது. என்றால் ஒரு நியோகத்திலேயே இரண்டு குழந்தைகளைப் பெறும்வரை சேர்ந்திருக்கலாகாது. என்றால் (3) குழந்தையுண்டானபின் பிரிந்து வேண்டுமானால் மறுபடியும் நியோகம் செய்து கொள்ளலாம். இவ்வாறே பிரிந்து பிரிந்து 10 குழந்தைகளைப் பெறும்வரை சேர்ந்துகொண்டு வரலாம். அதற்குமேல் இச்சையை முழுதிலும் விட்டு விட வேண்டும். மணம் செய்துகொண்ட தம்பதிகளுங்கூட 10 குழந்தைகளுக்கு மேலும் பெறுவார்களானால் நிந்தைக்குள்ளாவார்கள். ஆகையால் விவாகமும் நியோகமும் மக்களைப் பெறுவதற்கே யன்றி மிருகங்களைப்போல் விளையாடுவதற்கன்று.

கேள்வி—: நியோகம், புருடன் இறந்த பிறகு செய்து கொள்வது தானு? அல்லது உயிருடன் இருக்கும்போதே செய்துகொள்ளலாமா?

விடை—: இருக்கும்போதுகூட—:

अन्यमिच्छस्व सुभगे पतिं मत् ॥

(ருக்—10—10)

புருடன் மக்களைப் பெற திறமையில்லாதவனுகி விட்ட போது இன்னும் திறமையை யுடைய தன் மனைவியைப் பார்த்து "எ சுந்தரீ! சௌபாக்யத்தை விரும்பும் நீ மற்ருேர் புருடனை நேசித்துக்கொள். எனென்ருல், என்னல் இனி மேல் குழந்தைகளை யளிக்கமுடியாது"என்று சொல்கின்ருன். இப்பேர்ப்பட்ட சமயத்தில் பெண் மற்ருேர் புருடனுடன் நியோகம் செய்துகொள்ளலாம். ஆயினும் சொந்த புருடனுக்கு சேவைசெய்வதை மறந்துவிடக்கூடாது. இவ்வாறே பெண்ணனவள் மக்களைப்பெறத் திறமையற்றவளாகி விட்டால் திறமையையுடைய தன் புருடனுக்கு மற்ருேர் விதவையுடன் நியோகம் செய்துகொள்ள அனுமதியளிக்க வேண்டும். இவ்வாறேதான் பாண்டு ராஜனின் பெண்ணுன குந்தி, மாத்ரீ முதலியவர்களும் செய்துகொண்டார்கள். இவ்வாறே வியாசரும் சித்ராங்கத, சித்ரவீர்யர்களின் மனைவிகள் இறந்து விட்ட பிறகு, அவர்களைத் தன் சகோதிரர்களின் மனைவிகளுடன் நியோகம் செய்வித்து, அம்பிகாவிடமிருந்து திருதராஷ்டிரனேயும், அம்பாலிகாவிடமிருந்து பாண்டுவையும், தாசியினிடமிருந்து விதுரனேயும் பெறும்படிச் செய்தார். இத்யாதி சரித்திரங்களு மிதற்குப் ப்ரமாணமுண்டு.

प्रोषितो धर्मकार्यार्थं प्रतीक्ष्योऽष्टौ नरः समाः ।
विद्यार्थं षड्यशोर्थं वा कामार्थं त्रींस्तु वत्सरान् ॥ १ ॥
वन्ध्याष्टमेऽधिवेद्याब्दे दशमे तु मृतप्रजा ।
एकादशे स्त्रीजननी सद्यस्त्वप्रियवादिनी ॥ २ ॥

(மனு—9—76—81).

விவாகம் செய்துகொண்ட புருடன் தர்மத்தின் காரியத்தின் பொருட்டு அன்னிய தேசம் சென்றவனுயின் அவன் வரவுக்காக 8வருடங்களும்; வித்யா, கீர்த்திகளுக்காகச் சென்றவனுயின் 6 வருடங்களும்; பணம் சம்பாதிப்பதற்காகச் சென்றவனுயின் 3 வருடங்களும் காத்திருந்து பிறகு மற்ருேர் புருடனுடன் நியோகம் செய்துகொண்டு குழந்தைகளைப் பெறலாம். குறித்த வருடங்களுக்கு மேல் மணம் செய்துகொண்ட புருடன் வருவானுகில் நியோகப்புருடனை விலக்கிவிடவேண்டும். (1) இவ்வாறே புருடனும் தன் மனைவி குழந்தைகளைப் பெருதவளாக இருந்தால் 8 வருடங்களும்; பெறும் குழந்தைகள் இறந்துகொண்டே யிருக்குமாயின் 10 வருடங்களும்; ஆண் குழந்தையே யின்றி பெண் குழந்தைகளையே பெற்றுக்கொண்டு வருவாளாயின் 11 வருடங்களும், ப்ரியமில்லாதவளாக இருப்பின் உடனேயும் அவளை நீக்கி மற்ெருரு பெண்ணுடன் நியோகம் புரிந்துகொண்டு குழந்தைகளைப் பெறலாம். (2) அவ்வாறே புருடனும் சதா துக்கத்தை யளிப்பவனுக இருந்தால் பெண் அவனை நீக்கி மற்ருேர் புருடனுடன் நியோகத்தால் கூடி குழந்தைகளைப் பெற்று முன்னவன் பாகஸ்தனுகக் கொடுத்து விடலாம்.

இத்யாதி ப்ரமாணங்களாலும், யுக்திகளாலும் சுயம்வர விவாகத்தாலும், நியோகத்தாலும் தங்கள் தங்களின் குலத்

தை விருத்தி செய்யவேண்டும். மணம் செய்து கொண்ட புருடனுக்குப் பிறக்கும் குழந்தைகள் தன் தகப்பனின் சொத்துக்களுக்கு அதிகாரியாவதைப் போலவே நியோகத்தால் பிறந்த குழந்தைகளும் தன் தாயை விட்டுப் பிரிந்த புருடனின் சொத்துக்களுக்கு பங்காளியாகின்றன. ஆகையால் புருடர்களும் பெண்களும் தங்களின் வீர்யம் தங்களின் சொந்த உபயோகத்திற்கே யன்றி துஷ்டபுருடர்களின் சேர்க்கையால் நாசம் செய்யப்படுவதற்கல்ல வென்று தெரிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால் குடியானவன் எவ்வளவு மூடனுயிருந்த போதிலும் தன் விதைகளை மற்றொருவனின் வயலில் விதைக்கமாட்டான். சாதாரண விதைக்கே இந்நியமமானல் சர்வோத்தமமாகிய மனித சரீரமாகிய மரத்திற்குக் காரணமான வீர்யமெனும் விதையை அன்னியர்களுக்கு அளிப்பவன் மகா மூடனல்லவா? அன்றி அதன் பலனையுமிவன் அடையப் போவதில்லை. அன்றி—:

आत्मा वै जायते पुत्रः ।।

(ப்ராம்மண க்ரந்தம்).

अङ्गादङ्गात्सम्भवसि हृदयादधिजायसे ।
आत्मा वै पुत्रनामासि स जीव शरदः शतम् ।।

(நிருக்தம்—3-4).

ஏ புத்ரா! நீ ஒவ்வொரு அங்கத்திலிருந்து முண்டாகிய வீர்யத்தினின்றும், இருதயத்தினின்றும் பிறந்திருக்கிறுய். இதனல் நீ என் ஆத்மாவாகிறுய். நீ எனக்கு முன் இறந்துவிடாது 100 வருடங்கள் வரை வாழ்ந்திரு. பெரும்

பெரும் அறிவாளிகளின் சரீரங்களெல்லாம் பிறப்பதற்குக் காரணமாயிருந்த வீர்யத்தை வேசி முதலாகிய துஷ்டர்களின் சரீரத்தில் வீணுக்குபவன் மகா பாபத்தைச் செய்பவனுகின்ருன்.

கேள்வி—: கலியாணம் என் செய்யவேண்டும்? செய்வதால் ஆண் பெண்களுக்கு பந்தனம் ஏற்பட்டுவிடுவதால் பல வித துக்கங்களுக்கு மிட முண்டாகிறது. ஆகையால் யாருக்கு யார்மேல் பிரியமுண்டாகிறதோ, அவர்களுடன் கூடியிருந்து பிரியம் விலகி விட்டபோது அவர்களும் பிரிந்துவிடுவது நலமல்லவா?

விடை—: நீ சொல்வது பக்ஷி, மிருகங்களின் காரியமின்றி மனிதர்களின் காரியமல்ல. மனிதர்களுக்கு விவாகமெனும் நியமமில்லா விட்டால் இல்லற வியவகாரங்கள் நாசமடைந்துவிடும். அன்றி ஒருவரின் சேவையில் ஈடுபடாததினுல் வியபசாரித்தனம் பெருகி சதா உலகில் வியாதிகளே நிறைந்திருக்கும். அத்துடன் நீண்டகாலம் வாழ்ந்திருப்பவர்கள் ஒருவருமிருக்க மாட்டார்கள். ஒருவருக் கொருவர் பயப்பட மாட்டார்கள். கிழமானவர்களைக் காப்பாற்ற ஒருவருமிருக்க மாட்டார்கள். ஒருவரின் சொத்துக்களுக்கு அதிகாரிகளில்லாமற் போய் விடுவார்கள். ஒரு பொருள் ஒருவரிடமே நீண்டகாலம் வரை இருக்காது. இவ்வாருய குற்றங்கள் விலகவேண்டுமானுல் விவாகநியமம் அவசியமிருக்கவேண்டும்.

கேள்வி—: ஒரு பெண்ணுடன் ஒரு புருடன் விவாகம் செய்துகொண்ட பிறகு மனைவியாவது புருடனுவது தீர்க்க

முடியாத வியாதியாளர்களாகவே இருந்துவிட்டால் என்ன செய்வது ?

விடை—: இதற்கு விடை நியோக விஷயத்தில் சொல்லியாய் விட்டது. புருடனே மனைவியோ அவ்வாறு நீண்ட வியாதியாளர்களாய் விட்டால் அவர்களுக்காகவே மற்றொருவரிடத்தில் நியோகம் செய்துகொண்டு குழந்தைகளைப் பெற்றளிக்கலாம். ஆனல் வேசிகமனம் ஒருபோதும் செய்யலாகாது.

எவ்வளவு காலம்வரை முடியுமோ அவ்வளவு காலம் வரை பணம்சேகரி. சேகரித்தவைகளைக் காப்பாற்று. காப்பாற்றியவைகளை மேலும் விருத்திசெய். விருத்திசெய்தவைகளை தேசோபகாரத்தில் செலவிடு. முன் சொன்ன வர்ணாச்ரம விதிகளைச் சரிவா அனுஷ்டித்துக்கொண்டு தன, மனங்களால் விருத்தியாக்கிக் கொண்டுவரவும். தன்னுடைய தாய், தந்தை, மாமன், மாமி முதலியவர்களுக்கு சதா ஊழியம் புரியவேண்டும். தன் நண்பன், சுற்றத்தான், அண்டினவன், அரசன், வித்வான், வைத்தியன் முதலியவர்களிடம் அன்பைச் செலுத்தி, துஷ்டர்களுடனுங்கூட குரோதத்தைவிட்டு அவர்களையும் மேல்நிலைக்குக் கொண்டுவர முயற்சிக்கவேண்டும். தான் உயிருடனிருக்கும்வரைத் தன் மக்களை பூர்ண வித்வான்களாகச் செய்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து வேண்டிய பொருள்களையும் அதன் பொருட்டு செலவிட வேண்டும். தர்மாசரணத்தைக்கொண்டு மோக்ஷத்தையடையவும் முயற்சித்து வரவேண்டும். அன்றி இம் மாதிரியான ஸ்லோகங்களை மதிக்கக்கூடாது—:

पतितोऽपि द्विजः श्रेष्ठो न च शूद्रो जितेन्द्रियः ।
निर्दुग्धा चापि गौः पूज्या न च दुग्धवती खरी ॥ १ ॥
अश्वालम्भं गवालम्भं संन्यासं पलपैत्रिकम् ।
देवराच्च सुतोत्पत्तिं कलौ पञ्च विवर्जयेत् ॥ २ ॥
नष्टे मृते प्रव्रजिते क्लीबे च पतिते पतौ ।
पञ्चस्वापत्सु नारीणां पतिरन्यो विधीयते ॥ ३ ॥

(இவைகள் பராசரரால் எழுதப்பட்டவை யென்று சொல்லப்படும் ஸ்லோகங்கள்). கெட்ட காரியங்களைப் புரியும் த்விஜனை மேலானவனுகவும், மேலான காரியங்களைப் புரியும் சூத்திரனை நீசனுகவும் மதித்தல்; இதைவிட பக்ஷபாத அநியாய, அதர்மம் என்ன இருக்கும்? பால் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் பசுவை மனிதர்கள் காப்பாற்றுகிருர் கள். ஏனென்ருல் அவைகள் பால் கொடுப்பதுமாத்திர மன்றி மற்றும் பல காரியங்களுக்கும் உபயோகப்படுகின்றன. அது மாத்திரமல்ல. த்விஜனும் சூத்திரனும் ஒரே மனித ஜாதியைச் சேர்ந்தவர்களாகும். ஆனுல் பசுவும் கழுதையும் வெவ்வேறு ஜாதிகளாகும். ஆகையால் பசுவுக்குச் சமமாகாததைச் சம மாகச்சொல்லும் இச்சுலோகம் வித்வான்களால் மதிக்கப் படாததாகும். (1).

பசுவையோ, குதிரையையோ கொன்று யாகம் புரிய வேண்டுமென்பது வேதசம்மதமில்லை. என்ருல் இதை கலி யுகத்தில் விலக்கப்பட்டிருப்பது என் வேத விருத்தமாகாது? ஏனென்ருல் நல்லயுகமாகிய கலியுகத்திலே கெட்ட காரியங் களை வைத்துக்கொண்டிருப்பது அசம்பாவிதமே யல்லவா? இன்னும் சன்னியாசத்திற்கு வேதாதிகளிலே விதியிருக்கிறது.

அதை விலக்கினால் நிர்மூலமாகிவிடும். மாம்ச உணவின் விலக்கு எப்போதும் விலக்கு தான். தேவரனுடன் கூடி மக்களைப்பெறுதல் வேத சம்மதமாயிருக்க இச் சுலோககர்த்தர் ஏன் மறைக்கப்பார்க்கின்றார்? (2).

புருடனானவன் வெளிதேசங்களுக்குச் சென்றுவிட்டால் மனைவி நியோகம் செய்துகொள்ளலாம். அப்போது மணம் புரிந்துகொண்ட புருடன் வந்துவிட்டால் இவள் யாருடைய மனைவியாவது? இல்லை. மணம் புரிந்தவனுக்குத்தான் மனைவியாக வேண்டுமென்றால் அவ்வாறு பாராசரீயத்திலும் எழுதியிருக்கவில்லை. பெண்களுக்கு ஐந்து ஆபத்துக்காலங்கள் தான் உண்டாகிறதா? இல்லை. வியாதியஸ்தன் ஆதல், யுத்தம் புரிந்து காயமோ மரணமோ அடைதல் முதலாகிய பல்வேறு ஆபத்துகளுமுண்டாகிறது. ஆகையால் இப்பேர்ப்பட்ட சுலோகங்களை ஒருபோதும் மதிக்கக்கூடாது.

கேள்வி—: நீர் பாராசாமுனியின் வார்த்தைகளை மதிப்பதில்லையா?

விடை—:யாருடைய வார்த்தைகளா யிருந்தபோதிலும் வேதத்திற்கு மாறுபட்டவைகளை மதிப்பதில்லை. அன்றி இவைகள் பாராசரரின் வார்த்தைகளும் அல்ல.

ஏனென்றால் "ப்ரம்ம உவாச, வஸிஷ்ட உவாச, ராம உவாச, சிவ உவாச, விஷ்ணுருவாச, தேவ்யுவாச" இத்யாதி மேலானவர்களின் பெயர்களை வைத்து நூலை எழுதுதல் சகல தேசங்களிலு மிதற்கு மதிப்பு ஏற்படு மென்பதற்காகவேயாகும். இதனாலே அனர்த்தத்துடன் கூடிய வாக்கியங்

களையுடைய கிரந்தங்களையு மெழுதுகிறார்கள். மனுஸ்மிருதியில் சில சுலோகங்களே வேத சம்மதமானதன்றி மற்ற ஸ்மிருதிகள் வேத சம்மதமாகாதவை யாகும்.

கேள்வி—: இல்லறம் எல்லாவற்றிலும் பெரியதா சிறியதா?

விடை—: அவ்வவைகளின் கர்த்தவ்ய காரியங்களில் அவ்வவைகள் எல்லாவற்றிலும் பெரியதேயாகும். ஆனால்—:

यथा नदीनदाः सर्वे सागरे यान्ति संस्थितिम् ।
तथैवाश्रमिणः सर्वे गृहस्थे यान्ति संस्थितिम् ॥ १ ॥

(மனு—6–90).

यथा वायुं समाश्रित्य वर्त्तन्ते सर्वजन्तवः ।
तथा गृहस्थमाश्रित्य वर्त्तन्ते सर्व आश्रमाः ॥ २ ॥
यस्मात्त्रयोप्याश्रमिणो दानेनान्नेन चान्वहम् ।
गृहस्थेनैव धार्य्यन्ते तस्माज्ज्येष्ठाश्रमो गृही ॥ ३ ॥
स संधार्यः प्रयत्नेन स्वर्गमक्षयमिच्छता ।
सुखं चेहेच्छता नित्यं योऽधार्यो दुर्बलेन्द्रियैः ॥ ४ ॥

(மனு—3, 77—79).

பெரும் பெரும் நதிகளெல்லாம் எதுவரை சுற்றிக் கொண்டு போகிறதோ அது வரை அவைகள் கடலை அடைய முடியாது. அதேபோல் இல்லற தர்மத்திலேயே சகல தர்மங்களும் நிலைத்திருக்கின்றன. இத் தர்மமின்றி மற்ற தர்மங்கள் விருத்தி யடைவதில்லை. இல்லற வாசிகளே மற்ற மறைமாணவர், வானப்ரஸ்தன், சன்யாசிகளுக்கு அன்ன

மளித்துக் காப்பாற்றி வருவதால் இல்லறமே பெரிய தர்ம மாகும். ஆகையால் மோக்ஷத்தை விரும்புபவர்கள் இல்லறத் தையுமனுசரிக்க முயற்சி செய்யவேண்டும். இல்லற தர்ம மானது பலமில்லாதவர்களாலும், பயங்கொள்ளிகளாலும் தரிக்கப்படமுடியாததாகும். நல்லவர்களே அதை தரித் திருக்கமுடியும். ஆகையால் உலக காரியங்கள் எல்லாம் இல்லறத்தின் ஆதரவின் மேலேயே நடைபெறுகின்றன. இல்லறம் இல்லாவிட்டால் குழந்தைகளின் பிறப்பில்லாமல் போய்விடும். அவ்வாறாயின் மற்ற மூன்று தர்மங்களையும் யார் அனுசரிப்பார்கள்? இல்லறத்தை நிந்திப்பவனே நிந்தனைக் கதிகாரியாகும். அதைப் புகழ்பவனே புகழ்ச்சியாளனு வான். ஆனல் இல்லறத்தில் ஆண் பெண்கள் பரஸ்பரம் கனிந்தவர்களாகவும், வித்வான்களாகவும். சகல காரியங் களின் அறிவைப் பெற்றவர்களாகவும் இருந்தால் மாத்திரமே சந்தோஷம் எற்படக்கூடும். இல்லறத்தின் சந்தோஷத்தின் அடிப்படை மறைமாணவமும், விவாகமுமேயாகும். இவ் வத்தியாயத்தில் இல்நுழைதல், விவாகம், இல்லறம் முதலிய விஷயங்களைக் குறித்து எழுதினோம். அடுத்த அத்தியாயத் தில் வானப்ரஸ்தம் சன்னியாசம் இவைகளைக் குறித்து ஆராய் வோம்.

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்.

अथ वानप्रस्थसंन्यासविधिं वक्ष्यामः ।

ब्रह्मचर्य्याश्रमं समाप्य गृही भवेत् गृही भूत्वा वनी भवेद्वनी भूत्वा प्रव्रजेत् ॥ சதபதம்—14

மறைமாணவம் முடித்தபின் இல்லறத்தனுகு. இல்லற ஞகி வானப்ரஸ்தனுகு. வானப்ரஸ்தனுகி பின் சன்னியாசம் கொள். இவ்வாறே சகலரும் கிரமமாக அனுஷ்டித்து வர வேண்டும்.

एवं गृहाश्रमे स्थित्वा विधिवत्स्नातको द्विजः ।
वने वसेत्तु नियतो यथावद्विजितेन्द्रियः ॥ १ ॥

गृहस्थस्तु यदा पश्येद्वलीपलितमात्मनः ।
अपत्यस्यैव चापत्यं तदारण्यं समाश्रयेत् ॥ २ ॥

संत्यज्य ग्राम्यमाहारं सर्वं चैव परिच्छदम् ।
पुत्रेषु भार्यां निःक्षिप्य वनं गच्छेत्सहैव वा ॥ ३ ॥

अग्निहोत्रं समादाय गृह्यं चाग्निपरिच्छदम् ।
ग्रामादरण्यं निःसृत्य निवसेन्नियतेन्द्रियः ॥ ४ ॥

मुन्यन्नैर्विविधैर्मेध्यैः शाकमूलफलेन वा ।
एतानेव महायज्ञान्निर्वपेद्विधिपूर्वकम् ॥ ५ ॥

(மனு—6, 1—5).

முதல் மூன்று வர்ணத்தவர்களும் மறைமாணவத்துடன் கூடின இல்லறத்தை சரிவர பரிபாலித்தபின் நிச்சய மனத்தர்களாகி, புலன்களை வென்று வனத்தைச் சேரவும் (1). ஆனால் இல்லறத்தனின் தலை மயிர்கள் வெளுப் படைந்து, தோல் சுருங்கிவிட்டு, தன் குழந்தைக்குக் குழந்தை உண்டானதைக் கண்டபின் வனத்தைச் சேரவேண்டும். (2). நல்ல ஆகாரம் ஆடைகள் முதலிய உத்தம பொருள் களை நீக்கி, தன் மனைவியைத் தன் மகனிடம் ஒப்படைத்தாகிலும், விரும்பினால் தன்னுடன் கொண்டாகிலும் வனத்தையடைந்து வசிக்கவேண்டும் (3). சாங்கோபாங்கமாக அக்னிஹோத்ராதிகளை உடன்கொண்டு திடப்புலன்களை யுடையவனாகி அரண்யம் சென்று வசிக்கவேண்டும் (4). பலவிதங்களான அன்னங்கள், நல்ல நல்ல இலைகள், கிழங்குகள், பழங்கள், புட்பங்கள் முதலியவைகளுடன் முன் சொல்லியிருக்கும் ஐவித வேள்விகளையும் புரியவேண்டும். அவைகளால் அதிதிகளை உபசரித்துக்கொண்டு தன்னையும் நிர்வகித்துக் கொண்டிருக்க வேண்டும் (5).

स्वाध्याये नित्ययुक्तः स्याद्दान्तो मैत्रः समाहितः ।
दाता नित्यमनादाता सर्वभूतानुकम्पकः ॥ १ ॥
अप्रयत्नः सुखार्थेषु ब्रह्मचारी धराशयः ।
शरणेष्वममश्चैव वृक्षमूलनिकेतनः ॥ २ ॥

(மனு—6—8—26).

கற்றல் கற்பித்தலைக் கொண்டு ஆத்மாவை வென்று, சகலருக்கும் நண்பனாகி, இந்திரியங்களை தன் வசமாக்கினவனாய், வித்யாதி தானங்களை யளித்துக்கொண்டு, சகலரிடமும்

கருணை காட்டி, ஒருவரிடமிருந்தும் தனக்காக எதையும் ஏற்றுக் கொள்ளாதவனாய் சதா காலமும் வசித்து வரவேண்டும் (1). சரீரத்தின் சுகத்திற்காக அதிகமான ப்ரயாசையைக் கொள்ளக்கூடாது. தன் மனைவி உடனிருந்தபோதிலும் சேர்க்கை கொள்ளலை ஒருபோதும் நினையாது பறைமாணவனாயிருக்கவேண்டும். பூமியிற் படுக்க வேண்டும். தனக்குள்ளவைகளைக் குறித்து கெர்வப்படக் கூடாது. கிழங்குகளாலேயே ஜீவித்திருக்க வேண்டும். (2)

तपःश्रद्धे ये ह्युपवसन्त्यरण्ये शान्ता विद्वांसो भैक्षचर्य्यां चरन्तः ।

सूर्य्यद्वारेण ते विरजाः प्रयान्ति यत्राऽमृतः स पुरुषो ह्यव्ययात्मा ॥ (முண்டகம்—2-11).

வனத்திலே தவம், தர்மானுஷ்டானங்களை யனுசரித்துக்கொண்டு, சத்யத்தின் சிரத்தையைக் கொண்டு, ஐயமறக் கற்றலைக் கொண்டு வசித்துவரும் அமைதி பெற்ற வித்வான்கள் பரமாத்மாவின் நிர்மலத் தன்மையை அடைந்து, ப்ராணத்தின் மூலமாய் அப்பரமாத்மாவை யடைந்து, ஆனந்தத்தைப் பெறுகிறார்கள்.

अभ्यादधामि समिधमग्ने व्रतपते त्वयि ।
व्रतञ्च श्रद्धां चोपैमीन्धे त्वा दीक्षितो अहम् ॥

(யஜுர்—20—24).

"நான் அக்னியில் ஓமம் புரிந்து; தீக்ஷிதனாகி; விரதம், சத்யாசரணம், சிரத்தை முதலியவைகளைப் பெறுவேன்.

பலவிதங்களான தவங்களைப் புரிதல், நல்லோர் நட்பைக் கொள்ளல், யோகாப்யாசம் புரிதல், நல்ல விசாரணைகளைச் செய்தல் முதலியவைகளால் அறிவைப் பெற்று சுத்தமடைவேணுகவும்," என்று வானப்ரஸ்தர்கள் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். இவ்வாறான காரியங்களைப் புரிய விருப்பம் ஏற்பட்டபோது தன் மனைவியை மகனிடம் ஒப்படைத்து பின் சன்னியாசம் பூணவேண்டும். இவைகள் வானப்ரஸ்த விதிகளாகும்.

சன்னியாச விதி

वनेषु च विहृत्यैवं तृतीयं भागमायुषः ।
चतुर्थमायुषो भागं त्यक्त्वा सङ्गान् परिव्रजेत् ॥

(மனு—6—33).

இவ்வாறு காட்டிலே வாழ்நாளின் மூன்றும் பாகத்தை என்றால் 50 வயதிலிருந்து 75 வயது வரை வானப்ரஸ்தனைகக் கழித்து, வாழ் நாளின் நான்காம் பாகத்தில் சேர்க்கைகளைத் துறந்து, சன்னியாசமாகவேண்டும்.

கேள்வி—: இல்லறத்தையும், வானப்ரஸ்தத்தையும் அனுசரிக்காமலே சன்னியாசம் கொண்டுவிடுவதால் பாபம் உண்டாகுமா இல்லையா ?

விடை—: உண்டாகிறது—உண்டாகிறதில்லை.

கேள்வி—: இவ்வாறு இரண்டு வார்த்தைகளையும் சொன்னால் என்ன அர்த்தம் ?

விடை—: இரண்டும் இல்லை. பால்யவயதிற்குப் பின் சன்னியாச மேற்கொண்டும் பிறகும் விஷய இச்சைகளில் விருப்பங் கொள்பவன் பெரும் பாபியாகும். அவ்வாறின்றி திடமனதுடனே விரக்தியைப் பெற்றிருப்பானேயாகில் அவன் பெரும் புண்ணிய சாலியாகும்.

यदहरेव विरजेत्तदहरेव प्रव्रजेद्वनाद्वा गृहाद्वा ब्रह्मचर्यादेव प्रव्रजेत् ॥ (ப்ராமணக்ரந்தம்).

எந்நாளில் திடவைராக்ய முண்டாகுமோ அன்னாளி லேயே இல்லைத் துறந்து துறவு கொள்ளலாம். அல்லது இல்லறத்திலிருந்து வானப்ரஸ்தம் அனுசரிக்காமலேயுங்கூட துறவு பூணலாம். ஆனால் பூர்ண வித்வானாகி, இந்திரியங் களைத் தன் வசமாக்கி, விஷய போகங்களில் சிறிதும் பற்றில் லாது விலக்கிய மறை மாணவன் மறைமாணவத்திலிருந்தே சன்னியாசம் கொள்ளலாம். வேதங்களில்கூட (**यतयः ब्राह्मणस्य, विजानतः**) இத்யாதி வாக்கியங்களிலிருந்து சன்னி யாசத்தின் விதிகள் கிடைக்கின்றன. ஆனால்—:

नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः ।
नाशान्तमानसो वापि प्रज्ञानेनैवमाप्नुयात् ॥

(கடோபநிஷத்—2—33).

கெட்ட ஆசாரங்களிலிருந்து விலகாதவன்; அமைதி யில்லாதவன்; ஆத்ம யோகத்தன்மையை அடையப் பெறாத வன்; ஞானமிலா மனத்தன் துறவுகொண்டபோதிலுங்கூட பரமாத்மாவை யடைவதில்லை. இதனால்—:

यच्छेद्वाङ्मनसी प्राज्ञस्तद्यच्छेद् ज्ञान आत्मनि ।
ज्ञानमात्मनि महति नियच्छेत्तद्यच्छेच्छान्त आत्मनि ॥
(கடோபநிஷத்—3—13).

துறவிகள் வாக்கையும், மனதையும் அதர்மத்திலிருந்து விலக்கி ஞானம் பெறச்செய்து ஆத்மாவிலே ஒன்றுபடுத்த வேண்டும். அவ்வாறு ஞானத்தைப் பெற்ற ஆத்மாவை பின் பரமாத்மாவினிடம் செலுத்தவேண்டும். கடவுளெனும் அவ் விக்ஞானத்தை ஆத்மாவிலே பூர்ணமாக நிலைக்கச் செய்ய வேண்டும்.

परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेदमायान्नास्त्यकृतः कृतेन ।

तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत् समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ॥ (முண்டகம்—2—12).

உலகபோக காரியங்களை சித்தம் வெறுத்து விட்டது எனக் கண்டபோது சன்னியாச வைராக்யத்தை மேற் கொள்ள வேண்டும். ஏனென்றால் செய்யப்படாத பரமன் கேவலம் செய்கையினால் மாத்திரம் ப்ராப்தமாவதில்லை. இத னால் ஏதாவது கொஞ்சத்தை அர்ப்பணத்தின் பொருட்டாக கையிற்கொண்டு வேதவித் அல்லது பரமாத்மாவின் சம்பந் தம் பெற்ற குருவினிடம் விக்ஞானத்திற்காகச் செல்லவேண் டும். சென்று சகல சந்தேகங்களையும் தீர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் நீச எண்ணங்களை ஒருபோதும் நினைக்க லாகாது—:

अविद्यायामन्तरे वर्त्तमानाः स्वयंधीराः पण्डितम्मन्यमानाः।
जङ्घन्यमानाः परियन्ति मूढा अन्धेनैव नीयमाना यथा-
न्धाः ॥ १ ॥
अविद्यायां बहुधा वर्त्तमाना वयं कृतार्था इत्यभिमन्यन्ति
बालाः ।
यत्कर्मिणो न प्रवेदयन्ति रागात् तेनातुराः क्षीणलोकाश्च्य-
वन्ते ॥ २ ॥ (முண்டகம்—2—8—9).

அவித்தையினுள்ளே விளையாடிக்கொண்டு தன்னைத் தானே தீரனென்றும் பண்டிதனென்றும் மதித்திருப்பவன் நீச கதியை அறியும் மூடனாவான். குருடர்கள் குருடர்களுக்கு வழிகாட்டிச் செல்வதைப் போன்ற துக்கத்தையே அவர்கள் அடைகிறார்கள் (1). பெரிய அவித்தையில் மயங்கிக் கொண்டிருக்கும் பாலபுத்தியை யுடையவர்கள் தங்களைத் தாங்களே க்ருதார்த்தர்களென்று நினைக்கின்றார்கள். அவர்கள் கேவலம் ராக, மோகாதிகளைப் பெற்றவர்களாய் ஜனன மரண ரூபமான பெரும் துக்க சாகரத்தில் மூழ்குகிறார்கள். (2) இதனால்—:

वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः संन्यासयोगाद्यतयः शुद्ध-
सत्त्वाः ।
ते ब्रह्मलोकेषु परान्तकाले परामृताः परिमुच्यन्ति सर्वे ।।
(முண்டகம்—2—6).

பரமேஸ்வரனால் உண்டு செய்யப்பட்ட வேதமந்திரங்களின் அர்த்தக்ஞான ஆசாரங்களில் நல்ல விதமாக நிச்சயிக்கப்பட்ட, சன்னியாச யோகத்தால் சுத்தம் செய்யப்பட்ட

புலன்களையுடையவர்கள் பரமேஸ்வரனின் முக்தி சுகத்தை யனுபவித்த பிறகு அங்கிருந்து நீங்கி சம்சாரத்தை மறுபடியும் அடைகிறார்கள். முக்தியன்றி துக்க நாசம் ஒருபோதும் உண்டாவதில்லை. ஏனென்றால்—:

न वै सशरीरस्य सतः प्रियाप्रिययोरपहतिरस्त्यशरीरं वाव सन्तं न प्रियाप्रिये स्पृशतः ॥

(சாந்தோக்யம்—8—12).

தேகத்தைத் தரித்திருக்கும் வரை ஆத்மாவானது சுக துக்கங்களை யடைவதினின்றும் விலகுவதில்லை. சரீரத்தை விட்டு நீங்கிய ஆத்மாவானது முக்தியால் பரமேஸ்வரனுடன் சுத்தமடைந்து வசிக்கிறது. அப்போது மாத்திரமே அதற்கு சுக துக்கங்கள் கிடையாது. இதனால்— :

पुत्रैषणायाश्च वित्तैषणायाश्च लोकैषणायाश्च व्युत्थायाथ भिक्षाचर्यं चरन्ति ॥

(சதபதம்—14—5—2 I.)

உலக சுகங்களையும், தனங்களில் மோகத்தையும் புத்திராதிகளில் மோகத்தையும் முற்றும் நீக்கி சன்னியாசிகள் பிச்சைக்காரர்களாகி இரவும் பகலும் முக்தி சாதனங்களிலேயே வசிக்கின்றார்கள்.

प्राजापत्यां निरूप्येष्टिं तस्यां सर्ववेदसं हुत्वा ब्राह्मणः प्रव्रजेत् ॥ १ ॥

(யஜுர்வேதப்ராம்மணம்).

प्राजापत्यां निरूप्येष्टिं सर्ववेदसदक्षिणाम् ।
आत्मन्यग्नीन्समारोप्य ब्राह्मणः प्रव्रजेत् गृहात् ॥ २ ॥
यो दत्वा सर्वभूतेभ्यः प्रव्रजत्यभयं गृहात् ।
तस्य तेजोमया लोका भवन्ति ब्रह्मवादिनः ॥ ३ ॥

(மனு—6—38—39).

பரமாத்மாவை யடையும் பொருட்டு செய்யப்படும் வேள்விகளைச் செய்து, அதில் யக்ஞோபவீதம், சிகை இவைகளை நீக்கி; ஆஹவனீயாதி ஐந்து அக்னிகளால் ப்ராண, அபான, வியான, உதான, சமான ஆகிய ஐந்து ப்ராணங்களையும் திடமடையச் செய்து கொண்ட அறிவாளிகள் வீட்டைத் துறந்து சன்னியாசம் பெறுவார்களாக (1-2). கேவலம் பூதப்ராணிகள் வரை அபயதான மளித்து வீட்டைத் துறந்து செல்லும் துறவியானவர் பரமேஸ்வரரின் வாக்கியங்களாகிய வேதங்களில் சொல்லியுள்ள தர்மாதி வித்தைகளை உபதேசம் செய்துகொண்டு முக்தியாகிய ஆனந்த சாகர உலகை யடைகின்றார் (3).

கேள்வி—: துறவிகளின் தர்மமென்ன?

விடை—: பக்ஷபாதமில்லாத நியாயாசரணம், சத்யக்ரஹணம், அசத்தியவிலக்கு, வேதம் சொல்லியுள்ள கடவுளின் கட்டளையை பரிபாலித்தல், பரோபகாரம், சத்யம் பேசுதலாகிய குறிகள், சகல மனிதர்களையும் சமமாகப் பாவித்தல் முதலியவைகள் துறவிகளின் தர்மங்களாகும்—:

दृष्टिपूतं न्यसेत्पादं वस्त्रपूतं जलं पिबेत् ।
सत्यपूतां वदेद्वाचं मनःपूतं समाचरेत् ॥ १ ॥

क्रुद्धयन्तं न प्रतिक्रुध्येदाक्रुष्टः कुशलं वदेत् ।
सप्तद्वारावकीर्णां च न वाचमनृतां वदेत् ॥ २ ॥

अध्यात्मरतिरासीनो निरपेक्षो निरामिषः ।
आत्मनैव सहायेन सुखार्थी विचरेदिह ॥ ३ ॥

क्लृप्तकेशनखश्मश्रुः पात्री दण्डी कुसुम्भवान् ।
विचरेन्नियतो नित्यं सर्वभूतान्यपीडयन् ॥ ४ ॥

इन्द्रियाणां निरोधेन रागद्वेषक्षयेण च ।
अहिंसया च भूतानाममृतत्वाय कल्पते ॥ ५ ॥

दूषितोऽपि चरेद्धर्मं यत्र तत्राश्रमे रतः ।
समः सर्वेषु भूतेषु न लिंगं धर्मकारणम् ॥ ६ ॥

फलं कतकवृक्षस्य यद्यप्यम्बुप्रसादकम् ।
न नामग्रहणादेव तस्य वारि प्रसीदति ॥ ७ ॥

प्राणायामा ब्राह्मणस्य त्रयोऽपि विधिवत्कृताः ।
व्याहृतिप्रणवैर्युक्ता विज्ञेयं परमन्तपः ॥ ८ ॥

दह्यन्ते ध्मायमानानां धातूनां हि यथा मलाः ।
तथेन्द्रियाणां दह्यन्ते दोषाः प्राणस्य निग्रहात् ॥ ९ ॥

प्राणायामैर्दहेद्दोषान् धारणाभिश्च किल्बिषम् ।
प्रत्याहारेण संसर्गान् ध्यानेनानीश्वरान् गुणान् ॥ १० ॥

उच्चावचेषु भूतेषु दुर्ज्ञेयामकृतात्मभिः ।
ध्यानयोगेन संपश्येद् गतिमस्यान्तरात्मनः ॥ ११ ॥

अहिंसयेन्द्रियासङ्गैर्वैदिकैश्चैव कर्मभिः ।
तपसश्चरणैश्चोग्रैस्साधयन्तीह तत्पदम् ॥ १२ ॥

यदा भावेन भवति सर्वभावेषु निःस्पृहः ।
तदा सुखमवाप्नोति प्रेत्य चेह च शाश्वतम् ॥ १३ ॥

चतुर्भिरपि चैवैतैर्नित्यमाश्रमिभिर्द्विजैः ।
दशलक्षणको धर्मः सेवितव्यः प्रयत्नतः ॥ १४ ॥

धृतिः क्षमा दमोऽस्तेयं शौचमिन्द्रियनिग्रहः ।
धीर्विद्या सत्यमक्रोधो दशकं धर्मलक्षणम् ॥ १५ ॥

अनेन विधिना सर्वांस्त्यक्त्वा संगाञ्छनैः शनैः ।
सर्वद्वन्द्वविनिर्मुक्तो ब्रह्मण्येवावतिष्ठते ॥ १६ ॥

(மனு—6-46-48-49-52-60-66-67-70, 73-75-80-
[81-91-92).

சன்னியாசிகள் நடக்கும்போது பார்வையை கீழே யே செலுத்தி நடக்கவேண்டும். தண்ணீரை யெப்போதும் துணியால் வடிகட்டிக் குடிக்கவேண்டும். சதா சத்தியமே பேசவேண்டும். எதையும் மனதால் நன்கு விசாரித்து சத்தியத்தைக் கைக்கொண்டு பொய்யை நீக்கவேண்டும் (1). விவாதங்கள் புரியும் காலத்தில் எதிரிகள் கோபத்தைக் கொண்டபோதிலும் துறவிகள் கோபம் கொள்ளாமலே யிருந்து அவ்வெதிரிகளுக்கும் சத்தியத்தையே போதித்து வரவேண்டும். ஒரு வாய், இரண்டு நாசித்துவாரங்கள், இரண்டு கண்கள், இரண்டு செவிகள் இவைகளை யெப்போதும் பொய் விஷயங்களில் உபயோகப் படுத்தக் கூடாது (2). தன் ஆத்மாவை பரமாத்மாவிடம் நிலைக்கச் செய்து, ஒன்றிலும் ஆசையற்று; கள், மாமிசம் முதலியவைகளை அறவே நீக்கி ஆத்மாவின் சகாயமான சுகங்களையே நாடி உலகத்தில் தர்மம், வித்தை இவைகளை பிறருக்குக் கற்பிப்பதிலே சதா விசாரணையைச் செலுத்திக் கொண்டிருக்கவேண்டும் (3). மயிர், நகம், தாடி, மீசை முதலிய

வைகளை யெடுத்து விடவேண்டும். சதா பாத்திரம், தண்டம், காவியாடைகளைக் கொண்டு, நிச்சயிக்கப்பட்ட ஆத்மாவை யுடையவனாய், ஒரு பிராணிக்கும் துன்பத்தை நாடாது எங்கும் திரிந்து கொண்டிருக் கவேண்டும் (4). புலன்களை அதர்மங்களில் செல்லா வண்ணம் தடுத்து, ராகத் துவேஷாதிகளை நீக்கி, சகல பிராணிகளிடமும் விரோதமின்றி வசித்து, மோக்ஷத்தையே நாடி யிருக்க வேண்டும் (5). உலகில் தன்னை விரும்பினபோதிலும், வெறுத்த போதிலும் அவைகளைக் கவனியாது சகல பிராணிகளிடத்தும் வஞ்சனையின்றி தான் தர்மாத்மாவாகவும், பிறரையும் தர்மாத்மாவாகச் செய்வதிலேயும் தன் முயற்சியைச் செலவிடவேண்டும். தண்டம், கமண்டலம், காவியாடை முதலிய குறிகள் தர்மத்தின் காரணமன்று, ஆனால் சகல மனிதர்களும் தன்னிடம் எப்போதும் வந்து சத்யோபதேசத்தையும், வித்யா தானத்தையும் பெற்று கொள்ளலாமென்று அவர்கள் அறிந்து கொள்ளக்கூடிய ஓர் குறியே யாகுமென்று துறவிகள் அறிந்து கொள்ள வேண்டும் (6). ஏனென்றால் நிர்மலமான ஓர் மரத்தின் பழம் தண்ணீரில் விழுந்தால் மாத்திரமே தண்ணீர் சுத்தமடைகின்றது. அல்லாமல் அதன் பெயரைச் சொல்வதாலும், அதை நினைப்பதாலும் மாத்திரம் தண்ணீர் சுத்தமடைந்து விடாது (7) இதனால் துறவிகள் "ஓங்கார" பூர்வகமாக "சப்தவ்யாஹ்ருதிகளால்" விதி பூர்வகமாக கூடியவரை உயிர்வயங்கள் (ப்ராணாயாமங்கள்) செய்யவேண்டுவ தவசியமாகும். ஆனால் மூன்றுக்குக் குறைவாக எப்போதும் செய்யக்கூடாது. இதுவே துறவிகளின் பரம தவமாகும் (8). ஏனென்றால்—: அக்னியால் தபிக்கப்பட்ட தாதுக்

களின் அழுக்குகள் நீங்குவதைப் போல ப்ராணத்தின் வசீகரத்தால் புலன்களின் குற்றங்கள் நீங்கப் பெறுகின்றன (9). ஆகையால் துறவிகள் நிதமும் ப்ராணுயாமத்தால் ஆத்மாவையும், அந்தக்கரணங்களேயும், இந்திரியங்களேயும் ; தாரணையினுல் பாபங்களேயும் ; ப்ரத்யாகாரத்தால் சேர்க்கைக் குற்றங்களேயும் ; தியானத்தால் களிப்பு, துக்கம், விசனம் முதலாகிய ஜீவதோஷங்களேயும் சுத்தம் செய்து வைத்துக் கொள்ளவேண்டும் (10). இவ்விதமான தியான யோகத்தால் அயோகி, அவித்வான்களின் துக்கங்களால் அறியத்தகாத சிறிய, பெரிய, பதார்த்தங்களிலும் உள்ள கடவுளின் வ்யாபகத்தை தன் - ஆத்மாவிலுள்ள பரமனின் வ்யாபகத்தை அறியக்கூடும் (11). பூதங்களிடம் விரோதமின்மை, புலன்களின் விஷயங்களே நீக்கல், வேதாந்த கர்மங்கள், மேலான தவங்கள் முதலியவைகளேப் புரிதல், இவைகளேத் துறவியானவன் கைக்கொண்டு, பிறர்களேயும் கைக்கொள்ளுமாறு செய்ய வேண்டியதே கடமையாகும். மற்ற தொன்றுமில்லே (12). துறவியானவன் சகல பொருள்களிலும் விருப்பத்தை நீக்கி ; உள்ளும், புறம்புமுள்ள வியவகாரங்களேச் சுத்தமாக வைத்துக் கொள்ளும்போது இச் சரீரத்தினின்றும் பிரிந்து சென்று நிரந்தரமான சுகத்தை யடைகின்றுன் (13). ஆகையால் மறை மாணவன், இல்லறத்தன், வனசஞ்சாரி, துறவி முதலியவர்கள் முயற்சியால் பத்துவித குறிகளேயுடைய கீழ்வரும் தர்மத்தை சதா கைக்கொண்டொழுகி வரவேண்டும் (14). (த்ருதி) சதா தைர்யத்துடனிருத்தல் (க்ஷமா) மானுபிமானம், லாப நஷ்டம், சுக துக்கங்களே சமமாக அனுபவித்தல் (தம) மனதை சதா தர்ம மார்க்கத்தில் செலுத்தி அதர்

மத்தை ஒருசிறிதும் நினையாதிருத்தல் (அஸ்தேய) திருட்டுத்தனம்—என்றால்—பிறருடைய உத்தரவின்றியே அவர்களின் பொருளை எடுத்துக் கொள்ளல் முதலிய காரியங்களை அறவே நீக்குதல் (ஸௌச) ராகத் துவேஷ வஞ்சனைகளை விட்டு சதா உள்ளும் புறம்பும் சுத்தமாக இருத்தல் (இந்திரிய நிக்ரஹ) புலன்களை சதா தர்மத்திலே செலுத்தல் (தீ:) போதைப் பொருள், துஷ்டர் சகவாசம், சோம்பல், ப்ரமாதம் இவைகளை நீக்கி மேலான பொருள்களை சேவித்து நல்லோர் நட்பைக்கொண்டு யோகாப்பியாசத்தால் புத்தியை வளர்த்தல் (வித்யா) பூமி முதல் கடவுள் வரையுள்ள சகல பொருள்களினதும் தத்துவங்களை யறிந்து மனம், வாக்கு, காயம் முதலியவைகளை பேதமின்றி வைத்துக் கொள்ளல் (சத்ய) ஒரு பொருள் எந்த நிலையிலிருக்கிறதோ அதே நிலையில் அதைக் கண்டு, சொல்லி, கேட்டு, செய்தல் (அக்ரோத) கோபமாதி குற்றங்களைவிட்டு, அமைதியாதி குணங்களைக் கொள்ளல். இவைகள் தர்மத்தின் குறிகளாகும். இத் தர்மத்தை நான்கு ஆஸ்ரமவாசிகளும் செய்யவேண்டும். இத் தர்மங்களைத் தாங்கள் கைக்கொண்டு பிறரையும் கைக்கொள்ளும்படிச் செய்தல் துறவிகளின் முக்யக் கடமையாகும் (15). இவ்வாறு மெது மெதுவாக சகல சந்தோஷங்களையும் நீக்கி, விசனம் துக்கமாதி சகல சோகங்களிலிருந்தும் நீங்கிய துறவியானவன் கடவுள் ஒன்றிலேயே லயமடைகின்றான். இல்லற வாசிகளின் தர்ம பரிபாலனத்தைச் சரியாகக் கவனித்து, தப்பிதங்க ளேற்பட்ட காலங்களில் அவைகளைச் சீர்திருத்திக் கொண்டு, அவர்களுக்கு வரும் சந்தேகங்களையும் விலக்கிக் கொண்டிருக்க வேண்டியது துறவிகளின் கடமையாகும் (16).

கேள்வி—: துறவு பூணல் ப்ராம்மணர்களுக்கு மாத்திரமா மற்றவர்களுக்குங் கூடவா?

விடை—: ப்ராமணர்களுக்கு மாத்திரம் தான். ஏனென்றால் எந்த வர்ணத்தவர்களிலும் பூர்ண வித்வத் தன்மையை யடைந்து பரோபகாரஞ யிருப்பவன் ப்ராம்மணனே யாகும். அவ்வாறு பூர்ண வித்தை கற்ற துறவிகளாலேயே துறவின் விதிகள் நன்கு பாதுகாக்கப்பட்டு அனுசரிக்கப்படும். ஆதலால் துறவு பூணல் ப்ராமணர்களுக்கு (வித்வான்களுக்கு) மாத்திரமேயாகும். இதற்கு மனுவின் ப்ராமாணமுண்டு—:

एष वोऽभिहितो धर्मो ब्राह्मणस्य चतुर्विधः ।
पुण्योऽक्षयफलः प्रेत्य राजधर्मान् निबोधत ॥

(மனு—6—97).

ஏ ரிஷிகளே! மறைமாணவம், இல்லறம், வனவாசம், துறவு ஆகிய நான்கையும் அனுசரித்தல் ப்ராம்மணர்களின் தர்மமாகும். இவைகளால் சரீரத்தைத் துறந்த ஆத்மாவுக்கு முக்தியாம் ஆனந்தத்தை யளிக்கவல்லது துறவறமாகும். இதற்குமேல் அரச தர்மங்களைச் சொல்லக்கேள்.

இதிலிருந்தும் துறவறம் ப்ராம்மணர்களுக்கேயாகும். மற்றவர்களுக்கு மறைமாணவ தர்மமேயாகும்.

கேள்வி—: துறவறம் பூணவேண்டிய அவசியமென்ன?

விடை—: உடலுக்கு சிரம் எப்படி அவசியமோ அப்படியே அறங்களில் துறவறம் அவசியமாகும். ஏனென்

ருல் இதுவல்லாமல் வித்யா தர்மம் வளர்ச்சியடையாது. மற்ற தர்மங்களில் வித்யாபி விருத்திக்குக் கொஞ்சம் நேரமே கிடைக்கின்றது. வஞ்சனைகளை முழுதும் நீக்கி விடல் மற்ற அறங்களில் கஷ்டமானதாகும். துறவிகள் சகலத்தையும் துறந்து லோகோபகாரம் செய்வதைப்போல் மற்ற அறத்தவர்கள் செய்ய முடியாது. ஏனென்றால் சத்ய வித்யா ப்ரசாரத்திற்கு துறவிகளுக்குக் கிடைக்கும் அவகாசத்தைப்போல மற்றவர்களுக்குக் கிடைப்பதில்லை. அதிலும் மறைமாணவத்திலிருந்து துறவறம் பூண்டவர்கள் செய்யும் உபகாரத்தைப் போல மற்ற அறங்களிலிருந்து துறவியானவர்கள் செய்யமுடியாது.

கேள்வி—: துறவறம் பூணல் கடவுளின் அபிப்பிராயத்திற்கு விரோதமானதாகும். ஏனென்றால் கடவுளின் விருப்பம் மனிதர்கள் விருத்தியடைவதேயாகும். இதனால் இல்லறத்தை அனுசரிக்காதவரையில் இது முடியாது. துறவறமே முக்யமாய் விட்டால் மனிதசமூக அபிவிருத்தி குறைந்துவிடுமல்லவா?

விடை—: நல்லது. மணம் செய்து கொண்டவர்களிலும் கூட அனேகருக்குக் குழந்தைகள் பிறப்பதில்லை. பிறந்தாலும் சீக்கிரத்தில் இறந்துவிடுகின்றன. இப்போது நீ சொல் இதற்கென்ன செய்வது? இதுவும் கடவுளின் விருப்பத்திற்கு விரோதமானதல்லவா?

यत्ने कृते यदि न सिध्यति कोऽत्र दोषः ॥

(ஓர் கவியின் வசனம்).

முயற்சி செய்தும் காரியங் கைகூடாவிட்டால் அதில் தோஷ மொன்றுமில்லை. அதுமட்டுமல்ல. இல்லறம் அதிகரித்து அநேக குழந்தைகள் பிறந்து பிறந்து இறந்து விடுவதால் எவ்வளவு கெடுதல்கள் உண்டாகின்றன? அன்றி விரோதங்களால் சண்டையு மேற்படுகிறது. ஆனால் ஒரு துறவியின் உபதேசத்தால் மக்களுக்குள் ப்ரீதி உண்டாவதால் ஒரு லக்ஷம் மனிதர்களுக்கு நன்மையாகின்றது. ஆயிரக்கணக்கான இல்லற தர்மிகள் விருத்தி யடைகிறார்கள். அன்றி சகல மனிதர்களும் துறவறம் பூண முடியாது. ஏனென்றால் சகலருக்கும் உலக விருப்பம் நீங்கி விடாது. எங்கெந்த இல்லறவாசிகளுக்கு துறவிகள் உபதேச முண்டாகின்றதோ அவர்களின் மக்களே துறவிகளாக முடியும்.

கேள்வி—: துறவிகள் "எங்களுக்குச் செய்யவேண்டிய காரியங்கள் ஒன்றுமில்லை. நன்கு சாப்பிட்டு ஆடைகளணிந்து சுகத்துட னிருக்கவேண்டும். பொய் உலகத்திற்கு மெங்களுக்கும் சம்பந்தமில்லை. நாங்களே கடவுளென மதித்து களித்திருத்தல், யாரிடமாவது ஆகாரம் கேட்கும் போது "நீயும் ப்ரம்மம்தான். உனக்கு பாப புண்ணியங்கள் கிடையாது. ஏனென்றால் சீதோஷ்ண சரீரம், பசிதாகப்ராணன், சுக துக்கங்கள் மனதின் தர்மமாகும். உலகம் பொய். உலக காரியங்களெல்லாம் கற்பனை யாகும். ஆகையால் இதை மதிப்பது அறிவாளிகளுக்குக் கடமையல்ல. பாப புண்ணியங்கள் இந்திரியங்களின் தர்மமே யன்றி ஆத்மாவுக்கல்ல என்று அவர்களுக்கு முபதேசம் செய்வோம்" என்றெல்லாம் சொல்லு

கிருர்கள். இப்போது நாங்கள் யாருடைய வார்த்தைகளை நம்புவது ?

விடை—: என்ன ? அவர்களுக்கு நல்ல காரியங்களும் கடமையில்லையா ? பார்— :

वैदिकैश्चैव कर्मभिः ॥

வைதிக கர்மம், தர்மயுக்த சத்திய காரியங்களைத் துறவிகளும் அவசியம் புரியவேண்டும். போஜனுதி காரியங்களை அவர்கள் விடமுடியாதா ? இக்காரியங்களை அவர்கள் விடமுடியாமல் நல்ல காரியங்களை விட்டுவிடுதலால் அவர்கள் பாப பாகிகளாக மாட்டார்களா ? இல்லற தர்மிகளிடமிருந்து அன்னபானுதிகளை வாங்கிக் கொள்ளும்போது அவர்களுக்குப் பதிலுபகாரம் செய்யாமலிருப்பது மகா பாதக மல்லவா? கண், காதுகளிருந்தும் பார்க்காதும் கேட்காது மிருப்பதாயிருந்தால் அவைகள் இருப்பது வீணல்லவா ? அவ்வாறே வேதாதி சாஸ்த்ர விசாரணை, ப்ரசாரம் செய்யாத துறவிகள் உலகத்திற்கு வீண் பாரமேயாகும். அவித்யாரூப சம்சாரத்திலே கஷ்டமேன் படவேண்டுமென்று சொல்பவர்கள் பாபிகளேயாகும். சரீரத்திற்குச் செய்யப்படும் காரியங்களின் பலனையும், சரீரத்தால் செய்யப்படும் காரியங்களின் பலனையும் அனுபவிப்பது ஆத்மாவே யாகும். ஜீவனை ப்ரம்மமென்று நினைப்பவர்கள் அவித்தையில் தூங்கிக் கொண்டிருப்பவர்களாகும். ஏனென்ருல் ஜீவன் சிற்றறிவு பொருந்தியது. கடவுள் பேரறிவுடையது. கடவுள் எப்போதும் பந்திக்கப் படாதவன். பிறப்பிறப்பில்லாதவன். ஆனல் ஜீவன் எப்போதும்

பிறப்பிறப்புடையதே யாகும். கடவுள் சர்வ வியாபக ஞதலால் சிலவேளை வித்தையும், சிலவேளை அவித்தையு மதற் குண்டாவதில்லை. ஆனுல் ஜீவனுக்கு அவ்வப்போது வித்தையு மவித்தையும் மாறிமாறி வருகின்றன. ஆகை யால் அவர்களின் உபதேசம் பொய்யாகும்.

கேள்வி—: துறவிகள் சர்வகர்ம விநாசிகள், அக்னியை யும், தாதுவையும் எப்போதுமவர்கள் தொடுவதில்லை யென்பது உண்மையா பொய்யா?

விடை—: இல்லை—:

सम्यङ् नित्यमास्ते यस्मिन् यद्वा सम्यङ् न्यस्यन्ति दुःखानि कर्माणि येन स संन्यासः स प्रशस्तो विद्यते यस्य स संन्यासी ॥

கெட்ட காரியங்களை அறவே நீக்கி ப்ரம்மஸ்வபா வத்தைப் பெற்றவனே சன்னியாசியாகும். நற்காரியங்களைப் புரிந்து கெட்ட காரியங்களை விலக்குபவனே சன்னியாசி யாகும்.

கேள்வி—: வேதம் படித்தல், உபதேசித்தல், இவை களை இல்லறத்தனே செய்கிருன். இப்போது சன்னியாசி களுக்கு என்ன பிரயோஜனம்?

விடை—: சத்யோபதேசத்தை எல்லோரும் செய்தபோ திலும் சன்னியாசிகளுக்குக் கிடைக்கும் நேரத்தைப்போல மற்றவர்களுக்குக் கிடைக்காது. அவர்களுக்குச் சுற்று வதற்கு நேரங்கிடைப்பதைப்போல இவர்களுக்குக் கிடைக் காது. இதனுல் துறவிகள் இருக்கவேண்டியது அவசிய மாகும்.

கேள்வி—:"**एकरात्रि वसेद् ग्रामे**" இதைக்கொண்டு ஒரு இடத்தில் ஒரே இரவுதான் துறவிகள் தங்கவேண்டுமென்று தெரிகிறது. அதிக நாள் தங்கக்கூடாதல்லவா ?

விடை—: இவ்வார்த்தை சிறிய பாகம்வரை நல்லதுதான். ஏனென்றால் ஒரேயிடத்தில் எப்போதும் வசிப்பதால் பல இடங்களுக்கும் உபகாரம் செய்யமுடியாது. அன்றி அவ்விடத்தினபிமானமும் யேற்படுமாதலால் அதன் மூலமாய் ராகத்துவேஷாதிகளு முண்டாகக்கூடும். ஆனால் ஒரேயிடத்தில் அதிக உபகாரம் செய்யக்கூடுமானால் அங்கேயே வேண்டிய காலம் வரை வசித்திருக்கலாம். ஜனகர் 4ன்கு 4ன்கு மாதங்கள் வரையும், மற்றும் சில துறவிகள் சிலவருடகாலங்கள் வரையிலும் ஒரேயிடத்தில் வசித்திருந்தார்கள். ஆகையால் முன்சொன்னவாக்கியம் சில சமயத்திலேயே பொருத்தமுடையதாகும்.

கேள்வி :—

यतीनां काञ्चनं दद्यात्ताम्बूलं ब्रह्मचारिणाम् ।
चौराणामभयं दद्यात्स नरो नरकं व्रजेत् ॥

இவ்வாக்கியத்திலிருந்து துறவிகளுக்கு பொன்தானமீபவர்கள் நரகத்தையடைகிறார்களென்பது உண்மைதானா ?

விடை—: இவ்வார்த்தை வர்ணாஸ்ரமவிரோத சம்ப்ரதாயிகளான தன்னலப்பிரிய பௌராணிகர்களால் உண்டாக்கப்பட்டதாகும். ஏனென்றால் துறவிகளுக்கு தானமீதலை மக்கள் கைக்கொண்டு விட்டால் இப்பௌராணிகர்களுக்கு யாரும் பயப்படவும் மாட்டார்கள். இப்பயத்தாலேயே இவர்கள் இம்மாதிரியான வாக்கியங்களை யெழுதிவைத்திருக்

கிருர்கள். உண்மையில் தானங்களை துறவிகளுக்கே கொடுக்கவேண்டும். பார்—:

विविधानि च रत्नानि विविक्तेषूपपादयेत् ॥ மனு.

விவிதமான ரத்னதானங்களை (விவிக்த) சன்னியாசிகளுக்கே கொடுக்கவேண்டும்.

கேள்வி—: இல்லை இல்லை. அம்மந்திரத்தை நன்கு கவனிக்கவேண்டும்.

“**यतिहस्ते धनं दद्यात्**”

என்ருல் சன்னியாசிகளின் கையிலே பணத்தையளிப்பவனே நரகத்திற்குச்செல்கின்ருன்.

விடை :— இதுவும் அவித்வான்களின் கற்பனையே யாகும். ஏனென்ருல் கையில் தானமீபவன் நரகத்திற்குப் போவதாயிருந்தால் காலிலே வைத்துவிடுவதால் அல்லது முடிச்சாகக் கட்டிக் கொடுத்து விடுவதால் மோக்ஷத்திற்குப் போய்விடுகிருர்களா? இல்லை. ஆதலால் இதுவும் பொய்யாகும். ஆனுல் சன்யாசிகள் தங்களுக்கு வேண்டியதற்கு மேல் பணம் வைத்திருந்தால் திருடர்களின் துன்பம் ஏற்பட ஹேதுவாகும். அன்றி மரணமும்கூட ஏற்படக்கூடும். ஆகையால் உண்மைத்துறவிகள் தகுதியில்லாத காரியங்களை ஒருபோதும் செய்யலாகாது. ஏனென்ருல் அவர்கள் இல்லறத்திலிருக்கும்போதே இவ்வெல்லாச் சுகங்களையும் அனுபவித்துத் தீர்த்துவிடவேண்டும். அல்லது மறை மாணவத்திலிருந்து நேரே துறவியாகச் சென்றிருந்தால் பூர்ண வைராக்யவானுக இருக்கவேண்டும். இவ்வாருகத்

தானிருக்கவேண்டுமாதலால் அவர்கள் ஒருபோதும் மயங்கிவிடமாட்டார்கள்.

கேள்வி—: சிராத்தத்தில் துறவி வருவரானல் பித்ருக் களுடைய பாகம் அவர்களுக்குச் சென்றுவிட சிராத்தாதி காரிகள் நரகத்தையடைகிருர்கள்.

விடை—: முதலில் இறந்துவிட்டவர்களுக்கு சிராத் தம் புரிவதும், அவர்கள் வருவதுமே தப்பிதமான எண்ண மாகும். வேதத்திற்கும் யுக்திக்கும் விரோதமானதால் அது பொய்யாகும். வருவதேயில்லையென்ருல் பாகம் யாருக்குச் சேரும்? ஜீவன் மரணத்திற்குப் பிறகு தன் பாப புண்ணியங்களுக்குத் தகுந்தவாறு ஈஸ்வரனின் கட் டளைப்படி மற்ருேர் ஜன்மத்தையடைகிறது. என்ருல் அவ்வாத்மா வருவது எங்கே? ஆகையால் இதுவும் தன் னலப் பௌராணிகர்களின் கற்பனேயேயாகும். ஆனல் தெரி யாதபடி சிராத்தத்தைப் புரியுமிடத்தில் சன்னியாசிகள் வருவார்களானல் அங்கு நடைபெறும் அசத்தியகாரியம் விலகப்பெற்று உண்மையை அங்குள்ளவர்கள் அறிய சாதன மேற்படும். மூடத்தனம் தூரமாகும்.

கேள்வி—: மறைமாணவத்திலிருந்து சன்னியாசம் பூண்டுவிட்டால் அதைப் பரிபாலிப்பது மிகக்கடினமாகும். விஷயசக்தியைத் தடுப்பதும் கஷ்டமாகும். ஆகையால் இல்லறத்தையும், வானப்ரஸ்தத்தையும் சரிவர முடித்த பின்பே கிழமானபோது துறவு பூணல் நல்லதல்லவா?

விடை:—அப்படி நிர்வாகிக்க முடியாதவர்களும், இந் திரியங்களை அடக்க முடியாதவர்களும், மறைமாணவத்தி லிருந்தே துறவுகொள்ள வேண்டியதில்லை. ஆனல் முடியு

மானவர்கள் ஏன் கொள்ளலாகாது? விஷயசக்தியின் தோஷங்களையும், வீர்ய ரக்ஷணையின் நன்மையையும் நன்கு அறிந்தவர்கள் ஒருபோதும் அதிலிருந்து தவரமாட்டார்கள். வீர்யத்தை விட்டுவிடுதல் நெருப்பில் கட்டையை இடுவது போலாகும். வைத்தியரும், மருந்துகளும் வியாதியாளர்களுக்கே யன்றி சுகதேகிகளுக்கல்ல. ஆகையால் சதா உலகோபகாரமே செய்துகொண்டிருக்க விரும்பும் பெண் புருடர்கள் மணம் செய்துகொள்ளாமலிருப்பார்களாக. இவ்வாறேதான் கார்க்கி, பஞ்சசிக முனிவர்கள் முதலியவர்களுமிருந்தனர். துறவறம் பூணல், தகுதியானவர்களுக்கே தகுமன்றி தகுதியில்லாதவர்களுக்குத் தகாது. "ஸம்ராட்" சக்ரவர்த்தியைப் போலவே "பரிவ்ராட்" சன்னியாசியுமாகும். ஒரு அரசன் தன் தேசத்தில், தன் பந்துக்களிடைமாத்திரம் பூஜிக்கப் படுகின்றான். ஆனால் துறவி சகலத்திலும், சகலராலும் பூஜிக்கப்படுகிறான்.

विद्वत्त्वं च नृपत्वं च नैव तुल्यं कदाचन ।
स्वदेशे पूज्यते राजा विद्वान् सर्वत्र पूज्यते ॥

(சாணக்ய நீதி).

அரசனும் துறவியும் ஒருபோதும் சமமாக மாட்டார்கள். ஏனெனில் அரசன் தன் தேசத்தில் மாத்திரம் பூஜிக்கப்படுகின்றான். ஆனால் துறவி சகல தேசங்களிலும் பூஜிக்கப்படுகின்றான். ஆகையால் கல்விகற்க, நன்னடத்தைகொள்ள, பலவானாக, மறைமாணவத்தையும்; சகல விதங்களிலும் உத்தம காரியங்களைச் செய்ய இல்லறத்தையும்; விசார, த்யான, விக்ஞானம் கற்க, தவம்புரிய, வானப்ரஸ்தத்தையும்; வேதாதி சத்யத்தைப்ரசாரம் செய்ய, தர்

மத்தைக்கைக்கொண்டு அதர்மத்தை முற்றிலும் நீக்க, சகலரினதும் சந்தேகங்களையும் சத்தியோபதேசத்தால் நீக்க, துறவறத்தையும் பூணவேண்டும். எவன் துறவு பூண்டும் சத்யோபதேசம் செய்யவில்லையோ அவன் நரகத்தையடைபவனுகின்ருன். ஆகையால் சத்தியோபதேசம் புரிந்து, பிறரின் சந்தேகங்களை நீக்கி, வேதாதி சாஸ்திரங்களை எல்லோருக்குங் கற்பித்து, வேததர்மத்தைப் பரப்ப முயற்சிசெய்து வரவேண்டியது துறவிகளின் கடமையாகும்.

கேள்வி—:சாது, வைராகி, பண்டாரம், காகன் முதலியவர்களை துறவிகளாக மதிக்கலாமா கூடாதா?

விடை—:கூடாது. ஏனென்ருல் அவர்களிடம் துறவின் குறிகளுள் ஒன்றுகூட கிடையாது. அவர்கள் வேதவிதிவழியை விட்டு, நேர்விரோதமான மற்ருேர் வழியிலே சென்று, தங்கள் வார்த்தைகளையே மக்கள் ப்ரமாணமாக மதிக்கவேண்டுமென்ற எண்ணத்தைக்கொண்டு அம்மாதிரியே ப்ரசாரமும் செய்து வருகிருர்கள். இவ்வாருன இவர்களின் செய்கைகளால் மக்களை அதோகதியில் செலுத்துகின்ருர்கள். ஆகையால் இவர்கள் துறவிகளல்ல. பக்கா தன்னலப் பிரியர்கள். இதில் சிறிதும் சந்தேகம் வேண்டாம். சகலருடனேயே தன்னலத்தைக் கோரி தன்னைச் சேர்ந்தவர்களை உடன்கொண்டே இகபர சுகங்களையடைய விரும்புபவனே உண்மைத் துறவியாவான். இதுவரை துறவறத்தைச் சொன்னேம். இனி அரசனின் கடமைகளை யாராய்வோம்.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆறுவது அத்தியாயம்

अथ राजधर्मान् व्याख्यास्यामः ।

राजधर्मान् प्रवक्ष्यामि यथावृत्तो भवेन्नृपः ।
संभवश्च यथा तस्य सिद्धिश्च परमा यथा ॥ १ ॥
ब्राह्मं प्राप्तेन संस्कारं क्षत्रियेण यथाविधि ।
सर्वस्यास्य यथान्यायं कर्त्तव्यं परिरक्षणम् ॥ २ ॥

(மனு—7-1-2).

மனு சொல்லுகிறார்—: "நான்கு வருண, நான்கு ஆஸ்ரமங்களின் வியவகாரங்களைச் சொன்ன பிறகு இப்போது அரச தர்மத்தைச் சொல்வோமாக. அரசன் எவ்வாறிருக்க வேண்டும், எவ்வாறு பரிபாலனம் செய்ய வேண்டும், எவ்வாறு ப்ரம்மசித்திகளை அடைய வேண்டும் என்றவைகளைச் சொல்வோமாக" (1) நல்ல படிப்புள்ளவன் பிராமணனுவதைப்போல, நல்ல பலமுள்ளவன் க்ஷத்திரியனுகின்றுன். அவன் இவ்வரசை நியாயமாக காப்பாற்றட்டும் (2) இதன் முறைகளாவது—;

त्रीणि राजाना विदथे पुरूणि परिविश्वानि भूषथः सदांसि ॥

(ரிக்—3-38-6).

(ராஜானு) அரசனும் குடிகளும் கலந்து (விததே) சுகத்தை யளிக்கவல்ல இருவரின் காரியங்களிலும் (த்ரீணி

ஸதாம்ஸி) வித்யார்ய சபா; தர்மார்ய சபா; ராஜார்ய சபா; யெனும் மூன்று சபைகளையும் நியமித்து (புரூணி) பல விதங்களாக (விஸ்வானி) சகல மனிதர்களையும், ப்ராணிகளை யும் (பரிபூஷத:) வித்யா ஸ்வதந்த்ர தர்ம சிக்ஷா தனுதி களால் அலங்கரிக்க வேண்டும்.

तं सभा च समितिश्च सेना च ॥ १ ॥
(அதர்—15-2-9-2).

सभ्य सभां मे पाहि ये च सभ्याः सभासदः ॥ २ ॥
(அதர்—19-7-55-6).

(தம்) அவ்வரச தர்மத்தை (ஸபாச) மூன்று சபை (ஸமிதிச்ச) களின் கார்யாலோசனைகளுடன் (ஸேனுச) சேனைகளுடனும் காப்பாற்ற வேண்டும் (1). அரசன் சகல ஸபைத்தலைவர்களைப் பார்த்து "ஏ (ஸப்ய) சபைத் தலைவர் களே! நீங்கள் (மே) என்னுடைய (ஸபாம்) சபைகளின் தர் மகாரியங்களைப் (பாஹி) பாலிப்பீர்களாக (யேச) எவர்கள் (ஸப்யா:) சபைக்குத் தகுந்த (ஸபாஸத:) சபைத் தலைவர் களோ அவர்களும் சபையின் தர்ம கார்யங்களைக் காப்பாற் றட்டும்" என்று சொல்ல வேண்டும் (2). என்றால் அரசாங் கத்தின் பூர்ண அதிகாரத்தை ஒருவரிடமே அளித்துவிடக் கூடாது. அரசன் மூன்று சபைகளின் ஆதீனத்திலும், சபைகள் அரசனின் ஆதீனத்திலும், குடிகள் அரச சபைக ளின் ஆதீனத்திலும் இருந்துவர வேண்டும். அவ்வாறு ஒழுகி வராவிட்டால்—:

राष्ट्रमेव विश्या हन्ति तस्माद्राष्ट्री विशं घातुकः ।
विशमेव राष्ट्रायाद्यां करोति तस्माद्राष्ट्री विशमत्ति न पुष्टं पशुं मन्यत इति ॥
(சதபதம்—13-2-3-7-8).

குடிகளின் சுதந்தர ஆதீனத்தில் அரசர்கள் செல்வார்களானல் குடிகள் நாசத்தை அடைவார்கள். ஏனென்ருல் தனிப்பட்ட அரசன் உன்மத்த ஞகிவிடுவதால் அவனின் பாலனமில்லாத குடிகள் நாச மடைகிருர்கள். என்ருல் அவ்வரசன் குடிகளை அருந்துபவ ஞகின்ருன். ஆகையால் அரசாங்கத்தை ஒருவருடைய ஆதீனத்தில் விட்டுவிடக் கூடாது. சிங்கமானது தன் ஆதீனத்தால் மற்ற பசுக்களையெல்லாம் கொல்வதைப் போல பூர்ண சுதந்திரம் பெற்ற அரசன் குடிகளை நாசம் செய்கின்ருன். ஒருவரும் தனக்கு வேண்டிய அளவுக்குமேல் பணம் வைத்திருக்கலாகாது. ஏனென்ருல், ஒருவன் பணக்காரனுக மற்ருெருவன் ஏழையாகவேண்டும். சிலகாலத்தில் அவ்வேழை தன் கொடுமையைச் சகியாது பணக்காரனைக் கொள்ளையடித்து வீணுக தண்டனையையும் அடைகின்ருன். ஆகையால்—:

इन्द्रो जयाति न परा जयाता अधिराजो राजसु राजयातै।
चर्कृत्य ईड्यो वन्द्यश्चोपसद्यो नमस्यो भवेह ॥

(அதர்—6—10—98—1.)

ஏ மனிதர்களே! இவ்வுலகிலே அதிக பணக்காரன் சத்ருக்களால் ஜெயிக்கப்படுவான். அவன் தன் சத்ருக்களை வெல்ல முடியாது. ஆகையால் ப்ரகாசமுள்ள, கீர்த்தியுள்ள, சபைகளுக்குத் தலைவர்களாகத்தகுந்த, புகழத்தக்க குணகர்மஸ்வபாவங்களை யுடையவரையே அரசனுக நியமிக்க வேண்டும்.

इमन्देवा असपत्न ँसुवध्वं महते क्षत्राय महते ज्यैष्ठ्याय
महते जानराज्यायेन्द्रस्येन्द्रियाय ॥

(யஜுர்—9—40).

ஏ வித்வான்களே! அரச குடிமக்களே! நீங்கள் எல்லோரிலும் பலத்தில் பெரியவனும், அறிவாளிகளின் துணையுடனே பரிபாலனம் செய்வதாக வாக்களிப்பவனும், ஐஸ்வர்யத்துடன் கூடின அரசாங்கத்தைச் சரிவர பாலிப்பதாக வாக்களிப்பவனும், எப்போதும் யாரிடமும் வஞ்சனை யில்லாதவனும், பூர்ண வித்யாயுக்தனும், சகலருக்கும் நேசனுமாகிய சபைத்தலைவனையே அரசனுகச்செய்து சகல உலக பாகங்களிலும் சத்துருக்களேற்படாவண்ணம் பரிபாலித்து வருவீர்களாக.

स्थिरा वः सन्त्वायुधा पराणुदे वीळू उत प्रतिष्कभे ।
युष्माकमस्तु तविषी पनीयसी मा मर्त्यस्य मायिनः ॥
(ருக்—1—39—2).

ஏ அரசபுருடர்களே! உங்களுடைய ஆக்னேயாதி அஸ்திரங்களும், (சதக்னீ) பெரும் துப்பாக்கி, (தோப்) கைத்துப்பாக்கி, பாணங்கள், வாள்கள் முதலிய ஆயுதங்கள் விரோதிகளைத் தோற்கடிக்கத் திடம் பெற்றதாக எப்போதும் வைத்துக் கொள்ளுங்கள். அன்றி அநியாயமில்லாமல் சதா யுத்தவெற்றியை நாடிக்கொண்டிருக்கும் சேனைகளையும் தயாராக வைத்திருங்கள். என்றால் மனிதர்கள் தர்மத்தை யனுசரித்திருக்கும் வரை அரசாங்கம் விருத்தியாகிக்கொண்டு வரும். அதர்மத்தை யனுசரிக்கத்துடங்கும்போது சின்னபின்னமாகி விடுகின்றது. பெரும் வித்வான்கள் வித்யாசபை யதிகாரிகளாகவும், தர்மத்தின் வித்தையைக் கற்றவர்கள் தர்மசபையினதிகாரிகளாகவும், கார்யவியவகார சீலர்கள் அரசசபைத்தலைவர்களாகவும் இம் மூன்றிலும் தேர்ந்த பூர்ணவித்வான் அரச

ளுகவு மிருந்து சகல விதத்திலும் தன்னரசை மேல் நிலேக்குக் கொண்டுவரவேண்டும். மூன்று சபைகளின் சம்மதியின் பேரிலேயே சட்டங்களிருக்கவேண்டும். சட்டங்களின் சம் மதியின்படியே சகலரும் காரியங்களேப் புரிந்துவரவேண்டும். சகலருக்கும் இன்பதுன்பமளிக்கும் காரியங்களில் சகலரும் பாதந்திரர்களாகவும், தன் வரையில் இன்பதுன்பமளிக்கும் காரியங்களில் சுதந்திரர்களாகவும் ஒழுகிவரவேண்டும். இச் சபாபதியின் குணங்கள் எவ்வாறிருக்கவேண்டுமெனின்—

इन्द्राऽनिलयमार्काणामग्नेश्च वरुणस्य च ।
चन्द्रवित्तेशयोश्चैव मात्रा निर्हृत्य शाश्वतीः ॥

तपत्यादित्यवच्चैष चक्षूंषि च मनांसि च ।
नचैनं भुवि शक्नोति कश्चिदप्यभिवीक्षितुम् ॥ २ ॥

सोऽग्निर्भवति वायुश्च सोऽर्कः सोमः स धर्मराट् ।
स कुबेरः स वरुणः स महेन्द्रः प्रभावतः ॥ ३ ॥

(மனு—7—4—6—7.)

அச்சபைத்தலைவனுன அரசன் மின்னலுக்குச் சமமாக செல்வம் சேர்ப்பதில் வேகமுள்ளவனுகவும்; வாயுவிற்குச் சமமாக சகலருக்கும் ப்ரியமானவனுகவும், யமனுக்குச் சம மாக நியாயசீலனுகவும்; சூர்யனுக்குச்சமமாக மூடத்தன மாகிய இருளே விலக்குபவனுகவும்; துஷ்டர்களேத் தண்டிப்பவ னுகவும்; வருணனுக்குச் சமமாக துஷ்டர்களே பாதிப்பவனுக வும்; சந்திரனுக்குச் சமமாக மக்களுக்கு ஆனந்த மீபவ னுகவும்; தனுத்யக்ஷனுக்குச் சமமாக பொக்கிஷங்களே நிறப் புவனுகவும் இருக்கவேண்டும் (1). சூர்யனேப்போன்ற ப்ர

தாபமடைந்து; சகலரின் மனங்களினுள்ளும் புறம்பும் தன் தேஜஸ்ஸாய் தபிக்கச்செய்பவன் உலகில் எந்தப்பொருளையும் வெறுப்புடன் பார்க்கவேண்டிய அவசியமே கிடையாது (2). யார் தன் ப்ரபாவத்தால் அக்னி, வாயு, ஸூர்ய, ஸோம, தர்ம, ப்ரகாசக, தனவித்தகராயிருந்து, துஷ்டர்களைத் தண்டிப்பவராய், பெரும் ஐஸ்வர்ய சீலராயிருக்கின்றாரோ அவரே சபைத் தலைவராக அமரத் தகுதியானவராகும் (3). உண்மை அரசன் யார்—:

स राजा पुरुषो दण्डः स नेता शासिता च सः ।
चतुर्णामाश्रमाणां च धर्मस्य प्रतिभूः स्मृतः ॥ १ ॥
दण्डः शास्ति प्रजाः सर्वा दण्ड एवाभिरक्षति ।
दण्डः सुप्तेषु जागर्त्ति दण्डं धर्मं विदुर्बुधाः ॥ २ ॥
समीक्ष्य स धृतः सम्यक् सर्वा रञ्जयति प्रजाः ।
असमीक्ष्य प्रणीतस्तु विनाशयति सर्वतः ॥ ३ ॥
दुष्येयुः सर्ववर्णाश्च भिद्येरन्सर्वसेतवः ।
सर्वलोकप्रकोपश्च भवेद्दण्डस्य विभ्रमात् ॥ ४ ॥
यत्र श्यामो लोहिताक्षो दण्डश्चरति पापहा ।
प्रजास्तत्र न मुह्यन्ति नेता चेत्साधु पश्यति ॥ ५ ॥
तस्याहुः संप्रणेतारं राजानं सत्यवादिनम् ।
समीक्ष्यकारिणं प्राज्ञं धर्मकामार्थकोविदम् ॥ ६ ॥
तं राजा प्रणयन्सम्यक् त्रिवर्गेणाभिवर्धते ।
कामात्मा विषयः क्षुद्रो दण्डेनैव निहन्यते ॥ ७ ॥
दण्डो हि सुमहत्तेजो दुर्धरश्चाकृतात्मभिः ।
धर्माद्विचलितं हन्ति नृपमेव सबान्धवम् ॥ ८ ॥

सोऽसहायेन मूढेन लुब्धेनाकृतबुद्धिना ।
न शक्यो न्यायतो नेतुं सक्तेन विषयेषु च ॥ ९ ॥

शुचिना सत्यसन्धेन यथाशास्त्रानुसारिणा ।
प्रणेतुं शक्यते दण्डः सुसहायेन धीमता ॥ १० ॥

(மனு—7 ; 17—19 ; 24—28 ; 30 ; 31).

தண்டனையே புருடன், அரசன், நியாயப்ரசாரகன், சகலரின் சாசனகர்த்தா. அதுவே நான்குவர்ண, நான்கு ஆஸ்ரமங்களின் தர்மத்திற்கு உத்திரவாதியாகும் (1). அதுவே குடிகளுக்கு சாசனகர்த்தா, சகல குடிகளின் ரக்ஷிப்பு, தூங்கும் மக்களைத் தட்டியெழுப்புவது. ஆகையால் அறிவாளிகள் தண்டத்தையே தருமமாகக் கொண்டாடுகிறார்கள் (2). தண்டனை நல்லவழியிலே விசாரிக்கப் பட்டு அளித்துவரப் பட்டதேயானால் சகலகுடிகளும் சந்தோஷத்தையடைகிறார்கள். விசாரணையில்லாமல் அளிக்கப்பட்டு வருமாயின் சீக்கிரத்தில் அவ்வரசன் நாசமடைகிறான் (3). தண்டனையில்லாவிட்டால் சகலவர்ணங்களும் தூஷணைக்கிடமுள்ளதாகும். சகல மரியாதைகளும் சின்ன பின்னப்பட்டுப் போய்விடும். தண்டனை சரிவர இல்லாவிட்டால் குடிகளிடை கோட்குணங்களு மதிகரிக்கும் (4). கருத்த உடல், சிவந்த நேத்திரங்களைக் கொண்ட பயங்கர புருடனுக்குச் சமமாகிய பாபநாச சாதகமாகிய தண்டனை சரிவர வசித்து வருமிடங்களில் வதியும் குடிகள் ஆனந்தத்தை யடைகிறார்கள். ஆனால் அத்தண்டத்தி னதிகாரியானவன் வஞ்சனையில்லாதவனாயிருக்கவேண்டும் (5). இத்தண்டனையைச் செலுத்தும் சத்யவாதிகளை நோக்கி அத்தண்டங்களின் பாகு பாடுகளை

நன்கறிந்த அறிவாளர்கள் சொல்கின்றார்கள் (6). அரசன் தண்டனையைச் சரிவர புரிந்து வருவானானால் சகல சுகத்தையும் பெறுவான். ஆனால் வஞ்சனைகொண்டு, மோசம், பொறாமை முதலியவைகளைக் கொண்டு நியாயமில்லாமல் அதை உபயோகிப்பவன் அதே தண்டனையால் தண்டிக்கப் படுகின்றான் (7). தண்டனையென்பது பெரும் கூர்மையுடையதாகையால் அதை அதர்மிகள் எப்போதும் கைக்கொண்டு ஆண்டுவரக்கூடாது. தண்டனை எப்போது தர்மத்தினின்றும் மாறுபடுகின்றதோ அப்போது அதை அவ்வாறு அதர்மத்திற் செலுத்திய அரசனை குடும்பத்தார்களுடன் நாசம் செய்துவிடுகின்றது (8). ஏனென்றால் பெரியோர்களின் நட்பேயில்லாமல், நன்னடத்தையின் கற்பனையில்லாமல், விஷயங்களிலேயே பற்றையுடைய மூடர்கள் நியாயமார்க்கத்தில் தண்டனையை உபயோகப் படுத்திக்கொண்டுபோக சமர்த்தர்களாகமாட்டார்கள் (9). சுத்தமான ஆத்மாவைப் பெற்று, சத்யாசாரத்தைக் கொண்டு, சத்புருடர்களின் நட்பையுடையவனாய் நீதிசாஸ்த்திரங்களுக் கனுகூலமாகத் தன் வாழ்க்கையைச் செலுத்திக்கொண்டு செல்பவனாகிய உத்தம புருடனே தண்டனையை நியாய முறைப்படி செலுத்திக் கொண்டு போகும் திறமை பெற்றவனாகும் (10) இதனால்—.

सैनापत्यं च राज्यं च दण्डनेतृत्वमेव च ।
सर्वलोकाधिपत्यं च वेदशास्त्रविदर्हति ॥ १ ॥
दशावरा वा परिषद्यं धर्मं परिकल्पयेत् ।
त्र्यवरा वापि वृत्तस्था तं धर्मं न विचालयेत् ॥ २ ॥
त्रैविद्यो हैतुकस्तर्की नैरुक्तो धर्मपाठकः ।
त्रयश्चाश्रमिणः पूर्वे परिषत्स्याद्दशावरा ॥ ३ ॥

ऋग्वेदविद्यजुर्विच्च सामवेदविदेव च ।
त्र्यवरा परिषज्ज्ञेया धर्मसंशयनिर्णये ॥ ४ ॥

एकोपि वेदविद्धर्मं यं व्यवस्येद् द्विजोत्तमः ।
स विज्ञेयः परो धर्मो नाज्ञानामुदितोऽयुतैः ॥ ५ ॥

अव्रतानाममन्त्राणां जातिमात्रोपजीविनाम् ।
सहस्रशः समेतानां परिषत्त्वं न विद्यते ॥ ६ ॥

यं वदन्ति तमोभूता मूर्खा धर्ममतद्विदः ।
तत्पापं शतधा भूत्वा तद्वक्तॄननुगच्छति ॥ ७ ॥

(மனு—12 ; 100 ; 110—115).

சகல சேனைகளுக்கும், சேனதிபதிகளுக்கும் மேலதிகாரத்தையும்; தண்டனையளிக்கும் சம்பந்தமான சகலவித பொறுப்பையும்; சகலருக்கும் மேலான பெரும்பதவியையும், அரச அதிகாரத்தையும் சம்பூர்ணமாக வேத சாஸ்த்திரங்களைக் கற்ற பூர்ண வித்வான், தர்மாத்மா, ஜிதேந்திரியனுக இருப்பவர்களுக்கே கொடுக்கவேண்டும். என்றல் சேனதிபதிகளின் தலைவனும், ராஜ்யாதிகாரத்தின் முக்கியத் தலைவனும், நியாயம் விதிக்கும் அரசனும் வித்யாசம்பன்னர்களாக இருக்க வேண்டும் (1). குறைந்தது 10 அல்லது மிகக்குறைந்ததாக எட்டு வித்வான்களைக்கொண்ட சபைகளில் தீர்மானிக்கப் படுபவைகளை யாரும் மறுக்கக்கூடாது (2). இச்சபைகளில் நான்கு வேதங்களையும் கற்ற வித்வான்கள் இருக்கவேண்டும். ஆனல் அவர்கள் மறைமாணவ, இல்லற, வானப்ரஸ்தர்களாக இருப்பார்களானல் பத்துப் பேர்களுக்குக் குறைவாக ஒரு சபையில் இருக்கக்கூடாது (3). அல்லது ருக், யஜுர், சாம வேதங்களை முறையே முழுதுங்கற்றுத் தெளிந்த

பண்டிதர்கள் மூவரையுடைய சபைகளின் மூலம் தீர்மானிக்கப் படும் தர்மங்களை யாரும் மறுக்கக்கூடாது (4). ஆயினும் நான்கு வேதங்களையும் முடியக் கற்றுத் துறவியாக இருக்கும் ஒருவரால் தீர்மானிக்கப்படும் தர்மமே மிகமேலான தர்ம மாகும். ஏனென்றால் மூடர்கள் லட்சம் பேர்கள்கூடி தீர் மானிப்பினும் அத்தர்மம் சரியானதாயிருக்காதாகையால் அதை ஒருவரும் ஏற்றுக்கொள்ளலாகாது (5). சத்யவித்தை யான வேதங்கற்றலைத் துறந்து, பிறப்பிலிருந்து ஆத்திரத் தன்மையுடனேயே வளர்ந்து வருவோர்கள் ஆயிரம் பேர்கள் கூடியிருப்பினும் அதைச் சபையென்று சொல்லமுடியாது (6). அப்பேர்ப்பட்ட அவித்வான்களாகிய மூர்க்கர்களால் தீர்மா னிக்கப்படும் தர்மத்தை ஒருபோதும் மதிக்கக்கூடாது. ஏனென்றால் அவர்களின் வழியே செல்வோமானால் அநேக பாபங்களுக்கு அதிகாரிகளாவோம் (7). ஆகையால் வித்வ சபை, தர்மசபை, அரசசபை ஆகிய முச்சபைகளிலும் அவித்வான்களை ஒருபோதும் சேர்க்கக்கூடாது. சதா அவைகளில் உத்தம வித்வான்களே வசித்துவர வேண்டும்.

त्रैविद्येभ्यस्त्रयीं विद्यां दण्डनीतिं च शाश्वतीम् ।
आन्वीक्षिकीं चात्मविद्यां वार्त्तारंभांश्च लोकतः ॥ १ ॥

इन्द्रियाणां जये योगं समातिष्ठेद्दिवानिशम् ।
जितेन्द्रियो हि शक्नोति वशे स्थापयितुं प्रजाः ॥ २ ॥

दश कामसमुत्थानि तथाष्टौ क्रोधजानि च ।
व्यसनानि दुरन्तानि प्रयत्नेन विवर्जयेत् ॥ ३ ॥

कामजेषु प्रसक्तो हि व्यसनेषु महीपतिः ।
वियुज्यतेऽर्थधर्माभ्यां क्रोधजेष्वात्मनैव तु ॥ ४ ॥

मृगयाक्षो दिवास्वप्नः परीवादः स्त्रियो मदः ।
तौर्यत्रिकं वृथाट्या च कामजो दशको गणः ॥ ५ ॥

पैशुन्यं साहसं द्रोह ईर्ष्यासूयार्थदूषणम् ।
वाग्दण्डजं च पारुष्यं क्रोधजोऽपि गुणोऽष्टकः ॥ ६ ॥

द्वयोरप्येतयोर्मूलं यं सर्वे कवयो विदुः ।
तं यत्नेन जयेल्लोभं तज्जावेतावुभौ गणौ ॥ ७ ॥

पानमक्षाः स्त्रियश्चैव मृगया च यथाक्रमम् ।
एतत्कष्टतमं विद्याच्चतुष्कं कामजे गणे ॥ ८ ॥

दण्डस्य पातनं चैव वाक्पारुष्यार्थदूषणे ।
क्रोधजेऽपि गणे विद्यात्कष्टमेतत्त्रिकं सदा ॥ ९ ॥

सप्तकस्यास्य वर्गस्य सर्वत्रैवानुषङ्गिणः ।
पूर्वं पूर्वं गुरुतरं विद्याद्व्यसनमात्मवान् ॥ १० ॥

व्यसनस्य च मृत्योश्च व्यसनं कष्टमुच्यते ।
व्यसन्यधोऽधो व्रजति स्वर्यात्यव्यसनी मृतः ॥ ११ ॥

நான்கு வேதங்களின் கர்மோபாஸனே, க்ஞானம், வித்தை முதலியவைகளே யறிந்தவர்களைக்கொண்டே தண்ட நீதி, நியாய நீதி, வித்யா நீதி முதலியவைகளைத் தீர்மானிக்க வேண்டும் (1). சகல சபைத்தலைவர்களும், அங்கத்தினர் களும் எப்போதும் இந்திரியங்களைத் தன் வசமாக்கிக்கொண் டவர்களாய் தர்ம மார்க்கங்களிலேயே வசித்துக்கொண்டு வரவேண்டும். அன்றி இரவும் பகலும் யோகாப்யாசத்தைச் செய்துகொண்டுமிருக்கவேண்டும். ஏனென்றால் இந்திரியங் களைத் தன் வசமாக்காதவரையில் குடிகளையும் தன் வசத் தவர்களாகச் செய்யமுடியாது (2). மனிதர்களால் விலக்க

மிகக்கடினமானவைகளான பத்து விருப்பங்களையும், எண் வித விசனங்களையும் நீக்கவேண்டிய முயற்சிகளைச் செய்து கொண்டே யிருக்கவேண்டும் (3). ஏனென்றால் அரசன் இவ்விசனங்களில் ஆழ்ந்து வருவானானால் அரசு, செல்வம் இவைகளின் தர்மம் அவனைவிட்டு நீங்கிவிடுகின்றது. எண் வித விசனங்களில் முழுகுபவன் சரீரநாசத்தையு மடைகின்றான் (4). காமத்தாலுண்டாகும் விசனங்கள் வருமாறு—: மிருகங்களுடன் விளையாடுதல், சதுரங்கமாடல், சூதாடல், பகலில் தூங்குதல், காமகதை படித்தல் அல்லது பிறரை நிந்தித்தல், பெண்களுடன் நட்புக்கொள்ளல், மதுப்பொருள்களின் பழக்கம் கொள்ளல், பாடுதல் ஆடுகல் முதலிய சேஷ்டைகளைப் புரிதல்; அதைப் பார்த்துக் களித்தல்; வீணாக இங்குமங்கும் திரிதல், இப்பத்தும் காம உற்பவ விசனங்களாகும் (5). குரோத விசனங்கள் எண்விதங்களாவன—: பிறரை புண்படும்படி பேசுதல், பலாத்காரமாக அன்னியப் பெண்களைச் சேரல், துரோகம் செய்தல், பிறரின் உன்னத நிலையைக்கண்டு பொறாமைப்படல், நல்லவைகளில் கெட்டவைகளையும் கெட்டவைகளில் நல்லவைகளையுங்காணல், தர்ம மார்க்கமல்லாத வழிகளில் பணத்தைச் சேகரித்தல் செலவழித்தல்; கொடூர வார்த்தைகளைச் சொல்லல்; குற்றமில்லாமலே பிறரை வீணாக ஏசுதல் இவ்வெட்டுவித குணங்களும் குரோதத்தால் உண்டாகின்றன (6). இவ்வாறான காம, குரோதங்களின் மூலத்தையும், அதனால் விளையும் துன்பங்களையும் அறிந்துகொண்டவர்கள் அதை எவ்வாறாகிலும் முயற்சித்து தங்களிடமிருந்து விலக்கிவிடவேண்டும் (7). காம விசனங்களில் மிகக்கொடியவைகள் மதுப் பொருள்களையருந்தல்,

பந்தயம்வைத்து சதுரங்கமாடல், பெண்களை அதிகமாகச் சேரல், மிருகப் பந்தயங்கள் ஆடல் இந்நான்கும் மிகக் கொடியவைகளாகும் (8). குரோதங்களில் குற்றமின்றி தண்டித்தல், கொடூரவார்த்தைகளைச் சொல்லல், பணத்தை அந்நியாய வழிகளில் செலவிடுதல் ஆகிய மூன்றும் பெரும் துக்கத்தையளிப்பனவாகும் (9). காம, க்ரோதங்களில் குறித்த மிகக்கொடியகாரியங்களிலும் வீண் செலவு, கொடூர வார்த்தை, அநியாயதண்டனை, மிருகப்பந்தய மாடல், பெண்களை அதிகமாகச் சேரல், சூதாடல், மதுப்பொருள் களையருந்தல் முதலியவைகள் மிகமிகக் கொடிய காரியங்களாகும் (10). இப்பேர்ப்பட்ட மிகுந்த கொடிய துஷ்டர்களை கொலைபுரிந்து விடுதலே மேலாகும். ஏனென்றால் மிகுந்த துஷ்டர்கள் அதிக நாள் வாழ்ந்திருப்பார்களேயானால் பெரும் பெரும் பாபங்களைச் செய்து உலகிற்கே பெரிய தூக்கத்தை விளைவித்துக் கொண்டிருப்பார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் இறந்து விட்டாலே உலகிலே சுகம் வளர்ந்துவரும். ஆகையால் எந்த அரசனும் மதுப்பொருள்களையருந்தாமல், சூதாடாமல், கெட்டகாரியங்களிலிருந்தும் விலகி இருக்க வேண்டியது மிக மிக அவசியமாகும் (11). அரச சபையாளர்களும் மந்திரிகளும் எவ்வாறிருக்கவேண்டும்—?—:

मौलान् शास्त्रविदः शूराँल्लब्धलक्षान् कुलोद्गतान् ।
सचिवान्सप्त चाष्टौ वा प्रकुर्वीत परीक्षितान् ॥ १ ॥

अपि यत्सुकरं कर्म तदप्येकेन दुष्करम् ।
विशेषतोऽसहायेन किन्नु राज्यं महोदयम् ॥ २ ॥

तैः सार्द्धं चिन्तयेन्नित्यं सामान्यं सन्धिविग्रहम् ।
स्थानं समुदयं गुप्तिं लब्धप्रशमनानि च ॥ ३ ॥

तेषां स्वं स्वमभिप्रायमुपलभ्य पृथक् पृथक् ।
समस्तानाञ्च कार्य्येषु विदध्याद्धितमात्मनः ॥ ४ ॥

अन्यानपि प्रकुर्वीत शुचीन् प्रज्ञानवस्थितान् ।
सम्यगर्थसमाहर्तॄनमात्यान्सुपरीक्षितान् ॥ ५ ॥

निवर्त्तेतास्य यावद्भिरितिकर्त्तव्यता नृभिः ।
तावतोऽतन्द्रितान् दक्षान् प्रकुर्वीत विचक्षणान् ॥ ६ ॥

तेषामर्थे नियुञ्जीत शूरान् दक्षान् कुलोद्गतान् ।
शुचीनाकरकर्मान्ते भीरूनन्तर्निवेशने ॥ ७ ॥

दूतं चैव प्रकुर्वीत सर्वशास्त्रविशारदम् ।
इङ्गिताकारचेष्टज्ञं शुचिं दक्षं कुलोद्गतम् ॥ ८ ॥

अनुरक्तः शुचिर्दक्षः स्मृतिमान् देशकालवित् ।
वपुष्मान्वीतभीर्वाग्मी दूतो राज्ञः प्रशस्यते ॥ ९ ॥

(மனு—7 ; 54—57 ; 60—64).

தன் ஸ்வராஜ்யத்தில் பிறந்து, வேதாதிகளைக்கற்றுள்ள நல்ல ஆராய்ச்சியாளர்களாக 7 அல்லது 8 பேர்களை மந்திரி (அமைச்சர்) களாகச் செய்யவேண்டும் (1). ஏனென்றால் நல்ல பெரிய காரியங்களைச் செய்ய எப்போதும் ஓர் நல்லவரின் சகாயம் வேண்டியதா யிருக்கின்றதென்றால் பெரிய அரசாங் கத்தைப் பரிபாலிக்க உதவியாளர்களில்லாமல் எப்படி முடியும்? ஆகையால் தேசபரிபாலனத்தை ஒரே அரசன்வசம் ஒப்புவித்தல் மிகக் கெடுதலாகும் (2). ஒவ்வொருநாளும் இம்மந்திரிகளுடன் கலந்தாலோசித்து கால இடபேதங்களி

ஞாய்ச்சியின்மேல் ஒருவரை விரோதிப்பதோ நேசிப்பதோ; தன் ராஜ்யத்தை நன்கு காப்பாற்றுதல், சமயம் கிடைத்த போது தன் எதிரியுடன் சண்டையிடுதல், அரசசேனைகளையும், பொக்கிஷங்களையும் காப்பாற்றுதல், தன் வசமான ராஜ்யங்களில் சதா அமைதி நிலவும்படியாகப் பார்த்துக்கொள்ளல் ஆகியவைகளை விசாரித்துவரவேண்டியது சபாபதிகளின் நித்தியக்கடமையாகும் (3). தாங்கள் தீர்மானித்த காரியங்களையும்கூட மற்றவர்களுடன் கலந்தாலோசித்து அவர்களும் அதற்கு சம்மதித்தபிறகே அது குடிகளுக்கு நன்மை புரிவதாயின் அக்காரியங்களைப் புரியலாம் (4). அன்னியதேசத்தவர்களாயினுங்கூட சுத்தமான ஆத்மாவை யுடையவன், அறிவாளி, திடபுத்தியாளன், பொருள்களைச் சேர்ப்பதில் மிகுந்த திறமையுள்ளவன் முதலிய குணத்தவர்களை உபமந்திரிகளாக ஏற்படுத்தலாம் (5). அரசாங்கத்திற்கு எத்தனை பேர்கள் வேண்டுமோ அத்தனைபேர்களையும் பலமுள்ளவர்களாகவும், சுறுசுறுப்புள்ளவர்களாகவுமே நியமிக்கவேண்டும் (6). நல்ல வீர குலத்தவர்களாயும், திடமுள்ளவர்களாயுமுள்ள வேலைக்காரர்களை வெளிவேலைகளுக்கும், கொஞ்சம் பயத்தை யுடையவர்களை உள்வேலைகளுக்கும் நியமிக்க வேண்டும் (7). நன்கு கற்று, அறிவாளிகளின் குலத்தில் பிறந்து, பிறரின் எண்ணங்களைச் சுலபத்தில் தெரிந்துகொள்ளக்கூடியவர்களை தூதர்களாக நியமிக்கவேண்டும் (8). அத்தூதனும் அரசகாரியங்களில் சிறிதும் கபடமின்றி, சுத்தமான மனத்தனாய் அநேக காலவார்த்தைகளையும் கவனம் வைத்துக்கொண்டிருந்து காலதேசங்களுக்குத் தகுந்ததைப் போல பயமில்லாமல் காரியங்களைப் புரிந்துவரவேண்டும் (9)

யார் யாருக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும்—:

अमात्ये दण्ड आयत्तो दण्डे वैनयिकी क्रिया ।
नृपतौ कोषराष्ट्रे च दूते सन्धिविपर्ययौ ॥ १ ॥
दूत एव हि संधत्ते भिनत्त्येव च संहतान् ।
दूतस्तत्कुरुते कर्म भिद्यन्ते येन वा न वा ॥ २ ॥
बुद्ध्वा च सर्वं तत्त्वेन परराजचिकीर्षितम् ।
तथा प्रयत्नमातिष्ठेद्यथात्मानं न पीडयेत् ॥ ३ ॥
धनुर्दुर्गं महीदुर्गमब्दुर्गं वार्क्षमेव वा ।
नृदुर्गं गिरिदुर्गं वा समाश्रित्य वसेत्पुरम् ॥ ४ ॥
एकः शतं योधयति प्राकारस्थो धनुर्धरः ।
शतं दश सहस्राणि तस्माद्दुर्गं विधीयते ॥ ५ ॥
तत्स्यादायुधसम्पन्नं धनधान्येन वाहनैः ।
ब्राह्मणैः शिल्पिभिर्यन्त्रैर्यवसेनोदकेन च ॥ ६ ॥
तस्य मध्ये सुपर्याप्तं कारयेद् गृहमात्मनः ।
गुप्तं सर्वर्त्तुकं शुभ्रं जलवृक्षसमन्वितम् ॥ ७ ॥
तदध्यास्योद्वहेद्भार्यां सवर्णां लक्षणान्विताम् ।
कुले महति सम्भूतां हृद्यां रूपगुणान्विताम् ॥ ८ ॥
पुरोहितं प्रकुर्वीत वृणुयादेव चर्त्विजम् ।
तेऽस्य गृह्याणि कर्माणि कुर्य्युर्वैतानि कानि च ॥ ९ ॥

(மனு—7,65 ; 66 ;68 ; 70 ; 74—78).

மந்திரிக்கு தண்டனையினதிகாரத்தையும்; அரசனுக்கு பொக்கிஷ, ராஜ்யாதிகாரங்களையும்; சபைகளுக்கு மற்ற

சகல அதிகாரங்களேயும்; தூதனுக்கு ஒருவருடன் கலந்து நட்பையோ விரோதத்தையோ செய்துகொண்டுவரு மதிகாரத்தையும் கொடுக்கவேண்டும் (1). எவன் தந்திரத்தில் வல்லவனும், விரோதிகளெதிர்த்துக் கொண்ட காலங்களில் தப்பித்துக்கொண்டுவரும் திறமையுள்ளவனும், சத்ருக்களிடை தந்திரம் செலுத்தக்கூடியவனுமாயிருக்கின்ருனே அவனே தூதனின் அதிகாரத்தையேற்கத்தகும் (2). அரசன், சபைத் தலைவர்கள், சபையாளர்கள், தூதர்கள் இவர்களெல்லாம் மற்ருேர் அரசனுடன் விரோதிக்கச் செல்லவேண்டி யேற்படும் சந்தர்ப்பங்களில் தன் அரசுக்கு ஒருவித தீங்குமுண்டாகா வண்ணம் பாதுகாத்துக்கொண்டே அக்காரியங்களேப் புரியச் செல்லவேண்டும் (3). ஆகையால் நல்ல தனதான்யாதிகள் விளேயும் இடத்திலே தன் அரசாங்கத்தையமைத்து அதற்கு நான்கு திசைகளிலும் அகழிகளேயுடைய கோட்டைகளே யமைத்து அவைகளில் நல்ல வீரர்களே காவல் வைத்திருக்க வேண்டும். அன்றி இக்கோட்டைகளுக்கு முன்பாக நான்கு பக்கங்களிலும் மலேகளேயுடைய இடமாகப் பார்த்து அம்மலேகளிலும் காவல்வீரர்களே வைத்திருக்கவேண்டியது கடமையாகும் (4). அன்றி நகரத்தின் உட்புறத்தில் நெருங்கியவண்ணம் வேறு சிறிய கோட்டைகளேயமைத்து, 100 பேர்களேயும் ஒருவனுகவே எதிர்க்கக்கூடிய திறமை பொருந்திய வீரர்களே அதில் காவல் வைத்திருக்கவேண்டும் (5). இச்சகல கோட்டைகளும், சாஸ்த்திரவாதிகள் நிறைந்ததாகவும்; தான்யம், தனம், வாகனங்கள், சிறைச்சாலே, வாசகசாலே, யந்திர தொழிற்சாலே முதலிய பலவித சாதகங்களாலும் நிறைந்தவைகளாயிருக்கவேண்டும் (6). இப்பேர்ப்

பட்ட கோட்டைகளுக்கு மத்தியிலே ஜல, வ்ருக்ஷ, புஷ்பாதிகளால் நிறைந்து, சகல இருதுக் காலங்களிலும் சுகத்தையளிக்கும் வண்ணத்துடன் கூடிய ஓர் வெண்மாளிகையமைத்து அதில் சகலமான அரசகாரியங்களையும் புரிந்துவரவேண்டும் (7). மறையாணவம் முடித்த பிறகு இவ்வரசமாளிகையை நியமித்து அதை மேற்கொண்டு நடத்தும் வரையுள்ளவேலைகளை முடித்த பிறகு தன் வர்ணத்தவளாகவும், தனக்கொத்த கல்வி கேள்விகளுடையவளாகவும், பலமுடையவளாகவுமுடைய ஓர் அழகிய மங்கையை மணம்புரிந்துகொள்ளவேண்டும். அத்துடன் மற்ற பெண்களை கண்ணாலும் பார்க்காமல் இருக்கவேண்டும் (8). அரசமாளிகையில் அக்னிஹோத்ராதிகளைச் செய்துகொண்டிருப்பதற்காக, வேள்வித்தலைவர்களையும் காப்பாற்றி வரவேண்டும். அரசன் சதா அரசகாரியங்களிலேயே கண்ணுங்கருத்துமாயிருக்கவேண்டும். (9).

सांवत्सरिकमाप्तैश्च राष्ट्रादाहारयेद्बलिम् ।
स्याच्चाम्नायपरो लोके वर्त्तेत पितृवन्नृषु ॥ १ ॥
अध्यक्षान् विविधान् कुर्यात् तत्र तत्र विपश्चितः ।
तेऽस्य सर्वाण्यवेक्षेरन्नृणां कार्याणि कुर्वताम् ॥ २ ॥
अवृत्तानां गुरुकुलाद्विप्राणां पूजको भवेत् ।
नृपाणामक्षयो ह्येष निधिर्ब्राह्मो विधीयते ॥ ३ ॥
समोत्तमाधमै राजा त्वाहूतः पालयन् प्रजाः ।
न निवर्त्तेत संग्रामात् क्षात्रं धर्ममनुस्मरन् ॥ ४ ॥
आहवेषु मिथोऽन्योन्यं जिघांसन्तो महीक्षितः ।
युध्यमानाः परं शक्त्या स्वर्गं यान्त्यपराङ्मुखाः ॥ ५ ॥

न च हन्यात्स्थलारूढं न क्लीबं न कृताञ्जलिम् ।
न मुक्तकेशं नासीनं न तवास्मीति वादिनम् ॥ ६ ॥

न सुप्तं न विसन्नाहं न नग्नं न निरायुधम् ।
नायुध्यमानं पश्यन्तं न परेण समागतम् ॥ ७ ॥

नायुधव्यसनं प्राप्तं नार्त्तं नातिपरिक्षतम् ।
न भीतं न परावृत्तं सतां धर्ममनुस्मरन् ॥ ८ ॥

यस्तु भीतः परावृत्तः सङ्ग्रामे हन्यते परैः ।
भर्त्तुर्यद्दुष्कृतं किञ्चित्तत्सर्वं प्रतिपद्यते ॥ ९ ॥

यच्चास्य सुकृतं किंचिदमुत्रार्थमुपार्जितम् ।
रथाश्वं हस्तिनं छत्रं धनं धान्यं पशून् स्त्रियः ।

भर्त्ता तत्सर्वमादत्ते परावृत्तहतस्य तु ॥ १० ॥
सर्वद्रव्याणि कुप्यं च यो यज्जयति तस्य तत् ॥ ११ ॥

राज्ञश्च दद्युरुद्धारमित्येषा वैदिकी श्रुतिः ।
राज्ञा च सर्वयोधेभ्यो दातव्यमपृथग्जितम् ॥ १२ ॥

(மனு—7 ; 80—82 ; 87 ; 89 ; 91—97)

வருட வரிவசூலை அறிவாளிகளைக்கொண்டு வசூலிக்கச் செய்யவேண்டும். சபாபதிகளாகிய அரசன் முதல் சகலரும் குடிகளிடம் தகப்பனைப்போன்று நடந்துகொள்ளவேண்டும் (1). அவ்வப்பொழுது அரசாங்க வேலைக்காரர்களெல்லாம் அவரவர்களின் வேலைகளைச் சரிவரச்செய்கின்றார்களா வெனக்கவனித்து, சரிவரச் செய்துகொண்டுவருபவர்களுக்கு சன்மானங்களையும், தப்பிதமாகச் செய்துகொண்டுவருபவர்களுக்கு தண்டனையையும் அளித்துவரவேண்டும் (2). அரசாங்கத்திலே வேதப்ப்ரசாரங்களை சதா செய்துகொண்டிருப்

பதற்காகத் தகுந்த ஒருவரை குருகுலத்திற்கனுப்பி அரசாங்க செலவிலேயே அவருக்குப் பூர்ண வேத வித்தைகளை யளித்த பின் னவரைத் தன் அரசாங்கவேதப்ரசாரகராக வைத்துக் கொள்ளவேண்டும் (3). இதனால் ராஜ்யம் சத்தியம் நிலவும் காரணத்தால் உன்னத நிலையிலேயே சதா யிருக்கும். தனக்கும் குறைந்த-சரியான-மேலான யுத்தங்களிலே அரசன் கூப்பிடப்பட்டால் கட்டாயம் அரசன் தன் சேனைகளுடன் சென்று யுத்தம் புரிந்து வெற்றியடையவேண்டும். ஒருபோதும் மறுக்கக்கூடாது (4). யுத்தத்திலே எதிரியைக் கொல்ல வேண்டுமென்ற விருப்பத்துடன் பயம் சிறிதுமின்றி தன் முழுத்திறமையுடனும் யுத்தம் புரியும் அரசன் உண்மைச் சுகத்தை யடைகின்றானாதலால் எப்போதும் பின் முதுகனாகக் கூடாது. ஆனாலும் தன் உயிரை அனாவசியமாக எதிரிகளால் மாய்த்துக்கொள்ளாமல் யுத்த தந்திரங்களைக் கையாண்டு சமயோசிதப்படி எதிரியையே கொல்ல கவனம் வைத்துத் தன்னையும் அதற்காக வேண்டிய மார்க்கத்தில் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் (5). யுத்தகாலங்களிலே இங்குமங்கும் தெரியாமல் நின்றிருப்பவர்களையும், பேடிகளையும், கையறுந்தவர்களையும், சிரத்தில் இரத்தம் ஒழுக நின்றுகொண்டிருப் பவர்களையும்; உட்கார்ந்திருப்பவர்களையும், அடைக்கல மடைந்தவர்களையும் (6). தூங்கிக் கொண்டிருப்பவர்களையும்; மூர்ச்சை யடைந்திருப்பவர்களையும்; துவண்டிருப்பவர்களையும்; ஆயுதமில்லாம லிருப்பவர்களையும்; யுத்தத்தைப் பார்த்துக்கொண்டிருப் பவர்களையும்; எதிரிகளின் துணைப்பெண்களையும் (7). ஆயுதங்களால் பலவிதமான காயங்களடைந்திருப்பவர்

களையும் ; துக்கித்துக் கொண்டிருப்பவர்களையும், மிகுந்த காயங்களடைந்தவர்களையும் ; பயந்திருப்பவர்களையும் ; ஆகார வகைகளை யருந்திக் கொண்டிருப்பவர்களையும் அறிவாளிகள் கொல்லலாகாது. ஆனல் அவர்களைப்பிடித்து சிறைச்சாலையில் வேண்டிய காலம்வரை அடைக்கலாம். ஆனல் ஆகாராதிகளைத் தகுந்தவாறு அளித்துவரவேண்டும். காயங்களுடனிருப்பவர்களுக்குத் தகுந்த சிகிச்சைகளையுமளிக்கவேண்டும், அவர்களைத் துன்புறுத்தக்கூடாது. அவர்களுக்கு வேண்டியவைகளைச் செய்யவேண்டும். பெண்கள், குழந்தைகள், கிழவர்கள், விசனத்துடனிருப்பவர்கள்மேல் ஒருபோதும் சஸ்த்திர ப்ரயோகம் செய்யக்கூடாது. அக்குழந்தைகளைத் தங்கள் குழந்தைகளைப் போல வளர்க்கவேண்டும். பெண்களையும் காப்பாற்ற வேண்டும். அவர்களைத்தன் தங்கைகளாகவும், மகள்களாவும் பாவித்து வரவேண்டும். அவர்களைத்துஷ்டப் பார்வையுடன் ஒருபோதும் பார்க்கலாகாது. இனிமேல் யுத்தமில்லையென்ற தீர்மானம் ஏற்பட்ட காலத்திற்குப் பிறகு அவரவர்களை அவரவர்களின் தேசங்களுக்கு அனுப்பிவைத்து விடவேண்டும். ஆனல் அனுப்பினல் மறுபடி யுத்தத்திற்கு முயல்வார்களென்று சந்தேகம் ஏற்படுபவர்களை கடைசி நாள் வரை சிறைச்சாலையிலேயே வைத்திருக்க வேண்டும் (8). தவறி எதிரிகளின் சேனைகளிலிருந்து பயந்து ஓடுபவர்களைத் தன் சேனையைச் சேர்ந்த யாராயினும் கொல்வார்களானல் அவர்கள் நல்ல தண்டனைக்குட் பட வேண்டும் (9). யுத்தத்தால் ஏற்படும் இகபர சுகங்களுக்காகப் பயந்து ஓடுபவர்களைக் கொன்று விடும் சேனைகளும்,

அவைகளின் தலைவர்களும் நாசமடைவார்கள். ஆகையால் தர்மத்தைக் கைவிடாமலே யுத்தம் புரியவேண்டும் (10). தன் சேனை வீரர்கள் எதிரிகளின் சேனைகளிலிருந்து யுத்தத்திலே சம்பாதித்துக்கொண்டுவரும் தேர்கள், குதிரைகள், யானைகள், குடைகள், தனதான்யங்கள், பசுக்கள், பெண்கள் முதலியவற்றை அவரவர்களுக்கே கொடுத்து விட வேண்டும் (11). அவர்களும் தாங்கள் சம்பாதித்தவைகளில் பதினறில் ஒரு பங்கு அரசனுக்குக் கொடுத்து விட வேண்டும். அரசனும் தான் சம்பாதித்தவைகளில் பதினறில் ஒருபங்கு தன் சேனைகளுக்குப் பங்கிட்டளித்து விட வேண்டும். யுத்தத்தில் இறந்துவிட்ட வீரர்களுக்காக அவர்களின் பங்கை அவ்விறந்துவிட்ட வீரர்களின் மனைவி அல்லது குடும்பத்தார்களுக்குக் கொடுத்து விடவேண்டும். அன்றி இறந்து விட்ட வீரர்களின் குழந்தைகள் பெரியவர்களானபின் அவர்களுக்கும் ஓர் நல்ல வேலையை யளிக்க வேண்டியது அரசன் கடமையாகும். தன் அரசின் நன்மையை நாடும் எந்த அரசனும் இவ்விதிகளை மறுக்கக் கூடாது (12).

अलब्धं चैव लिप्सेत लब्धं रक्षेत्प्रयत्नतः ।
रक्षितं वर्द्धयेच्चैव वृद्धं पात्रेषु निःक्षिपेत् ॥ १ ॥
अलब्धमिच्छेद्दण्डेन लब्धं रक्षेदवेक्षया ।
रक्षितं वर्द्धयेद् वृद्धया वृद्धं दानेन निःक्षिपेत् ॥ २ ॥
अमाययैव वर्त्तेत न कथंचन मायया ।
बुध्येतारिप्रयुक्तां च मायां नित्यं स्वसंवृतः ॥ ३ ॥
नास्य छिद्रं परो विद्याच्छिद्रं विद्यात्परस्य तु ।
गूहेत्कूर्म इवाङ्गानि रक्षेद्विवरमात्मनः ॥ ४ ॥

बकवच्चिन्तयेदर्थान् सिंहवच्च पराक्रमेत् ।
वृकवच्चावलुम्पेत शशवच्च विनिष्पतेत् ॥ ५ ॥

एवं विजयमानस्य येऽस्य स्युः परिपन्थिनः ।
तानानयेद्वशं सर्वान् सामादिभिरुपक्रमैः ॥ ६ ॥

यथोद्धरति निर्दाता कक्षं धान्यं च रक्षति ।
तथा रक्षेन्नृपो राष्ट्रं हन्याच्च परिपन्थिनः ॥ ७ ॥

मोहाद्राजा स्वराष्ट्रं यः कर्षयत्यनवेक्षया ।
सोऽचिराद् भ्रश्यते राज्याज्जीविताच्च स बान्धवः ॥ ८ ॥

शरीरकर्षणात्प्राणाः क्षीयन्ते प्राणिनां यथा ।
तथा राज्ञामपि प्राणाः क्षीयन्ते राष्ट्रकर्षणात् ॥ ९ ॥

राष्ट्रस्य संग्रहे नित्यं विधानमिदमाचरेत् ।
सुसंगृहीतराष्ट्रो हि पार्थिवः सुखमेधते ॥ १० ॥

द्वयोस्त्रयाणां पञ्चानां मध्ये गुल्ममधिष्ठितम् ।
तथा ग्रामशतानां च कुर्य्याद्राष्ट्रस्य संग्रहम् ॥ ११ ॥

ग्रामस्याधिपतिं कुर्याद्दशग्रामपतिं तथा ।
विंशतीशं शतेशं च सहस्रपतिमेव च ॥ १२ ॥

ग्रामे दोषान्समुत्पन्नान् ग्रामिकः शनकैः स्वयम् ।
शंसेद् ग्रामदशेशाय दशेशो विंशतीशिनम् ॥ १३ ॥

विंशतीशस्तु तत्सर्वं शतेशाय निवेदयेत् ।
शंसेद् ग्रामशतेशस्तु सहस्रपतये स्वयम् ॥ १४ ॥

तेषां ग्राम्याणि कार्याणि पृथक्कार्याणि चैव हि ।
राज्ञोऽन्यः सचिवः स्निग्धस्तानि पश्येदतन्द्रितः ॥ १५ ॥

नगरे नगरे चैकं कुर्यात्सर्वार्थचिन्तकम् ।
उच्चैः स्थानं घोररूपं नक्षत्राणामिव ग्रहम् ॥ १६ ॥

स तानुपरिक्रामेत्सर्वानेव सदा स्वयम् ।
तेषां वृत्तं परिणयेत्सम्यग्राष्ट्रेषु तच्चरैः ॥ १७ ॥

राज्ञो हि रक्षाधिकृताः परस्वादायिनः शठाः ।
भृत्या भवन्ति प्रायेण तेभ्यो रक्षेदिमाः प्रजाः ॥ १८ ॥

ये कार्यिकेभ्योऽर्थमेव गृह्णीयुः पापचेतसः ।
तेषां सर्वस्वमादाय राजा कुर्यात्प्रवासनम् ॥ १९ ॥

(மனு, 7 ; 99 ; 101 ; 104—107 ; 110—117 ; 120–124).

அரசனும், அரசசபைகளும் அடையமுடியாதவைகளையும் அடைய விருப்பங்கொண்டு முயற்சியால் காப்பாற்றவேண்டும். காப்பாற்றுதலை விருத்தி செய்யவேண்டும். விருத்திசெய்துகொண்டே வேதக்கலை தர்ம ப்ரசாரம், வித்யார்த்தி, வேதமார்க்கோப தேசகர், அனுதி முதலியவர்களை நன்ருகக் காப்பாற்றவேண்டும் (1). நான்குவித புருடார்த்தங்களையும் தெரிந்து கொள்ளவேண்டும். சோம்பலைவிட்டு, இவ்வுண்மையை நிதமும் அனுசரித்து வரவேண்டும். தண்டத்தினுலும் அடைய முடியாதவைகளை அடையும் விருப்பம், பார்ப்பவைகளிலிருந்து அடைந்தவைகளை நிதமும் காப்பாற்றுதல், காப்பாற்றியவைகளை விருத்தி செய்தல், விருத்தி செய்தவைகளை முன் சொன்ன தர்மமான காரியங்களிலேயே செலவிட வேண்டும் (2). எப்போதும் ஒருவரிடத்திலும் கபடத்துடன் வசியாதே. நிஷ்கபடமாக எல்லோருடனும் வசித்திரு. சதா தன்னைக் காப்பாற்றிக் கொண்டு எதிரிகளின் கபடங்களையுணர்ந்து அதினின்றும் தப்பித்துக் கொள்ளவேண்டும் (3). ஒருவிரோதி தன் நிர்ப்பலத்தை அறிய முடியாத

வனுய், தன் எதிரிகளின் நிர்ப்பலத்தை மாத்திர மறிந்து அவ்வெதிரிகளின் முன் தன் நிர்ப்பலத்தை மறைத்து வைக்கவேண்டும் (4). கொக்கானது தனக்கு வேண்டிய மீன் வரும்வரை த்யானுவஸ்த்தையிலிருப்பதைப் போலவே உண்மைப் பொருளே அறியுங்காலத்திலேயும் இருக்க வேண்டும்; நல்ல பொருள்களே யறிந்து பலத்தை விருத்தி செய்துகொண்டு விரோதிகளே வெல்வதற்காக சிங்கத்தைப் போன்ற பராக்ரமத் துடனிருக்கவேண்டும்; புலிக்குச் சம மாகப் பாய்ந்து எதிரிகளேப் பிடிக்கவேண்டும்; தன் அரு கில் வரும் விரோதி தன் பராக்ரமத்தைக் கண்டு ஓட வேண்டும்; அவ்வாறில்லாமல் எதிர்ப்பவர்களே பல வித உபாயங்களேயும் சமயோசிதப்படி உபயோகித்துப் பிடித்து விடவேண்டும் (5). இவ்வாருன ஜெய சீலர் களான சபாபதிகள் வசிக்கும் அரசாங்கத்தில் இருக் கும் திருடர்கள், கொள்ளேக் காரர்கள் முதலியவர்களே இச் சபாபதிகள் சிறிது பணம் ஈந்தோ மற்றெவ்விதமோ தங் கள் வசம் செய்துகொள்ள வேண்டும்; பணத்தால் வசிய மாகாதவர்களே நன்கு தண்டித்தாவது வசமாக்கிக் கொள்ள வேண்டும் (6). தானியங்களே எடுத்துச் செல்பவர்கள் உமியை நீக்கி தான்யங்களேக் காப்பாற்றுவதைப் போல, அதாவது தான்யம் உடைந்து விடாமல் காப்பாற்றுவதைப் போல அரசன் திருடன் கொள்ளேக்காரன் முதலியவர்களே தண்டித்துத் தன் அரசைக் காப்பாற்றவேண்டும் (7). மோ கத்தால், ஆராய்ச்சி யின்மையால் தன்னரசாங்கத்தை துர்ப்பலமாகச் செய்துகொள்ளுமரசன் தன் குடும்ப பரி வாரங்களுடன் வெகு சீக்கிரத்தில் நாசத்தை யடைகிருன்

(8). ப்ராணிகளின் உயிர் சரீரத்தை அதிகமாக விருப்பங்களில் செலுத்துவதால் எப்படி குறைவை யடைகின்றதோ, அவ்வாறே குடிகளை துர்ப்பலர்களாகச் செய்வதால் அரசர்கள் தங்களின் உயிராகிய பந்துக்களுடன் நாசத்தை யடைகிறார்கள் (9). இதனால் அரச காரியங்கள் முழுவதும் சித்தியடைந்து அரசன் சதா சந்தோஷத்துடனிருக்கும் படியாகவே அரசசபைத் தலைவர்கள் அரச காரியங்களைக் கவனித்து வரவேண்டும் (10). ஆகையால் 2, 3, 5, 100, கிராமங்களுக்கு மத்தியில் ஒரு அரச ஸ்தானத்தை வைத்து, அதில் வேண்டிய வேலையாட்களையும் நியமித்து சகல அரச காரியங்களையும் முடித்துக் கொள்ள வேண்டும் (11). ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு முக்ய புருடனை நியமித்து, அவ்வாறான 10 முக்ய புருடர்களுக்கு மேலாக ஓர் அதிகாரியை நியமித்து அவ்வாறான 20 பேர்களுக்கு மேல் அதிகாரி மற்றொருவரையும், அவ்வாறான 100 பேர்களுக்குமேல் மற்றோ ரதிகாரியையும், அவ்வாறான 1000 அதிகாரிகளுக்கும் மேலதிகாரியாக மற்றொருவரையும் நியமிக்கவேண்டும். ஆனால் இன்றைய காலங்களில் ஒரு கிராமத்திலே ஓர் முன்சிப்பு ; 10 கிராமங்களுக்கு மேல் ஒரு போலீஸ் ஸ்டேஷனையும் ; இம்மாதிரியான 2ண்டு ஸ்டேஷன்களுக்கு மேலாக மற்றோர் ஸ்டேஷனையும், இம்மாதிரியான 5 ஸ்டேஷன்களுக்கு மேலாக ஓர் தாசில்தாரையும் ; பத்து தாசில்தார்களுக்கு மேலாக ஓர் ஜில்லாத் தலைவரையும் ஏற்படுத்தி யிருக்கிறது. இதுவும் முன் சொன்னதும் மனு நீதியில் சொல்லப்பட்ட விதிகளேயாகும் (12). இவ்வொவ்வொரு கிராமத்

தலைவரும் தினமும் தன் கிராமங்களிலேற்படும் நன்மை தீமைகளை தனக்கு மேலதிகாரியான பத்துக் கிராமங்களின் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் அவ்வாறே இருபது கிராமங்களின் தலைவருக்குத் தெரிவிக்கவேண்டும். (13). அவர் நூறு கிராமங்களின் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் ஆயிரங் கிராமங்களின் தலைவருக்குத் தெரிவிக்கவேண்டும். அவர் லக்ஷங் கிராமங்களின் அதிப திக்கும் அவர் அரச சபைக்கும் தின காரியங்களைத் தெரி விக்க வேண்டும். அவ்வரச சபையாளர்கள் மகாராஜனின் சபைகளில் அவைகளைச் சொல்ல வேண்டும் (14). மற்றும் நாட்டின் நடப்புகளை அறிவதிலேயே காலம் கழிக்கக் கூடிய சிலரையும் கிராமங்களிலே ஏற்படுத்த வேண்டும். அவர் கள் பலவிடங்களிலும் சுற்றித் திரிந்து விஷயங்களை யறிந்து மேலதிகாரிகளுக்கு அவ்வப்போது தெரிவிக்க வேண்டும் (15). பெரிய பெரிய நகரங்களிலே பெரியதாக வும் அழகாகவும் ஓர் விசாரணை ஸ்தலத்தை நிருவி அவை களில் கல்வியிலே நன்கு தேர்ந்த முதியோர்களை அமர்த்தி வைக்க வேண்டும். அவர்கள் தினமும் அரசனுக்கும் குடி களுக்கும் நன்மையை உண்டாக்கும் காரியங்கள் என் னென்ன வென்பதை தீர ஆலோசித்து அவ்வாலோசனை களின் முடிவை அரச சபைகளுக்குத் தெரிவித்து வர வேண்டும் (16). தினமும் மாறுவேடத்துடன் சுற்றித் திரியும் சபாபதியின் வசத்திலே விஷயங்களை அறியும் தூதர்களை அமர்த்த வேண்டும். அரசன் முதல் குடிகள் வரை சகலரினுடைய குற்றநற்றங்களையும் சரியானபடி கவனித்துக் குற்றம் புரிபவர்களை சரியாக தண்டித்து நற்றம்

புரிபவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் (17). அரசனுக்கு குடிகளைக் காப்பாற்றும் அதிகாரங்களை யீபவர்கள் தார்மிக வித்வான்களே யாகும். அவர்களின் ஆதீனத்தில் மூர்க்கன், முட்டாள், பிரபொருளை யபகரிப்ப வன், திருடன், கொள்ளைக்காரன் முதலியவர்களையுங் கூட வேலைக்காரர்களாகச் செய்துகொண்டு அவர்களின் துஷ்டத் தனங்களை விலக்குவதற்காக அவர்களை வித்வான்களின் ஆதீனத்திலேயே அமர்த்தி குடிகளை அவர்களைக் கொண்டு காப்பாற்றிவர வேண்டும். (18). அநியாயத்தால் வாதி ப்ரதிவாதிகளிடமிருந்து லஞ்சம் பெற்றுக்கொண்டு பக்ஷபாதமாக நடக்கும் அரசாங்க உத்தியோகஸ்தனின் சகலத்தையும் எடுத்துக்கொண்டு நன்கு தண்டித்து மறு படியும் திரும்பிவர முடியாத தேசத்திற் கனுப்பிவிட வேண்டும். ஏனென்றால் இவனை தண்டிக்காமல் விட்டு விட்டால் மற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்களும் லஞ்சம் பெற்றுக்கொண்டு பக்ஷபாதமாகவே நடப்பார்கள். ஆகை யால் அவர்களைத் தூர தேசத்திற்கே அனுப்பிவிட வேண் டும். அத்துடன் அவர்களின் செல்வங்களை யெல்லாம் அரசாங்கத்தின் வசம் வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அக்குற்றவாளிகள் இறந்தவுடன் அவர்கள் செல்வம் முழுவதையும் அவர்களின் குழந்தைகளின் வசம் அளித்து விட வேண்டும். குழந்தை மிகுந்த சிறியவனாயிருந்தால் அவனின் தாயார்வசம் வேண்டியபடி மாதம் ஒரு முறை யாகவோ வருடமொரு முறையாகவோ கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்துக் கொண்டுவர வேண்டும். ஆனால் தாயும் மகனும் கூட துஷ்டத்தனத்தையே கொண்டிருப்ப

வர்களாயின் கொஞ்சமும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதில்லை. இந் நீதிகளை அரசன் சரிவர அனுஷ்டிக்கவேண்டும் (19).

यथा फलेन युज्येत राजा कर्त्ता च कर्मणाम् ।
तथावेक्ष्य नृपो राष्ट्रे कल्पयेत्सततं करान् ॥ १ ॥
यथाल्पाऽल्पमदन्त्याऽऽद्यं वार्य्योकोवत्सषट्पदाः ।
तथाल्पाऽल्पो ग्रहीतव्यो राष्ट्राद्राज्ञाब्दिकः करः ॥ २ ॥
नोच्छिन्द्यादात्मनो मूलं परेषां ज्ञातितृष्णया ।
उच्छिन्दन्ह्यात्मनो मूलमात्मानं तांश्च पीडयेत् ॥ ३ ॥
तीक्ष्णश्चैव मृदुश्च स्यात्कार्यं वीक्ष्य महीपतिः ।
तीक्ष्णश्चैव मृदुश्चैव राजा भवति सम्मतः ॥ ४ ॥
एवं सर्वं विधायेदमितिकर्तव्यमात्मनः ।
युक्तश्चैवाप्रमत्तश्च परिरक्षेदिमाः प्रजाः ॥ ५ ॥
विक्रोशन्त्यो यस्य राष्ट्राद्ध्रियन्ते दस्युभिः प्रजाः ।
संपश्यतः सभृत्यस्य मृतः स न तु जीवति ॥ ६ ॥
क्षत्रियस्य परो धर्मः प्रजानामेव पालनम् ।
निर्दिष्टफलभोक्ता हि राजा धर्मेण युज्यते ॥ ७ ॥

(மனு—7 ; 128, 129, 139, 140, 142—144).

அரசனும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், குடிகளும் சுகத்தைப் பெறும்படியான வழிகளிலேயே அரசனும், அரச சபையாளர்களும் காரியங்களை நடத்திவர வேண்டும் (1). அட்டையெனும் புழுவும், கன்றுக் குட்டியும், வண்டும் எவ்வாறு தங்களின் ஆகாரங்களைச் சிறிது சிறிதாக உட்கொள்ளுகின்றனவோ ; அவ்வாறே அரசன்,

குடிகளிடமிருந்து வருடா வருடம் மிகுந்த சிறிய பொருளையே பெற்று வரவேண்டும் (2). அதிக ஆசையினால் குடிகளின் சுகத்தை ஒருபோதும் நாசம் செய்துவிடக் கூடாது. ஏனென்றால் குடிகளின் சுகத்தை நாசம் செய்யு மரசனும் சீக்கிரத்திலே அழிந்து விடுகின்றான் (3). துஷ்டர்களிடம் கொரேத்தையும், நல்லோர்களிடம் அன்பையும் செலுத்திவரும் அரசனே மதிக்கத்தகுந்தவனாகும் (4). இவ்விதிகளை நன்கு அனுசரித்து எப்போதும் ப்ரமாதமில்லாமல் தன் குடிகளை சதா காப்பாற்றி வரவேண்டியது அரசனின் கடமையாகும் (5). வேலைக்காரர்களுடன் அரசன் பரிபாலித்துவரும் அரசாங்கத்திலே குடிகளிடம் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்து குடிகளுக்கு துக்கமளிப்பார்களானால் அவ்வரசனும் வேலைக்காரர்களும் இறக்க வேண்டியவர்களேயன்றி யிருக்கவேண்டியவர்களல்ல. ஏனென்றால் அவர்களே துக்க உற்பத்திக்குக் காரணமாகின்றனர் (6). ஆகையால் தன்னலம் கருதாது குடிகளின் நலத்தையே கோரவேண்டியது அரசர்களின் கடமையாகும். மனுஸ்மிருதியின் 7வது அத்தியாயத்தின்படி சபைகளையமைத்து பரிபாலிக்கும் தர்மவானாகிய அரசன் சதா சுகத்தையடைகின்றான். அதற்கு மாறாக நடக்குமரசன் சதா துக்கத்தைப் பெறுகின்றான்.

उत्थाय पश्चिमे यामे कृतशौचः समाहितः ।
हुताग्निर्ब्राह्मणांश्चार्च्य प्रविशेत्स शुभां सभाम् ॥ १ ॥

तत्र स्थिताः प्रजाः सर्वाः प्रतिनन्द्य विसर्जयेत् ।
विसृज्य च प्रजाः सर्वा मन्त्रयेत्सह मन्त्रिभिः ॥ २ ॥

गिरिपृष्ठं समारुह्य प्रासादं वा रहोगतः ।
अरण्ये निःशलाके वा मन्त्रयेदविभावितः ॥ ३ ॥

यस्य मन्त्रं न जानन्ति समागम्य पृथग्जनाः ।
स कृत्स्नां पृथिवीं भुङ्क्ते कोशहीनोऽपि पार्थिवः ॥ ४ ॥

(மனு—7; 145—148).

முன் ஜாமத்தில் (காலை 4-ன்கு மணிக்குச் சரியாய்) எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சாவதானத்துடன் கடவுளை தியானித்து அக்னிஹோத்ராதிகள் செய்து வித்வான்களுக்கு சத்காரம் புரிந்து ஆகார முட்கொண்ட பின் சபையில் பிரவேசிக்க வேண்டும் (1). அங்கே நின்று அங்கு நின்றிருக்கும் குடிகளுக்கு மரியாதை யளி. பிறகு தலைமை மந்திரியுடன் கூடி அமர்ந்து ராஜ்ய விசாரணை புரி (2). பிறகு அவருடன் மலைச் சிகரங்களுக்காவது, தனிப்பட்ட வீட்டிற்காவது, காட்டிற்காவது சென்று அமைதியான விடத்திலமர்ந்து மந்திரியுடன் விசாரிக்க வேண்டும் (3). இவ்வாறு குடிகளின் நன்மைக்காக அன்னியர்களுக்குத் தெரியாமல் ரகசிய விசாரணையைப் புரியு மரசன் மிகுந்த எழ்மையாள னாயினும், உலக செல்வங்கள் சகலத்தையும் அனுபவிக்கும் திறமையைப் பெறுகின்றான். ஆகையால் அரசன் தன் சுகத்திலே கொஞ்சமும் மனதை செலுத்தாமல் குடிகளின் க்ஷேமத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து தனக்கு ஏதாவது வேண்டியதாயிருப்பினும் சபைத் தலைவர்களின் அனுமதியைப் பெற்றே அடைய வேண்டும் (4).

आसनं चैव यानं च संधिं विग्रहमेव च ।
कार्यं वीक्ष्य प्रयुञ्जीत द्वैधं संश्रयमेव च ॥ १ ॥

संधिं तु द्विविधं विद्याद्राजा विग्रहमेव च ।
उभे यानासने चैव द्विविधः संश्रयः स्मृतः ॥ २ ॥

समानयानकर्मा च विपरीतस्तथैव च ।
तथा त्वायतिसंयुक्तः संधिर्ज्ञेयो द्विलक्षणः ॥ ३ ॥

स्वयं कृतश्च कार्यार्थमकाले काल एव वा ।
मित्रस्य चैवापकृते द्विविधो विग्रहः स्मृतः ॥ ४ ॥

एकाकिनश्चात्ययिके कार्ये प्राप्ते यदृच्छया ।
संहतस्य च मित्रेण द्विविधं यानमुच्यते ॥ ५ ॥

क्षीणस्य चैव क्रमशो दैवात्पूर्वकृतेन वा ।
मित्रस्य चानुरोधेन द्विविधं स्मृतमासनम् ॥ ६ ॥

बलस्य स्वामिनश्चैव स्थितिः कार्यार्थसिद्धये ।
द्विविधं कीर्त्यते द्वैधं षाड्गुण्यगुणवेदिभिः ॥ ७ ॥

अर्थसंपादनार्थं च पीड्यमानः स शत्रुभिः ।
साधुषु व्यपदेशार्थं द्विविधः संश्रयः स्मृतः ॥ ८ ॥

यदावगच्छेदायत्यामाधिक्यं ध्रुवमात्मनः ।
तदात्वे चाल्पिकां पीडां तदा सन्धिं समाश्रयेत् ॥ ९ ॥

यदा प्रहृष्टा मन्येत सर्वास्तु प्रकृतीर्भृशम् ।
अत्युच्छ्रितं तथात्मानं तदा कुर्वीत विग्रहम् ॥ १० ॥

यदा मन्येत भावेन हृष्टं पुष्टं बलं स्वकम् ।
परस्य विपरीतं च तदा यायाद्रिपुं प्रति ॥ ११ ॥

यदा तु स्यात्परिक्षीणो वाहनेन बलेन च ।
तदासीत प्रयत्नेन शनकैः सांत्वयन्नरीन् ॥ १२ ॥

मन्येतारिं यदा राजा सर्वथा बलवत्तरम् ।
तदा द्विधा बलं कृत्वा साधयेत्कार्य्यमात्मनः ॥ १३ ॥
यदा परबलानां तु गमनीयतमो भवेत् ।
तदा तु संश्रयेत् क्षिप्रं धार्मिकं बलिनं नृपम् ॥ १४ ॥
निग्रहं प्रकृतीनां च कुर्याद्योऽरिबलस्य च ।
उपसेवेत तं नित्यं सर्वयत्नैर्गुरुं यथा ॥ १५ ॥
यदि तत्रापि संपश्येद्दोषं संश्रयकारितम् ।
सुयुद्धमेव तत्राऽपि निर्विशंकः समाचरेत् ॥ १६ ॥

(மனு ; 121—136).

அரசை அழியாது காப்பாற்றுதல்; விரோதியுடன் சண்டை செய்யச் செல்லல்; சமயோசிதப்படி சமாதானம் செய்து கொள்ளல்; எதிரியைத் தோற்கடித்தல்; இரண்டு பிரிவாக சேனைகளைப் பிரித்து நடத்திச் செல்லல்; தன் பலக்குறைவை யறிந்து மற்ருேர் பலமுள்ள அரசனின் உதவியை நாடல்; இவ் வாறு வகையான காரியங்களையும் சமயோசித மறிந்து உபயோகித்துக் கொள்ளவேண்டியது அரசர்களின் கடமையாகும் (1). முன் சொன்ன ஆறு வித உபாயங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு விதங்களுண்டு; அவைகளை நன்கு தெரிந்து கொள்ளவேண்டும் (2). (சந்தி) சமாதானம்—: விரோதியினிடம் சமாதானத்தையோ விரோதத்தையோ செய்து கொள்ளல்; ஆனுல் பின்னுல் தன் பலத்தை அதிகப் படுத்திக்கொண்டு சண்டை யிடுவதற்காகச் செய்துகொள்ளும் உடன்படிக்கை, ஆக சமாதானம் இரண்டு விதங்களாகும் (3). (நிக்ரஹம்) விரோதம் செய்து கொள்ளல்—: கார்ய சித்திக்காக தானுகவே உசித,

அனுசித சமயத்தால் விரோதம் செய்துகொள்ளல்; தன் குடிகளுக்குப் பிறர் செய்த குற்றத்திற்காக விரோதம் செய்து கொள்ளல்; ஆக விரோதம் இரண்டு விதங்களாகும் (4). (யான) எதிர்த்தல்—: சமயம் கிடைத்தபோது தான் தனியாகவோ துணையுடனே எதிரிகளின் சேனைக்குள் நுழைந்து எதிர்த்தல்; எதிர்பாராவிதமாக எதிரிகளின் சேனைகளில் நுழைந்து விட்டபோது எதிரிகளை எதிர்த்தல்; ஆக எதிர்த்தல் இரண்டு விதங்களாகும் (5). (ஆஸன) அமைதி—: தன் பலம் குன்றிவிட்டதை அறிந்து பேசாமல் இருத்தல்; தன் நண்பனால் தடுக்கப்பட்டு சும்மாயிருத்தல்; ஆக அமைதி இரண்டு விதங்களாகும் (6). (த்வைதம்) இரண்டு பிரிவு—: காரியசித்திக்காக சேனாதிபதிகளை இரண்டு பிரிவாகப் பிரித்தல்; சேனைகளை இரண்டு பிரிவாகப் பிரித்துச் செலுத்துதல்; ஆக பிரித்தல் இரண்டு விதங்களாகும் (7). (ஆஸ்ரயம்) அடைக்கலம்—: ஏதாவதொரு கருத்தை நாடி மற்றோர் அரசனின் சகாயத்தை வேண்டுதல்; ஓர் பெரியாரின் சரணத்தை அடைக்கலமடைதல்; ஆக அடைக்கலம் இரண்டுவிதங்களாகும் (8). இச்சமயம் யுத்தம் புரிந்தால் தான் தோற்றுவிடுவது நிச்சயமென்று தெரிந்தபோது எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டு தன் பலத்தை நன்கு அபிவிருத்தி செய்துகொள்ளும் வரை பேசாமலிருக்கவேண்டும் (9). தன் சேனைகள் விருத்தியாயும், பலமாயும், சந்தோஷமாயும் இருக்கும் காலமறிந்தே எதிரிகளை விரோதித்துக்கொள்ளவேண்டும் (10). தன் சேனைகள் பலமாகவும், சந்தோஷமாகவு மிருக்கும்போது

எதிரிகளின் சேனைகள் பலம் குன்றி சந்தோஷமில்லாம லிருப்பதை யறிந்தபோதே விரோதியுடன் சண்டையிட்டு ஜெயிக்கவேண்டும் (11). தன் சேனைகளின் பலம் முழு துங் குன்றி வருவதை யறிந்தபோது விரோதிகளைச் சிறிது சிறிதாக அமைதியடையச்செய்துகொண்டு தன்னிடத்தில் உட்கார்ந்திருக்கவேண்டும் (12). எதிரி மிகுந்த பலவானு யிருக்கின்றானென வறிந்தபோது தன் சேனையை இரண்டு பிரிவாக்கி தன் காரியத்தை முடித்துக்கொள்ளவேண்டும் (13). எதிரிகளின் சேனைகள் இனி தன்னைத்தாக்கி வந்து விடுமென்றறிந்தபோது உடனே மற்றொரு பலசாலியான அரசனின் உதவியை நாடவேண்டும் (14). எதிரிகளின் சேனைகளை உயிருக்குத்துணிந்து எதிர்த்துத் தனக்கு ஜெய த்தையுண்டாக்கிய சேனைகளை குருவின் மதிப்பிலே வைத் திருக்கவேண்டும் (15). தனக்கு உதவி செய்யவந்த அர சனின் காரியங்களில் ஏதாவது குற்றங் காணப்படின் அப் போது நல்ல சண்டை நம்மவர்கள் புரிவது சந்தேகம்தான் என்ற எண்ணத்துடனேயே சமயத்தைக் கவனித்து வரவே ண்டும் (16). தர்மவானுகிய அரசனை ஒருபோதும் விரோ தித்துக்கொள்ளலாகாது. சதா அவருடன் நட்புக்கொண்டே யிருக்கவேண்டும். ஆனல் துஷ்ட அரசனுயிருந்தால் அவனை எதிர்ப்பது தர்மமேயாகும்.

सर्वोपायैस्तथा कुर्यान्नीतिज्ञः पृथिवीपतिः ।
यथास्याभ्यधिका न स्युर्मित्रोदासीनशत्रवः ॥ १ ॥

आयतिं सर्वकार्याणां तदात्वं च विचारयेत् ।
अतीतानां च सर्वेषां गुणदोषौ च तत्त्वतः ॥ २॥

आयत्यां गुणदोषज्ञस्तदात्वे क्षिप्रनिश्चयः ।
अतीते कार्यशेषज्ञः शत्रुभिर्नाभिभूयते ॥ ३ ॥
यथैनं नाभिसंदध्युर्मित्रोदासीनशत्रवः ।
तथा सर्वं संविदध्यादेष सामासिको नयः ॥ ४ ॥

(மனு, 7, 177—180).

அரசன் தன் நண்பர்கள் தன்னை எப்போதும் உதாசீனம் செய்யாத வண்ணமாகவும்; விரோதிகள் தன்னை மீருத வண்ணமாகவும் வேண்டிய உபாயங்களின்படி நடந்து கொள்ளவேண்டும் (1). சகல காரியங்களைச் செய்யும் போதும் அவைகளின் இறந்த—நிகழ்—எதிர் காலங்களின் பலன்களைக் குறித்துத் தீரவிசாரித்த பின்பே செய்ய வேண்டும் (2). பிறகு குற்றங்களை விலக்கி, குணங்களை நிலைக்கச் செய்ய முயற்சி செய்.

இவ்விதியை யனுசரித்து எக்காரியம் புரியினும் மூன்றுகால பலன்களையும் ஆராய்ந்து புரிந்து; புரிந்தபின் தான் செய்த தப்பிதங்களை உணர்ந்து சீர்திருத்திக் கொள்ளும் அரசன் எக்காலத்தும் யாவராலும் வெல்லப்பட மாட்டான் (3). நண்பர்களை உதாசீனம் செய்யாமல், விரோதிகளையும் தன் வசமாக்கிக் கொண்டு, எப்போதும் மோஹத்தை யடையாது தன் அரச நீதிகளைச் செலுத்தி வரவேண்டியது அரசனுடையவும், அரச சபையாளர்களினுடையவும் கடமையாகும் (4).

कृत्वा विधानं मूले तु यात्रिकं च यथाविधि ।
उपगृह्यास्पदं चैव चरान् सम्यग्विधाय च ॥ १ ॥

संशोध्य त्रिविधं मार्गं षड्विधं च बलं स्वकम् ।
सांपरायिककल्पेन यायादरिपुरं शनैः ॥ २ ॥

शत्रुसेविनि मित्रे च गूढे युक्ततरो भवेत् ।
गतप्रत्यागते चैव स हि कष्टतरो रिपुः ॥ ३ ॥

दण्डव्यूहेन तन्मार्गं यायात्तु शकटेन वा ।
वराहमकराभ्यां वा सूच्या वा गरुडेन वा ॥ ४ ॥

यतश्च भयमाशंकेत्ततो विस्तारयेद् बलम् ।
पद्मेन चैव व्यूहेन निविशेत सदा स्वयम् ॥ ५ ॥

सेनापतिबलाध्यक्षौ सर्वदिक्षु निवेशयेत् ।
यतश्च भयमाशङ्केत् प्राचीं तां कल्पयेद्दिशम् ॥ ६ ॥

गुल्मांश्च स्थापयेदाप्तान् कृतसंज्ञान् समन्ततः ।
स्थाने युद्धे च कुशलानभीरूनविकारिणः । ७ ॥

संहतान् योधयेदल्पान् कामं विस्तारयेद् बहून् ।
सूच्या वज्रेण चैवैतान् व्यूहेन व्यूह्य योधयेत् ॥ ८ ॥

स्यन्दनाश्वैः समे युध्येदनूपे नौ द्विपैस्तथा ।
वृक्षगुल्मावृते चापैरसिचर्मायुधैः स्थले ॥ ९ ॥

प्रहर्षयेद् बलं व्यूह्य तांश्च सम्यक् परीक्षयेत् ।
चेष्टाश्चैव विजानीयादरीन् योधयतामपि ॥ १० ॥

उपरुध्यारिमासीत राष्ट्रं चास्योपपीडयेत् ।
दूषयेच्चास्य सततं यवसान्नोदकेन्धनम् ॥ ११ ॥

भिन्द्याच्चैव तडागानि प्राकारपरिखास्तथा ।
समवस्कन्दयेच्चैनं रात्रौ वित्रासयेत्तथा ॥ १२ ॥

प्रमाणानि च कुर्वीत तेषां धर्म्यान्यथोदितान् ।
रत्नैश्च पूजयेदेनं प्रधानपुरुषैः सह ॥ १३ ॥

आदानमप्रियकरं दानञ्च प्रियकारकम् ।
अभीप्सितानामर्थानां काले युक्तं प्रशस्यते ॥ १४ ॥

(மனு—7 ; 184-192 ; 194-196 ; 203 ; 204 ;).

அரசன் தன்னரசைவிட்டு யுத்தம் புரியச்செல்லும் போது தன்னரசைக் காப்பாற்றும் வழிகளை நன்கு கவனித்து வேண்டியவைகளையெல்லாம் தயார் செய்துகொண்டு சகலமான சேனைகள், வாகனங்கள், ஆயுதங்கள் முதலியவைகளை முழுதும் எடுத்துக்கொண்டு ரகசியமாக எதிரிகளின் சமாசாரங்களை யறிந்துசொல்லும் திறமைபெற்ற தூதர்களை சகல திசைகளிலு மனுப்பிவைத்து பிறகு தான் செல்லவேண்டும் (1). தேர், குதிரை, யானை முதலிய வாகனங்களைக்கொண்டு பூமியின்மேலும்; கப்பல் ஓடம் முதலியவைகளைக்கொண்டு ஜலத்தின்மேலும், விமானம் நதிகளைக் கொண்டு ஆகாயத்தின்மேலும் செல்லவேண்டும், விரோதிகளின் இடம் நெருங்க நெருங்க வாகனங்களை மிக மெதுவாக விட்டுக்கொண்டு செல்லவேண்டும் (2). அவ்வாறு எதிரியின் தேசத்தை நெருங்கிச்செல்லும்போது எதிரியின் தேசத்திசையிலிருந்து யாராவது வந்து தன்னிடம் மிகுந்த பரிதாபமாகப்பேசி தன் எதிரியின் குற்றங்களையும் பலஹீனத்தையுமெடுத்துரைப்பானுனல் அவன் வார்த்தையில் ஒருபோதும் நம்பிக்கை வைக்கலாகாது. ஏனென்றால் மேலுக்கு மித்திரனைக் காட்டிக்கொள்ளும் அவன் தன் உளவுகளை அறிந்துகொண்டுபோகத் தன் எதிரியால் அனுப்பப்பட்ட ஓர் உளவனுயிருக்கலாம் (3). சகல அரசாங்கத்தார்களுக்கும் யுத்த வித்தை கற்பிக்கவேண்டும். தானும் கற்று பிறருக்குங் கற்பிக்கவேண்டும். முன்பே யுத்தவித்தை

கற்றுக் கொண்டவர்கள் தான் நன்கு யுத்தம் செய்யமுடியும். கற்பிக்கும் போது தண்டத்திற்குச் சமமாக சேனைகளை நடத்திச் செல்லவேண்டும். வண்டியின் சக்கிரத்தைப் போல, பன்றிகள் ஒன்றன்பின்னுென்ருகத் துடர்ந்து செல்வதைப்போல, சிலசமயம் அவைகள் ஒன்ருகக் கூடி சச்சரவிடுகின்றதைப்போல, தண்ணீரில் முதலை செல்வதைப்போல சேனையை நடத்திச் செல்லவேண்டும். ஊசியின் முனை சூக்ஷ்மமானதாயும், ஊசி ஸ்தூலமானதாயும், நூல் அதைவிட சூக்ஷ்மமானதாயுமிருப்பதைப் போலவே சேனைகளையும் செய்யவேண்டும்(4). பயம்தென்படுமிடத்திலிருந்து சேனைகளை யழைத்துக்கொண்டு விடவேண்டும். அப்போது சேனைகள் எஜமானனின் நான்கு பக்கங்களிலேயும் சுற்றி நிற்கவேண்டும். என்ருல் சேனைகளை தாமரை உருவத்தைப்போலத்தன் சுற்றிலு மணிவகுத்துதான் மத்தியிலே நிற்கவேண்டும் (5). சேனுபதிகளையும், எதிரிகளுடன் யுத்தம் புரியத் தயாராயிருப்பவர்களையும் எட்டுத் திசைகளிலும் வைக்கவேண்டும். சண்டை நடக்கும் திசையின் பக்கமாக எல்லா சேனைகளின் பார்வையுமிருக்கவேண்டும். அன்றி பின் புறத்திலும் பக்க வட்டங்களிலுங்கூட சிலர் பார்வையைச் செலுத்தியிருக்க வேண்டும். ஏனென்ருல் அப்பக்கங்களிலிருந்தும் விரோதிகள் வரக்கூடும் (6). யுத்த வித்தையை முழுதும் நன்கு கற்று யுத்தம் புரிய வெகு நாளாய் ஆவல் கொண்டிருக்கும் யுத்த தந்திரங்களில் வல்ல சேனுதிபதிகளின் வசத்தில் நான்கு பக்கச் சேனைகளையும் ஒப்புவிக்க வேண்டும் (7). வீரர்கள் கொஞ்சம் பேர்களாயினும் அதிகம் பேரான எதிரிகளின் மத்தியில் புகுந்து

யுத்தம் செய்யலாம். தன் நகரைச் சுற்றிலும் சேனைகளை வளைத்துக் கொண்டும், யுத்தம் செய்யச் சிலரையும், முன்பின் பக்க வாயல்களில் யுத்தம் செய்யச் சிலரையும், சிறிது சிறிதாக உள்ளே நெருக்கிக்கொண்டுபோகச் சிலரையும் ஏற்படுத்தவேண்டும். அவரவர்கள் தங்கள் தங்களின் காரியங்களைச் சாமர்த்தியமாகச் செய்து கொண்டு போகும் வழியில் எதிரிகள் துப்பாக்கி, பீரங்கி முதலியவைகளைத் தங்களை நோக்கிச் சுடுவதற்காக வைத்திருப்பதைக் கண்டால் மெதுவாக ஒளிந்து ஒளிந்து சென்று அவைகளைத் திடீரென்று கைப்பற்றி எதிரிகளைச் சுட தயாராகத் திருப்பிவைத்து விடவேண்டும். அவைகளினுதவியைக் கொண்டு மெதிரிகளைத் தாக்கிவரவேண்டும். சமயமறிந்து எதிரிகளைக் கொல்வதோ பிடிப்பதோ செய்யவேண்டும் (8). சமபூமியில் யுத்தம் செய்யவேண்டுமானல் குதிரை, காலாள் முதலியவைகளி னுதவியாலும், கடலில் யுத்தம் செய்யவேண்டுமானல் கப்பல்கள், நீர்யானைகள், மரத்துண்டுகள் முதலியவைகளி னுதவியாலும் யுத்தம் செய்யவேண்டும் (9). யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது வீரர்களுக்கு உற்சாக மளித்துக்கொண் டிருக்கவேண்டும். யுத்தம் முடிந்த பிறகுங் கூட அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும். கூட்டமில்லாமல் யுத்தம் செய்ய விரும்பாதே. யுத்தம் நடக்கும்போது கூட தன் சேனைகள் சரியாக யுத்தம் செய்கின்றனவா சூது செய்கின்றனவா என்றும் கவனித்து வரவேண்டும் (10). நல்ல தருந்த சமயத்தை யறிந்து எதிரியை நான்கு பக்கங்களிலும் சுற்றிக் கொண்டு அவனின் யுத்த தளவாடங்களை யெல்லாம் நாசம்

செய்துவிட வேண்டும் (11). இரவில் தன் எதிரிகளை பய முறுத்த வேண்டிய உபாயங்களைக் கையாளலாம் (12). வென்ற பிறகு எதிரியினிடமிருந்து ப்ரமாணப் பத்திரம் எழுதிப் பெற்றுக்கொண்டு அவனின் வம்சத்திலே யுள்ள ஓர் தர்மாத்மாவை அங்கு அரசனாக நியமிக்க வேண்டும். அவரிடமிருந்தும் அவர் தன்னுடைய உத்திரவின் படியே தர்ம காரியங்களை நடத்திவருவா ரென்பதற் கத் தாட்சியாக ப்ரமாண பத்திரம் எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும். அன்றி அவனால் மறுபடியும் தனக்கு துன்ப முண்டாகாதவாறு பாதுகாத்துக் கொள்ளத் தன்னுடைய ஆட்களில் சிலரையுமங்கு வைக்கவேண்டும். அவ்வாறு வைக்கப்படும் தங்களின் ஆட்களுக்கு வேண்டிய சத்காரங் களைப் புரியும்படியும் சொல்லவேண்டும் (13). உலகத்தில் மற்றொருவரின் பொருளை எடுத்துக் கொள்ளும்போது இன்பமில்லாமையும் ; பிறருக்குக் கொடுக்கும்போது இன் பமும் உண்டாவது சகஜம். ஆகையால் தோற்றுவிட்ட வர்களுக்குத் தான் ஜெயித்த அரசை ஒப்படைத்தல் மிகுந்த சந்தோஷமான காரியமாகும். தோற்றுவிட்டவர்களை ஒரு போதும் கைவிட்டு விடக்கூடாது. அன்றி அவர்களி னெதிரிலும் அவர்களின் தோல்வியைக் குறித்துச் சொல்ல லாகாது. அதற்குப் பதிலாக அவர்களைத் தன் சகோதரர் களாகப் பாவித்து நடத்திக் கொள்ளவேண்டும் (14).

हिरण्यभूमिसंप्राप्त्या पार्थिवो न तथैधते ।
यथा मित्रं ध्रुवं लब्ध्वा कृशमप्यायतिक्षमम् ॥ १ ॥
धर्मज्ञं च कृतज्ञं च तुष्टप्रकृतिमेव च ।
अनुरक्तं स्थिरारम्भं लघुमित्रं प्रशस्यते ॥ २ ॥

प्राज्ञं कुलीनं शूरं च दक्षं दातारमेव च।
कृतज्ञं धृतिमन्तञ्च कष्टमाहुररिं बुधाः ॥ ३ ॥
आर्य्यता पुरुषज्ञानं शौर्य्यं करुणवेदिता।
स्थौललक्ष्यं च सततमुदासीनगुणादयः ॥ ४ ॥

(மனு; 7; 208-211)

அரசன் பொன் பூமிகளை யடைவதற்காக; தன்னிடம் நிச்சயமான அன்பைக் கொண்டு தற்போது செய்யும் காரியங்களால் எதிர்காலத்தில் விளையும் பயன்களை செவ்வனே அறிந்து சொல்லக் கூடிய நண்பர்களைக் கொண்டிருக்க வேண்டும். அறிவிலே மிகுந்து சரீர பல மில்லாதவனே யாயினும் அரசனுக்கு அந்த நண்பனால் பலவித உதவிகள் ஏற்படும் (1). தர்மத்தை யறிந்து, செய்ந்நன்றி மறவாத, தீர்க்காலோசனை யுடைய அறிவாளிகள் மிகுந்த சிறிய உடலைக் கொண்டிருப்பினுங் கூட அரசர்களுக்கு மிகுந்த உபயோகப்படுவார்கள். அவர்களின் நட்பைக் கொண்டிருக்கு மரசன் சதா எல்லோராலும் புகழப் படுவான் (2). எப்போதும் அறிவாளிகளை, சூர தீர வீரர்களை, வருங் காலத்தையறியும் திறமையாளர்களை், அரசன் விரோதித்துக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் அவர்களை விரோதித்துக் கொள்வதால் அரசன் துக்கத்தையே அடைவான் (3). அறிவாளிகளின் நட்பைக் கொள்ளாதவன்; வீர தீர சூரர்களின் சகாயத்தைத் தேடாதவன், முதலிய அதைரியவான்களையே அரசன் விரோதித்துக் கொள்ளலாகும்(4).

एवं सर्वमिदं राजा सह संमन्त्र्य मन्त्रिभिः।
व्यायाम्याप्लुत्य मध्याह्ने भोक्तुमन्तःपुरं विशेत् ॥ ५ ॥

(மனு. 7; 216)

விடியற் காலையில் துயில் நீங்கி காலைக் கடன்களை முடித்து, கூட்டுவேளைத் தொழுகை, அக்னி ஹோத்திரம் முதலியவைகளைச் செய்து, சகல மந்திரிமார்க ளுடனும் விசாரித்து, சபா மண்டபத்திற்குச் செல்ல வேண்டும். அங்கே சேனாதிபதிகளும், வேலைக் காரர்களும் அரச சபையில் கலந்து கொள்ள வேண்டும். எல்லோரும் கலந்து சந்தோஷ வார்த்தைகள் பேசியிருந்து, பலவிதமாக தேச விசாரணைகளைச் செய்ய வேண்டும். குதிரைகள், யானைகள், பசுக்களாதி கூட்டங்களை மேற் பார்வையிட்டு; அஸ்த்திர சஸ்த்திரங்களின் இருப்பிடச் சாலையையும்; வைத்ய சாலையையும், தனச் சாலையையும், மேற்பார்வை பார்த்து, அவைகளில் கெட்டுவிட்டவைகளை நீக்கி, தேகப் பயிற்சி சாலைக்குச்சென்று தேகப் பயிற்சிகள் செய்து, ஆகார மருந்துவதற்காக அந்தப்புரத்தில், அதாவது, மனைவிகள் இருக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டும். சதா சுத்தமான ஆகாரங்களையே உட்கொள்ள வேண்டும். சுத்தமான நீரையே உட்கொள்ளவேண்டும். நல்ல சத்துள்ள ஆகாரங்களையே அருந்தவேண்டும். இவ்வாறே சகல அரசாங்க மேன்மைகளையும் செய்து கொண்டு வரவேண்டும்.

पञ्चाशद्भाग आदेयो राज्ञा पशुहिरण्ययोः ।
धान्यानामष्टमो भागः षष्ठो द्वादश एव वा ॥

(மனு—7-130).

வியாபாரம் செய்து சம்பாதிக்கும் வியாபாரிகளின் லாபத்திலே 50ல் ஒரு பங்கையும், அரிசி முதலிய தான்யங்களில் 60-70-80ல் ஒரு பங்கையும் வசூலித்துக் கொள்ள

வேண்டும். குடியானவர்கள் தங்களுக்குத் தகுந்த ஆகார மின்மையால் துக்கத்தையடையாத படியாக அவர்களிட மிருந்து பணத்தை வசூலிக்கலாம்.

ஏனென்முல் குடிகள் எவ்வளவு சுகத்துடனும் களிப் புடனும் இருக்கின்றூர்களோ அவ்வளவும் அரசனுக்கு உன்னதியேயாகும். குடிகளைத் தங்கள் குழந்தைகளைப் போல் காப்பாற்றவேண்டும். குடிகளும் அரசனைத் தங்கள் தகப்பனுக எண்ணி வரவேண்டும். அரசன் என்பவர்க ளெல்லாம் தொழிலாளிகளைக் காப்பாற்றுவதற்காக ஏற் படுத்தப் படுபவர்களேயாகும். ஏனென்முல் "குடிகளில்லா மல் கொற்றவனென் செய்வான்?" அரசனின்றி குடிக ளென்ற பெயரேது? குடிகளின் சம்மதியன்றி அரசன் ஒரு காரியத்தையும் தீர்மானிக்கக்கூடாது. அவ்வாறுண் டான அரசனின் கட்டளையை யாரும் மீறி நடக்கலாகாது.

இதுவரை அரச நீதிகளைச் சுருக்கமாகச் சொன்னும். இன்னும் விளக்கமாக அறியவேண்டுவோர் நான்கு வேதங் களையும், மனுஸ்மிருதி, சுக்ர நீதி, மகாபாரதம் முதலிய வைகளில் நன்கு காணலாம். குடிகளின் நீதிகளைக் குறித்து மனுஸ்மிருதி 8-9-வது அத்தியாயங்களில் சொல்லியிருக் கிறது. அதையும் இங்கே சுருக்கமாக ஆராய்வோம்.

प्रत्यहं देशदृष्टैश्च शास्त्रदृष्टैश्च हेतुभिः ।
अष्टादशसु मार्गेषु निबद्धानि पृथक् पृथक् ॥ १ ॥
तेषामाद्यमृणादानं निक्षेपोऽस्वामिविक्रयः ।
संभूय च समुत्थानं दत्तस्यानपकर्म च ॥ २ ॥

वेतनस्यैव चादानं संविदश्च व्यतिक्रमः ।
क्रयविक्रयानुशयो विवादः स्वामिपालयोः ॥ ३ ॥

सीमाविवादधर्मश्च पारुष्ये दण्डवाचिके ।
स्तेयं च साहसं चैव स्त्रीसंग्रहणमेव च ॥ ४ ॥

स्त्रीपुंधर्मो विभागश्च द्यूतमाह्वय एव च ।
पदान्यष्टादशैतानि व्यवहारस्थिताविह ॥ ५ ॥

एषु स्थानेषु भूयिष्ठं विवादं चरतां नृणाम् ।
धर्मं शाश्वतमाश्रित्य कुर्यात्कार्यविनिर्णयम् ॥ ६ ॥

धर्मो विद्धस्त्वधर्मेण सभां यत्रोपतिष्ठते ।
शल्यं चास्य न कृन्तन्ति विद्धांस्तत्र सभासदः ॥ ७ ॥

सभां वा न प्रवेष्टव्यम् वक्तव्यं वासमंजसम् ।
अब्रुवन्विब्रुवन्वापि नरो भवति किल्बिषी ॥ ८ ॥

यत्र धर्मो ह्यधर्मेण सत्यं यत्रानृतेन च ।
हन्यते प्रेक्षमाणानां हतास्तत्र सभासदः ॥ ९ ॥

धर्म एव हतो हन्ति धर्मो रक्षति रक्षितः ।
तस्माद्धर्मो न हन्तव्यो मा नो धर्मो हतोऽवधीत् ॥ १० ॥

वृषो हि भगवान् धर्मस्तस्य यः कुरुते ह्यलम् ।
वृषलं तं विदुर्देवास्तस्माद्धर्मं न लोपयेत् ॥ ११ ॥

एक एव सुहृद्धर्मो निधनेप्यनुयाति यः ।
शरीरेण समं नाशं सर्वमन्यद्धि गच्छति ॥ १२ ॥

पादोऽधर्मस्य कर्त्तारं पादः साक्षिणमृच्छति ।
पादः सभासदः सर्वान् पादो राजानमृच्छति ॥ १३ ॥

राजा भवत्यनेनास्तु मुच्यन्ते च सभासदः ।
एनो गच्छति कर्त्तारं निन्दार्हो यत्र निन्द्यते ॥ १४ ॥

(மனு. 8—3—8; 12—19).

அரசனும், அரச புருடர்கள் சகலரும் தேசாசாரம், சாஸ்த்திர வ்யவகாரங்களின் ஏதுக்களுடன் கீழ் வரும் பதினெட்டுவித தர்க்க மார்க்கங்களைக் குறித்துத் தர்க்க யுக்தமான காரியங்களை நித்தியமும் செய்துவரவேண்டும். சாஸ்த்திர விரோதமானவைகளை விலக்கவேண்டும். உத்தம காரியங்களை யனுசரிப்பதாலேயே அரசனுங் குடிகளும் சுகத்தைப் பெற முடியும் (1). பதினெட்டு வித மார்க்கங்களாவது—: (1) (ருணதான) கடன் கொடுக்கல் வாங்கலின் விவாதம்; (2) (நிக்ஷேபம்) ஒருவர் மற்றொருவரிடத்தில் வைத்துவிட்டுச் சென்ற பொருளைக் கேட்கும்போது கொடுக்க மறுத்தலைக் குறித்த விவாதம். (3) (அஸ்வாமி விக்ரய) ஒருவரின் பொருளை மற்றவர் விற்று விடுதலைக் குறித்து விவாதம். (4) (ஸம்பூயச ஸமுத்தானம்) ஒருவரிடமிருந்து பொருளை அபகரித்தலைக் குறித்தது. (5) (தத்தஸ்யானபகர்ம ச) கொடுத்த பொருளை திருப்பிக் கொடுக்காமை. (6) (வேதனஸ்யைவ சாதானம்) வேலைக்காரனுக்குச் சிறிது பொருளைக் கொடுத்தோ மற்றெவ்விதத்திலோ பிறரின் பொருளை எடுத்துக் கொள்ளல். (7) (ப்ரதாக்ஞா) சொன்னதற்கு விரோதமாக நடத்தல் (8) (க்ரயவிக்ரயானுசய) கொடுக்கல் வாங்கலில் சண்டை (9) பசுவின் சொந்தக்காரனுக்கும், வளர்ப்பவனுக்கு முண்டாகும் சண்டை ॥ 3 ॥ (10) இகழ்ச்சி யுரையால் உண்டான கலகம். (11) ஒருவருக்கு கொடூரமான தண்டனை யளித்தல்;

(12) ஒருவரை வெகுவாகத் திட்டுதல்; (13) திருடனைக் கொன்றுவிடுதல்; (14) ஒரு காரியத்தை பலாத்காரமாகச் செய்தல் (15) ஒரு புருடன் அல்லது பெண்ணுடன் விபசாரம் புரிதல்; ‖ 4 ‖ (16) புருட—பெண் தர்மங்களிலிருந்து மாறுபட்டொழுகல்; (17) பங்கு செய்துகொள்ளுதலி லுண்டாகும் பங்காளிகளின் சண்டை; (18) பந்தயம் வைத்து சூதாடுதல். இப்பதினெட்டும் பரஸ்பர விருத்த காரியங்களின் இருப்பிடமாகும் ‖ 5 ‖ இக்காரியங்களிலே குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுபவனுக்கு பழைய தர்மத்தை ஆச்ரயித்து நியாயம் வழுவாமலிருந்து நீதி வழங்க வேண்டும். என்றால் தீர்ப்பளிப்பதில் சிறிதும் வஞ்சனையிருக்கக்கூடாது (6). அதர்மம் தலையோங்கி தர்மம் மறைபட்டு; அதர்மவான்களுக்குத் தகுந்த தண்டனையை வழங்காது தர்மவான்களை வினை துன்புறுத்தும் சபையில் எத்தனைபேர்கள் சபையாளர்களாயிருந்த போதிலும் எல்லோரும் குற்றவாளிகளுக்குச் சமமாகவே மதிக்கப்படுவர் (7). தீர்ப்புச்சாலையில் வராதிருத்தலே தர்மவான்களுக் கழகாகும். தப்பி வந்துவிட்டபோதிலும் உண்மையையே பேசவேண்டும். ஆனால் சபையில் அதர்மமே தலைதூக்கி நிற்கின்றது எனத்தெரிய வந்தபோது மௌனம் சாதித்திருத்தலே நல்லதாகும். சத்யத்திற்கு விரோதமாகப்பேசுபவர்கள் மகா பாபிகளாகும் (8). அதர்மமே தர்மமாகவும்; பொய்யே மெய்யாகவும் நடைபெற்றுவரும் சபையில் அநேகம் பேர்கள் இருந்தபோதிலும் எல்லோரும் இறந்தவர்களேயாகும் (9). கொல்லப்பட்ட தர்மம் அதைக் கொன்றவனுக்கு நாசத்தையும்; காப்

பாற்றப்பட்ட தர்மம் அதைக் காப்பாற்றியவனுக்கு சுகத்தையும் அளிக்கின்றது. ஆகையால் தர்மத்தை ஒருபோதும் கொல்லலாகாது. இவ்விதமான பயம் உண்டாகி விட்டால் இது வரை நம்மால் கொல்லப்பட்ட தர்மமும் நம்மைக் கொல்லாது (10). சகல ஐஸ்வர்யங்களையும் சுகத்தையும் அளிப்பதான தர்மத்தை மறைப்பவனையே அறிவாளிகள் நீசன் என்று மதிக்கின்றார்கள். ஆகையால் தர்மத்தை ஒருபோதும் மறைக்கலாகாது (11). இவ்வுலகத்திலே உண்மைத் தோழன் தர்மமேயாகும். மரணத்தின் பின்னும் அது நம்மைத் துடர்ந்துவந் துதவி செய்கின்றது. எல்லாப் பொருள்களும் நம்மைக் கைவிட்டு விட்டபோதுங் கூட தர்மம் நம்மைக் கைவிடுவதில்லை. சரீரம் அழியும் போது கூடவே எல்லாம் அழிந்து விட்டபோதிலும் தர்மம் அழிவதேயில்லை (12). தர்மத்தின் நட்பு எப்போதும் பிரிந்துவிடுவதில்லை. அரச சபைகளில் அதர்மம் தலை தூக்கிநிற்கும் போது அது நான்குவகைப்படுகின்றது. ஒன்று அதர்மத்தின் கர்த்தா; இரண்டாவது சாக்ஷீ; மூன்றாவது சபையாளர்கள்; மற்ற நான்காம் பாகம் சபைகளின் தலைவனாகிய அரசனுக்குச் செல்கின்றது (13). நிந்திக்கத் தகுந்ததற்கு நிந்தை; புகழத்தகுந்தற்குப் புகழ்ச்சி; தண்டிக்கத்தகுந்ததற்குத் தண்டனை; மதிக்கத் தகுந்ததற்கு மதிப்பு எந்தச் சபையில் கிடைக்கின்றதோ அச்சபையாளர்களும் அவர்களின் தலைவனாகிய அரசனும் பாபங்களிலிருந்து விடுபட்டு பவித்ரமடைகின்றார்கள். பாபம் புரிபவனே பாபியாகின்றான் (14).

சாக்ஷிகள் எப்படியிருக்க வேண்டும்—:

आप्ताः सर्वेषु वर्णेषु कार्य्याः कार्येषु साक्षिणः ।
सर्वधर्मविदोऽलुब्धा विपरीतांस्तु वर्जयेत् ॥ १ ॥

स्त्रीणां साक्ष्यं स्त्रियः कुर्युर्द्विजानां सदृशा द्विजाः ।
शूद्राश्च सन्तः शूद्राणामन्त्यानामन्त्ययोनयः । २ ॥

साहसेषु च सर्वेषु स्तेयसंग्रहणेषु च ।
वाग्दण्डयोश्च पारुष्ये न परीक्षेत साक्षिणः । ३ ॥

बहुत्वं परिगृह्णीयात्साक्षिद्वैधे नराधिपः ।
समेषु तु गुणोत्कृष्टान् गुणद्वैधे द्विजोत्तमान् ॥ ४ ॥

समक्षदर्शनात्साक्ष्यं श्रवणाच्चैव सिध्यति ।
तत्र सत्यं ब्रुवन्साक्षी धर्मार्थाभ्यां न हीयते ॥ ५ ॥

साक्षी दृष्टश्रुतादन्यद्विब्रुवन्नार्य्यसंसदि ।
अवाङ्नरकमभ्येति प्रेत्य स्वर्गाच्च हीयते ॥ ६ ॥

स्वभावेनैव यद्ब्रूयुस्तद् ग्राह्यं व्यावहारिकम् ।
अतो यदन्यद्विब्रूयुर्धर्मार्थं तदपार्थकम् ॥ ७ ॥

सभान्तः साक्षिणः प्राप्तानर्थिप्रत्यर्थिसन्निधौ ।
प्राड्विवाकोऽनुयुञ्जीत विधिनाऽनेन सान्त्वयन् ॥ ८ ॥

यद् द्वयोरनयोर्वेत्थ कार्येऽस्मिन् चेष्टितं मिथः ।
तद्ब्रूत सर्वं सत्येन युष्माकं ह्यत्र साक्षिता ॥ ९ ॥

सत्यं साक्ष्ये ब्रुवन्साक्षी लोकानाप्नोति पुष्कलान् ।
इह चानुत्तमां कीर्तिं वागेषा ब्रह्मपूजिता ॥ १० ॥

सत्येन पूयते साक्षी धर्मः सत्येन वर्द्धते ।
तस्मात्सत्यं हि वक्तव्यं सर्ववर्णेषु साक्षिभिः ॥ ११ ॥

आत्मैव ह्यात्मनः साक्षी गतिरात्मा तथात्मनः ।
मावमंस्थाः स्वमात्मानं नृणां साक्षिणमुत्तमम् ॥ १२ ॥
यस्य विद्वान् हि वदतः क्षेत्रज्ञो नाभिशङ्कते ।
तस्मान्न देवाः श्रेयांसं लोकेऽन्यं पुरुषं विदुः ॥ १४ ॥
एकोऽहमस्मीत्यात्मानं यत्त्वं कल्याणमन्यते ।
नित्यं स्थितस्ते हृद्येष पुण्यपापेक्षिता मुनिः ॥ १४ ॥

(மனு. 8. 63 ; 68 ; 72—75 ; 78—81 ; 83 ; 84 ; 86 ; 91).

சகல வர்ணங்களிலும் தர்மவான், வித்வான் ; கபடமில்லாதவன், சகல விதத்திலும் தர்மத்தை யறிந்தவன், லோபமில்லாத சத்யவாதிகளேயே நியாயத்தையறிய சாக்ஷிகளாகக் கொள்ளவேண்டும். இதற்கு விரோத மானவர்களைக் கொள்ளலாகாது (1). பெண்களுக்குப் பெண்களும் ; த்விஜர்களுக்கு த்விஜர்களும், சூத்திரர்களுக்குச் சூத்திரர்களும், நீசர்களுக்கு நீசர்களுமே சாக்ஷியாகவேண்டும் (2). திருட்டு, வியபசாரம், திட்டுதல், அபராதம் முதலிய குற்றங்களுக்கு மிகமிக அத்யாவசியமென்று தோன்றினலன்றி சாக்ஷிகளைக் கொள்ளலாகாது. ஏனென்றால் இக்காரியங்கள் மறை முகமாக நடைபெறுபவைகள் (3). இரண்டு பக்கத்துச் சாக்ஷிகளிலும் பல விரோதமானவைகள் வெளிப்படும்போதும் ; இரண்டு பக்கத்து சாக்ஷிகளும் சமமானதாக இருக்கும் போதும் ; இருடி, உத்தமர்களின் சாக்ஷிக்குத் தக்கபடி நியாயத்தைப் புரியவேண்டும் (4). இரண்டு பக்கத்து சாக்ஷிகளிலிருந்து சரியானதென்று தீர்மானிக்கப்படும் சாக்ஷிக்கு வெகுமதி யளித்து, பொய்யைப் புகன்ற சாக்ஷியை தண்டிக்கவும் வேண்டும் (5). எந்த சாக்ஷியானவன் அரச அல்

லது பெரியோர்களின் சபைகளிலே பொய்யைச் சொன்னுனே; அவன் நாக்குப் பாழடைந்து இறந்த பிறகும் பெரிய நரகத்தை யடைகின்ருன் (6). சாக்ஷியானவன் தன் சொந்தக் கருத்தின் பேரில் சொல்கின்ருனு; அல்லது சொல்லிக் கொடுக்கப்பட்டதை அப்படியே சொல்லுகின்ருனுயெனத் தெரிந்துகொண்டு பின்னதன்படியானுல் அதை வீணென்று தள்ளிவிட வேண்டும் (7). வாதி ப்ரதிவாதிகளின் சார்பாக வந்திருக்கும் சாக்ஷிகளை நியாயவாதியோ; வக்கீல்களோ; பாரிஷ்டர்களோ கீழ்வருமாறு அமைதியாகக் கேட்கவேண்டும் (8). "ஏ சாக்ஷிகளே! இவ்விரண்டு பேர்களுக்கும் நடைபெற்ற காரியத்தை நீங்கள் அறிந்தவரை உண்மையாகச் சொல்லுங்கள். ஏனென்ருல் நீங்கள் இதற்கு சாக்ஷிகளாகும் (9). உண்மையைச் சொல்லும் சாக்ஷியானவன் மரணத்தின் பிறகுங்கூட உத்தம ஜன்மத்தை யடைவான். ஏனென்ருல் வார்த்தையே அவனின் மனதிற் படிந்து அவனின் வருங்கால வாழ்வுக்கு ஆதாரமாகின்றது. சத்யம் பேசுபவனையே உலகம் மதிக்கும் (10). சத்யத்தைப் பேசும் சாக்ஷி பவித்திர மடைகின்ருன். சத்யம் பேசுதலாலேயே தர்மம் அபிவிருத்தி யடைகின்றது ஆகையால் சகலவர்ணத்தவர்களும் சத்தியத்தையே பேச வேண்டும் (11). ஆத்மாவுக்கு சாக்ஷி ஆத்மாவே யாகும். ஆத்மாவின் கதியும் ஆத்மாவாகும். இதை யறிந்துகொண்டு ஏ சாக்ஷி புருடா! நீ உண்மை சாக்ஷியாகி ஆத்மாவின் சம்மதியை உன்னுள் பெறு. ஏனென்ருல் நீ பேசுவது மெய்யா பொய்யா வென்று உன் ஆத்மா நன்கு அறியும் (12). எவன் எல்லாக் காரியங்களையும் ஆத்மாவின் சம்மதத்

திற்குத் தகுந்தபடி செய்கின்றனோ அவனையே அறிவாளி கள் மனிதனாக நம்புகின்றனர். (13). ஆகையால் சுகத்தை விரும்பும் ஏ சாக்ஷி புருடா! நீ "நான் தனிப்பட்டவன்" என்று உன்னாத்மாவில் திடம் செய்துகொண்டு பொய் பேசுதல் சரியல்ல. நீ பேசினாலும் உன்னுள்ளே அந்தர் யாமி யாயிருக்கும் பரமன் உன் காரியங்களை அறிகின்றான். ஆகையால் அப்பரமனுக்குப் பயந்து சதா சத்தியத்தையே பேசுவாயாக (14).

लोभान्मोहाद्भयान्मैत्रात्कामात्क्रोधात्तथैव च ।
अज्ञानाद्बालभावाच्च साक्ष्यं वितथमुच्यते ॥ १ ॥

एषामन्यतमे स्थाने यः साक्ष्यमनृतं वदेत् ।
तस्य दण्डविशेषांस्तु प्रवक्ष्याम्यनुपूर्वशः ॥ २ ॥

लोभात्सहस्रदण्ड्यस्तु मोहात्पूर्वन्तु साहसम् ।
भयाद्द्वौ मध्यमौ दण्ड्यौ मैत्रात्पूर्वं चतुर्गुणम् ॥ ३ ॥

कामाद्दशगुणं पूर्वं क्रोधात्तु त्रिगुणं परम् ।
अज्ञानाद्द्वे शते पूर्णे बालिश्याच्छतमेव तु ॥ ४ ॥

उपस्थमुदरं जिह्वा हस्तौ पादौ च पञ्चमम् ।
चक्षुर्नासा च कर्णौ च धनं देहस्तथैव च ॥ ५ ॥

अनुबन्धं परिज्ञाय देशकालौ च तत्त्वतः ।
साराऽपराधौ चालोक्य दण्डं दण्ड्येषु पातयेत् ॥ ६ ॥

अधर्मदण्डनं लोके यशोघ्नं कीर्त्तिनाशनम् ।
अस्वर्ग्यञ्च परत्रापि तस्मात्तत्परिवर्जयेत् ॥ ७ ॥

अदण्ड्यान्दण्डयन् राजा दण्ड्यांश्चैवाप्यदण्डयन् ।
अयशो महदाप्नोति नरकं चैव गच्छति ॥ ८ ॥

वाग्दण्डं प्रथमं कुर्याद्धिग्दण्डं तदनन्तरम् ।
तृतीयं धनदण्डं तु वधदण्डमतः परम् ॥ ९ ॥

(மனு. 8. 118—121 ; 125—129).

லோபம், மோகம், பயம், நட்பு, காமம், குரோதம், அக்ஞானம், முதலியவைகளிலிருந்து கொடுக்கப் படும் சாக்ஷி முழுவதும் பொய்யென்று அறியவேண்டும் (1). இவ்வாருன பொய்யைச் சொல்பவனுக்குத் தகுந்த தண்டனையைக் கட்டாயம் அளிக்கவேண்டும் (2). லோபத்தினுலே பொய் சாக்ஷி சொன்னவர்களுக்கு இருபத்திரண்டு ரூபாய்களும் 10 அணுக்களும்; மோகத்தால் பொய் சாக்ஷி சொன்னவர்களுக்கு மூன்று ரூபாய்களும் இரண்டு அணுக்களும், பயத்தால் பொய் சாக்ஷி சொன்னவர்களுக்கு ஆறேகால் ரூபாய்களும்; நட்பால் பொய் சாக்ஷி சொன்னவர்களுக்கு பனிரெண்டரை ரூபாய்கள் (3). காமத்தால் பொய் சாக்ஷி சொன்னவர்களுக்கு 25 ரூபாய்கள்; குரோதத்தால் பொய் சாக்ஷி சொன்னவர்களுக்கு நாற்பத்தி ஆறு ரூபாய்களும் பதினுன்கு அணுக்களும்; அக்ஞானத்தால் பொய் சாக்ஷி சொன்னவர்களுக்கு ஆறு ரூபாய்களும்; குழந்தைப் பருவத்தால் பொய் சாக்ஷி சொன்னவர்களுக்கு ஒரு ரூபாய் ஒன்பது அணுக்களும் அபராதமாக தண்டனையளிக்க வேண்டும் (4). உபஸ்தேந்திரியம், வயிறு, நாக்கு, கை, பாதம், கண், மூக்கு, காது, தோள், தேகம் ஆகிய பத்துயிடங்களில் ஏதாவது ஒன்றிலாகிலும் தண்டனையை அளிக்கவேண்டும் (5). ஆனுல் எங்கெந்த தண்டனைகள் விதிக்கப்பட்டதோ விதிக்கப்படுகிறதோ; உதாரணமாக லோபத்தால் பொய் சாக்ஷி சொன்னவர்களுக்கு இருபத்

திரண்டு ரூபாய்களும் 10 அணுக்களும் தண்டம் விதிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் மிகுந்த ஏழையாயின் இதைவிடக் குறைவாகவும், மிகுந்த பணக்காரனானால் 2-3-4ன்கு பங்கு அதிகமாகவும் விதிக்கலாம். என்றால் காலதேச புருடர்களுக்குத் தகுந்தபடி அறிந்து தண்டிக்கவேண்டும் (6). ஏனென்றால் அதர்மமாக தண்டிப்பவனின் முன்பிருந்த, இப்போதிருக்கிற, இனிமேல் இருக்கும், அடுத்த ஜென்மத்தில் வந்தடையும் சகல கீர்த்திகளும் நாசமாய்விடுகின்றன. அடுத்த ஜென்மத்திலேயும் அவன் துக்கத்தையே அடைகின்றான். ஆகையால் அதர்மமாக ஒருவரையும் தண்டிக்கக் கூடாது (7). தண்டிக்கவேண்டியவர்களை மன்னித்து, மன்னிக்கவேண்டியவர்களைத் தண்டிக்குமரசனை தண்டனையளிக்குமதிகாரத்திலிருந்து விலக்கிவிடவேண்டும். அவன் இருந்தும் இறந்தும் துக்கத்தையே அடைகின்றான். ஆகையால் குற்றமுள்ளவனுக்கன்றி குற்றமில்லாதவனுக்கு ஒருபோதும் தண்டனையளிக்கலாகாது (8). முதலில் நிந்தித்தல், இரண்டாவது திரஸ்கரித்தல், மூன்றாவது அவன் பணத்தைப் பிடுங்கிக்கொள்ளல், நான்காவது வதை புரிதல் அல்லது தூக்கிடுதல் (9).

येन येन यथाङ्गेन स्तेनो नृषु विचेष्टते ।
तत्तदेव हरेदस्य प्रत्यादेशाय पार्थिवः ।। १ ।।

पिताचार्य्यः सुहृन्माता भार्य्या पुत्रः पुरोहितः ।
नादण्ड्यो नाम राज्ञोऽस्ति यः स्वधर्मे न तिष्ठति ।। २ ।।

कार्षापणं भवेद्दण्ड्यो यत्रान्यः प्राकृतो जनः ।
तत्र राजा भवेद्दण्ड्यः सहस्रमिति धारणा ।। ३ ।।

अष्टापाद्यन्तु शूद्रस्य स्तेये भवति किल्बिषम् ।
षोडशैव तु वैश्यस्य द्वात्रिंशत् क्षत्रियस्य च ॥ ४ ॥
ब्राह्मणस्य चतुःषष्टिः पूर्णं वापि शतं भवेत् ।
द्विगुणा वा चतुःषष्टिस्तद्दोषगुणविद्धि सः ॥ ५ ॥
ऐन्द्रं स्थानमभिप्रेप्सुर्यशश्चाक्षयमव्ययम् ।
नोपेक्षेत क्षणमपि राजा साहसिकं नरम् ॥ ६ ॥
वाग्दुष्टात्तस्कराच्चैव दण्डेनैव च हिंसतः ।
साहसस्य नरः कर्त्ता विज्ञेयः पापकृत्तमः ॥ ७ ॥
साहसे वर्त्तमानन्तु यो मर्षयति पार्थिवः ।
स विनाशं व्रजत्याशु विद्वेषं चाधिगच्छति ॥ ८ ॥
न मित्रकारणाद्राजा विपुलाद्वा धनागमात् ।
समृत्सृजेत् साहसिकान्सर्वभूतभयावहान् ॥ ९ ॥
गुरुं वा वालवृद्धौ वा ब्राह्मणं वा वहुश्रुतम् ।
आततायिनमायान्तं हन्यादेवाविचारयन् ॥ १० ॥
नाततायिवधे दोषो हन्तुर्भवति कश्चन ।
प्रकाशं वाऽप्रकाशं वा मन्युस्तन्मन्युमृच्छति ॥ ११ ॥
यस्य स्तेनः पुरे नास्ति नान्यस्त्रीगो न दुष्टवाक् ।
न साहसिकदण्डघ्नौ स राजा शक्रलोकभाक् ॥ १२ ॥
(மனு—8 ; 334—338 ; 344—347 ; 350 ; 351 ; 386).

எந்தெந்த அவயவங்களால் மனிதர்கள் குற்றம் புரிந்தார்களோ அந்தந்த அவயவங்களை மற்றவர்களின் நன்மைக்காக அரசன் சேதித்து விடவேண்டும் (1). தகப்பன்; ஆசார்யன் ; நண்பன், பெண், புத்திரன், புரோகிதன் எனும் பேதமின்றி நியாயாசனத்தின்மேல் அமர்ந்த அரசன் சகல

ரையும் ஒரே விதமாக பக்ஷபாத மின்றி குற்றங்களுக்குத் தகுந்த தண்டனைகளை யளிக்க வேண்டும் (2). அன்றி மனிதர்களின் நிலைக்குத் தகுந்தவாறு தண்டனையை உயர்த்தியோ குறைத்தோ அளிக்கவேண்டும். என்றால் அரசனுக்கு 1000 பைசாக்கள் தண்டனை யளித்தால் மந்திரி செய்த அதே குற்றத்திற்கு 800 பைசாக்களும்; அவருக்கும் குறைந்த வேலைக்காரர்களுக்கு முறையே 700; 600 பைசாக்கள் அபராதம் அளிக்கவேண்டும். என்றால் சாதாரண குடிகளுக்கு அளிக்கும் தண்டனையைவிட அரசாங்க உத்தியோகத்தினர்களுக்கு அதிகமான தண்டனையை அளிக்கவேண்டும். இன்றேல் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் குடிகளை மிகவும் துன்புறுத்துவார்கள். ஆகையால் அரசனிலிருந்து அரசாங்க வேலைக்காரன்வரை யுள்ளவர்களுக்கு அளிக்கும் தண்டனை சாதாரண குடி ஜனங்களுக்கு அளிப்பதைவிட அதிகமாக இருக்கவேண்டும் (3). அதே மாதிரி திருட்டுத்தனம் செய்த சூத்திரனுக்கு 8 பங்கு தண்டனையாயின் அதைச் செய்த வைசியனுக்கு 16 பங்கும் க்ஷத்ரியனுக்கு 20 பங்கு (4). பிராம்மணர்களுக்கு 40 பங்கு தண்டனையையும் கொடுக்கவேண்டும். என்றால் எவ்வளவு அதிக அறிவுபடைத்தவர்கள் குற்றம் செய்கிறார்களோ அவ்வளவு அதிகமாக அவர்களுக்கு தண்டனையை அளிக்கவேண்டும் (5). அரசாங்கத்தின் தர்மத்தை ஆதீனமாகக்கொண்ட அரசன் குடிகளிடம் பாலாத்காரம் புரியும் கொள்ளைக்காரர்களை தண்டிக்கச் சிறிதும் தயங்கக் கூடாது (6). **தந்திர புருடனின் அடையாளங்கள்—:** பொய் பேசுபவன், திருடுபவன், குற்றமின்றியே தண்டனையை அளிப்ப

வனிடத்திலுங்கூட தந்திர பலாத்கார வேலையைப் புரிபவன் மிகுந்த பாபி, துஷ்டனுகும் (7). தந்திரத்தாலே மக்களை யேமாற்றிப் பிழைப்பவனை தண்டிக்காத அரசன் வெகு சீக்கிரத்தில் நாசத்தையடைவான். அரசாங்கத்திலும் வெறுப்புண்டாகும் (8). சகல பிராணிகளுக்கும் துக்கத்தையளிப்பவனுன தந்திரக்காரன் அரசனுக்கு நண்பனு யிருந்தபோதிலும், அவனுல் அரசனுக்கு பலவிதமான வரும்படி கிடைப்பதாயிருந்தாலும் அரசன் அவனை தண்டிக்காமலிருக்கலாகாது (9). குருவாயினும், தான் பெற்ற குழந்தைகளாயினும், தன்னைப் பெற்ரோர்களாயினும், கிழவர்களாயினும், ப்ராம்மணனுயினும் அன்னியர்களைக் குற்றமின்றி தண்டிப்பார்களேயானுல் ஒரு சிறிதும் தயங்காது முதலில் அத்துஷ்டர்களை கொலை செய்துவிட்ட பின்பு தான் விசாரிக்கவேண்டியது அரசனின் கடமையாகும் (10). துஷ்டர்களைக் கொன்று விடுவதால் கொல்பவனுக்கு ஒரு பாபமுமில்லை. வெளிப்படையாகவோ, இல்லாமலோ அவர்களைக் கொன்றுவிடலாம். ஏனென்ருல் கோபியை கோபத்தாலேயே ஜெயிக்கவேண்டும். கோபம் கோபத்துடனேயே சண்டையிடும் (11). திருடன், பிற பெண்களை இச்சிப்பவன், கெட்ட வார்த்தைகளைப் பேசுபவன் முதலியவர்களில்லாமல் பரிபாலிக்கும் அரசனே மிகுந்த உத்தம அரசனுவான் (12).

भर्त्तारं लंघयेद्या स्त्री स्वज्ञातिगुणदर्पिता ।
तां श्वभिः खादयेद्राजा संस्थाने बहुसंस्थिते ॥ १ ॥
पुमांसं दाहयेत्पापं शयने तप्त आयसे ।
अभ्यादध्युश्च काष्ठानि तत्र दह्येत पापकृत् ॥ २ ॥

दीर्घाध्वनि यथादेशं यथाकालङ्करो भवेत् ।
नदीतीरेषु तद्विद्यात्समुद्रे नास्ति लक्षणम् ॥ ३ ॥
अहन्यहन्यवेक्षेत कर्मान्तान्वाहनानि च ।
आयव्ययौ च नियतावाकरान्कोषमेव च ॥ ४ ॥
एवं सर्वानिमान्राजा व्यवहारान्समापयन् ।
व्यपोह्य किल्बिषं सर्वं प्राप्नोति परमां गतिम् ॥ ५ ॥

(மனு—8-371—372 ; 406 ; 416 ; 420).

தன் குணகர்மங்களுக் கேற்ற புருடன் இருந்தும் பர புருடனின் சேர்க்கையைக் கொள்ளும் பெண்ணை அநேக ஜனங்கள் கூடிய கும்பலின் மத்தியிலிருத்திக் கொன்றுவிட வேண்டும் (1). அவ்வாறே தனக்குகந்த மனைவியை நீங்கி பிற பெண்ணைச் சேரும் புருடனையும் அநேக ஜனங்களின் மத்தியிலே நெருப்பிலிட்டுக் கொளுத்திவிட வேண்டும் (2).

கேள்வி—: அரசனோ, அரசியோ, நியாயவாதியோ; அவரின் மனைவியோ பிர சேர்க்கையை செய்துவிடின் அவர்களை யார் தண்டிப்பார்கள்?

விடை—: சபையாளர்கள் அவர்களை தண்டிக்க வேண்டும். அதுவும் சாதாரண குடிகளை தண்டிப்பதைவிட அதிகமாக தண்டிக்கவேண்டும்.

கேள்வி—: அரசன் ஏன் அவர்களின் தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டும்?

விடை—: அரசனும் ஓர் புண்ய ஆத்மா பாக்யசீல மனிதனுகும்; அவனே தண்டனையை ஏற்றுக்கொள்ள

வில்லை யாயின் மற்றவர்கள் மாத்திரமேன் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும்? பிறகு எல்லோரும் தண்டனையை ஏற்றுக் கொள்ளவில்லை யென்றால் அரசன் என்பதற்கு அர்த்தமே கிடையாது. ஆகையால் தன் குடிகள் தன்னால் கொடுக்கப்படும் தண்டனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் அரசனும் தன் குற்றங்களுக்குத் தகுந்த தண்டனைகளை யேற்றுக்கொள்ளத் தயாராயிருக்க வேண்டும், அன்றி அவ்வாறு ஏற்றுக்கொள்ளாததினால் தர்ம நாசமும் உண்டாகுமாதலால், தன் தர்மத்தைக் காப்பாற்றவும் அரசன் தனக்கேற்பட்ட தண்டனைகளைச் சந்தோஷமாக கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கேள்வி—: அவயவம் சிதைத்தல் எனும் தண்டனை மிகுந்த தப்பிதமாகும். ஏனென்றால் மனிதர்கள் மற்றவர்களுக்கு எந்த அவயவத்தையும் உண்டாக்கத் திறமை யில்லாதபோது அதை வெட்டிவிடுதல் மாத்திரம் நியாயமாகுமா?

"वयं प्रजापतेः प्रजा अभूम"।

விடை—: அவயவங்களைச் சிதைத்தலை தண்டனை யென்று சொல்கின்றாயே தவிர அது அரசநீதி யென்பதை நீ கவனிக்கவேயில்லை, ஏனென்றால் ஒரு மனிதனுக்கு இத்தண்டனையை அளிப்பதால் மற்ற சகலரும் கெட்ட காரியங்களைச் செய்வதினின்றும் தப்புகின்றார்கள். கெட்ட காரியங்களைவிட்டு தர்மமார்க்கத்தில் செல்கின்றார்கள். அன்றி இவ்வொருவனை தண்டிக்காது விடுவதால் எல்லோரும் குற்றங்கள் புரிய ஆரம்பித்து ஒருவருக்கொருவர்

தண்டனையில்லை என்ற எண்ணத்தால் சொல்ல முடியாத கொலைகளைச் செய்யத் துணிந்து விட்டால் அதனுல் எவ்வளவு சேதம் ஏற்படுமென கவனித்துப்பார். ஆகையால் இவ்வொருவனைச் சேதிப்பது 99 பேர்களைக் காப்பாற்றுவதாகின்றது. ஆகையால் அநேக பேர்களைக் காப்பாற்றுவதற்காக வென்று எடுக்கப்படும் ஒருவனின் உயிரால் அரசன் குற்றவாளியாக மாட்டான். ஆனுல் அநியாயமாக ஒருவனை தண்டிக்குமரசன் நாசத்தைப் பெறுவதன்றி அவ்வரசப் பதவியிலிருந்தும் நீக்கப்படுவான் (3). அரசன் நித்தியமும் தன் யானை, குதிரைப்படைகளையும், பொக்கிஷங்களையும் மேற்பார்வைபார்த்து வரவேண்டும் (4). இவ்வாறு அரசன் சகல காரியங்களையும் முடித்து முடிப்பித்துக்கொண்டு முக்தி சுகத்தைப் பெறும் வழியிலும் கவனத்தைச் செலுத்திக்கொண்டு வரவேண்டும் (5).

கேள்வி :—சமஸ்கிருத பாஷையில் பூர்ணமாக அரச நீதி சொல்லப்பட்டிருக்கின்றதா இல்லையா?

விடை—: முழுதும், சிறிதும் பாக்கியின்றி சொல்லப்பட்டிருக்கின்றது. தற்காலம் உலகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சகல அரச நீதிகளும் சம்ஸ்கிருத வித்தையிலிருந்து கற்றவைகளேயாகும். இதற்கு ப்ரத்யக்ஷ சாக்ஷிய மில்லாவிட்டாலும் கூட

प्रत्यहं लोकदृष्टैश्च शास्त्रदृष्टैश्च हेतुभिः । (மனு-7-3).

அரசனுக்குங் குடிகளுக்கும் நன்மையை அளிக்கக்கூடிய தீர்மானங்களையே வித்வான்களாகிய அரச சபை

யாளர்கள் தீர்மானிக்கவேண்டும். பால்ய மணங்கள் நடை பெருதபடி தடுக்கவேண்டும். நல்ல வாலிபப்பருவம் அடையுமுன் யாருக்கும் மணம் செய்ய செய்விக்கக்கூடாது. மறைமாணவத்தை சரிவர அனுஷ்டிக்கச் செய்யவேண்டும். வியபசாரங்களையும் பலதாரவிவாகங்களை யும் தடுத்து பலத்தை யதிகரிக்கச் செய்யவேண்டும். வெறும் அறிவைமாத்திரம் பலப்படுத்திக்கொண்டு சரீ ரத்தை பலப்படுத்திக் கொள்ளாவிட்டால் அநேக அறி வாளிகளை ஒரு பலவான் ஜெயித்துவிடுவான். அன்றி சரீர பலத்தை மாத்திரம் பலப்படுத்தி அறிவை பலப்படுத்திக் கொள்ளாவிட்டால் அரசாங்க காரியங்களைச் சரிவர நடத்தி வரமுடியாது. ராஜ்யத்தில் சதா சண்டை சச்சரவுகளே நிறைந்திருக்கும். ஆகையால் எப்போதும் சரீரம், ஆத்மா இரண்டையும் பலத்துடன் வைத்துக்கொண்டிருக்க வேண் டும். அதிக ஆசை, வியபசாரம் இவைகளே சரீர ஆத் மாக்களின் பலத்தை நாசம் செய்பவைகளாகும். முக்கிய மாக க்ஷத்திரியர்கள் சரீரபலத்தை அதிகமாக கவனித்துக் கொள்ளவேண்டும். அவர்கள் அதிக ஆசைகளில் ஈடுபடு வார்களானுல் அரசாங்கம் நாசமடைந்துவிடும். "யதா ராஜா ததாப்ராஜா"; "அரசனெவ்வாறே குடிகளுமவ் வாறே" என்பதை கவனத்தில்வைத்துக் கொள்ளவேண் டும். ஆகையால் அரசனும், அரசாங்கத்தவர்களும் எப் போதும் கெட்ட காரியங்களைச் செய்யலாகாது. ஒவ்வொரு நாளும் தர்மத்தையே கவனித்து வரவேண்டும்.

இவ்வத்தியாயத்தில் அரசநீதியைக் குறித்துச் சுருக்க மாக ஆராய்ந்தோம். இதை இன்னும் விரிவாக மனுஸ்

மிருதியின் 7-8-9-வது அத்தியாயங்களிலும்; சுக்ரநீதி; விதுரப்ரஜாகர; மகாபாரத சாந்திபர்வம், ஆபத்தர்மம் முதலியவைகளில் விரிவாகக் காணலாம். இவைகளைக்கவனித்து அதன்படி நடந்து அரசன் சகல உலகத்திற்கும் சக்ரவர்த்தியாவானாக.

நாம் குடிகளுக்கு அரசன்; நமக்கு அரசன் கடவுள். அவரின் வேலையாட்கள் நாம். அவரின் கிருபையினாலேயே நாம் இவ்வுலகை அரசாளுகின்றோம். அவரின் வேலைக்காரர்களாகிய நம்மை அவர் சத்தியமார்க்கத்திலேயே செலுத்துவாராக. இனி ஈஸ்வரன், வேதம் இவைகளைக் குறித்து ஆராய்வோமாக—:

ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்

अथेश्वरवेदविषयं व्याख्यास्यामः ।

ऋचो अक्षरे परमे व्योमन्यस्मिन् देवा अधिविश्वे निषेदुः ।
यस्तन्नवेद किमृचा करिष्यति य इत्तद्विदुस्त इमेसमासते ॥
(ருக் 1—க63—39).

ईशावास्यमिदं सर्वं यत्किञ्च जगत्यांजगत् ।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्य स्विद्धनम् ॥ २ ॥
(யஜுர் 40—1).

अहंभुवं वसुनः पूर्व्यस्पतिरहं धनानि संजयामि शाश्वतः ।
मां हवन्ते पितरन्न जन्तवोऽहं दाशुषे विभुजामि भोजनम्॥३॥

अहमिन्द्रो न परा जिग्य इद्धनं न मृत्यवेऽवतस्थे कदाचन ।
सोममिन्वा सुन्वन्तो याचता वसु न मे पूरवः सख्ये रिषाथन॥४॥
(ருக் 10—48—1, 5).

(ருசோ அக்ஷரே) இதன்பொருளை மறைமாணவ ஆஸ்ரமத்தில் எழுதியாய்விட்டது. என்றால்...: சகல திவ்ய குணகர்ம ஸ்வபாவ வித்யாயுக்தன் எவனோ; பூமி சூர்யாதி கோளங்கள் எவனால் நின்றிருக்கின்றனவோ, ஆகாயம்போலெங்கும் வியாபித்திருக்கும், சகல தேவர்களுக்கும் தேவ

ணுகிய கடவுளை எவன் அறியவில்லையோ அவன் நாஸ்திகன், மந்த அறிவினன். அவன் சதா துக்கசாகரத்திலேயே ஆழ்ந்திருப்பன். ஆகையால் சதா மனிதர்கள் அவனையறிந்து சுகத்தைப் பெறுவார்களாக.

கேள்வி—: வேதங்களில் அநேக கடவுள்கள் உண்டு என்று சொல்லியிருக்கிற தென்பதை நீங்கள் நம்புகின்றீர்களா இல்லையா ?

விடை—: இல்லை, ஏனென்றால் நான்கு வேதங்களில் எங்கும் அநேக கடவுள்களிருப்பதாகச் சொல்லியிருக்கவில்லை. ஆனால் கடவுள் ஒன்றுதான் என்று சொல்லியிருக்கின்றன.

கேள்வி—: ஆனல் வேதங்களில் அநேக தேவதைகளைக் குறித்துச் சொல்லியிருப்பதின் அபிப்ராயமென்ன ?

விடை—: தேவதை யென்பது திவ்ய குணங்களுடன் கூடியவைகளின் பெயராகும். உதாரணமாக பூமி, சூர்யன் முதலியவைகள். அன்றி இத்தேவதைகளை உபாசிக்க வேண்டுமென்று எங்கும் சொல்லியிருக்கவில்லை. பார்! சகல தேவதைகளுக்கும் தேவனாகிய ஒருவனையே நாம் வணங்கவேண்டுமென்று இம் மந்திரம் சொல்லவில்லையா ? தேவதை என்ற பெயரை கடவுளாகக்கொள்வது ஓர்வித மறதியேயாகும். கடவுள் தேவதைகளுக்குந் தேவனானதினால் அவன் பெயர் மஹாதேவனாகும். அவரே சகல உலகங்களின் உற்பத்தி, ஸ்திதி, ப்ரளயங்களின் கர்த்தாவான நியாயவாதியாகும்.

"त्रयस्त्रिंशन्त्रिशता॰" இத்யாதி ப்ரமாணங்கள் வேதத்திலுண்டு. இவைகளின் விரிவுரையை சதபதத்திற் காணலாம். என்றால்—:

பூமி; ஜலம்; நெருப்பு; காற்று; ஆகாயம்; சந்திரன்; சூர்யன்; நட்சத்திரங்கள் இவைகள் 8 வசுக்கள்.

ப்ராண, அபான, உதான, வியான, ஸமான, நாகன், கூர்மன், க்ருகலன், தேவதத்தன், தனஞ்சயன், ஜீவாத்மா இவைகள் 11 ருத்திரர்கள்.

வருடத்தின் மாதங்கள்—12 ஆதித்யர்கள்
இடியேறு—1 இந்திரன்
யாகம் (யக்ஞம்)—1 ப்ரஜாபதி
இம்முப்பத்திமூன்றும் தேவதைகளாகும்.

இச் சகலத்திற்கும் மேலானவனாகிய கடவுளே வழிபட வேண்டியவன். இதேமாதிரி மற்றும் அநேக இடங்களில் எழுதி யிருக்கிறது. இச் சாஸ்த்திரங்களைப் பார்ப்பவர்கள் கடவுள்கள் அநேகம் என்ற மாய்கையில் எப்படி முழுகுவார்கள்? (1). ஏ மனிதர்களே! இச்சம்சாரத்தில் எந்தக் கொஞ்சம் ஜகத்துண்டோ, அச்சகலத்திலும் வியாபித்து அவைகளின் தொழின் நடைகளுக்கு முக்கிய காரணமாக இருப்பதுவே ஈஸ்வரனாகும். அவருக்குப் பயந்து நீ யாருடைய பொருளையு மபகரிக்க நினைக்காதே. அவ்வநியாயத்திலிருந்து நீங்கி உன் மனதை நியாய வழியிலே செலுத்தி சதா ஆனந்தத்தை அனுவிப்பாயாக (2). கடவுள் சகலருக்கும் "ஏ மனிதர்களே! நான் சகருக்குந் தலைவன்;

சகலருக்கும் முன்பு அறியப்பட்டவன், சனாதனமாகிய இவ்வுலகத்தின் காரணம் நான்; சகல தனங்களினுடையவும் விஜயன் நான்; சகல தனங்களின் தாதா நான்; குழந்தையைத் தகப்பன் காப்பாற்றுவதைப் போல என்னையழைக்கும் சகல ஜீவர்களுக்கும் சுகத்தை யளிப்பதற்காக பலவிதங்களான ஆகார வகைகளை செய்திருக்கின்றேன் (3). சூர்யனுக்கு நிகரான சகல உலகின் ப்ரகாசன் நான்; எப்போதும் தோல்வி யடையாதவன்; எப்போதும் நான் மரணத்தை யடைவதில்லை; ஜகத்ரூப தனத்தை நிர்மிக்கின்றேன்; சகல உலகங்களையு முண்டாக்குபவனாகிய என்னைத் தெரிந்து கொள்ளுங்கள். ஏ ஜீவர்களே! செல்வப்பிரயத்தினத்தைச் செய்துகொண்டிருக்கும் நீங்கள் விக்ஞானாதி தனங்களை என்னிடமிருந்து கேளுங்கள். என் நட்பிலேயிருந்து எப்போதும் விலகிச் செல்லாதீர்கள். ஏ மனிதர்களே! சத்யம் பேசுதல் ஆகிய வழிபாடுகளைச் செய்வோர்களுக்கு சனாதனமான அறிவுச் செல்வத்தை யளிக்கிறேன்; நானே வேதங்களை ப்ரகாசிக்கச் செய்தவன்; வேதமும் என்னைக் குறித்தே சொல்கின்றது; அதனுடைய அறிவால் நான் வளர்கின்றேன். யாகத்தைப் புரியும் உத்தமர்களுக்கு பலத்தை ஈபவன் நான். இவ்வுலகத்தில் நடைபெறும் சகலமான காரியங்களுக்கும் மூல காரணன் நான். ஆகையால் என்னை மறந்து நீங்கள் மற்ற யாரையும் பூஜிக்கக்கூடாது" என்று உபதேசம் செய்கிறார் (4).

हिरण्यगर्भः समवर्त्तताग्रे भूतस्य जातः पतिरेक आसीत्।
सदाधार पृथिवीं द्यामुतेमां कस्मै देवाय हविषा विधेम ॥

(யஜுர் 13—4).

ஏ மனிதர்களே! உற்பத்திக்கு முன்பாக சூர்யாதி சகல கோளங்களும் எந்த ஆதாரத்தில் நின்றிருந்தனவோ ; எதிலிருந்து சகலமும் பிறந்தனவோ, எதனிடம் சகலமும் லயமடையுமோ ; அதுவே இப்போதும் பூமியாதி சகல கோளங்களேயும் தரித்திருக்கின்றது. அதே பரமாத்மனின் பக்தியை நாங்கள் புரிவது போலவே நீங்களும் புரிவீர்களாக (1).

கேள்வி— : நீர் கடவுள் கடவுள் என்று சொல்கின்றீர். ஆனுல் அது இருப்பதாக எப்படி நிச்சயிப்பது ?

விடை— : ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களால்.

கேள்வி— : கடவுளை ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களால் ஒருபோதும் நிச்சயிக்க முடியாது.

விடை— :

इन्द्रियार्थसन्निकर्षोत्पन्नं ज्ञानमव्यपदेश्यमव्यभिचारि व्यवसायात्मकं प्रत्यक्षम् ॥ (நியாயம்—1—4).

காது, தோல், கண், நாக்கு, மூக்கு, மனம் இவைகள், சப்த, ஸ்பர்ஸ, ரூப, ரச, கந்த, சுகதுக்க, சத்யாசத்ய விஷயங்களுடன் சம்பந்த மடைவதால் அறிவுண்டாகிறது. இதையே ப்ரத்யக்ஷமென்று சொல்லப்படுகிறது. இப்போது விசாரிக்கவேண்டும். இந்திரியம் மனங்களால் உண்டாகும் குணமே ப்ரத்யக்ஷமன்றி அதையறிவது ப்ரத்யக்ஷ மல்ல. தோல் ஆதி நான்கு இந்திரியங்களால் ஸ்பர்ஸ, ரூப, ரச, கந்தங்களின் குணத்தையுடைய பூமியானது

ஆத்மாவுடன் கூடிய மனதால் ப்ரத்யக்ஷமாக அறியப் படு வதைப் போலவே இப்ரத்யக்ஷ உற்பவம் ஆதி அறிவின் குணங்களின் பிரத்யக்ஷத்தைக் கண்டு கடவுளையும் ப்ரத் யக்ஷமாக அறியலாம். எப்போது ஆத்மாவும் மனமும்; மனது இந்திரியங்களின் மூலமாய் எதாவதொரு விஷய மாய்ச் செல்கின்றது; அல்லது திருடல் ஆதி கெட்ட அல் லது பரோபகாரம் ஆதி நல்ல வார்த்தைகளால் எந்த க்ஷணத்தில் ஆரம்பிக்கின்றதோ அச்சமயத்தில் ஜீவனு டைய விருப்பம் அநாதியாகி அவ்விரும்பிய விருப்பத் தில் முழுகுகிறது. அதே சமயத்தில் ஆத்மாவின் உள்ளே கெட்ட காரியங்களில் பயத்தையும், சந்தேகத்தையும், வெட் கத்தையும், நல்ல காரியங்களில் களிப்பையும், அபயம், சந்தேகமின்மை, ஆனந்தம் முதலியவைகளையும் அடைவது ஜீவாத்மா அல்ல. ஆனால் அது பரமாத்மாவாகும். ஜீவாத்மா சுத்தமடைந்து பரமாத்மாவில் லயமடையும் போது அவ்விரண்டும் சேர்ந்து ப்ரத்யக்ஷமாகிறது. இவ் வாறு ப்ரத்யக்ஷத்தாலேயே பரமாத்மாவை அறியும்போது அனுமானமாதி ப்ரமாணங்களால் ஏன் கடவுளை நிரூபிக்க முடியாது? ஏனென்றால் காரியத்தைக் கண்டு அதன் காரணத்தை அறியலாகும்.

கேள்வி—: கடவுள் எங்கும் வியாபித்தவரா அல்லது ஏதாவதோரிடத்தில் மாத்திரம் வசிப்பவரா?

விடை—: எங்கும் வியாபித்தவன். ஏனென்றால் ஒரு யிடத்தில் வசிப்பவனாயின் சர்வாந்தர்யாமி, ஸர்வக்ஞ, சர்வ நியந்தா, சகலத்தினுடையவும் உற்பத்திக்காரணன், சகலத்

தையும் தரித்திருப்பவன், சகலத்தையும் அழிப்பவனுக இருக்க முடியாது. இல்லாத இடத்தில் அவன் காரியம் நடைபெற முடியாது.

கேள்வி—: கடவுள் தயாவானு; நியாயகாரியா இரண்டும் இல்லையா?

விடை--: இரண்டும் ஆனவன்.

கேள்வி—: இவ்விரண்டு குணங்களும் பரஸ்பரம் விருத்தமானதாகும். ஏனென்ருல் நியாயம் செய்தால் கருணை காட்டமுடியாது; கருணைகாட்டினுல் நியாயம் செலுத்தமுடியாது. ஏனென்ருல் நியாயம் என்ருல் செய்த காரியத்திற்கு அதிகமாகவோ, குறைவாகவோ பலனை ஈயா திருத்தல்- கருணையென்ருல் குற்றம்செய்தவனையும் தண்டிக்காமல் விட்டுவிடுவதாகும்.

விடை—: நியாயமும் தயையும் பெயரளவில் மாத்திரம் தான் வித்தியாசம். ஏனென்ருல் நியாயத்தாலுண்டாகும் பலனே தயையாகும். மனிதர்கள் குற்றம்புரிவதாலே கெட்டு துக்கத்தை யடையாதிருக்கச்செய்தலே தண்டனையாகும். அதுவே தனியென்றும் சொல்லப்படும். என்ருல் துக்கத்திலிருந்து. மனிதர்களைக்காப்பாற்றுவது தயை அல்லவா? ஆகையால் தயைக்கும் நியாயத்திற்கும் நீ செய்த அர்த்தம் தப்பாகும். ஏனென்ருல் குற்றத்திற்குத் தக்க தண்டனை யளிப்பதே நியாயமாகும். ஆனுல் குற்றவாளியை தண்டிக்காமல் விட்டுவிட்டால் அது தயை ஆகாது. ஏனென்ருல் அவ்வொரு குற்றவாளியைத் தண்டிக்காது விட்டுவிடுவதினுல் ஆயிரக்கணக்கான தர்மாத்மாக்

களுக்குத் துக்கமுண்டாகும். இது எவ்வாறு தயையாகும்? ஆனால் தயை யென்பது அக் குற்றவாளியைச் சிறைச் சாலையிலடைத்து பாபம் செய்வதிலிருந்து தடுத்து, அவனால் ஆயிரக் கணக்கானவர்களுக்கு ஏற்படும் துக்கத்தை விலக்குவதே யாகும்.

கேள்வி—: என்றால் தயை நியாயம் என்ற இரண்டு சப்தங்கள் எதற்காக? இவ்விரண்டும் ஒரே அர்த்தத்தை யுடையதாயின் இரண்டையும் வைத்திருத்தல் சரியல்ல; ஒரே சப்தத்தை மாத்திரம் வைத்துக்கொள்ளுதல் சரியாகும். ஆகையால் இதிலிருந்து தயையும் நியாயமும் ஒரே ப்ரயோஜனமுடைய தல்லவென்று ஏற்படுகிறது.

விடை—: ஒரு அர்த்தத்தில் அனேகம் பெயர்களும்; ஒரு பெயருக்கு அனேக அர்த்தமும் கிடையாதா?

கேள்வி—: உண்டு.

விடை—: பின் ஏன் உனக்கு சந்தேகம்?

கேள்வி—: உலகத்திலே அவ்வாறு கேள்விப்படுவதாலே.

விடை—: உலகத்திலே பொய் மெய் இரண்டும் கேட்கப்படுகின்றன. ஆனால் அதை விசாரித்து நிச்சயிக்க வேண்டியது தனது கடமையாகும். முதலிலே மனிதர்களுக்கென்று உலகத்திலே எவ்வளவு பொருள்களை கடவுள் உண்டாக்கி யிருக்கின்றார்? இது அவருடைய தயையினாலல்லவா? இதைவிட பெரியதாக யார் தயை காட்டமுடி-

யும்? இப்போது அவைகளை ஆண்டனுபவிப்பவன் அதைக்கெடுதலாக அனுபவித்துக்கொண்டால் அது கடவுளின் அநியாயமாகுமா? ஆகையால் இவ்விரண்டிலும் மனதிலே சகலருக்கும் சுகத்தைப்பெற்று துக்கத்தை விலக்கும் விருப்பம் உண்டாவது தயையாகும். ஆனால் வெளிச்சேஷ்டை, என்றால் பந்தனம் சேதனாதி தண்டனையை அளித்தல் நியாயமாகும். இவ்விரண்டும் சகல துக்கங்களையும் போக்கி சுகத்தையளிக்கும்படியான ஒரே ப்ரயோஜனத்தை உடையதாகும்.

கேள்வி—: கடவுள் உருவமுள்ளவரா இல்லாதவரா?

விடை—: உருவமில்லாதவர். ஏனென்றால் உருவமுடையவராயிருந்தால் வியாபகராயிருக்கமுடியாது. சர்வ வ்யாபகராயில்லாவிட்டால் மற்ற ஸர்வக்ஞும் முதலாகிய குணங்களுமிருக்காது. ஏனென்றால், உருவமுடைய பொருள்களுக்கு குணகர்ம ஸ்வபாவங்களு மிருக்கவேண்டும். சீதோஷ்ணம், பசி, தாகம், கோபம், சந்தோஷம், சேதன பேதனம் முதலியவைகளிலிருந்தும் விடுபட முடியாது. ஆகையால் கடவுள் உருவமில்லாதவரேயாகும். அன்றி உருவமுடையவரானால் கண், காது, மூக்கு இவைகளை அவருக்கு உண்டாக்கியிருக்க மற்றொருவர் இருக்கவேண்டும். சிலர் இல்லை இல்லை, கடவுள் தானாகவே தன்சரீரத்தை உண்டாக்கிக்கொண்டாரென்று சொல்லலாம். அப்போதும் சரீரம் பெறுவதற்குமுன் உருவமில்லாதவராய் இருந்திருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. இதனால் கடவுள் எப்போதும் சரீரத்தைத் தரித்துக்கொள்வதில்லை. ஏனென்றால் உருவமில்லாதவரானதினாலே தான் உலகின்

சூக்ஷ்ம காரணங்களிலிருந்து ஸ்தூல ஆகாரத்தை உண்டாக்குகிறார்.

கேள்வி—: கடவுள் சர்வசக்தியும் பெற்றவரா இல்லையா?

விடை—: பெற்றவர். ஆனால் சர்வசக்திமான் என்ற பதத்திற்கு நீ செய்யும் அர்த்தமல்ல. ஆனால் சர்வசக்திமான் என்றால் கடவுளுக்கு உலகை உண்டாக்கி காப்பாற்றி அழிப்பதிலேயும், மக்களின் புண்ய பாபங்களுக்குத் தகுந்தபடி தண்டனையை அளிப்பதிலேயும் மற்றொரு சகாயமும் வேண்டியதில்லை, என்றால் அவர் தன் திறமையினாலேயே இக்காரியங்களை யெல்லாம் முடித்துக் கொள்ளுகின்றார்.

கேள்வி—: கடவுள் எல்லாம் வல்லவரானால் தனக்கும் மேலான திறமை பெற்ற ஒருவரை ஏன் உண்டாக்கிக் கொள்ளக் கூடாது?

விடை—: அவர் எதற்காக அவ்வாறு செய்து கொள்ள வேண்டும்? அவர் நீ நினைக்கும் வண்ணமெல்லாம் தானும் நினைத்து அவைகளைச் செய்து கொள்பவராயின் "கடவுள் தன்னையே சாகடித்துக் கொள்வாரா? தன்னைப்போல இன்னும் அநேகம் பேரை உண்டாக்கி வைத்துவிட்டு தான் வியபசாரம், திருட்டு முதலிய காரியங்களையேன் செய்து கொண்டிருக்கலாகாது?" என்று உன்னைக்கேட்கிறேன். ஆகையால் இவைகள் எல்லாம் கடவுளின் குணகர்மஸ்வபாவங்களுக்கு மாறுபட்டவைகளாகும். ஆகையால் நீ சொல்வதைப்போல் கடவுள் எல்லாவற்றை

யும் செய்துவிட முடியாது. ஆகையால் சர்வசக்திமான் என்றதற்கு நான் செய்த அர்த்தமே சரியாகும்.

கேள்வி—: கடவுள் ஆதியுடையவரா அநாதியா?

விடை—: அநாதி; என்றால் அவருக்கு பிறப்பு ஒரு காலத்திலே ஒரு யிடத்திலே இருந்திருக்கவில்லை. மற்றும் இம்மாதிரியான பதங்களின் அர்த்தத்தை முதல் அத்தியாயத்தில் எழுதி யிருக்கிறோம். அங்கு பார்த்துக்கொள்க.

கேள்வி—: பரமேஸ்வரன் என்ன விரும்புகின்றான்?

விடை—: சகலரின் சுகத்தையும், பலத்தையும். ஆனால் சுதந்திரமுடைய ஜீவர்கள் பாபத்தைச் செய்தாலும் அவர்களின் சுதந்திரங்களைத் தடுப்பதில்லை.

கேள்வி—: கடவுளை துதிக்கவேண்டுமா இல்லையா?

விடை—: துதிக்கவேண்டும்.

கேள்வி—: அவ்வாறு துதி செலுத்துபவனின் பாபங்களை கடவுள் விலக்குகின்றாரா?

விடை—: இல்லை.

கேள்வி—: பின் ஏன் அவரைத் துதிக்க வேண்டும்?

விடை—: அவரைத் துதிப்பதின் பலன் வேறாகும்.

கேள்வி—: அது என்ன?

விடை—: துதியால் கடவுளின் குணகர்மஸ்வபாவங்களை யறிந்து தன் குணகர்மஸ்வபாவங்களை சீர்திருத்தி மேன்மை யாக்கிக்கொள்ளல், அன்றி துதியால் உற்சாகத்

தையும், சகாயத்தையும் பெறுதல். அச் சகாயத்தாலும் உபாசனையினாலும் தன்னைத்தான் அப் பரப்ரம்மத்தின் சாக்ஷாத் காரமாக்கிக்கொள்வதற்காகவே கடவுளைத் துதிப்ப தாகும்.

கேள்வி—: இதை இன்னும் விளக்கமாகச் சொல் லுங்கள்.

விடை—:

स पर्यगाच्छुक्रमकायमव्रणमस्नाविरꣳ शुद्धमपापविद्धम् ।
कविर्मनीषी परिभूः स्वयंभूर्याथातथ्यतोऽर्थान् व्यदधाच्छाश्वतीभ्यः समाभ्यः ॥

(யஜுர். 40-8.)

(கடவுளின் துதி) கடவுள் சகலத்திலும் வியாபித்த வன்; அநந்தபலவான், சுத்த அறிவுடையவன், சகலரின் அந்தர்யாமி, சகலத்திலும் ஒளி பெற்றவன், ஸநாதனன், தானாக சித்தியானவன், தன் சநாதன வித்தையாகிய வேதத்தைத் தன் சநாதன மக்களின் உபயோகத்திற்காக அளிக்கின்றார். சகுண ஸ்துதி யென்பது ஈஸ்வரனின் குணங்களை வர்ணித்துத் துதிப்பதேயாகும். (அகாய) கடவுள் எப்போதும் சரீரம் தரிப்பதுமில்லை. உலகத்தில் பிறப்பதுமில்லை. அவருக்கு நாடிகள் கிடையாது. இறப் பில்லை. எப்போதும் பாபத்தைச் செய்வதில்லை. ஆதலால் துக்கம், விசனம் முதலியவைகளும் அவருக் குண்டாவ தில்லை. இவ்வாறான ராகத்துவேஷாதி குணங்களிருந்து நீங்கியவராக கடவுளைத் துதித்தல் நிர்குண ஸ்துதி யாகும். இவ்வாறு துதிப்பதால் தானும் அவ்வாறு பாப

மில்லாமல் விசனமில்லாமல் வசிக்கத் தகுந்த வழிகளை யறிந்து ஒழுக சாதனமாகும். கடவுள் நியாயவாதி யென்று துதிப்பவனும் நியாயவாதியா யிருக்கப் பாடுபடவேண்டும். அவ்வாறு அர்த்தமில்லாமல் வெறுமனே கடவுளை பல வித மான புகழ்மாலைகளால் கபடமாகத் துதித்து விடுவதால் துதிப்பவனுக்கு ஒரு பலனும் ஏற்படாது. ப்ரார்த் தனை—:

यां मेधां देवगणाः पितरश्चोपासते ।
तया मामद्य मेधयाऽग्ने मेधाविनं कुरु स्वाहा ॥ १ ॥

(யஜுர் 32-14.)

तेजोऽसि तेजो मयि धेहि ।
वीर्यमसि वीर्यं मयि धेहि ।
बलमसि बलं मयि धेहि ।
ओजोस्योजो मयि धेहि ।
मन्युरसि मन्युं मयि धेहि ।
सहोऽसि सहो मयि धेहि ॥ २ ॥

(யஜுர் 19-9.)

यज्जाग्रतो दूरमुदैति दैवन्तदु सुप्तस्य तथैवैति ।
दूरंगमं ज्योतिषां ज्योतिरेकन्तन्मे मनः शिवसङ्कल्पमस्तु ॥
येन कर्माण्यपसो मनीषिणो यज्ञे कृण्वन्ति विदथेषु धीराः ।
यदपूर्वं यक्षमन्तः प्रजानां तन्मे मनः शिवसङ्कल्पमस्तु ॥ ४ ॥

यत्प्रज्ञानमुत चेतो धृतिश्च यज्ज्योतिरन्तरमृतं प्रजासु ।
यस्मान्नऋते किंचन कर्म क्रियते तन्मे मनः शिवसङ्कल्पमस्तु
॥ ५ ॥

येनेदं भूतं भुवनं भविष्यत्परिगृहीतममृतेन सर्वम् ।
येन यज्ञस्तायते सप्त होता तन्मे मनः शिवसङ्कल्पमस्तु ॥ ६ ॥

यस्मिन्नृचः साम यजूंषि यस्मिन्प्रतिष्ठिता रथनाभा विवाराः ।
यस्मिँश्चित्तं सर्वमोतं प्रजानां तन्मे मनः शिवसङ्कल्पमस्तु ॥ ७ ॥

सुषारथिरश्वानिव यन्मनुष्यान्नेनीयतेऽभीशुभिर्वाजिन इव ।
हृत्प्रतिष्ठं यदजिरं जविष्ठं तन्मे मनः शिवसङ्कल्पमस्तु ॥ ८ ॥

(யஜுர். 34 ; 1-6.)

ஏ அக்னீ! (ப்ரகாசரூபபரமேஸ்வரா!) அறிவாளிகள், ஞானிகள் அவர்களி னறிவை எவ்வாறு செலுத்தித் தங்களை வழிபடுவார்களோ அவ்வாறே எங்களின் அறிவும் சென்று தங்களை வழிபடுமாறு அருள் செய்வீராக (1) நீ ப்ரகாசரூபன். எனக்கும் ப்ரகாசத்தை யளி. நீ அநந்த பராக்ரமன். எனக்கும் பூர்ண பராக்ரமத்தை யுண்டாக்கு. நீ அநந்த பலயுக்தன், என்னையும் பலவானுக்கு. நீ அநந்த சாமர்த்தியவான். என்னையும் சாமர்த்தியவானுக்கு. நீ துஷ்டர்களுக்கும் துஷ்டத்தனங்களுக்கும் தூரமானவன். என்னையும் அவைகளிலிருந்து தூரமாக்கு. நீ நிந்தனை புகழ்ச்சியில்லாதவன். என்னையு மவ்வாறுக்கு. (2) ஏ தயாநிதி! உன்னுடைய கிருபையாலேயே என் மனம் விழிப்புநிலையில் வெகுதூரம் செல்கின்றது. தூக்கத்திலும், கனவிலுமென் மனம் வெகுதூரம் சென்று காரியங்களைப் புரிவதுமுன் கிருபையாலேயே. சகல ப்ரகாசங்களினும் ப்ராகாசகனுகிய தனிப்பட்ட அப்பரமன் என் மனதை

சதா நல்ல எண்ணங்களிலேயே செலுத்துவானுக. (3) ஏ சர்வாந்தர்யாமீ! தர்மயுக்த வித்வான்கள் யாகங்களேயும், வீரர்கள் யுத்தங்களேயும் எவருடைய சாமர்த்தியத்தால் புரிகின்றனரோ; மக்களின் உள்ளங்களிலே அதிக சாமர்த்தியவானுயிருப்பவனெவனே, அப்பரமனுன நீ என் மனதில் சதா நல்ல எண்ணங்களேயே உண்டாக்குவாயாக. (4) மேலான க்ஞானமும் பரோபகார நிச்சய ஆத்மாவும் யாரால் உண்டாகின்றதோ; மக்களினுள்ளே நாசமின்றி சதா வசிப்பவனெவனே; எவனில்லாமல் யாரும் எக்காரியத்தையும் புரியமுடியாதோ, அவன் என் மனதை சதா நல்ல எண்ணங்களிலேயே செலுத்துவானுக. (5) யோகிகள் இறந்த, நிகழ், எதிர்காலங்களே யாருடைய கிருபையால் தெரிந்து கொள்கின்றனரோ; எவருடைய அருளால் தங்களின் ஆத்மாவை சத்திய நிலேயுள்ளதாசச் செய்து கொள்கின்றனரோ; யோகரூபமான வேள்விகளே யாருடைய அருளால் செய்கின்றனரோ; அவராகிய அப்பரமன் சதா என் மனதை நல்ல எண்ணங்களிலேயே செலுத்துவானுகவும். (6) ஏ பரமவித்வானுகிய பரமேஸ்வரா! தங்களுடைய கிருபையாலேயே என் மனதில் ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வவேதம் இவைகள் சக்கிரத்தின் இதழ்களேப்போல நிற்கின்றன. சர்வக்ஞத்வமாய், சர்வ வ்யாபகமாய் ப்ரஜைகளுக்குச் சாக்ஷியாய் சித்தத்தால் அறியப்படும் பொருள் என் மனதின் அவித்தையைப் போக்கி வித்யாப் பிரியத்தனுக்குமாக. (7) ஏ ஈஸ்வரா! கடிவாளம் பூட்டிய குதிரையைப் போலவும்; குதிரைகளே யோட்டும் சாரதியைப்போலவும் என் மனம் அங்குமிங்கும் செல்கின்றது. இருதயத்தில் அதி வேகவானுக நின்றிருப்பவன் என்

மனதையும், சகல இந்திரியங்களையும் அதர்மாசரணத்தி லிருந்து தடுத்து தர்மாசரணத்திலேயே சதா செலுத்து வானாக. (8)

अग्ने नय सुपथा राये अस्मान् विश्वानि देव वयुनानि विद्वान् ।

युयोध्यस्मज्जुहुराणमेनो भूयिष्ठां ते नम उक्तिं विधेम ॥

(யஜுர் 40-16.)

ஏ சுகதாதாவான சுயம்ப்ரகாச பரமா! மேன்மையான வழியின் முழு அறிவையும் எங்களுக்குண்டாக்கு. எங்க ளிடமிருக்கும் பாபாசரணத்தினின்றும் எங்களை வேறு படுத்து. இதற்காக தாழ்மையான பல வந்தனங்களுடன் உன்னைத் துதிக்கின்றோம். எங்களை பவித்திரவான்க ளாக்கு.

मानो महान्तमुत मा नोऽर्भकं मा न उक्षन्तमुत मा न उक्षितम् ।

मा नो वधीः पितरं मोत मातरं मा नः प्रियास्तन्वो रुद्र रीरिषः ॥

(யஜுர் 16, 15.)

ஏ ருத்திரா! (துஷ்டர்களின் பாபங்களுக்குத் தக்க துக்கங்களை ஈந்து வருந்தச்செய்யும் பரமேஸ்வரா!) எங்க ளின் சிறியோர் பெரியோர், கர்ப்பம், மாதா, பிதா, ப்ரிய பந்துக்கள், சரீரம் முதலியனவைகளை நாங்கள் துன்புறுத் தாதிருந்து உன் தண்டனையைப் பெறாத வண்ணமான வழியிலே எங்களைச் செலுத்துவாயாக.

असतो मा सद्गमय तमसो मा ज्योतिर्गमय मृत्योर्माऽमृतं गमयेति ॥

(சதபதம் 14, 3, 1, 30.)

ஏ பரமகுருவான பரமா! எங்களை அசத்திய வழிகளினின்றும் விலக்கி சத்திய வழிகளிலே செலுத்து. அவித்யையெனும் இருளினின்றும் விலக்கி வித்தையெனும் சூர்யப்ரகாசத்திலே செலுத்து. மரணத்தினின்றும், வியாதியினின்றும் விலக்கி மோக்ஷமெனும் அமிர்தத்திற் செலுத்து. எங்கெந்த குணங்களினின்றும் பரமேஸ்வரனையும், தன்னையும் வேறுபடுத்தி பிரார்த்தனை செய்யப்படுகின்றதோ அந்த விதி நிஷேதமுகமாவதினால் சகுண, நிர்க்குண உபாசனைகளாகின்றன. எம் மனிதன் எவ்விதமாக வார்த்தையாடுகின்றானோ அவ்விதமாகவே காரியங்களையும் புரியவேண்டும். மோக்ஷத்தை யடைய கடவுளை நோக்கி வேண்டும்படியான வழிகளிலேயே தானும் செல்ல முயற்சிக்கவேண்டும். என்றால் தன் நலத்தைக் கோராது பிரார்த்தனை செய்யவேண்டும். "ஏ பரமா! என் விரோதிகளை நீ சம்ஹரித்துவிடு; என்னையே உலகத்தில் பெரியவனுக்குக, எல்லாருடைய செல்வத்தையும் எனக்கே அளி" இவ்வாறாக கடவுளைத் துதிக்கக்கூடாது. ஏனென்றால் இரு விரோதிகளும் ஒருவரை யொருவர் நசித்துவிட வேண்டுமென்று கடவுளை வணங்கினால் கடவுள் யாரை நசிக்கச் செய்வார்? "ஆனாலும் கடவுளின் அன்பு யார்மேல் அதிகமாயிருக்கிறதோ அவரின் விரோதியைத்தான் கடவுள் நசித்துவிடுவார்" என்று சொன்னால் "கடவுளின் அன்பு குறைவா யிருப்பவரின் விரோதியை குறைவாகவாவது

நசுக்கவேண்டியது கடவுளின் கடமை யல்லவா ?" என்று கேட்கவேண்டும். அன்றி இவ்வாறுன துதிகளைக் கேட்டு கடவுள் அருள் செய்வாராயின் மறுபடி "ஏ பரமா! இந்த பூரியைக் கொஞ்சம் சுட்டுக் கொடுத்துவிடு. வீட்டில் அரிசி யில்லை, இரண்டு ரூபாய்க்கு அரிசி வாங்கிக் கொடுத்துவிடு. இந்த அழுக்குத் துணிகளைத் துவைத்துக் கொடுத்துவிடு. இந்த வயலைக் கொஞ்சம் உழுதுவிடு." என்று சொல்லி விட்டு சும்மா உட்கார்ந்து விடலாமா? இவைகள் மிகத் தப்பிதமான துதிகளாகும். பரமேஸ்வரனின் துணை கொண்டு நம் புருடார்த்தங்களை நாமே அடைவதற்காகத் தான் துதிகளைச் செய்வது.

कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतं᳭ समाः ।

(யஜுர் 40-12.)

மனிதர்கள் நூறு வருடங்கள் வரை, என்றுல் வாழ்ந் திருக்கும்வரை காரியங்களைப் புரிந்துகொண்டே இருக்க வேண்டும். ஒருபோதும் சோம்பலாயிருக்கக் கூடாது என்று கடவுள் ஆக்ஞாபிக்கின்றுர். உலகத்திலுள்ள சகல பிராணிகளும் பிராணிகளல்லாதவைகளும் சதா தங்கள் தங்களுடைய காரியங்களைச் செய்துகொண்டே யிருக்கின் றன. புழு முதலானவைகள் சதா ப்ரயத்தினம் செய்து கொண்டும், பூமி முதலானவைகள் சதா சுற்றிக்கொண்டும், மரம் முதலானவைகள் சதா வளர்ந்துகொண்டும் இருப் பதைப்போலவே மனிதர்களும் சதா காரியங்களைப் புரிந்து கொண்டே இருக்கவேண்டும். நல்ல காரியங்களைச் செய்ப வனுக்கு வேண்டிய உதவி மற்றவனிடத்திலிருந்து கிடைப்

பதைப் போலவே புருடார்த்தத்தை நாடி யுழைப்பவனுக்கு கடவுளின் உதவியும் கிடைக்கின்றது. சுருசுருப்புடைய வனையே வேலைக்காரனுக்கிக் கொள்வோமேயொழிய சோம் பேரியை இல்லை. கண்ணிருப்பவனே பொருள்களைப் பார்க்கக்கூடுமே யன்றி குருடன் இல்லை. இவ்வாறே நல்ல காரியங்களைச் செய்பவனுக்கே கடவுள் உதவி செய்வார்; கெட்ட காரியம் புரிபவர்களுக்கு இல்லை. முடியாது என்று சொல்பவன் எச்சிறு காரியத்தையும் புரியமாட்டான். முடி யும் என்று சொல்பவன் எப்பெரிய காரியத்தையும் முடித்து விடுவான். இனி மூன்றாவது உபாஸனை

समाधिनिर्धूतमलस्य चेतसो निवेशितस्यात्मनि यत्सुखं भवेत्। न शक्यते वर्णयितुं गिरा सदा स्वयन्तदन्तःकरणेन गृह्यते ॥ (உபநிஷத்.)

அவித்யையாதி மலங்கள் எவனுக்கு சமாதியோகத் தால் நசித்துவிட்டனவோ; சித்தம் தன்னை யறிந்து கடவு ளிடம் எவனுக்கு லயமடைந்ததோ; அவனுக்கே "கடவுள் சேர்க்கை" யெனும் சுக முண்டாகிறது. அவன் தன் அனுபவத்தை வாயினால் சொல்லமுடியாது. ஏனென்றால் அவ்வானந்தத்தை ஜீவாத்மா தன் உட்புலன்களின் வழி யாக மாத்திரம் அனுபவிக்கின்றது. உபாசனை யென்பதின் பொருள் அருகு அமர்தல் ஆகும். சர்வாந்தர்யாமியுடன் கலந்துகொண்டவன் நடத்தைகளையே நாமும் பின்பற்றி நடக்கவேண்டும்.

तत्राऽहिंसासत्यास्तेयब्रह्मचर्यापरिग्रहा यमाः ॥

(சாதனபாதம் 30)

உபாசனையை ஆரம்பிக்க விரும்புபவன் முதலில் துன்புறுத்தாமை, சகலரிடமும் அன்புசெலுத்தல், சத்தியம் பேசல், திருடாமை, இந்திரியங்களை வென்றிருத்தல், அபிமான மில்லாமை முதலியவைகளை முதலில் அனுஷ்டிக்க வேண்டும். இவ்வைந்துமே உபாசனு யோகத்தின் முதல் பாகமாகும்.

शौचसन्तोषतपःस्वाध्यायेश्वरप्रणिधानानि नियमाः ॥

(சாதனபாதம் 32.)

ராகத்துவேஷங்களை விலக்கி, உள்ளும் புறமும் ஜலத்தால் சுத்தி செய்துகொள்ளல்; எக்காரியம் கெட்டுவிட்டாலும் அதற்காக விசனப்படாமை, எக்காரியம் கைகூடினும் அதற்காக சந்தோஷியாமையுடன் சதா சோம்பலை விட்டு சுருசுருப்புடன் ஏதாவதொரு காரியத்தைச் செய்து கொண்டே யிருத்தல்; எவ்வளவு சுகம் துக்கம் உண்டான போதிலும் தர்மத்தைக் கைவிடாமை; சதா சத்திய சாஸ்த்திரங்களைக் கற்றுக் கற்பித்து அறிவாளிகளின் நட்பைக் கொண்டு கடவுளின் மேலான பெயராகிய "ஓம்" யென்பதை அர்த்தத்துடன் தினமும் ஜெபித்துவரல்; கடவுளின் ஆக்கினைப்படியே ஒழுகிவரத் தன் ஆத்மாவைப் பழக்குதல் ஆகிய இவ்வைந்தும் உபாசனையின் இரண்டாவது பாகமாகும். இதற்குமேல் உள்ள மற்ற ஆறு பாகங்களையும் யோக சாஸ்த்திரம் அல்லது "ருக்வேதாதி பாஷ்ய பூமிகா" வில் பார்த்துக்கொள்ளலாம். உபாசனை செய்ய விரும்பும்போது முதலில் தனியான சுத்தமான இடம் சென்று, ஆசன மிட்டமர்ந்து, ப்ராணயாமத்தால் வெளி விஷயங்களின்றும் இந்திரியங்களைத் தடுத்து, மனதை நாபி,

இருதயம், கழுத்து, கண், சிகை, முதுகின் மேல், கழுத்தின் மத்தி முதலிய ஏதாவதொரு விடத்தில் நிறுத்தி தன்னைக் குறித்தும் கடவுளைக் குறித்துமுள்ள விசாரணைகளைச் செய்து, கடவுளிடம் அப்படியே அடங்கிப் போய்விட வேண்டும். இச் சாதனங்களைச் செய்துகொண்டு வரும்போது ஆத்மாவும் உட்புலன்களும் சுத்தமடைந்து சத்தியத்தினால் பூர்ணமாகின்றன. தினமும் க்ஞான விக்ஞானங்களை யறிந்து முக்திவரையும் செல்கின்றன. நாளுக்கொரு முறை ஒரு மணி நேரம் இவ்வாறான பழக்கம் செய்துகொண்டுவருபவன் உன்னத நிலையை எய்துகிறான். இங்கே சர்வக்ஞத்வம் முதலாகிய குணங்களுடன் கடவுளைத் துதித்தல் சகுணோபாசனை. ராகத்துவேஷங்கள் கடவுளுக்குக் கிடையாது. அதே பாவனையாகத் தன் ஆத்மாவையும் செய்துகொள்வதாகச் செய்வது நிர்க்குணோபாசனை யாகும். இதன் பலனாவது—குளிரால் வருந்துபவன் நெருப்பினருகில் சென்றபோது அவன் குளிரினின்றும் விடுபடுவதைப் போலவே, கடவுளிடம் சென்றடைந்த ஆத்மா சுத்தமடைந்து கடவுளின் குணகர்மவபாவங்களுக்குத் தக அதுவும் பவித்திரமாகிறது. ஆகையால் கடவுளைத் துதிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். இதனால் மலை போன்ற துக்கம் வந்தபோதிலும் ஆத்மா சிறிதும் பயப்படாது. எது வந்தபோதிலும் சகித்துக்கொள்ளும். என்ன இது சின்ன வார்த்தையா? அவ்வாறு கடவுள் துதியைச் செய்யாதவன் மகா மூர்க்கனாகின்றான். ஏனென்றால் அவன் தன் பலத்தைத் தானறிந்து உபயோகிக்காமற் போய் விடுவதினாலே அவன் மூர்க்கத் தன்மையையே அடைகின்றான்.

கேள்வி—: கடவுளுக்கு புலன்களில்லாதபோது அவர் புலன்களின் வேலைகளை யெப்படிச் செய்யமுடியும்?

விடை—:

अपाणिपादो जवनो ग्रहीता पश्यत्यचक्षुः स शृणोत्यकर्णः । स वेत्ति वेद्यं न च तस्यास्ति वेत्ता तमाहुरग्र्यं पुरुषं पुराणम् ॥

(ஸ்வேதாஸ்வதரம் 3-19.)

கடவுளுக்குக் கை கிடையாது. ஆனாலும் தன் சக்தி ரூபக் கைகளால் சகலத்தையு முண்டாக்கி யழிக்கின்றார். காலில்லாதபோதிலும் எங்கும் வியாபித்திருப்பதால் சகலத்தினும் வேகமுடையவர்; கண்களில்லாதபோதிலும் எல்லாவற்றையும் பார்க்கின்றார், காதுகளில்லாதபோதிலும் எல்லாவற்றையும் கேட்கின்றார். உட்புலன்க ளில்லாத போதிலும் சகல உலகத்தையு மறிகிறார். இவ்விதிகளுட னவரை அறிபவர்கள் ஒருவருமில்லை. அவனே சனாதனன் ஆகும். சகலரினும் மேலானவன், சகலரிலும் பூர்ணமா யிருப்பதால் புருஷனென்றும் சொல்லப்படுகிறான். அவன் இந்திரிய, உட்புலன்களின் வேலைகளைத் தன் சாமர்த்தியத்தால் செய்கின்றான்.

கேள்வி—: அநேகம் பேர் அவனை நிர்க்குணனென்று சொல்கிறார்களே?

விடை—:

न तस्य कार्य्यं करणं च विद्यते न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते ।
परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च॥

(ஸ்வேதாஸ்வதரம் 6-8.)

பரமாத்மாவினும் காரிய காரணங்களை மற்ற யாரும் அபேக்ஷிக்க முடியாது. அல்லது அதற்குச் சமமாவோ மேலாகவோ ஒருவரும்—ஒன்றும்—கிடையாது. சர்வோத்தமசக்தி என்றால் அநந்தக்ஞானம், அனந்தபலம், அனந்த கார்யத்திறமை முதலியவைகள் அவனுடைய—அவனுக்கு-சுபாவமென்று கேள்விப்படுகிறோம். கடவுள் காரியவாதியாயில்லாவிட்டால் உலகை உண்டாக்குதலைச் செய்திருக்க முடியாது. ஆகையால் அவர் காரியவாதியாகவுமாகிறார்.

கேள்வி—: அவன் செய்யும் காரியங்கள் முடிவையுடையவைகளா இல்லையா?

விடை—: தேசகாலத்திற்கு எவ்வளவுவரை உசிதமென்று தெரிகின்றதோ அவ்வளவுவரை காரியத்தைப் புரிகின்றார். அதற்குக் குறைவாகவோ அதிகமாகவோ செய்வதில்லை. ஏனென்றால் அவர் எல்லாம் அறிந்தவர்.

கேள்வி—: கடவுள் தன் முடிவை அறிவாரா இல்லையா?

விடை—: கடவுள் பூர்ண ஞானியாகும். எப்பொருள் எவ்வாறுண்டோ அப்பொருளை அவ்வாறே அறிதல்தான் க்ஞானமாகும். கடவுள் அநந்தரானதினால் தன் அநந்தத்தை அவர் அறிந்திருத்தலே க்ஞானமாகும். அறியாதிருத்தல் அக்ஞானமாகும்.

यथार्थदर्शनं ज्ञानमिति ॥

ஒரு பொருளுக்குடைய உண்மையான குணகர்மஸ்வ பாவங்களை அப்படியே அறிதல்தான் க்ஞானமாகும். இதற்கு மாறுபாடானது அக்ஞானமாகும்.

क्लेशकर्मविपाकाशयैरपरामृष्टः पुरुषविशेष ईश्वरः ॥
(சமாதிபாதம் 24.)

துக்கம், சுகம், விருப்பு, வெறுப்பு, பலமுள்ளது, பல மில்லாதது முதலாகிய காரியங்களின் வாசனைகளுக்கு வேறு பட்டிருப்பவனே சகல ஜீவர்களுக்குந் தலைவனாகிய ஈஸ்வர னாகும்.

கேள்வி—:

ईश्वरासिद्धेः ॥ (சாங். 1-12.)

प्रमाणाभावान्न तत्सिद्धिः ॥ (சாங். 5-10)

सम्बन्धाभावान्नानुमानम् ॥ (சாங்க்யம். 5-11.)

ப்ரத்யக்ஷத்தாலே கடவுள் சித்தியில்லை (1). ப்ரத்ய க்ஷத்தில் கிடையாது ஆனதினால் அனுமானாதிகளாலு மதை நிரூபிக்க முடியாது (2). ப்ரத்யக்ஷ அனுமானங்க ளில்லாததினாலே சப்த ப்ரமாணமும் கிடையாது. இக் காரணங்களால் கடவுள் இருப்பது பொய்யாகும் (3).

விடை—: இங்கே கடவுள் விஷயத்திலே ப்ரத்யக்ஷ ப்ரமாணம் இருக்கவில்லை. கடவுள் உலகத்திற்கு உபாதான காரணமுமல்ல. சகலமும் பூர்ணமானதினாலே பரமாத்மா வின் பெயர் புருஷன், சரீரத்தில் சயனித்திருப்பதனாலே

ஜீவனுக்கும் புருஷன் என்ற பெயராகும். ஏனென்றால் இதே ப்ரகரணத்தில்—,

सत्तामात्राच्चेत्सर्वैश्वर्य्यं ॥ १ ॥

प्रधानं शक्तियोगाच्चेत्सङ्गापत्तिः ॥ २ ॥

श्रुतिरपि प्रधानकार्य्यत्वस्य ॥ ३ ॥

(ஸாங்க்யம் 5 ; 8 ; 9 ; 12.)

புருடனுக்கு ப்ரதான சக்தியின் சேர்க்கையுண்டாயின் புருடனும் கூட்டுப் பொருளாய்விடும். எவ்வாறெனில் இயற்கையானது சூக்ஷ்மத்திலே சேர்ந்து கார்யரூபத்தில் கூட்டுறவு அடைவது போலவே கடவுளும் ஸ்தூலமாய் விடவேண்டும். இதனால் கடவுள் உலகத்திற்கு உபாதான காரணமல்ல. ஆனால் நிமித்த காரணமாகும். (1) சேதனத்தினால் உலக உற்பத்தியாயிற்று என்றாலோ கடவுள் சகல ஐஸ்வர்ய பாதிக்தனாயிருப்பது போலவே ஜகத்தும் சகல ஐஸ்வர்ய பாதிக்தமா யிருக்கவேண்டும். ஆனாலப்படியில்லை. இதனால் கடவுள் உலகத்திற்கு உபாதான காரணமல்ல. ஆனால் நிமித்த காரணமாகும். (2) ஏனென்றால் உபநிடதங்களும் ப்ரதானமே ஜகத்தின் உபாதான காரணமாகச் சொல்கின்றன.

अजामेकां लोहितशुक्लकृष्णां बह्वीः प्रजाः सृजमानां स्वरूपाः ।

(ஸ்வேதாஸ்வதரம் 4-5.)

ஜன்மமில்லாத சத்வ, ரஜ, தமோகுணரூப இயற்கையே ஸ்வரூபாகாரத்தால் பலவிதமான ப்ராஜாரூப மாகின்

றது. என்றால் இயற்கையின் பரிணாமமே உலகமாகும். புருடன் அபரிணாமியாகையால் உலகமாகிய மற்றொரு ரூபத்தை அடையமுடியாது, சதா கூடஸ்தனாய் நிர்விகாரனாகவே இருக்கும். கபிலமுனிவரை யார் நாஸ்திகரென்று சொல்கின்றார்களோ அவர்களே நாஸ்திகர்களாகுமே யன்றி கபிலர் நாஸ்திகரல்ல. வைசேஷிக, நியாயமுங்கூட "ஆத்மா" சப்தத்தால் நாஸ்திகவாதிகளல்ல. ஏனென்றால்

"अतति सर्वत्र व्याप्नोतीत्यात्मा"।

எங்கும் வியாபித்து, தர்மயுக்தமாய், ஜீவர்களுக்குச் ஆத்மாவாயிருப்பவனே "ஆத்மா" வாகும். இவனாகிய கடவுளையே மீமாம்சா, வைசேஷிக, நியாயம் ஈஸ்வரனாகச் சொல்கின்றது.

கேள்வி—: கடவுள்; அவதாரம் எடுக்கின்றாரா இல்லையா?

விடை—: இல்லை. ஏனென்றால்,

अज एकपात्। सपर्यगाच्छुक्रमकायम्॥

முதலாகிய யஜுர்வேத வசனங்களிலிருந்து கடவுள் அவதாரம் எடுக்கமுடியாது என்று தெரிகின்றது.

கேள்வி—:

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम्॥

(பகவத் 4-7,)

எவ்வெப்பொழுது தர்மம் அழிந்துவிடுகின்றதோ அவ்வப்பொழுது நான் சரீரத்தைத் தரிக்கின்றேனென்று சொல்கின்றாரே ?

விடை—: இவ்வார்த்தை வேத விரோதமானபடியினாலே இது ப்ரமாணமாகாது. ஆனால் இதன் பொருள்—கிருஷ்ணன் அக்காலத்திலே பெரிய தர்மாத்மாவாக இருந்திருந்து அவனுடைய விருப்பமும் எவ்வெப்பொழுது உலகில் அதர்மம் தோன்றுகிறதோ அவ்வப்பொழுது அதை அழிப்பதற்காகத் தானும் பிறக்கவேண்டுமென்று விரும்பி இதைச் சொல்லியிருந்தால் அப்போது இது சரியாகும். ஏனென்றால்—,

परोपकाराय सतां विभूतयः ।

பெரியோர்களின் தனம், மனம், சுகம் பரோபகாரத்திற்காகவே இருக்கின்றது, ஆகையாலே இதைக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனை கடவுளாகச் சொல்லிவிட முடியாது.

கேள்வி—: அப்படியானால் உலகத்திலே 24 கடவுளின் அவதாரங்களுண்டு. இவைகளை யேன் அவதாரமாக மதிக்கிறார்கள் ?

விடை—: வேதார்த்தத்தை அறியாமல், சுயநலமிகளின் வார்த்தைகளை நம்பி, தங்களுக்குத் தாங்களே கல்வியில்லாதவர்களா யிருப்பதினால் மயங்கி இப்பேர்ப்பட்ட அப்பிரமாண வாக்கியங்களை மதிக்கிறார்கள்.

கேள்வி—: கடவுள் அவதாரம் எடுக்கவில்லை யென்றால் துஷ்டர்களாகிய ராவணன் கம்சன் முதலானவர்கள் எப்படி இறந்திருப்பார்கள்?

விடை—: முதலில் யார் பிறந்தார்களோ அவர்கள் இறப்பது நிச்சயம். கடவுள் அவதாரம் எடுக்காமலே உலகை உண்டாக்கி, காப்பாற்றி, அழிக்க வல்லவரென்றால் இந்த ராவண கம்சாதிகள் எம்மாத்திரம்? அன்றி கடவுள் சர்வ வியாபகரானதனாலே கம்ச ராவணாதிகளின் சரீரங்களிலேயும் பூர்ணமாக நிறைந்திருப்பார். விரும்பினால் உள்ளிருந்தபடியே அவர்களின் மார்பைப் பிளந்துவிட்டிருக்கலாம். நன்று! அநந்தசுகுண யுக்தனாகிய பரமன் கேவலம் ஓர் மிகச் சிறிய ஜீவனைக் கொல்வதற்காக பிறப் பிறப்பை யடையவேண்டுமா? வேறே உபாயம் கிடைக்கவில்லையா? அன்றி பக்தகோடிகளைக் காப்பாற்றுவதற்காக கடவுள் பிறக்கின்றாரென்றாலோ அதுவும் சத்யமல்ல. ஏனென்றால் கடவுளின் ஆக்ஞையின்படி நடக்கும் பக்த ஜனங்களை போற்றக்கூடிய சாமர்த்தியம் அவரிடமே உண்டு. பூமி, சந்திர, சூர்ய முதலிய கோளங்களை உண்டாக்கி காப்பாற்றி அழிக்கவல்ல கடவுளுக்கு ராவணாதிகளை வதைப்பதும், கோவர்த்தனாதிமலைகளை யெடுப்பதும் ஓர் பெரிய காரியமா? இவ்வுற்பவத்திலே கடவுளின் காரியங்களை விசாரிக்கும் போது—:

'**न भूतो न भविष्यति**" கடவுளுக்குச் சமமாய் ஒன்றும் இருந்ததில்லை. இனிமேலும் இருக்காது. அன்றி யுக்தியிலும் கடவுளுக்கு ஜன்ம முண்டென்று சொல்லமுடியாது.

“அனந்தமாகிய ஆகாயம் ஒருவனின் கர்ப்பத்திலே வந்து விட்டது, அல்லது அதை யெடுத்துச் சுருட்டி பரணை யின்மேல் வைத்துவிட்டான்” என்று சொன்னால் இது ஒருபோதும் முடியாது. ஏனென்றால் ஆகாயம் அனந்த மானதுடன் சகலத்திலும் வியாபித்ததாகும். ஆகையால் ஆகாயம் உள்ளும் வருவதில்லை, வெளியிலும் போவதில்லை. இதே மாதிரிதான் எங்கும் வியாபித்த பரமனும் எங்கும் வருவதுமில்லை, போவதுமில்லை. கர்ப்பத்திலேயும் பரமன் இல்லையா? என்றால் வருவது எங்ஙனம்? ஆகையால் கட வுளை இம்மாதிரி யெல்லாம் குறைவாக மதிப்பது கல்விக் குறையே யொழிய மற்றென்ன? ஆகையால் கடவுளுக்கு எப்போதும் அவதாரம் கிடையாது. ஏனென்றால் ராக, த்வேஷ, பசி, தாகம், பயம், விசனம், துக்கம், சுகம், பிறப்பு, இறப்பு, ஆதி குணங்கள் மனிதர்களுக்கே யன்றி கடவுளுக்கல்ல.

கேள்வி—: கடவுள் தன் பக்தர்களின் பாபங்களை மன் னிக்கின்றாரா இல்லையா?

விடை—: இல்லை. பாபத்தை மன்னிப்பதாயின் அவ ரின் நியாயம் நஷ்ட மடைந்துவிடும். அதனால் சகல மனி தர்களும் மகாபாபியாய் விடுவார்கள். ஏனென்றால் பாபங் கள் மன்னிக்கப்படுமென்று தெரிந்தால் பாபங்களைச் செய்ய யாரும் சிறிதும் பயப்படவோ, வெட்கமடையவோ மாட் டார்கள். ஒருவனின் குற்றங்களை அரசன் மன்னிப்பான் என்று தெரிந்தால் அவன் எவ்வளவோ குற்றங்களை பய மின்றிச் செய்ய துணியமாட்டானா?

ஆகையால் எல்லாக் காரியங்களுக்குந் தகுந்த பலனையீவது கடவுளின் தொழிலே அன்றி பாபங்களை மன்னிப்பது கடவுளின் தொழிலல்ல.

கேள்வி—: ஜீவன் ஸ்வதந்திர முடையதா பரதந்திர முடையதா ?

விடை—: தன் சொந்தக் காரியங்களில் சுதந்திரத்தையும், ஈஸ்வரனின் ஆக்ஞையில் பரதந்திரத்தையும் உடையது.

“स्वतन्त्रः कर्त्ता” (பாணினி.)

சுதந்திரம் என்றால் தன்னாதீனத்தையுடைய கர்த்தாவாகும்.

கேள்வி—: ஸ்வதந்திரரென்று யாரைச் சொல்வது ?

விடை—: சரீரம், ப்ராணன், இந்திரியம், அந்தக்கரணாதிகள் யார் ஆதீனத்திலே யிருக்கின்றனவோ அவரே ஸ்வதந்திரராகும். சுதந்திரனா யில்லாவிட்டால் பாப புண்ணியங்களின் பலன்களை ஒருபோதும் அடையாது. ஏனென்றால் தனக்குமேல் தலைவர்களாயுள்ள சேனாதிபதிகளின் வார்த்தைகளின்மேல் வீரர்கள் எதிரிகளுள் அநேகம் பேர்களைக் கொன்றுவிடுகிறார்கள். ஆனாலும் அக்கொலைக் குற்றம் அவ் வீரர்களைச் சார்வதில்லை. அப்படியே கடவுளின் உத்திரவால்தான் ஜீவன்கள் காரியங்களைப் புரிகின்றனவென்றால் அவைகளைச் செய்வதினின்றும் பாப புண்ணியங்கள் எண்ணப்படமாட்டாது. அதன் பலன்களு மவைகளுக்

காகாது. ஏனென்றால் அதன் பலன்களை கடவுளே அனுபவிக்கவேண்டும். நரக சுவர்க்க மென்னும் துக்க சுகங்களும் பரமேஸ்வரனுக்கே தானாகவேண்டும். ஏனென்றால் ஒருவன் மற்றொருவன்மேல் ஓர் அம்பை யெய்து கொன்றுவிட்டால் அம்பை யெய்தியவனையே யன்றி அம்பைப் பிடித்துக் கொள்ளமாட்டோம். அதேமாதிரியாகத்தான் பராதீனனாக இருக்கும் ஜீவனுக்கும் ஒருவித பாப புண்ணியத்தின் பலனு மில்லாதிருக்கவேண்டும். ஆகையால் வேண்டியவைகளைச் செய்துகொள்வதில் ஜீவன் ஸ்வதந்திரத்தை யுடையது. ஆனால் பாபங்களைச் செய்து முடித்தபின் கடவுளின் அவஸ்தையில் பராதீனமாகி தான் செய்த கர்மங்களின் பலனை அனுபவிக்கின்றது. ஆகையால் கர்மம் செய்வதில் ஜீவன் ஸ்வதந்திரத்தையும் அதன் பலனை யடைவதில் பரதந்திரத்தையும் பெற்றதாகும்.

கேள்வி—: கடவுள் ஜீவனை உண்டாக்கி அதற்கு சாமர்த்தியத்தையும் அளித்திராவிட்டால் ஜீவன் கர்மங்களைச் செய்திருக்காது. ஆகையால் கடவுளின் ஆக்ஞையினாலேயே ஜீவன் கர்மங்களைச் செய்கின்றான்.

விடை—: ஜீவன் எப்போதும் பிறக்கவில்லை. கடவுள், இயற்கைகளைப் போல இதுவும் அநாதியாகும். ஆகையால் சரீராதிகளை கடவுளே செய்தளித் திருந்தபோதிலும் அதை வைத்துக் கொண்டு ஆண்டுவருவது ஜீவனுடைய ஆதீனமேயாகும். யார் இந்திரியங்களால் காரியங்களைப் புரிகின்றார்களோ அவர்களே அதன் பலனை அனுபவிக்கின்றார்கள். ஒருவனுக்குக் கொஞ்சம் இரும்பு கிடைத்தது. அதை அவன் ஒரு

வனுக்கு விற்ருன். வாங்கினவன் வீட்டிலே சென்று அதை ஓர் கத்தியாக்கினுன். அவனிடமிருந்து ஓர் வீரன் அதை பெற்றுச்சென்று ஒருவனைக் கொன்று விட்டான். இப் போது அரசன் இரும்பை விற்றவனையும், வாங்கினவனையும், தண்டிக்கப் போவதில்லை. ஆனுல் கத்தியைக் கொண்டு கொலைத் தொழில் புரிந்தவனையே தண்டிக்கின்ருன். இதே மாதிரிதான் சரீராதிகளை உண்டாக்கும் கடவுள் அவைகளின் கர்மப் பலன்களை யடைவதில்லை. ஆனுல் ஜீவன்தான் அவைகளை அனுபவிக்கின்றது. அன்றி கடவுள் தான் ஜீவர்களை ஆட்டுவிப்பவர் என்ருலோ கடவுள் தர்மவானுனதாலே எந்த ஜீவனையும் பாபம் செய்யும்படிச் சொல்லியிருக்க மாட்டார். ஆகையால் ஜீவன் தன் காரியங்களைச் செய்து கொள்வதில் சுதந்திரமுடையதாகும். அப்படியே கடவுளும் தன் காரியங்களில் சுதந்திர முடையவரே யாகும்.

கேள்வி—: ஜீவன்; ஈஸ்வரர்களின் ஸ்வரூபம்; குண, கர்ம, ஸ்வபாவங்கள் எப்படிப் பட்டவைகள் ?

விடை—: இரண்டும் சேதன ஸ்வரூபமானவைகள்; பவித்திரம், நாசமின்மை, தர்மம் இவைகள் இரண்டினதும் ஸ்வபாவங்களாகும். ஆனுல் கடவுள் உலக உற்பவம், நிலை, அழிவு முதலியவைகளை நியமத்தில் வைத்தல்; ஜீவர்களின் கர்மங்களுக்குத் தகுந்த பலன்களையீவது ஆதி கர்மங்களின் அதிகாரியாகும். குழந்தைகளைப் பெற்று வளர்த்தல், சில்ப வித்தையாதி நல்ல கெட்ட காரியங்கள் ஜீவனின் ஆதீன கர்மங்களாகும். கடவுளிடம் நித்ய அறிவு, ஆனந்தம், அனந்த பலம், ஆதி குணங்களுண்டு. ஜீவனிடம்—:

इच्छाद्वेषप्रयत्नसुखदुःखज्ञानान्यात्मनो लिङ्गमिति ॥

(ந்யாயம்—1-10).

प्राणापाननिमेषोन्मेषमनोगतीन्द्रियान्तरविकाराः सुखदुःखेच्छाद्वेषौ प्रयत्नाश्चात्मनो लिङ्गानि ॥

(வைசேஷிகம்—3-2-4).

(இச்சா) பொருளை அடையவேண்டுமெனுமாசை, (த்வேஷம்) துக்காதிகளை விரும்பாமை, (ப்ரயத்ன) புருடார்த்தத்தின்பலம், (சுக) ஆனந்தம், (துக்கம்)களிப்பின்றி விசனித்தல், (க்ஞான) நல்ல கெட்டதை அறிதல், (ப்ராண) உயிர்க்காற்றை வெளிவிடல், (அபான) வெளிக் காற்றை உள்ளுக்கேற்றல், (நிமேஷ) கண்களை இமைத்தல், (உன்மேஷ) கண்களைத் திறத்தல், (மன) அஹங்கார மடைதல், (கதி) செல்லுதல், (இந்திரிய) இந்திரியங்களின் வழியாய் தொழிலை நடத்தல், (அந்தரவிகார) பசிதாகம், சுகதுக்கம், முதலியவைகளையடைதல் முதலிய குணங்களுண்டு. அன்றி கடவுளின் குணங்களிற் சிலதையும் ஆத்மா தன் முயற்சியால் பெறலாகும். எது வரை ஜீவன் சரீரத்திலே இருக்கின்றதோ அது வரை அதன் குணங்கள் ப்ரகாசிக்கும். ஆனால் சரீரத்தை விட்டுச் சென்ற போது சரீரத்திற்கு அக் குணங்களில்லை. எதாவதொன்று இருந்தபோது ஒருவிதமாயிருந்த ஒன்று அது பிரிந்து விட்டபோதும் அதே விதமாக இல்லா விட்டால் அம்மாதிரி அதை இருக்கச் செய்ததின் குணம் பிரிந்து சென்று விட்டதேயாகும். சூர்யன், தீபம் உள்ள போது ப்ரகாசம் இருக்கிறது. இல்லாத போது இல்லை. அவ்வாறே

தான் ஜீவன், பரமாத்மாக்களின் விக்ஞான குணத்தின் மூல்யமாய் உண்டாகிறது.

கேள்வி—: கடவுள் முக்காலமு முணர்ந்தவர். ஆகையால் அவர் எப்படி நிச்சயிக்கின்ருரோ அப்படியே தான் ஜீவர்களும் செய்வார்கள். ஆகையால் ஜீவர்கள் ஸ்வதந்திர முடையவைகளல்ல. இதனுல் கடவுள் ஜீவர்களை தண்டிப்பது மில்லை. ஏனென்ருல் கடவுள் எப்படி நிச்சயித்திருக்கின்ருரோ அப்படியே தான் ஜீவர்களும் செய்கின்றன.

விடை—: கடவுள் முக்காலமும் உணர்ந்தவரென்பது தப்பிதமாகும். ஏனென்ருல், முன்பு இருந்து இப்போது இல்லாததற்கு இறந்தகாலமென்றும்; இப்போதில்லாதிருந்து இனிமேல் இருக்கப்போவதற்கு எதிர்காலமென்றும் பெயராகும். ஆனுல் கடவுளின் அறிவு முன்பு இருந்து இப்போது இல்லாமல்போவது, இப்போது இல்லாமலிருந்து இனிமேல் இருக்கப்போவது அல்ல. ஆகையால் கடவுளின் அறிவு எப்போதும் ஒரேவிதமாக மாறுபாடில்லாததாகும். இறந்த காலமும் எதிர்காலமும் ஜீவனுக்கேயாகும். ஜீவர்களின் கார்ய அபேக்ஷயிலிருந்து திரிகாலமும் கடவுளிடமுண்டேயன்றி அது அவரின் சுதந்திரமல்ல. ஜீவன் சுதந்திரத்தால் செய்வதை கடவுள் சர்வக்ஞத்வத்தால் அறிகிருர். அவ்வாறே கடவுள் அறிவதைப்போல ஜீவன் செய்கிறது. என்ருல்; இறந்த, நிகழ் எதிர்காலங்களின் அறிவும் பலனும் கொடுப்பதிலே கடவுள் ஸ்வதந்திரவாதி. ஜீவன் சிறிது கர்மம் செய்வதிலே ஸ்வதந்திரவாதி. கடவுளிடம் கர்மக்ஞானம் அநாதியாயிருப்பதைப் போலவே தண்டனையும் க்ஞானமும் அநாதியாகும். இரண்

டும் அவரின் சத்யமாகும். கர்மக்ஞானம் மெய்யும், தண்டனைக் ஞானம் பொய்யுமாக ஒருபோதும் கிடையாது. ஆகையால் இதில் ஒருதோஷமுங்கிடையாது.

கேள்வி—: ஜீவன் சரீரத்தினும் வேறுபட்டதா அல்லது சரீரரூபமேயா ?

விடை—: வேறுப்பட்டதே. சரீரமேயாயின் விழிப்பு, தூக்கம், சுழுப்தி, மரணம், பிறப்பு, சேர்க்கை, பிரிவு, போதல், வருதல் முதலியவைகளை அடைய முடியாது. ஆகையால் ஜீவனின் ஸ்வரூபம் சூக்ஷ்மமானது. ஆனால் கடவுள் அதிதம சூக்ஷமாத் சூக்ஷ்மதமம், அநந்த, சர்வக்ஞத்வ முடையவ ராகும். ஆகையால் ஜீவனுக்கும் கடவுளுக்கும் வ்யாபக வ்யாப்ய சம்பந்தமுண்டு.

கேள்வி—: ஒருபட்டணத்திலே ஒருபொருள் இருந்தால் மற்றோர் பொருள் அங்கேயே இருக்கமுடியாது. ஆகையால் ஜீவனும் ஈஸ்வரனும் சேர்க்கை சம்பந்தத்துடனிருக்கலாமே யன்றி வ்யாப்ய வ்யாபக சம்பந்தமா யிருக்கமுடியாது.

விடை—: இது சமான ஆகார முடையவைகளுக்கே பொருந்தும், வேறுபட்ட ஆகாரமுடையவைகளுக்கு பொருந் தாது. இரும்பு ஸ்தூலமானது; நெருப்பு சூக்ஷ்மமானது. ஆகையால் அதில் அக்னியிருந்தும் இடியினக்னியினால் அது பாதிக்கப்படுகிறது. இதேமாதிரிதான் ஜீவன் கடவுளினும் ஸ்தூலமானது, கடவுள் ஜீவனிலும் சூக்ஷ்மமான தாகையாலே வ்யாப்ய வ்யாபக சம்பந்தமு முண்டாகிறது. ஜீவ ஈஸ்வரர் களின் இச் சம்பந்தம் போலவேதான் சேவ்ய சேவக, எஜ

மான சேவகன், அரசகுடிகள், பிதாபுத்ரன், ஆதிகளின் சம்பந்தமுமாகும்.

கேள்வி—: வேறுபட்டதாயின்—:

प्रज्ञानं ब्रह्म ॥ १ ॥ अहं ब्रह्मास्मि ॥ २ ॥ तत्त्वमसि । ३ अयमात्मा ब्रह्म ॥ ४ ॥

என்றும் வேதமகாவாக்கியங்களின் அர்த்தமென்ன ?

விடை—: இவைகள் வேத வாக்கியங்களல்ல. ஆனால் ப்ராஹ்மண க்ரந்தங்களின் வாக்கியங்கள். சத்திய சாஸ்திரங்கள் எதிலும் இவ்வாக்கியங்கள் இல்லை. அர்த்தம்—: (அஹம்) நான் (ப்ரஹ்ம) ப்ரம்மத்தில் இருப்பவன் (அஸ்மி) ஆகிறேன். இங்கே " கட்டில்கள் தூங்குகின்றன ". என்றால் கட்டில்கள் உண்மையில் தூங்குவதில்லை, ஆனால் கட்டில்களின் மேலிருக்கும் மனிதர்கள் தூங்குகிறார்களென்று அர்த்தம். இதே மாதிரிதான் முன் வாக்கியத்தின் பொருளையு மறியவேண்டும். எல்லாமும் தான் கடவுளினாதாரத்திலிருப்பதாக என் சொல்ல வேண்டு மென்றால் எல்லா பொருள்களைக் காட்டிலும் ஜீவனே கடவுளின் நெருங்கிய சம்பந்தம் பெற்றிருக்கிறது, அக்கடவுளின் சாக்ஷாத் சம்பந்தத்தை ஜீவன் பெறுவதாலேயே. என்றால் ஜீவனானது கடவுளின் உடன் சரிப்பதாகும் (கூடவே வசிப்பதாகும்). ஆகையால் கடவுளும் ஜீவனும் ஒன்றேயல்ல. " நானும் அவனும் ஒன்றேதான் " என்றால் உண்மையில் இருவரு மொன்றல்ல. ஆனால் அவ்வளவு ஒற்றுமை யுடையவர்களென்று அர்த்தமாகும். இதே போலத்தான் ஜீவ

னும் கடவுளின் ஒற்றுமையை வெகுவாகப் பெறுகின்றது. அதனால் தான் அதுதானும் கடவுளும் ஒன்றேயெனச் சொல்கின்றது. ஜீவன் தன் குணகர்ம ஸ்வபாவங்களை கடவுளின் குண கர்ம ஸ்வபாவங்களைப் போலக் கொள்ளும் தன்மையினால் தன்னையும் கடவுளையும் ஒன்றே யென்று சொல்கின்றது.

கேள்வி—: ஆனால் " தத்வமஸி " " ஏஜீவ! நீ அப்ப்ரம்மமாகும் " என்பதற்கென்ன அர்த்தம்?

விடை—: " தத் " என்ற பதத்திற்கு கடவுள் என்ற அர்த்தத்தை எங்கிருந்து எடுத்தாய்?

सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयं ब्रह्म ॥

இதன் பூர்வ வாக்கியத்திலிருந்து. அப்படி யிருந்தும் இச் சாந்தோக்ய உபநிடதத்தை நீ சரியாகப் பார்க்கவுமில்லை. நன்றாகப் பார்த்தால் இவ்விடத்தில் " ப்ரஹ்ம " என்ற பதமேயில்லை. ஆனால் என் இந்தப் பொய்? ஆனாலும் சாந்தோக்கியத்திலும் கூட—:

सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयम् ॥

(சாந்தோக்—6-2-1).

இவ்வளவு தானிருக்கிறது.

கேள்வி—: ஆனாலும் " தத் " என்பதற்கு நீங்கள் என்ன அர்த்தம் செய்வீர்கள்?

விடை—:

स य एषोऽणिमा । एतदात्म्यमिदꣳ सर्वं तत्सत्यꣳ स आत्मा तत्त्वमसि श्वेतकेतो इति ॥ (சாந்தோக்—6-8—7).

அக்கடவுள் அறியத்தகுந்தவர். அவர் அத்யந்த ஸூக்ஷ்ம மானவர். அவரே இச்சகல உலகங்களினதும் ஜீவர்களினதும் ஆத்மாவாகும். அவரே சத்யஸ்வரூபர். உன்னுடைய ஆத்மாவும் அப்படியேயாகும். எ ப்ரியபுத்திரனாகிய ஸ்வேத கேதா!.

तदात्मकस्तदन्तर्यामी त्वमसि ॥

அப்பரமாத்மாவை நீ அந்தர்யாமியாகப் பெற்றிருக்கின்றாய்.

இவ்வார்த்தையே உபநிஷதங்களுக்கு விரோதமில்லாததாகும். ஏனென்றால்—:

य आत्मनि तिष्ठन्नात्मनोन्तरोऽयमात्मा न वेद यस्यात्मा शरीरम् ।

आत्मनोन्तरो यमयति स त आत्मान्तर्याम्यमृतः ॥

(ப்ருஹதாரண்யகம்)

மகரிஷி யாக்ஞவல்க்யர் தன் பெண்ணான மைத்ரேயியைப் பார்த்துச் சொல்கின்றார் "எ மைத்ரேயீ! கடவுள் ஜீவனிலே நின்றிருந்தும் இம் மூட ஆத்மா "கடவுள் என்னிடம் வ்யாபித்திருக்கின்றார்" என்று அறிவதில்லை. சரீரத்தில் எப்படி ஜீவனின் வியாபகமோ அப்படியே ஜீவனில் கடவுளின் வியாபகம். ஜீவனிலும் வேறுபட்டு ஜீவசாக்ஷியாகி ஜீவர்களின் காரியங்களையறிந்து தகுந்த பலன்களை யளித்துக் கொண்டிருக்கிறது. உன்னுடைய ஆத்மாவிலும் அது அந்தர்யாமியாயிருக்கிறது. உன்னுள்ளும் அது வியாபித்திருக்கிறது.

நீ அதை அறி. இப்பேர்ப்பட்டவைகளை மாற்றி அர்த்தம் செய்யமுடியுமா ?

“ अयमात्मा ब्रह्म ”

என்றால் சமாதி நிலையில் யோகிகள் கடவுளின் ப்ரத்ய க்ஷத்தை யடைந்தபோது அவர்கள் “கடவுள் என்னுள் இருக்கின்றார்” என்று சொல்கின்றார்கள். அதுவே எங்கும் வியாபித்த கடவுளாகும். ஆகையால் கடவுளே ஜீவன் என்று சொல்லும் வேதாந்திகள் வேதாந்தத்தை யறியாதவர்களாகும்.

கேள்வி—:

अनेन आत्मना जीवेनानुप्रविश्य नामरूपे व्याकरवाणि ॥
(சாந்தோக்—6—3—2).

तत्सृष्ट्वा तदेवानुप्राविशत् ।
(தைத்ரீயம்-ப்ரம்மான.—6)

கடவுள் சொல்கின்றார் “நான் உலகத்தை உண்டாக்கி அதில் வ்யாபித்து ஜீவரூபமடைந்து சரீரங்களிலே நுழைந்து நாமரூபங்களாக ஆகிறேன்”. கடவுள் உலகை உண்டாக்கி அதில் நுழைந்து கொண்டார். இத்யாதி ஸ்ருதிகளின் பொருளை என்ன செய்வீர் ?

விடை—: பதம், பதப்பொருள், வாக்யப் பொருள்களை யறிந்தால் இம்மாதிரியான அர்த்தம் செய்ய முடியாது. ஏனென்றால் இங்கே ஒன்று ப்ரவேசம், மற்றொன்று அனுப்ர

வேசம் (பின்னால் ப்ரவேசித்தது,) சரீரத்தால் முன்பே ப்ரவே சித்திருக்கும் ஜீவர்களுடன் கடவுளும் பிறகு பிரவேசித்து வேதங்களின் மூலமாய் சகல நாம ரூபாதிகளின் வித்தையை வெளியாக்குகின்றார். சரீரத்தில் ஜீவனை ப்ரவேசிக்கச் செய்து தான் ஜீவனுக்குள் ப்ரவேசித்தார். " அநு " என்ற சப்தத் தின் அர்த்தத்தைச் சரியாக அறிந்திருந்தால் முன் மாதிரி யான அர்த்தத்தை நீ செய்திருக்க மாட்டாய்.

கேள்வி—:

सोऽयं देवदत्तो य उष्णकाले काश्यां दृष्टः स इदानीं प्रावृट्-समये मथुरायां दृश्यते ॥

வெயிற் காலத்திலே காசியிலே நான் பார்த்த தேவதத் தனை மழைக்காலத்திலே மதுரையிலே பார்க்கின்றேன். இவ் விடத்தில் காசீ தேசத்தையும் உஷ்ண காலத்தையும் விட்டு தேவதத்தனின் சரீரம் மாத்திரம் காணப்படுகிறது. அப்படி யே இப்பாகத்யாக லக்ஷணத்தால் ஜீவனின் இந்த இடம், காலம், அவித்தைகளை நீக்கி கடவுளின் இடம், காலம், வித் தையில் குறிவைத்துப் பார்த்தால் ஒரே கடவுள் தான் இரண் டிலும் பார்க்கப் படுகிறது. அப்படியே இக்குறியால் ஜீவ னின் அல்பக்ஞத் வத்தை விட்டு கடவுளின் சர்வக்ஞத்வத் தில் லயித்தபோது ஒரே சர்வக்ஞப் பொருளே அல்பக்ஞத் வமாகவு மிருக்கின்றதெனும் " அத்வைத " சித்தாந்தம் நிர்ண யிக்கப்படுகிறது. இப்போது என்ன செய்ய முடியும்?

விடை—: முதலில் நீ ஜீவ ஈஸ்வரர்களை நித்யமென்று நினைக்கிறாயா அனித்யமென்று நினைக்கிறாயா ?

கேள்வி —: பிறப்பு இவ்விரண்டுக்கும் கல்பிதமான தாலே இவைகள் அநித்யமென்றே சொல்கின்றேன்.

விடை —: அப்பிறப்பில்லாத நிலையை நித்யமென்று நினைக்கின்றாயா இல்லையா ?

கேள்வி—: எங்கள் மதத்திலே

जीवेशौ च विशुद्धाचिद्विभेदस्तु तयोर्द्वयोः ।
अविद्या तच्चितोर्योगः षडस्माकमनादयः ॥ १ ॥
कार्य्योपाधिरयं जीवः कारणोपाधिरीश्वरः ।
कार्य्यकारणतां हित्वा पूर्णबोधोऽवशिष्यते ॥ २ ॥

வேதாந்திகளாகிய நாங்கள் ஜீவன், ஈஸ்வரன், ப்ரஹ்ம, ஜீவ ஈஸ்வரர்களின் விசேஷ பேதம், அவித்யை அக்ஞானம், சேதனத்தின் யோகம் எனுமிவ்வாறு பொருள்களையும் அனாதியென்று நினைக்கின்றோம். ஆனால் இதில் ப்ரம்மம் மாத்திரம் அனாதி, அனந்தம், மற்ற ஐந்தும் அநாதி சாந்தமாகும். அக்ஞான மிருக்குங் காலம் வரை இவ்வைந்து மிருக்கும். இவ்வைந்தின் ஆரம்பமும் தெரிவதில்லை. ஆனால் க்ஞான முண்டான பிறகு இவைகள் நஷ்ட மடைந்து விடுகின்றன. ஆகையால் இவைகளை நாசப் பொருள்களென்று சொல்லுகிறோம்.

விடை—: நீ சொன்ன இரண்டு பாட்டுகளும் அசுத்தமான தாகும். ஏனென்றால் அவித்தையின் சேர்க்கை யில்லாமல் ஜீவன், மாயையின் சேர்க்கை யில்லாமல் ஈஸ்வரனும் உங்களுடைய மதத்தில் சித்தியாவதில்லை. ஆகையால் "**तच्चितोर्योगः**". நீ சொன்ன ஆறு பொருள்களும்

இருப்பவையல்ல. ஏனென்றால் அவைகள் அவித்தை மாயா ஜீவ ஈஸ்வரர்களிடம் வசிப்பவை களாய்விட்டன; ப்ரம்மம் மாயையும் வித்தையின் சேர்க்கை யில்லாமல் ஈஸ்வரனாக முடிவதில்லை. ஆகையால் ஈஸ்வரனை அவித்தை-ப்ரம்ம-த்தினின்றும் வேறாகச் செய்வது வீணாகவும். ஆகையால் உங்களின் மதத்தின் படியும் ப்ரம்மம், அவித்தை யெனுமிரண்டும் பொருள் களேயன்றி ஆறு பொருள்கள் கிடையாது. முதலில் நீங்கள் கார்யோபாதி- காரணோபாதிகளால் ஜீவனையும் ஈஸ்வரனையும் நிரூபிப்பீர்களே யானால் அநந்த, நித்ய, சுத்த, புத்த முக்தஸ்வபாவ, ஸர்வ வ்யாபக ப்ரம்மத்தில் அக்ஞானத்தை உண்டாக்குப வராகின்றீர்கள். ஒரு தேசத்தை யடைந்து, தன்னலமாய், அக்ஞான, அநாதியாக எங்கும் மதிப்போமானால் அப்போதும் ப்ரம்மம் சுத்தமான தென்றேற்படாது. ஒரு தேசத்திலே அக்ஞானமாக மதித்தாலும் அது பரிச்சின்னமானதினாலே இங்கும் அங்கும் வந்து போய்க்கொண்டிருக்கும். எங்கெங்கே போகுமோ அங்கங்கே ப்ரம்மம் அக்ஞானியாகவும், எந்தெந்த விடத்தை விட்டுப் போகுமோ அந்தந்த விடத்தில் ப்ரம்மம் ஞானியாகவும் ஆய்க்கொண்டிருக்கும். என்றால், எந்த தேசத்திலே, ப்ரம்மத்தை சுத்த அனாதியாகச் சொல்ல முடியும். அன்றி அக்ஞான ப்ரம்மத்தை அக்ஞானிகள் தான் அறிவார்கள். அப்போது மற்ற உள்ளும் புறம்புமுள்ள ப்ரம்மம் சிதறிவிடும். அப்படி சிதறிவிடுவதாயின் அது அகண்டமாகாது. அகண்டமாயிருந்தால் அது அக்ஞானி யாகாது. அவ்வாறு க்ஞானத்தின் குணமுண்டாயிருக்குமே யானால் ஏதாவது ஒரு பொருளுடன் கூடி எப்போதும் வசிக்கும்.

அவ்வாருன சம்பந்தமுடையதால் அது எப்போதும் அனித்யமாகாது. அன்றி சரீரத்திலே எந்தப் பாகத்திலேற்படும் துன்பத்தையும் எல்லா உடலும் அனுபவிப்பதைப்போல், எல்லாம் ஒரே ப்ரம்மமாயின் ஒரு யிடத்தில் பிரம்மம் துக்கமனுபவித்தால் எல்லா ப்ரம்மமும் துக்கமே யனுபவிக்கவேண்டும். அன்றியும் ப்ரம்மமே ஜீவனென்று நீ சொல்வதாயின் உன்னை ப்ரம்மம் வியாபித்துள்ளதா அன்றி சிதறியுள்ளதா ? என்று கேட்கின்றேன். ப்ரம்மம் வியாபகந்தான், ஆனல் வியாதி தான் சிதறியது என்று சொல்வாயானல் " ஒரே தேசத்திலேயே வேறு வேறுண்டாயின் அவைகளின் அந்தக் கரணங்கள் வேலை செய்து கொண் டிருக்கின்றனவா இல்லையா ? "

விடை—: வேலை செய்துகொண்டு தானிருக்கின்றன.

கேள்வி—: அந்தக்காணங்களுடனேயே ப்ரம்மமும் சென்று கொண்டிருக்கின்றதா இல்லையா ?

விடை—: இல்லை, ஸ்திரமாகவே இருக்கின்றது.

கேள்வி—: நல்லது. என்றல் அந்தக்காணங்கள் எங்கெந்த தேசத்தை விட்டுவருகின்றதோ அவ்வத் தேசத்தின் ப்ரம்மம் அக்ஞானமில்லாமலும், எங்கெந்த தேசத்தை யடைகின்றதோ அந்தந்த் தேசத்தின் ப்ரம்ம சுத்தம், அக்ஞானமடைகின்றது. என்றல் ஒவ்வொரு க்ஷணத்திலும் ப்ரம்மம் க்ஞானியாகவும் அக்ஞானியாகவும் மாறிக்கொண்டேயிருக்கின்றது. இதனல் மோக்ஷமும் பந்தமும் கூட க்ஷணபங்கமுடையதாக இருக்கவேண்டும். ஒருவனைப் பார்த்து

மற்றொருவனுக நினைவு கொள்ளமுடியாது. அவ்வாறே நேற்றையதினம் பார்த்த, கேட்டபொருள்கள் இன்றைய க்ஞாபகத்தில் இல்லை. ஏனென்றால் பார்த்ததும் கேட்டதும் வேறோர் காலத்திலேயாகும். இப்போது ப்ரம்மம் ஒன்று என்றால் சர்வக்ஞத்வம் என் இல்லை. அந்தக் கரணங்கள் வேறுபாடா யிருப்பதனுலென்றால் அப்போது ப்ரம்மம் வேறு பாடாய் விடும். அது ஜடமாகையினுலே அதில் க்ஞான மிருக்க முடியாது. கேவலம் அந்தக் கரணமோ, ப்ரம்மமோ அறிவுடையதல்ல. ஆனுல் அந்தக் கரணம் நின்றிருக்கும் படியாய் சிதாகாசமே அறிவினிருப்பிடமென்று சொல்வாயா னுலும் கூட சேதனத்திற்கே தான் அந்தக்கரணங்களின் மூலமாய் அறிவுண்டாகிறதென்றாலும் அது கண்களின் வழி யாய் என் மிகுந்த அல்பக்ஞத்வமாயிருக்கவேண்டும். ? ஆகை யால் காரணுபாதி கார்யோபாதிகளின் சேர்க்கையாலும் ப்ரம்மம் ஈஸ்வரனும் ஜீவனுமாயிருக்கமுடியாது. ஆனுல் ஈஸ் வரன் என்பதும் ப்ரம்மத்தின் பெயரே. அப்ப்ரமத்தினின்றும் வேறுகிய அனுதியான, பிறக்காத, அம்ருதஸ்வரூபமான ஜீவ னின் பெயர் ஜீவனுகும். ஜீவன் என்பது சிதாகாசத்தின் பெயரென்று சொல்வாயானுல் அது க்ஷணபங்கமுடைய தாதலால் நாசமடைந்துவிடும். அப்போது மோக்ஷசுகத்தை யனுபவிப்பது யார்? ஆகையால் ப்ரம்மம் ஜீவனேயாகவும்; ஜீவன் ப்ரம்மமேயாகவும் ஒருபோதும் இருந்ததில்லை; இருக்கிறதில்லை; இருக்காது.

கேள்வி—:

"सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयं"

அத்வைத சித்தாந்தம் என்னுவது? எங்கள் மதத்தின் படி ப்ரம்மத்தைத் தவிர சஜாதிய மானதுகள் ஒன்றுமில்லை. எல்லாம் ப்ரம்மமேயாகும். கடவுளினும் ஜீவன் வேறுபட்ட தென்ருல் "அத்வைத" சித்தாந்தம் என்னுவது?

விடை—: இம்மயக்கத்திற்காக என பயப்படுகிருய்? விசேஷ்ய, விசேஷணங்களின் ஞானத்தால் என்ன பலன்? விசேஷணம் பேதகாரகமானது என்று சொல்வாயாணுல் விசேஷணம் ப்ரகாசமானதாகவு மிருக்கவேண்டும். அத்வைதம் விசேஷண ப்ரம்மத்தினுடையதாகும். இதனுடைய தர்மமாவது—: எல்லா ஜீவன்களும் ப்ரம்மத்தினின்றும் வேறுபட்டதேயாகுமென்று சொல்வதுதான். எவ்வாறெனில்

" अस्मिन्नगरेऽद्वितीयो धनाढ्यो देवदत्तः "
" अस्यां सेनायामद्वितीयः शूरवीरो विक्रमसिंहः "

இந்நகரத்திலே இரண்டற்ற செல்வவந்தன் தேவதத்தன். இச் சேனையிலே இரண்டற்ற வீரன் விக்ரமசிம்ஹன் என்ருல் என்ன அர்த்தம்? தேவதத்தனைக் காட்டிலும் செல்வம்படைத்தவன் இந்நகரில் யாருமில்லை. விக்ரம சிம்ஹனைக் காட்டிலும் வீரன் இச்சேனையில் யாருமில்லை யென்று தான் அர்த்தம். இதேமாதிரிதான் ப்ரம்மத்திற்குச் சமமாக ஜீவனும், ப்ரக்ருதியும் இல்லை. ஆனுல் குறைந்திருக்கிறது. என்ருல் ப்ரம்மம் சதா ஒன்றே. ஆனுல் ஜீவனதும், ப்ரக்ருதியினதும் தத்துவங்கள் அநேகமாகும். இப்பாகுபாட்டைச் சொல்வது தான் அத்விதீய விசேஷணமாகும். ஆகையால் ஜீவ ப்ராக்ருதிகள் ப்ரம்மத்திற்குச் சரியானதிறமை பெற்றவைகளல்ல.

இதனால் "அத்வைத" "த்வைத" சித்தாந்தங்கள் விடுவதில்லை. வீண் கலவரத்தை யடையாதே. ஆலோசித்து அறிந்துகொள்.

கேள்வி—: ப்ரம்மத்தின் சத், சித், ஆனந்தம் ஜீவனின் இருப்பு, அனுபவம், ப்ரியரூபங்களால் ஒன்றாகிறது. பின் ஏன் கண்டிக்கின்றீர்கள் ?

விடை—: சிறிது ஒற்றுமையுடையதாலேயே இரண்டும் ஒன்றாகி விடாது. பூமி ஜடமாகத் தெரிவதைப் போலவே ஜலம், அக்னியாதிகளும், ஜடமாகத் தெரிகிறது. இதனால் எல்லாம் ஒன்றாகி விடாது. ஆனால் வாசனை, ருசி, கடினம் ஆதி குணங்கள் வேறு பட்டவைகளாகும். மனிதர்களும் புழுக்களும் கண்களாலேயே பார்க்கின்றன. வாயாலே சாப்பிடுகின்றன, காலாலேயே நடக்கின்றன, ஆனால் ஒன்றாகி விடுவதில்லை. அப்படியே பரமேச்வரன் அனந்த க்ஞான, அனந்த பல, கார்ய சம்பந்தமில்லாமை, வ்யாபகம் இவைகளில் ஜீவனிலும், ஜீவன் அல்பக்ஞத்வம், அல்பஸ்வரூபம், கார்ய சம்பந்தம் இவைகளில் கடவுளினும் வேறுபட்டதாகும். இதனால் ஜீவனும் கடவுளும் ஒன்றேயல்ல. அன்றி பரமேச்வரனிலும் ஜீவன் தாழ்ந்த சூக்ஷ்மத்தை யுடையது. ஆகையால் ஜீவனும் கடவுளும் வேறேயாகும்.

கேள்வி—:

अथोदरमन्तरं कुरुते ।
अथ तस्य भयं भवति द्वितीयाद्वै भयं भवति ॥

(ப்ருஹதாரண்யகம்).

ப்ரம்மத்திற்கும் கடவுளுக்குமுள்ள சிறிய பேதம் பயத்தாலாகிறது. ஏனென்றால் மற்றொருவரிடத்திலிருந்தே பயமுண்டாகிறது.

விடை—: இதனர்த்தம் இதுவல்ல. ஆனால் ஒன்றிலிருந்தும் மற்றொன்று வேறுபட்டிருப்பதாலேயே ஒன்றிற்கு பயமுண்டாகிறது. பயமென்பது ஒன்றிலிருந்துதான் மற்றொன்றுக் குண்டாகவேண்டும். இரண்டும் ஒன்றேயாயின் பயமுண்டாகக் காரணமில்லை.

கேள்வி—: ப்ரம்மமும் ஜீவனுங் கலந்து சதா ஒன்றாகவும், அனேகமாகவு மிருக்கிறதா அல்லது எப்போதாவது இரண்டும் ஒன்றாகி சம்பந்த மடைகின்றதா?

விடை—: இதற்கு முன்பே விடை யளித்துள்ளோம். எங்கெந்த விஷயங்களிலே இரண்டும் ஒரே குணத்தையுடையனவாயிருக்கின்றனவோ அந்தந்த குணங்களிலே இரண்டும் சம்பந்தமடைகின்றது. பலவிதமான மண்கள் வீடாக ஆவதன்முன் ஆகாயத்திலேயிருந்து, வீடானபோதும் ஆகாயத்திலேயே இருந்து, அழிந்தபோதும் ஆகாயத்திலேயே இருந்தபோதிலும் அவ்விஷயத்திலே மண்ணும் ஆகாயமும் ஒன்றாகவே எப்போதும் கலந்திருந்தபோதிலும் ஸ்வரூபத்திலே இரண்டும் ஒன்றாகவே எப்போதும் ஆகாததைப் போலவே கடவுள் வியாபகத்திலேயே சகல ஜீவன்களும் உலகமும் இருந்தபோதிலும் ஸ்வரூப சம்பந்தத்திலே எப்போதும் ஒன்றாக ஆவதில்லை.

கேள்வி—: கடவுள் குணமில்லாதவரா உடையவரா?

விடை—: இரண்டு விதமாகவு மிருக்கிறார்.

கேள்வி—: நன்று ! ஒரு வீட்டிலே இரண்டு வாயிற்படிகளை எப்போதும் வைப்பதில்லை. ஒரே பொருளில் சகுண நிர்க்குணங்களிரண்டும் எவ்வாறு இருக்கும் ?

விடை—: ஜடத்திற்கு ரூபம் ஆதிகுணங்கள் இருக்கிறது. சேதனத்திற்கு அறிதிகுணம். இதன் குணமதற்குக் கிடையாது. சேதனத்திலே விருப்பம் ஆதிகுணங்களுண்டு. ரூபம் ஆதிஜடத்தின் குணம் கிடையாது. இதனால்

"यद्गुणैस्सह वर्त्तमानं तत्सगुणम्"
"गुणेभ्यो यन्निर्गतं पृथग्भूतं तन्निर्गुणम्"

குணங்களுடனிருப்பது சகுணம். குணங்களில்லாதது நிர்க்குணம். தன்தன் கலந்த குணங்களைப் பெற்றிருப்பதாலும், அந்நியப் பொருள்களின் குணங்களைப் பெற்றிராததினாலும் எல்லாப் பொருள்களும் சகுணமும் நிர்க்குணமுமாகும். சகுணம் மாத்திரம் அல்லது நிர்க்குணம் மாத்திரம் உடைய பொருள் ஒன்றுமேயில்லை. ஒன்றிலேயே சகுண நிர்க்குணங்கள் வசிக்கின்றன. அப்படியே கடவுளும் தன் அனந்தக்ஞான, பலாதி குணங்களில் சகுணனாகவும், ரூபம், கடினம், துவேஷம் ஆதி ஜீவனின் குணங்களில் நிர்க்குணனாகவும் இருக்கின்றான்.

கேள்வி—: உலகத்திலே நிராகாரத்தை நிர்க்குணமாகவும், ஸாகாரத்தை (உருவமுடையதை) சகுணமாகவும்

சொல்லப்படுகிறது. என்றால் கடவுள் பிறப்பை யடையாத போது நிர்க்குணனாகவும், அவதாரமெடுக்கும்போது சகுண னாகவுமாகின்றான்.

விடை—: இக் கல்பனை அக்ஞானிகளதாகும். வித்தை யில்லாதவன் மிருகம்போலவே உழன்று திரிகின்றான். ஜன்னியுட னிருப்பவனின் வார்த்தைகளை பிதற்றல் என்று தள்ளிவிடுவதைப் போலவே அவ் வித்வான்களின் வார்த்தை களையும் தள்ளிவிடவேண்டும்.

கேள்வி—: கடவுள் விருப்பமுள்ளவரா வெறுப்புள்ள வரா ?

விடை—: இரண்டு மில்லாதவர். ஏனென்றால் விருப் பம் என்பது தனக்கும் வேறுபட்ட உத்தமப் பொருளில் உண்டாகிறது. கடவுளினும் வேறுபட்ட உத்தமமான பொருள் ஒன்றுமே யில்லை. ஆகையால் அவருக்கு விருப் பம் கிடையாது. விருப்பத்திலேயிருந்து விட்டுவிடுதலே வெறுப்பாகும். கடவுள் எங்கும் வியாபித்தவரானதினால் அவரால் விட்டுவிடப்படும் பொருள் ஒன்றுமேயில்லை. ஆகையால் கடவுளுக்கு வெறுப்பும் கிடையாது.

கேள்வி—: கடவுளுக்கு ஆசை உண்டா இல்லையா ?

விடை—: இல்லை. ஏனென்றால் ஆசையும்கூட தன் னிலும் மேலானவையும், தனக்கு சந்தோஷத்தையளிக்கக் கூடியவையுமான பொருள்களிலேயே உண்டாகும். கடவு ளினும் மேலானதும் அவருக்கு சந்தோஷத்தை யளிக்கக் கூடியதுமாகியபொருள் ஒன்றுமே இல்லாததினால் அவருக்கு

ஆசை கிடையாது. ஆனால் சகல உலகையும் படைத்துக் காத்து அழித்தலின் குணத்தை ஈஷணமென்று சொல்வர். அறிவாளிகள் இவ் விஷயங்களைப் பற்றி இன்னும் விளக்கமாகச் சொல்வார்கள்.

இதுவரை கடவுளின் விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னோம்.

இனி வேதத்தின் விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்வோம்.

यस्मादृचो अपातक्षन् यजुर्यस्मादपाकषन् ।
सामानि यस्य लोमान्यथर्वाङ्गिरसो मुखम् ।
स्कम्भन्तं ब्रूहि कतमः स्विदेव सः ॥

(அதர். 10-23—4-20).

ஸ்வயம்பூ, ஸர்வவ்யாபக, சுத்த, ஸனாதன, நிராகாரனாகிய பரமேச்வரன் சனாதனமான ஜீவரூப ப்ரஜைகளின் நன்மைக்காக முறையுடன் வேதத்தின் மூலமாய் சகல வித்தைகளையும் உபதேசம் செய்கிறார்.

கேள்வி—: கடவுள் உருவமுள்ளவரா இல்லாதவரா?

விடை—: இல்லாதவர்.

கேள்வி—: உருவமில்லாவிட்டால் எவ்வாறு வேதங்களை வாயினால் உச்சரித்தார்? ஏனென்றால் ஒன்றைச் சொல்ல வேண்டுமானால் நாக்கின் ப்ரயத்தினம் அவசியமிருக்கவேண்டாமா?

விடை—: கடவுள் சர்வ சக்திமான், சர்வ வ்யாபகஞ யிருப்பதினுலே ஜீவர்களுக்குத் தன் வ்யாப்தியினுலே உப தேசிக்க வாய் முதலியவை ஒன்றும் தேவையில்லை. ஏனென்ருல் நாக்கும் வாயும் தன்னிலும் வேறுபட்டவர் களின் உச்சரிப்புக்காகவே உண்டாக்கினுரே யொழிய தனக் காக அல்ல. ஏனென்ருல் வாயும் நாக்கும் இல்லாமலே மனம் அனேக காரியங்களைச் சொல்கின்றது, செய் கின்றது. நன்ருகக் காதுகளை மூடிக்கொண்டபோதிலும் பலவிதமான சப்தங்களை மனது கேட்கின்றது. அதே மாதிரிதான் ஜீவர்களுக்கு அந்தர்யாமியாயிருந்து கடவுள் உபதேசம் செய்தார். கேவலம் தன் எண்ணத்தை மற்றவர் களுக்குத் தெரிவிப்பதற்காகவே நாக்கும் வாயும் தேவை யாகிறது. ஜீவனிலும் வ்யாபித்த பரமன் அந்தர்யாமியாய் ஜீவனுக்கு வேதவித்தைகளை உணர்ப்பிக்கின்ருர். பிறகு அதை அனேகருக்கு உணர்த்துவதற்காக ஜீவன் தானடைந் திருக்கும் நாக்கு வாயின் உதவியால் சொல்கின்றது. இத ஞல் கடவுளுக்கு இது தோஷமாகாது.

கேள்வி—: எவர்களுடைய ஆத்மாவில் எப்போது வேதங்களை உணர்த்தினுர்?

விடை—:

अग्नेर्ऋग्वेदो वायोर्यजुर्वेदः सूर्यात्सामवेदः ॥

(சதபதம் 11-4-2-3).

உலக உற்பத்தியி ஞரம்பத்திலே கடவுள் அக்னி, வாயு, ஆதித்ய, அங்கிரா ஆகிய இவர்களின் ஆத்மாவிலே ஒவ் வொரு வேதத்தை உணர்ப்பித்தார்.

கேள்வி—:

यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ॥

(ஸ்வேதாஸ்வதரம் 6-18).

இம் மந்திரத்தின்படி ப்ரம்மாவே வேதங்களை உண்டாக்கினவரென்று ஏற்படுகிறது. பின் ஏன் நீங்கள் அக்னியாதிகளின் மூலமா யென்று சொல்கின்றீர்கள் ?

விடை—: ப்ரம்மாவின் ஆத்மாவானது அக்னியாதிகளின் ஆத்மாவிலே உணர்த்திற்று. பார், மனு என்ன சொல்கின்றார்—:

अग्निवायुरविभ्यस्तु त्रयं ब्रह्म सनातनम् ।
दुदोह यज्ञसिद्ध्यर्थमृग्यजुःसामलक्षणम् ।

(மனு 1-23).

கடவுள் ஆதி உற்பத்தியிலே மனிதர்களை உண்டாக்கி அக்னியாதி நால்வர்களின் மூலமாக நான்கு வேதங்களையும் ப்ரம்மா உண்டாக்கினார். ப்ரம்மா அக்னி, வாயு ஆதித்ய, அங்கிரா என்பவர்களின் ஆத்மாவிலே ருக், யஜுர், சாம, அதர்வ வேதங்களை உணர்த்தினார்.

கேள்வி—: ஏன் அந்நான்கு பேர்களின் ஆத்மாவிலே மாத்திரம் உணர்த்த வேண்டும்? இது வஞ்சனை யல்லவா ?

விடை—: மற்ற ஜீவர்களைவிட அந்நால்வரே மிகுந்த பவித்திரர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு நிகராக மற்

றவர்களிருந்ததில்லை. ஆகையினாலேயே திறமையுள்ள அவர்களின் மூலமாய் வேதங்களை உண்டாக்கினர்.

கேள்வி—: சம்ஸ்கிருதத்திலே மாத்திரம் ஏன் வேதத்தை உண்டாக்கினர். மற்ற பாஷைகளிலே ஏன் உண்டாக்கியிருக்கக் கூடாது?

விடை—: தனிப்பட்ட ஒரு தேச பாஷையிலே கடவுள் உண்டாக்கியிருந்தால் அவர் வஞ்சனைக்காரராகிவிடுவார். ஒரு தேச பாஷையிலே உண்டாக்கினால் மற்ற தேசத்தவர்கள் அதைக் கற்றறிந்துகொள்ள மிகவும் கஷ்டப்படுவார்கள். சம்ஸ்கிருதம் ஒரு தேசத்தின் பாஷையுமல்லவாதலினாலே அதிலே உண்டாக்கினர். அன்றி வேத பாஷையே மற்ற பாஷைகளுக்கெல்லாம் தாயாகும். ஆதலினால்தான் அதிலே வேதத்தை உண்டாக்கினர். சூர்யன், சந்திரன் முதலாகியவைகளை எல்லோருக்கும் பொதுவாய் உண்டாக்கியதைப் போலவே வேதங்களையும் எல்லோருக்கும் பொதுவாய் உண்டாக்கினர், என்றால் அதைப் படிக்க எல்லா மக்களுக்கும் ஒரேவித முயற்சிதான் இருக்கும். சகல பாஷைகளின் காரணமுமாகையினாலே தான்.

கேள்வி—: கடவுள் வேதங்களைச் செய்தார். மற்ற யாரும் செய்யவில்லை யென்பதற்கு என்ன அத்தாட்சி?

விடை—: கடவுளின் குண, கர்ம, ஸ்வபாவங்களுக் கனுகூலமாகவும், அவரின் பவித்திரத்திற்குச் சமமான பவித்திரமாகவும், கடவுள் எல்லாமறிந்தவரைப்போலவே வேதங்களிலும் எல்லா வித்தைகளும் சொல்லப்பட்டிருப்பதாலும்,

கடவுளே அவைகளை உண்டாக்கியிருக்க வேண்டும். கடவுள் ப்ரமையில்லாத ஞானத்தை யுடையவரைப் போலவே வேத ஞானமும் குற்ற சந்தேகங்களற்றதாகும். மற்றும் கடவுள் உலகை உண்டாக்கி வேதங்களும் ஆராய்ச்சிக்குச் சொல்லி யிருப்பதாலே அவராலேயே அவைகள் உண்டு செய்யப்பட்டிருக்கவேண்டும். இதைப் போலவே மற்ற பைபிள், குரான் ஆதிகள் இருக்கவில்லை.

கேள்வி—: வேதங்களை உண்டாக்க கடவுள் ஒருவர் தேவையில்லை. மனிதர்களே அறிவை விருத்திசெய்து கொண்டுவருங் காலத்திலே வேதத்தை யெழுதினார்கள்.

விடை—: எழுத ஒருபோதும் முடியாது. காரண மின்றி காரியமுண்டாதல் அசம்பவமாகும். காட்டுமனிதன் உலக ஸ்ருஷ்டியைக் கண்ட பிறகுங்கூட வித்வானாவதில்லை. ஆனால் அவனுக்கு கற்றுக்கொடுப்பவர் யாராயினும் இருந்தால் அவன் வித்வானாகின்றான். இக் காலத்திலுங்கூட ஒருவரிடமிருந்து கற்றுக்கொள்ளாமல் யாரும் வித்வானாவதில்லை. அவ்வாறே உற்பத்தியின் ஆதி மனிதர்கள் கடவுளின் வேத வித்தை யில்லாமல் வித்துவானாகி இருக்க முடியாது. அவர்கள் அவ்வாறு தெரிந்து கொண்டிருக்காவிட்டால் எல்லோரும் அவித்வான்களாகவே யிருப்பார்கள். ஒரு குழந்தையைப் பிறந்ததிலிருந்து ஏகாந்தமான விடத்தில் அல்லது மிருகங்கள் வசித்துக்கொண்டிருக்குமிடத்தில் விட்டு வளர்த்து வருவோமாயின் அது தன்னுடன் வசிக்கும் மிருகங்களைப் போலவேதான் இருக்கும். இதற்கு உதாரணம் இன்னும் சில காட்டு மனிதர்களைப் பார்க்கலாம்.

ஆர்யாவர்த்த தேசத்திலிருந்து படிப்பு அன்னிய நாடுகளுக்குச் சென்றிருக்காவிட்டால் அன்னிய நாடுகளிலே வசிக்கும் மக்களுள் யாரும் வித்வான்களாக இருந்திருக்க முடியாது. இங்கிலாந்தைச் சார்ந்த கொலம்பஸ் முதலியவர்கள் அமெரிக்காவுக்குச் சென்றுவரும் காலம்வரை இங்கிலாந்து வெகு மூடத்தனத்திலேயே இருந்தது. அவ்வாறேதாண் உலக உற்பத்தியிலேயும் கடவுளின் கற்பனையினுலேயே மக்கள் வித்வான்களாகும் வழிகளைப் பெற்றனர்.

स पूर्वेषामपि गुरुः कालेनानवच्छेदात् ॥

(யோகம்-ஸமாதிபாதம் 26).

தற்காலத்திலே நாம் பிறரிடமிருந்து கலை கற்று வித்வானுவதைப் போலவே உலகத்தி னுரம்பத்திலே அக்னியாதி ரிஷிகளின் குருவாயிருந்தவர் பரமேஸ்வரனுகும். ஏனென்ருல் நிமித்தமில்லாமல் நைமித்திக அர்த்தம் ஒருபோதும் சித்தியாகாது.

கேள்வி—: வேதங்களை கடவுள் சம்ஸ்க்ருத பாஷையிலே சொன்னுர். ஆனுல் அக்காலத்திலிருந்த அக்னியாதிகளுக்கு சம்ஸ்கிருத பாஷை தெரியாது. அப்படியிருக்க அவர்கள் எப்படி வேதங்களின் பொருளை தெரிந்து கொண்டார்கள் ?

விடை—: அவ்விருடிகள் சமாதிநிலையில் பரமாத்மாவின் நிலையிலே ஐக்ய மடைந்திருந்தபோது கடவுள் அவர்களுக்கு வேதங்களின் பொருளை கற்பித்தார். அநேகம் பேர்கள் அவ்

23

வேதப்பொருள்களைத் தெரிந்துகொண்ட காலத்திலே அவ் ரிஷிமுனிகளின் இதிகாசங்களுடன் நூல்களை உண்டாக்கினார்கள். அவைகளின் பெயர் "ப்ராம்மணங்கள்" ஆகும். ப்ரம்மத்தின் வ்யாக்யானத்தைச் சொல்லும் நூல் "ப்ராம்மணம்" ஆகும்.

ऋषयो (मन्त्रद्रष्टारः)………मन्त्रान्सम्प्रादुः ॥

(நிருக்தம் 1-10).

எங்கெந்த மந்திரங்களின் பொருளை எங்கெந்த ரிஷிகள் தெரிந்துகொண்டு கற்பித்தார்களோ அந்தந்த மந்திரங்களுடன் அந்தந்த ரிஷிகளின் பெயர்கள் ஞாபகார்த்தமாக எழுதப்பட்டு வருகின்றன. ஆனால் சிலர் அம்மந்திரத்தின் அதிகாரியே அவ் ரிஷிகள் என்று சொல்வது மிகுந்த தப்பிதமாகும். அவர்கள் கேவலம் அர்த்தத்தை மாத்திரமே கண்டு சொன்னார்கள்.

கேள்வி—: வேதம் என்பது எங்கெந்த புஸ்தகங்களின் பெயர்?

விடை—: ருக், யஜுர், ஸாம, அதர்வ என்பவைகளின் மந்திரத் தொகுதிகளின் பெயர் வேதம் ஆகும்.

கேள்வி—:

मन्त्रब्राह्मणयोर्वेदनामधेयम् ॥

இத்யாதி காத்யாயன முனியின் சூத்திரங்கள் என்னுவது?

விடை—: மந்திர சம்ஹிதையின் ஆரம்பத்திலும் அத்யாய முடிவிலும் வேத சப்தம் பழமையாக எழுதப்பட்டு வருகிறது. ப்ராம்மண க்ரந்தங்களில் அவ்வாறு எழுதப் படவில்லை. அன்றி நிருக்தத்தில்—:

इत्यपि निगमो भवति । इति ब्राह्मणम् ॥

(நிருக். 5-3-4)

छन्दोब्राह्मणानि च तद्विषयाणि ॥ (அஷ்டாத். 4-2-66).

வேதம் என்பது மந்திர பாகங்கள், ப்ராம்மணம் என்பது வ்யாக்யான பாகங்கள் என்று நன்கு விளங்குகின்றது. மற்றும் இதைக் குறித்து விசேஷமாக அறிய வேண்டுவோர் "ருக் வேதாதி பாஷ்யபூமிகா" வில் பார்த்துக் கொள்ளலாம். அதிலே காத்தியாயனர் முதலியவர்களின் சூத்திரங்கள் தப்பானவைகள் என்று நிரூபித்திருக்கிறோம். அன்றி அவைகளை சரியானது என்று எடுத்துக்கொண்டால் வேதம் பழைய நூல் என்பது கெட்டுவிடுகிறது. ஏனென்றால் ப்ராம்மண நூல்களில் அநேக ரிஷிகள் அரசர்களின் கதைகளும் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் சரித்திரம் என்பது அவர்களின் பிறப்புக்குப் பிறகே எழுதப்பட வேண்டும். வேதங்களிலே யாருடைய சரித்திரமும் கிடையாது. வித்தையின் சம்பந்தமாக எல்லா வார்த்தைகளும் சொல்லப்பட்டிருக்கிறது. ஏதாவதொரு மனிதனுடைய விசேஷத்தையோ கதையையோ வேதத்தில் காணமுடியாது.

கேள்வி—: வேதங்களுக்கு எத்தனை கிளைகளுண்டு?

விடை—: பதினோராயிரத்தி இருபத்தியேழு.

கேள்வி—: கிளைகள் என்பது என்ன ?

விடை—: வ்யாக்யானங்கள் கிளைகள் என்று சொல்லப்படுகின்றன.

கேள்வி—: உலகத்திலே வித்வான்கள் வேதங்களின் அவயவங்களிலிருந்து உண்டாகிய பாகங்களை கிளைகள் என்று சொல்கின்றார்கள்.

விடை—: சரியான பொருளின்படி அர்த்தம் கொண்டால் இது சரிதான். ஏனென்றால் கிளைகள் எல்லாம் ஆஸ்வலாயனர் ஆதி ரிஷிகளின் பெயருடன் விளங்குகின்றன. ஆனால் மந்திரபாகங்கள் எல்லாம் கடவுளின் பெயராலேயே விளங்குகின்றன. நான்கு வேதங்களையும் கடவுள் செய்தார் என்று நம்புவதைப் போலவே ஆஸ்வலாயனம் ஆதிகிளைகளை அவ்வவ் ரிஷிகள் செய்ததாக நம்புகிறோம். எல்லா கிளைகளிலேயும் வேத மந்திரங்களையே விரித்துச் சொல்லியிருக்கின்றது. தைத்ரீயம் என்னும் கிளையில் "இஷேத்வோர்ஜ்ஜே" எனும் மந்திரத்தை யெடுத்துகொண்டு வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் வே:தமந்த்ர சம்ஹிதையில் இவ்வாறு ஒரு மந்திரத்தின் வியாக்யானமும் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கடவுள் செய்த நான்கு வேதங்களும் அடிமரமாகும். மற்ற கிளைகளெல்லாம் ரிஷிமுனிவர்கள் செய்தவைகளே யன்றி கடவுள் செய்ததல்ல. மற்றும் இதன் விசேஷங்களை "ருக்வேதாதி பாஷ்ய பூமிகா" வில் பார்த்துக்கொள்ளலாம். பெற்றோர்

தன் குழந்தையின் மேன்மையை விரும்புவதைப் போல சகல மக்களின் மேன்மைக்காகவுமே கடவுள் வேதங்களை உண்டாக்கினார். அதன்படி ஒழுகும் மனிதர்கள் அந்தகாரத்திலிருந்து விலகி சூர்யனைப்போன்ற ப்ரகாசத்திலே செல்கின்றார்கள். இவர்களே சுகத்தையும் ஆயுளையும் பெறுகிறார்கள்.

கேள்வி—: வேதம் நித்யமா அநித்யமா?

விடை—: நித்யம். ஏனென்றால் கடவுள் நித்யமானவரானதினாலே அவரின் அறிவும் நித்யமேயாகும். நித்யமான பொருளின் குணகர்மஸ்வபாவங்களும் நித்யமேயாகும். அநித்ய பொருள்களினது அநித்யமேயாகும்.

கேள்வி—: இந்த புஸ்தகமும்கூட நித்யமானதா?

விடை—: இல்லை. புஸ்தகம் மையால் காகிதத்தில் எழுதப்பட்டதாகும். அது எப்படி நித்யமாகும்? ஆனால் அதில் எழுதப்பட்டிருக்கும் சப்த, அர்த்த சம்பந்தம் நித்யமாகும்.

கேள்வி—: கடவுள் ரிஷிகளுக்கு க்ஞானத்தைக் கொடுத்திருக்கலாம். அதைக்கொண்டு அவர்களே வேதங்களை உண்டாக்கியிருக்கக் கூடுமல்லவா?

விடை—: க்ஞானமானது அதைத் திருப்பும் வழியே செல்லும். ஞானம் அதைச் செலுத்துபவனில்லாமல் செல்லாது. காயத்ரீயாதி சந்தங்கள் ஷட்ஜம், உதாத்த ஆதிஸ்வரங்களிலே விதிப்படி செய்ய ஸர்வக்ஞனுக்கன்றி

மற்றவர்களால் முடியாது. என்றால் சகல ஞானமுமடங்கிய வேதத்தை எவ்வாறு மனிதர்களுண்டாக்கி யிருக்கக்கூடும்? வேதங்களைக் கற்ற பிறகு வியாகரணம், நிருக்தம் ஆதி கிரந்தங்களை வித்தையின் ப்ரகாசத்திற்காக ரிஷிமுனிகள் செய்தார்கள். கடவுள் வேதங்களைச் செய்திருக்காவிட்டால் யாரும் எதையும் செய்திருக்கமுடியாது. ஆகையால் வேதம் கடவுளால் செய்யப்பட்டதேயாகும். இதன்படியே சகல மக்களும் ஒழுகவேண்டும். ஒருவர் மற்றவரை 'உன் மதம் எது" என்று கேட்டால் "என் மதம் வேதம்" என்றுதான் பதில் சொல்லவேண்டும். என்றால் வேதத்தில் சொன்னபடியே சகலரும் அனுசரிக்கவேண்டும்.

அடுத்த அத்தியாயத்திலே ஸ்ருஷ்டியின் சம்பந்தமாய் எழுதுவோம். இவ்வத்தியாயத்தில் கடவுள், வேதம் என்பவைகளைக் குறித்து சுருக்கமாக ஆராய்ந்தோம்.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்

अथ सृष्ट्युत्पत्तिस्थितिप्रलयविषयान् व्याख्यास्यामः।

इयं विसृष्टिर्यत आ बभूव यदि वा दधे यदि वा न।
यो अस्याध्यक्षः परमे व्योमन्त्सो अङ्ग वेद यदि वा न वेद
॥ १ ॥

तम आसीत्तमसा गूढमग्रे प्रकेतं सलिलं सर्वमा इदम्।
तुच्छ्येनाभ्वपिहितं यदासीत्तपसस्तन्महिना जायतैकम्
॥ २ ॥

(ருக் 10, 129, 7, 3).

हिरण्यगर्भः समवर्त्तताग्रे भूतस्य जातः पतिरेक आसीत्।
स दाधार पृथिवीं द्यामुतेमां कस्मै देवाय हविषा विधेम
॥ ३ ॥

(ருக் 10, 121, 1).

पुरुष एवेदꣳ सर्वं यद्भूतं यच्च भाव्यम्।
उतामृतत्वस्येशानो यदन्नेनातिरोहति ॥ ४ ॥

(யஜுர் 31, 2).

यतो वा इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति।
यत्प्रयन्त्यभिसंविशन्ति तद्विजिज्ञासस्व तद् ब्रह्म ॥ ५ ॥

(தைத்ரீ-ப்ருகு 1).

ஏ (அங்க) மனிதர்களே! இப் பலவிதமான சிருஷ்டியை உண்டாக்கினவன் இச்சகலத்தையும் காப்பாற்றி அழிப்பவன், சகலத்தில் வியாபித்திருப்பவன்; சகலத்தின் தலைவன் பரமாத்மனேயாகும். அவரையே நீ அறி. மற்றவரை உலகத் தலைவனென மதியாதே ‖ 1 ‖ உலக உற்பதிக்கு முன்பாக சகல உலகமும் அந்தகாரத்தால் சூழப்பட்டிருந்தது. இரவு ரூபமாய் அறியத்தகாததாயும், கடவுளின் உதவியை எதிர்பார்த்தும் இருந்தது. பரம கருணாநிதியாகிய பரமன் காரண ரூபத்திலிருந்து கார்ய ரூபத்தை செய்தார் ‖ 2 ‖ மனிதர்களே! சூர்யாதி சகல ஒளிகளின் ஆதாரன்; உலகை உண்டாக்கி காப்பாற்றி அழிப்பவன் ஆகிய இரண்டற்ற தலைவனாகிய இவ்வுலக உற்பத்தியின் முன்பாக இருப்பவராயிருந்தார். அவரே சூர்யாதி சகலத்தையு முண்டாக்கினார். அவரை அன்புடனே பக்தி செய்யுங்கள் ‖ 3 ‖ ஏ மனிதர்களே! பூர்ணபுருடன், நாசரகிதன், ஜீவத்தலைவன், சகல ஜடத்தின் உற்பத்தித் தலைவனே இச்சகல சென்ற, இருக்கும் உலகங்களை உண்டாக்கினவனாகும் ‖ 4 ‖ பூமியாதிகள் யாரால் உண்டாக்கப்பட்டனவோ; எவரால் ஜீவனும், ப்ரளயமு முண்டாகின்றனவோ அவரை ப்ரம்மமென்று அறிவீர்களாக. ‖ 5 ‖

जन्माद्यस्य यतः । (சாரீரிகசூத். 1-1-2).

உலகை உண்டாக்கி, காப்பாற்றி, அழிப்பவனையே ப்ரம்மமென்று அறியவேண்டும்.

கேள்வி—: இவ்வுலகம் கடவுளால் உண்டாக்கப்பட்டதா மற்றவர்களாலா?

விடை—: நிமித்தகாரணம் பரமாத்மாவினுல் ஆனது. ஆனுல் இதன் உபாதானகாரணம் ப்ரக்ருதியாகும்.

கேள்வி—: என்ன, ப்ரக்ருதியையும் கடவுள் உண்டாக்க வில்லையா?

விடை—: இல்லை. அது அனுதி.

கேள்வி—: ஆதி யென்று எதற்குச் சொல்வது? எத்தனை பொருள்கள் அனுதியானவைகள்?

விடை—: கடவுள், ஜீவன், உலக காரணமாகவே ப்ரக்ருதி இம்மூன்றும் அனுதியானவைகள்.

கேள்வி—: இதற்கு என்ன அத்தாட்சி?

விடை—:

द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते ।
तयोरन्यः पिप्पलं स्वाद्वत्त्यनश्नन्नन्यो अभिचाकशीति ॥ १ ॥
शाश्वतीभ्यः समाभ्यः ॥ २ ॥

(ருக். 1—164—20 ; யஜுர் 40-8).

சேதனம் பாலனம் ஆதிகுணங்களால் சமமான ஜீவனும் ப்ரம்மமும் வ்யாபகபாவத்தால் கூடிய பழைய அனுதிகளாகும். அப்படியே கார்யயுக்தமாகிய கிளைகளையுடைய மூலரூபமான இயற்கையெனும் மரமும் அனுதியாகும். இம்மூன்றின் குணகர்மஸ்வபாவங்களும் அனுதியாகும். இரண்டில் ஒன்ருன ஜீவன் எனும் பறவை சம்சாரமய விருக்ஷத்திலேயுள்ள பாப புண்யங்களெனும் கனிகளைப் புசித்துக்

கொண்டிருக்கின்றது. கடவுளெனும் மற்றோர் பறவை ஒரு காரியமும் புரியாது சகல தசைகளிலும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. கடவுளினும் ஜீவன், ஜீவனிலும் ப்ரக்ருதி பின்ன ரூபங்களையுடைய அனாதிகளாகும் ॥1॥. அனாதியான, பழமையான ஜீவரூபமான ப்ரஜைகளுக்காக வேதங்களின் மூலமாய் சகல வித்தைகளையும் கடவுள் அறிவித்தார் ॥2॥.

अजामेकां लोहितशुक्लकृष्णां बह्वीः प्रजाः सृजमानां स्वरूपाः ।
अजो ह्येको जुषमाणोऽनुशेते जहात्येनां भुक्तभोगामजोऽन्यः ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷத் 4-5).

கடவுள், ஜீவன், ப்ரக்ருதி இம்மூன்றும் எப்போதும் ஜன்ம மில்லாதவைகள். என்றால் இம்மூன்றுமே உலகத்திற்குக் காரணமாகும். இதற்குக் காரண மொன்றுமில்லை. இவ் வனாதியான ப்ரக்ருதியின் போகத்தை அனாதியான ஜீவன் செய்துகொண்டு வருகின்றது. ஆனால் கடவுள் அதை போகிப்பதில்லை. கடவுள் ஜீவன் லக்ஷணங்களை கடவுள் விஷயமாய் சொன்னபோது சொல்லியிருக்கிறது. இப்போது ப்ரக்ருதியின் லக்ஷணத்தை காண்போம்—:—

सत्त्वरजस्तमसां साम्यावस्था प्रकृतिः प्रकृतेर्महान् महतोऽहङ्कारोऽहङ्कारात् पञ्चतन्मात्राण्युभयमिन्द्रियं पञ्चतन्मात्रेभ्यः स्थूलभूतानि पुरुष इति पंचविंशतिर्गणः ॥

(சாங்க்யம் 1-61).

சுத்தம், மத்தியம், அதமம் ஆகிய மூவித ஜடப் பொருள்களின் சேர்க்கை ப்ரக்ருதியாகும். அதிலிருந்து புத்தி, புத்தியிலிருந்து அஹங்காரம், அதிலிருந்து பஞ்சதன் மாத்திரைகள், பஞ்சதன்மாத்திரைகளிலிருந்து பூமியாதி பஞ்ச பூதங்கள் ஆக இருபத்திநாலும் ஐந்தாவதாக புருஷனும் உண்டாயிற்று. இதிலே ப்ரக்ருதியானது விகாரமில்லாதது. மகத்தத்வம் (புத்தி), அஹங்காரம், பஞ்ச சூக்ஷ்ம பூதங்கள் இவைகள் ப்ரக்ருதியின் காரியம். இந்திரியங்களும் மனமும் ஸ்தூல பூதங்களின் காரணம். புருடன் ப்ரக்ருதியின் உபாதி காரணமுமல்ல, காரியமுமல்ல.

கேள்வி—:

सदेव सोम्येदमग्र आसीत् ॥ १ ॥
असद्वा इदमग्र आसीत् ॥ २ ॥
आत्मैवेदमग्र आसीत् ॥ ३ ॥
ब्रह्म वा इदमग्र आसीत् ॥ ४ ॥

இவ்வுலகம் உற்பத்திக்குமுன் சத்தானது ||1||. அசத்தானது ||2||. ஆத்மாவானது ||3||. ப்ரம்ம ஸ்வரூபமாயிருந்தது ||4||. பிறகு—:

तदैक्षत बहुः स्यां प्रजायेयेति ।
सोऽकामयत बहुः स्यां प्रजायेयेति ॥

(தைத்ரீயம்-ப்ரம்மானந்தவல்லி 6).

பரமாத்மாவே தன்னிச்சையால் பல ரூபங்களாக மாறினார்.

सर्वं खल्विदं ब्रह्म नेह नानास्ति किञ्चन । (உபநிஷத்)

இச்சகல உலகமும் ப்ரம்மமேயாகும். அதில் வேறு பொருள் எதுவும் இல்லை. ஆனால் சகலமும் ப்ரம்மரூபமே யாகும்.

விடை—: ஏன் இவ் வசனங்களை அனர்த்தம் செய்கிறாய்? ஏனென்றால் அதே உபநிஷத்துக்களில்,

(एवमेव खलु) सोम्यान्नेन शुङ्गेनापो मूलमन्विच्छद्भिस्सोम्य शुङ्गेन तेजोमूलमन्विच्छ तेजसा सोम्य शुङ्गेन सन्मूलमन्विच्छ सन्मूलाः सोम्येमाः सर्वाः प्रजाः सदायतनाः सत्प्रतिष्ठाः ।
(சாந்தோக். 6-8-4)

ஏ ஸ்வேதகேதா! அன்ன ரூபமான பூமியின் மூல காரணம் ஜலமென நீ அறி. ஜலத்தின் மூலம் தேஜஸ், தேஜஸ்ஸின் மூலம் நித்யமான ப்ரக்ருதியென நீ அறி. இப் ப்ரக்ருதியே சகல உலகத்தின் மூலவீடு. இருக்குமிடம். இச்சகல உலக உற்பத்திக்கு முன்பு அசத்துக்குச் சமமாய் ஜீவாத்மா ப்ரம்மம் ப்ரக்ருதியில் லீனமடைந்து இருந்தது. அபாவம் இருக்கவில்லை.

सर्वं खल्विदं ब्रह्म तज्जलानि शान्त उपासीत ।
नेह नानास्ति किंचन ॥ (சாந். 3-14-1; கடோ. 2-4-11.)

சரீரத்துடன் அவயவங்கள் இருக்கும்வரை சகல காரியமும் பூர்ணமாகப் புரியத்திறமை பெற்றிருந்து, அவயவங்கள் குறைந்தபோது காரியம் புரியத் திறமை குறைந்துவிடுவதைப்போல ஓர் வாக்கியத்தின் தொடர்புகளை முழுவதையும்

கவனியாது கொஞ்சத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு அர்த்தம் செய்யப்போனுல் அதன் உண்மையான அர்த்தம் விளங்காது. ஆகையால் முன் சொன்னதின் அர்த்தம் உண்மையாக—: "ஏ ஜீவ! நீ ப்ரம்மத்தை உபாசி. அப்பிரம்மத்தாலேயே உலகம் உண்டாகி நிலைத்திருக்கிறது. அவனுலேயே சகல உலகமும் அறியப்படும் நிலைமையிலிருக்கிறது. அவன் சதா இதிலே வசித்துக்கொண்டிருக்கின்ருன். அவனை விட்டு மற்றவரை உபாசிக்கக்கூடாது. இங்குள்ள எப்பொருளும் அவனுக்குச் சமமில்லை. ஆனுல் எல்லாமும் அவனில் ஆதாரத்திலேயே இருக்கின்றன." என்பதுதானுகும்.

கேள்வி—: உலகத்தின் காரணம் எத்தனை ?

விடை—: நிமித்த, உபாதான, சாதாரண ஆக மூன்று காரணங்கள். நிமித்தம் என்பது செய்ததின் பெயர்; உபாதானம் என்பது செய்யப்பட்டதின் பெயர்; சாதாரண காரணமென்பது செய்யப்படுவதற்கு உதவியாயிருந்ததின் பெயராகும். நிமித்தகாரணம் இரண்டு விதமாகும். சகலத்தையும் உண்டாக்கி காப்பாற்றி அழிக்கும் முக்ய நிமித்த காரணம் கடவுள், அவனின் சிருஷ்டியின் துணைகொண்டு அனேகவித காரியங்களைச் செய்துகொள்பவனுகிய ஜீவன் சாதாரண நிமித்தகாரணம். உபாதானகாரணம் பரமாணுக்களின் கூட்டாகிய ப்ரக்ருதியாகும். அது ஜடமானதினுலே தன்னைத்தானே சேர்த்துக்கொள்ளவும் பிரித்துக்கொள்ளவும் முடியாது. மற்ருெருவரால் சேர்க்கப்படின் சேர்ந்து பிரிக்கப்படின் பிரிந்துவிடமுடியும். அவ்வாறு கடவுளின் சக்தியாலே பலவித மாறுபாடுகளுடனமைந்த இவ்வுலகம்

ஜீவனின் ஆதாரத்திலிருக்கிறது. மற்றும் கடவுளின் ஞானம், தர்சனம், பலம், திசை, காலம் இவைகளெல்லாம் சாதாரண காரணமாகும். குடத்தைச் செய்யும் குயவன் நிமித்த காரணம். களிமண் உபாதானகாரணம். சக்கிரம் தண்டம் முதலியவைகள் சாதாரண காரணமாகும். இம் மூவித காரணங்களு மின்றி எந்தப் பொருளும் உண்டாகமாட்டாது. அழியவும் முடியாது.

கேள்வி—: தற்கால வேதாந்திகள் கேவலம் கடவுள் மாத்திரமே உலகத்தின் பின்னமில்லா நிமித்த உபாதான காரணங்களென்று சொல்கின்றார்கள் !

यथोर्णनाभिः सृजते गृह्णते च ॥ (முண்டகம் 1-1-7).

எட்டுக்கால் பூச்சியானது தானாகவே தன்னிடமிருக்கும் நூலைக்கொண்டு வீடு கட்டி வசிப்பதைப்போல கடவுளும் தன்னிருந்தே உலகை உண்டாக்கி தானே அதில் வசிக்கின்றார். அவர் விளையாட நினைத்தமாத்திரத்திலே எல்லாமுமாயிற்று.

आदावन्ते च यन्नास्ति वर्त्तमानोऽपि तत्तथा ॥
(கௌடபாதீயம் 31).

முதலில் இல்லாதது கடைசியில் இருக்காது. நிகழ் காலத்திலும் அது இருக்காது. ஆனால் சிருஷ்டியினாரம்பத்திலே உலகம் இருக்கவில்லை. ஆனால் பிரம்மா இருந்தது. ப்ரளயத்தின் முடிவில் உலகம் இருக்காது. ப்ரம்மா இருக்கும். என்றால் நிகழ்காலத்திலேயும் சகல உலகமும் ஏன் ப்ரம்மமாயில்லை ?

விடை—: நீர் சொல்வதைப்போலவே ப்ரம்மா யிருப்பதாயிருந்தால் அது பரிணும முடையதாகவும் அவஸ்தைகளுடையதாகவும் ஆய்விடும். உபாதான காரணத்தின் குணகர்மஸ்வபாவம் காரியத்திலும் வருவதாயிருக்க வேண்டும்.

कारणगुणपूर्वकः कार्यगुणो दृष्टः ॥

(வைசேஷிகம் 2-1-24).

உபாதானகாரணத்திற்குத் தகுந்தபடியே கார்யத்தின் குணமுமிருக்கும். ப்ரம்மா சச்சிதானந்த ஸ்வரூபர். ஆனால் கார்யரூபமான உலகமோ அசித், ஜடம், அனந்தமில்லாதது. ப்ரம்மம் பிறக்காதது. உலகம் உண்டானது. ப்ரம்மா காணப்படாதது. உலகம் காணப்படுவது. பிரம்மம் அகண்டம். உலகம் கண்டம். ப்ரம்மத்திலிருந்தே உண்டானதாயின் ப்ரம்மமும் இவ்வுலகைப் போலவேதான் இருக்கவேண்டும். அன்றி நீ கொடுத்த எட்டுக்கால் பூச்சியின் அத்தாட்சியும் உன் கொள்கைகளுக்கு விரோதமானதேயாகும். ஏனென்றால் அச் சரீரத்திலிருந்து வரும் நூல் உபாதானம்; ஜீவாத்மா நிமித்தமாகும். இதுகூட கடவுள் அற்புதத்தை விளக்குவதேயாகும். ஏனென்றால் மற்ற பிராணிகளின் சரீரத்திலிருந்து ஜீவர்கள் நூலைச் செய்யமுடியாது. அப்படியே வ்யாபக ப்ரம்மம் தன் உள்ளாக வ்யாபித்திருக்கும் ப்ரக்ருதியெனுங் காரணத்திலிருந்து ஸ்தூல உலகைச் செய்து வெளிச்சம் ஸ்தூல ரூபத்தைச் செய்து அதனுள்ளே தானும் பிரவேசித்து சாக்ஷியாக ஆனந்தமயமாய் விளங்கிக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறு உலகத்தை உண்டாக்குபவனையே ஜீவன் விசாரித்துத் தெரிந்துகொள்கின்றது. பிரளயத்திலே பரமேஸ்வரன், முக்திபெற்ற ஜீவன்கள் தவிர அவரை யாரும் தெரிந்துகொள்வதில்லை. அன்றி நீ சொன்ன இந்த காரிகை மயக்கத்தின் மூலமாகும். ஏனென்றால் ஸ்ருஷ்டிக்கு முன்பாக இவ்வுலகம் இதைப்போல் இருக்கவில்லை. மறுபடி பிரளயத்திற்குப் பிறகுங்கூட இப்படியே இருக்காது. ஏனென்றால்,

तम आसीत्तमसा गूढमग्रे । (ருக் 10, 129, 3).

आसीदिदं तमोभूतमप्रज्ञातमलक्षणम् ।
अप्रतर्क्यमविज्ञेयं प्रसुप्तमिव सर्वतः ॥ (மனு 1-5).

இச்சகல உலகமும் உற்பவத்திற்கு முன்பாக அந்தகாரத்தால் சூழப்பட்டிருந்தது. பிரளயத்திற்குப் பிறகுங் கூட அப்படியேதானிருக்கும். அக்காலத்திலே தெரிந்து கொள்பவர்களோ; தர்க்கம் செய்பவர்களோ; அடையாளங்களையுடைய இந்திரியங்களை யுடையவர்களோ இருக்க மாட்டார்கள். எல்லோரும் இப்போதுதான் போவது மிருப்பதும்.

கேள்வி—: உலகை உண்டாக்குவதிலே கடவுளுக்கு என்ன ப்ரயோஜனம்?

விடை—: உண்டாக்காமலிருப்பதிலே என்ன ப்ரயோஜனம்?

கேள்வி—: உண்டாக்காம லிருந்திருந்தால் அவரும் ஆனந்தமாயிருந்திருப்பார். ஜீவர்களும் சுகதுக்கங்க ளின்றி இருந்திருக்கும்.

விடை—: இது சோம்பேறிகளின் வார்த்தை. பிரள யத்திலே ஜீவர்கள் சுகத்தையோ துக்கத்தையோ அனுபவிக் கின்றனவா? உண்மையிலே ப்ரளயத்திலே ஜீவன் அனு பவிக்கும் சுகத்தைவிட உலகத்திலேயே அதிகம் அனுபவிக் கின்றது. ஏனென்றால் தன் கர்மாக்களை ஒழிக்கத்தகுந்த வழியில்லாமல் வேலை செய்யத் திறமையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் ஜீவன் உலகம் படைக்கப்பட்ட வுடனே அதிலே பிறப்பை யடைந்து நற்காரியங்களைப் புரிந்து உண் மைச் சுகமாம் முக்தியை அடைய முயலுகின்றது. உன்னை யாராவது "கண்களால் என்ன பிரயோஜனம்?" என்று கேட்டால் நீ "பார்த்தல்" என்று பதிலளிப்பாய். அதேபோல் கடவுளிடமிருக்கும் உலகை உண்டாக்குந் திறமையாகிய விக்ஞானம், பலம் முதலியவைகள் உலகை உண்டாக்காமலிருப்பதாய் இருந்தால் என்ன பிரயோஜ னம்? ஆகையால் கடவுளின் அனந்தசாமர்த்யம், நியாயம், தயை, முதலியவைகளின் உபயோகத்திலேயே உலக உற் பத்தியைச் செய்கின்றார். கண்களின் சுபாவம் பார்த்தலைப் போலவே கடவுளின் சுபாவம் உலகத்தை உண்டாக்கிக் காப்பாற்றி யழித்தலேயாகும்.

கேள்வி—: மரம் முதலா விதை முதலா?

விடை—: விதை. ஏனென்றால் பீஜம், ஹேது, நிதா னம், நிமித்தம், காரணம் இத்யாதி சப்தங்கள் ஒரே அர்த்

தத்தையுடையதுகள். காரணத்தின் பெயர் பீஜமானதி ஞலே காரியத்திற்கு அது முதலாவதாகின்றது.

கேள்வி—: கடவுள் எல்லாம் வல்லவராயின் காரணத்தையும் ஜீவனையுங்கூட அவர் உண்டாக்க முடியுமல்லவா? இல்லையென்றால் எப்படி எல்லாம் வல்லவராகும்?

விடை—: சர்வ சக்திமான் என்றதின் அர்த்தம் முன்பே எழுதியிருக்கிறது. அதை அசம்பவமானவைகளுக்கெல்லாம் உபயோகப்படுத்தக் கூடாது. அன்றி அசம்பவத்திலும் கடவுளின் வல்லமை செல்லுமென்றால் தானாக இறந்துவிடுவாரா? தன்னைப்போன்ற மற்றோர் கடவுளை உண்டாக்குவாரா? அநியாயம் செய்வாரா? கண்ட பெண்களுடன் சேர்ந்து கணக்கில்லாக் குழந்தைகளைப் பெறுவாரா? ஆகையால் சுபாவ குணத்திலிருந்து மாறுபட யாராலும் முடியாது. நெருப்பு குளிர்ச்சி, தண்ணீர் உஷ்ணமாக ஒருபோது மாகாது. கடவுளின் குணம் சத்யம் முடிந்தது. இதை மாற்ற, திருத்தமுடியாது. ஆகையால் எல்லாம்வல்லவரென்றால் தன் காரியங்களைச்செய்ய மற்றொன்றின் உதவி வேண்டாதவர் என்றுதான் அர்த்தமாகும்.

கேள்வி—: கடவுள் உருவமுடையவரா இல்லாதவரா? உருவ மில்லாதவரென்றால் கை முதலியவைகளும் இல்லையாதலின் அவர் உலகத்தைச் செய்திருக்கமுடியாது. உருவமுடையவரென்றால் அப்போது சரிதான்.

விடை—: கடவுள் உருவமில்லாதவர். உருவ முடையவர் கடவுளல்ல. ஏனென்றால் அளவுள்ள சக்திகளாகி, பசி

தாகம், மூப்புபிணி முதலியவைகள் சரீரத்திற்கு உண்டாகும். இவைகள் ஜீவனின் குணமேயன்றி கடவுளின் குணமல்ல. நீயும் நானும் உருவ முள்ளவர்களாகையால் சூக்ஷ்மமாயிருக்கும் ப்ரக்ருதியை நாம் கையில் பிடிக்கமுடியாது. உருவமுள்ளவரேயானுல் அவரும் நம்மைப்போல பிரக்ருதியைப் பிடிக்கமுடியாது. கடவுள் உருவ மில்லாதவராயிருந்தால்தான் அளவிடமுடியா அனந்த பல பராக்கிரமமுடையவரா யிருக்கமுடியும். சகல காரியங்களேயும் செய்யமுடியும். அவர் ப்ரக்ருதியைக் காட்டிலும் சூக்ஷ்மமாய் ப்ரக்ருதியினுள்ளும் பரவி இருக்கின்ருராதலால் அதைப் பிடித்து உலகை உண்டாக்குகின்ருர்.

கேள்வி—: உருவமுள்ள குழந்தையைப் பெற்றவர்களும் உருவ முள்ளவர்களாகவே யிருக்கவேண்டும். அதே மாதிரி கடவுள் உருவ மில்லாதவரேயானுல் அவரால் உண்டாகியிருக்கும் உலகமும் உருவமில்லாததாகவேதா னிருக்க வேண்டும்.

விடை—: நீ கேட்பது குழந்தையின் கேள்வியாயிருக்கிறது. ஏனென்ருல் நாம் முன்பே கடவுள் உலகத்தின் உபாதான காரணமல்ல, நிமித்தகாரண மென்று சொல்லி விட்டோம். உலகத்தின் உபாதானகாரணம் ஸ்தூலமாகிய ப்ரக்ருதியேயாகும்.

கேள்வி—: காரணமின்றி கடவுளுங்கூட காரியத்தைச் செய்யமுடியாதா?

விடை—: முடியாது. ஏனென்ருல் இல்லாதது உண்டாதல் பொய். மலடியின் புத்திரன் ஒருபோது மில்லே.

இல்லாததை உண்டென்று சொல்வது பைத்தியக்காரர்களின் வார்த்தையாகும்.

கேள்வி—: காரணமின்றி காரியம் ஆவதில்லை யென்றுல் காரணத்தின் காரணமென்ன ?

விடை—: தனிப்பட்ட காரணமாகவே யிருப்பது எக்காரியமாகவுமாவதில்லை. ஆனுல் மற்ருென்றிற்கு இக்காரணத்தாலேற்படும் நிலையே காரியமாகும். "இங்கே தண்ணீர் இருக்க என்ன காரணம்?" "வீட்டுக்குச் செலவு செய்வதற்காக" என்றபோது தண்ணீரே வீடாகிவிடுகிறதில்லை. இதே போல்தான் காரணமே காரியமாவதில்லை. மற்ருென்றை காரியமாகச் செய்வதுதான் காரணமாகும்.

मूले मूलाभावादमूलं मूलम् ॥

(ஸாங்க்யம் 1-67).

காரணத்திற்குக் காரணமில்லை. அகாரணமான சகல காரியத்திற்குதான் காரணமாகிறது. எந்தக் காரியமும் முடிவதற்கு முன்பாக அதற்கு மூன்று காரணங்களிருந்திருக்கவேண்டுவதவசியம். துணி யெனுங் காரியத்திற்கு பஞ்சு, தறி, தறியாளன் என்று மூன்று காரணங்களுண்டு. இவ்வாறேதான் உலகமும் கடவுள், ப்ரக்ருதி, காலமாதிகள் என்ற மூன்ருல் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இம் மூன்றில் ஒன்றில்லையாயினும் உலகம் உண்டாயிருக்காது.

अत्र नास्तिका आहुः-शून्यं तत्त्वं भावो विनश्यति वस्तुधर्मत्वाद्विनाशस्य ॥ १ ॥

(சாங்க்யம் 1-44).

अभावाद्भावोत्पत्तिर्नानुपमृद्य प्रादुर्भावात् ॥ २ ॥
ईश्वरः कारणं पुरुषकर्माफल्यदर्शनात् ॥ ३ ॥
अनिमित्ततो भावोत्पत्तिः कण्टकतैक्ष्ण्यादिदर्शनात् ॥ ४ ॥
सर्वमनित्यमुत्पत्तिविनाशधर्मकत्वात् ॥ ५ ॥
सर्वं नित्यं पञ्चभूतनित्यत्वात् ॥ ६ ॥
सर्वं पृथग् भावलक्षणपृथक्त्वात् ॥ ७ ॥
सर्वमभावो भावेष्वितरेतराभावसिद्धेः ॥ ८ ॥

(ந்யாயம் 4-1).

நாஸ்திகர்கள் சொல்கிருர்கள்—: சூன்யமும் ஒரு பொருள்தான். உற்பவத்தின் முன்பு சூன்யமே இருந்தது. கடைசியிலும் சூன்யமே இருக்கும். ஏனென்ருல் இப்போது பாவமாய் இருக்கும் பொருள்கள் அபாவமாகி இல்லாமல் சூன்யமாய் போய்விடும்.

விடை—: சூன்யம் என்பது ஆகாயம் பார்க்கப்படாதது, அவகாசம், பிந்து இவைகளுக்குப் பெயர். சூன்யம் என்பது ஜடபதார்த்தம். இச் சூன்யத்தில் எல்லாப் பொருள்களும் பார்க்கப்படாத நிலையிலிருக்கின்றன. பல பிந்துக்களின் சேர்க்கையால் கடல் இருப்பதைப்போல சூன்யத்தின் பார்க்கப்படாத நிலை கடவுளால் பார்க்கப்படும் நிலையில் செய்யப்படுகிறது. ஆகையால் சூன்யத்தை யறிபவர் சூன்யமாகிவிடுகிறதில்லை ||1||. இரண்டாவது நாஸ்திகம்—: அபாவத்திலிருந்தே பாவம் உண்டாகிறது. விதை மரம் இல்லாமலிருந்தும் உண்டாவதைப்போலவே இல்லாததிலிருந்து உலகம் உண்டாயிற்று.

விடை—: இல்லை. விதையிலிருந்து உண்டாகும் மரம் முன்பே விதையிலிருக்கிறது. ஆனால் மிகச் சிறிய பிறக்கப்படாத நிலையிலிருக்கிறது. அதிலிருந்து மரம் உண்டாகிறது. இல்லாததிலிருந்து உண்டாகிறதில்லை ||2||. மூன்ருவது நாஸ்திகம்—: கர்மத்தின் பலனை கர்மம்புரியும் ஜீவன் கர்மத்தினுலேயே அடைவதில்லை. அநேக கர்மங்கள் பயனில்லாமற் போய்விடுகின்றன. இதனுலேயே கடவுள் கர்மத்தின் பலன்களைக் கொடுக்கின்ருரென்று அனுமானிக்கப் படுகின்றது. இதனுல் கர்மத்தின் பலனை ஈஸ்வராதீனமென்று சொல்லப்படுகிறது.

விடை—: கர்மத்தின் பலனின்றி கடவுள் பலனே சொன்னுல், கர்மமில்லாமலே கடவுள் ஏன் பலன்களைக் கொடுக்கக்கூடாது ? ஆகையால் கடவுள் ஜீவர்களின் கர்மங்களுக்குத் தகுந்த பலன்களையே கொடுக்கின்ருர். ஆகையால் கடவுள் சுதந்திர புருடனுகப் பலன்களைக் கொடுப்பதில்லை. கர்மத்திற்குத் தகுந்த பலன்களையே கடவுள் கொடுக்கின்ருர் ||3||. நான்காவது நாஸ்திகம்—: நிமித்தமில்லாமலே பொருள்கள் உண்டாகக்கூடும். ஆலமரத்தின் விதை அணு என்ருல் இல்லாததாகவே இருந்தபோதிலும் அதிலிருந்து பெரிய மரம் உண்டாகிறது. அதுபோலவே ஒன்று மில்லாததிலிருந்தே உலகமும் ஜீவன்களுமுண்டாகின்றன.

விடை—: எதிலிருந்து பொருள்கள் உண்டாகின்றனவோ அதுவே நிமித்த காரணமாகும். அச்சிறிய விதையுமில்லாமலே ஏன் அம்மரம் உண்டாகக்கூடாது ? ||4||. ஐந்

தாவது நாஸ்திகம்—: எல்லா பொருள்களும் பிறந்து இறந்து விடுவதாலே எல்லாம் அநித்யமேயாகும் ॥

श्लोकार्धेन प्रवक्ष्यामि यदुक्तं ग्रन्थकोटिभिः ।
ब्रह्म सत्यं जगन्मिथ्या जीवो ब्रह्मैव नापरः ॥

(ஓர் கிரந்தம்).

கோடி கிரந்தங்களின் அர்த்தத்தைச் சொல்கின்றேன். பிரம்மமே சத்யமாகும். மற்றவைக ளெல்லாம் பொய். ஆகையால் சகல ஜீவர்களும் பிரம்மமன்றி வேறில்லை.

விடை—: பிரம்மம் எப்போதும் மாறுதலில்லாத நித்ய மாயிருக்க அதே ப்ரம்மம் அநித்ய மெப்படியாகிறது?

கேள்வி—: நித்யமாயிருப்பதும் அநித்யமே. கட்டையில் எரிந்துகொண்டிருக்கும் நெருப்பு அணைந்து நாசமாவதைப் போலவே ஜீவனாகிய ப்ரம்மமும் நாசமடைகிறது.

விடை—: இல்லை. நெருப்பு கட்டையி லில்லாமல் போய்விடுவதில்லை. சேர்க்கையால் வெளித் தெரியும் நிலையி லிருந்தது பழையபடி தெரியாத நிலையில் ஆய்விட்டது. அதேபோல் பரம சூக்ஷ்மமான நிலையாக மாறிவிட்டதி னாலே அநித்யமான தென்று சொல்லிவிடமுடியாது. பிரம் மம் சத்யமானதினாலே அதன் காரியமும் எப்போதும் சத்யமாகவே யிருக்கும். கயிற்றில் பாம்பைக் கற்பித்த போதிலும் கற்பனை யென்பது குணமே யொழிய பொரு ளல்ல. அப்பொருளின் குணமும் அதைவிட்டுப் பிரியாது. கல்பனையின் கர்த்தா நித்யமாயின் அக் கற்பனையும் நித்ய

மானதாகவே இருக்கவேண்டும். அல்லது இரண்டும் அநித்யமா யிருக்கவேண்டும். கனவிலுங்கூட பார்த்துக் கேட்டிராதவைகள் வருவதில்லை. விழிப்புநிலையில் பார்த்துக்கேட்ட மனத்தின்—ஆத்மாவின்—வாசனையே கனவில் உண்டாகிறது. பார்த்துக் கேட்காதவைகளும் கனவில் உண்டாவதாயின் பிறப்பிலே குருடனுயிருப்பவனும் உருவமுடையவைகளைக் கனவில் காணலாம். ஆனால் அவ்வாறு எப்போதும் சாணமுடியாது. ஆகையால் கனவில் க்ஞானம் மாத்திரம் இருக்கின்றது. ஆனால் வெளியில்தான் சகல பொருள்களுமிருக்கின்றன.

கேள்வி—: விழிப்பு நிலையிலுள்ள பொருள்கள் கனவில் பொய்யாய் மறைந்துவிடுவதைப் போலவும், கனவிலும் விழிப்பிலும் காணும் பொருள் தூக்கத்திலே பொய்யாய் மறைந்துவிடுவதைப் போலவேதான் விழிப்பு நிலையிற் காணும் பொருள்களும் பொய்தான், மறைந்துவிடுவது தான்.

விடை—: அப்படி ஒருபோதுமில்லை. ஏனென்றால் கனவிலும் தூக்கத்திலும் வெளிப் பொருள்களைக் காணும் அறிவுதான் அதனினின்றும் காணுதபடி வேறிடத்தில் சென்று விடுகின்றதே தவிர பொருள்கள் ஒன்றும் அழிந்துவிடவில்லை. ஒருவன் நடந்து சென்றுகொண்டிருக்கும் போது எதிரில் காண்பவையெல்லாம் அவன் அதைத் தாண்டிச் சென்றபோது அவனுக்கு மறைந்துவிடுகின்றன. ஆனால் அவன் அதைப் பார்க்காம லிருப்பதைக்கொண்டு அவைகள் அழிந்துவிட்டன என்று சொல்லிவிடக் கூடாது.

இவ்வாறேதான் கனவின் நிலையும் தூக்க நிலையுமாகும். ஆகையால் ப்ரம்மம், ஜீவன், ப்ரக்ருதி இம்மூன்றும் நித்ய மானவைகள்தான் ||5||. ஆறுவது நாஸ்த்திகம்—: பஞ்ச பூதங்கள் நித்யமானதினால் சகல உலகமும் நித்தியந்தான்.

விடை—: இவ்வார்த்தை சரியல்ல. ஏனென்றால் உண்டாகிய பொருள்கள் அழிவதை நன்கு காண்கின்றோம். சரீராதிகள் ஒரு காலத்தில் உண்டாகின்றன. மற்றோர் காலத்தில் அழிகின்றன. ஆதலால் எப்போதும் நித்யமாகாது ||6||. ஏழாவது நாஸ்திகம்—: எல்லா பொருள்களும் தனித் தனியானவைகள்தான். ஒரு பொருளிலே மற்றோர் பொருளைக் காணமுடியாது.

கேள்வி—: அவயவங்களில் அவயவீ, நிகழ்காலம், ஆகாயம், பரமாத்மா எல்லாம் வேறு வேறு பொருள்களல்ல. ஆனால் ஸ்வரூபத்தால் மாத்திரம் வேறுவேறுகிறது. வேறுவேறு பொருள்களிலும் ஒரு பொருள் உண்டு ||7||. எட்டாவது நாஸ்திகம்—: எல்லா பொருள்களும் அழியும் தன்மையிலேயே காணப்படுவதால் எல்லாமும் அழியும் பொருள்களேயாகும். "**अनश्वो गौः अगौरश्वः ॥**". குதிரை பசுவல்ல, பசு குதிரையல்ல. ஆகையால் எல்லாமும் அழியும் பொருள்களேயென அறிய வேண்டும்.

விடை—: எல்லாப் பொருள்களும் அழிவதாகக் காணப்பட்ட போதிலும்; "**गवि गौरश्वेऽश्वो भावरूपो वर्त्तत एव**" குதிரையில் குதிரையின் பாவமும், பசுவில் பசுவின் பாவமும் இருக்கிறது. ஆகையால் ஒருபோதும்

அபாவமாகாது. ஒன்றிலும் பாவமில்லை யென்றால் அபாவமும் இருக்கமுடியாது ||8||. ஒன்பதாவது நாஸ்திகம்—: ஸ்வபாவத்தினாலேயே உலகம் உண்டாகிறது. நீரும் அன்னமும் கலந்து மக்கினால் புழுவுண்டாகிறது ; விதை, பூமி, நீர் இம்மூன்றும் கலந்து மரங்கள் உண்டாவதைப்போலவே, கடலில் காற்றின் சேர்க்கையால் அலையும், அலையால் நுரையும் உண்டாவதைப் போலவே சகல உலகமும் சுபாவத்தாலேயே உண்டாகிறது. இதைச் செய்பவன் ஒருவனுமில்லை.

விடை—: சுபாவத்தால் உண்டாவதாயின் ஒருபோதும் நாசத்தையடைய முடியாது. நாசமும் சுபாவத்தாலேயே உண்டாகிறதென்றால் உற்பவம் உண்டாகாது. இரண்டும் சுபாவத்தாலேயே ஆகிறது என்றால் உற்பத்தி நாசங்களின் அவஸ்தை ஒருபோதும் ஆகமுடியாது. நிமித்தத்தினால் ஆகிறதாகப் பார்த்தால் உண்டாகியபின் சேர்த்தவைகளை அதே நிமித்தம் பிரித்தும் விடுகின்றதெனச் சொல்லலாம். சுபாவத்தினாலேயே உற்பவமும் நாசமு மாகிறதென மதித்தால் உண்டாகி அழிதல் அசம்பாவிதமாகும். சுபாவத்தினாலேயே உண்டாகின்றதென்றால் சந்த்ர சூர்யாதிகள் ஏன் வேறு உண்டானதில்லை ? எவைகள் உண்டாகின்றனவோ அவைகளின் தனிப் பொருள்களாகிய விதை, அன்னம், நீராதிகளைக் கடவுள் உண்டுசெய்ய பின்னவைகளின் சேர்க்கையிலிருந்து மரம், புழு முதலியவைகள் உண்டாகின்றன. அவரன்றி உண்டாகாது. ஆகையால் ப்ரக்ருதி யென்னும் பரமாணுக்கள் பரமேஸ்வரனால் சேர்க்கப்படாமல் தன் வரை தான் ஜடமானதினாலே அது உலக ரூபமாக

இருக்கமுடியாது. ஆகையால் சுபாவத்தால் உலகம் உண்டாவதில்லை. ஆனால் கடவுளின் காரணத்தினாலேயே உண்டாகிறது ||9||.

கேள்வி—: இவ்வுலகத்திற்கு கர்த்தா இருந்ததில்லை, இருக்கிறதில்லை, இருப்பதில்லை; ஆனால் அநாதிகாலமாக இது இப்படியேதான் இருக்கிறது. எப்போது முண்டானதுமில்லை. எப்போது மிறக்கப் போவதுமில்லை.

விடை—: கர்த்தாயின்றி காரியமோ முடிவான பொருளோ ஆகமுடியாது. பூமியாதி பொருள்களில் உள்ள சேர்க்கை விசேஷங்கள் எப்போதும் அனாதியா யிருக்க முடியாது. சேர்க்கையாலான பொருள் சேர்க்கைக்கு முன்னிப்படியே இருந்திருக்கமுடியாது. பிரிவுக்குப் பிறகு மிப்படியே இருக்காது. இது சந்தேகமாயின் கடினமான பாஷாணங்களாகிய வைரம் முதலியவைகளை மிகச் சிறியதாகத் துண்டுகளாக்கி பஸ்பம் செய்துபார்! அதில் பரமாணுக்கள் வேறு வேறாகக் காணப்படும். அம்மாதிரியாகத் தான் காலம் வந்தபோது எல்லா உலகமும் பரமாணுக்களாக மாறிவிடும் ||10||.

கேள்வி—: அனாதி ஈஸ்வரன் ஒருவனுமில்லை. ஆனால் யோகாப்பியாசத்தால் அணிமாதி சித்திகளைப் பெற்றுத் திறமையடைந்த ஜீவனே பரமாத்மாவென்று சொல்லப் படுகின்றது.

விடை—: சித்தியடைந்த ஜீவன் உலகை உண்டாக்க முடியாது. ஏனென்றால் சித்தியென்பது உலகை மறந்த

நிலையிலிருந்து பெறப்படும் சாமர்த்யமேயாகும். அதனின் ஆதார ரூபமாகிய உலகை அது எப்படி உண்டாக்கமுடியும்? உலகமும் சரீரமுமின்றி ஜீவன் சித்தியையும் பெற முடியாது. சாதனமே யில்லையென்றால் சித்தி எங்கிருந் துண்டாகும்? அன்றி பரமாத்மனின் அனந்த சித்தியைப் போல ஜீவன் பெறவும் முடியாது. ஏனென்றால் ஜீவனின் பூராத் திறமையுங்கூட பரமாத்மனின் திறமைக்குக் குறைந் ததேயாகும். இதுவரை எந்த யோகியும் கடவுளின் சிருஷ்டியை மாற்றியதில்லை. இனிமேலும் மாற்றமுடியாது. கண்களால் பார்க்கவேண்டு மென்பதும், காதுகளால் கேட்க வேண்டுமென்பதும் கடவுளின் உத்திரவு. இதுவரை எந்த யோகியும் இதை மாற்றியதில்லை. ஆகையால் ஜீவன் ஒரு போதும் ஈஸ்வரனாகாது.

கேள்வி—: கல்பகல்பாந்திரங்களில் உலகத்தைத் கடவுள் ஒரே விதமாக உண்டாக்குகின்றாரா வேறுவேறு விதமாகவா?

விடை—: இப்போதை யதைப்போலவேதான் முன்பும் இருந்தது. இனிமேலும் இருக்கும். பேதமாகச் செய்வதில்லை—:

सूर्याचन्द्रमसौ धाता यथापूर्वमकल्पयत् ।
दिवं च पृथिवीं चान्तरिक्षमथो स्वः ॥

(ருக். 10, 190, 3).

கடவுள் முன் கல்பத்தில் சூர்ய, சந்திர, பூமி, ஆகாயாதிகளை உண்டாக்கினது போலவே இக்கல்பத்திலு முண்

டாக்கினர். இதேபோல்தான் இனி வரும் கல்பங்களிலு முண்டாக்குவார். இதனல் கடவுளின் நியாயம் எப்போதும் ஒன்றுதானென்று நன்கு விளங்குகின்றது.

கேள்வி—: உற்பத்தி விஷயத்தில் வேதாதி சாஸ்த்திரங்களில் விரோதமுண்டா இல்லையா?

விடை—: இல்லை.

கேள்வி—: இல்லையென்றல்—:

तस्माद्वा एतस्मादात्मन आकाशः सम्भूतः। आकाशाद्वायुः। वायोरग्निः। अग्नेरापः। अद्भ्यः पृथिवी। पृथिव्या ओषधयः। ओषधिभ्योऽन्नम्। अन्नाद्रेतः। रेतसः पुरुषः। स वा एष पुरुषोऽन्नरसमयः॥

(தைத்திரீயம்—ப்ரம்மானந்தவல்லி 1).

கடவுள் ப்ரக்ருதியிலிருந்து ஆகாயத்தை உண்டாக்கினர். இது தப்பு. ஏனென்றல் ஆகாயமில்லாமல் ப்ரக்ருதியெங்கே யிருந்தது? ஆகாயத்திலே இருந்து வாயு, பூமியிலிருந்து ஓடதிகள், ஓடதிகளிலிருந்து அன்னம், அன்னத்திலிருந்து வீர்யம், வீர்யத்திலிருந்து புருடன் என்றல் சரீரத்தையு முண்டாக்கினர். இதில் ஆகாசாதியிலிருந்தும், சாந்தோக்யத்திலே அக்னியிலிருந்தும், ஐதரேயத்தில் ஜலத்திலிருந்தும் உற்பத்தி சொல்லப்பட்டிருக்கிறது. வேதங்களில் சில விடத்தில் புருடனிலிருந்தும், சில விடத்தில் ஹிரண்யகர்பாதிகளி லிருந்தும், மீமாம்சையில் கர்ம, வைசேஷிகத்தில் கால, நியாயத்தில் பரமாணு, யோகத்தில்

புருடார்த்த, சாங்க்யத்தில் ப்ரக்ருதி, வேதாந்தத்தில் ப்ரம் மத்திலிருந்தும் உற்பத்தி சொல்லப்பட்டிருக்கிறது. இவை களில் எதைத்தான் உண்மையென்று நம்புவது?

விடை—: எல்லாமும் உண்மைதான். பரமேஸ்வரன் நிமித்தகாரணம், ப்ரக்ருதி உபாதானகாரணம். மகாப்ரளயம் ஆகும்போது ஆகாயத்திலிருந்தும், ஆனால் ஆகாயம், வாயுக் கள் ப்ரளயமாகாவிட்டால் அக்னியாதிகளி லிருந்தும், ஆனால் அக்னியும் நாசமடையாவிட்டால் ஜலத்திலிருந்தும், உற்பத்தியாகிறது. என்றால் ப்ரளயமானது எதுவரை ஆகிறதோ அங்கிருந்து மறுபடி உற்பத்தியாகிறது. புரு டன் ஹிரண்யகற்பன் முதலாகிய பெயர்கள் கடவுளையே குறிக்குமென முதல் அத்தியாயத்தில் எழுதிவிட்டோம். ஒரே விஷயத்திலே பலவித கருத்துக்கள்தான் விபரீத மாகும். ஆனால் ஆறு சாஸ்த்திரங்களில் விரோதத்தைப் பார்!—: "கர்ம சேஷ்டை புரியாமல் ஒரு காரியமும் நடை பெறாது" என்பது மீமாம்சை. "சமயம் வராமல் செய்ய முடியாது" என்பது வைசேஷிகம்.|| "உபாதான காரண மிருப்பதனால் மாத்திரம் ஒன்றும் ஆகிவிடாது" என்பது நியாயம். "வித்தை, ஞானம், விசாரணை யில்லாமல் ஒன் றும் செய்யமுடியாது" என்பது யோகம். "தத்வங்களின் உண்மையில்லாமல் ஒன்றும் செய்யமுடியாது" என்பது சாங்க்யம். "செய்பவனின்றி ஒன்றும் செய்யப்பட்டிருக்க முடியாது" என்பது வேதாந்தம். என்றால் இவ்வாறு கார ணங்களாலுமே உற்பத்தியாகிறது. இவ்வாறு காரணங் களின் வ்யாக்யானத்தையேதான் ஆறு சாஸ்திரங்களிலும் சொல்லியிருக்கிறது. ஒரு வீட்டை பலர் பலவிதத்

தொழில்களைச் செய்து முடிப்பதைப் போலவே இவ்வாறு வரும் சேர்ந்து உற்பத்தி விஷயத்தை முடிக்கத் தீர்மானித்திருக்கின்றனர். ஐந்து குருடர்கள் ஒரு யானையைத் தடவித் தடவி அறிய முற்பட்டார்கள். அவர்களைக் கேட்டபோது "யானை தூண் போன்றது; யானை கால்போன்றது; யானை உலக்கை போன்றது; யானை கயிறு போன்றது; யானை நான்கு கம்பங்களின் மேல் வைத்த ஒரு மெத்தையைப் போன்றது" என்று ஐந்து விதங்களாகச் சொன்னார்கள். இதுபோல்தான் இவ்வாறு சாஸ்த்திரங்களின் உண்மையை அறியாதவர்கள் வீணாக ஒருவருக்கொருவர் சண்டை யிட்டுக்கொள்கின்றனர். குருடன் பின் குருடன் செல்வதைப் போலதான் இவர்களின் சண்டை யாகும். இவர்கள் சண்டைகளால் உலகத்திற்கு எவ்வளவு துன்பங்கள் ஏற்படுகின்றனவென யாரறிவார்கள்?

கேள்வி—: காரணமின்றி காரியமாகாது என்றால் அக் காரணத்திற்குக் காரணமேனில்லை?

விடை—: பார் சகோதரா! உலகத்திலே காரணம், காரியம் என்ற இரண்டுதானுண்டு. காரணமே காரியமல்ல. காரியமே காரணமல்ல. சிருஷ்டியை மனிதர்கள் சரிவர அறிந்து கொள்ளாதவரை யதார்த்த ஞான முண்டாவதில்லை—:

नित्यायाः सत्त्वरजस्तमसां साम्यावस्थायाः प्रकृतेरुत्पन्नानां परमसूक्ष्माणां पृथक् पृथग्वर्त्तमानानां तत्त्वपरमाणूनां प्रथमः संयोगारम्भः संयोगविशेषादवस्थान्तरस्य स्थूलाकारप्राप्तिः सृष्टिरुच्यते ।

அனுதி நித்யஸ்வரூபமான சத்வ, ரஜஸ், தமோகுணங்களின் ஒரே சேர்க்கை ரூபமான ப்ரக்ருதியிலிருந்து உண்டான பரம சூக்ஷ்மமான தனித்த அவயவங்கள் முதலில் சேர்க்கைகொள்ள ஆரம்பித்து சூக்ஷ்ம ஸ்தூலமான விசித்ர ரூபத்தைத்தான் ஸ்ருஷ்டியென்று சொல்லப்படுகின்றது. சேர்க்கையினுரம்பத்திலும் பிரிவிலும் பாகமில்லாத பொருள் காரணமாகும். ஆனல் சேர்க்கையின் பிறகு பிரிவுக்கும் பிறகு அம்மாதிரியே இல்லாதது காரியமாகும். ஆகையாலே காரணத்திற்குக் காரணம், காரியத்திற்குக் காரியம், எஜமானுக்கு எஜமான், சாதனத்திற்குச் சாதனம் தேடுபவன் குருடனேயாகும். அவன் தேடுவதொன்றுமவனுக்குக் கிடைக்காது. ஆகையால் எதிலிருந்துண்டாகிறதோ அது காரணம்; உண்டானது எதுவோ அது காரியம். ஆனல் காரணத்திலேயிருந்து காரியத்தைச் செய்பவனே கர்த்தாவாகும்.

नासतो विद्यते भावो नाभावो विद्यते सतः।
उभयोरपि दृष्टोन्तस्त्वनयोस्तत्त्वदर्शिभिः ॥

(பகவத்கீதை 2–16).

அசத்தானது இருப்பதாகவும்; சத்தானது இல்லாததாகவும் ஒருபோதுமாவதில்லை. இவ்விரண்டின் நிர்ணயங்களையும் தத்வதர்சிகள் நன்கறிவார்கள். தன்னல அக்ஞானிகள் இதை எவ்வாறு அறிவார்கள்? வித்வான்களின் நட்பைக்கொண்டு நன்கு ஆராய்ச்சி புரியாதவர்கள் சதா சந்தேக மனத்தவர்களாகவே இருப்பார்கள். எவன் வித்வான்களை யடுத்து சந்தேகங்கள் நீங்கப் பெறுகின்றுனே அவனே

தன்யனுகும். காரண மில்லாமலே உற்பத்தியாயிற்று என்று சொல்பவன் ஒன்று மறியாதவன். உற்பவம் ஆகும் காலத்திலே பரமாத்மன் அப்பரம சூக்ஷ்மமான பொருள் களை ஒன்று சேர்க்கின்முன். முதல் முதலாக அப்பரம சூக்ஷ்மாணுக்கள் அடையும் பரமசூக்ஷ்ம ஸ்தூல நிலையே "மகத்தத்வம்" எனப்படும்; அதனின்றும் அடுத்தபடியாக ஆகும் ஸ்தூல நிலைமைக்கு "அஹங்கார" மென்று பெய ராகும். அவ்வஹங்காரத்திலே யிருந்து தனித் தனியான ஐந்து (காது, தோல், கண், நாக்கு, மூக்கு) ஞானேந்திரி யங்களும்; (வாக்கு, கை, பாதம், குதம், குஹ்யம்) ஐந்துகர் மேந்திரியங்களும், மனதும் ஆக பதினேரு ஸ்தூலங்கள் உண்டாகின்றன. பிறகு முன்சொன்ன பஞ்சதன்மாத்திரை களிலிருந்து அநேக ஸ்தூல அவஸ்தைகள் உண்டாகிக் கொண்டுவந்து கிரமப்படி நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கும் இப் பஞ்சபூதங்கள் உண்டாகின்றன. இவைகளிலேயே பலவிதமான மரங்களாதி ஓடதிகள் உண்டாகின்றன; அவைகளிலிருந்து அன்னமும், அன்னத்திலிருந்து வீர்ய மும், வீர்யத்திலிருந்து சரீரமும் உண்டாகிறது. ஆனல் சிருஷ்டியின் முதலிலே மைதுனத் தொழில் இருப்பதில்லை. பெண் புருடர்களின் சரீரங்களைச் செய்தபிறகு அவைகளில் ஜீவனின் சேர்க்கையைக் கடவுள் உண்டாக்குகின்முர். அதன் பிறகே மைதுனத் தொழில் ஆரம்பமாகிறது பாருங்கள்! சரீரத்திலே எப்பேர்ப்பட்ட ஸ்ருஷ்டி இருக் கின்றது! இதைக் கண்ட வித்வான்கள் ஆச்சரியமடை கின்முர்கள். உள்ளே எலும்புகள், அதற்குக் கீல்கள், நாடி களின் பந்தனம், மாம்சலேபனம், இரத்த ஓட்டம், குடல், இருதயம் முதலியவைகளின் ஸ்தாபனம், ஜீவனின்

சேர்க்கை, மயிர் நகங்களின் ஸ்தாபனம், கண்களின் திறமை, இந்திரியங்களின் ப்ரகாசம், ஜீவனின் விழிப்பு, கனவு, தூக்கம், தாதுக்களின் விபாகம், பசிதாகம், ஆகாரங்களைப்பேதப் படுத்தல் முதலாகிய தொழில்களை கடவுளன்றி யார் செய்ய முடியும்? இதுவன்றி பல விதங்களான ரத்தினக் கற்களை யுடைய பூமி, பலவிதமான மரங்களின் விதை, பலவித ருசிகள், பலவித வர்ணங்கள், சூர்ய சந்த்ராதிகள், இவை களையெல்லாம் சுற்றச் செய்தல் ஆதி தொழில்களை எம் மனிதன் செய்யமுடியும்? ஒருவன் ஒரு பொருளைப் பார்க்கும்போது இரண்டு விதமான அறிவு உண்டாகிறது. ஒன்று அப்பொருள் எப்படி யிருக்கிறதென்பது. இரண்டாவது அதைச் செய்தவனின் திறமை. ஒருவன் ஓர் புது மாதிரியான அழகிய நகையைப் பார்த்தால் முதலில் அது நல்ல பொன்னுலாகியது என்று அறிந்தபின் இவ்வளவு வேலைப்பாடுடன் இதைச் செய்த தட்டான் யாரோவென்று அவனின் திறமையைப் புகழ ஆரம்பிக்கின்றான். இவ் வாறே இன்னவிதமான ஸ்ருஷ்டியைக் காணும் அறிவாளி இதைச் செய்தவனாகிய கடவுளினிடம் நன்றி செலுத்தத் தொடங்குகின்றான்.

கேள்வி—: முதலில் உண்டானது மனிதனா பூமியா?

விடை—: பூமி முதலியவைகள்தான். ஏனென்றால் பூமியன்றி மனிதன் இருக்கவும் வளரவும் முடியாது.

கேள்வி—:முதன் முதலில் ஒரே மனிதன் உண்டானா பலரா?

விடை—: அநேகர். எந்த ஜீவர்களின் கர்மம் பிறப்பையெடுக்க வேண்டியதாக இருந்ததோ அந்த ஜீவர்களையெல்லாம் சிருஷ்டியி னாரம்பத்தில் உண்டாக்குகின்றார். ஏனென்றால்—:

मनुष्या ऋषयश्च ये। ततो मनुष्या अजायन्त॥

(யஜுர்-யஜு.ப்ராம்ம).

இப்பிரமாணத்திலேயிருந்து ஸ்ருஷ்டியி னாரம்பத்திலே அநேகர் உண்டானார்கள் என்று தெரிகிறது. இப்போது பார்த்தாலும் மனிதர்களுக்கு அநேக தாய் தந்தையர்களிருக்க வேண்டுமென்று தெரிகிறது.

கேள்வி—: ஆதியிலே எல்லோரும் குழந்தைகளாகவா, வாலிபர்களாகவா, கிழவர்களாகவா அல்லது மூவிதமாகவுமாகவா உண்டானார்கள் ?

விடை—: வாலிபர்களாக. ஏனென்றால் குழந்தைகளாயின் அவர்களைக் காப்பாற்ற பெரியோர்கள் வேண்டும். கிழவர்களாயின் சேர்க்கையால் வம்சவிருத்தியைச் செய்யமுடியாது. ஆகையால் வாலிபர்களே உலக சிருஷ்டியில் உண்டானார்கள்.

கேள்வி—: எப்பொழுதாவது ஸ்ருஷ்டிக்கு ஆரம்பம் இருந்ததா இல்லையா ?

விடை—: இல்லை. இரவுக்குப்பின் பகல் வருவதைப்போலவும் இரவுக்கு முன்னும் பகல் இருந்ததைப் போலவும் ஸ்ருஷ்டிக்குமுன் பிரளயமும் பிரளயத்திற்குமுன்

ஸ்ருஷ்டியும் அனாதியாக இருந்துவருகிறது. இனிமேலு மவ்வாறே இருந்துகொண்டுவரும். இதற்கு ஆரம்பமோ முடிவோ கிடையாது. ஆனால் இரவு பகல்களின் ஆரம் பமும் முடிவும் காணப்படுவதைப் போலவே ஸ்ருஷ்டி பிரளயங்களுக்கும் ஆதியந்தம் காணப்படுகிறது. ஏனென் றால் கடவுள், ஜீவன், ப்ரக்ருதி இவைகள் அனாதியான வைகள். கடவுளின் குணகர்மஸ்வபாவங்களும் அனாதியான தினால் அவரின் சகாயத்தால் அனாதிகளான ஜீவப்ரக்ருதி களும் முன் சொன்ன முத்தொழிலையும் அனாதியாகவே அடைந்துகொண்டு வருகின்றன.

கேள்வி—: கடவுள் சில ஜீவன்களுக்கு மானிட சரீரத் தையும், சிலதிற்கு புலி,கரடி, சிம்மம், பறவை, மரமாதிய ஜன்மங்களையு மளிக்கின்றாரே இது பக்ஷபாத மல்லவா ?

விடை—: இல்லை. அவ்வச்சீவர்கள் முன் சிருஷ்டி யில் எங்கெந்தக் காரியங்களைப் புரிந்திருந்தனரோ அவ் வக்காரியங்களுக்குத் தக அவைகளுக்குக் கடவுள் ஜன் மத்தை யளிப்பதால் அவர் பக்ஷபாத முடையவராகு மாட்டார்.

கேள்வி—: மனிதர்கள் ஆதியிலே எந்த இடத்திலே உண்டானார்கள் ?

விடை—: "திரிவிஷ்டம்" (திபேத்) என்ற இடத்தில்.

கேள்வி—: ஆதியிலே ஒரே ஜாதியிருந்ததா பலவா ?

விடை—: ஒரே மனித ஜாதிதான் இருந்தது பிறகு—:

“ **विजानीह्यार्यान्ये च दस्यवः** ” (ருக். 1-51-8).

உத்தம காரியங்களைப் புரிபவர்களின் பெயர் “ஆர்யர்”, “வித்வான்”, தேவர்”. கெட்ட காரியங்களைப் புரிபவர்களின் பெயர் “தஸ்யு” என்றாயிற்று—:

“ **उत शूद्रे उतार्ये** ” (அதர்வவேதம்.)

இதன்பிறகு ஆரியர்களிலே ப்ராம்மண, க்ஷத்ரிய, வைஸ்ய, சூத்திரர்கள் என்னும் நான்கு பாகுபாடுகளுண்டாயிற்று. த்விஜர்கள் (மேலானவர்கள்) ஆன வித்வான்களின் பெயர் ஆரியர். மூடர்களின் பெயர் சூத்திரர்கள். என்ற வித்தியாசம் ஏற்பட்டது.

கேள்வி—: பிறகு அவர்கள் இங்கே எப்படி வந்தார்கள்?

விடை—: ஆரியர்களுக்கும் தஸ்யுக்களுக்கும் சதா சண்டைகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தனவாதலின் ஆரியர்கள் அங்கே யிருந்து பூகோளத்திலேயே நல்ல செழிப்பையுடைய இப்பூபாகத்தில் வந்து குடியேறினார்கள். அன்று முதல் இதற்கு “ஆரியாவர்த்தம்” என்று பெயராயிற்று.

கேள்வி—: ஆர்யாவர்த்தத்தின் எல்லைகள் எவை?

விடை—:

आसमुद्रात्तु वै पूर्वादासमुद्रात्तु पश्चिमात् ।
तयोरेवान्तरं गिर्योरार्य्यावर्त्तं विदुर्बुधाः ॥ १ ॥

सरस्वतीदृषद्वत्योर्देवनद्योर्यदन्तरम् ।
तं देवनिर्मितं देशमार्य्यावर्त्तं प्रचक्षते ॥ २ ॥

(மனு. 2, 22, 17).

வடக்கில் இமயகிரி, தெற்கில் விந்த்யமலை, கிழக்கு மேற்குகளில் கடல் ||1|| மேற்கில் சரஸ்வதி நதிப்ரவாகம்; கிழக்கில் நேபாளத்தின் கிழக்கு பாகத்திலே உண்டாகி வங்காளத்தின் வழியாய் ப்ரம்மாவின் மேற்கில் ஓடி தென் சமுத்திரதில் கலக்கும் ப்ரம்மபுத்ரா நதி ப்ரவாகம்; வடக்கில் இமயமலையிலே இருந்து தெற்கில் ராமேஸ்வரம் வரையுள்ள பூமி பிரதேசத்தின் பெயர் "ஆர்யாவர்த்த" மாகும். ஏனென்றால் இப்பாகத்திலே ஆரியர்கள் (வித்வான்கள்) வசித்துவந்தார்கள்.

கேள்வி—: முதன் முதலாக இத்தேசத்தின் பெயரென்ன? இங்கு யார் வசித்துக்கொண்டிருந்தார்கள்?

விடை—: இதற்கு முன் இத்தேசத்திற்கு வேறு எந்த பெயரும் கிடையாது. ஆரியர்களுக்கு முன்பு இங்கு யாருமே வசித்திருக்கவுமில்லை. ஏனென்றால் உலக ஸ்ருஷ்டிக்குச் சில காலத்திற்குப் பிறகு ஆரியர்களே இங்குவந்து வசிக்கலானார்கள்.

கேள்வி—: இவர்கள் "ஈரான்" (பெர்ஷியா) தேசத்திலேயிருந்து வந்தார்களாகையினாலேதான் இவர்களுக்கு "ஆரியர்கள்" என்ற பெயருண்டாயிற்று. அதற்குமுன் இங்கே காட்டுமனிதர்கள் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் "அசுரர்கள்" அல்லது "ராக்ஷசர்கள்" என்று

சொல்லப்பட்டு வந்தார்கள். பிறகு ஆரியர்கள் "தேவர்கள்" என்று சொல்லிக்கொண்டுவந்து அவர்களுடன் சண்டை புரிந்தார்கள். அதுவே "தேவாசுர யுத்தம்" என்று சொல்லப்படுகிறது என்று சிலர் சொல்கிறார்களே. இது உண்மைதானா?

விடை—: இவ் வார்த்தைகள் முழுவதும் பொய். ஏனென்றால்—:

विजानीह्यार्यान्ये च दस्यवो बर्हिष्मते रन्धया शासद-व्रतान् ॥ (ருக் 1-51-8).

उत शूद्रे उतार्ये ॥ (அதர் 19-62).

"ஆர்யர்"—என்றால் தர்மவான்கள் வித்வான்கள். "தஸ்யு"—என்றால் அதர்மவான்கள், அவித்வான்கள். அவ்வாறே ப்ராம்மண, க்ஷத்திரிய, வைஸ்யர்களின் பெயர் "ஆர்யர்". சூத்திரர்களின் பெயர் "தஸ்யு". வேதமே இவ்வாறு சொல்லியிருக்கும்போது சுயநலமிகளின் கற்பனையை நாம் நம்பலாமா? தேவாசுரயுத்தத்திலே ஆர்யாவர்த்தவாசியான அர்ஜுனன், தசரதன் முதலியவர்கள்கூட ஆரியர்களுக்கு உதவி செய்தார்கள்.

இதிலிருந்து ஆர்யாவர்த்தத்திற்குக் கிழக்கு, ஆக்னேயம், தக்ஷிணம், நைருத்யம், மேற்கு, வாயுமூலை, வடக்கு, ஈசானம் முதலிய திசைகளிலிருந்த தேசத்தவர்களே அசுரர்களென்று சொல்லப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. ஏனென்றால் இமயமலையில் வசித்துக் கொண்டிருந்த ஆரியர்களுடன் மற்றவர்கள் சண்டை செய்ய வந்த

காலத்திலே இத் தேசத்திலிருந்த அநேக அரசர்களும் இமயமலையில் வசித்து வந்த ஆர்யர்களுக்கு உதவி செய்தார்கள். தெற்கிலே நடந்த ராமனின் சண்டையை தேவாசுர சண்டை யென்று சொல்லப் படவில்லை. ஆனால் "ராம ராவண யுத்தம்" "ராக்ஷசர்களின் சண்டை," என்று தான் சொல்லப் படுகிறது. எந்த சம்ஸ்கிருத நூல்களிலேயும் "ஆர்யர்கள் பெர்ஷியாவிலே யிருந்து இங்கு வந்து இங்கிருந்த காட்டு மனிதர்களை ஜெயித்து அரசாண்டார்கள்" என்று சொல்லப் பட்டிருக்கவில்லை. இப்படியிருக்க அன்னிய தேசத்தவர்களின் வார்த்தைகளை நாம் எப்படி நம்பலாம்? அன்றி—:

म्लेच्छवाचश्चार्यवाचः सर्वे ते दस्यवः स्मृताः ॥
(மனு.—10-45).

म्लेच्छदेशस्त्वतः परः ॥ (மனு—2-23).

ஆர்யாவர்த்தத்தினின்றும் வேறுபட்ட தேசம் மிலேச்சதேசமாகும். இதிலிருந்துங்கூட ஆர்யா வர்த்தத்தின் கிழக்கு மேற்கு முதலிய திசைகளில் வசிப்பவர்களும் மிலேச்சர்கள், தஸ்யுக்கள் என்றேற் படுகிறது. ஆர்யா வர்த்தத்தின் தெற்குப் பாகத்திலே வசித்துக் கொண்டிருந்தவர்களுக்கு ராக்ஷஸர் என்று பெயராகும். இப்போதுங்கூட ஆப்ரிகா தேசத்தவர்கள் ராக்ஷஸ லக்ஷணங்களுடன் இருப்பதைப் பார்க்கலாம். அன்றி ஆர்யாவர்த்தத்தின் கீழ் பாகத்தைப் பாதாளம் என்றும் அதில் வசிக்கும்படியானவர்கள் நாகர்கள் என்றும் சொல்லப் படுகிறது. அது ஆர்யாவர்த்த தேசத்தவர்களின் பாதங்களுக்கடியில் இருக்

கின்றமையால் அதற்குப் பாதாளம் என்ற பெயரிட்டனர். அன்றி அங்நாக அரசனின் மகளாகிய உலோபியை அர்ஜுனன் கலியாணமும் செய்து கொண்டிருக்கிறான். என்றால், இக்ஷ்வாகுவிலே யிருந்து கௌரவ பாண்டவர்களின் காலம் வரை சகல பூபாகங்களிலும் ஆர்யர்களின் ராஜ்யமும், வேத பிரசாரமுமே இருந்து கொண்டிருந்தது. இதற்கு பிரமாணங்களுமுண்டு. ப்ரம்மனின் புத்திரன், விராட், விராட்டின் புத்திரன் மனு, மனு—மரீச்யாதி பத்து பேர்கள் அவர்களின் ஸ்வாயம்புவாதி ஏழு அரசர்கள், அவர்களின் சந்தானங்களாகிய இக்ஷ்வாகு—ஆதி அரசர்கள் முதன் முதலாக ஆர்யா வர்த்தத்தின் அரசர்களாய் இங் நாட்டை மேன்மைபடச் செய்தனர். ஆனால் ஆர்யர்களின் சோம்பேறித் தனத்தினாலும், விரோதப் பொறாமைகளினாலும் ஆர்யர்களின் சுதந்திரம், ஸ்வாதீனங்கள் எல்லாம் அழிந்து அன்னியர் ஆட்சிக்கு இங்நாடும் இக்காலம் உட்பட்டிருக்கிறது. இவ்வன்னியர் ஆட்சியும் உண்மையில் இங்நாட்டு மக்களுக்கு சுகமளிப்ப தாயிருக்கவில்லை, பலவிதங்களான பாஷைகள், பலவிதங்களான ஜாதிகள், பலவிதங்களான கடவுள் தொழுகைகள் முதலியவைகள் இங் நாட்டைவிட்டு ஒழிந்தாலன்றி இங்நாடு முன்னேறுவது கடினமாகும். ஆகையினாலே இப்போதாவது வேதங்களைக் காப்பாற்றி வைக்க வேண்டியது இங் நாட்டுமக்களின் கடமையாகும்.

கேள்வி—: உலகஉற்பத்தியாகி எத்தனை வருடங்களாயிற்று?

விடை—: ஒரு நூறுகோடியே எழுபது கோடியும் சில லக்ஷ, சில ஆயிர வருடங்கள் உலக முண்டாகியும்,

வேதங்களுண்டாகியுமாயிற்று. இதை இன்னும் விளக்கமாக அறியவேண்டின் "ருக்வேதாதிபாஷ்யபூமிகா" வில் பார்த்துக்கொள்ளலாம்.

பிரிக்கமுடியா—உண்டாக்க முடியாத—பங்கின் பெயர் பரமாணு. 8 பரமாணுக்கள் சேர்ந்தது அணு. இரண்டணுக்களின் சேர்க்கை "த்வயணு" காற்று. மூன்று "த்வியணு"க்களின் சேர்க்கை அக்னி, நான்கு "த்வியணுக்" களின் சேர்க்கை ஜலம். ஐந்து "த்வயணுக்களின்" சேர்க்கை பூமி; என்றால் பரமாணுக்களின் சேர்க்கையாகவே இவ்வுலகை கடவுள் உண்டாக்குகின்றார்.

கேள்வி—: இதை யார் தரித்துக்கொண்டிருக்கிறார்? சிலர் "சேஷன்" என்று சொல்கிறார்கள். சிலர் "எருது" என்று சொல்கிறார்கள். சிலர் ஒன்றுமேயில்லை யென்கிறார்கள்; சிலர் வாயுவினுதாரத்திலிருப்பதாகச் சொல்கிறார்கள். சிலர் சூர்யனின் இழுப்புச்சக்தியால் என்கிறார்கள். சிலர் இல்லை, பூமி மிகுந்த பளுவானதினால் கீழே போய்க்கொண்டேயிருக்கிறது என்கிறார்கள். இவைகளில் எதை உண்மையென்று நம்புவது?

விடை—: சேஷன், பாம்பு, எருமை முதலியவைகள் தான் தாங்கிக்கொண்டிருக்கின்றது என்று சொல்பவர்களை "அவர்களைப் பெற்றவர்கள் பிறப்பதற்கு முன்னிதை யார் தாங்கிக் கொண்டிருந்தார்கள்" என்று கேட்கவேண்டும். "சர்ப்பம் முதலிய அவைகள் எதன் பேரில் நின்றிருக்கிறது?" என்று கேட்கவேண்டும். அவர்கள் என்ன பதில் சொல்வார்களென்றால் "பாம்பு ஆமைமேல், ஆமை தண்ணீர்

மேல், தண்ணீர் நெருப்பு மேல், நெருப்பு காற்றுமேல், காற்று ஆகாசத்தின் மேல் நின்றிருக்கிறது" என்று பதில் சொல்வார்கள். மறுபடியுமவர்களை "எல்லாமும் எதன்மேல் நின்றிருக்கிறது?" என்று கேட்கவேண்டும். அப்போது கட்டாயம் "கடவுள் மேல்" என்று சொல்வார்கள். பிறகு "பாம்பும், எருமையும் யாருடைய குழந்தைகள்?" என்று கேட்கவேண்டும். அவர்கள் "எருமை மாட்டிலே யிருந்தும், மாடு பசுவிலே யிருந்து" மென்று சொல்வார்கள். இவைகள் எல்லாம் சுத்தத் தப்பிதமான வார்த்தைகளாகும். இதன் உண்மையான பொருள் மீதியிருப்பதின் பெயர் "சேஷம்" ஆகும். ஓர் கவியானவர்—:

"शेषाधारा पृथिवीत्युक्तम्"

சேஷத்தினுதாரத்தால் பூமி யிருக்கிறது என்று சொல்லியுள்ளார். மற்றொருவர் அதன் உண்மைக் கருத்தையுணராமல் பாம்பு என்று அர்த்தம் செய்துவிட்டார். ஆனால் எல்லாம் ப்ரளயத்திலே நாசத்தை யடைந்தபோதிலும் நாசமடையாது மீதியிருக்கப்பட்டது கடவுளேயாகும். அவரே சேஷன். அவரினுதாரத்திலேயே இப்பூமி இருக்கிறது—:

सत्येनोत्तभिता भूमिः ॥ (ருக்—10-85-1).

சூர்யாதி சகல கோளங்களும் என்றும் நாசமில்லாத பொருளாகிய கடவுளினுதாரத்திலேயே நிற்கின்றது—:

उक्षा दाधार पृथिवीमुत द्याम् ॥ (ருக்வேதம்)

“ உக்ஷா ” என்ற சப்தத்தைக் கண்டவுடனே சிலர் எருமை என்று அர்த்தம் செய்து விட்டார்கள். ஆனாலும் மூடர்கள் ஓர் எருது எப்படி இவ்வளவு பெரிய பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கு மென்பதை அறியாமல் போய் விட்டார்கள். ஆகையால் “ உக்ஷா ” என்பது மழைக்குக் காரணமாயிருக்கும் சூரியனின் பெயராகும். சூர்யன் தன் இழுப்புச் சக்தியால் உலகத்தை தரித்திருக்கிறான். ஆனால் சூர்யாதி கோளங்களேயும் தரித்திருப்பவன் பரமன் ஒரு வனே யாகும்.

கேள்வி—: இவ்வளவு பெரிய பூகோளங்களை கடவுள் எப்படி தரித்துக் கொண்டிருக்கிறார் ?

விடை—: பெரிய கடலினருகே சில ஜலபிந்துக்கள் எம் மாத்திரம் ? அப்படியே கடவுளின் முன்னிலையில் இப் பெரிய உலகங்களெல்லாம் சிறிய பரமாணுக்களுக்குச் சம மாகும். அவர் எல்லாவற்றின் உள்ளும் புறம்பும் வியா பித்தவர். என்றால்

“ विभुः प्रजासु ” (யஜுர்—32-8).

கடவுள் எல்லா மனிதர்களினுள்ளும் இருந்து எல் லோரையும் தரித்துக் கொண்டிருக்கிறார். மகம்மதிய கிருஸ்தவர்கள் சொல்வதைப் போல அவர் ஓர் குறித்த இடத்தில் மாத்திரம் இருப்பதாயின் இச் சகலத்தையுமவர் தாங்கிக் கொண்டிருக்க முடியாது, ஏனென்றால் தானாக வந்தடையாமல் தூலவிலிருந்தே ஒரு பொருளை யாரும் எதுவும்— தரித்திருக்க முடியாது. “ சகல கோளங்களும்

ஒன்றுக் கொன்று இழுத்துக் கொண்டிருப்பதினுல் எல்லாமும் நின்றிருக்கிறது. இதைவிட இதை தரித்துக் கொண்டிருக்க கடவுள் ஏன் வேண்டும் ?" என்று சிலர் சொல்வார்கள். அவர்களை "சிருஷ்டி அனந்தமானதா அந்தமுடையதா ?" என்று கேட்க வேண்டும். அனந்தமென்று சொன்னுல் ஆகாரமுடைய பொருள் அனந்தமாயிருக்க முடியாது. அன்றிமுடிவை யுடையது என்ருலோ அளவிலடங்காததாயிருக்க முடியாது. அப்படியிருக்க அளவிலடங்காததாயிருக்கும் இதற்கு மற்ருென்றை இழுக்குந் திறமையும் இருக்க முடியாது. ஆகையால் இதை தரித்துக் கொண்டிருக்கும் தலைவன் ஒருவன் இருந்தே யாகவேண்டும். ஆகையாலே—:

स दाधार पृथिवीं द्यामुतेमाम् ॥ (யஜுர்—13—4).

ப்ரகாசமுடைய சூர்யாதி கோளங்களையும், இருளையுடைய பூமியாதி கோளங்களையும் அளித்துத் தரித்திருப்பவர் கடவுளேயாகும். எல்லாவற்றிலேயும் வியாபித்திருக்குந் திறமையால் எல்லாவற்றையும் தரித்திருக்கின்ருர்.

கேள்வி—: பூமியாதி கோளங்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றனவா இல்லையா ?

விடை—: சுற்றிக் கொண்டு தானிருக்கின்றன.

கேள்வி:— சிலர் பூமி சுற்றுகிறது. சூர்யன் சுற்றுவதில்லை யென்றும் சிலர் பூமி சுற்றுவதில்லை சூர்யன் தான்

சுற்றுகிறது என்றும் சொல்லுகிறார்கள். இதில் எது உண்மை ?

விடை—: இவ்விரண்டிலும் பாதி பொய். ஏனென்றால் வேதத்திலே—:

आयं गौः पृश्निरक्रमीदसदन्मातरं पुरः।
पितरं च प्रयन्त्स्वः॥ (யஜுர் 3—6).

அமிர்தமயமான தண்ணீரைக் கொண்டுள்ள இப் பூமி சூர்யனைச் சுற்றிலும் சுற்றிக் கொண்டிருக்கிறது.

आकृष्णेन रजसा वर्त्तमानो निवेशयन्नमृतं मर्त्यं च।
हिरण्ययेन सविता रथेना देवो याति भुवनानि पश्यन्॥
(யஜுர் 33—43).

தேஜோரூபனான, மழை அதிகாரியான சூர்யன் சுற்றிக்கொண்டு தன் கிரணங்களால் அம்ருதமயமான மழையைப் பெய்வித்துக்கொண்டு, மற்ற கோளங்களுக்கு வெளிச்சத்தை யளித்துக்கொண்டு, மற்ற கோளங்களையும் சுற்றச் செய்துகொண்டு தன் எல்லையிலே சுற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால் மற்ற எந்த கோளத்தையும் சுற்றிவருவதில்லை. இவ்வாறே ஒவ்வொரு ப்ரம்மாண்டத்திலும் ஒவ்வொரு சூர்யன் ப்ரகாசமடைந்து மற்ற கோளங்களுக்கு ப்ரகாசத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. —:

दिवि सोमो अधिश्रितः॥ (அதர்—14—1—1).

சந்திரன் சூர்யனாலேயே ப்ரகாசத்தைப் பெறுவது போலவே மற்ற கோளங்களும் சூர்யனிடமிருந்தே ப்ர

காசத்தைப் பெறுகின்றன. எல்லா கோளங்களும் சுற்றிக் கொண்டே யிருப்பதினுல் தான் சூர்யனெதிரில் வரும்பாகம் பகலாகவும் பின்னுள்ள பாகம் இருளாகவு மிருந்து மாறி மாறி வந்துகொண்டே யிருக்கின்றன. என்முல் ஆர்யா வர்த்தத்திலே சூர்ய உதயமாகும்போது பாதாளத்தி (அமெரிக்காவிலே) சூர்ய அஸ்தமனமாகும். இங்கே அஸ்த மாகும்போது அங்கே உதயமாகிறது. பூமி சுற்முமல் சூர்யனே சுற்றுகிறது என்முல் ஆயிரம் வருடங்கள் ஒரு பாகத்தில் பகலாகவும் மற்ெருரு பாகத்தில் இரவாகவுமே யிருக்கவேண்டும். ஏனென்முல் பூமியைவிட சூர்யன் லக்ஷ மடங்கு பெரியதாகும். பெரிய பொருள் சின்னதைச் சுற்ற ஆரம்பித்தால் அநேக காலம் பிடிக்கும். ஆனுல் சின்னது பெரியதைச் சுற்றினுல் சீக்கிரத்திலே சுற்றி வந்துவிடும். ஆகையால் பூமியும் சுற்றிக்கொண்டு தானிருக்கிறதென்பது நிச்சயமாகும். அன்றி சூர்யன் சுற்றவில்லை என்பவர்களும் அறியாதவர்களே. ஏனென்முல் சூர்யன் சுற்றவில்லையானுல் ஒரு ராசியிலே இருந்து மற்ரேர் ராசிக்கு (ஸ்தானத்திற்கு) ப்போகமுடியாது. அன்றி கடினமானவைகள் ஆகாயத் திலே சுற்றிக் கொண்டிருக்காமலிருந்தால் விழுந்துவிடும். ஜைனர்கள் "சூர்யன் சுற்றுவதில்லை. பூமிதான் கீழே சென்றுகொண்டே யிருக்கிறது" என்று சொல்வது மிகத் தப்பிதமாகும். ஏனென்முல் பூமியைப்போன்ற ஓர் கடினமான பொருள் கீழேவிழ ஆரம்பித்தால் அதன் வேகத்தால் பாதிக்கப்பட்டெழும்பும் காற்ருனது பூமியைச் சின்ன பின்னமாக்கிவிடும். அன்றி இரவு பகல்களு முண் டாக முடியாது. ஆகையால் ஒரு பூமிக்கு மத்தியில் ஒரு சந்திரனும், அநேக பூமிகளுக்கு மத்தியில் ஒரு சூர்யனும் இருந்து வருகிறது.

கேள்வி—: சூர்யன், சந்திரன், நட்சத்திரங்கள் என்ன பொருள்கள்? அவைகளிலேயும் மனிதர்கள் இருக்கிறார்களா இல்லையா?

விடை—: இச்சகலமும் பூகோள உலகங்களாகும். அவைகளிலுங்கூட மனிதர்கள் வசிக்கிறார்கள். ஏனென்றால்—:

एतेषु हीदꣳ सर्वं वसु हितमेते हीदꣳ सर्वं वासयन्ते तद्यदिदꣳ सर्वं वासयन्ते तस्माद्वसव इति ॥ சதபதம்—14, 6, 7, 4;

பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், சந்த்ர, நட்சத்திர, சூர்யர்களின் பெயர் "வசு" ஆகும். ஏனென்றால் இவைகளில் சகல பொருள்களும் மனிதர்களும் வசிக்கிறார்கள். வசிக்கும் இடத்திற்கே "வசு" என்ற பெயராகும். பூமியைப் போலவே இவைகளும் வசுக்களானதினால் இதைப் போலவே அங்கும் மனிதர்களிருக்க என்ன சந்தேகம்? பரமேஸ்வரனின் இச்சிறிய உலகம் மனிதர்களுடனே நசித்து விட்டால் எல்லா உலகமும் சூன்யமாகிவிடுமா? ஆகையால் எங்கும் மனிதர்களின் வாசம் உண்டு.

கேள்வி—: இங்கே மனிதர்களுக்கு அவயவங்களிருப்பதைப் போலவே தான் அங்கே உள்ளவர்களுக்கு மிருக்குமா வேறு விதமாகவா?

விடை—: சில சில வித்பாசங்களிருக்கலாம். ஆர்யாவர்த்தம், சைனா, ஜப்பான், ஆப்ரிகா, லண்டன் முதலிய தேசத்தவர்களிலேயே சில வித்பாசங்களிருப்பதைப் போல் மற்ற லோகங்களுக்கு மிதற்கும் பேத மிருக்கலாம்.

ஆனுல் இங்கு மனிதர்களின், மிருகங்களின், பறவைகளின் மரங்களின் ஸ்ருஷ்டி யிருப்பதைப் போலவே அங்கும் இருக்கும். கண்கள் இங்கே எங்கெங்குண்டோ அங்கும் அங்கங்கே தானிருக்கும். ஏனென்றுல்

सूर्याचन्द्रमसौ धाता यथापूर्वमकल्पयत् ।
दिवं च पृथिवीं चान्तरिक्षमथो स्वः ॥ (ருக்—10-190).

முன் கல்பத்தில் சூர்ய சந்த்ராதிகளை ஸ்ருஷ்டித்தது போலவே இக் கல்பத்திலும் கடவுள் சிருஷ்டித்தார். சிறிய வித்தியாசமும் கிடையாது.

கேள்வி—: இங்கே வெளியாகியுள்ள வேதமே அங்கும் வெளியாகி இருக்கிறதா இல்லையா ?

விடை—: இருக்கிறது. அரசனின் நீதி அவனின் ஆட்சிக்குட்பட்ட எல்லா இடங்களிலேயும் ஒரே மாதிரியா யிருப்பதைப் போலவே கடவுளின் ஆக்ஞையாகிய வேதமும் அவரின் சிருஷ்டியின் எல்லா விடங்களிலும் ஒரே மாதிரி யாயிருக்கிறது.

கேள்வி—: ஜீவனையும், பிரக்ருதியையும் கடவுளே உண்டாக்க வில்லை யானதினுலே அவர் ஏன் அவைகளை உலகமாக மாற்ற அதிகார முடையவராக வேண்டும் ? ஏன் அவைகள் சுதந்திரமானவைகளாயிருக்கக் கூடாது ?

விடை—: அரசனும் குடிகளும் வேருனவர்களாயிருந்தாலும் குடிகள் அரசனின் ஆதீனத்திலிருப்பதைப் போலவே ஜீவனும் ப்ரக்ருதியும் கடவுளின் ஆதீனத்தி

விருக்கிறது. எல்லாவற்றையும் உண்டாக்கிக் காத்தழிக்க வல்ல பரமனின் ஆதீனத்திலே சிறிய சக்தியைப் பெற்றிருப்பவைகள் ஏன் இருக்கக் கூடாது? ஆகையால் ஜீவன் கார்யங்களைப் புரிவதிலே சுதந்திரம் பெற்றிருக்கிறது. ஆனால் அதன் பலனை அனுபவிப்பதிலே அது பரதந்திரமடைந்திருக்கிறது. இதே மாதிரி தான் எல்லா பிரம்மாண்டங்களின் ஜீவன்களுமாகும்.

இனி அடுத்த அத்தியாயத்தில் வித்தை, அவித்தை, பந்தம், மோக்ஷம் என்ற விஷயங்களைக் குறித்து ஆராய்வோம்.

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்

अथ विद्याऽविद्याबन्धमोक्षविषयान् व्याख्यास्यामः ।

विद्यां चाऽविद्यां च यस्तद्वेदोभयꣳ सह ।
अविद्यया मृत्युं तीर्त्वा विद्ययाऽमृतमश्नुते ॥

(யஜுர் 40—14).

வித்தையினுடையும் அவித்தையினுடையவும் ஸ்வரூபத்தை யறிந்தவன் அவித்தையின் (கர்மோபாஸனையின்) அனுபவத்தால் மரணத்தைப் பெற்று வித்தையின் (யதார்த்த ஞானத்தின்) அனுபவத்தால் மோக்ஷத்தைப் பெறுகின்றுன். அவித்தையின் லக்ஷணங்கள்—:

अनित्याशुचिदुःखानात्मसु नित्यशुचिसुखात्मख्यातिर-विद्या ॥

(சாதனபாதம் 5).

வேதாதிகளிலே நித்யமாகச் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை அநித்யமென்று நினைத்தல் அவித்தையின் முதல் பாகமாகும். குற்றமயமான பொய் பேசல், திருடல் ஆதி அசுத்தமானவைகளை சுத்தமானதென்று நினைத்தல் இரண்டாம் பாகம், துக்கத்தை யளிக்கும் காரியங்களிலே சந்தோஷப் படுதல் மூன்றுவது பாகம், ஆத்மா அல்லாதவைகளில் ஆத்மாவைச் செலுத்தல் நான்காம் பாகம். ஆக

இந்நான்கு பாகங்களுடனுய விபரீத ஞானத்திற்கு அவித்தை யென்று பெயராகும். இதற்கு விரோதமாக அநித்தியத்தில் அநித்தியத்தையும், நித்தியத்தில் நித்தியத்தையும், அசுத்தத்தில் அசுத்தத்தையும், சுத்தத்தில் சுத்தத்தையும், துக்கத்தில் துக்கத்தையும், சுகத்தில் சுகத்தையும், ஆத்மாவில் ஆத்மாவையும், அனுத்மாவில் அனுத்மாவையும் அறிதல் வித்தை யாகும். என்றுல்—:

वेत्ति यथावत्तत्त्वपदार्थस्वरूपं यया सा विद्या। यया तत्त्वस्वरूपं न जानाति भ्रमादन्यस्मिन्नन्यन्निश्चिनोति यया साऽविद्या॥

பொருள்களின் யதார்த்த ஞானத்தை யறிதல் வித்தை யாகும். இதற்கு விரோதமாக அறிதல் அவித்தை யாகும். என்றுல் கர்மமும் உபாசனையும் அவித்தை. ஏனென்றுல் இவைகள் உள்ளும் வெளியும் புரியும் கார்யவிசேஷமே யன்றி ஞான விசேஷமல்ல. ஆகையால் சுத்த கர்மங்களும், கடவுளின் உபாசனையு மின்றி யாரும் துக்க சாகரத்தின் அக்கரையை அடையமுடியாது. என்றுல் சுத்தக் காரியம், சுத்த உபாசனை, சுத்தஅறிவினுல் மாத்திரமே முக்தி கிடைக்கும். சுத்தமிலாக் காரியம், சுத்தமிலா உபாசனை, சுத்தமிலா அறிவினுல் பந்தமே உண்டாகும். எம்மனிதனும் கர்மம் செய்வதி னின்றும், உபாசிப்பதிலிருந்தும் ஒரு நொடியாவது பிரிந்திருப்பதில்லை. ஆகையால் சத்தியமான காரியங்களைப் புரிதல், அதர்மத்தை விட்டுவிடல் இவைகளே முக்திசாதன மாகும்.

கேள்வி—: முக்தி யாருக்குக் கிடைக்காது ?

விடை—: பந்தமுடையவனுக்கு.

கேள்வி—: பந்தமுடையவன் யார் ?

விடை—: அதர்ம அக்ஞானத்தில் முழுகியவன்.

கேள்வி—: பந்தமும் மோக்ஷமும் ஸ்வபாவமாக உண்டாகிறதா இல்லாமலிருந்து ஏற்படுகிறதா ?

விடை—: ஏற்படுகிறது. ஏனென்றால் ஸ்வபாவமாய் ஏற்படுவதாயிருந்தால் எப்போதும் ஒன்றே தான் நிலைத்திருக்கும்.

கேள்வி—:

न निरोधो न चोत्पत्तिर्न बद्धो न च साधकः ।
न मुमुक्षुर्न वै मुक्त इत्येषा परमार्थता ॥

(மாண்டூக்யம். கௌடபாதீயகாரிகை 2-32.)

ஜீவன் ப்ரம்மமேயானதினால் அது எப்போதும் பந்தத்தை யடைவதில்லை. அதை விடுவித்துக் கொள்ள சாதனையும் செய்வதில்லை. அதை விடுவிக்க முயற்சியும் செய்வதில்லை. இதற்குத் தனிப்பட்ட முக்தி ஒன்றும் கிடையாது. ஏனென்றால் ப்ரம்மத்திற்கு பந்தமே யில்லாத போது முக்தி யென்பதேது ?

விடை—: இந் நவீன வேதாந்திகளின் வார்த்தைகள் பொய்யாகும். ஏனென்றால் ஜீவனின் ஸ்வரூபம் அல்பமானதினால் சரீரத்துடன் கூடி பிறக்கிறது. பாபரூப கர்மங்களின் பலன்களை போகரூப பந்தனையில் அனுபவிக்

கின்றது. அதை விடுவித்துக் கொள்ள முயற்சியும் செய்கிறது. அதை விடுவித்துக் கொண்டு ஆனந்தமான மோக்ஷத்தையு மனுபவிக்கின்றது.

கேள்வி—: இச் சகல காரியங்களும் சரீரத்திற்கும் அந்தக்கரணங்களுக்குமே யன்றி ஜீவனுக்கல்ல. ஏனென்ருல் ஜீவன் பாப புண்ணியங்களிலிருந்தும் விலகிய சாக்ஷீ மாத்திரனுகும். உஷ்ணம் குளிர்கள் சரீராதிகளின் தர்மமாகும். ஆத்மா ஒன்றையும் அடையாத பொருளாகும்.

விடை—: தேகமும் அந்தக்கரணங்களும் ஜடமாகும். அதற்கு சீதோஷ்ண ப்ராப்தியும் போகமும் கிடையாது அதை ஸ்பர்சிக்கும் மனுஷ்யாதி ப்ராணிகளே அதை அனுபவிக்கின்ருர்கள். அப்படியே ப்ராணனும் ஜடமானது. அதற்கு பசிதாகம் கிடையாது. ஆனுல் அப்பிராணத்தை நுகர்ந்து கொண்டிருக்கும் ஜீவனே பசிதாகங்களை யடைகிறது. அப்படியே மனமும் ஜடமானது தான். அதற்கு சுக துக்கங் கிடையாது. ஆனுல் மனதிலிருந்து கொண்டு ஜீவனே சுக துக்கங்களை யனுபவிக்கின்றது. அவ்வாறே கண் காது முதலான இந்திரியங்களிலிருந்து கொண்டு வெளிப் பொருள்களில் சென்று சுக துக்கங்களை ஜீவனே அடைகிறது, அவ்வாறே மன, புத்தி, சித்த. அகங்காரங்களிலேயும் ஜீவனே யிருந்து கொண்டு சங்கல்ப, விகல்ப, நிச்சய ஸ்மரண, அபிமானுதிகளை அனுபவிக்கின்றது. கத்தியால் ஒருவன் மற்றவனை வெட்டி விட்டால் வெட்டினவனுக்கே யன்றி வெட்ட உதவி செய்த அக்கத்திக்கு தண்டனை யில்லாதது போலவே தேக, இந்

திரிய, அந்தக்கரண. ப்ரமாணம் முதலாகிய சாதனங்களைக் கொண்டு காரியங்களைப் புரிந்து அதன் பலன்களையும் ஜீவனே தான் அடைகின்றது. ஜீவன் கர்மங்களுக்கு சாக்ஷியல்ல. ஆனால் அதுவே தான் கர்த்தா வாகும். ஆனால் கர்மங்களின் சாக்ஷி இரண்டற்ற பரமாத்மாவே யாகும். கர்மங்களைப் புரியும் ஜீவனே அதில் முழுகுகிறதே தவிர சாக்ஷீபூதனான கடவுள் அதில் மூழ்குவதில்லை,

கேள்வி—: ஜீவன் என்பது கடவுளின் ப்ரதிபிம்பம். தண்ணீரில் தெரியும் சூர்யன் தண்ணீரினசைவினால் அசை வதைப் போலத் தெரிந்தாலும் உண்மையில் சூரியன் அசை யாதது போலவே அந்தக்கரணங்களிலே உள்ள கடவுளின் ப்ரதிபிம்பமான ஜீவன் அந்தக்கரணங்களின் சேஷ்டை களால் சுக துக்கங்களை யடைவது போலிருந்தாலும் அவ் வந்தக் கரணங்களின் சேஷ்டைகள் நாச மடைந்து விட்ட போது ஜீவன் முக்தனாவே ஆகின்றான்.

விடை—: இது குழந்தைகளின் வார்த்தையாகும். ஏனென்றால், ஒன்றின் ப்ரதிபிம்பம் அதைப் போலவே யிருக்க வேண்டும். ஆகாரமுடையதின் ப்ரதிபிம்பம் ஆகாரமுடையதாகவேயிருக்க வேண்டும். அதே மாதிரி ஜீவனும் கடவுளின் ப்ரதிபிம்பமாயின் கடவுளைப் போல வே ஜீவனும் எங்கும் வியாபித்ததாய் இருக்கவேண்டும். அப்படி யிருக்கவும் முடியாது. ஏனென்றால் கடவுளே எங்கும் வியாபித்திருப்பதாயின் அதன் ப்ரதிபிம்பம் எங்கே வ்யாபித்திருக்க முடியும்? இடமேது? ஆகையால் ஜீவன் கடவுளின் ப்ரதிபிம்பமல்ல.

கேள்வி—: சுத்தமான ஜலத்திலே நிராகார வ்யாபக மான ஆகாயத்தின் சாயல் விழுகிறது. இவ்வாறே சுத்த மான அந்தக்கரணத்திலே கடவுளின் சாயல் விழுகிறது. இதற்காகவே இது சிதாகாச மென்று சொல்லப்படுகிறது.

விடை—: இது ! பாலபுத்தியின் அறியாத வார்த்தை. ஏனென்றால் ஆகாயம் கண்களால் பார்க்க முடியாதது. அப்படியாயின் எந்த நீரில் தான் அதன் சாயல் எப்படி விழும் !

கேள்வி—: மேலே பாருங்கள் ! நீல வர்ணமாக ஆகா யம் தெரிகிறதே. பின் ஏன் அதைப் பார்க்க முடியா தென்று சொல்லுகிறீர்கள் ?

விடை—: அது ஆகாய மல்ல.

கேள்வி—: பின் அது என்ன ?

விடை—: தனித்தனியான பூமி, ஜல, அக்னியின் த்ரி ரேணுக்கள் தெரிகின்றன. அதிலே நீல வர்ணமாகத் தெரிவது அதிகமான ஜலத் துளிகளின் சேர்க்கை ரூப மாகும். அதிலே மப்பாகத் தெரிவது பூமியின் தூளி யானது வாயுவிலே சஞ்சரிப்பதாகும். அதனுடைய ப்ரதி பிம்பம் தான் ஜலத்தில் தெரிகின்றது. ஆகாயம் எப்போ தும் தெரியாது.

கேள்வி—: பானையிலேயும் ஆகாயமுண்டு. மேகத் திலேயும் ஆகாயமுண்டு. மேகமும் பானையும் அழிந்து விட்டபோது அதிலிருந்த ஆகாயம் பெரிய ஆகாயத்துட

னேயே கலந்து ஒன்ருகி விடுகிறது. அப்படியே ஒரே ப்ரம்மமே அந்தக்கரணங்களின் உபாதிகளால் ஜீவனென்றும் கடவுளென்றும் பிரித்துச் சொல்லப்படுகிறது. ஆனுல் அந்தக்கரணங்கள் அழிந்துவிட்டபோது தன் பழைய ஸ்வரூபமாகப் ப்ரம்மம் ஒன்றேயாக இருக்கிறது.

விடை—: இதுவும் அவித்வான்களின் வார்த்தையாகும். ஏனென்ருல் ஆகாயமானது எப்போதும் சின்னு பின்னமாவதில்லை. வ்யவகாரங்களிலேயும் "பானையைக் கொண்டுவா" என்று சொல்வார்களே தவிர "பானையாகாசத்தைக் கொண்டுவா" என்று சொல்லமாட்டார்கள். ஆகையால் இவ்வார்த்தை சரியல்ல.

கேள்வி—: கடலின் மத்தியிலே மீன்களும், ஆகாயத்தின் மத்தியிலே பறவைகளும் சுற்றித்திரிவதைப் போல சிதாகாசத்தின் ப்ரம்மத்திலே அந்தக்கரணம் சுற்றிக்கொண்டிருக்கிறது. ஆனுலும் அந்தக்கரணம் ஜடம்தான். ஆனுலும் சர்வவ்யாபகபரமாத்மனின் சக்தியினுல் "நெருப்பில் பொன் உருகுவதைப்போல" சேதனமாகிறது. அது எவ்வளவு அசைந்தபோதிலும் ப்ரம்மா மாத்திரம் நிச்சலமாகவே யிருக்கிறது. அப்படியே ஜீவனையும் ப்ரம்மமாகவே மதித்துவிட்டால் என்ன தோஷம்?

விடை—: இந்த உதாரணமும் சரியல்ல. ஏனென்ருல் சர்வ வ்யாபகனுன ப்ரம்மம் அந்தக்கரணங் களிலிருந்து ஜீவனுக வேலை செய்கின்றது என்ருல் அதிலேயும் சர்வக்ஞத்வமாதி குணங்கள் உண்டா இல்லையா? அது ப்ரம்மமேயானுலும் வேறே விதத்திலே மாறுபட்டிருப்பதினுல் அப்

போது அது சர்வக்ஞத்வமாயில்லை யென்றால் ப்ரம்மம் என்பது பாகம் செய்யக் கூடிய பொருளா செய்ய முடியாத தா ? என்று கேட்கின்றேன். பாகம் செய்ய முடியாதது என்றால் மத்தியிலே ஒன்றும் அதை அதன் தன்மையி லிருந்து மாற்ற முடியாது. மாற்ற முடியாததாயின் ஏன் அது சர்வக்ஞத்வ மாயில்லை ? அது தன் ஸ்வரூபத்தை மறந்துவிட்டு அந்தக்கரணங்களுடனே சுற்றிக்கொண்டிருக் கிறதென்றால், அந்தக்கரணத்தின்படி ப்ரம்மம் போகிற தா, ப்ரம்மத்தின்படி அந்தக்கரணம் சுற்றுகிறதா ? அந்தக் கரணத்தின் படியென்றால் ப்ரம்மம் அக்ஞானி, பயித்தியக் காரனாய்விடும். சில இடங்களில் மாத்திரம் தான் அது ஞானியாயிருக்கும். அன்றி ஜீவனும் பலவிதமான ஜன னங்களிலே பலவிதமான சுகதுக்கங்களை அனுபவிக்கின் றது. ஆகையால் ஜீவனும் ப்ரம்மனும் ஒன்றல்ல. வேறு வேறுதான்.

கேள்வி—: இச் சகலமும் அத்யாரோபமாத்திரமே யாகும். என்றால் ஒன்றில் மற்றொன்றை கற்பித்தல் அத்யா ரோபம். ப்ரம்மத்தையே உலக காரணமாக கற்பிப்பதே தவிர உண்மையில் எல்லாம் ப்ரம்மம்தான்.

விடை—: அத்யாரோபத்தைச் செய்பவர் யார் ?

கேள்வி—: ஜீவன்.

விடை—: ஜீவன் யார் ?

கேள்வி—: அந்தக் கரணங்களுக்குள்ளே சேதனமா யிருப்பவன்.

விடை—: அவனும் ப்ரம்மம் தானு வேரு ?

கேள்வி—: அவனும் ப்ரம்மம் தான்.

விடை—: என்ன அநியாயம் ? ப்ரம்மமே தன்னைஉலகமாக பொய் கற்பனை செய்துகொள்கின்றதா ?

கேள்வி—: ஓ. செய்து கொள்கின்றது. இதனுல் ப்ரம்மத்திற்கு என்ன கெடுதி ?

விடை—: பொய் கற்பனை செய்பவன் பொய்யனல்லவா ?

கேள்வி—: இல்லை. ஏனென்றுல் மனதானது வாயின் மூலமாகச் சொல்வதெல்லாம் பொய்யாகும்.

விடை—: மனத்தைக் கற்பித்து வாயின் மூலமாய் மனத்தை பொய் பேசுவதாகக் கற்பித்துச் செய்பவன் பொய்யனு அல்லவா ?

கேள்வி—: இருந்தாலுமது அவரின் இஷ்டமாகும்.

விடை—: பலே ஏ பொய் வேதாந்திகளே ! நீங்கள் ஏற்பட்டு சத்யவாதியான பரமனை பொய்யனுக்கிவிட்டீர்கள். அது உங்களின் கேடுகாலத்திற் கடையாளமல்லவா ? எந்த வேதத்திலே உபநிஷத்திலே—கடவுள் பொய்யனென்று எழுதி யிருக்கிறது ? நீங்கள் செய்யும் குற்றங்களுக்காக கடவுளுக்கு தண்டனையை அளித்துவிடலா மென்று பார்க்கிறீர்களா ?. கடவுள் சத்யஸ்வரூப, ஸத்யமானி, ஸத்யவாதி, ஸத்யகாரியாகும். இப்பொய்க் குற்றம் உங்களுடையதே

யாகும். ஆகையால் ஜீவனும் ப்ரம்மம் தான் யெனும் பொய் யெண்ணத்தை இன்றுடன் விட்டொழியுங்கள். ஏனென்றுல் ஸர்வ வ்யாபகன் அக்ஞானியாகவும் பந்தமுடையவனுகவும் ஆகமாட்டான். இவைகள் அல்பனுகிய ஜீவனுக்கேயாகும்.

முக்தி பந்தங்களின் விளக்கம்.

கேள்வி—: முக்தி யென்றுல் என்ன ?

விடை—:

“ मुञ्चन्ति पृथग्भवन्ति जना यस्यां सा मुक्तिः ”

விடுதலை யடைதலின் பெயர் முக்தியாகும்.

கேள்வி—: எதை விடுவிப்பது விடுதலை ?

விடை: ஜீவர்கள் எதிலிருந்து விடுபட விரும்புன்ருர் களோ அதிலிருந்து.

கேள்வி—: எதிலிருந்து ஜீவர்கள் விடுபட விரும்பு கிறுர்கள் ?

விடை—: துக்கத்திலிருந்து.

கேள்வி—: விடுபட்டு யாரிடம் எங்கே செல்கின்றது ?

விடை—: ப்ரம்மத்தில் வசித்துக் கொண்டு சுகத்தை யனுபவிக்கின்றது.

கேள்வி—: பந்தமும் விடுதலையும் எதனுல் உண்டா கிறது ?

விடை: கடவுளின் கட்டளைக்கு விரோதமாய் அதர்மம் செய்தல், அவித்தை, கெட்ட நட்பு, கெட்ட கார்யம் புரிதல், நல்லவைகளை விலக்குதல், பரோபகார மில்லாமை, பக்ஷ பாதம் முதலிய காரியங்களால் பந்தமும் இதற்கு விரோத மான காரியங்களால் மோக்ஷமும் உண்டாகிறது.

கேள்வி—: முக்தியில் ஜீவன் லயமடைந்து விடுகிறதா, தென்படுகிறதா ?

விடை—: தென்படும் நிலையில் தான் இருக்கிறது.

கேள்வி—: எங்கே வசிக்கிறது ?

விடை—: ப்ரம்மத்தில்.

கேள்வி—: ப்ரம்மம் எங்கே இருக்கிறது ? முக்தி ஜீவனுக்காக அது ஓரிடத்தை யளிக்கின்றதா அல்லது விருப்பப்படிச் செல்ல விட்டு விடுகிறதா ?

விடை: —ப்ரம்மம் எங்கும் பூர்ணமானது. அதிலே இஷ்டப்படி ஜீவன் சென்று கொண்டிருக்கும்.

கேள்வி—: முக்த ஜீவனுக்கு ஸ்தூல சரீரம் இருக் கிறதா இல்லையா ?

விடை—: இல்லை.

கேள்வி—: பிறகு சுகத்தை யெப்படி அனுபவிக்கும் ?

விடை—:அதனுடைய சங்கல்பாதி ஸ்வபாவகுணங்கள் எப்போது மதனுடனேயே இருக்கிறது. ஆனால் பௌ திகச் சேர்க்கை தான் அதற்கு இல்லை—:

शृण्वन् श्रोत्रं भवति, स्पर्शयन् त्वग्भवति, पश्यन् चक्षुर्भवति, रसयन् रसना भवति, जिघ्रन् घ्राणं भवति, मन्वानो मनो भवति, बोधयन् बुद्धिर्भवति, चेतयंश्चित्तम्भवत्यहङ्कुर्वाणोऽहङ्कारो भवति॥ (சதபதம் 14).

மோட்சத்திலே ஜீவனுடன் பௌதிக சரீர இந்திரியங்கள் கிடையாது. ஆனால் அதனுடைய சுபாவமான குணங்கள் அதனுடனேயே இருக்கின்றன. கேட்க விரும்பும்போது காது, தொட விரும்பும்போது தோல், பார்க்க விரும்பும்போது கண், வாசனைக்கு மூக்கு, சங்கல்பவிகல்ப சமயம் மனம், நிச்சயிக்க புத்தி, ஸ்மரணை செய்ய சித்தமும் முக்தியிலதற் குண்டாகிறது. சங்கற்ப மாத்திரத்தில் சரீரமாகிறது. சரீரத்தை யடைந்து இந்திரியங்களின் வழியாய் ஜீவன் தன் காரியங்களை நடத்துகின்றான். இதே மாதிரிதான் சக்தியாலேயே முக்தியையும் பெறுகின்றான்.

கேள்வி—: அவனுடைய சக்தி எவ்வளவு? எந்தெந்த விதமானது?

விடை—: முக்யமானது ஒரே சக்திதான். ஆனால் பல, பராக்ரம, ஆகர்ஷண, ப்ரேரண, கதி, க்ரியா, விவேசன, உத்ஸாஹ, ஸ்மரண, நிச்சய, இச்சா, ப்ரேம, ஞான ஆகிய பலவித சாமர்த்யங்களும் ஜீவனுக்குண்டு. இதனால் முக்தியில் ஜீவன் ஆனந்தத்தை அனுபவிக்கின்றான். முக்தியாரிலாவது லயமடைவதாயின் ஆனந்தத்தை அனுபவிப்பது யார்? அப்படியானால் ஜீவனின் நாசமே முக்தியென்று அர்த்தமாய்விடும். இது சுத்த மூடத்தனமான கொள்கையாகும். ஏனென்றால் மோக்ஷமென்பது துக்

கத்தை விலக்கி ஆனந்த ஸ்வரூபனாகிய கடவுளில் ஜீவன் ஆனந்தத்தை யனுபவித்தலாகும். வேதாந்த சாரீரக சூத்திரத்தில்—:

अभावं बादरिराह ह्येवम् ॥

பாதரி யென்பவர் வ்யாசரின் தகப்பன். அவர் முக்தியிலே ஜீவனும் அதனுடன் மனதும் இருப்பதாக மதிக்கின்றார். என்றால் அவமனலயத்தை பராசரர் மதிப்பதில்லை. அவ்வாறே—:

भावं जैमिनिर्विकल्पामननात् ॥ (வேதாங்-4-4-11).

ஜைமினி ஆசார்யர் முக்த புருடனுக்கு மனதிற்குச் சமானமான சூக்ஷ்ம சரீர, இந்திரியங்கள், ப்ராணாதிகளுமிருப்பதாய் நம்புகின்றார்.

द्वादशाहवदुभयविधं बादरायणोऽतः ॥
(வேதாந்த-4-4-12).

வியாச முனிவர் முக்தியிலே சுத்த சாமர்த்திய யுக்தனாகி அவன் இருப்பதாகவும் சுத்தமிலா, பாபாசரண, துக்க, அக்ஞானாதியாக அவன் இல்லையென்றும் நம்புகின்றார்.

यदा पञ्चावतिष्ठन्ते ज्ञानानि मनसा सह ।
बुद्धिश्च न विचेष्टते तामाहुः परमां गतिम् ॥
(கடோ-2-6-10).

அவனுடன் சுத்த மனத்துடன் கூடின ஐந்து ஞானேந்திரியங்கள் வசித்துக்கொண்டும், புத்தி ஸ்திர நிலை

யுடன் இருக்கும் நிலைமையே மோக்ஷம் என்று சொல்லப்படும்.

य आत्मा अपहतपाप्मा विजरो विमृत्युर्विशोकोऽविजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसङ्कल्पः सोऽन्वेष्टव्यः स विजिज्ञासितव्यः सर्वांश्च लोकानाप्नोति सर्वांश्च कामान् यस्तमात्मानमनुविद्य विजानातीति ॥ (சாந் 8-7-1).

स वा एष एतेन दैवेन चक्षुषा मनसैतान् कामान् पश्यन् रमते ॥ य एते ब्रह्मलोके तं वा एतं देवा आत्मानमुपासते तस्मात्तेषाꣳ सर्वे च लोका आत्ताः सर्वे च कामाः स सर्वाꣳश्च लोकानाप्नोति सर्वाꣳश्च कामान्यस्तमात्मानमनुविद्य विजानातीति ॥ (சாந் 8-12-5, 6).

मघवन्मर्त्यं वा इदꣳ शरीरमात्तं मृत्युना तदस्याऽमृतस्याशरीरस्यात्मनोधिष्ठानमात्तौ वै सशरीरः प्रियाप्रियाभ्यां न वै सशरीरस्य सतः प्रियाप्रिययोरपहतिरस्त्यशरीरं वाव सन्तं न प्रियाप्रिये स्पृशतः । (சாந் 8-12-1).

சகல விதமான பாபங்களிலிருந்து விலகினவன்; கிழம், மரணம், சோகம், பசி, தாகம் இவைகளில்லாதவன்; சத்ய காமனுகிய பரம் பொருளை அறியவேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும். அப்பரமனின் சம்பந்தத்தாலேயே முக்த ஜீவன் சகல உலக, சகல ஆசைகளையும் அனுபவிக்கின்றது. பரமாத்வை அறிந்து மோக்ஷ சாதனத்தை அடைய விரும்பித் தன்னை நல்லவர்களாகச் செய்து கொள்பவர்கள் முக்தியை யடைந்து சுத்தமான திவ்ய கண்கள், சுத்தமனதை யடைந்து சதா சுகத்தில் ஆனந்தித்துக்

கொண்டிருப்பார்கள். பரமாத்மாவில் ஸ்திரமடைந்து மோக்ஷ சுகத்தை அனுபவிக்கின்றார்கள். அப்பரமன் சகலத்துள்ளும் அந்தர்யாமியாயிருக்கிறார். அவரையே வித்வான்கள் உபாசிக்கின்றனர். அவர்களே சகல சுகத்தையுமடைகிறார்கள். என்றால் எங்கெந்த விஷயங்களை நினைக்கின்றார்களோ அந்தந்த விஷயங்களை அடைகிறார்கள். முக்தியடைந்த ஜீவன் சரீரத்தைவிட்டு ஆகாயத்திலே வ்யாபித்திருக்கும் கடவுளிலே வசிக்கின்றது. ஏனென்றால் சரீரமிருக்கும்வரை சம்சாரதுக்கம் உண்டாகியே இருக்கும். இந்திரனிடம் ப்ரஜாபதி "ஏ பரமபூஜித தனயுக்த புருடா! இத்தூலசரீரம் மரண தர்மத்தை யுடையது. சிம்ஹத்தின் வாயில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் ஆட்டைப்போல் இச்சரீரம் மரணத்தின் மத்தியிலிருக்கிறது. இச்சரீரம் மரணமில்லாத அவன் வசிக்கத்தகுந்த ஓர் இடம். இவ்விடத்திலிருக்குங் காலம்வரை அவன் சுகதுக்கங்களையடைந்துகொண்டேயிருக்கும். சரீரத்தை விட்டபோதே அவனுக்கு சம்சாரத் துன்பங்கள் விலகும். சரீரத்தை விட்ட ஜீவன் ப்ரம்ம வ்யாபகத்திலே வசிக்கின்றது. அதற்கு சாம்சாரிக சுகதுக்கங்களின் ஸ்பர்சமும் கிடையாது. சதா ஆனந்தத்தில் வசிக்கிறது" என்று சொல்கின்றார்.

கேள்வி—: முக்தியை அடைந்த ஜீவன் மறுபடியும் பிறப்பிறப்புகளை அடைகின்றதா இல்லையா? ஏனென்றால்—:

न च पुनरावर्त्तते न च पुनरावर्त्तते इति ॥

(சாந்தோக் 8–15).

अनावृत्तिः शब्दादनावृत्तिः शब्दात् ॥

(சாரீரிகசூத் 4–4–33).

यद् गत्वा न निवर्त्तन्ते तद्धाम परमं मम ॥

(பகவத்கீதை).

இப்பேர்ப்பட்ட வார்த்தைகளிலிருந்து முக்தி யென்பது மறுபடி பிறவாத நிலை யென்றுகின்றது.

விடை—: இவ்வார்த்தை சரியல்ல. ஏனென்றால் வேதத்திலே இவ்வார்த்தை விலக்கப்பட்டிருக்கிறது—:

कस्य नूनं कतमस्यामृतानां मनामहे चारुदेवस्य नाम ।
को नो मह्या अदितये पुनर्दात् पितरं च दृशेयं मातरं च ॥ १ ॥

अग्नेर्वयं प्रथमस्यामृतानां मनामहे चारुदेवस्य नाम ।
स नो मह्या अदितये पुनर्दात् पितरं च दृशेयं मातरं च ॥ २ ॥

(ருக் 1 ; 24 ; 1, 2).

इदानीमिव सर्वत्र नात्यन्तोच्छेदः ॥ ३ ॥

(சாங்க்யசூத். 1-159).

கேள்வி—: நாம் யாருடைய . பெயரை பவித்திரம் என்று சொல்வோம்? நாசரஹித பதார்த்தங்களின் மத்தியிலே சதா வர்த்திக்கும் ப்ரகாசரூபனுய் முக்தி சுகத்தை யளித்து, பிறகு முடிந்தபின் மறுபடி பிறப்பை யளித்துத் தாய் தகப்பன்மார்களைத் தரிசிக்க செய்பவன் யார்? ‼1‼.

விடை—: நமக்கு முக்தி சுகத்தை யளித்து பூமியில் மறுபடிதாய் தகப்பன் தரிசனத்தை யளிப்பவன் ஸ்வப்ரகாச

ளுய் சதா முக்தரூபனாகிய பரமன் ஒருவன்தான். அவன் பெயரே பவித்திரமாகும் ॥2॥.

இப்போது பந்தமுக்த ரூபனாயிருப்பதைப் போலவே எப்போதும் இருக்கும். முடிவுள்ள பந்தமுக்தி கிடையாது. ஆகையாலே பந்தமும் முக்தியும் சதா இருப்பதில்லை ॥3॥.

கேள்வி—:

तदत्यन्तविमोक्षोऽपवर्गः ।

दुःखजन्मप्रवृत्तिदोषमिथ्याज्ञानानामुत्तरोत्तरापाये तदनन्तरापायादपवर्गः ॥ (ந்யாயம் 1-22.2).

துக்கத்தின் அத்யந்த விடுதலையே முக்தியாகும். ஏனென்றால் பொய் க்ஞானம், லோபாதி தோஷம், துஷ்ட விஷயச் சேர்க்கை இவைகள் பல ஜன்மங்களிலேயும் சிறிது சிறிதாக விலகிக்கொண்டே வந்து முற்றிலும் விலகிய போதுதான் முக்தி கிடைக்கின்றது. ஆகையால் அம் முக்தி அழிவில்லாததாகும்.

விடை—: இது அவசியமில்லை. ஏனென்றால் இங்கே அத்யந்தம் என்ற பதத்தின் பொருள் பாவமாகும்.

“ अत्यन्तं दुःखमत्यन्तं सुखं चास्य वर्त्तते ”

மிகுந்த சுகமும் மிகுந்த துக்கமும் மனிதர்களுடையது. என்றால் மனிதனாக இருக்கும் வரையிலேயே அதிக

சுகமும் அதிக துக்கமும். இதே மாதிரிதான் இங்கேயும் அத்யந்த என்ற பொருளை அறியவேண்டும்.

கேள்வி—: முக்தியையும் விட்டு ஜீவன் பிறப்பதாயின் அது முக்தி நிலையில் எவ்வளவு காலம் இருக்கும்?

விடை—:

ते ब्रह्मलोकेषु परान्तकाले परामृतात् परिमुच्यन्ति सर्वे ॥

(முண்டக 3; 2; 6).

ஜீவன் முக்தி சுகத்தை மஹா கல்பபரியந்தம் அனுபவித்து மஹா கல்பத்திற்குப் பிறகு முக்தியினின்றும் நீங்கி சம்சாரத்தை யடைகின்றது. இதன் கணக்காவது—:

லட்சத்து இருபதினாயிரம் வருடங்கள் ஒரு சதுர்யுகம். இரண்டாயிர சதுர் யுகங்கள் ஒரு அஹோராத்ரி. முப்பது ஆயிர அஹோராத்ரிகள் ஒரு மாதம். அவ்வாறான பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருடம். அப்பேர்ப்பட்ட வருடங்கள் ஆயிரம் சேர்ந்து ஒரு பராந்த காலமாகும். இதை கணித சாஸ்த்திரத்தின்படி கணக்கிடலாம். இவ்வளவு காலம் முக்தி சுகமாகும்.

கேள்வி—: எல்லா மதத்தவர்களும் மறுபடியும் பிறப்பு இல்லையென்றே சொல்கின்றார்கள்.

விடை—: இவ்வாறு இருக்கமுடியாது. ஏனென்றால் முதலில் அவனின் சாமர்த்யம் சரீராதி சாதனங்களிலேயே விளங்கும். அப்படியிருக்க அதனின் பலன்கள் எப்படி

அனந்தமா யிருக்கமுடியும்? அனந்தமாகிய ஆனந்தத்தை யடைய அவனின் சாமர்த்யம் குறைவாகவே யிருக்கிறது. ஆகையால் அது அனந்த சுகத்தை யனுபவிக்க முடியாது. அநித்யமான சாதனங்களைப் பெற்றதின் பலன்கள் நித்யமா யிருக்கமுடியாது. அதுவன்றி முக்தியடைந்த ஜீவன்கள் திரும்பிவரவில்லையானால் சில காலத்திற்குப் பிறகு சம் சாரத்தில் ஜீவன்களே இல்லாமற் போய்விடும்.

கேள்வி—: எத்தனை ஜீவன்கள் முக்தியை அடைந்து விட்டனவோ அத்தனை ஜீவன்களை புதியதாக கடவுள் உண் டாக்கிவிடுகின்றார். ஆகையால் உலகத்திலே ஜீவன்கள் இல்லாமற் போகாது.

விடை—: அப்படியானால் ஜீவன் அநித்யமான தென் றேற்பட்டுவிடும். ஏனென்றால் எது உற்பத்தியாயிற்றோ அது அழிய வேண்டுவது நிச்சயம். ஆனால் உங்களின் மதப்படி உண்டான முக்தி இல்லாமல் போவதில்லை. இது விரோதமல்லவா? அதுவன்றி முக்தியின் ஸ்தானத்தில் அநேக கலகங்களு முண்டாகிவிடும். ஏனென்றால் இனி மேல் பிறக்கமாட்டோம் என்று தெரிந்துகொண்ட ஜீவன் கள் சும்மாயிருக்குமா? அன்றி துக்கத்தினனுபவம் இல் லாமல் சுகத்தி னனுபவம் ஏது? கசப்பு இல்லையென்றால் தித்திப்பு ஏது? தித்திப்பு இல்லையென்றால் கசப்பு ஏது? ஏனென்றால் ஒன்றுக்கொன்று விரோதமா யிருந்தால்தான் அவைகளின் பேத முண்டாயிருப்பதை உணரலாகும். சதா தித்திப்பையே தின்று வந்தவனுக்கு அது ருசியாகத் தெரி யாது. அன்றி கடவுள் அந்தமாகிய ஜீவனுக்கு அனந்த

மாகிய பலன்களை ஈவதாயின் அவரின் நியாயமும் நஷ்ட மடைந்துவிடும். ஒருவன் தூக்கக்கூடிய பளுவை மாத்திரம் அவன்மேல் சுமத்துவது அறிவாளிகளின் கடமையாகும். அப்படியே ஒரே ஒரு மனத்தை மாத்திரம் தாங்கக்கூடிய வனுக்கு பத்து மனங்களை அளிப்பது நியாயமல்ல. அதே போல அல்பக்ஞ, அல்ப சாமர்த்ய ஜீவனுக்கு அனந்த மாகிய சுகத்தின் பளுவை அளித்தல் கடவுளுக்குத் தகாது. ஆகையால் கடவுள் எந்தக் காரணத்திற்காக புதிய ஜீவன் களை உண்டாக்குவாரோ அது முடிந்துவிட்டது. ஏனென் றால் எவ்வளவு பணமுடையவனாயினும் வரவன்றி செல வையே செய்துகொண்டிருப்பானாயின் எப்படியும் ஒரு காலத்தில் அவன் பணமில்லாதவனாகிவிடுவது நிச்ச யம். ஆகையால் முக்தியை அடைந்த ஜீவன் மறுபடி பிறக் கின்றது என்பதுதான் சரியாகும்.

கேள்வி—: கடவுள் சதா முக்தியானந்தனா யிருப்பதைப் போலவே ஜீவன்களுக்கும் சதா முக்தியானந்தத்தை யளிப் பதால் என்ன தோஷம்?

விடை—: கடவுள் அனந்தஸ்வரூப, சாமர்த்ய, குண, கர்ம, ஸ்வபாவத்தனாகும். ஆகையால் அவர் எப்போதும் அவித்தையில் மூழ்குவதில்லை. ஆனால் ஜீவன் முக்தியடைந் திருந்தாலுங்கூட அல்பக்ஞ, அல்ப ஸ்வரூபனேயாகும். ஆகையால் கடவுளின் தன்மையை அவன் அடைய முடி யாது.

கேள்வி—: அப்படியானால் முக்தியும் பிறப்பிறப்புக் குச் சமானமானதேயாகும். பின் ஏன் அதை அடைய அனுவசியமாய் முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டும்?

விடை—: முக்தி பிறப்பிறப்புகளுக்குச் சமமானதல்ல. ஏனென்றால் 36000 முறை பிறந்து பிறந்து இறக்கும் காலம் எவ்வளவோ அவ்வளவு காலம்வரை முக்தியில் ஆனந்தத்தை யனுபவிப்பது பிரயோஜனமில்லாத காரியமா? இன்றைக்கு சாப்பிட்டவனுக்கு நாளைக்குக் கட்டாயம் உண்டாகும் பசியைத் தடுக்க மனிதன் வழியைத் தேடும்போது முக்தியை யார்தான் விரும்பமாட்டார்கள்? மரணம் நிச்சயமென்று தெரிந்திருந்துங்கூட மனிதர்கள் ஏன் ஜீவன உபாயத்தை நாடுகின்றார்கள்? ஆகையால் முக்தியிலிருந்து விடுபட்டு மறுபடி பிறந்த போதுங்கூட மறுபடியும் அம்முக்தியை அடைய விரும்புவது அவசியந்தான்.

கேள்வி—: முக்தியைப் பெறும் வழியென்ன?

விடை—: சில வழிகளை முன்பே சொல்லியிருக்கிறோம். ஆனால் விசேஷ வழியாவது—: துக்கத்தை யளிக்கும்படியான பொய்வார்த்தைகளை விட்டு, சுகத்தை யளிக்கும்படியான மெய்யையே பேசிவருவதால் ஜீவன் முக்தி சாதனத்தைப் பெறுகின்றது. அதர்மத்தை விட்டு எப்போதும் தர்மத்தையே ஆசரிக்கவேண்டும். ஏனென்றால் துக்கத்திற்கு அதர்மமும் சுகத்திற்கு தர்மமும் மூலகாரணமானவை. சத்புருடர்களுடன் ஆலோசித்து சத்யாசத்ய, தர்மாதர்ம காரியங்களை நிர்ணயிக்கவேண்டும். ஜீவனின் பஞ்சேந்திரியத் தொழில்களை வசம் செய்துகொள்ளவேண்டும். ஜீவன் "அன்னமய" தோலிலிருந்து எலும்புவரையுள்ளவைகள் பூமிமயம், "ப்ராணமய" உள்ளே யிருந்து வெளிச்செல்லுங் காற்று, "அபான" வெளியிலிருந்து உள்

செல்லுங் காற்று, "ஸமான" நாபியிலேயிருந்து எல்லா ரசங்களையும் உண்டாக்குவது "உதான" கழுத்திலே யிருந்து அன்னபானங்களை விழுங்குவது, "வ்யான" சகல சரீரத்திலும் ஜீவன் சேஷ்டைகளைப் புரிவது. "மனோமய" மனத்தினுடனே அஹங்காரம், வாக், பாத, பாணி, பாயு, உபஸ்தங்கள் கூடியிருப்பது. "விக்ஞானமய" புத்தி, சித்த, ஸ்ரோத்ரம், த்வக், நேத்ர, ஜிஹ்வா, நாசிகா ஆக ஐந்து இந்திரியங்களின் வழியாய் ஜீவன் காரியங்களைப் புரிதல். "ஆனந்தமயகோஶம்" அன்பு, கருணை, ஆனந்தம், ஆதாரரூப ப்ரக்ருதியு மிருக்குமிடம். இவ்வைந்தும் கோசங்களென்று சொல்லப் படுகிறது, இவைகளினுதவி கொண்டே ஜீவன் சகல விதமான காரியங்களையும் புரிகின்றது. அவஸ்தைகள் மூன்று—: "ஜாக்ரத", "ஸ்வப்ன", "ஸுஷுப்தி". சரீரங்கள் மூன்று—: "ஸ்தூலம்", தெரிகின்றது; பஞ்சப்ராணன்கள், பஞ்ச ஞானேந்திரியங்கள், பஞ்சசூக்ஷ்ம பூதங்கள், மன, புத்தி ஆக இப்பதினேழு தத்துவங்களின் கூட்டு "சூக்ஷ்ம சரீரம்", இச் சூக்ஷ்ம சரீரம் ஜனன மரணங்களிலும் ஜீவனுடனேயே வசிக்கின்றது. இதில் இரண்டு பேதமுண்டு. ஒன்று சூக்ஷ்ம பூதத்தின் அம்சத்தினாலாகியது. ஸ்வபாவமாக ஜீவனுடனிருப்பது. பௌதிக சரீரம் முக்தியிலும் இருக்கிறது. இதனாலேயே ஜீவன் முக்தியிலும் சுகத்தை யனுபவிக்கின்றது. மூன்றாவது "காரண சரீரம்" ஆழ்ந்த நித்திரை உண்டாவது. இது ப்ரக்ருதி ரூபமானதினாலே இது எல்லா ஜீவர்களுக்கு மொன்றே யாகும். நான்காவது பரமாத்மாவின் ஆனந்தத்திலே ஜீவன் முழுகிய நிலையாகிய

"சமாதி" யை அடைவது, "துரீய சரீரம்" ஆகும். இச்சகல கோச அவஸ்தைகளிலும் ஜீவன் வேறுபட்டது தான். ஏனென்றால் மரணத்தை யடைந்தபோது சிலர் ஜீவன் போய் விட்டது என்று சொல்கிறார்கள். அதி லிருந்து ஜீவன் இச் சரீரத்தை அனுபவித்துக் கொண் டிருந்தவனே யன்றி சரீரமே ஜீவனல்ல என்று தெரிகிறது. இந்திரியங்களின் படி மனமும், மனதுடன் ஆத்மா கூடிக் கொண்டு ப்ராணத்தை ப்ரேரேபித்துக் கொண்டு நல்ல, கெட்ட காரியங்களை ஜீவன் புரிகின்றது. அப்போது அது வெளிமுகமாயிருக்கிறது. அப்போது உள்ளிருந்து நல்ல காரியங்களைப் புரியும்போது ஆனந்தமும், உத்ஸாக மும், கெட்ட காரியங்களைப் புரியும்போது பயமும் வெட் கமும் அனுபவிப்பது கடவுளின் சிக்ஷையாகும். இச் சிக்ஷையின்படியே அனுசரிப்பவர் முக்தி சுகத்தை யடை கின்றார். விரோதமாக அனுசரிப்பவர்கள் பந்தத்தைப் பெறுகிறார்கள்.

இரண்டாவது சாதனம் "வைராக்யம்". அறிவினால் சத்யாசத்யத்தை விசாரித்து சத்தியத்தைக் கைக்கொண்டு அசத்தியத்தை நீக்கிவிட வேண்டும். பூமியிலிருந்து கட வுள் வரையுள்ள சகல பொருள்களின் தத்துவங்களையும் அறிந்து அவ்வவைகளை அதனதன் குணகர்மஸ்வபாவங் களுக்குத் தகுந்தவாறே அனுபவித்து மற்றவர்களையு மனு பவிக்கச் செய்தல் விவேகமாகும்.

மூன்றாவது சாதனம்—: ஷட் சம்பத்தி"—"ஆறுவித காரியங்களைப் புரிதல்—: (1) "சமம்" தன்னாத்மாவை

சதா அதர்மத்திலே யிருந்து நீக்கி தர்மத்திலேயே செலுத்துதல். (2) " தமம் " கண், காது முதலாகிய இந்திரியங்களைச் சதா நல்லவைகளிலேயே செலுத்துதல். (3)" உபரதி "(விடல்) துஷ்டர்களின் நட்பை விலக்கி யிருத்தல். (4) " திதிக்ஷா " (சகித்தல் நிந்தனை, புகழ்ச்சி, சுகம், துக்கம், லாப நஷ்டங்களைக் கவனியாமல், சதா முக்தி சாதனங்களிலே மனதை செலுத்தியிருத்தல். (5) " ஸ்ரத்தா " வேதாதி சாஸ்த்திரங்களிலும், அதைக் கற்றறிந்த பெரியோர்களிடத்திலும் நம்பிக்கை கொள்ளல். (6) " சமாதான " சித்தத்தின் ஏகாக்ரம். இவ் வாறு வழிகளும் சேர்ந்து " ஷட் சம்பத்தி " என்ற சாதனமாகும்.

நான்காவது சாதனம்—: " முமுக்ஷுத்வம் " பசிக்கு அன்ன ஜலத்தைத் தவிர வேறு பொருளில் திருப்தியடையாததைப்போல முக்திகளைப்பெற்று அதன் சாதனங்களிலே மாத்திரம் அன்பைச் செலுத்தி யிருத்தல். இந் நான்கும் சாதனங்கள். இவைகளுக்குப் பின் நான்கு " அனுபந்த " ங்களைப் புரியவேண்டும். முதலில் இந் நான்கு சாதனங்களையு மனுசரித்தல். (2) " ஸம்பந்த " வேதசாஸ்திர விஷயங்களை நன்காராய்ந்து அதிலேயே லயமடைதல் (3) " விஷயீ " வேதத்தில் சொல்லியுள்ள ப்ரம்ம ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டு அதன் ப்ரதிரூபனாக ஆகிய புருடனின் பெயர் விஷயீ. (4) " ப்ரயோஜன " சகல துக்கங்களையும் நீக்கி முக்தி சுகத்தை யனுபவித்தல். இந்நான்கும் அனுபந்தங்கள் ஆகும்.

" ஸ்ரவண சதுஷ்டயம் "—(1) " ஸ்ரவணம் " வித்வான்கள் ஏதாவது உபதேசிக்கும்போது அமைதியாய்

அதை கவனித்துக் கேட்டல். கேட்டு (2) "மனன" தனியிடத் தமர்ந்து கேட்டவைகளை சிந்தித்தல். அதில் சந்தேகமுண்டாயின் மறுபடி கேட்டல். (3) "நிதித்யாஸன" கேட்டு சிந்தித்தவைகள் சந்தேக மறத் தெளிந்தபின் சமாதி நிலையிலமர்ந்து தான் அறிந்தவைகளை யனுபவித்தல் (4) "ஸாக்ஷாத்கார" பொருள்களின் குணகர்ம ஸ்வபாவங்களை உள்ளபடி அறிதல். இவைகள் ஸ்ரவண சதுஷ்டயங்களாகும்.

தமோகுண, ரஜோ குணங்களினின்றும் வேறுபட்டு, சாந்த குணத்தைப் பெறலாம். சுக புருடர்களுடன் நட்பு, துக்க புருடர்களிடம் கருணை, புண்ணியாத்மாக்களுக்கு சந்தோஷம், துஷ்ட புருடர்களுக்கு சந்தோஷம் விரோதம் இரண்டுமில்லாமை, தினமும் குறைந்தது இரண்டு மணி நேரங்கள் தியானத்திலிருத்தல் இவைகளால் உள் மனம் சாக்ஷாத்காரத்தைப் பெறும்.

अविद्याऽस्मितारागद्वेषाभिनिवेशाः पञ्च क्लेशाः ॥

(யோக-2 3).

அவித்தை, உண்டாகும் அறிவை ஆத்மாவினின்றும் வேறுபட்டதல்லவென்று அறிதல் அஸ்மிதை, சுகத்தில் அன்பு ராகம், துக்கத்தில் அன்பில்லாமை துவேஷம், சரீரம் எப்போதும் இறந்துபோகக் கூடியதுதான் என்ற நிச்சயத்தை யடைந்து தனக்கு வேண்டிய சாதனத்திலேயே கண்ணுங்கருத்துமாய் இருத்தல் "அபிநிவேஶம்" ஆகும். இவ்வைந்து துக்கங்களையும் யோகாப்பியாசத்தால் நீக்கி முக்தி சுகத்தைப் பெறவேண்டும்.

கேள்வி—: *நீங்கள் நினைப்பது போன்ற முக்தியை யாரும் நினைக்கவில்லை, பாருங்கள்! ஜைனர்கள் சிவபுரத்தில் சென்று பேசாமல் உட்கார்ந்து கொண்டு இருப்பது தான் மோக்ஷமென்றும்; கிருஸ்தவர்கள் நான்காவது ஆகாயத்திலே அன்ன ஆகாராதிகளை யுண்டு ஆடைகளை யணிந்து விளையாடிக்கொண்டிருப்பதுதான் மோக்ஷ மென்றும், முகம்மதியர்கள் ஏழாவது ஆகாய மென்றும், வாமமார்க்கிகள் ஸ்ரீபுரத்திலென்றும், சைவர்கள் கைலாச மென்றும், வைஷ்ணவர்கள் வைகுண்ட மென்றும் சொல்லுமிடங்களில் நன்கு உண்டுடுத்துக் களியாட்டயர்தலே மோக்ஷமென்று சொல்லுகிறார்கள். பௌராணிகர்கள் (ஸாலோக்ய) ஈஸ்வரனின் உலகிலே வசித்தல் (ஸானுஜ்ய) கடவுளின் தம்பியைப் போல வசித்தல் (ஸாரூப்ய) உபாசிக்கத் தகுந்த தேவனாக ஆதல் (ஸாமீப்ய) கடவுளின் வேலைக்காரனாக இருத்தல் (ஸாயுஜ்ய) கடவுளாகவே மாறி விடுவது தான் முக்தி யென்கிறார்கள். வேதாந்திகள் ப்ரம்மத்திலே லயமடைந்து விடுவது தான் முக்தி யென்று சொல்லுகிறார்கள். எது சரி?*

விடை—: ஜைன மதத்தைக் குறித்து 12 வது அத்தியாயத்திலும், கிருஸ்தவ மதத்தைக் குறித்து 13 வது அத்தியாயத்திலும், மகம்மத்திய மதத்தைக் குறித்து 14 வதிலும், முக்தியாதி விஷயங்களை எழுதுகிறோம். நிற்க, வாமமார்க்கிகள் ஸ்ரீபுரத்தில் சென்று லக்ஷ்மிக்குச் சமானமான பெண்களையும், கள், மாம்ஸம் முதலியவைகளை அனுபவித்துக் கொண்டு, சதா வியாதி யில்லாமல் வாலிப வயதினர்களாகவே இருக்கலா மென்று சொல்வது சுத்தப் பொய். ஏனென்றால் எங்கே போகமுண்டோ அங்கே ரோகமு முண்டு.

அங்கே கிழத்தனம் கட்டாயம் இருக்கும். இனி பௌராணிகர்கள் சொல்வதும் தப்பிதம். ஏனென்றால் புழு முதலான சகல ஜீவன்களும் இப்போது வசித்துக் கொண்டிருக்குமிடங்களும் கூட கடவுளின் லோகமே யாகும். ஆகையால் ஜீவன்கள் எப்போதும் கடவுளின் உலகத்திலேயே வசிக்கின்றன. ஆகையால் "சாலோக்ய"ம் இங்கே முயற்சியில்லாமல் கிடைத்துக் கொண்டே யிருக்கிறது. இனி இரண்டாவது கடவுள் எங்கும் வ்யாபித்திருப்பதாலே எல்லா ஜீவன்களும் சதா கடவுளினருகிலேயே வசித்துக் கொண்டிருக்கின்றன. ஆதலால் "சாமீப்யமும் இங்கேயே இருக்கிறது. கடவுளினும் ஜீவன் சிறிய சாமர்த்யம் பெற்றதாய் சதா கடவுளினருகிலேயே வசித்துக் கொண்டிருப்பதால் சதா தம்பியைப் போலவே இருந்து வருவதால் "ஸானுஜ்ய"மும் இங்கேயே இருக்கிறது. கடவுளின் வியாபகத்திலேயே சகல ஜீவன்களும் வசித்துக் கொண்டிருப்பதாலே "சாயுஜ்ய"மும் இங்கேயே இருக்கிறது. ஆகையால் இவைகள் முக்தியல்ல. இவைகளும் ஒருவித பந்தனமே யாகும். அன்றி ஓர் குறிப்பிட்ட இடத்தை முக்தி யென்று சொன்னால் அவ்விடத்திலிருந்து நீங்கிய போது அம்முக்தியும் நீங்கி விடுகிறது. ஆனால் உண்மையில் முக்தி யென்பது நினைத்த விடமெல்லாம் செல்வது. பயம், சந்தேகம், துக்கம் இல்லாதது. இவ்வாறிருந்தும் பிரளயத்திற்குப் பிறகு மறுபடியும் ஜன்மத்தை எடுப்பது.

கேள்வி—: ஜன்மம் ஒன்றேதானா அநேகமா ?

விடை—: அநேகம்.

கேள்வி—. அநேக மென்றால் முன் ஜென்மத்திலிருந்ததும், இறந்ததும் ஏன் நினைவுக்கு வருவதில்லை ?

விடை—: ஜீவன் அல்பக்ஞன். முக்காலதர்சியல்ல இதனால் தான் இதற்கு ஞாபக மில்லை. அது மாத்திரமல்ல. மனதிலே இரண்டு நினைவுகளை ஒரே சமயத்தில் நினைக்கவு மிதற்குத் திறமையில்லை. பூர்வ ஜன்மத்தை விட்டு விடு. கர்ப்பத்திலிருந்ததும், பிறந்ததும், ஐந்து வயது வரை வளர்ந்ததும் இதற்கு நினைவில் வருகின்றதா ? விழிப்பு நிலையில் கண்டவைகளை நல்ல ஆழ்ந்த தூக்கத்தில் அறிவதில்லை. பன்னிரண்டு வருடங்களுக்கு முன் இந்த மாதம் இந்த தேதி இத்தனை மணிக்கு நாம் எங்கே என்ன செய்து கொண்டிருந்தோ மென்பது க்ஞாபக மில்லை. இவைகளே நினைவிற்கு வரவில்லை யென்றால் முன் ஜன்மத்தின் நினைவு எப்படி யுண்டாகும் ? சென்ற எதிர்காலங்களின் வர்த்த மானங்களை அறிந்து கொள்ள முயற்சித்தாலும் முடியாது. ஏனென்றால் ஜீவனின் க்ஞானமும் ஸ்வரூபமும் அல்பமான தாகும். ஈஸ்வரனுக்குத்தான் இது முடியும்.

கேள்வி—: ஜீவனுக்கு பூர்வ க்ஞான மில்லாத போது கடவுள் அதற்கு தண்டனையை அளிக்கின்றார். ஆனால் ஜீவன் இதை சகிக்கக் கூடவில்லை. ஏனென்றால் நாம் முன்பு செய்த இக்கர்மங்களுக்காகத்தான் இப்பலன்களை யனுபவிக்கின்றோ மென்று தெரிந்தால் தானே இப்போது அத் தப்பிதங்களைச் செய்யா மலிருக்க முடியும் ?

விடை—: நீ க்ஞானத்தை எத்தனை விதமான தாக நினைக்கின்றாய் ?

கேள்வி—: ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களால் 8 விதமானதாக.

விடை—: என்ருல் இப்போது நீ அரசன், பணக்காரன், புத்திமான், தரித்திரன், மூடன், மூர்க்கன், சுகதுக்கங்களை இங்கே பார்க்கும்போது ஏன் உனக்கு பூர்வ ஜன்மத்தின் நினைவுண்டாவதில்லை? ஒரு வைத்யனிடம் மற்ருெரு நோயாளி வந்தபோது வைத்யன் அந்நோயாளியின் வியாதியைக் கண்டு சொல்லுகின்ருன். ஆனல் அந்நோயாளியே தன் வியாதியை ஏன் தெரிந்துகொண்டு பரிகாரம் தேட முடியவில்லை? ஏனென்ருல் வைத்யன் வைத்ய வித்தையைப் படித்திருக்கின்ருன். ஆனல் நோயாளியோ நமக்கு ஏதோ குற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று மாத்திரம் தெரிந்து கொள்கின்ருன். அவ்வாறே இவ்வுலகத்திலே சுக துக்காதி விசித்திரங்களைப் பார்க்கும் போது பூர்வ ஜன்மத்தினனுமானம் ஏன் உண்டாகாது? அன்றி பூர்வ ஜன்மம் இல்லை யென்ருல் கடவுள் பக்ஷபாதியாய் விடுகின்ருர். ஏனென்ருல் பாபமின்றி தரித்திரத்தையும், புண்யமின்றி செல்வத்தையும் கொடுப்பவர் குற்றவாளி யல்லவா? ஆகையாலே பூர்வ ஜன்மத்தின் பாபங்களுக்குத் தகவே கடவுள் சுக துக்கங்களைக் கொடுக்கின்ருர்.

கேள்வி—: ஒரே ஜன்மத்திலேயே கடவுள் நியாயத்தைச் செய்துவிடலாமே? ஓர் தோட்டக்காரன் தன் தோட்டத்திலே சிறிய பெரிய மரங்களை வைத்து, வேண்டாதவைகளை வெட்டிவிட்டு தண்ணீர் விட்டு வேண்டியவை:

களைச் செய்வதைப் போல, கடவுள் ஒரே ஜன்மத்திலேயே ஏன் இஷ்டப்படி ஜீவன்களை மாற்றிவிடக் கூடாது? இவர் ஏன் பயப்பட வேண்டும்?

விடை—: கடவுள் எதனால் நியாயத்தை விரும்புகின்றாரோ; அநியாயத்தை ஒருபோதும் விரும்பவில்லையோ அதனால் தான் அவர் பூஜிக்கத் தகுந்த பெரியவராகின்றார். நியாய விரோதமாகச் செய்வாராயின் அவர் ஒருபோதும் கடவுளாயிருக்க முடியாது. தோட்டக்காரன் யுக்திக்கு விரோதமாக மரங்களை வழியிலே நடமாட்டான். வளர்ந்து பலனளிக்கக்கூடியமரங்களை வெட்டிவிடவும்மாட்டான் .இப்படியே காரணமின்றி செய்துவிடுவதாயின் கடவுளும் குற்றமுள்ளவராய்விடுவார். கடவுள் ஸ்வபாவத்திலேயே பவித்திர நியாயவாதி யாகையால் உன்மத்தனைப் போன்று நியாய விரோதமான காரியத்தை அவர் செய்ய முடியாது. உலகத்திலே சாதாரண நியாயாதிபதியுங் கூட குற்றமின்றி ஒருவரையும் தண்டிக்க முடியாதே! அப்படி யிருக்க பரம தயா நியாயவாதியான ஈஸ்வரன் குற்றம் புரிவாரா?

கேள்வி—: கடவுள் முன்பே யாருக்கு எவ்வளவு கொடுக்கத் தீர்மானித்தாரோ அவருக்கு அவ்வளவே கொடுக்கின்றார். எவ்வளவு வேலைகளைச் செய்யவேண்டுமோ அவ்வளவே செய்கின்றார்.

விடை—: அவருடைய தீர்மானம் ஜீவர்களின் கர்மங்களுக்குத் தகுந்ததைப் போலவே யிருக்கும். அப்படியில்லாவிட்டால் அவர் அநியாயவாதியாய்விடுவார்.

கேள்வி—: பெரியோர் சிறியோர்களுக்கு துக்கம் ஒரே விதமாகத் தானிருக்கிறது. பெரியோர்களுக்கு பெரிய சிந்தனை ; சிறியோர்களுக்கு சிறிய சிந்தனை. ஓர் சாவகாரியின் வழக்கு (கேஸ்) நியாயஸ்தலத்தில் லட்சம் ரூபாய்களுக்காக நடந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் தான் நேராக கச்சேரிக்குப் போகாமல் வீட்டிலேயே மெத்தைமே லமர்ந்து கொண்டே சாவகாரி சிந்தித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அவரின் வேலைக்காரனாகிய மற்றொரு ஏழை, கடும்வெயிலில் காலில் செருப்புமின்றி நடந்து கச்சேரிக்குச் சென்று வழக்கு எவ்வாறு முடியுமோ என்று இங்குமங்கும் திரிந்து அவஸ்தைப் படுகின்றான். பிறகு வேலைக்காரன் திரும்பி வந்து தன் பக்கம் வெற்றி யடைந்து விட்டதென்று சொல்லக் கேட்ட போது சாவகாரி சுகத்தையும், தோல்வி யடைந்து விட்டதென்று சொல்லக் கேட்ட போது துக்கத்தையு மடைகிறான். சாவகாரியின் சுக துக்கம் தன் வேலைக்காரனின் வார்த்தைகளுக்குத் தக இருக்கும். இவ்வாறே அரசன் அழகிய மஞ்சத்திலே சயனித்த போதிலும் தூக்கமின்றி கஷ்டப்படுகிறான். ஆனால் அவனின் வேலைக்காரன் மேடு பள்ளமுடைய பூமியின் மேல் சயனித்த போதிலும் சீக்கிரத்தில் தூங்கி விடுகிறான். ஆகையால் சுக துக்கங்கள் எல்லோருக்கும் சமமே யாகும்.

விடை—: இது தப்பிதமாகும். யாராவது சாவகாரியைப் பார்த்து " நீ வேலைக்காரனைப் விடு " என்று சொன்னால் சாவகாரி வேலைக்காரனைய் விடுவானா ? ஆனால் வேலைக்காரன் மாத்திரம் சாவகாரியாய் ஆக விரும்புகிறான்.

சுக துக்கங்கள் சமமானது தானுயின் ஏன் இருவரும் தங்களின் நிலைமைகளை மாற்றிக் கொள்ளக் கூடாது ? பார் ! ஒரு ஜீவன் வித்வான் புண்யாத்மாவாகிய ஓர் அரச குடும்பத்திலே பிறக்கிறது. மற்ருென்று மஹா தரித்திரனின் குடும்பத்திலே பிறக்கின்றது. ஒன்று பிறப்பிலிருந்து சதா சுகத்தையும், மற்ருென்று சதா துக்கத்தையு மனுபவிக்கின்றது. ஒன்று பிறந்த போதே நல்ல வாசனை நீர்களால் ஸ்நானம் செய்விக்கப் பட்டு மிருதுவாக நாடிச் சேதனம் செய்விக்கப் படுகின்றது. நல்ல வாசனை, பலம் தரக்கூடிய பொருள்களைக் கலந்துள்ள பால் இதற்குக் கிடைக்கின்றது. அன்றி இதை சந்தோஷமாய் வைத்துக் கொண்டிருக்க அநேக வேலைக்காரர்களெல்லாம் ஏற்படுகிருர்கள். ஆனுல் மற்ருென்றின் பிறப்பிடம் காடு. குளிக்கவும் தண்ணீர் கிடைக்க வில்லை. பால் கிடைக்காமல் பாலுக்குப் பதில் குத்தும் அடியும் கிடைக்கின்றது. மிகுந்த பரிதாபக் குரலுடன் அழுகிறது. இதே மாதிரி கர்மங்களுக்குத் தக சுக துக்கங்களில்லை யென்ருல் நரக ஸ்வர்க்கங்களும் இருக்க முடியாது. ஏனென்ருல் இப்போது கடவுள் கர்மங்களைக் கவனியாது சுக துக்கங்களை யளித்தது போலவே இறந்த பிறகும் கூட விரும்பினவர்களுக்கு நரகத்தையும் விரும்பினவர்களுக்கு மோட்சத்தையும் கொடுக்கலா மல்லவா ? அன்றி எல்லா ஜீவர்களும் தர்மவான்களாய் விடின் தர்மம் ஏன் செய்ய வேண்டும் ? ஏனென்ருல் தர்மத்தின் பலன் கிடைப்பது சந்தேகம். அதுவன்றி கடவுளி னிஷ்டப்படிதான் பலன்களை யீவதாயின் வேண்டிய பாப காரியங்களை உலகில் செய்யலா மல்லவா ? ஆகையால்

முற் பிறப்பின் நன்மை தீமைகளுக்குத் தக இப்பிறப்பும், இப்பிறப்பில் புரியும் நன்மை தீமைகளுக்குத் தகவே மறு பிறப்புமிருக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

கேள்வி—: மனித சரீரங்களிலும் மிருக சரீரங்களிலும் உள்ள ஜீவன்கள் ஒரே மாதிரியானவைகளா? வேறு வேறனவைகளா?

விடை—: ஒரே மாதிரியானவைகள் தான். ஆனல் பாப புண்யங்களுக்குத் தகுந்ததைப் போன்று சில அழுக்குடையவைகளாயும் சில பவித்திரமானவைகளாயுமிருக்கின்றன.

கேள்வி—: மனித சரீரத்திலுள்ள ஜீவன் மிருக சரீரங்களிலும், மிருக சரீரங்களிலுள்ள ஜீவன் மனித சரீரத்திலும், புருட சரீரத்திலுள்ள ஜீவன் பெண் சரீரத்திலும், பெண் சரீரத்திலுள்ள ஜீவன் புருட சரீரத்திலும் மாறி வருவது உண்டா?

விடை—: உண்டு. ஏனென்றல் பாபம் அதிகரித்துப் புண்ணியங் குறைந்த காலத்தில் மனித சரீரத்திலிருக்கும் ஜீவன் மிருக சரீரத்திலும், பாபம் குறைந்து புண்ணியம் அதிகரித்த போது நல்ல அறிவாளிகளான சரீரத்தையும் பெறுகின்றது. புண்ய பாபங்கள் சமமாயிருக்கும் போது சாதாரண மனித ஜன்மம் கிடைக்கின்றது. இதிலுங் கூட புண்ய பாபங்களின் உத்தம, மத்திம, தாழ்வுகளுக்குத் தக மனிதர்களிலும் உத்தம, மத்திம, தாழ்வுடைய சரீரங்கள் கிடைக்கின்றன. பாபம் அதிகரித்த

போது மிருக ஜன்மத்தை யடைந்த ஜீவன் அதன் அதிக பாபம் குறைந்து புண்யத்திற்குச் சமமாக ஆனபோது மறு படி மனித ஜன்மத்தை யடைகின்றது. அதில் புண்ணியத்தை அனுபவித்தபின் மத்திய நிலை மனிதனுகப் பிறக்கிறது. சரீரத்தை விட்டு ஜீவன் செல்வதின் பெயர் "ம்ருத்யு" (மரணம்) சரீரத்துடன் சேருவதின் பெயர் "ஜன்மம்" (பிறப்பு). சரீரத்தை விட்டபோது ஜீவன் யமாலயமென்று சொல்லப் பட்ட ஆகாய வாயுவில் வசிக்கின்றது. எனென்முல்

"यमेन वायुना" (வேதம்)

யம என்பது வாயுவின் பெயர். ஆனுல் கருட புராணத்தில் கற்பித்திருக்கும் யமனல்ல. இதன் விசேஷங்களை 11-வது அத்தியாயத்தில் எழுதுவோம். பிறகு தர்மராஜ் (கடவுள்) அவைகளின் பாப புண்ணியங்களுக்குத் தக அவைகளுக்குப் பிறப்பை யளிக்கின்முர். கடவுளினுல் செலுத்தப் பட்டு அவ் வாயுவில் வசித்துக் கொண்டிருக்கும் ஜீவன் குறித்த கர்ப்பத்தை யடைகிறது. அது வாயு, அன்ன, ஜலங்களின் மூலமாய் சரீரத் துவாரங்களின் வழியாய் சரீரத்தினுள் செல்கின்றது. அப்படி யடைந்தது வீர்யத்திலே சென்று கர்ப்பத்தில் நிலைக்கின்றது. அங்கு சரீரத்தைத் தரித்துக் கொண்டு வெளி வருகிறது. அது பெண் ஜன்மத்தை அடைய வேண்டியதாயின் பெண்ணின் சரீரத்திலும் ஆண் ஜன்மத்தை யடையவேண்டியதாயின் ஆணின் சரீரத்திலும் ப்ரவேசிக்கிறது. நபும்சகமாயின் பெண் புருடர்களின் சரீர சேர்க்கை காலத்தில் இருவரின்

சரீரத்துள்ளும் பிரவேசித்து வீர்யங்களின் சேர்க்கையால் உண்டாகிறது. இவ்வாறுன அநேக பிறப்பிறப்புகளை முக்தியடையும் வரை அடைந்து கொண்டே யிருக்கிறது. முக்தியை யடைந்த போது அநேக காலம் இப் பிறப்பிறப்புகளிலே யிருந்து நீங்கி யிருக்கிறது.

கேள்வி—: முக்தி ஒரே ஜன்மத்தில் கிடைக்குமா அநேக ஜன்மங்களிலா ?

விடை—: அநேக ஜன்மங்களில். ஏனென்றல்—:

भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे पराऽवरे ॥

(முண்டகம்—2-2-8).

எப்போது இச் சீவனிடத்திலே யிருக்கும் அவித்தை யகன்று ஞானம் உதயமாகின்றதோ அப்போதே இதன் பந்தங்கள் விடுபட்டு உள்ளும் புறம்பும் வியாபித் துள்ள பரமாத்மாவிலே வசிக்கத் துடங்குகின்றது.

கேள்வி—: முக்தியிலே கடவுளுடனே ஜீவன் கலந்து விடுகின்றதா இல்லையா ?

விடை—: இல்லை. ஏனென்றல் கடவுளுடன் கலந்து விட்டால் முக்தியின் சுகத்தை அனுபவிப்பது எப்படி ? அனுபவிக்க முடியா விட்டால் அதை அடைய செய்த முயற்சி யெல்லாம் வீணல்லவா ? அன்றி அதை முக்தி யென்றும் சொல்ல முடியாது. அதை ஜீவனின் ப்ரளய மென்று தான் சொல்ல வேண்டும். ஆகையால் பரமாத்மா

விலே இது வசித்துக் கொண்டிருக்கின்றதே தவிர அதனுடன் கலந்து விடுகிறதில்லை.

सत्यं ज्ञानमनन्तं ब्रह्म यो वेद निहितं गुहायां परमे व्योमन् । सोऽश्नुते सर्वान् कामान् सह ब्रह्मणा विपश्चितेति ॥

(தைத்ரீ—ஆனந்தவல்லி. 1).

இச் சீவாத்மா தன் புத்தியிலே நின்று சத்ய க்ஞான அனந்தானந்த ரூப பரமாத்மாவை அறிகிறது. அவ்வியாபக ரூப ப்ரம்மத்திலே நின்று, அதனுடனேயே விரும்பியவைகளை அடைகின்றது. என்றால் எங்கெந்த ஆனந்தத்தை விரும்புகின்றதோ அந்தந்த ஆனந்தங்களை அனுபவிக்கின்றது. இதுவே முக்தி யென்று சொல்லப்படும்.

கேள்வி—: சரீரம் இல்லாமல் உலகத்திலே ஒரு சுகத்தையு மனுபவிக்க முடியாது. அப்படியிருக்க முக்தியில் மாத்திரம் சரீரம் இல்லாமல் எப்படி ஆனந்தத்தை யனுபவிக்க முடியும் ?

விடை—: இதற்கு முன்பே விடை சொல்லி யிருக்கிறோம். இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கேட்டுக்கொள். சரீரத்தின் துணையால் உலக சுகத்தை அனுபவிப்பதைப் போல கடவுளின் வியாபகத்தின் துணையால் முக்தி சுகத்தை அனுபவிக்கின்றது. சுத்த க்ஞானத்துடன் சகல ஸ்ருஷ்டியையும் பார்க்கும், வேண்டிய இடத்திற்குச் செல்லும், அன்னிய முக்தர்களுடன் சேரும், ஸ்ருஷ்டி வித்தையை கிரமமாகப் பார்க்கும், எல்லா லோகலோகாந்த

ரங்களுக்கும் சென்று பார்க்கும். முக்தியிலே ஜீவன் நிர்மலமாயிருப்பதினுலே அதற்குச் சுபாவமாய் இருக்கும் பூர்ண க்ஞானத்துடனே எல்லாவற்றையு மறிகிறது. இப்பேர்ப்பட்ட சுகத்தின் விசேஷமே ஸ்வர்க்கமாகும். விஷய ஆசைகளிலே மூழ்கி துக்க விசேஷங்களை யனுபவித்தல் நரகம் ஆகும். "ஸ்வ:" என்பது சுகத்தின் பெயராகும். "ஸ்வ: ஸுகம் கச்சதி யஸ்மின் ஸ ஸ்வர்க:, அதோ விபரீதோ துக்கபோகோ நரக இதி" சம்ஸார சுகம், சாமான்ய ஸ்வர்க்கம், பரமாத்மனின் சுகம் விசேஷ ஸ்வர்க்கம். சகல ஜீவன்களும் ஸ்வபாவமாகவே சுகத்தை விரும்பி துக்கத்தை போக்க ஆசிக்கின்றன. ஆனல் தர்மத்தை அனுசரிக்கும் வரையில் அவைகளின் ஆசை நிறைவேறுவதில்லை. ஏனென்ருல் சுகத்தின் மூல காரணத்தை மறந்து விடுவதால்—:

छिन्ने मूले वृक्षो नश्यति तथा पापे क्षीणे दुःखं नश्यति ॥

வேரை வெட்டிவிட்ட மரம் நாசத்தை யடைவது போலவே பாபத்தை விட்டு விடுவதால் துக்கம் நாசமடைந்து விடுகிறது. மனுஸ்மிருதியிலே புண்ய பாபங்களுக்குப் பலவித கதிகள் சொல்லியிருக்கின்றன—:

मानसं मनसैवायमुपभुङ्क्ते शुभाऽशुभम् ।
वाचा वाचा कृतं कर्म कायेनैव च कायिकम् ॥ १ ॥

शरीरजैः कर्मदोषैर्याति स्थावरतां नरः ।
वाचिकैः पक्षिमृगतां मानसैरन्त्यजातिताम् ॥ २ ॥

यो यदैषां गुणो देहे साकल्येनातिरिच्यते ।
स तदा तद्गुणप्रायं तं करोति शरीरिणम् ॥ ३ ॥

सत्त्वं ज्ञानं तमोऽज्ञानं रागद्वेषौ रजः स्मृतम् ।
एतद् व्याप्तिमदेतेषां सर्वभूताश्रितं वपुः ॥ ४ ॥

तत्र यत्प्रीतिसंयुक्तं किञ्चिदात्मनि लक्षयेत् ।
प्रशान्तमिव शुद्धाभं सत्त्वं तदुपधारयेत् ॥ ५ ॥

यत्तु दुःखसमायुक्तमप्रीतिकरमात्मनः ।
तद्रजोऽप्रतिभं विद्यात्सततं हारि देहिनाम् ॥ ६ ॥

यत्तु स्यान्मोहसंयुक्तमव्यक्तं विषयात्मकम् ।
अप्रतर्क्यमविज्ञेयं तमस्तदुपधारयेत् ॥ ७ ॥

त्रयाणामपि चैतेषां गुणानां यः फलोदयः ।
अग्र्यो मध्यो जघन्यश्च तं प्रवक्ष्याम्यशेषतः ॥ ८ ॥

वेदाभ्यासस्तपो ज्ञानं शौचमिन्द्रियनिग्रहः ।
धर्मक्रियात्मचिन्ता च सात्त्विकं गुणलक्षणम् ॥ ९ ॥

आरंभरुचिताऽधैर्यमसत्कार्यपरिग्रहः ।
विषयोपसेवा चाजस्रं राजसं गुणलक्षणम् ॥ १० ॥

लोभः स्वप्नो धृतिः क्रौर्यं नास्तिक्यं भिन्नवृत्तिता ।
याचिष्णुता प्रमादश्च तामसं गुणलक्षणम् ॥ ११ ॥

यत्कर्म कृत्वा कुर्वंश्च करिष्यंश्चैव लज्जति ।
तज्ज्ञेयं विदुषा सर्वं तामसं गुणलक्षणम् ॥ १२ ॥

येनास्मिन्कर्मणा लोके ख्यातिमिच्छति पुष्कलाम् ।
न च शोचत्यसम्पत्तौ तद्विज्ञेयं तु राजसम् ॥ १३ ॥

यत्सर्वेणेच्छति ज्ञातुं यन्न लज्जति चाचरन् ।
येन तुष्यति चात्मास्य तत्सत्त्वगुणलक्षणम् ॥ १४ ॥

तमसो लक्षणं कामो रजसस्त्वर्थ उच्यते ।
सत्त्वस्य लक्षणं धर्मः श्रैष्ठ्यमेषां यथोत्तरम् ॥ १५ ॥
(மனு 12 ; 8, 9, 25—33, 35-38).

மனிதர்கள் தங்களின் உத்தம, மத்திம, அதம ஸ்வபாவங்களை யறிந்து உத்தமத்தை மாத்திரம் கைக்கொண்டு மத்திம அதமங்களை விட்டு விடவேண்டும். ஜீவன் மனதிற்கு ஆக்ஞையிட மனமானது இந்திரியங்களின் மூலமாய் அதற்கிடப்பட்ட ஜீவனின் ஆக்ஞையை நிறைவேற்றுகிறது. ஆகையால் சுக துக்கங்களை ஜீவன் அடைகிறது. (1). திருட்டுத்தனம், பரஸ்த்ரீகமனம், நல்லவர்களைக் கொலை செய்தல் முதலிய காரியங்களைப் புரிந்ததற்காக வ்ருக்ஷ ஸ்தாவர ஜன்மங்களும் ; வாக்கினுல் செய்த பாபங்களுக்காக பக்ஷி, மிருக ஜன்மங்களும் ; மனத்தால் செய்த பாபத்திற்காக சண்டாளாதி ஜன்மங்களும் கிடைக்கின்றன (2). சரீரத்தில் அதிகமாக இருக்கும் குணமே ஜீவனிலுமப்போது இருக்கிறதென்று தெரிந்து கொள்ளலாம். (3). ஆத்ம க்ஞானத்துடன் இருக்கும் போது சத்வ குணமாயும், அக்ஞான மாயிருக்கும் போது தமோ குணமாயும், ராகத்துவேஷங்களுடனிருக்கும் போது ரஜோ குணமாயும் ஆத்மா இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். இம் மூன்று ப்ரக்ருதியின் குணங்களும் சகல சம்சாரத்திலும் வ்யாபித்திருக்கின்றன. (4). அதனுடைய விவேகத்தை கீழ் வருமாறு அறியவேண்டும்—: ஆத்மாவிலே நற்கலையும், மனதிலே அமைதியும் சுத்தமாய் வசிக்கின்றபோது சத்வ குணம் ப்ரதான மானதாகவும் ரஜோதமோ குணங்கள் அப்ரதான மானதாகவு மிருக்

கிற தெனத் தெரிந்து கொள்ளலாம். (5). ஆத்மாவும் மன தும் அமைதியின்றி துக்கத்துடனே இங்கு மங்கும் திரிந்து கொண்டிருக்கும் போது ரஜோ குணம் ப்ரதானமாயும் சத்வ தமோ குணங்கள் அப்ரதானமாகவுமிருக்கின்றதென அறியலாம். (6). மனமும் ஆத்மாவும் ஸம்ஸாரப் பொருள்களிலே மோகங் கொண்டு ஆழ்ந்திருக்கும் போதும், தர்க விதர்க்கங்கள் செய்ய முடியா திருக்கும் போதும் தமோகுணம் ப்ரதானமாயும் ஸத்வ ரஜோகுணங்கள் அப்ரதான மாயுமிருக்கின்றதென அறியலாம். (7). இப்போது இம்மூன்று குணங்களின் உத்தம, மத்திம, அதம பலன்களை பூர்ண பாவத்துடன் சொல்வோம் (8). வேதாப்யாசம், தர்மானுஷ்டானம், க்ஞானத்தால் புத்தி, சுத்தமானவைகளில் ஆசை, இந்திரிய நிக்ரஹம், தர்மகாரியம், ஆத்ம விசாரணை இவைகள் சத்வ குணத்தின் லக்ஷணங்கள் (9). ஆரம்ப விருப்பம், தைர்யத்யாகம், அசத்கார்ய க்ரஹணம், நிரந்தர விஷய சேவையில் அன்பு இவைகள் ரஜோ குணத்தின் லக்ஷணங்கள் (10). லோபம், பாபமூலச் செய்கை, ஆலஸ்யம், நித்திரை, தைர்யநாசம், கொடூரம் நாஸ்திக்யம், வேதத்தில் கவலை யில்லாமை, பலவித கேவல சிந்தனைகள், விசனத்திலாழ்தல் இவைகள் தமோகுணத்தின் லக்ஷணங்கள் (11). கார்யத்தைச் செய்து, செய்து கொண்டே செய்வதில் வெட்க மடைதல், சந்தேக பயமடைதல் இவைகள் தமோ குண நிலை (12) உலக விடுதலையை விரும்பிச் செய்யுங் கார்யம், தரித்திரத்திலும் தானமீதல் இவைகள் ரஜோ குணநிலை (13) விக்ஞானத்தை யறிய விரும்புதல், நல்ல காரியங்களை வெட்க பயமின்றிச் செய்தல்,

தர்மாசரணத்தில் ருசி இவைகள் சத்வ குணநிலே (14) தமோ குணத்தின் லக்ஷணம் காமம். ரஜோகுணலக்ஷணம் அர்த்தக் கிரஹிப்பு. சத்வகுண லக்ஷணம் தர்மசேவை. ஆனாலும் தமோகுணத்திலும் ரஜோகுணம், ரஜோகுணத்திலும் சத்வகுணம் உத்தமமானதாகும் (15) எங்கெந்த குணத்தால் ஜீவன் எங்கெந்த கதியை அடையு மென்பதை இனி சொல்வோமாக—:

देवत्त्वं साश्विका यान्ति मनुष्यत्त्वं च राजसाः ।
तिर्यक्त्वं तामसा नित्यमित्येषा त्रिविधा गतिः ॥ १ ॥

स्थावराः कृमिकीटाश्च मत्स्याः सर्पाश्च कच्छपाः ।
पशवश्च मृगाश्चैव जघन्या तामसी गतिः ॥ २ ॥

हस्तिनश्च तुरङ्गाश्च शूद्रा म्लेच्छाश्च गर्हिताः ।
सिंहा व्याघ्रा वराहाश्च मध्यमा तामसी गतिः ॥ ३ ॥

चारणाश्च सुपर्णाश्च पुरुषाश्चैव दाम्भिकाः ।
रक्षांसि च पिशाचाश्च तामसीषूत्तमा गतिः ॥ ४ ॥

झल्ला मल्ला नटाश्चैव पुरुषाः शस्त्रवृत्तयः ।
द्यूतपानप्रसक्ताश्च जघन्या राजसी गतिः ॥ ५ ॥

राजानः क्षत्रियाश्चैव राज्ञां चैव पुरोहिताः ।
वादयुद्धप्रधानाश्च मध्यमा राजसी गतिः ॥ ६ ॥

गन्धर्वा गुह्यका यक्षा विबुधानुचराश्च ये ।
तथैवाप्सरसः सर्वा राजसीषूत्तमा गतिः ॥ ७ ॥

तापसा यतयो विप्रा ये च वैमानिका गणाः ।
नक्षत्राणि च दैत्याश्च प्रथमा सात्त्विकी गतिः ॥ ८ ॥

यज्वान ऋषयो देवा वेदा ज्योतींषि वत्सराः ।
पितरश्चैव साध्याश्च द्वितीया सात्त्विकी गतिः ॥ ९ ॥

ब्रह्मा विश्वसृजो धर्म्मो महानव्यक्तमेव च ।
उत्तमां सात्त्विकीमेतां गतिमाहुर्मनीषिणः ॥ १० ॥

इन्द्रियाणां प्रसङ्गेन धर्मस्यासेवनेन च ।
पापान्संयान्ति संसारानविद्वांसो नराधमाः ॥ ११ ॥

(மனு 12; 40, 42-50, 52).

சாத்விக குணமுடையோர் தேவர் (வித்வான்). ரஜோ குணமுடையோர் மத்திம மனிதர். தாமஸ குணமுடையோர் நீச கதியை அடைவோர்களாகும் (1). அதம தமோ குணத்தவர்கள் ஸ்தாவரம், வ்ருக்ஷம், புழு, எறும்பு, மீன், பாம்பு, பசு, மற்றும் உள்ள மிருக ஜன்மங்களில் ஒன்றைப் பெறுவார்கள் (2). மத்யம தமோ குணத்தவர்கள் யானை, குதிரை, சூத்திரன், மிலேச்சன், சிம்ஹம், புலி, பன்றி முதலிய ஜன்மங்களில் ஒன்றைப் பெறுவார்கள் (3). உத்தம தமோ குணத்தவர்கள் தூதன், நல்ல பறவை, டாம்பீக புருடன், ராக்ஷஸன், அனுசாரி, முதலியவைகளில் ஒன்றைப் பெறுவார்கள் (4). அதம ரஜோ குணத்தவர்கள் சிப்பாய் (யுத்தவீரன்) மாலுமி, நடனக்காரன், வேலைக்காரன், குடியன், முதலியவைகளில் ஒன்றைப் பெறுவார்கள் (5). மத்திம ரஜோ குணத்தவர்கள் அரசன், க்ஷத்திரியன், அரசரின் புரோகிதன், வக்கீல், பாரிஷ்டர், சேனுபதி இவைகளில் ஒன்றைப் பெறுவார்கள் (6). உத்தம ரஜோ குணத்தவர்கள் பாடகன், வாத்யக்காரன், பணக்காரன், வித்வான்களின் சேவகன், அழகிய பெண் இவைகளில்

ஒன்றைப் பெறுவார்கள். (7) அதம சத்வ குணத்தவர்கள் தபஸ்வீ, சன்யாஸி, வேத பாடகன், விமானி, ஜ்யோதிடன் முதலியவைகளில் ஒன்றைப் பெறுவார்கள் (8). மத்திம சத்வ குணத்தவர்கள் யாககர்த்தன், வேதார்த்தவித்தன், காலக்ஞானி, வித்வான், உபாத்தியாயன் முதலியவைகளில் ஒன்றைப் பெறுவார்கள். (9) உத்தம சத்வ குணத்தவர்கள் ப்ரம்மா, சகல வேதங்களேயு மறிந்தவன், சகல ஸ்ருஷ்டி க்ரமத்தையறிந்தவன், உத்தம புத்திமான் முதலியவைகளில் ஒன்றைப் பெறுவார்கள் (10). இந்திரியங்களின் வயப்பட்டு தர்மத்தை நீக்கி அதர்மத்தைப் புரியும் அவித்வான்கள் மனிதர்களில் நீச ஜன்மம் அல்லது சதா துக்கத்தையே அனுபவிக்கும் ஜன்மத்தைப் பெறுகிறார்கள். (11). இவ்வாறு சத்வ ரஜஸ் தமோ குணங்களின் வசப்பட்டு நடப்பவர்கள் அவ்வவைகளுக்குத் தகுந்த ஜன்மங்களேப் பெறுகிறார்கள். ஆகையால் சதா முக்தியைப் பெறும் வழிகளிலே முயற்சி செய்துகொண்டிருக்க வேண்டியது ஜீவனின் கடமையாகும்.

योगश्चित्तवृत्तिनिरोधः ॥ १ ॥
तदा द्रष्टुः स्वरूपेऽवस्थानम् ॥ २ ॥

மனிதர்கள் ரஜோகுண தமோகுண கார்யங்களிலே மனதைச் செலுத்தாமல் தடுத்து, அதம சத்வ குண கார்யங்களிலிருந்தும் மனதைத் தடுத்து சதா உத்தம சத்வ குண கார்யங்களிலேயே செலுத்தி பிறகு அதை நிரோதித்துப் பிறகு பரமாத்மா ஒன்றிலேயே மனதை நிலேக்கச் செய்யவேண்டும் (1). எப்போது சித்தம் ஒன்றி

லேயே நிலைத்து விட்டதோ அப்போதே ஜீவாத்மாவின் பார்வை ஈஸ்வரனை நோக்கும் (2).

अथ त्रिविधदुःखात्यन्तनिवृत्तिरत्यन्तपुरुषार्थः ॥

(சாங்க்யம்).

சரீர சம்பந்தமான துக்கங்கள், மற்றவர்களிடத்திலிருந்துண்டாகும் துக்கங்கள், இயற்கையாலுண்டாகும் துக்கங்கள் ஆகிய மூவழித் துக்கங்களையும் அறவே நீக்குதலே புருஷார்த்தமாகும்.

இதற்குப் பிறகு ஆசாரம் அனாசாரம், அருந்தக் கூடியது அருந்தக் கூடாதது முதலாகிய விஷயங்களைக் குறித்து ஆராய்வோம்.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று

பத்தாவது அத்தியாயம்

अथाऽऽचाराऽनाचारभक्ष्याऽभक्ष्यविषयान् व्याख्यास्यामः।

இப்போது தர்மயுக்த காரியங்களை ஆசரித்தல், நற்சீலம், நற்புருடர்களின் நட்பு, நற்கலைப் படிப்பில் விருப்பம், இவைகளுக்கு விரோதமானவைகள் இவைகளைக் குறித்து எழுதுவோம்—:

विद्वद्भिः सेवितः सद्भिर्नित्यमद्वेषरागिभिः।
हृदयेनाभ्यनुज्ञातो यो धर्मस्तन्निबोधत ॥ १ ॥

कामात्मता न प्रशस्ता न चैवेहास्त्यकामता।
काम्यो हि वेदाधिगमः कर्मयोगश्च वैदिकः ॥ २ ॥

सङ्कल्पमूलः कामो वै यज्ञाः सङ्कल्पसंभवाः।
व्रतानि यमधर्माश्च सर्वे सङ्कल्पजाः स्मृताः ॥ ३ ॥

अकामस्य क्रिया काचिद् दृश्यते नेह कर्हिचित्।
यद्यद्धि कुरुते किञ्चित् तत्तत्कामस्य चेष्टितम् ॥ ४ ॥

वेदोऽखिलो धर्ममूलं स्मृतिशीले च तद्विदाम्।
आचारश्चैव साधूनामात्मनस्तुष्टिरेव च ॥ ५ ॥

सर्वन्तु समवेक्ष्येदं निखिलं ज्ञानचक्षुषा।
श्रुतिप्रामाण्यतो विद्वान् स्वधर्मे निविशेत वै ॥ ६ ॥

श्रुतिस्मृत्युदितं धर्ममनुतिष्ठन् हि मानवः।
इह कीर्त्तिमवाप्नोति प्रेत्य चानुत्तमं सुखम् ॥ ७ ॥

योऽवमन्येत ते मूले हेतुशास्त्राश्रयाद् द्विजः ।
स साधुभिर्बहिष्कार्यो नास्तिको वेदनिन्दकः ॥ ८ ॥

वेदः स्मृतिः सदाचारः स्वस्य च प्रियमात्मनः ।
एतच्चतुर्विधं प्राहुः साक्षाद्धर्मस्य लक्षणम् ॥ ९ ॥

अर्थकामेष्वसक्तानां धर्मज्ञानं विधीयते ।
धर्मं जिज्ञासमानानां प्रमाणं परमं श्रुतिः ॥ १० ॥

वैदिकैः कर्मभिः पुण्यैर्निषेकादिर्द्विजन्मनाम् ।
कार्य्यः शरीरसंस्कारः पावनः प्रेत्य चेह च ॥ ११ ॥

केशान्तः षोडशे वर्षे ब्राह्मणस्य विधीयते ।
राजन्यबन्धोर्द्वाविंशे वैश्यस्य द्व्यधिके ततः ॥ १२ ॥

(மனு 2 ; 1-4, 6, 8, 9, 11-13, 26, 65).

ராகத்துவேஷங்களில்லாத வித்வான்கள் எந்தக் காரியத்தை நிதமும் செய்கின்றார்களோ, எதை நிஜமென்று சொல்லுகின்றார்களோ அதையே செய்து அதையே சொல்லி வரவேண்டியது மனிதர்களின் கடமையாகும் (1). ஏனென்றால் இவ்வுலகத்திலே அதிக ஆசையாலும், ஆசையே இல்லாததாலும் வேதார்த்த க்ஞானம் சித்தியடைவதில்லை. ஆனால் வேதம் சொல்லியுள்ள காரியங்களைப் புரிந்து வருவதாலேயே அது சித்தியாகின்றது (2). "நான் ஒரு இச்சையு மில்லாதவன்" என்று சொல்வது பொய். ஏனென்றால் உலகத்திலே யாகம் செய்தல், மெய்யே பேசுதல், நியமித்துள்ள தர்மத்தை அனுசரித்தல் இவைகளும் கூட ஓர்வித இச்சையே ஆகும் (3). கை, கால், கண், மனமாதிகளும் கூட விருப்பத்தின் பேரிலேயே

தங்கள் காரியங்களைச் செய்கின்றன. விருப்பமே இல்லாதவனென்றால் கண்களை இமைக்கவும் கூடாது (4). இதனால் சம்பூர்ணவேதம், ரிஷிகளின் சாஸ்த்திரம் முதலியவைகளில் சொல்லியுள்ள ஆசாரங்களையும், தன் ஆத்மா சந்தோஷமாயிருக்கவேண்டிய வழிகளையும்; பயம், சந்தேகம், வெட்கம் முதலியவைகளை உண்டாக்காத காரியங்களையுமே செய்து வரவேண்டும். ஏனென்றால் திருட விரும்புபவன் பயம், வெட்கம், சந்தேகங்களைப் பெறுகின்றானதலால் அக்காரியம் செய்யத்தகாதது என்று தெரிந்துகொள்ள வேண்டும்(5). வேதாதிசாஸ்த்திரங்களைக் கற்று, சிந்தித்து தீர்மானித்த பிறகே அவைகளைத் தன்னடத்தையிலே கொண்டுவரவேண்டும் (6). ஏனென்றால் வேத தர்மத்தையும், வேத விரோதமில்லாத ஸ்மிருதிகளின் தர்மத்தையு மனுசரிப்பவன் இவ்வுலகத்திலே கீர்த்தியைப் பெற்று பரலோகத்திலும் சுகத்தைப் பெறுகின்றான் (7). வேதம், ஸ்மிருதிகள் தர்மசாஸ்த்திரங்களென்று சொல்லப்படுகின்றன. ஒவ்வொருவரும் அவரவர்கள் செய்யவேண்டிய காரியங்களை இச்சாஸ்த்திரங்களிலிருந்தே தீர்மானிக்கவேண்டும். வேத விரோதமாகச் சொல்பவர்களின் வார்த்தைகளைக் கேட்கக் கூடாது. ஏனென்றால் வேதத்தை நிந்திப்பவன் நாஸ்த்திகனாகும் (8). ஆகையால் வேத ஸ்மிருதி; நல்லவர்களின் நடத்தை; தன் ஆத்மக்ஞானம்; ப்ரியாசரணம் ஆகிய இந்நான்கும் தர்மத்தின் லக்ஷணங்களாகும் (9). ஆனாலும் எந்தக் காரியம் நம்மை உலகிலே பந்திக்கச் செய்யுமோ அது தர்மமாகாது. நம்மை பந்திக்கச் செய்யாத காரியங்களே தர்மமாகும். தர்மத்தைச் சரியாக நிச்சயிக்க வேதமே முக்ய

ப்ரமாணமாகும் (10). ஆகையால் வேத தர்மத்தின்படி ப்ராம்மண, க்ஷத்ரிய, வைஸ்யர்கள் தங்கள் குழந்தைகளுக்கு "நிஷேகம்" ஆதி சடங்குகளைச் செய்யவேண்டும். இதனால் இகபரசுகங்களைப் பெற ஹேதுவாகும் (11). ப்ராமமணர்கள் 16, க்ஷத்திரியர்கள் 22, வைஸ்யர்கள் 24 வயதிலே "குழல்நீக்குச் சடங்கு" முதலாகியவைகளைச் செய்யவேண்டும். என்றால் இதற்குப் பிறகு கால இடபேதங்களுக்குத் தகுந்ததைப் போல மயிரைக் குறைத்தோ அதிகப்படியாகவோ வைத்துக் கொள்ளவேண்டும். என்றால் மிகுந்த குளிர் தேசத்திலே மயிரை அப்படியே வளரவிட்டுவிட வேண்டும். மிகுந்த உஷ்ணமான தேசத்திலே எல்லாவற்றையுங் களைந்துவிட வேண்டும். ஏனென்றால் தலையில் மயிர் அதிகமாயிருந்தால் உஷ்ணம் தலையில் அதிகமாக ப்ரவேசிக்கும். அதனால் புத்தியும் குறைவாகும். தாடி மீசைகளால் ஆகாராதிகளைச் சரிவர சாப்பிட முடியாது. எச்சிலுங்கூட தாடிமீசைகளிலேயே தங்கிவிடும் (12).

इन्द्रियाणां विचरतां विषयेष्वपकारिषु ।
संयमे यत्नमातिष्ठेद्विद्वान् यन्तेव वाजिनाम् ॥ १ ॥

इन्द्रियाणां प्रसङ्गेन दोषमृच्छत्यसंशयम् ।
सन्नियम्य तु तान्येव ततः सिद्धिं नियच्छति ॥ २ ।

न जातुकामः कामानामुपभोगेन शाम्यति ।
हविषा कृष्णवर्त्मेव भूय एवाभिवर्द्धते ॥ ३ ॥

वेदास्त्यागश्च यज्ञाश्च नियमाश्च तपांसि च ।
न विप्रदुष्टभावस्य सिद्धिं गच्छन्ति कर्हिचित् ॥ ४ ॥

वशे कृत्वेन्द्रियग्रामं संयम्य च मनस्तथा ।
सर्वान् संसाधयेदर्थानाक्षिण्वन् योगतस्तनुम् ॥ ५ ॥

श्रुत्वा स्पृष्ट्वा च दृष्ट्वा च भुक्त्वा घ्रात्वा च यो नरः ।
न हृष्यति ग्लायति वा स विज्ञेयो जितेन्द्रियः ॥ ६ ॥

नापृष्टः कस्यचिद् ब्रूयान्न चान्यायेन पृच्छतः ।
जानन्नपि हि मेधावी जडवल्लोक आचरेत् ॥ ७ ॥

वित्तं बन्धुर्वयः कर्म विद्या भवति पञ्चमी ।
एतानि मान्यस्थानानि गरीयो यद्यदुत्तरम् ॥ ८ ॥

अज्ञो भवति वै बालः पिता भवति मन्त्रदः ।
अज्ञं हि बालमित्याहुः पितेत्येव तु मन्त्रदम् ॥ ९ ॥

न हायनैर्न पलितैर्न वित्तेन न बन्धुभिः ।
ऋषयश्चक्रिरे धर्मं योऽनूचानः स नो महान् ॥ १० ॥

विप्राणां ज्ञानतो ज्यैष्ठ्यं क्षत्रियाणां तु वीर्यतः ।
वैश्यानां धान्यधनतः शूद्राणामेव जन्मतः ॥ ११ ॥

न तेन वृद्धो भवति येनास्य पलितं शिरः ।
यो वै युवाप्यधीयानस्तं देवा स्थविरं विदुः ॥ १२ ॥

यथा काष्ठमयो हस्ती यथा चर्ममयो मृगः ।
यश्च विप्रोऽनधीयानस्त्रयस्ते नाम बिभ्रति ॥ १३ ॥

अहिंसयैव भूतानां कार्यं श्रेयोऽनुशासनम् ।
वाक् चैव मधुरा श्लक्ष्णा प्रयोज्या धर्ममिच्छता ॥ १४ ॥

(மனு 2; 88, 93, 94, 97, 100, 98, 110, 136, 153-157, 159.)

சாரதியானவன் குதிரைகளை அடக்கி தன் இஷ்டப் படி செலுத்திக்கொண்டு போவதைப் போல மனிதர்கள் தங்கள் இந்திரியங்களை அடக்கி சித்தத்தின் வழியே செலுத்திக்கொண்டு போகவேண்டியது அவசியமாகும் (1). ஏனென்றால் இந்திரியங்களின் வழியே சித்தத்தை செலுத்துபவர்கள் துக்கத்தைப் பெறுகிறார்கள். ஆனால் அதை வசப்படுத்தி சித்தத்தின் வழியே செலுத்துபவர்கள் சுகத்தைப் பெறுகிறார்கள் (2). அக்கினியை நெய்யைக் கொண்டு அவிப்பதைப்போலத் தான் ஆசைகளை நிறைவேற்றுதலைக்கொண்டு அடக்க முடியும். ஆகையால் மனிதர்கள் எப்போதும் விஷயங்களை நாடக்கூடாது (3). இந்திரியங்களை வெல்லாதவன் துஷ்டனாகும். இந்திரியங்களின் வழிச்செல்பவன் ஒன்றையும் சாதிக்கமுடியாது. எல்லாவற்றையும் இந்திரியங்களை வென்றவர்கள் சாதிக்க முடியும் (5). புகழ்ச்சியில் சந்தோஷத்தையும், நிந்தனையில் துக்கத்தையும், நல்லதைத் தொடுவதால் சுகமும், கெட்டதைத் தொடுவதால் விசனத்தையும், அழகைப் பார்த்து சந்தோஷமும், அழகில்லாததைப்பார்த்து வெறுப்பும், நல்ல ஆகாரத்தால் திருப்தியும், கெட்ட ஆகாரத்தால் அதிருப்தியும், நல்ல வாசனையில் ருசியையும், கெட்ட வாசனையில் அருசியையும் அடையாதவனே இந்திரியங்களை வென்றவனாகும். (6). கேட்காதபோதும், அநியாயமாகக் கேட்டபோதும், கபடமாகக் கேட்கப்பட்டபோதும் பதில் சொல்லக்கூடாது. கபடமில்லாதவனுக்கும், ஆராய்ச்சியாளனுக்கும் கேட்காத போதும் பதில் சொல்லலாம் (7). தனம், குடும்ப பந்துக்கள், குலம், அவஸ்தை, உத்தம கார்யம், நற்கல்வி இவ்வைந்

தும் மதிக்கத் தகுந்தவைகள். ஆனாலும் தனத்தால் உத்தம பந்துவும், பந்துவால் அதிக அவஸ்தையும், அவஸ்தையால் உத்தம கார்யமும், உத்தம கார்யத்தால் வித்தையும் அதிக மதிப்பைப் பெறக்கூடியவைகளாகும் (8). 100 வருடத்தனாயினும் வித்யாவிக்ஞானரஹிதன் குழந்தையேயாகும். குழந்தையாயினும் வித்யாவிக்ஞானதாதன் கிழவனாகும். அறியாதவன் பாலகன், அறிந்தவன் தகப்பனாகும் என்று வித்வான்கள் சொல்கிறார்கள் (9). அதிக நாள் வாழ்ந்துவிட்டதாலும், மயிர் வெளுத்துவிட்டதாலும், அதிக தன குடும்பங்களைப் பெற்றுவிட்டதினாலும் ஒருவன் பெரியவனாய்விடமாட்டான். ஆனால் வித்யாவிக்ஞானத்தில் வல்லவனே பெரியவனாகும் (10) ப்ராமணன் அறிவினாலும், க்ஷத்திரியன் பலத்தினாலும், வைஸ்யன் தனதான்யாதிகளாலும், சூத்திரன் அதிக வயதினாலும் கிழவர்களாகிறார்கள் (11). மயிர் வெளுத்துவிட்டதால் கிழவனல்ல. ஆனால் குழந்தையாயினும் வித்யாக்ஞானமுடையவனே கிழவனாகும் (12). வித்தை யில்லாதவன் மரயானையையும், தோல் மிருகத்தையும் ஒப்பாவான். பெயரளவில் மாத்திரம்தான் அவன் மனிதனாகும் (13). ஆகையால் எல்லோரும் கல்வி கற்று வித்வான்களாக முயற்சி செய்யவேண்டும். கல்வி கற்று வித்வானாகி, அதர்மத்தை அழித்து, தர்மத்தை அபிவிருத்தி செய்பவன் தன்யனாகும் (14). தினமும் ஸ்னானம், வஸ்த்திரம், அன்னம், தண்ணீர், இடம் இவைகளை சுத்தம் செய்து வைக்கவேண்டும். ஏனென்றால் இவைகள் சுத்தியடைவதால் சித்தம் சுத்தியடைந்து ஆரோக்ய முண்டாகி புருடார்த்தம் விர்த்தியாகிறது. மலதுர்க்கந்தங்கள் தூர

மாகும் வரை தினமும் சகலத்தையும் சுத்தம் செய்ய வேண்டும்—:

आचारः प्रथमो धर्मः श्रुत्युक्तः स्मार्त्त एव च । (மனு 1 ; 108).

எங்கெந்த காரியங்களை சத்தியமான தென அறிந்து செய்யவேண்டுமோ அந்தந்தக் காரியங்களே வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் ஆசாரமென்று சொல்லியிருக்கின்றன.

मानो वधीः पितरं मोत मातरम् ॥ (யஜுர் 16-15).

आचार्य उपनयमानो ब्रह्मचारिणमिच्छते ॥ (அதர் 11-15).

मातृदेवो भव । पितृदेवो यव । आचार्य्यदेवो भव । अतिथिदेवो भव ॥ (தைத்ரியாரண்யகம் 7.11).

தாய், தகப்பன், ஆசார்யன், அதிதி இவர்களை பூஜித்தல் "தேவ பூஜை" எனப்படும். உலகத்திற்கு உபகாரமான காரியங்களையே செய்துகொண்டு அபகாரமான காரியங்களை செய்யாமலிருத்தல் மனிதர்களின் முக்யக் கடமையாகும். எப்போதும் நாஸ்திகர், லோபர்கள், விஸ்வாச காதகர், பொய் பேசுபவர்கள், தன்னலப் பிரியர்கள், கபடர்கள் ஆதி துஷ்ட புருடர்களின் நட்பைக் கொள்ளலாகாது. எப்போதும் சத்யவாதிகள், தர்மாத்மாக்கள், பரோபகாரிகள் ஆகிய உத்தம புருடர்களின் நட்பையே கொள்ளவேண்டும். இதுவே "ச்ரேஷ்டாசாரம்" எனப்படும்.

கேள்வி—: ஆர்யாவர்த்த தேசத்தவர்கள் அன்னிய நாடுகளுக்குச் செல்வதாலே அவர்களின் ஆசாரம் நஷ்டமடைந்து விடுகின்றதா இல்லையா?

விடை—: இல்லை. ஏனென்றால் உள்ளும் புறம்பும் சதாசாரத்தையே திடமாகக் கொண்டவன் எந்த இடத்திலே இருந்தாலும் தன் உத்தம ஆசாரத்தைக் கைவிட மாட்டான். ஆகையால் அவனின் ஆசாரம் நஷ்டமடைந்துவிட மாட்டாது. ஆனால் ஆர்யாவர்த்தத்திலே இருந்தும் துஷ்ட காரியங்களைப் புரிபவனின் ஆசாரங்களே நஷ்டமடைந்துவிடும்.

मेरोर्हरश्च द्वे वर्षे वर्षं हैमवतं ततः ।
क्रमेणैव व्यतिक्रम्य भारतं वर्षमासदत् ॥
स देशान् विविधान् पश्यंश्चीनहूणनिषेवितान् ॥

(பாரதம்—சாந்திபர்வம், சுக சம்வாதம்—327)

ஒரு சமயத்திலே வியாசர் தன் புத்திரனை சுகனுடனும், தன் சிஷ்யர்களுடனும் தற்காலம் அமெரிக்கா என்று சொல்லப்பட்டுவரும் பாதாள லோகத்திலே வசித்துக் கொண்டிருந்தார். அக்காலத்திலே சுகதேவன் தன் தகப்பனைப்பார்த்து "ஆத்மவித்தை இவ்வளவுதானா அல்லது இன்னும் அதிகமாக உண்டா?" என்று கேட்டான். இக்கேள்விக்கு முன்பே பதில் சொல்லியிருந்தவரான வ்யாசர் இப்போது பதில் சொல்லாமல் சும்மாயிருந்தார். இரண்டாம் சாக்ஷிக்காகத் தன் மகனைப்பார்த்து "ஏ புத்ரா! நீ மிதிலாநகரை பரிபாலித்துவரும் ஜனகனிடம் சென்று கேட்டால் அவர் இக்கேள்விக்கு பதில்சொல்வார்" என்று விடை பகர்ந்தார். சுகதேவனும் பாதாளலோகத்தை விட்டு மிதிலையை நாடிச்செல்ல ஆரம்பித்தான். வழியிலே தற்காலம் 'யூரோப்' என்று சொல்லப்பட்டுவரும் "ஹரிவர்

ஷ"த்தைக்கண்டான். (அங்குள்ளோர் குரங்கைப்போல ரக்தவர்ண முடைய முகத்தைக்கொண்டவர்களா யிருந்ததினாலே அதற்கு "ஹரிவர்த்தம்" என்ற பெயரேற்பட்டிருந்தது). அதைக்கடந்து சைனாவிற்கும், சைனாவைக்கடந்து ஹிமாலயத்திற்கும், அதைக்கடந்து மிதிலைக்கும் ப்ரயாணம் செய்துகொண்டுவந்தான்—என்ற ப்ரமாண மிருக்கிறது. அன்றி ஸ்ரீ கிருஷ்ணனும் அர்ஜுனனும் திருதராஷ்ட்டிரனின் வேள்விக்காக பாதாளத்திற்கு, "அஸ்வதரீ" (நெருப்பாலோடும் வண்டி) யிற்சென்று அங்கே வசித்துக்கொண்டிருந்த "உத்தாலக" ரிஷியைக்கொண்டுவந்திருக்கிறார்கள். இப்போது "கந்தார்" என்று சொல்லப்படும் காந்தார தேசத்தின் அரச குமாரியைத் திருதராஷ்டிரன் விவாகம் செய்துகொண்டிருந்தான். "ஈரான்" தேசத்தின் அரச குமாரியாகிய "மாத்ரி"யை பாண்டுராஜன் விவாகம் செய்துகொண்டிருந்தான். பாதாள (அமெரிக்கா) அரசனின் குமாரத்தியாகிய "உலோபியை" அர்ஜுனன் மணம் செய்துகொண்டிருந்தான். அன்னிய நாடுகளுக்குச் செல்வதாலே ஆசாரங்குன்றி விடுவதாயின் இக்காரியங்களெல்லாம் நடை பெற்றிருக்குமா? மனுஸ்மிருதியில் சொல்லியிருக்கும் கப்பல்களும் அன்னிய நாடுகளுக்குச்செல்லும் உபயோகத்திற்காகவே இருந்திருக்கிறது. தர்மராஜரின் ராஜஸூய யாகத்தை தெரிவிப்பதற்காக பீமார்ஜுனநகுல சகாதேவர்கள் உலகத்தின் எல்லா பாகங்களுக்கும் சென்று வந்திருக்கிறார்கள். தோஷமேற்படுவதாயின் இவர்களும் சென்றிருக்க மாட்டார்கள். ஆதியில் ஆர்யாவர்த்த மக்கள் வியாபாரத்தின் பொருட்டும், அரச கார்யங்களின் பொருட்

டும், உலாவுதற் பொருட்டும் பூலோகத்தின் சகல பாகங்களுக்கும் சென்றுவரும் பழக்க முடையவர்களாயிருந்தார்கள். இப்போது அன்னிய நாடுகளுக்குச் செல்வதாலே ஆசாரம் குறைந்துவிடுமென்று சொல்வது இப்போது நம் நாட்டிலே பரவியிருக்கும் அதைரியத்திஞலும், மூடத்தனத்திஞலும், அதிடத்திஞலுமே யாகும். ஒரு தேச மக்கள் மற்ற தேசங்களுக்கெல்லாம் சென்று வருவதாலே அவ்வத் தேசத்திஞசாரங்களை யறிந்து அவைகளில் நன்மையை அளிக்கக் கூடியவைகளை தன் நாட்டில் பழக்கத்திற்குக் கொண்டு வரவும், கெட்டவைகளை நீக்கி விடவும், ஒற்றுமையை நிலைநாட்டவும் சாதகமாயிருக்கும். இதஞல் அத்தேசப் பொருளாதார நிலையும் உயர்வை யடையும். தன் தேசத்திலேயே குடி, வேசிகள் சேர்க்கை முதலானவைகள் செய்பவனின் ஆசாரம் குறைந்து விடாமல் அன்னிய நாடுகளுக்குச் சென்று பெரியோர்களின் நட்பைக் கொள்ளுபவனின் ஆசாரம் குறைந்து விடுமா? இது மூட வார்த்தையல்லாமல் வேறென்ன? மாமிசங்களை யருந்தி, மது வருந்தும் மனிதர்களின் சரீரமும் வீர்யாதிகளும் துர்கந்தத்தால் குற்றமடைகிறது. இப்பேர்ப்பட்டவர்களின் நட்பைக் கொள்வதாலே ஆர்யர்களுக்கும் அப் பழக்கம் ஒட்டிக் கொள்வதாயின் சரிதான். ஆஞல் அவர்களுடனுங்கூட வ்யவகாரங்களைச் செய்து கொள்வதாலும், நற்குணங்களை கிரகித்துக் கொள்வதாலும் குற்ற மேற்பட்டு விடாது. அவர்களின் கெட்ட பழக்கங்களை யேற்றுக் கொள்ளாமல் இருக்க வேண்டும். ஆஞல் அவர்களை பார்க்கக் கூடாது தொடக்கூடாதென்று சொல்வதெல்லாம் தப்பித மாகும்.

ஏனென்றால் அவர்களைத் தொடவும் கூடாதென்றால் அவர்கள் பிரண்டு மேல் விழுந்தால் அவர்களைத் தொடாமல் யுத்தம் எப்படி செய்வது? பெரியோர்கள் ராகத்வேஷ, அநியாயங்களை விட்டு யாரிடத்திலும் விரோத பாவனையின்றி பரோபகாரம் புரிந்துகொண்டு எல்லோரிடத்திலுமிருக்கும் நற்குணங்களை மாத்திரம் கிரகித்துக்கொண்டு வரவேண்டும். இதுவே உத்தம ஆசார மாகும். தர்மம் என்பது நம் ஆத்மாவுடனும் செய்கையுடனு மிருக்கிறதென நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் நல்லவர்களாயின் எந் நாட்டிற்குச் சென்றாலும் நமக்கு ஒரு தோஷமும் ஏற்படாது.. ஏனென்றால் பாபம் செய்வதினால் மாத்திரம் தோஷம் ஏற்படுகிறது. எல்லோரும் வேத மதத்தின் உண்மைகளைத் தெரிந்துகொள்வதுடன் மோச மதங்களின் பொய்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போது தான் பொய்யை மெய்யாகச் சொல்லி ஏமாற்றுபவர்களின் வலையில் சிக்காமலிருக்க முடியும். எல்லா தேசங்களுக்கும் சென்று வியாபாரம் செய்யாவிட்டால் ஒரு போதும் ஸ்வதேசம் உன்னதியை அடையாது. அன்னிய நாடுகளின் வியாபார மின்றி தன்னாட்டு வியாபாரத்தை மாத்திரம் செய்துகொண்டிருக்கும் தேசத்தில் தரித்திரம் தான் குடிகொண்டிருக்கும். "அன்னிய நாடுகளுக்குச் செல்வதாலே தோஷ முண்டாகு" மென்று சொல்பவர்கள் அவ்வாறு என் சொல்கிறார்க ளென்றால் அன்னிய நாடுகளுக்குச் சென்று வருபவன் புத்திசாலியாய்விடுவதனாலே இவர்களின் மோசங்களுக்கு உட்படமாட்டான். பிறகு இவர்களின் கஷ்டமில்லாப் பிழைப்பும் நடக்காது. அதை

யாலோசித்தே இவர்கள் இம்மாதிரி சொல்கிறார்கள். ஆம், மத்யமாம்சாதிகளை மறந்தும் உட்கொள்ளக்கூடாது. அரச புருடர்களுங்கூட மத்யபான மயக்கத்தின் வசப் பட்டிருந்தார்களே யானால் அன்னியர்களால் வெகு சுலபமாக ஜெயிக்கப்படுவார்கள். க்ஷத்திரியர்கள் (உண்மை க்ஷத்திரியர்கள்) ஒரு கையில் ரொட்டியை வைத்து அருந்திக்கொண்டும் மற்றொரு கையில் வாள் கொண்டு விரோதிகளை வெட்டிக்கொண்டுமிருந்து யுத்தத்தை ஜெயமாக்குவதே ஆசாரம், தோல்வியாக்குவதே அனாசார மாகும். உழைத்துச் சாப்பிடுதலே ஆகாரமாகும். ஆனால் தற்கால தன்னலப் பிரியர்கள் உட்கார்ந்தபடியே சாப்பிட்டுக் கொண்டிருக்க விரும்புகிறார்கள். அதற்காகவே பலவித மோசங்களிலே மனிதர்களை சிக்கச்செய்கின்றார்கள். இனி மேலாவது ஆர்யாவர்த்த மக்கள் உழைப்பாளிகளாகாவிட் டால் கிருஸ்தவர்களைப்போலவாவது முகம்மதியர்களைப் போலவாவது சீக்கிரத்தில் ப்ரஷ்டர்களாய் விடுவார்கள்.

கேள்வி—: "சக்கரீ" "நிக்கரி" என்றால் என்ன அர்த்தம்?

விடை—: ஜலத்தால் சமைக்கப்படும் அன்னம் "சக்கரீ" யாகும். நெய், பால்களால் சமைக்கப்படும் அன்னம் "நிக்கரீ" யாகும். இதுவும்கூட இத் தன்னலர்களால் ஏற் படுத்தப்பட்டதே யாகும். ஏனென்றால் நெய்பால்களால் சமைத்த அன்னம் அருந்துவதற்கும் ருசியாயிருக்கும், உட லுக்கும் நல்ல சத்தை உண்டாக்கும். இல்லாவிட்டால் காலத்தாலும் உஷ்ணத்தாலும் சமைக்கப்பட்டவைகள்

பழுத்தவை (நிக்கரீ). அவ்வாறு சமைக்கப் படாதவைகள் பச்சை (சக்கரீ). பழுத்தவைகளை மாத்திரம் சாப்பிடவேண்டும். பச்சைகளை சாப்பிடக்கூடாது என்பதும் எல்லாவிடங்களிலும் பொருந்தாது. ஏனென்றால் சோளம், கரும்பு முதலானவைகள் பச்சையாகவும் சாப்பிடப்படுகின்றன.

கேள்வி—: த்விஜர்கள் (முதல் மூன்று வருணத்தவர்கள்) தங்கள் கைகளாலேயே சமைத்துச் சாப்பிடவேண்டுமா சூத்திரர்கள் கையால் சமைக்கப்பட்டதையும் சாப்பிடலாமா ?

விடை—: சூத்திரர்கள் கையால் சமைக்கப்பட்டதையும் தாராளமாகச் சாப்பிடலாம். ஏனென்றால் மற்றவர்கள் கல்விகளிலும், அரச காரியங்களிலும், பயிர்த்தொழில்களிலும் நாட்களைக்கழித்து வருவதால் சூத்திரர்களைக்கொண்டு சமைக்கப்படும் அன்னத்தையே அருந்த முடியும். ஆனால் சூத்திரர்களின் பாத்திரங்களிலும் அவர்களின் வீடுகளிலும் சமைக்கப்பட்ட ஆகாரத்தை ஆபத்துக் காலங்களன்றி சாப்பிடக்கூடாது. இதற்கு ப்ரமாணம்—:

आर्याधिष्ठिता वा शूद्राः संस्कर्त्तारः स्युः ॥

(ஆபஸ்தம்ப தர்மசூத்—2-2-2-4).

ஆர்யர்களுடைய வீடுகளில் சூத்திர என்றால் மூர்க்க ஸ்த்ரீ புருடர்கள் சமையல்களைச் செய்யவும். ஆனால் அவர்கள் சரீரத்தையும் உடைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். ஆர்யர்களுடைய வீடுகளிலே சமையல் செய்யும்போது அவர்களின் காற்று சமையலில் படாத

படி அவர்கள் முகத்தை துணியால் மறைத்துக்கொள்ள வேண்டும். எட்டு தினங்களுக் கொருமுறை க்ஷவரமும், நகச் சேதனமும் செய்துகொள்ள வேண்டும். சமையல் செய்ய ஆரம்பிப்பதற்கு முன் ஸ்னனம் செய்ய வேண்டும். ஆரியர்கள் சாப்பிட்ட பின் சாப்பிடவேண்டும்.

கேள்வி—:சூத்திரர்கள் கையால் தொடப்பட்ட அன்னத்தையே சாப்பிடக் கூடாதென்று சொல்லும்போது அவர்களால் சமைக்கப்பட்டவைகளை சாப்பிடலாமா ?

விடை—: இதுவும் தன்னலப் பிரியர்களின் கல்பித வார்த்தை. ஏனென்றால் நாட்டுச் சர்க்கரை, சீனி, நெய், பால், வெண்ணெய், மாவு, காய், கனி, கிழங்கு முதலியவைகளை அருந்துபவர்கள் தாங்கள் அருந்துவது சூத்திரர்களின் கைகளால் தீண்டப்பட்டவை என்பதையும், அனேகரின் எச்சில்கள் படப்பட்டவை என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். ஏனென்றால் சூத்திரர், சக்கிலிகள், குப்பைக்காரார்கள், மகம்மதியர்கள், கிருஸ்தவர்கள் வயல்களிலே யிருந்து கரும்பைப்பிடுங்கி பிழிந்து அதன் ரசத்தையெடுக்கிறார்கள். அப்போது அவர்களின் கைகளையும் கழுவுவதில்லை. அன்றி ஒவ்வொரு துண்டை வாயில் வைத்து அருந்திப்பார்த்து அப்படியே ரசத்தையெடுக்க உபயோகிக்கிறார்கள். ஒரு பாத்திரத்திலே அவ்ரசத்தை மொண்டு வேண்டுமளவு குடித்துவிட்டு மீதியை மறுபடி அதிலேயே விட்டுவிடுகிறார்கள். சில சமயம் சக்கரை காய்ச்சும் அதே பாத்திரத்திலே அவர்களின் சமையல்களையும் செய்துகொண்டு அப்படியே சர்க்கரை காய்ச்ச உபயோகப்

படுத்துகிறார்கள். நாட்டுச் சர்க்கரையை சீனியாக்கும் போது அனேக அழுக்குப்படிந்த கால் செருப்புக்களால் அதை மிதிக்கிறார்கள். பால்காரர்கள் அவர்கள் வீட்டு அழுக்குப் பாத்திரங்களிலேயே பாலைவைத்து பிரைகுத்தி மோராக்கு கிறார்கள். தானியங்களை மாவாகச் செய்யும்போதுகூட பாதி யருந்தியவைகளையும் சேர்த்தே மாவாக்குகிறார்கள். இப்படி அனேகர்களால் உபயோகிக்கப் பட்டவைகளையே அனேகர் சாப்பிடுகிறார்கள்.

கேள்வி—: பழம், காய், கிழங்குகளைப்போல மறைவில் ஏற்பட்டவைகளை சாப்பிட்டால் ஒருதோஷமும் இல்லை.

விடை—: வெகு நன்று. அப்படியானால் மறைவிலே மகம்மதியனாலும், குப்பைக்காரனாலும் சமைக்கப்பட்ட அன்னத்தை ஏன் சாப்பிடக்கூடாது? மகம்மதிய கிருஸ் தவர்களாதி மாம்சாகாரிகளால் சமைக்கப்பட்டவைகளை அருந்துபவர்களும் மாம்சத்தை யருந்திய தோஷத்திற்குள் ளாகின்றார்கள். ஆனால் மற்றவர்களுடன் உட்கார்ந்து கொண்டு தங்களின் ஆகாரங்களை மாத்திரம் சாப்பிடுவதால் ஒரு குற்றமும் கிடையாது. ஏனென்றால் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து (ஆகாரம் மாத்திரம் வேறாயிருக்கலாம்) சாப்பிடுவதால் அவர்களின் ஒற்றுமை அதிகரிக்கும். ஆனால் சும்மா ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவதால் மாத்திரம் முழு ஒற்றுமையும் உண்டாகிவிடாது. ஆனால் எல்லோரும் சத்தியத்தையே அனுசரிக்கும் வரை உண்மையான முழு ஒற்றுமை உண்டாகி விடாது. மதபேதம், மறைமாணவ மனுசரிக்காமை, கல்வி கற்று கற்பிக்

காமை, பால்ய வயதில் அஸ்வயம்வரவிவாகம் செய்தல், பொய் பேசல் முதலியவைகள் அன்னிய அரசாங்க பாலனத்தால் உண்டானவைகள், அண்ணன் தம்பிகளுக்குள்ளே சண்டை யேற்பட்ட காலத்திலேயே அன்னிய அரசாங்கம் இங்கே ஸ்தாபிக்கப்பட்டது. ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னேற்பட்ட மகாபாரத யுத்தத்திலே வீரர்கள் யுத்தரங்கத்திலே வண்டிகளில் இருந்து யுத்தம் செய்துகொண்டே கூட சாப்பிடுவதும் குடிப்பதுமாயிருந்தார்கள். அப்போது உண்டான இந் நோய் இதுவரை நம் மக்களை விட்டு நீங்கவே இல்லை. இனி எப்போது தான் நீங்கு மென்பதையும் அறியோம். அன்றி இப்படியே இருந்து ஆர்யர்கள் அப்படியே அடியுடன் துக்க சாகரத்திலே முழுகி விடுவார்களோ என்னமோ யாரறிவார்? இன்னும் அத் துஷ்ட துர்யோதனனின் துர்மார்க்க வழிகளிலேயே ஆர்யர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். இவ் வரச ரோகம் நம் மக்களை விட்டு நீங்க கடவுள் அருள் புரிவாராக.

தர்ம சாஸ்த்திரத்தின்படி ஒன்றும், வைத்ய சாஸ்த்திரத்தின்படி ஒன்றுமாக அருந்தக் கூடிய ஆகாரங்கள் இரண்டு விதப்படும். தர்ம சாஸ்த்திரத்தில்—:

अभक्ष्याणि द्विजातीनाममेध्यप्रभवाणि च ॥

(மனு 8-5).

த்விஜர்கள் (முதல் மூவர்ணத்தவர்கள்) மலமூத்ராதி யெருக்களிட்டு விளைந்தவைகளை அருந்தக் கூடாது.

वर्जयेन्मधुमांसं च ॥

(மனு 2-177).

அனேக விதமான கள், மாம்சாதிகளையும்—:

बुद्धिं लुम्पति यद् द्रव्यं मदकारि तदुच्यते ॥

(சாரங்கதரம் 4-21).

புத்தியைக் கெடுக்கக் கூடிய எல்லாப் பொருள்களையும் நீக்க வேண்டும். பழைமையாய் விட்ட, அழுகிய, நாற்ற மெடுத்துள்ள, நன்கு சமைக்கப்படாத, சதா மத்ய மாம்சாதிகளை யுண்டு சரீர நாற்ற மெடுத்துள்ளவர்களால் சமைக்கப்பட்டுள்ளவைகளை சாப்பிடக் கூடாது. ஆர்யர்கள் பசு முதலான மிருகங்களை ஆகாரத்தின் பொருட்டு கொல்லக் கூடாது. ஏனென்றால் ஒரு பசுவிலிருந்து பால் தயிர், நெய், கன்று, பசு இவைகள் உண்டாகின்றன. இவைகளால்—475600 மனிதர்கள் சுகமடைகிறார்கள். ஆகையால் பசுக்களை யாரும் கொல்லக் கூடாது. சில பசுக்கள் தினம் 2 சேரிலிருந்து 20 சேர் வரை பால் கொடுக்கின்றன. இவைகளின் சராசரி 11 சேர் என்று எடுத்துக் கொள்வோம். இவைகள் 6 லிருந்து 16 மாதங்கள் வரை இவ்வாறு கொடுக்கின்றன. இதன் சராசரி 12 மாதங்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்த கணக்குப்படி ஒரு பசு அளிக்கும் முழுப்பாலையும் கொண்டு 24960 மனிதர்களுக்கு 1 வேளை ஆகாரமாகக் கொடுக்கலாம். அன்றி மொத்தம் ஓர் பசு 12 குட்டிகளைப் பெறுகின்றது. அதிலே 2 இறந்துவிட்ட போதிலும் மீதி 5 ஆண் 5 பெண் குட்டிகள் இருக்கின்றன. அந்த 5 பெண்

குட்டிகளின் முழுப்பாலேயுங்கொண்டு 124800 மனிதர்களுக்கு 1 வேளே ஆகாரம் அளிக்கலாம். மற்ற 5 ஆண் குட்டிகள் குறைந்தது 180 டன் தானியத்தை உண்டாக்கக் காரணமாயிருக்கின்றன. அத்தானியம் 250000 பேர்களுக்கு 1 வேளே ஆகாரமாகும். ஆகையால் தானியத்தையும் பாலேயும் சேர்த்து 1 பசுவானது தன் வாழ்நாளிலே 475600 மனிதர்களுக்கு 1வேளே ஆகாரமளிக்கக் கூடியதாயிருக்கிறது. அன்றி வண்டிகளே இழுக்கவும் மாடுகள் உபயோகமாகின்றன. பசுவின்பால் மனிதர்களுக்கு அனேக விதங்களில் உபயோகப்படுகிறது. பசு உபயோகப்படுவதைப் போலவே எருமையும் உபயோகப்படுகிறது. ஆனுல் பசுவின் பாலினுல் கிடைக்கும் நெய் புத்தியை விருத்தி செய்வதைப்போல எருமையின்பாலினுல் கிடைக்கும் நெய் செய்வதில்லே. இக்காரணங்களாலேயே ஆர்யர்கள் பசுக்களே முக்கிய மானவைகளாக நினைத்து வந்தார்கள். அன்னிய வித்வான்களும்கூட இதை சரியென்று ஒப்புக்கொள்வார்கள். எருமைப்பாலால் 25820 மனிதர்கள் பாலிக்கப்படுகிருர்கள். எப்படி யானே, குதிரை, ஒட்டகம், முதலியவைகள் உபயோகப்படுகின்றனவோ அப்படியே ஆடு, பசு முதலானவைகளும் உபயோகப்படுகின்றன. இப்பசுவைக் கொல்பவர்கள் முன்சொன்ன துகையாளர்களின் ஆகாரங்களேயெல்லாம் கொல்பவர்களாகிருர்கள். பாருங்கள்! ஆர்யர்கள் அரசாங்கம் இருந்தவரை பசு முதலானவைகள் கொல்லப்படவில்லே. அக்காலத்திலே உலக மக்களெல்லாம் ஆனந்தத்திலே அமிழ்ந்தி யிருந்தார்கள். ஏனென்ருல் பசு, ஆடு முதலானவைகள் அதிகமாய் இருந்ததினுலே

ஆகாரவகைகளும் அதிகமாக கிடைத்துவந்தன. பரதேசிகளான மாம்சாகார அன்னியர்கள் இங்கே வந்தபோது தான் பசு முதலான மிருகங்கள் கொல்லப்பட ஆரம்பித்தன. அப்போதிருந்தே ஆர்யர்களும் துக்கத்தை அடைந்து கொண்டுவர ஆரம்பித்தார்கள், ஏனென்றால்

नष्टे मूले नैव फलं न पुष्पम् ॥

(வ்ருத்த சாணக்யம் 10-13).

மரத்தின் வேர் அறுபட்டு விட்டபோது பழங்கள் எங்கே கிடைக்கும் ?

கேள்வி—: எல்லோரும் அஹிம்சை யாளர்க ளாய் விட்டால் புலி முதலாகிய மிருகங்கள் அதிகரித்து பசுவாதிகளைக்கொன்று அருந்தி விடாதா ? மனிதர்களுக்கும் துன்பத்தை விளைவிக்காதா ?

விடை—: துஷ்டமிருகங்களை தண்டிக்கவேண்டியது அரசனின் கடமையாகும்.

கேள்வி—: அவைகளின் சரீரத்தை எரிந்துவிட வேண்யதுதானு ?

விடை—: எரிந்துவிடலாம். அல்லது மாம்சாகாரிகளாகிய நாய் முதலானவைகளுக்குக் கொடுத்துவிடலாம். அல்லது எரித்துவிடலாம். ஆகையால் எந்த ஆகாரங்கள் திருட்டுத்தனம், கபடம், மோசம், வஞ்சனை, சூது முதலிய குணங்களை உண்டாக்காதோ அந்த ஆகாரங்களையே மனிதர்கள் அருந்தி வரவேண்டும். தன்னுடைய இயற்

கையை மாறுபடுத்தக்கூடிய ஆகாரங்களை சாப்பிடக் கூடாது.

கேள்வி—: ஒரே தட்டில் அனேகர் சாப்பிடுவது நல்லதா கெட்டதா?

விடை—: கெட்டது. ஏனென்றால் ஒருவருடைய ஸ்வபாவமும் இயற்கையும் மற்றவருக்குப் பிடிக்காமலிருக்கலாம். குஷ்டரோகியுடன் கலந்து சாப்பிடுவதால் நல்ல ஆரோக்யவானும் வியாதியைப் பெறுவான். அவ்வாறே மற்ற ஒருவருடன் கலந்து சாப்பிடுவதாலும் சிறிய குற்றங்கள் ஏற்படுகிறது. இதனல்—:

नोच्छिष्टं कस्यचिद्दद्यान्नाद्याच्चैव तथान्तरा ।
न चैवात्यशनं कुर्यान्न चोच्छिष्टः क्वचिद्व्रजेत् ॥
(மனு-2-56).

யாருக்கும் தன் எச்சிலைக் கொடுக்காதே. யாருடைய சாப்பாட்டின் மத்தியிலேயும் நீ சாப்பிடாதே. அதிகமாக சாப்பிடாதே. சாப்பிட்ட பிறகு கை, கால், முகங்களைக் கழுவாமல் வெளியில் செல்லாதே.

கேள்வி—: "**गुरोरुच्छिष्टभोजनम्**" இவ்வார்த்தையின் அர்த்தமென்ன?

விடை—: குரு சாப்பிட்ட பிறகு தனித்து மிகுந்திருக்கும் ஆகாரத்தை அருந்து என்பதே அதன் அர்த்தம். என்றால் முதலில் குருவுக்கு ஆகாரத்தை யளித்த பின் நீ சாப்பிடு என்பது பொருள்.

கேள்வி—: எச்சில் படுவது குற்றமென்ருல் தேனீக் களின் எச்சில் தானே தேன்? கன்றின் எச்சில் அல்லவோ பால்? அன்றி ஒருவர் சாப்பிட்ட மிகுதியான ஆகாரமும் எச்சிலல்லவா? இவைகளை சாப்பிடலாமா?

விடை—: தேன் கேள்விவரையில் தான் எச்சில். ஆனுல் அது அனேக மருந்துகளின் சாரமாகும். கன்று தாயின் மடியிலிருந்து வெளிவந்த பாலை மாத்திரம் குடிக்கின்றதே யன்றி மடிக்கு உள்ளே இருக்கும் பாலை அது எச்சில் செய்துவிட முடியாது. ஆகையால் இவைகள் எச்சில்க ளல்ல. ஆனுல் கன்று பாலை சாப்பிட்ட பின் மடியை தண் ணீரால் கழுவிவிட்ட பிறகே பாத்திரத்திலே பாலைக் கறக்க வேண்டும். அன்றி தன் எச்சில் தனக்கு விரோதமாவ தில்லை. பார்! மனிதர்களுக்கு தங்களிடமே யுள்ள மலம், மூத்திரம், சளி முதலியவைகள் வெறுப்பையும், கெட்ட நாற்றத்தையு மளிப்பதில்லை. ஆனுல் மற்றவர்களின் மல மூத்ராதிகளிலே வெறுப்பு உண்டாகிறது. இவ் வுதாரணங் களிலே யிருந்து இவ் விவகாரங்கள் சிருஷ்டிக் கிரமத்திற்கு மாறுபட்டதல்ல வென்று தெரிகிறது. ஆகையாலே மனி தர்கள் மற்றவர்களின் எச்சிலை அருந்தக் கூடாது.

கேள்வி—: புருடன் மனைவிகளும் ஒருவருடைய எச் சிலை மற்றொருவர் சாப்பிடக் கூடாதா?

விடை—: கூடாது. ஏனென்ருல் அவர்களின் சரீரங் களின் சுபாவமும் மாறுபட்டே யிருக்கும்.

கேள்வி—: மனிதர்கள் யாராலாயினும் சமைக்கப் பட்டவைகளை அருந்தினுல் என்ன குற்றம்? ப்ராம்மணர்

முதல் சண்டாளர் வரையுள்ள எல்லாரின் சரீரமும் மாம் சத்தாலேயே ஆயிருக்கிறது. ப்ராம்மணர்களின் சரீர ரத்தம் போலவே சண்டாளர்களின் சரீர ரத்தமு மிருக்கிறது. ஆகையால் மனிதர்கள் யார் சமைத்தாலும் அதை அருந்து வதால் என்ன குற்றம்?

விடை—: குற்றமுண்டு. ஏனென்றால் ப்ராம்மணர் கள் நல்ல உத்தம ஆகார வகைகளை அருந்தி தங்களின் சரீரத்தை நாற்றமில்லாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சண்டாளர்கள் அப்படியில்லை. ஏனென்றால் சண் டாளர்களின் சரீரம் துர்கந்தப் பொருள்களாலேயே நிறைந் திருக்கிறது. ஆகையாலே ப்ராம்மணர்கள் சண்டாளர் களின் ஆகாரத்தை அருந்தக்கூடாது. யாராவது உன்னை "எல்லாரின் சரீரங்களும் ஒன்றானதுதானே. அப்படியா னால் உன் தாய், தங்கை அண்ணி முதலானவர்களையும் உன் மனைவியைப்போல் பார்ப்பாயா?" என்று கேட்டால் என்ன சொல்வாய்? ஆகையால் துர்க்கந்தமான வைகளையாவது துர்கந்த சரீரத்தவர்களால் செய்யப்பட்டதையாவது சாப் பிடாமலிருப்பதுதான் நல்லது.

கேள்வி—: பசுஞ்சாணத்தைகொண்டு மெழுகுவதால் வீடு சுத்தமடைந்து விடுவதாயின் ஏன் அதற்கு மனி தர்களின் சாணத்தை உபயோகிக்கக்கூடாது? மனிதசாணத் தால் வீடு அசுத்தமாய் விடுமென்றால் ஏன் பசுஞ்சாணத் தாலுமாய்விடாது.?

விடை—: மனிதர்களின் மலத்தைப்போல பசுக்களின் மலம் துர்க்கந்த முடையதல்ல. அன்றி பசுஞ்சாணம் பூமி

யிலிருந்து சீக்கிரமாகப் பெயர்ந்து விடுவதில்லை. ஆடைகளையும் அழுக்காக்கி விடுவதில்லை. அன்றி அவைகளால் சுத்தம் செய்யப்பட்ட இடம் பார்க்கவும் அலங்காரமாயிருக்கும். அன்றி சாப்பிடும்படியான இடங்களிலே சாப்பாட்டுக்காலத்தில் கீழே விழுந்து விட்டவைகளை சுத்தம் செய்யாவிட்டால் அனேகவித பூச்சிகள் உற்பத்தியாக இடமுண்டாகும். ஆகையால் தினமும் சாணத்தைக்கொண்டு சுத்தம் செய்யவேண்டியது மிக அவசியமாகும். அன்றி சிமிட்டித் தரையானல் ஜலத்தால் கழுவி சுத்தம்செய்து கொள்ள வேண்டும். மகம்மதியர்களில் சிலருடைய வீடுகளில் ஓர் பக்கம் அடுப்புக்கரி குவியல், ஓர் பக்கம் சாம்பற்குவியல், ஓர் பக்கம் எலும்புக்குவியல், மற்றோர்பக்கம் உடைந்த பாத்திரங்கள், இவ்வெல்லாவற்றையும் சதா ஈயெறும்புகள் மொய்த்துக்கொண்டிருக்கும். இவ்விடத்தில் யாராவது ஓர் பெரிய மனிதர் சென்றுவிடின் கட்டாயம் வாந்தியெடுத்து விடுவார். கக்குசைப்போலவே தென்படும் தரையை சாணத்தால் சுத்திசெய்வது தப்புஎன்றால் சுவற்றையேன் நீ சாணத்தால் மெழுகுகிறாய்? காய்ந்த சாணத்தை (வரட்டியை)க்கொண்டு அடுப்புமூட்டி அந்நெருப்பைக் கொண்டு நீ சுருட்டு முதலியவைகளை கொளுத்திக்கொள்ளலாமா?

கேள்வி—: சௌக்கத்தின் மேலமர்ந்து சாப்பிடுவது நல்லதா, கீழேயமர்ந்து சாப்பிடுவது நல்லதா?

விடை—: நல்ல இடமாகப் பார்த்தமர்ந்து சாப்பிட வேண்டும். ஆனல் யுத்தகாலத்திலே குதிரை, யானை

முதலியவைகளின் மேல் உட்கார்ந்துகொண்டோ நின்று கொண்டோ அருந்துவதால் குற்றமில்லை.

கேள்வி—: தன் கையாலேயே சாப்பிடவேண்டுமா? மற்றவர் கையாலும் சாப்பிடலாமா?

விடை—: தங்களைப்போன்ற சமசுத்த முடையவர்களால் பரிமாறப்படுவதை சாப்பிடுவதில் குற்றமில்லை. பார்! தர்ம நந்தனின் ராஜசூய யாகத்திலே எல்லா தேசத்தரசர்களும் ஒன்றாக சமைத்த ஆகாரத்தை ஒன்றாகவே அமர்ந்து சாப்பிட்டார்கள். காபுல், கந்தார், ஈரான்தேச அரசகுமாரிகளாகிய காந்தாரீ, மாத்ரீ, உலோபிகளை ஆர்யர்கள் விவாகம் செய்துகொண்டபோது அவர்களின் பெற்றோர்களும் இவர்களுடன் கலந்து ஆகார மருந்திவந்தார்கள். ஏனென்றால் அக்காலத்தில் உலகமெங்கும் ஒரே வேதமதமே பரவியிருந்தது. ஒருவரின் சுக துக்கங்களை மற்றவர் தன்னுடையதாக பாவித்து வந்தார்கள். அப்போது உலகமெங்கும் சுகமே நிரம்பியிருந்தது. இப்போது அநேக மதங்கள் ஏற்பட்டுவிட்டதாலே அநேக விரோதங்களுமுண்டாய்விட்டன. இதைத் தீர்க்கவேண்டியது புத்திமான்களின் கடமையாகும். மறுபடி உலகமெல்லாம் சத்திய மதமே நிலைத்து பொய் மதங்கள் அழிய கடவுள் அறிவாளிகளுக்கு உதவி செய்வாராக.

இதுவரை ஆசார அனாசாரங்களைக் குறித்து சிறிது ஆராய்ந்தோம். இக்நூலின் முதல்பாகம் இத்துடன் முடிகிறது. மனிதர்கள் ஆராய்ச்சி யாளர்களாகும் வரை ஸ்தூல கண்டனம் ப்ரயோஜனமில்லை யாதலால் இதுவரை

ஒன்றையும் கண்டனம் செய்யவில்லை. ஆகையால் முதலில் எல்லோருக்கும் சத்திய வித்தையைக்காட்டி அடுத்த நான்கு அத்தியாயங்களில் கண்டனைகளை யெழுதுவோம். இவ்விரண்டாவது பாகத்திலே முதலத்தியாயத்தில் ஆர் யாவர்த்தத்திலுள்ள மதமதாந்தரங்களையும், இரண்டாவது அத்தியாயத்தில் ஜைனமதத்தையும், மூன்றுவதில் கிருஸ்தவ மதத்தையும், நான்காவதில் முகம்மதிய மதத்தையும் ஆராய்ந்திருக்கிறேம். இவ்விஷயங்களை பக்ஷபாதமின்றி நோக்குபவர்களுக்கு சத்தியம்விளங்கும். விரோதம், வஞ்சனை, மோசபாவத்துடனேபார்ப்பவர்கள் இதன் உண்மையை அறிந்து கொள்ளல் மிகுந்த கடினமாகும். சத்யாசத்யத்தை யறிந்து ஊதியங் கைக்கொண்டு கொள்வித்து, அசத்தியத்தை நீக்கி நீக்குவித்து, சதானந்தத்தையடைந்து யடைவித்தல் அறிவாளிகளின் கடமை யாகும். அவர்களே தர்மார்த்த காமமோக்ஷங்களை யறிந்தனுபவிக்கும் சுகபுண்ய புருடர்களாகும்.

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

முதல் பாகம் முற்றிற்று.

ஹிந்தி பிரசார் ப்ரஸ், திருவல்லிக்கேணி—2-'35.

ஆர்ய சமாஜ் தமிழ் ப்ரசுரங்கள்.

சத்தியார்த்தப் பிரகாசம் 2-ம் பாகம்	...	2	8	0
சமஸ்காரவிதி	...	1	0	0
தயானந்தர் வாழ்க்கையும் கற்பனைகளும்	...	0	8	0
யோகாசனம்	...	1	0	0
சிரத்தானந்தர் சரித்திரம் (பெரியது)	...	0	12	0
உபநிஷதக் கதைகள்	...	0	12	0
சிரத்தானந்தர் ஜீவிய சரித்திரச் சுருக்கம்	...	0	2	0
ஆரிய சித்தாந்தம்	...	0	2	0
ஆர்யோபாஸனா விதி	...	0	1	6
ஆர்யோபாஸனாவிதி (அர்த்தத்துடன்)	...	0	2	0
ஆர்யசமாஜ் அறிமுகம்	...	0	1	0
உருவவழிபாடு	...	0	1	0
தெய்வ உண்மை	...	0	1	0
சுத்தி அல்லது இந்துமதப் பிரவேசம்	...	0	1	0
ஆர்யபஜனைக் கீர்த்தனை	...	0	1	0
பஞ்சமஹா யக்ஞவிதி	...	0	2	0
ஜாதியின் கொடுமை	...	0	1	0

கிடைக்குமிடம்—

ஆர்ய சமாஜ் புத்தகசாலை,

170, சைனாபஜார் தெரு,

மதராஸ்.

Our English Publications

THE LIGHT OF TRUTH

By Swami Dayananda

Wrapper Re. 1-8-0 *Calico Rs. 2-0-0*

THE FOUNTAIN HEAD OF RELIGION

BY PT. GANGAPRASAD, M.A.

CHIEF JUDGE, TEHRI

Bound 1-0-0

THE INNERMAN & OTHER LECTURES

ON

ARYA PHILOSOPHY

Price 0-6-0

THE TEN PRINCIPALS OF ARYASAMAJ

BY PT. CHAMUPATI M.A.,

Price 0-6-0

THE VEDIC CASTE SYSTEM

AND

PANCHAMA PROBLEM

BY PT. K. JNANI

Price 0-2-0

THE OUTLINES OF ARYASAMAJ

BY DITTO

Price 0-1-0